ஹிராடடஸ்

(கி.மு. 484 - 408)

வி. எஸ். வி. இராகவன்

மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம்

ஹிராடடஸ்

(கி.மு.484–408)

688

வி.எஸ்.வி. இராகவன்

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு, சென்னை-600 001.

முதற்பதிப்பு: 1988

பதிப்பாசிரியர்
ச. மெய்யப்பன், எம்.ஏ.

விலை: ரூ. 45-00

அச்சிட்டோர்:
கற்பகம் அச்சகம்
சென்னை-600 002

ஆசிரியரின் நூல்கள்

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் நூல்களின் தமிழாக்கம்

1. இந்தியப் பெரியார்கள்
2. கௌதம புத்தர்
3. மதத்தில் கிழக்கும் மேற்கும்
4. இந்தியாவின் இதய ஒலி
5. சுதந்தரமும் பண்பாடும்
6. மதமும் பண்பாடும்
7. நமது பாரம்பரியம்

பிற நூல்கள் :

8. பிளினி
9. பெரிப்ளுஸ்
10. மெகஸ்தனிஸ்
11. தாலமி
12. யுவான் சுவாங்
13. பாஹியான்
14. மார்க்கோபோலோ
15. அன்னை சாரதாமணி தேவியார்
16. கலிவரின் பயணங்கள்
17. இராபின்சன் குரூசோ
18. வெனிசு நகரத்து வணிகன்
19. செந்தமிழ்ச் சிலம்பு
20. சிந்துபாது
21. மணிமேகலை
22. காந்திப் பெரியார்
23. விஜயலட்சுமி பண்டிதையார்
24. அறவழி காட்டிய ஆன்றோர்கள்

25. ஒதெல்லோ
26. வறுமையிற் செம்மை
27. ரிப்வான் விங்கிள்
28. புதுநாடு கண்ட பெரியார்கள்
29. இளைஞர்க்கான இனிய கதைகள்
30. விஞ்ஞான மேதைகள்
31. இரட்சகர் இயேசுநாதர்
32. கிரேக்க ஞானி சோக்ரதர்
33. குட்டிக் கதைகள்
34. பல்சுவைக் கதைகள்
35. நகைச்சுவைக் கதைகள்
36. தமிழ் நாட்டுச் சிறுவர் கதைகள்
37. கலை என்பது என்ன? (லியோ டால்ஸ்டாய்)

மற்றும் பல

இனி வெளிவர இருப்பவை:

38. அர்ரியன் இண்டிகா (கி. பி. 90-180)
39. இதி-சிங் (கி.பி. 673-687)
40. அல்பெருனி (கி.பி. 973-1048)
41. இபின்படுடா (கி.பி. 1304-1378)
42. விஜயநகரப் பேரரசில் போர்ச்சு
    கீசியப் பயணிகள்:
    (i) பேயஸ் (கி.பி. 1520-1522)
    (ii) நூனிஸ் (கி.பி. 1535-1537)
43. பிரான்ஸிஸ் பெர்னியரின்
    மொகலாய இராச்சியத்தில் பயண வரலாறு
    (கி.பி. 1656-1668)
44. தம்மபதம் (மூலத்துடன்)
45. வீரப் பெருமக்கள் நால்வர்
46. மாண்புறு செயலாற்றிய மாமேதைகள்
47. மாதர் மதிநலம்
48. பைபிள் கதைகள்
49. திருக்குறளும் வைணவமும்
50. ஸ்ரீ வேதாந்த தேசிகர்

மற்றும் பல

பதிப்புரை

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.''

என்பது மகாகவி பாரதியாரின் திருவாக்கு. அதற்கேற்ப, ஹிராடடஸ் எனும் இந்நூல், பாரதியாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் நாளில் வெளியிடப்படுகிறது.

''வரலாற்றின் வரலாறு'' என்று ஒன்று எழுதப்படுவதாயின், அதனுள் முதல் இடம்பெறுபவர் ஹிராடடஸ் அவர்களே ஆவார். ஹிராடடஸ் வாழ்ந்த காலம் கி.மு. 484-408. அதாவது சிறந்த பழுமரமாய் 76 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். அவர்க்குமுன் வரலாறுகள் நிகழ்ந்திருக்கின்றன; ஆனால், அவற்றை எவரும் தொகுத்து எழுதினர் அல்லர்.

''ஹிராடடஸ் வரலாற்றின் ஆதித்தந்தை'' என்று சிசரோ பெருமகனாரால் (கி.மு.107-43) போற்றப் பட்டார் வரலாறு எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஹிராடடஸ் எழுதிய''வரலாறுகள்''எனும் நூல் அமைந்துவிட்டது.

ஹிராடடஸ் வரலாற்றின் ஆதித்தந்தை மட்டும் அல்லர்; அவரே உரைநடையின் ஆதித்தந்தையுமாவார்.

ஹிராடடஸ் எழுதிய வரலாறு கிரேக்க நாட்டிற்கும் பாரசீகப் பேரரசுக்கும் இடையே நிகழ்ந்த போர் வரலாறு ஆகும். மற்றும், சைரஸ் முதல் ஸெர்க்ஸிஸ்வரை விளங்கிய பாரசீக வேந்தர்களின் வாழ்க்கை வரலாறுகளும், அவர்கள் மேற்கொண்ட போர்களின் வீரவரலாறுகளும் ஆகும். இவற்றிடையே, பாரசீகர்களின் பழக்கவழக்கங்களும், பாபிலோனியர், எகிப்தியர், இந்தியர், பினீசியர், லிபியர் ஆகியவர்களின் அன்றைய பழக்க வழக்கங்களும் மிக நுணுக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

மற்றும் பினீசியர்கள் தமிழ் நாட்டிலிருந்து படகேறிச் சென்ற பனையேறிகள் ஆவர். அவர்களே பாமேசியர் என்றும், அப் பாமேசியர்களே பினீசியர்கள் ஆவர் என்றும் தெரிய வருகின்றன. அவர்கள் அவ்வாறு கடல்கடந்து சென்றது இன்றைக்கு 4000 ஆண்டுகட்கு முன்னர் என்று வரலாறு கூறுகிறது. ஆக இந்த 4000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டிற்கும், தமிழர்க்

கும் வரலாறு இருந்திருக்கிறது. அதை ஹிராடடஸ் போன்ற வரலாற்றாசிரியர்கள் தத்தம் நூல்களில் பதியவைத்துச் சென்றுள்ளனர் என்பதை அறிய தமிழரின் நெஞ்சம் பூரிப்பு அடைகிறது; நினைத்துப் பெருமிதம் கொள்கிறது.

பல வரலாற்று நூல்களுக்கு ஆசிரியரான திரு வி. எஸ். வி. இராகவன் அவர்களே இந்நூலுக்கும் ஆசிரியர். இவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களின் உலகுபுகழ் தத்துவ நூல்களின் தமிழ்ப் பெயர்ப்பாளர். இவர் சிறந்த பதிப்பாசியரும் ஆவார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆங்கில, தமிழ்நூல்கள் இவர் கைவண்ணம் பட்டுச் செவ்வனே உயரிய முறையில் வெளிவந்துள்ளன. மற்றும், இவர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். பல அகராதித் தொகுப்புகளுக்குத் துணை ஆசிரியரும் ஆவார்.

ஹிராடடஸ் எனும் மகுடமிட்ட இந்நூல், பிளினி, பெரிப்ளூஸ், மெகஸ்தனிஸ், தாலமி, பாஹியான், யுவான் சுவாங், மார்க்கோ போலோ ஆகிய வரலாற்று ஆதாரநூல்களின் வரிசையிலே வெளியிடப்படுகிறது. மிக விரிவான விளக்க உரைகளுடன், ஒவ்வோர் அரசரின் திட்டவட்டமான கால ஆராய்ச்சிகளுடன் இயற்றப்பட்ட இந்நூல், வரலாற்றுத் துறையினருக்குப் பெறற்கரிய பெருநிதியமாகும். பிற்சேர்க்கைகளும் சொற்பொருட் குறிப்பகராதியும் மேலைநாட்டு முறையில் தொகுக்கப் பெற்றுள்ளன.

புதுவகை வரலாற்று நூல்களைப் பதிப்பிப்பதில் வல்லுநரான பதிப்புச் செம்மல் உயர்திரு ச. மெய்யப்பன், எம். ஏ., அவர்கள் இந்நூல் நல்ல முறையில் வெளிவர உதவினார்கள்.

வாசகர் உலகில் மணிவாசகர் பதிப்பகத்தின் நூல்கள் சிறந்த வரவேற்பைப் பெற்று வருகின்றன. பல நூல்கள் அரசின் பரிசுகளைப் பெற்று, பல மறுபதிப்புகளும் வெளிவந்துள்ளன. அந்த வரிசையில் இந்நூலையும் வெளியிடுவதில் பெருமையும் பூரிப்பும் அடைகிறோம்.

தமிழ் அன்னையின் திருப்பாதங்களில் இந்நூலைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து மகிழ்கின்றோம்.

பாரதியாரின் கனவு நனவு பெறுக!

சிதம்பரம்
23-12-1982

மே. மீனாட்சி சோமசுந்தரம்

முன்னுரை

வரலாற்றின் ஆதித்தந்தை; ஐரோப்பிய இலக்கிய உரை நடையின் ஆதிகர்த்தா—இவரே ஹிராடடஸ்.

ஹிராடடஸ் வாழ்ந்து வந்த காலம் கி.மு. 484-408. அதாவது 76 ஆண்டுகள் ஒரு பழுமரமாய் வாழ்ந்து, வரலாறுகளைத் தொகுத்துள்ளார். அவர் எழுதிய வரலாற்றில் மூன்று முக்கியப் பகுதிகளைக் காணலாம்:

1. கிரேக்கச் சிறு நாடுகளுக்கும், பாரசீகப் பேரரசுக்கும் இடையே ஏற்பட்ட பெரும் போர். இதில் வெற்றி யாருக்கு? தோல்வி யாருக்கு?

2. பாரசீகப் பரம்பரையைச் சரிவரக் கொடுத்துச் செல்கிறார். பாபிலோனின் பெருமைகளையும், எகிப்து நாட்டின் பிரமிடுகளையும், அந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் குறிப்பிட்டுச் சொல்கிறார். சடலப் பாதுகாப்பு முறைபற்றி முதன் முதலாகவும், அதே பொழுது விரிவாகவும் அளித்துள்ளார்.

3. பலவேறு அரசர்களின் குணநலன்கள், தீய பண்புகள் ஆகியவை ஆங்காங்கு நமக்குச் சித்திரித்துக் காட்டப்படுகின்றன. இந்தியாவில் விளங்கிய பொன் அகழும் எறும்புகள் பற்றியும், இந்தியர்கள் பற்றியும், இந்தியர்களின் பழக்கவழக்கங்கள் பற்றியும், சிந்துநதியும், அதில் வாழும் முதலைகள் பற்றியும் ஆகப் பலப்பலச் செய்திகள் தரப்பட்டுள்ளன. சுவைமிக்க பகுதிகள் பல உள்ளன.

4000 ஆண்டுகட்கு முன்னர் தமிழ்நாட்டுக்கு வரலாறு கிடையாது என்று எண்ணப்பட்ட காலத்தில், பனையேறிகள் தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு, கடலூர்ந்து உலகின் பல பகுதிகளுக்கும் சென்று, குடியேற்றங்களை அமைத்தனர் என்பதையும், அப் பனையேறிகளே பாமேசியர் என்றும், அப் பாமேசியர்களே

பினீசியர்களாகப் பெயர் ஏற்று வாழ்ந்துவந்தவர் என்றும் ஆகிய பல சுவையான செய்திகளும் ஹிராடடஸ் வரலாற்றால் தெரிய வருகின்றன. தமிழ்நாட்டு வரலாற்றுக்குப் புதிய ஒரு மைல் கல் போடப்பட்டு விட்டது. அஸ்ஸீரியரின் கல்வெட்டுகளிலிருந்தும், பினீசியர் குழுக்களிலிருந்தும் தமிழர்களின் பழக்கவழக்கங்களும் தமிழ்ப்பண்பாடுகளும் அவர்களிடையே எவ்வாறு விரவிநின்றன என்பதை நன்கு அறிகின்றோம். தமிழ்ச்சொற்கள் பல அவர்களி டையே காணப்படுன்றன.

பெரிய புராணத்தில் வரும் சிறுத்தொண்ட நாயனார் புராண வரலாற்றை—பிள்ளைக்கறி பரிமாறிய கதையை—ஹிராடடஸ் தருகிறார் (பக்கம் 97). மற்றும் தமிழ்நாட்டில் பிற் காலத்தில் விளங்கிய வராகமிகீரர் பற்றி (கி.பி. 505-587) நிலவி வந்த ஒரு கற்பனைக் கதையை, ஹிராடடஸ், ''பன்றி உருவப் படிமம்'' என்ற தலைப்பில் நிகழ்ச்சி மாறாமல் தருகிறார் (பக்கம் 69).

மற்றும் தமிழர்களின் பழக்கவழக்கங்கள் பல பினீசியர் களிடமும், அவர்களிடமிருந்து மற்றைய மேலை நாடுகளுக்குப் பரவிய முறைகளும் அறியப்படுகின்றன. எகிப்தியர்களின் அன்றைய பழக்கவழக்கங்களுள் சில இன்றைய முஸ்லிம் இனத் தவராலும், அராபியர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின் பற்றி வந்தமை காணப்படும். இவற்றிலிருந்து ஒன்று தெரிய வருகிறது. ஒரு நாட்டின் வரலாறு எவ்வாறு சுவைபட எழுதப் படவேண்டும் என்பது. இப்பணியில் ஹிராடடஸ் நமக்கு வழி காட்டியாய் விளங்குகிறார்.

இவற்றினின்று, நாகரிகம் தமிழ்நாட்டிலிருந்து மேலை நாடு களுக்குச் சென்றதா, அல்லது மேலைநாட்டு நாகரிகம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழ்நாட்டிற்கு வந்ததா எனும் வினாவுக்கு விடை காண்பது ஹிராடடஸ் வரலாற்றால் எளிதாகிவிடுகிறது. புராண வரலாறுகளுள் சில மேலை நாடு களிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டன; அதே பொழுது தமிழ் நாகரிகம்—தமிழ்ப்பண்பாடு—தமிழர் வாழ்வியல்—உலகமெங்கும் அன்றே தமிழ் நாட்டிலிருந்தே பரவிற்று என்பதை அறியும் நிமிடமே, தமிழராகிய நாம் நமக்கென்று உண்மையான வரலாறு ஒன்றை இது காறும் படைத்துக் கொள்ளாமலிருப்பது கண்டு, நாம் வெட்கப்பட வேண்டியவர்களாவோம். தலை நிமிர்ந்து, உண்மையான வரலாறு படைத்துக் கொள்ளும் நன்னாள் எப்பொழுது வரும்?

இந்தியாவைப்பற்றி — அதுவும் தமிழரைப்பற்றி — மேலை நாட்டவர் எழுதிய ஆதி காவியம்—முதல் நூல்—ஹிராடடஸ் எழுதிய 'வரலாறுகளே.' பினீசியர் வரலாற்றை அறிந்த பிறகு, நம் தமிழ்நாட்டு வரலாற்றைத் தைரியமாகப் பின்வருமாறு தொடங்கலாம்:

> "தமிழ்நாடே—தமிழர் நாகரிகமே—உலக நாகரிகத்தின் தொட்டில். வரலாறு படைத்துக் கொண்ட மனித இனத்துள்ளே தமிழர்களே முதலாமவர் ஆவர்."

இவ்வாறுதான் தமிழ்நாட்டின் உண்மையான வரலாறு தொடங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான், எதையும் எதிர்பார்க்காமல், தமிழ் மரபைக் காத்து, தமிழ்ப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் நம் பரம்பரைக்கு விட்டுச்சென்ற நம் தமிழர் மூதாதையருக்கு நாம் நன்றிக்கடன் செலுத்தியவர்கள் ஆவோம்.

ஹிராடடஸ் எழுதிய மூல நூலிலிருந்து சுவை பயக்கும் சில பகுதிகள் மட்டுமே, நிகழ்ச்சிக் கோவை மாறாமல், இங்குத் தமிழ்ப் பெயர்க்கப்பட்டுள்ளன.

எனது முந்தைய வரலாற்று நூல்களான பிளினி, பெரிப்ளூஸ், மெகஸ்தனிஸ், தாலமி, பாஹியான், யுவான் சுவாங், மார்க்கோ போலோ போன்ற நூல்களுக்கு அளித்த பேராதரவைப்போல இந் நூலுக்கும் அளித்தருளுமாறு ஆசிரிய அறிஞர்களையும், தமிழன்பர்களையும் வேண்டிக் கொள்கிறேன். தமிழன்பர்கள் அளிக்கும் அரிய ஊக்கமே, இதைப்போன்ற நூல்கள் பல கொணர்தற்குரிய பெருந்தூண்டுகோலாக அமையும் என்பது உறுதி, உறுதி.

புதுமையான நூல்களை, அரிய ஆய்வு நூல்களைத் துணிந்து வெளியிடும் உயர்திரு ச. மெய்யப்பன், எம். ஏ., அவர்கள் என்னுடைய நூல்களுக்குத் தொடர்ந்து ஊக்கம் தருபவர்கள். ஆசிரியரோடு கந்லது ஆலோசிப்பதிலும், தர்க்க ரீதியாக விவாதிப்பதிலும் வல்லவர். இந்நூல் வெளிவரப் பெரிதும் உறுதுணையாக இருந்த அவர்கட்கு என் உளங்கனிந்த நன்றி.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப்பண்பாடு! வெல்க வரலாற்றுச் சான்றுகள்! வாழ்க ஹிராடடஸ்! வாழ்க பாரத தேச ஒருமைப்பாடு!

எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிக!

வி. எஸ். வி. இராகவன்

படங்களின் அட்டவணை

			பக்கம்
1.	ஹிராடடஸ் தாமே வரைந்த அன்றைய உலகப் படம்	...	16
2.	பினீசியர் கல்வெட்டு	...	38
3.	தமிழர்களின் முதற் கடற்பயணம்	...	39
4.	தமிழர்களின் அமெரிக்கட் பிரவேசம்	...	41
5.	அப்பொலோ தெய்வம்	...	82
6.	நைல் நதியும், மத்திய கிழக்கு நாடுகளும்	...	155
7.	பெரிய பிரமிடு, மற்ற இரு பிரமிடுகளும்	...	223
8.	பினீசியரின் படகுச் சின்னம் பொறித்த நாணயம் (கி. மு. 6 ஆம் நூற்றாண்டு)	...	252
9.	நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்—ஒலிம்பிய நாணயம்	...	381
10	ஆதன்ஸ்—அக்ரோபொலிஸ்	...	393
11.	அர்டமிஸ் தேவதை	...	396
12.	டாரிக் நாணயம் (டாரியஸ் I அரசரின் நாணயம்)	...	398
13.	கிரீஸ்	...	427
14.	கிரேக்க நாணயம் (ஆந்தை முகப்பு)	...	461

உள்ளுறை

எண்		பக்கம்
I	தோற்றுவாய்	1
II	ஹிராடடஸின் வாழ்க்கை வரலாறு ...	23
III	ஹிராடடஸ் 'வரலாறுகள்' பற்றிய ஒரு மதிப்பீடு ...	28
IV	ஹிராடடஸ்—சரியான உச்சரிப்பு எது? ...	31

புத்தகம் 1

1.	பினீசியர்களும் கிரேக்கர்களும் ...	32
2.	லிடியாவின் பண்டைக்கால மன்னர்கள் ...	50
3.	கைஜீஸ் லிடியா நாட்டை எவ்வாறு கைப்பற்றினார்? ...	52
4.	கைஜீஸ் டெல்பி கோயிலுக்குக் கொடுத்த நன்கொடை ...	58
5.	ஸொலான்—ஆதன்ஸ் நகரச் சட்ட வல்லுநர் ...	65
6.	குரோஸஸின் இறுதிக் காலம் ...	77
7.	டெயோஸிஸ், அஸ்டியகெஸ், மித்ரடேடிஸ் ...	86
8.	ஹர்பகஸ், சைரஸ் ...	97
9.	பாரசீக மக்களின் பழக்க வழக்கங்கள் ...	103
10.	பாபிலோன் ...	113
11.	பாபிலோன் முதன் முதல் கைப்பற்றப் படுதல் ...	121
12.	பாபிலோனியரின் செல்வமும், பழக்க வழக்கங்களும் ...	124
13.	சைரஸும், மஸஜெடே மக்களும் ...	134

புத்தகம் 2

1. முதல் ஆதி இனத்தவர் ... 143
2. எகிப்தியர்களின் வானவியல் வளர்ச்சி ... 147
3. நைலஸ் நதியின் உற்பத்தியிடமும், பாய்ந்தோடும் வழிகளும் ... 152
4. எகிப்தியர்களின் விநோதமான சில பழக்க வழக்கங்கள் ... 159
5. பூனை, முதலை ... 179
6. நீர்யானை, பீனிக்ஸ் பறவை ... 184
7. சடலப் பாதுகாப்பு ... 187
8. மின், எகிப்தின் முதல் அரசர் ... 195
9. சிசோஸ்டிரிஸ் ... 199
10. ராம்ஸினிடஸும், திருடர்களும் ... 209
11. சியாப்ஸ் கட்டிய பிரமிடுகள் ... 216
12. ஹெகெடியஸ் — வரலாற்றாசிரியர் ... 226
13. அமாஸிஸ் புரிந்த பணிகள் ... 229

புத்தகம் 3

1. கேம்பைஸிஸின் படையெடுப்பும், அமாஸிஸின் மரணமும் ... 235
2. சம்மேனிடஸ் ... 240
3. கேம்பைஸிஸின் அட்டூழியங்களும் முடிவும் ... 246
4. டாரியஸும் அவரது இருபது சத்ராபிகளும் ... 257
5. இந்தியக் குலமரபினர் ... 267
6. பொன் அகழும் எறும்புகள் ... 273

7. அரேபியா நாட்டின் வாசனைப் பண்டங்கள் ... 279
8. மருத்துவர் டெமோசிடஸ் ... 287
9. ஜோபைரஸ்—பாபிலோனின் ஆளுநர் ... 296

புத்தகம் 4

1. சித்தியர்கள் ... 300
2. ஆசியாவும் ஐரோப்பாவும் ... 307
3. சித்தியாவின் அரசர்கள் ... 313
4. சித்தியர்கள் டாரியஸைப் போரில் சந்தித்தல் ... 321
5. லிபிய மக்களின் பழக்க வழக்கங்கள் ... 328
6. பெரெதிமாவின் பழிக்குப்பழி ... 345

புத்தகம் 5

1. திரேசியர்களும், அவர்களின் பழக்க வழக்கங்களும் ... 349
2. பயோனியாவின் ஏரிக்கரை வாசிகள் ... 356
3. பினீசியர்களின் எழுத்தோவியங்கள் ... 364
4. சார்டிஸ் நகரம் தீக்கிரையாதல் ... 369
5. அரிஸ்டகோரஸ் இறத்தல் ... 372

புத்தகம் 6

1. ஹிஸ்டியஸின் வாழ்வும் மரணமும் ... 375
2. மில்டியாடிஸ் ... 380
3. லெம்னோ நாட்டினரின் துணிவான செயல்... 392

புத்தகம் 7

1. ஸெர்க்ஸிஸ் அரியணை ஏறுதலும், அவரது கனவும் ... 397
2. ஸெர்க்ஸிஸின் காலாட்படைகள் ... 409
3. ஸெர்க்ஸிஸின் குதிரைப்படைகளும், கப்பற் படைகளும் ... 419

4. பாரசீகர் படைகளும் தெர்மொபிலே போரும் ... 424

5. ஸெர்க்ஸிஸூம், டிமராடஸூம் ... 429

புத்தகம் 8

1. கிரேக்க—பாரசீகக் கப்பற்படைப் போர் ... 434
2. தெமிஸ்டாகிளிஸ் ... 442
3. மர்டோனியஸ் அனுப்பிய அலெக்சாந்தர் ... 446

புத்தகம் 9

1. அட்டிக நாட்டில் மர்டோனியஸ் பின்வாங்குதல் ... 449
2. கிரேக்கப் படைகளின் புள்ளி விவரங்கள் ... 456
3. பிளேடியாவில் கிரேக்கர்களின் வெற்றி ... 460
4. தீபே நகர முற்றுகை ... 465
5. ஸெர்க்ஸிஸின் முரண்பட்ட காதல் ... 469
6. சைரஸின் விவேகம் ... 475

முடிவுரை ... 478

பிற்சேர்க்கைகள்:

I மேலை நாட்டினரால் ஏற்றுக் கொள்ளப் பட்ட தமிழரின் பழக்க வழக்கங்கள் ... 481


II Historians about the Historian ... 497

மேற்கோள் நூற்பட்டியல் ... 504

சொற்பொருட் குறிப்பகராதி ... 506

பிழை திருத்தங்கள்

பக்கம்	வரி	பிழை (For)	திருத்தம் (Read)
37	18	Pages 524—26	Pages 24—26
46	25	சிவ புக்	சிவப்புக்
72	21	—ந்திய	இந்திய
76	9	ஸராகவதாரம்	வராகவதாரம்
85	35	Anabsais	Anabasis
90	1	காம்பெஸிஸூம்	கேம்பைஸிஸூம்
100	24	சைராஸைப்	சைரஸைப்
113	13	ப்க	கப்
141	2,5,6	காம்பைஸிஸ்	கேம்பைஸிஸ்
219	24	தாமோ	தாமே
227	20	பாரசீகருக்	பாரசீகருக்கு
238	20	கேப்பைஸிஸிடம்	கேம்பைஸிஸிடம்
248	31	காம்பைஸிஸ்	கேம்பைஸிஸ்
253	5	அலெக்சாண்தர்	அலெக்சாந்தர்
289	17	டொமோசிடஸ்	டெமோசிடஸ்
295	14	சாமேஸ்	சாமோஸ்
366	5	அப்பொலேவுக்கு	அப்பொலோவுக்கு
383	18	பிலிஸ்டிராடஸ்	பிஸிஸ்டிராடஸ்
397	22	Greec	Greece
402	4	அடர்பானஸூக்கு	அர்டபானஸூக்கு
407	26	I bring the	I bring thee
460	24	குந்தனர்	புகுந்தனர்



ஹிராடடஸ் தாமே வரைந்த அன்றைய உலகப் படம் (கிரேக்கம் தமிழ்ப் படுத்தப்பட்டுள்ளது)

ஹிராடடஸ்

(கி.மு. 484-408)

I. தோற்றுவாய்

ஹிராடடஸ்[1] "வரலாற்றின் ஆதித் தந்தை"[2] என்று விதந்தோதப்படுகிறார். வரலாற்றினை எழுதத் தொடங்கி, அஃது இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்று உலகிற்கு முதன்முதல் எடுத்துக்காட்டியவரும் ஹிராடடஸே. அவருக்கு முந்திய காலத்தில் விளங்கிய வரலாறுகள் எவையும் கிடைத்தில. அவருக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னரே வரலாறு ஓர் ஒழுங்கான முறையில் எழுதத் தொடங்கப் பட்டது. ஆகு வரலாற்றினை எழுதத் தொடங்கியவர்களுள் ஹிராடடஸே முதன்மையானவர். ஆகவே, அவரே "வரலாற்றின் ஆதித் தந்தை" என்று சிசரோ[3] பெருமகனாரால் (கி. மு. 107—43) போற்றப்பட்டார்.

மற்றும் கிரேக்க மொழி இலக்கியங்கள் யாவும் செய்யுட் கோவைகளாகவே இயற்றப்பட்டன— மனத்தில் பதிய வைப்பதற்கு எளிமையாயிருக்கும் எனும் சீரிய நோக்கம் காரணமாக. எடுத்துக்காட்டாக, ஹோமர்[4] (கி.மு. 850) இயற்றிய இலியட்[5], ஆடிஸே[6] முதலிய பண்டைக் கிரேக்க புராண காவியங்கள் யாவும் செய்யுட் கோவைகளாலே அமைக்கப் பட்டனவாகும். ஏன், நம் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் யாவும் செய்யுட் கோவைகளே. எடுத்துக் காட்டாக, அகநானூறு, புறநானூறு, எட்டுத்தொகை, பத்துப் பாட்டு முதலியவற்றைக் குறிப்பிடலாம். வடமொழியாகிய

---

1. Herodotus 2. Father of History 3. Cicero 4. Homer 5 Iliad 6. Odessey

சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட இராமாயணம், மகாபாரதம் ஆகிய ஆதிகாவியங்களும் செய்யுட் கோவைகளாலே இயற்றப் பட்டன. வேதங்கள், உபநிடதங்கள் யாவும் பனுவல்களே.

இலக்கியங்களை வைத்தே இலக்கணங்கள் தோன்றின. கிரேக்க இலக்கணமான கிரமேடிஸ்[1] என்பதும், தமிழில் தொன்னூல் இலக்கணமாக விளங்கும் அகத்தியம், தொல் காப்பியம் முதலான இலக்கண நூல்களும், வடமொழியாகிய சம்ஸ்கிருதத்தில் பாணினி என்பவரால் இயற்றப்பட்ட பாணினீயமும், சீனமொழியில் இயற்றப்பட்ட ஷென் மிங்[2] எனும் ஒலியிலக்கணமும் ஆக பண்டைய உலக இலக்கணங்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே காணப்படுகின்றன.

பண்டைக் காலத்தில் உலக இலக்கிய இலக்கண நூல்கள் விளங்கி வந்த மொழிகள் கிரேக்கம்,[3] எபிரேயம்,[4] தமிழ்[5], சம்ஸ்கிருதம்,[6] சீனம்[7] ஆகியவையே. இம்மொழிகள் இன்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னரிருந்தே பேசப்பட்டும் எழுதப் பட்டும் வந்துள்ளன. இம்மொழிகள் யாவற்றுக்கும் எழுத எழுத்துகள் உள்ளன; எழுதப்பட்டும் பேசப்பட்டும் வரு கின்றன.

பண்டைய உலக மொழிகள் ஐந்தனுள்ளும், கிரேக்கமும் தமிழும் ஒன்றுடன் ஒன்று கலந்து வாழ்ந்திருந்தன என்பதைக் கிரேக்கத்தில் உள்ள தமிழ்ச் சொற்களாலும், தமிழில் காணப் படும் கிரேக்கச் சொற்களாலும் அறியலாம். இக்கலப்பு முற்காலத்தில் நடைபெற்ற வாணிகப் பரிமாற்றம் காரணமாக ஏற்பட்டதே என்று துணிவுடன் கூறலாம்.

(கிரேக்கத்தில் காணப்படும் தமிழ்ச்சொற்கள் அடுத்த பக்கம் பார்க்கவும்.)

கிரேக்கம்	தமிழ்
ஆரம் (பொன்)	ஆரம்
ப்ளுமி	பீலி (மயில் தோகை)
ஹோரா	ஓரை

வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட வால்மீகி இராமாயணத்தில், முசிறி, திருவெண்காடு, காவிரிப்பூம்பட்டினம், கபாடபுரம், சேதுசமுத்திரம், தனுஷ்கோடி முதலிய ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (வால்மீகி இராமாயணம், கிஷ்கிந்தா காண்டம், அத்தியாயம் 42, சுலோகம் 12). அதில் தென்னாட்டவர்

---

1. Grammatice 2. Shen Ming 3. Greek 4. Hebrew 5. Tamizh 6. Samskrit 7. Chinese

தமிழ்	கிரேக்கம்	தமிழ்	கிரேக்கம்
அச்சு	ஆக்ஸிஸ்—Axis	தெப்பம்	தேபா—Theba
அடு (சேர்)	அடிடே – Aditae	நாரி (பெண்)	நாரி—Nari
ஆமை	எமிஸ்—Emis	நாவாய்	நேவல்—Naval
ஆன்மா	அனிமா - Anima	நோய்	நோஸ்—Nose
இஞ்சி	செஞ்சிம்—Sensim	பரல்	பெர்ல்—Pearl
ஏனம் (பாத்திரம்)	ஏனம்—Aena	பள்ளி	பலிஸ்—Polis
ஒன்று, ஒன்னு	யூனி—Uni	பாண்டில் (வளைந்த)	பாண்டஸ் - Pondus
கட (அகழ்)	கடோ—Cado	பிள்ளை (பெண்)	பில்லா—Pilla
கரா (முதலை)	குரோகோடைல்—Crocodile	புலி	பெலிஸ் – Felis
கனவு	கேனா—Kena	யாளி, யானை	எலிபாஸ்—Elephas
கேடு	கேடா—Keda	வீரா	ஹீரோ – Hero
சந்தனம்	சன்டலம்—Santalium	வீரி (காளி)	ஹீரா—Hera
சப்பு (சுவை)	சேபியோ—Sapio		(கிரேக்க துர்க்கை)
தம்பட்டம்	டிம்பனம்—Tympanum		
தரை	டெர்ரா—Terra		

மதுரமான மொழி பேசுபவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரம் என்றால் இனிமை என்றே பொருள்.

வடவாரியர்கள் தங்கள் பொருள்களை முசிறி முதலிய துறைமுகங்களின் மூலமாகக் கிரேக்க நாட்டிற்கு அனுப்பிய பொழுது, சமஸ்கிருதச் சொற்கள் பல கிரேக்கத்தில் புகுந்தன.

சமஸ் கிருதம்	கிரேக் கம்	ஆங் கிலம்	சமஸ் கிருதம்	கிரேக் க்ம்	ஆங்கிலம்
மாதா	மேடர்	Mother	நவம்	நவம்	Nine
பிதா	பேடர்	Father	தசம்	டெசிம்	Ten
பிராதா	பிரேடர்	Brother	சதம்	சென்டம்	Hundred
ஸ்வப்னா	சோம்னி	Somnam- Dream	சர்ப்பம்	செர்பென்	Serpent
ஏகம்	யூனு	One			
துவம்	துவோ	Two	அங் குஷ்டம்	அங்குஷ்ட	Thumb
திரயம்	திரிணி	Three			
சதுர்	குவாடர்	Quarto Four	ஆத்மா	அனிமா	Soul
பஞ்சம்	குயினி	Five			
சஷ்டம்	செக்ஸ்டம் ஹெக்ஸா	Six			
அஷ்டம்	அக்டோ	Eight			

தமிழ்	பினீசிய மொழி
பரிசு (தெப்பம்)	போர்ஸா
நாரி (பெண்)	நாரி (பெண்) எநாரி[1]—பெண்கள் நோய்
பனை, தென்னை	பாம்
பனையேறிகள்	பினீசியர்[2]

1. Enari 2. Phoenicians

தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து புறப்பட்ட கப்பல்கள் கிரேக்க நாடு, எகிப்து, ரோம் முதலான மேலை நாடுகளுக்கு வாசனைப்பண்டங்கள், முத்து, பொன் மயிற்பீலி, மிளகு, சடாமஞ்சி முதலிய பொருள்களை ஏற்றிச் சென்றன என்று பண்டைத் தமிழ் நூல்களான அகநானூறு, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, நற்றிணை, பட்டினப் பாலை, கலித்தொகை, மலை படுகடாம், சிலப்பதிகாரம், மணிமேகலை கூறுகின்றன.

மற்றும் கிரேக்க நூல்களான பிளினி[1], பெரிப்ளூஸ்[2], தாலமி[3] ஸ்டிராபோ[4], ஸெனபான்[5], மெகஸ்தனிஸ்[6], அரியன் இண்டிகா[7] முதலானவை கிரேக்க நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் நடந்த வாணிக வரலாற்றை விரித்துரைக்கின்றன.

இவற்றால் தெரியக்கிடப்பது, தமிழ்நாட்டுக்கும் கிரேக்க நாட்டுக்கும் பண்டைக்காலம் முதல் தொடர்புமிக்கிருந்தது; தமிழ் நாட்டுக்கும் சீன நாட்டிற்கும் தொடர்பு இருந்தது; ஆக, தமிழ்நாடு மேலை நாடுகளுக்கும், தொலைக் கீழ்நாடுகளுக்கும் நடுவில் அமர்ந்து வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டிப் புகழ் பெற்று ஓங்கியது என்பதே. அதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டின் முக்கியத்துவம் நெடுங்காலம் முன்னரே உணரப் படலாயிற்று.

தமிழ்நாடு உலக நாகரிகத்தின் தொட்டில்

தமிழ்நாட்டின் முக்கியத்துவத்துக்கு மற்றொரு காரணமும் உண்டு. தொலை மேற்கில் கிரேக்க நாடு[8]; மேற்கில் எகிப்து[9]; தொலை கிழக்கில் சீன நாடு[10]; இவற்றுக்கு மையத்தில் தமிழ் நாடு அமைந்திருந்தது.

கிரேக்க நாட்டில் கடல் கொந்தளிப்பும், போர்களும் எரிமலை வெடிப்புகளும், பூகம்பங்களும் அடிக்கடி நிகழ்ந்து ஒரு நிலையான நாகரிகத்தை நிலையாக நிற்க வொட்டாமல் செய்து விட்டன. அதே போன்று அதற்கருகில் இருந்த மெசபொடேமியா,[11] டைக்ரீஸ்,[12] யூப்ரடீஸ்,[13] இரு நதிகளுக்கும் இடையே இருந்த நாடு. உலக நாகரிகத்தின் தொட்டில் என்று சிலரால் கூறப்படுவதுண்டு. ஆனால் அங்கேயும் ஆறுகளின் நிலையற்ற

---

1. Pliny 2. Periplus 3. Ptolemy 4. Strabo 5. Xenophon 6. Megasthenes 7. Arrian Indica 8, Greece 9. Egypt 10. China 11. Mesopotamia 12. Tigris 13. Euphrates

நீர்ப்பெருக்கால் நாகரிகம் அவ்வப்பொழுது தோன்றி மறையலாயின. பாபிலோனிய நாகரிகம்,[1] அஸ்ஸீரிய நாகரிகம்,[2] மற்றும் எகிப்திய நாகரிகம்,[3] ஆற்றுப்பெருக்கால் நீடித்து நிற்க முடியவில்லை. அதே போன்று கீழை நாட்டில்—சீன நாட்டில்—உள்ள மஞ்சள் ஆற்றின்[4] கொடுமையைக் கூற முடியாது. இயற்கை அப்பகுதியை அவல நிலைக்குள்ளாக்கி வருகிறது. அங்கும் நிலையான நாகரிகம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தியாவின் வடக்கே இமயமலைப்பனியும் பிரம்மபுத்ரா நதி, கங்கைநதி, சிந்து நதியின் வெள்ளப் பெருக்கும் அங்கு நிலவிய ஆரிய- வடவர்-நாகரிகத்தைப் பெரிதும் வளரவிடாமல் தடுத்து விட்டன.

ஆனால் நம் தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால், நதிகளின் சீற்றம் கிடையாது; கடலின் கொந்தளிப்பும் இல்லை; எரிமலையிருந்தாலல்லவோ விபத்துகள் ஏற்பட; ஆகவே, பூகம்பங்கள் கிடையா. இடமோ ஒரு பீடபூமி இங்கு இயற்கை, தன் கைவரிசைகளைக் காட்டாத காரணத்தால், இங்குத் தோன்றிய தமிழர் நாகரிகமும் பண்பாடும் அழியாமல் பாதுகாக்கப் பட்டு வந்துள்ளன. அதன் காரணமாக, கிரேக்க நாட்டுக்கும், சீன நாட்டுக்கும் இடையே நின்று விளங்கிய தமிழ் நாட்டு நாகரிகம்-தமிழர்ப்பண்பாடு—சிதைவின்றி, சேதமுமின்றி முழுமையாகக் காப்பாற்றப்படுவதாயிற்று. அதன் பலன் தமிழ் மொழியில் பல தரமான இலக்கியங்கள் தோன்றின.

தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியங்கள் பல அழிந்து போனாலும், சில இன்று வரை காப்பாற்றப்பட்டு வந்துள்ளன. இலக்கிய மற்ற நாடாக தமிழ்நாடு என்றுமே இருந்ததில்லை.

ஆகையால் கிரேக்க நாகரிகம், எகிப்திய நாகரிகம், தமிழ் நாகரிகம், ஆரிய நாகரிகம், சீன நாகரிகம்— இவற்றில் தமிழர் நாகரிகம் தவிர மற்றவை பெயருக்குத்தான் இன்று காணப்படுகின்றன. இதனால் உறுதியாகத் தெரிந்து கொள்வது தமிழர் நாகரிகமே மற்ற எல்லா நாகரிகங்களிலும் சிறந்திருந்தது; முதன்மையாயிருந்தது; தமிழ் மக்களால் ஆயிரக்கணக்காக ஆண்டுகளாகப் போற்றிக் காப்பாற்றப்பட்டு வந்துள்ளது. கிரேக்கப் பண்பாடுகளில், தமிழர்ப் பண்பாடுகள் புகுந்து கலந்து விட்டன.

1. Babylonian 2. Assyrian 3. Egyptian 4 Yellow River.

ஆகவே, கிரேக்க நாகரிகத்தைப் பார்க்கும் பொழுது' அதிலே தமிழர் நாகரிகத்தைக் காண்கிறோம். எபிரேயத்தில்—ஹீப்ருவில்-[1] எழுதப்பட்ட விவிலிய நூலில்,[2] 17 தமிழ்ச்சொற்கள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எகிப்திய நாகரிகத்திலும் தமிழர் நாகரிகம் பங்கு கொண்டதை அறியலாம். ஆரிய நாகரிகத்தை ஆராயும் பொழுது, அதிலே தமிழர் நாகரிகத்தை வெளிப்படையாகவே காணலாம்— அவர்கள் ஏற்றுக் கொண்ட தமிழ்க்கடவுளர்கள் மூலமாக. சீன நாகரிகத்தைச் சிந்திக்கும் பொழுது, பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே தமிழர் சீனநாடு சென்று, சீரிய தமிழர் நாகரிகத்தை அங்கே ஊன்றிச்சென்றதைக் கண்டு உவகை கொள்ளலாம். 5000 ஆண்டுகட்கு முன்னர் அலாஸ்கா[3] வழியாகத் தமிழர் அமெரிக்கா[4] சென்று அங்கேயும் தமிழர் நாகரிகத்தை நிலை நாட்டிய செய்தியைப் பினீசியர்[5] மூலமாகத் தெள்ளத் தெளிய அறிகிறோம்.

உலக நாகரிகங்களுக்கே தமிழ்ப்பண்பாடு பெருவளம் கொடுத்துதவியுள்ளது. பண்டைய உலக அரங்கில் தமிழர் நாகரிகமே யாவற்றிலும் சிறந்து விளங்கிற்று என்பது மேற் கூறப்பட்டவற்றால் உறுதிப்பாடடைகிறது.

ஆக, ''தமிழ்நாடு உலக நாகரிகத்தின் தொட்டில்'' என்று கூறுவது மிகமிகப் பொருத்தம்தானே!

II. ஹிராடடஸின் வாழ்க்கை வரலாறு

'' வரலாற்று நிகழ்ச்சிகள் அழிந்துவிடாமல் காப்பாற்றப்பட வேண்டும்'', என்று தாம் எழுதிய வரலாற்றைத் தொடங்கிய ஹிராடடஸின் வாழ்க்கைக் குறிப்புகள்—வரலாற்று நிகழ்ச்சிகள்-நமக்கு மிக மிக அருகியே கிடைத்துள்ளன-வரலாற்றை எழுதியவரின் வரலாற்றைத் துருவித் தேடித் தொகுக்க வேண்டிய நிலைமையில் உள்ளோம். அவற்றை ஒழுங்குபடுத்திக் காண்போமாக!

ஹிராடடஸ்.[6] ஹலிகார்னஸ்[7] எனும் ஊரில் கி. மு. 484 ஆம் ஆண்டில் பிறந்தார். அவ்வூர் ஆசியா மைனரின்[8] தென் மேற்கில் இருந்த காரிய[9] எனும் நகரித்தின் ஒரு பகுதி

1. Hebrew 2. Bible 3. Alaska 4. America 5 Phoenicians 6. Herodotus 7. Halicarnassus 8. Asia Minor 9. Caria

யாகும். அவர் தந்தையாரின் பெயர் லிக்ஸஸ்;[1] தாயார் டிரயோ.[2]

காரிய எனும் பகுதியில் மலைகளும் குன்றுகளும் அடர்ந் திருந்தன. அம்மலைத் தொடர் கடற்கரை வரை சென்று, வளை குடாக்களை ஏற்படுத்தி விட்டிருந்தன. அக் கடற்கரைப் பகுதி முழுவதிலும் கிரேக்க மக்களின் குடியேற்றம் காணப் பட்டது. அதன் உட்பகுதியில் காரியர் எனப்படும் வகுப்பினர் வாழ்ந்துவந்தனர். அவர்கள் பெரும்பாலும் லிடியர்களையும்,[3] மைசியர்களையும்[4] ஒத்திருந்தனர். அம்மக்களைக் கிரேக்கர் மிக இழிவான மக்களாகக் கருதினர்; அடிமைகளாகவும் கொண்டனர். அந்நாடு, உள்நாட்டுச் சுதேசி மன்னர்களாலும், அரசிகளாலும் அளப்பட்டுவந்தது. அம்மன்னர்கள் தங்கள் இருப்பிடத்தை ஹலிகார்னஸஸில் வைத்துக் கொண்டனர். அவர்களுள் சிலர் போரில் சிறந்து விளங்கினர். லிடியா[5] வுடனும், பாரசீகத்துடனும்[6] போரில் ஒத்துழைத்து வந்தனர்.

ஹிராடடஸ் நற்பெருமகனார் குடியில் பிறந்தார். அவர் பிறக்கும் பொழுது காரிய நாட்டைப் பெண் ஒருத்தி ஆட்சி செய்து வந்தாள். அவள் பெயர் அர்டிமிஸிய.[7] அவள் சலமிஸ்[8] எனுமிடத்தில் நடைபெற்ற போரில், பாரசீக மன்னர் ஸெர்க்ஸிஸுக்குப்[9] படைப்பலம் அளித்து உதவி செய் தாள். ஸெர்க்ஸிஸ் பாரசீக நாட்டைக்[10] கி.மு. 485 முதல் 465 வரை ஆட்சி செய்தார். கிரேக்க நாட்டைப்[11] பணியவைப் பதற்காக; கி. மு. 480 ல் அந்நாட்டின்மீது படையெடுத்தார். டோரிஸ்கஸ்[12] என்ற சமவெளியை அவர் அடைந்தபொழுது, அவரிடம் இருந்த போர்வீரர்களின் எண்ணிக்கை 2,641,000 என்று ஹிராடடஸ் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்த எண்ணிக்கை மிகையாகத் தோன்றலாம். இருப்பினும் வியக்கத் தக்க அளவு பெரியசேனை அவரிடமிருந்தது. 20 ஆண்டுகள் ஆட்சி செய்து, கி.மு. 465-ல் அர்டபானஸ்[13] எனும் படைத் தளபதியால் ஸெர்க்ஸிஸ் கொலை செய்யப்பட்டார்.

ஆக, ஸெர்க்கிஸிஸுக்குப் போரில் உதவிய அரசி அர்டிமி ஸிய காரிய நாட்டை[14] ஆண்டுவந்தாள். மற்றும் ஹிராடடஸ்

1. Lyxes 2. Dryo 3. Lydians 4. Mysians 5. Lydia 6. Persia 7. Artemisia 8. Salamis 9. Xerxes 10. Persia 11. Greece 12. Doriscus 13. Artabanus 14. Caria.

இளைஞராக இருந்தபொழுது, அர்டிமிஸிய அரசியின் பெயரன் லிக்டமிஸ் அந்நகரத்தைக் கொடுங்கோலாட்சி செய்துவந்தான். அவன் பாரசீகப் பெருவேந்தன் அர்டஸெர்க்ஸிஸைத்[1] தன் தலைவராகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்தான்.

அவ்வூரில் இருவகுப்பினர் இருந்தனர். அவர்களுள் ஒரு வகுப்பினர், லிக்டமிஸ்[2] கொடுங்கோலரசனின் ஆட்சியையும், பாரசீக மன்னரது ஆட்சியையும் வெறுத்தனர்; புரட்சி செய்து அவற்றைக் கவிழ்த்துவிட வேண்டும் என்று பெரும் புரட்சியில் ஈடுபட்டனர். மற்ற வகுப்பினர், அக்கொடுங்கோலனுக்கும் பாரசீக மன்னருக்கும் அடிமை செய்து வாழ்ந்து கொண்டிருப்பது எனும் முடிவுடன் இருந்தனர் புரட்சிக் குழுவுக்குத் தலைமை தாங்கியவர், ஹிராடடஸின் தாய் மாமனும், பான்யாஸிஸ்[3] எனும் பெயர் கொண்ட காவியக் கவிஞரும் ஆவார். அக்கொடுங் கோல் மன்னன் லிக்டமிஸ், அப்புரட்சித் தலைவரைக் கைது செய்து தூக்கிலிட்டுக் கொன்றான். அப்பயங்கர நிகழ்ச்சியைக் கண்ட ஹிராடடஸ், சாமோஸ்[4] எனும் தீவுக்கு ஓடி அங்கு வாழ்ந்து வரலானார். அங்கிருந்த எட்டு ஆண்டுகளில் அயோனிய மொழியையும்,[5] எழுத்தையும் கற்றுக்கொண்டார். அம்மொழி யிலேதான், தாம் யாத்த "வரலாறுகள்"[6] எழுதப்பட்டன.

சில ஆண்டுகளுள் அக்கொடுங்கோல் மன்னன் லிக்டமிஸ் அரச பதவியிலிருந்து நீக்கப்பட்டான். அச்செய்தியை அறிந்த வுடன் ஹிராடடஸ் தம் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தார். ஆனால், அவர் அவ்வூரில் காலடி எடுத்து வைத்ததும், கண்டது என்ன? அப்பொழுது புதியதாகப் பதவியேற்ற மன்னனும், லிக்டமிஸ் போன்றே பகைமை உணர்ச்சியுடனும், கொடுங் கோலனாகவும் காணப்பட்டான். அந்நிலை அவருக்குப் பேரதிர்ச் சியை உண்டாக்கிற்று. அதன் காரணமாக, அவர் தம் பிறப்பிட மாகிய ஹலிகர்னஸஸை[7] விட்டு நன்மையை முன்னிட்டு வெளிச்சென்று, அப்பொழுதிலிருந்து ஒரு நாடோடி வாழ்க் கையை மேற்கொண்டு, பற்பல இடங்களைச் சுற்றி வரலானார். அவர் ஒரு புனிதமான பயண நிலையை ஏற்று, ஆசியா[8], ஆப்பிரிக்கா[9], ஐரோப்பா[10] ஆகிய பல கண்டங்களுக்குச்சென்று வரலானார்.

---

1. Artaxerxes 2 Lygdamis 3. Panyasis 4. Samos 5. Ionic dialect 6. Histories 7. Halicarnassus 8. Asia 9. Africa 10. Europe

அப்பொழுது ஆதன்ஸ் நகரம்[1] பெரும் சிறப்புடன் விளங்கி வருவதாயிற்று. அதன் புகழ் உச்சக்கட்டத்தில் பறந்தது. மற்றும் அது உலகப்பண்பாட்டின் மையங்களுள் முக்கியமான ஒன்றாகத் திகழ்ந்தது. அந்நகரமே ஹிராடடஸின் இரண்டாவது தாயகமாக விளங்கிற்று. சிறந்த மாபெரும் நாடகாசிரியரான சோபக்ளீஸ்[2] (கி. மு. 495-406) ஹிராடடஸின் நண்பர் ஆனார். அவர் ஹிராடடஸ்மீது கவிதை ஒன்று யாத்தார். ஹிராடடஸ், சோபக்ளீஸ் போன்ற தத்துவமேதைகள் பலருடன் பழகத் தொடங்கினார்; அவர்களுடன் நட்புக் கொண்டார். அவர்களால் ஆதன்ஸ்நகரின் புகழ்மேலும் ஓங்கிற்று. ஹிராடடஸ் தாம் எழுதிய "வரலாறுகள்" எனப்படும் பகுதிகளில் சிலவற்றை ஆதன்ஸ் நகரத் தெருக்களின் சந்திகளில் படிக்கும்பொழுது ஏராளமாக ஆதன்ஸ் நகரவாசிகள் அங்குக் கூடிக் கரஒலி எழுப்பி, அவருக்குப் பத்து டேலன்டுகள்[3] (2400 பவுன்) பெறுமான நாணயங்களைப் பொது நிதியிலிருந்து அன்பளிப்பாகக் கொடுத்தனர் என்று கர்ண பரம்பரைச் செய்தி ஒன்று கூறுகின்றது.

மற்றொரு செய்தி கூறுகிறது: ஹிராடடஸ் எழுதிய "வரலாறுகள்" பேரொலி எழுப்பி ஒலிம்பிக் விளையாட்டுகளில்[4] ஓதப்பட்டு வந்தன என்றும், அவை ஆதன்ஸ் நகரவாசிகளை[5] மிகவும் மகிழ்வித்தன என்றும், அவற்றைக் கரஒலி செய்து வரவேற்றனர் என்றும் கூறப்படுகிறது

இவ்விரு கூற்றுகளிலிருந்து தெரியவரும் உண்மை ஆதன்ஸ் நகரப் பொதுமக்கள் "அவ் வரலாறுகளை"ப் பேராவலுடன் விரும்பிக் கேட்டனர் என்பதே.

ஆயினும், ஹிராடடஸ் தம் உறைவிடத்தை ஆதன்ஸ் நகரிலேயே சுகபோக வாழ்வாக வைத்துக்கொண்டு இருந்துவிடாமல், உலகின் பல பகுதிகளுக்கும் பயணம் ஏற்றுச் செல்லத் தொடங்கினார்; பலப்பல இடங்களுக்குப் பலப்பல ஆயிரக்கணக்கான மைல்கள் பரந்த அளவிற்குப் பயணத்தை மேற்கொண்டு, உண்மைகளை உய்த்துணர, சென்று வரலானார்.

அவர் கண்ட நாடுகளும், நகரங்களும், சந்தித்த மக்களும் பலப்பல. ஆப்பிரிக்காவில்[6] அன்று அதன் பெயர் லிபியா[7]—

---

1. Athens 2. Sophocles 3. Talents 4. Olympic Games 5. Athenians 6. Africa 7. Libya

நைல் நதி[1] வழியாக வட எகிப்து வரை சென்றுள்ளார். ஆசியா[2] முழுவதும்—பாபிலோனுக்கு[3] அப்பால்கூட—சூஸா[4], எக்படன[5] முதலான பாரசீகப் பெருநகர்களுக்கும்[6] சென்றுள்ளார். மற்றும் கருங்கடல்[7] உள்பகுதியையும் ஆராய்ந்துள்ளார். டான்யூப்[8] நதிக் கழிமுகத்தைக் கண்டதாக எழுதியுள்ளார், கிரிமியாவை[9] அடைந்தார். மற்றும் கிழக்கு நோக்கிக் கோல்கே[10] எனும் நாட்டைக் கண்டு, நவீன ஜார்ஜியா[11] மாநில மடைந்து, அங்கிருந்து தீரே[12] திரும்பி வந்து, சிரியா நாட்டின்[13] கடற்கரையை அடைந்தார். அவருக்குத் திரேசியன்[14] கடற்கரை முழுவதும் மனப்பாடமே. தென்மேற்கில் சைரீனில்[15] புகுந்து, லிபியா சென்று, ஆராய்ந்தார். கிரேக்க நாட்டின்[16] அமைப்பு அவருக்கு நன்றாகத் தெரிந்ததே. எபிரஸ்[17] வழியாகத் திசாலியா[18], அட்டிக[19], பெலபொனீஸஸ்[20] உள்ளும் சென்றுள்ளார். முக்கியத்துவம்வாய்ந்தஎந்த இடங்களையும் சென்றுபார்க்காமல் விட்டு விடவில்லை,

அவர் மேற்கொண்ட பயணங்கள் வரலாற்றை முன்னிட்டு மேற்கொண்ட பயணங்களாகும்.அவ்வாறான பயணத்தை ஏற்ற முதல் வரலாற்றாசிரியர் ஹிராடடஸே. அவர்மீது குற்றச் சாட்டுகள் காட்டப்படுகின்றன: சரியான செய்திகள் கிடையா; குழப்பம் மிகுந்த பொய்க்கதை—புனை கதை - விளக்கங்கள்; மற்றவர்கள் கூறுவதை அப்படியே வெளியிட்டு விடுகிறார் ஆகிய இவை போன்ற பல. அவரே தம் இரண்டாவது புத்தகத்தில் எழுதுகிறார்: தாம் தீரேவுக்கு முக்கியமான செய்தியை சேகரிக்கச்சென்றதாகவும்,அதுவும் ஒரே ஒரு செய்தி உண்மையா, தவறா, பரம்பரைச் செய்தியா என்பதை அறியச் சென்றதாகவும் எழுதியுள்ளார். இதிலிருந்து ஒரு செய்தியை மிக நுணுக்கமாக அதன் உண்மைத் தன்மையை அறியவே பயணத்தை மேற்கொண்டார் என்பது தெளிவாகிறதல்லவா?

கி.மு. 444-ல் ஆதன்ஸ் நகர மக்கள்[21] இத்தாலியின்[22] தென் பகுதியில் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர். அதற்குத் தூரி[23] என்று பெயரிட்டனர். அவ்விடம், முன்னர்

---

1. Nile 2. Asia 3. Babylon 4. Susa 5. Ecbatana 6. Persian Towns 7. Black Sea 8. Danube 9. Crimea 10. Colchae 11. Georgia 12. Tyre 13. Syria 14. Thracian 15. Cyrene 16. Greece 17. Epirus 18. Thessalia 19. Attica 20. Peloponnesus 21. Athenian 22. Italy. 23. Thurii

புகழ் பெற்றுச் செல்வத்தில் சிறந்திருந்த சிபாரிஸ் அழிபாடுகளின் மீது எழுப்பப்பட்டதாகும். அத் தூரீ நகரத்தில், எல்லா நாட்டி னரும் வந்து குடியேறலாயினர். அவ்வாறு குடியேறியவர்களுள் முக்கியமானவர்கள் லைசியர்[1] ஸைரகியூஸ்[3] நாட்டைச் சார்ந்த வர்கள். லைசியர்களுள் லைசியாஸ்[3] எனப்பட்ட ஒருவர் ஆதன்ஸ் நகரின்[4] சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார். அம்மக்களுடன் ஹிராடடஸும் குடியேறித் தம் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்.

ஆனால் தூரீயில் எவ்வளவு காலம் இருந்தார் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும் ஏறக்குறைய 30 ஆண்டுகள் இருந்திருக்கக்கூடும் – அதாவது கி.மு. 414 வரை. அவர் மீண்டும் பயணமேற்று வரலாற்றுச் செய்திகளைத் சேகரிக்கத் தொடங்கினார். அவ்வாறு அரிதில் சேகரித்த செய்திகளை 9 சிறு பகுதிகளாக வெளியிட்டார். ஒவ்வொரு பகுதியும் ஒரு புத்தகம் எனப்படுகிறது. தாம் எழுதிய வர லாற்றை முடிக்கவில்லை. இறுதி மூச்சு உள்ளளவும் எழுதிக் கொண்டே இருந்தார். வரலாற்றை முடிக்காமலேயே, கி மு.408-ல் ஆதன்ஸ் நகரில் காலமானார். அவர் இறக்கும் பொழுது அவருக்கு வயது 76.

III. ஹிராடடஸ் "வரலாறுகள்" பற்றிய ஒரு மதிப்பீடு

ஹிராடடஸ் வரலாற்றின் ஆதித்தந்தை; அவர் நாடு கடத்தப் பட்ட ஒரு தளபதி என்றொரு செய்தியும் உண்டு. அவருடைய தொழில் கதை கூறுவது. அக்கதைகளில் உண்மை யான மனிதர்களின் வீரச் செயல்களும், அயல் நாடுகளின் வர்ணனைகளும், அங்கு வாழும் மக்களின் நடை, உடை, பண் பாடுகள் போன்றவைகளும் குறிப்பிடப்படுகின்றன. ஹிராட டஸின் சமகாலத்தவரான வரலாற்றுப் பேராசிரியர் தூசி டைடிஸ்[5] (கி.மு. 471—401) கூறுகிறார்: "ஹிராடடஸ் பொழுது போக்காக இடையீடின்றி வரலாறு போன்ற கதைகளை அவ்வப்பொழுது ஒரு சிறு குழுவிற்குக் கூறிக் கொண்டே யிருப்பார். மக்கள் முகங்களை அவ்வப் பொழுது கூர்ந்து நோக்குவார்— தாம் கூறுவதில் சோர்வு, களைப்பு அடைகிறார்

---

1. Lycians 2. Syracuse 3. Lycias 4. Athens 5. Thucydides

களா, விரும்பிக் கேட்கிறார்களா என்பதை அறிய. அவ்வாறு குழுவினர்க்குக் கூறிய கதைகள் வரலாற்றுச் செய்திகள்—உண்மையான வரலாறுகளாகவே மிளிர்ந்தன. தாம் எதையாகிலும் கற்பனையாகக் கூறினால், அதைக் கற்பனை என்றே வெளிப்படையாகக் கூறிவிடுவார். அவர் எழுதிய வரலாறுசள் அன்றைக்கு எழுதிய புத்தகங்கள்; அவை புகழுடன் விளங்கின. இதைப் போன்ற வரலாறுகள் அந்தக் காலத்தில் வேறெவையும் கிடையா. மற்றும் அவருடைய வரலாறுகள் உரைநடையில் கதை போன்று மக்கள் பலரால் மனப்பாடம் செய்யப்பட்டு வந்தன. அவர் தம்மைச் சுற்றியுள்ள மக்களின் மனப்பான்மையை நன்கு அறிந்திருந்தார். அவர்கள் மூட நம்பிக்கை உடையவராயின், அந் நம்பிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல், உள்ளதை உள்ளபடியே எழுதி விடுவார். உண்மைச் செய்திகளை—உள்ளதை உள்ளவாறே—எழுதுவது தானே வரலாறு! ஆதன்ஸ் நகரின்[1] கல்வியிற்சிறந்த சான்றோர்களை அவ்வப்பொழுது சந்தித்து, இலக்கிய வளத்தை நன்றாக உருவாக்கிக் கொண்டிருந்தார். அவர் எப்பொழுதும் நுண்ணிய, கூர்த்த அறிவு பெற்றவராக விளங்கினார். நடுநிலைமையுடன் எச் செய்தியையும் சேகரிப்பார்; தீர்மானிப்பதில் பதட்டப் பட மாட்டார். மனிதனின் இயற்கைத் தன்மையில் ஏதாகிலும் குறைகள் இருந்து கொண்டுதானிருக்கும் என்றும், மனிதனே குறைபாடுள்ளவன் என்றும், அவன் தன்னை முழுமையாக்கிக் கொள்ள பல வகைகளாலும் முயன்று கொண்டிருக்கிறான் என்றும் அவர் அவ்வப்பொழுது கருதுவதுண்டு. அவரது நூலில் குறைபாடுகளும், நிறைகளும் ஒருங்கே காணப்படுகின்றன.''

ஹிராடடஸ் எழுதிய ''வரலாறுகள்,''[2] நவீன வரலாறுகள் சிலவற்றுடன் ஒப்பு நோக்கும் பொழுது, அவை வரலாறாகத் தோன்றாது என்பது உண்மையே அவர் எழுதிய வரலாற்றில் புராணக்கதைகள், நாடோடிப் பாட்டுகள், நீதிக் கதைகள், அக்கால விஞ்ஞானக் கோட்பாடுகள், ஊர்வம்பு மற்றும் புதிய நவீன கதைகள் ஆகிய யாவும் கதம்பம் போன்று கொடுக்கப் பட்டிருக்கும். இதன் காரணம், இவர் நேர்மையான வரலாற்றாசிரியர் அல்லர் என்று கூறுபவரும் உள்ளனர். ஆனால் அவர் தந்துள்ள செய்திகளை உள்புகுந்து பார்க்கும் பொழுது; ''ஹிராடடஸ் ஓர் அப்பாவி வரலாற்றாசிரியர், வழி முறையற்ற வரலாற்றாசிரியர்'', என்று அவர்மீது குற்றம் சாட்டுவது

---

1. Athens 2. Histories

நிறுத்தப் பட்டு விடுகிறது. ''நல்ல கதை'' என்றால் அதை உடன் தம் வரலாற்றில் திணித்துக் கொண்டு விடுவார். அது உண்மையா அல்லது பொய்யா என்று கேட்கவும் மாட்டார்—காரணம், ''நல்லது'' என்பது எப்பொழுதும் உண்மையுடன் இணைந்தே காணப்படும் எனும் கொள்கையினைக் கொண்டவராவார். அவர் எதையும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார். தாமே சென்று அரிதின் சேகரித்த செய்திகளையே கொடுத்துள்ளார்.

ஆக, ஹிராடடஸின் ''வரலாறுகள்'' இரண்டு காரணங்களினால் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. முதலாவது, அவர் ''வரலாற்றின் ஆதித் தந்தை''; இரண்டாவது உரை நடையில் எழுதிய முதல் வரலாறும் அவரது ''வரலாறுகள்'' எனும் புத்தகமே. அதன் காரணமாக அவர் ''உரை நடையின் ஆதித் தந்தை'' எனவும் போற்றப் படுகிறார். அவர் எழுதிய வரலாறு வியப்பையூட்டி, சுவையைப் பெருக்கி, எடுத்துரைப்பதில் ஒரு புதிய வழியையும் பின்பற்றியுள்ளது. ஆகவே, ஹிராடடஸ் எழுதிய வரலாறு என்றும் சுவை குன்றாமல் யாவராலும் விருப்பத்துடன் படிக்கப்பட்டு வருகின்றது.

ஹிராடடஸ், இந்திய நாட்டின் வாசனைப் பண்டங்கள் கொண்டு எகிப்தில் சடலங்களைப் பாதுகாக்கும் முறைகளையும், இந்தியாவைப் பற்றிய செய்திகளையும் முறையே இரண்டாம், மூன்றாம் புத்தகங்களில் கொடுத்துள்ளார். சிந்து நதி பற்றியும், அதில் வாழும் பேருருவ முதலைகள் பற்றியும், இந்தியக் குலமரபுகள், அவர்களின் பண்பாடுகள், நாகரிகம், மற்றும் சிலருடைய விசித்திர அங்க அமைப்புகளைப் பற்றியும் கொடுத்துள்ளார். பொன் அகழும் எறும்புகள், பொன் வாணிகம், கருங் கடல், ஹிராக்ளிஸ், குதிரைகள், யானைகள், மக்களின் வியப்பூட்டும் வாழ்க்கை அனுபவங்கள் ஆகியன பற்றியும் விரிவாகவே தந்துள்ளார். இவற்றுள் சில கற்பனையாகத் தோன்றலாம். இருப்பினும் அக்காலத்தில்—2500 ஆண்டுகட்கு முன்னர்—இந்தியாவைப்பற்றி இப்படியும் செய்திகள் மக்கள் வாயிலாகப் பரவியிருந்தன என்பதை அறிய அஃதொன்றே அரிய சான்றாக மிளிர்கிற தல்லவா?

இவை யாவும் உண்மை வரலாற்றை அறிய உதவும் சாதனங்களாகும்—ஏன், அவற்றைச் சாசனங்களாகவும் கருதலாம்.

IV ஹிராடடஸ்—சரியான உச்சரிப்பு எது?

ஹிராடடஸ் எனும் பெயரைப் பலர் பலவிதங்களாக உச்சரித்து வருகின்றனர்—ஹிரடாடஸ், ஹெரடோடஸ், ஹெரடாடஸ், ஹிரடடஸ் மற்றும் பலப்பல.

கிரேக்க மொழியில் ஹிராடடஸ் எனும் பெயர் "ஹிரோஸ்"[1] அதாவது வீரன் என்றதன் அடிப்படையில் ஏற்பட்டதாகும். இதுவே சரியான உச்சரிப்பாகும் (Hρo'ʒotus).[2] ஆகவே இந்நூலின் தலைப்பும் ஹிராடடஸ் என்றே தரப்பட்டுள்ளது.

இனி ஹிராடடஸ் எழுதிய "வரலாறுகள்" எனும் புத்தகத்தில் சுவைபயக்கும் சில குறிப்பிட்ட பகுதிகளைக் காண்போம்.

வாழ்க! ஹிராடடஸ்! வாழ்க அவரது அற்புதச் சொல்லோவியங்கள்! வாழ்க் தமிழ்ப் பண்பாடுகள்! வாழ்க இந்திய ஒருமைப்பாடு!

---

1. Heros 2. Herodotus

ஹிராடடஸ்

(கி.மு. 484-408)

வரலாறுகள்

புத்தகம் 1.

1. பினீசியர்களும்[1] கிரேக்கர்களும்[2]

"வரலாற்றில் என் மனத்தைச் செலுத்தி அதில் உள்ள செய்திகளை நுணுகி ஆராய்ந்து அவற்றிற்குக் கொடுத்த வடிவமே இப்புத்தகத்தின் உருவமாகும். இதில் இருசெயல்களைச் செய்ய விரும்புகிறேன். முதலாவது, சென்றகால வரலாற்று நிகழ்ச்சிகளைப் பாதுகாத்து வைப்பது; அதை எவ்வாறு செய்வது? நம் சொந்த நாட்டு மக்களுடையவும், ஆசியா[3] கண்டத்து மக்களுடையவும் வியத்தகு சாதனைகளை ஏடுகளில் எழுதி வைத்தல்; இரண்டாவது, அதுவும் முக்கியமாக, இரண்டு இனங்களும் எவ்வாறு ஒன்றுக்கொன்று பகையை வளர்த்துப் போரில் ஈடுபட்டன என்பதை நுணுக்கமாக ஆராய்ந்து வெளியிடல்.

இத்தகைய போர்கள், கலகங்கள் ஏற்படக் காரணமானவர்கள் பினீசியர்களே என்று பாரசீக வரலாற்று ஆசிரியர்கள்,[4] பினீசியர்கள்மீது அப்பழியைச் சுமத்துகின்றனர். இப்பினீசிய மக்கள் முதல் முதலில்- ஆதியில்- இந்தியப் பெருங்கடலினின்று[5]- அக்கடலின் கடற்கரையின் முனையிலிருந்து-

---

1. Phoenicians 2. Greeks 3, Asia 4. Persian Historians 5. Indian Ocean

குடியேறியவர்களே. அவர்கள் மத்திய தரைக்கடலில்[1] புகுந்து, அங்குத் தங்கள் இருப்பிடத்தைக் கொண்டபோது இன்றைக்கும் அங்கே தான் இருக்கின்றனர்— அவர்கள் வாணிக நிமித்தமாகப் பயணங்கள் மேற்கொண்டனர். தங்கள் மரக்கலங்களில் எகிப்திய,[2] அஸ்ஸீரிய[3] நாட்டுப் பண்டங்களை ஏற்றிக் கொண்டு, ஆர்கோஸ்[4] உள்பட பல முக்கியமான கடற்கரைப் பட்டினங்களுக்குச் சென்றனர். அவ்வாறு ஆர்கோஸ எனப்பட்ட முக்கிய நாடு இன்றைக்குப் பொதுவாக ஹெல்லஸ்[5] என்ற பெயராலேயே வழங்கப்பட்டு வருகின்றது.

ஆர்கோஸில் அவர்கள் தாங்கள் கொண்டு வந்த பொருள்களைக் காட்சிப் பொருள்களாகப் பரப்பி வைத்தனர். அப்பொருள்கள் ஐந்து அல்லது ஆறு நாள்களில் முழுவதும் விற்று விட்டன. அதற்கிடையில் அக்கடற்கரைக்குப் பெண்கள் கூட்டம் ஒன்று, அங்குச் சேமித்து வைக்கப்பட்டிருந்த பொருள்களைக் காணும் பொருட்டு வந்தது. அப் பெண்கள் குழுவில் அரசர் ஐனாகஸ்[6] என்பாரின் மகள் அயோ[7] என்ற பெயருடையவளும் வந்திருந்தாள். அப் பொழுது பெண்களுள் பலர் கப்பலின் பின்பகுதியில் பேசிக் கொண்டு நின்றிருந்தனர். அவர்கள் தத்தமக்குப் பிடித்த வற்றை விலைபேசி வாங்கிக் கொண்டிருந்தனர். உடன் பினீசிய[8] மாலுமிகள் ஒருவருக்கொருவர் கண் சிமிட்டிக் குறிப்புக் காட்டி, அவர்கள்மீது பாய்ந்தனர். அப்பெண்கள் குழுவில் இருந்த பலர் ஓடி விட்டனர். அயோவும், அவளுடனிருந்த சில பெண்களும் அவர்களால் பிடிக்கப்பட்டு, கை கால்கள் கட்டப்பட்டு அவர்கள் தப்பியோடி விடாமல் கவனமாகக் கப்பலில் ஏற்றப்பட்டு, எகிப்து நாட்டிற்குக் கடத்திச் செல்லப்பட்டனர்.

இவ்வாறுதான் அயோ— அரசரின் மகள்— எகிப்துக்கு வந்தாள் என்று பாரசீக வரலாறு[9] கூறுகிறது. இதுவே, கோப மூட்டத்தக்க, எரிச்சலூட்டத்தக்க போதிய ஆதாரச்

1. Mediterranean Sea 2. Egypt 3. Assyria 4. Argos 5. Hellas 6. Inachus 7. Io 8. Phoenicians 9. Persian History

செயலாக அமைந்து விட்டது. (கிரேக்கர்கள் கூற்று வேறு வகையாக உள்ளது.)

அதன்பின், கிரேக்கர்கள்[1] சிலர்— பெரும்பாலும் அவர் கிரீட் நாட்டினராக[2] இருக்கலாம்—பினீசியக் கடற்கரைகளி லிருந்த தீரே[3] துறைமுகத்தில் அவ்வாறே பண்டங்களைப் பரப்பி வைத்து அவ்வங்காடிக்கு அங்கு வருகைதந்த அந் நாட்டு அரசிரின் மகளான யூரோபா[4] என்பாளை வலுக் கட்டாயமாகத் தங்கள் கிரேக்க நாட்டுக்கு எடுத்துச் சென்று விட்டனர். இதன் மூலமாக ஏட்டிக்குப் போட்டியாக அச் செயல் நடை பெற்றது.

மீண்டும் கிரேக்கர்கள் ஓர் அடாத செயலைச் செய்து விட்டனர். பாஸிஸ் ஆற்றின்[5] கரைமீது கோல்ஷிஸ்[6] எனும் நாட்டுத் துறைமுகத்தருகில் இருந்த இய[7] எனும் இடத்திற் குப் பொருள்களைக் கிரேக்க மக்கள் ஏற்றிச் சென்றனர். அங்கே தங்கள் பண்டங்களை விற்று வாணிகம் செய்ததோ டன்றி, அந்நாட்டு அரசரின் மகள் மீடிய[8] என்பாளைக் கடத்திக் கொண்டும் வந்து விட்டனர். இதையறிந்த கோல்ஷிஸ் மன்னன், தன் மகளைத் திருப்பித் தருமாறு தூது ஒன்று அனுப்பினான். ஆனால், அவ்வரசனுக்குக் கிடைத்த பதில் இதுவே: எந்தவித நட்ட ஈடும் கொடுக்க விரும்பவில்லை. காரணம், அவர்கள் ஆர்கோஸிலிருந்து[9] அயோ[10] என்பாளைக் கடத்திச் சென்றதற்குத் தாங்கள் எதுவும் பெறவில்லை என்பதே.

நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகள் கழிந்தன. பிரியம்[11] என்பாரின் மகனான பாரிஸ்[12] மேற் கூறப்பட்ட கதை களைக் கேட்டு, அதே போன்று நடந்து கொள்ளப் பேராவல் கொண்டு, கிரேக்க நாட்டிலிருந்து[13] தனக்கு மனைவியாக ஒரு பெண்ணைக் கவர்ந்து விடுவது என்று உறுதி செய்து அவ்வாறே ஹெலன்[14] என்பாளைக் கடத்திச் செல்ல, கிரேக்க நாட்டுத் துறைமுகம் ஒன்றில் வந்திறங்கினான்."

---

1. Greeks 2. Cretans 3. Tyre 4. Europa 5. River Phasis 6. Colchis 7. Aea 8. Medea 9. Argos 10. Io 11. Priam 12. Paris 13. Greece 14. Helen

விளக்கவுரை :

வரலாறு[1] : வரலாறு என்பது என்ன? அதற்கு ஹிராடடஸ் கிறித்து பிறப்பதற்குச் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னரே தகுந்த விடையையும் விளக்கத்தையும் கொடுத்துள்ளார்.

(i) சென்றகால வரலாற்று நிகழ்ச்சிகளைப் பாதுகாத்து வைத்தல்.

(ii) நம் சொந்த ஊர் நாடு ஆகியவற்றின் வரலாற்றுச் செய்திகளையும், அந்நாட்டு மக்களுடைய வாழ்க்கை அனுபவங் களையும்—அகம், புறம்—காதல், போர்—ஆகிய இருவகைகளில் ஏற்பட்ட அனுபவங்களையும், மற்றும் அவர்களின் வியத்தகு சாதனைகளையும் ஏடுகளில் அழியாவண்ணம் எழுதி வைத்தல்.

இவ்வேடுகள் தரும் விளக்கங்களே "வரலாறு" எனப்படும். ஆக, முதல் முதல் வரலாற்றுக்கு விளக்கம் தந்து, அதன்படியே வரலாறு படைத்த முதல் வரலாற்றாசிரியர் ஹிராடடஸ் அவர் களே ஆவார்.

பினீசியர்[2] : பினீசிய நாட்டில் வசித்து வந்த மக்கள் பினீசியர். பினீசியா[3] என்பது சிரியாவின்[4] கடற்கரைப்பகுதி அது மத்தியதரைக்கடல்[5] பகுதிக்கும் லெபனானுக்கும்[6] இடை யிலுள்ள நாடு. இப்பெயர் கிரேக்க ஆதாரத்தைக் கொண்டது. அந்தக் கிரேக்க ஆதாரம், தமிழ் மூலத்தைக் கொண்டது. ஆக, பினீசியா என்னும் சொல் இந்திய தமிழ் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். பினீசியா, சிவந்த எனும் பொருள் கொண்ட கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது.

"பினீசியர்கள் சிவந்த பொருள்களில் வாணிகம் நடத்தினர். குருவிந்தக்கல், சிவந்த ஆடைகள், குங்கிலியம், பெரில் முதலி யவை இந்தியாவிலிருந்து எகிப்துக்கும் மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன."

—(பெரிப்ளூஸ்: அதிகாரம் 6, பக்கங்கள் 20, 22, 25)

பினீசியர்கள் கடல் வாணிகத்திலும், கப்பல்களைச் செம்மை யாகச் செலுத்துவதிலும் புகழ் பெற்றவர்கள். பல குடியேற்றங் களை ஏற்படுத்தியவர்—கார்த்தேஜ்[7], ஹிப்போ[8] முதலியன.

---

1. History 2. Phoenicians 3. Phoenicia 4. Syria 5. Mediterranean Sea 6. Lebanon 7. Carthage 8. Hippo

அவர்கள் நாட்டின் முக்கியக் கடற்கரைப்பட்டினம் தீரே,[1] சீதோன்[2] என்பனவாகும்.

தீரே, சீதோன் பெரிப்ளூஸின் ஆசிரியரால் (கி.பி. 50—80) குறிப்பிடப்பட்டுள்ளன. —(பெரிப்ளூஸ்: அதி. 6 பக்கம் 22)

மற்றும் பிளினியாலும் (கி.பி. 23-79) குறிப்பிடப்பட்டுள்ளது. —(பிளினி: அதி. 42, பக்கம் 304)

தீரே, சீதோன் விவிலிய நூலில்[3] குறிப்பிடப்பட்டுள்ளன:

"Solomon sent to Huram, the King of Tyre saying..." —(Old Testament, Chronicles-II, 2-3)

"Namely five lords of the Philistines and all the Canaanites and the Sidonians." —(Old Testament, Judges, 3-3)

பினீசியா என்பதற்கு மற்றொரு பொருளும் கூறப்படுகிறது. இந்தியப் பெருங்கடலின் தென்கோடியிலிருந்து – தமிழ்நாட்டிலிருந்து—கேரளக் கடற்கரையிருந்து கப்பலூர்ந்து சென்ற தமிழ் மக்கள் தென்னை, பனை—பாம்[4] எனப்படுவது—மரங்களைத் தாங்கள் சென்றடைந்த புதிய நாட்டில் பயிரிட்டனர். அதன் காரணமாக அவர்கள் பாமேசியர் என்றும், பனேசியர் என்றும்—இது பனையேறியர் என்ற தன் மரூஉ—வழங்கப்பட்டனர். அப்பனையேறியர் எனும் சொல்லே—பாமேசியர் எனுஞ் சொல்லே—நாளடைவில் பினீசியர் என்று உருவம் பெற்று விளங்குவதாயிற்று. பனை வளர்த்தவர்கள், பனை ஏறுபவர்கள் பனையேறிகள். பனைக்கும், பினிக்கும் எத்துணை ஒற்றுமை காணப்படுகிறது! ஆக, பாமேசியர், பனையேறியர் எனுஞ் சொற்களே நாளடைவில் பினீசியர் என்ற உருவம் பெற்று வழங்கப்படுவதாயிற்று, ஆக, பினீசிய மக்கள் தமிழ்நாட்டிலிருந்து சென்று குடியேற்றங்கள் ஏற்படுத்திய தமிழர்களே.

"The word Phoenicia is derived from Phenos (Blood-red), the word denoting first the famous purple of Phoenician commerce, then the purple men (i.e. traders in purple), lastly the tree (i.e. the **PALM**) which they introduced in their new settlements".

—(A Smaller Classical Dictionary: Page 405)

---

1. Tyre 2. Sidon 3. Bible 4. Palm

பினீசியாவைப்பற்றி எகிப்திய வரலாறு ஒன்று கூறுகிறது.

"எகிப்தியர்கள் கப்பல் கட்டுவதற்காகக் கி.மு. 3200-ல் பினீசியாவிற்குத் தேவதாரு மரங்களை (Cedar) வாங்க ஒரு தூதுக்குழுவை அனுப்பினர்.

கி.மு. 1500 ல் அரசி ஹட்ஷிப் சட்[1], நைல் நதி[2] வழியாகத் தீபே[3] நகரத்திலிருந்து செங்கடலுக்குச்[4] சில கப்பல்களைச் செலுத்தினாள்.

அரசர் சாலமோன்[5] சீதோனின்[6] அரசரான ஹீராம்[7] என்பவரை அமர்த்தி, தாம் கட்டப் போகும் கோயிலுக்குத் தேவையான பொருள்களைக் கொணருமாறு பணித்தார். ஹீராம் என்பாரும் இந்தியாவில் உள்ள ஓபிர்[8] துறைமுகத்துக்கு வந்து, வேண்டிய பொருள்களை எடுத்துச் சென்றார். நாளடைவில், பினீசியர்களே[9] தங்கள் சொந்தக் கப்பல்களை அமர்த்திக் கொண்டு, பண்டங்களை ஏற்றிச் செல்லலாயினர்.

கப்பலில் செல்லும் பினீசியா ஓபிர்-இந்தியா கடல்வழி பினீசியர்க்கு மட்டும் தெரிந்திருந்தது. அதை அவர்கள் வாணிக இரகசியமாக வைத்திருந்தனர்."

—(They All Discovered America: Pages 524-26)

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து, பினீசியர்கள் கி.மு. 3000 அளவிலேயே தமிழ் நாட்டிலிருந்து சென்று பனை, தென்னை முதலியவற்றைத் தாங்கள் குடியேறிய நாட்டில் பயிர் செய்து, பின்னர் பல குடியேற்றங்களை அமைத்தனர் என்பது தெரிய வருகிறது.

"The influence of Indian Culture has been felt abroad since the 4th century B.C. possibly earlier, possibly later."

—(Dr. S. Radhakrishnan, Our Heritage: Page 22)

கி. மு. 16 ஆம் நூற்றாண்டில் பினீசியர்களின் முக்கியத் துறைமுகம் தீரே[10] என்பதும், மற்றும் பினீசிய நாடு வலிமை பெற்ற நாடாக விளங்கிற்று என்பதும், அது எகிப்தால் வெல்லப் பட்டது என்பதும், கி.மு. 6 ஆம் நூற்றாண்டு அளவில் அந்நாடு

1. Queen Hatshepsut 2. Nile 3. Thebes 4. Red Sea (Erythrean Mare) 5. King Solomon 6. Sidon 7. Hiram 8. Ophir (India) 9. Phoenicians 10. Tyre

தமிழ்நாட்டுத் துறைமுகங்களுடன் வாணிகம் நடத்திக் கொண்டிருந்தது என்பதும், அது விவிலிய நூலின்[1]-பழைய ஏற் பாட்டில் பல விடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், மற்றும் அஸ்ஸீரியரின் கல்வெட்டுகளில்[2] அக்குறிப்புகள் காணப் படுகின்றன என்பதும் ஆகிய பல செய்திகள் நமக்குத் தெரிய வருகின்றன.

மகா அலெக்சாந்தர்[3] காலத்தில் (கி.மு. 356 323) அது அலெக்சாந்தரின் அரசுடன் இணைக்கப்பட்டு விட்டது. பின்னர் கி.மு. 197-ல் செலூசிட்[4] அரசுடன் சேர்ந்து விட்டது. கி.மு. 64-ல் அந்நாடு பாம்பே[5] மன்னரால் ரோமப் பேரரசுடன்[6] இணைக் கப்பட்டு விட்டது. அதன் பின்னர் அது ரோமப் பேரரசுக்குக் கப்பம் கட்டி, வாணிகம் நடத்தி வந்தது. பாம்பே இறந்ததும் (கி.மு. 48) பினீசியா நாடு மறைந்து விட்டது; அதன் மொழியும் அத்துடன் புதைந்து போயிற்று. இதற்குக் காரணம் அந்நிய நாட்டினரின் படையெடுப்பும், தன் சுதந்தர இழப்பும் ஆகும்.



பினீசியர்களின் கல் வெட்டு

(1) சிவலிங்கம், (2) ஓம் – காணப்படுகின்றன.


தமிழர்களின் கடற்பயணம்

பட விளக்கம் :

1. தமிழ் நாட்டிலிருந்து தொடங்கி, செங்கடல் வழியாகச் சென்று, அங்கிருந்து நடந்து சீதோன், தீரே ஆகிய துறைமுகங் களை அடைதல் :— கி.மு. 3000.

---

1. Bible 2. Assyrian Inscriptions 3. Alexander, the Great
4. Selucid 5. Pompey 6. Roman Empire



தமிழர்களின் முதல் கடற்பயணம், பினீசியர்களின் கடற்பயணம்

2. பாரிகாஸாவிலிருந்து தொடங்கி, கடற்கரை ஓரமாகவே சென்று, செங்கடல் வழியாக, தீரே, சீதோன் துறைமுகங்களை அடைதல் :— கி. மு. 2500.

பினீசியர்களின் கடற்பயணம்

1. சீதோன், தீரே துறைமுகங்களிலிருந்து தொடங்கி, இங்கிலாந்தைச் சுற்றி ஐஸ்லாந்தை அடைந்து, அங்கிருந்து வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் உள்ள வடசேலம் எனும் துறை முகத்தை அடைதல் —: கி.மு. 800.

2. சீதோன், தீரே துறைமுகங்களிலிருந்து புறப்பட்டு நேர்வழியில் வடசேலம் அடைதல்:— கி.மு. 500.

3. சீதோன், தீரே துறைமுகங்களிலிருந்து புறப்பட்டு நேர்வழியில் மெகானிக்ஸ்பர்க்கை அடைதல் :— கி மு. 300.

4. சீதோன், தீரே துறைமுகங்களிலிருந்து புறப்பட்டு அமேஸான் நதிக் கழிமுகத்தை அடைதல் :— கி.மு. 150.

5. தீரே, சீதோனிலிருந்து புறப்பட்டு, ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு, செங்கடல் வரை வந்து, அங்கிருந்து நேரே தமிழ் நாட்டை அடைதல் :— கி.மு. 1800.


தமிழர்களின் அமெரிக்கப் பிரவேசம்

பட விளக்கம் :

தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து கி.மு. 2500 அளவில் புறப் பட்டு, ஒரு பிரிவினர் கட்டுமரத்திலேறிக் கடல் வழியாகவும், மற்றொரு பிரிவினர் கால் நடையாக நிலவழியாகவும் சென்று, இருவரும் காம்செட்காவில் இணைந்து, அங்கிருந்து கால் நடையாகப் புறப்பட்டு, பே'ரிங் கடற்கால் வழியாக, வட அமெரிக்காவின் நுழைவாயிலான அலாஸ்காவை அடைந்து, ஆங் காங்குக் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு, மெக்சிகோ வரை சென்றனர்.

உலகின் பல பகுதிகளில் தமிழர்களின் குடியேற்றங்கள்

பினீசியர்கள் தமிழ்நாட்டிலிருந்து மூன்று வழிகளில் உலகின் பல பகுதிகளுக்குக் கி.மு. 3000 அளவில் சென்று குடியேற்றங் களை அமைத்துள்ளனர். அவையாவன:



தமிழர்களின் அமெரிக்கப் பிரவேசம்

(i) தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்டு, அரேபியக் கடல்[1] வழியாக, மத்திய தரைக் கடலை[2] அடைந்து, தீரே,[3] சீதோன்[4] துறைமுகங்களை நிர்மாணித்தனர் (கி. மு. 3000).

(ii) தமிழ் நாட்டிலிருந்து கி. மு. 2500 அளவில் புறப்பட்டு, கிழக்கிந்தியத்தீவு[5]களையடைந்து, அங்கிருந்து சீன நாட்டை[6] யடைந்து, அதன் பின்னர் பேரிங் ஜலசந்தி வழியாக[7] அலாஸ்காவை[8], 30 மைல் உறைபனிமீது சென்றடைந்து, அங்கிருந்து வட அமெரிக்க மேற்குக் கடற்கரையோரமாகச் சென்று, வட அமெரிக்காவில்[9] பல இடங்களில் மெக்ஸிகோ வரை வாழ்ந்து வந்தனர். பின்னர் வட அமெரிக்காவின் கீழ்க்கடற்கரையிலும் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். பக்கம் 38-ல் தரப் பட்டுள்ள பினீசியர்களின் கல்வெட்டு அமெரிக்காவில் ரோட்ஸ் தீவில்[10] கண்டெடுக்கப்பட்டது. இதில் சிவலிங்கமும், ஓம் என்ற சொற்களையும் காணலாம். இக் கல்வெட்டு கி. மு. 1600 ஆண்டைச் சார்ந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

(iii) தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்ட பினீசியர் மத்திய தரைக் கடலை அடைந்து, அங்கிருந்து புறப்பட்டு, இங்கிலாந்தைச்[11] சுற்றிச் சென்று ஐஸ்லாந்து[12] அடைந்து, அங்கிருந்து புறப்பட்டு வட அமெரிக்காவில் கீழ்க் கரையில் உள்ள வடசேலம்[13] எனும் பகுதியை அடைந்து குடியிருப்பை ஏற்படுத்தி, பின்னர் வட அமெரிக்காவின் பல பகுதிகளிலும் புகுந்தனர் (கி.மு. 800).

மத்திய தரைக்கடலிலிருந்து புறப்பட்ட பினீசியர்கள் நேரே மேற்கே சென்று, சிறிது தெற்குத் திரும்பி தென் அமெரிக்காவில்[14] பிரேஜிலில்,[15] அமேசான் நதிக் கழி முகத்தில்[16] குடியேற்றங் கண்டனர் (கி.மு. 150).

மேற்கண்ட செய்திகளை இத்துடன் காணப்படும் வரை படங்களின் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

எகிப்திய,[17] அஸ்ஸீரிய[18] நாட்டுப்பண்டங்கள் எவை என்பது பெரிப்ளூஸ் நூலில் (கி.பி. 50—80) குறிப்பிடப் பட்டுள்ளது.

---

1. Arabian Sea 2. Mediterranean Sea 3. Tyre 4. Sidon 5. East Indies 6. China 7. Behring Strait 8. Alaska 9. North America 10. Rhodes Island 11. England 12. Iceland 13. North Salem 14. South America 15. Brazil 16. Amazon Estuary 17. Egyptian 18. Assyrian

"நவரத்ன வகைகள், தாவர வாசனைப் பண்டங்கள், சாய வகைகள், துணிவகைகள், உலோக வகைகள், விலங்குகள், பாணம், பாடினியர், விறலியர்கள் — இவை தமிழ் நாட்டின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து அலெக்சாந்திரியா துறைமுகத்துக் ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கிருந்து ரோம் முதவிய நகரங்களுக்குப் பங்கிடப்பட்டன."

— (பெரிப்ளூஸ் : பிற்சேர்க்கை, பக்கம் 304)

பினீசியா[1] பற்றி பிளினி (கி.பி. 23—79) பின்வருமாறு கூறுகிறார்:

"கண்ணாடி செய்யுந் தொழில் பினீசியா எனும் இடத்தில் தொடங்கிற்று. பேலூர் என்ற ஆற்று மணல் மட்டுமே இக் கண்ணாடி செய்யப் பயன்படுத்தப்பட்டது. பினீசியக் கற் கரையில், பேலூர் ஆற்றுக் கழி முகத்தில்வெடியுப்புக் கொணர்ந்த கப்பல் சேதமுற்றுக் கடற்கரைக்கு ஒதுக்கப்பட்டது. அக் கப்பலில் இருந்த வெடியுப்பு[2] பேலூர் ஆற்று மணலுடன்[3] கலந்து விட்டது. அங்கே குளிர் காயவும், உணவு செய்யவும் பினீசியர் தீமூட்டினர். அப்பொழுது மணலுடன் கலந்த வெடியுப்புச் சூடாகி, ஒரு கலவைப் பொருளாகி, அதுவே இறுதியில் கண்ணாடி ஆகிவிட்டது. முதல் முதல் கண்ணாடி செய்தவர்கள் பினீசியர்களே."

—(பிளினி : புத்தகம் 36 : அதி : 60—70)

பினீசியர்களைப் பற்றிப் பெரிப்ளூஸ் நூல் (கி.பி 50—80) கூறுகிறது:

"இக் கண்ணாடி செய்யும் வகை பினீசியர்களால் உலகுக்குத் தெரியப் படுத்தப்பட்டது. பினீசியர்கள் கப்பல் கட்டுவதிலும், அதைச் செவ்வனே செலுத்துவதிலும் வல்லவர்களாயிருந்தனர். பினீசியா என்பது சிரியாக் கடற்கரைப் பகுதி ஆகும். அதன் முக்கியத் துறைமுகங்கள் தீரே,[4] சீதோன்[5].

பினீசியர்களின் அயல் நாட்டுக் குடியேற்றங்கள் கார்த் தேஜ்[6], ஹிப்போ[7] என்பனவாகும்."

— (பெரிப்ளூஸ் : அதி : 17, பக்கம் 60)

---

1. Phoenicia 2. Nitre 3. Belur River sand 4. Tyre 5. Sidon 6. Carthage 7. Hippo

பினீசியர்கள்[1] விவிலிய நூலில்-பைபிளில்[2]-சீதோனியர்[3] என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மற்றும் பைபிள் கூறுகிறது:

"அரசர் சாலமோன்[4] தம் புகழ் பெற்ற கோயிலைக் கட்டுவதற்கு டார்ஷீஷ்[5] கப்பல்களை அமர்த்தி, ஒபிர்[6] (இந்தியத் துறைமுகம்) நகரத்துக்குப் பொன், வெள்ளி, தந்தம், மனிதக் குரங்குகள், மயில் ஆகியவற்றைப் பெறவும், தேவதாரு[7]-செவ்வகில் சிடார்-மரங்களைப் பெறவும் அனுப்பி வைத்தார். யூதர்களுக்கு[8] ஒபிர் இருப்பிடம் தெரியும். ஆனால் அவர்களுக்கு கப்பல் ஓட்டத் தெரியாது; பழக்கமும் கிடையாது. அவர்கள் சென்று திரும்பி வருவார்கள் என்பது ஐயமே. ஆகவே, சாலமோன் தீரேவில்[9] இருந்த அரசர் ஹீராம்[10] என்பவரை-அவர் பினீசிய நாட்டு அரசர்—அமர்த்தி அப்பணியை முடிக்க அவருக்குக் கட்டளை யிட்டார். பினீசிய அரசர் ஒபிர் நாடு அடைந்து பொருள்களைச் சேகரித்துச் சாலமோனிடம் கொடுத்தார். இப்பணியை உத்தேசித்து அவர்கள் இந்தியாவில் உள்ள ஒபிர் துறைமுகத்துக்கு அடிக்கடி கப்பலூர்ந்து வந்து, பொருள்களையும் பண்டங்களையும் ஏற்றிச் செல்லலாயினர்.

பினீசியர்கள் சீதோனியர் என்ற பெயரால் வழங்கப்படுகின்றனர். தீரே எனும் நகரமும் பினீசியரைச் சார்ந்ததே."

—(Old Testament, JUDGES 3-3)

"Now HIRAM, the king of TYRE had furnished Solomon with Cedar trees and fir trees and with gold according to all his desire."

—[Old Testament, Kings-I-9-(11)]

"The servants of Solomon which brought gold from Ophir brought ALGUM TREES and precious stones."

—[Old Testament, Chronicles II-9 (10)]

"For the kings ships went to TARSHISH with the servants of HURAM. Every three years once came the ships of Tarshish bringing gold and silver, ivory and apes and pea-cocks."

—[Old Testament, Chronicles II-9 (21)]

---

1. Phoenicians 2. Bible 3. Sidonians 4. King Solomon 5. Tarshish 6. Ophir 7. Cedar 8. Jews 9. Tyre 10. Hiram

முடிவுரை: இதனால் தமிழ்நாட்டின் நாகரிகம் கி. மு. 16ஆம் நூற்றாண்டளவிலேயே உலகப் புகழ் பெற்றிருந்தது அறியப் படும். தமிழர் கடல் வாணிகம் நடாத்தி வந்தனர். மற்றும் ஹிராடடஸ் கூறுவது போல, பினீசியர்கள் இந்தியப் பெருங் கடலிலிருந்து, — தமிழ்நாட்டினின்று கேரளக் கடற்கரையி லிருந்து—மேற்கே சென்று குடியேற்றங்களை நிறுவியுள்ளனர் என்பதை அறிய வியப்பாகவும், பெருமையாகவும் உள்ளது.

வால்மீகி இராமாயணம் கூறுகிறது:

"சோளாங் பாண்டியாங் ஸ கேரளாங்" (கிஷ்கிந்தா: அத்யா 42) அதாவது "சோழ தேசத்தையும், கேரளத்தோடு கூடிய பாண்டி நாட்டையும்" என்பதே அதன் பொருள். அக்காலத்தில் கேரளம் அதாவது சேர நாடு-பாண்டி நாட்டு அரசுக்கு உட்பட்டிருந் தது என்ற செய்தி தெரிய வருகிறது. மற்றும் தென்னிந்தியாவில் சோழர், பாண்டியர், கேரளர் (சேரர்) ஆகிய மூவேந்தர் ஆண்டு வந்தனர் என்பதும் இதனால் அறியப்படுகிறது.

ஆக இங்குக் கேரள என்று கூறப்பட்டாலும், அது தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகவே விளங்கிற்று அங்கு வாழ்ந்தவரும் தமிழராகவே எண்ணப்பட்டனர். ஆக, கிரேக்க நாட்டில்[1] ஒரு நாகரிகம், எகிப்தில்[2] ஒரு நாகரிகம், தமிழ்நாட்டில்[3] ஒரு நாகரிகம், சீன நாட்டில்[4] ஒரு நாகரிகம்-இவற்றுக்குத் தொடர்பில்லாத வட நாட்டு ஆரியர் நாகரிகம்[5] ஆகிய நாகரிகங்களுள் தமிழ்நாட்டு நாகரிகம் நடுவில் அமைந்து சிறந்து விளங்கி, மேலை நாடு களுக்கும் தொலைக் கீழை நாடுகளுக்கும் ஓர் இணை பாலமாக அமைந்து விட்டிருந்தது. இது நடந்தது கி.மு. 3000. வடநாட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஹரப்பா[6] சிந்துச் சமவெளி[7] நாகரிகங்கள் கி. மு. 1500 கால அளவில் இருந்திருக்கக் கூடும் என்று ஆராய்ச்சி வல்லுநர் கூறியுள்ளனர். ஆக, தென்னிந்தியாவிலிருந்தே தமிழர் நாகரிகமே, கி. மு. 2500 அளவில் மேலை நாடுகளுக்கும், கீழை நாடுகளுக்கும், கி.மு 1500 அளவில் இந்தியாவில் உள்ள ஹரப்பா, சிந்துச் சமவெளி முதலிய இடங்களுக்கும் பரவிச் சென்றது என்ற செய்தி ஹிராடடஸ் வரலாற்றுக் குறிப்புகள்மூலமாக உய்த்துணரப்படுகின்றது.

ஆக, உலக நாகரிகத்தின் தொட்டில் தமிழ்நாடே என்பதும், இங்கிருந்துதான் நாகரிகம் உலகின் பல பகுதிகளுக்கும் பரவிற்று

---

1. Greece 2. Egypt 3. Tamilnadu 4. China
5. Aryan 6, Harappa 7. Indus Valley

என்பதும் தெரியவருகின்றன. இதற்குத் தக்காணப்பீடபூமி[1] பல்லாற்றாலும் உதவியளித்துள்ளது.

தமிழ்நாட்டின் வரலாறு ஒன்று உண்மையை ஒட்டி எழுதப்படுவதாயின் முதல் வாக்கியம் பின்வருமாறு அமைதல் வேண்டும்:

''தமிழ்நாடே உலக நாகரிகத்தின் தொட்டில்.''- இம்முடிவு எச்சார்புமற்ற, காய்தல் உவத்தல் இன்றி ஏற்றுக் கொள்ளப்படும் முடிவாகும்.

ஆர்கோஸ்[2]: கிரேக்க நாட்டில் பெலபொனீஸஸ்[3] பகுதியில் விளங்கிய முக்கிய நகரம்; சிறந்த முக்கியத்துவம் பெற்று விளங்கிற்று அந்நகரம் ஹிராடடஸ் காலத்தில் (கி.மு. 484-408) ஹெல்லஸ்[4] என்ற பெயரால் வழங்கப்பட்டது. பெலாப்ஸ் என்ற புராணப் பெயரிலிருந்து பெலபொனீஸஸ் என்ற சொல் உருவாயிற்று

ஐநாகஸ்[5]: இவர் தந்தை ஓசேனஸ்[6]; தாய் டெதிஸ்[7]. இவரே ஆர்கோஸ் நாட்டின் முதல் அரசர். இவர் நாட்டில் ஓடும் ஓர் ஆற்றுக்குத் தம் பெயரையே இட்டுள்ளார்.

அயோ[8]: இவள் ஐநாகஸின் மகள். இவள் கடத்தப்பட்டாள் என்று பாரசீக வரலாறும்[9]. தானே கப்பல் தலைவனைக் காதலித்துக் கருப்பமுற்றதால், தாயகத்துக்குத் திரும்ப அச்சம் கொண்டு, எகிப்திற்குச் சென்று விட்டாள் என்று பினீசிய வரலாறும்[10] கூறுகின்றன. பாரசீக வரலாற்றைப் பினீசிய வரலாறு மறுத்துரைக்கிறது ஒருகால் ஏற்பட்ட களங்கத்தைப் போக்கிக்கொள்ள கற்பித்த காரணமாகவும் இருக்கக்கூடும்.

தீரே[11]; பினீசிய நாட்டின்[12] முக்கியத் துறைமுகம். அங்குச் சிவ புக் கற்கள் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டன. கருஞ்சிவப்பு ஆடைகளை[13] உற்பத்தி செய்தனர். அவ்வாடைகளை அரசர் அணிவது மரபு.

யூரோபா[14]; இவள் பினீசிய அரசர் எகினாரின்[15] மகள். ஆனால் இவள் பீனிக்ஸ்[16] என்பாரின் மகள் என்று

---

1. Deccan Plateau 2. Argos 3. Peloponnesus 4. Hellas 5. Inachus 6. Oceanus 7. Tethys 8. Io 9. Persian History 10. Phoenician History 11. Tyre 12. Phoenicia 13. Purple dress 14. Europa 15. Agenor 16. Phoenix

இலியட் காவியம்[1] கூறுகிறது. இவளது பேரழகு ஜியுஸ் கடவுளை[2] மயக்கி விட்டதாகவும், அக் கடவுள் எருதின் உருவம் தாங்கி நிற்க, யூரோபா விளையாட்டாக அவ் எருதின் முதுகில் ஏறி உட்கார, அவ் எருது கடலில் குதித்து, அம்மங்கையுடன் நீந்திக் கிரீட் தீவுக்குச்[3] சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது. அங்கே யூரோபா ஜியுஸ் கடவுளின் மனைவியாகி, மினாஸ்[4] ரதமான்தஸ்[5] சார்பிடான்[6] ஆக மூன்று மகன்களுக்குத் தாயானாள் என்று கிரேக்கப் புராண வரலாறு கூறுகிறது. இவள் பெயராலேயே ஐரோப்பா கண்டம் நிர்மாணிக்கப்பட்டது.

பாஸிஸ் ஆறு[7]: கோல்ஷிஸ்[8] நாட்டின் முக்கியமான ஆறு. அது கருங்கடலுடன்[9] கீழ்க்கோடியில் கலந்ததாகக் கருதப்படுகிறது.

கோல்ஷிஸ்: இது பாஸிஸ் ஆறு இருந்த நாடு: வடக்கில் காக்ஸஸ் மலைகள்;[10] கிழக்கில் ஐபீரியா.[11] இந்நாடு இய[12] என்றும் வழங்கப்பட்டது. இந்நாடு மிகச் செழிப்புற்று இருந்தது. இங்கே லினன் எனும் செயற்கை இழை தயாரிக்கப்பட்டது. இந்நாடு சில காலம் மித்திரிடாடிஸ் யூபடார்[13] என்ற அரசரால் ஆளப்பட்டது. பின்னர், பாண்டஸ்[14] அரசருக்குக் கப்பம் கட்டி வந்தது.

இய: இவ்வூர் கோல்ஷிஸ் பகுதியிலேயே இருந்தது. அங்குக் கிரேக்கர்கள்[15] தங்கள் கப்பல்களில் வந்து பண்டங்களை இறக்கிப் பெரு வாணிகம் செய்தனர்.

மீடிய[16]: இவள் கோல்ஷிஸ் நாட்டு அரசரின் மகள். இவளைக் கிரேக்க வணிக மக்கள் தங்கள் கிரேக்க நாட்டுக்குக் கடத்திச் சென்று விட்டனர்.

ஆர்கோஸிலிருந்து[17] அயோ: இவள் ஐனாகஸ்[18] என்பாரின் மகள் ஆவாள். ஐனாகஸ் ஆர்கோஸ் ஊரின் மன்னர். இவ்வூர் கிரேக்க நாட்டின் தென் பகுதியில் இருந்தது. இவள் ஜியுஸ் கடவுளின் பேரன்புக்குப் பாத்திரமானவள். பல இடங்களுக்குச் சென்று, இறுதியில் நைல் நதிக் கரையை அடைந்து, எகிப்தில்[19]

---

1. Iliad 2. Zeus 3. Crete 4. Minos 5. Rhadamanthas 6. Sarpedon 7. River Phasis 8. Colchis 9. Black Sea 10. Caucasus 11. Iberia 12. Aea 13. Mithridates Eupator 14. Pontus 15. Greeks 16. Medea 17. Io from Argos 18. Inachus 19. Egypt

தம் இருப்பிடத்தை வைத்துக் கொண்டாள். அங்கே தன் பழைய உருவத்தையடைந்து, ஜியுஸ் கடவுளுக்கு இபாபஸ்[1] எனும் ஆண்மகன் ஒருவனைப் பெற்றெடுத்தாள். எருதின் உருவம் கொண்டு நீந்தியதால் பாஸ்போரஸ்[2] எனும் பெயர் ஏற்பட்டது.

பிரியம்[3]: இவர் டிராய்[4] நகர அரசர். ஹோமர்[5] (கி.மு. 850) கூறுகிறார். "இவருக்கு 50 மகன்கள் இருந்தனர்." டிரோஜன் யுத்தம்[6] நடந்த பொழுது, பிரியம் மூப்படைந்து விட்டிருந்தார். டிராய் பிடிபட்டவுடன் (கி.மு. 1184) பிரியம், அஷிலஸின்[7] மகனான பிர்ரஸ்[8] என்பவரால் கொல்லப்பட்டார். அரசர் பிரியமிற்கு நால்வர் மகன்கள் இருந்தனர். அவர்களுள் பாரிஸ் என்பவர் இரண்டாவது மகன் ஆவார்.

பாரிஸ்[9]: இவரது மாற்றுப் பெயர் அலெக்சாந்தர். இவர் பிரியம் அரசருக்கும், ஹெகூபா மங்கைக்கும் பிறந்த இரண்டாம் மகன் ஆவார். இவருடைய தாய், கருவுற்றிருக்கும் போது, தீப் பந்தம் ஏந்தியதாகக் கனவு கண்டதால், தான் பெற்ற மகனை மௌண்ட்இடா எனும் மலைமீது விட்டு விட்டு வந்து விட்டாள். அக்குழந்தையை ஓர் ஆட்டிடையன் கண்டெடுத்து வளர்த்து வந்தான். அச்சிறுவன் சிறிது காலம் பல இடங்களில் உழன்று, உண்மையை அறிந்து தன் தாயைத் தேடிப் புறப்பட்டு, இறுதியில் தன் தாயை வந்தடைந்தான். அவருடைய முதல் மனைவியின் பெயர் ஈனோனி[10]. அவள் ஆற்றுக் கடவுளான செப்ரென்[11] என்பாரின் மகள். அவளை விட்டு விட்டு, ஹெலன்[12] என்பாளைக் காதலித்து அவளை அடைய முயன்றார். இறுதியில் டிராய் நகரம் பிடிபட்டதும் (கி.மு. 1184) பாரிஸ் அதில் ஹெர்க்குலீஸ்[13] போட்ட அம்பினால் துடித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது முதல் மனைவி ஈனோனிடம் சென்றார். ஆனால் அவள் பாரிஸைக் காப்பாற்ற மறுத்து விடவே, பாரிஸ் வலிதாங்காமல் உயிரிழந்தார். டிராய் நகரம் நிர்மாணிக்கப்பட்ட ஆண்டு கி.மு. 2500 என்றும், அந்நகரம் டிரோஜன் போரில் கி.மு. 1184 ஆம் ஆண்டு அழிவுற்றது என்றும் கிரேக்க வரலாறு கூறுகிறது.

—(History of Greece: J. B. Bury, Page 84)

---

1. Epapus 2. Bosphorus 3. Priam 4. Troy 5. Homer 6. Trojan War 7. Achilles 8. Pyrrhus 9. Paris 10. Oenone 11. Cebren 12. Helen 13. Hercules

ஹெலென்[1]: இவள் மிகச் சிறந்த பேரழகி. இவளை அடைய பல அரசர்கள் முன்வந்தனர். இவள் கடவுள் ஜியுஸிற்கும்[2], லிடா[3] தேவதைக்கும் பிறந்தவள். இவள் காஸ்டர்[4], பாலக்ஸ்[5] ஆகியவர்களின் சகோதரி. இவள் மெனிலஸ்[6] என்பவரை மணந்து, ஹெர்மியோனி[7] எனப் பெயர் கொண்ட அழகான பெண்ணைப் பெற்றெடுத்தாள் அதன் பின்னர் பாரிஸ் என்பவரால் மயக்கப்பட்டு, டிராய் நகரத்துக்குக் கடத்திச் செல்லப் பட்டு விட்டாள். இவளை மணக்கவிருந்த கிரேக்க வீரர்கள் டிராய்மீது போர் தொடுத்தனர். இப்போரே புகழ் பெற்ற டிரோஜன் யுத்தம்[8] ஆகும். இப்போர் 10 ஆண்டுகள் நடைபெற்றது. இறுதியில் பாரிஸ் இறந்ததும் அவர் தம்பியாகிய டெய்போபஸ் என்பாரை மணந்து கொண்டாள். இறுதியில் ஸ்பார்டா நகரத்துக்கு வந்து விட்டாள். இவ்வளவு போர்களும் ஒரு பெண்ணின் அழகிற்காக ஏற்பட்டன என்பதை நினைக்கும் பொழுது, வியப்புண்டாகிறதல்லவா?— (A Smaller Classical Dictionary, Page 246)

இவ்வாறு பெண்களைக் கவர்ந்து திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் பண்டைக் காவியமாகிய மகா பாரதத்தில் கிருஷ்ணன் ருக்மணியை எடுத்துக் கொண்டு ஏகியதாகவும், அதன் பிறகு மணந்ததாகவும் கூறப்படும் செய்தியில் காணப்படுகிறது.

கிரேக்கர்கள் அழகையும் கலையையும், அழகுக்கலையையும்[9] எவ்வாறு போற்றி வந்தனர் என்பது இதனால் தெரிய வருகிறதன்றோ?

---

1. Helen 2. Zeus 3. Leda 4. Castor 5. Pollux 6. Menelaus 7. Hermione 8. Trojan War 9. Aesthetics

2. லிடியாவின் பண்டைக்கால மன்னர்கள்

"இனி சிறிய நகரங்களின் வரலாறுகளைக் காண் போம். இச்சிறிய நகரங்களே முன்னர் பெரிய நகரங்களாக இருந்தன. பெரிய நகரங்களாக இருந்த பல இன்று சிறிய நகரங்களாகி விட்டன. என்னுடைய காலத்தில் பெரியன வாக வளர்ந்த நகரங்கள், சிறிது காலத்திற்கு முன் சிறியனவாகவே இருந்தன. நான் இனி எழுதப்போவது சிறிய நகரம் பற்றியோ, பெரிய நகரம் பற்றியோ எனக் கவலைப் படப்போவதில்லை. காரணம் இந்த உலகில் எவருமே நீண்ட காலம் சுபிட்சத்துடன் வாழ்ந்தது கிடையாது.

லிடியாவின்[1] அரசுரிமை முதலில் ராக்ளிட்ஸ்[2] அவர் களையே சார்ந்திருந்தது. அவ்வுரிமை நாளடைவில் குரோஸஸ்[3] மரபினர் கைக்கு வந்து விட்டது. ஆக்ரான்[4] அரசருக்குமுன் அவ்வரசு லைடஸ்[5] என்பாரின் ஆணைக்கு அடங்கியிருந்தது. லைடஸ் என்பார் ஆடிஸ்[6] என்பாரின் மகன் ஆவார். ஆகவே முன்னர் மயோனியர்கள்[7] என வழங்கப்பட்ட மக்களே, பிற்காலத்தில், லைடஸ் ஆட்சிக்குப் பிறகு லிடியர்கள் என்று வழங்கப்பட்டனர். இவ்வாறாக 22 அரசர்கள் 505 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்துள் ளனர். தந்தை, மகன், பிறகு அவர்மகன் ஆக இவ்வாறு பரம் பரை ஆட்சி நடந்து கொண்டு வந்தது. அதில் மிர்ஸஸ்[8] என்பாரின் மகனான கான்டௌல்ஸ்[9] வரை அவ்வரசு வந்து கொண்டிருந்தது."

---

1. Lydia 2. Heraclids 3. Croseus 4. Agron 5. Lydus 6. Atis 7. Maonians 8. Myrsus 9. Candaules

விளக்கவுரை:

லிடியா[1]: இச்சொல் லைடஸ்[2] மன்னரின் பெயரால் நிர் மாணிக்கப்பட்டதைக் குறிப்பதாகும். லிடியாவின் மக்கள் இதற்கு முன், மயோனியர்கள்[3] என்று வழங்கப்பட்டனர். இந் நாடு ஆசியாமைனரில் ஒரு பகுதியாயிருந்தது. இதன் எல்லைகள்! வடக்கில் மைசியா[4]; தெற்கில் காரியா[5]; கிழக்கில் பிரிஜியா[6]; மேற்கில் ஈஜியன் கடல்[7]. இதன் முந்திய பெயர் மயோனியா[8]. லிடியன் அரசு, சார்டிஸ்[9] எனும் நகரத்தில் நிர்மாணிக்கப் பட்டது. அது மேலும் மேலும் வளர்ந்து ஒரு பேரரசாகத் திகழ லாயிற்று. அதில் 22 பரம்பரைகள் ஆண்டு வந்தன என்றும், 505 ஆண்டுகள் அப்பரம்பரைகள் அரசாட்சி செய்து வந்தன என்றும் ஹிராடடஸ் கூறுகிறார். அரசர் ஹிராக்ளிட்[10] அதன் முதல் அரசர் ஆவார்.

மிர்ஸஸ்:[11] ஹிராக்ளிட்களின் பரம்பரையில் லிடியாவை ஆண்ட இறுதி அரசரான கான்டௌஸ்ஸ் என்பாரின் தந்தை.

கான்டௌல்ஸ்[12]: இவரது மற்றொரு பெயர் மிர்ஸிலஸ்.[13] இவரே ஹிராக்ளிடுகளின் பரம்பரையில் ஆண்ட இறுதி அரசர். இவர் தம் மனைவியைக் கைஜீஸ்[14] என்பாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அக் கைஜீஸ், மெர்ம்னடே[15] பரம்பரையில் வந்த சிற்றரசர். சில நாள்களில், கான்டௌல்ஸின் மனைவி, தன் கணவரைக் கொன்று விடுமாறு கைஜீஸிடம் கூறவே, அவரும் அக்கணவரைக் கொன்று போட்டார் (காரணம் அதிகாரம் 3 பார்க்கவும்). உடன் தாம் லிடியாவின் அரச பீடத்தில் அமர்ந்து கான்டௌல்ஸின் மனைவியையே மணந்து அவளைத் தமது இராணியாக ஆக்கிக் கொண்டார்.

கான்டௌல்ஸ் லிடியாவின் இறுதி அரசர். அவர் ஹிராக்ளிடு களின் பரம்பரையில் வந்தவர்; மெர்ம்னடே பரம்பரையில் வந்த கைஜீஸ், லிடியாவில் அம்பரம்பரையின் முதல் அரசரும் ஆவார். அவர் டெல்பி கோயிலிக்கு[16] யாருமே கொடுத்திராத அளவு வெகுமதிகள் அனுப்பி வைத்தார். கைஜீஸ் ஆட்சி செய்த காலம் கி.மு. 716-678 ஆகும்.

---

1. Lydia 2. Lydus 3. Maonians 4. Mysia 5. Caria 6. Phrygia 7. Aegean sea 8. Maonia 9. Sardys 10. Heraclids 11. Myrsus 12. Candaules 13. Myrsilus 14. Gyges 15. Mermnade 16. Delphi Temple

3. கைஜீஸ் லிடியா நாட்டை எவ்வாறு கைப்பற்றினார்?

"கான்டௌலஸ்[1] தம் மனைவியிடம் மிகுந்த காதல் கொண்டிருந்தார். அவள் உண்மையிலேயே ஓர் அழகி. அவளே உலகப் பேரழகி என்று தம் மனத்திற்குள் எண்ணினார்.

அவ்வரசரின் மெய்காப்பாளர்களுள், கைஜீஸ்[2] நல்ல உடற்கட்டுடன் இருந்தான். அவன் டஸ்கைலஸ்[3] என்பாரின் மகன். அக் கைஜீஸுடன் அரசர் அந்தரங்கமான செய்திகளைப் பரிமாறிக் கொள்வார். ஒரு நாள் அரசர், தம் மனைவி மிகுந்த அழகு வாய்ந்தவள் என்றும், அவள் சிறந்த அழகி என்று தமக்குத் தெரியும் என்றும், ஆனால் மற்றவர் அதை ஆமோதித்தால்தான் அது உண்மையா யிருக்கும் என்றும் கூறி, கைஜீஸை நோக்கி, "கைஜீஸ், நான் ஒன்று கூற விரும்புகிறேன். என் படுக்கையறையில் நீ ஒளிந்து கொண்டு, என் மனைவி ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக இருக்கும் பொழுது அவள் அழகைப் பார்த்து, அது எப்படிப்பட்டது என்று எனக்குக் கூறு," என்றார் அவ்வரசர்.

"ஐயகோ, என்ன பணியைச் செய்யுமாறு எனக்குக் கட்டளை இட்டீர்! என்னை அக்குற்றம் சாட்டிக் கொல்லவோ இச் சதி?" என்று மறுமொழி மொழிந்தான் கைஜீஸ்.

1. Candaules, 2. Gyges 3. Dascylus

"உண்மையாகவே கூறுகிறேன்; நான் குற்றமும் சாட்ட மாட்டேன், உன்னைக் கொல்லவும் மாட்டேன். ஆனால் ஒன்று; படுக்கையறையில் நீ இருப்பதை அவள் பார்த்து விடக்கூடாது. பாதுகாப்பாயிரு. அவளுக்குத் தன் மேனியைத் தன் கணவன் தவிர வேறோர் ஆடவன் காணச் சகியாள். உடன் என்ன நேருமோ தெரியாது. மிகவும் விழிப்பாயிருந்து செயலாற்று," என்றார் அரசர்.

இறுதியில் அவ்வரசர் தாம் நினைத்தவாறே அக் கைஜீஸைத்[1] தம் படுக்கையறைக்குள் மறைந்து நின்று தம் மனைவியின் அழகைக்கண்டு, அதன் விவரத்தைத் தமக்கு தெரிவிக்குமாறு கைஜீஸின் சம்மதமும் பெற்றுக் கொண் டார்.

அடுத்த நாள், அரசரும் அவர் மனைவியும் அன்றிரவு படுக்கையறையில் உள்ளே நுழைந்தனர். அவர்கள் உள்ளே நுழைந்ததும், கைஜீஸ் ஒரு போர்வையை உடல் முழுவதும் மறையப் போர்த்திக்கொண்டு, கதவின் இடுக்கில் மறைந்து கொண்டான். அவள் தன் கணவன் இச்சைப் படி தன் ஆடைகள் யாவற்றையும் ஒவ்வொன்றாகக் கழற்றி வைத்துவிட்டு, நிர்வாணமாகக் காட்சியளித்தாள். கைஜீஸ்[1] இவ்வழகிய காட்சியை ஒளிந்து கொண்டு பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்துக் கைஜீஸ் வெளியே போக மெதுவாகக் கதவைத் திறந்தான். அப்பொழுது உள்ளே இருந்த அரசி அவன் வெளியே போவதைப் பார்த்துவிட்டாள். உடன் தன் கணவனிடம் வந்து, "இது உங்கள் ஏற்பாடா? வெட்கமாயில்லை?" என்று கோபமாகக் கேட்டாள். அதற்கு அவ்வரசர் "இப்பொழுது, என்ன குடிமுழுகிப் போய்விட்டது? அவன் பார்த்தான் அவ்வளவே. உன்னைத் தொட்டானா? உன் கற்புக் கெடுவதற்கு?" என்றார். "அவ்வாறு ஒருவனது மனைவி யின் உடலழகை — நிர்வாண நிலையில் — வேறோர் ஆடவன் பார்ப்பதும் தவறல்லவா? இதுகாறும் இந்த உடல் உமக்கு ஒருவருக்கே சொந்தம் என்று நினைத்திருந்தேன்.

---

1. Gyges

இன்று நீங்களே அவனைச் சொந்தம் கொண்டாடச் செய்துவிட்டீரே? நாளைக்கு இன்னும் என்ன எல்லாம செய்யமாட்டீர்?'' என்று கூறிவிட்டு, ''ஆகட்டும், இதற்கு ஒரு வழி செய்கிறேன்,'' என்று தன் மனத்திற்குள் ஏதோ எண்ணமிட்டுச் சென்றுவிட்டாள். வெளியில் ஏதும் நிகழ்ந்த தாகவே தான் கண்டுகொள்ளவில்லை.

மறுநாள் அவ்வரசி கைஜீஸைத்[1] தன் இருப்பிடத்துக்கு வரவழைத்தாள். அரசி தன்னை அவ்வறையில் முந்தின இரவு பார்த்துவிட்டது கைஜீஸுக்குத் தெரியாது. ஆகவே, அவன் சாதாரணமாகவே அரசியின் எதிரில் வந்து நின்றான்.

அரசி: ''கைஜீஸ், நேற்றிரவு என் உடல் அழகைப் பார்த்தீரா? நன்றாக இரசித்தீரா? அஃது எவ்வாறு இருந்தது?''

கைஜீஸ்: (அதிர்ச்சியடைந்து) அரசியாரே, உங்கள் கணவர் கட்டளைப்படிதான் நடந்தேனே ஒழிய, நானாக ஏதும் செய்யவில்லை. நான் எவ்வகையிலும் குற்றவாளி அல்லன்.''

அரசி: ''சரி, நான் உமக்கு இப்பொழுது இரண்டு காரியங்களைச் செய்யக் கட்டளையிடுகிறேன். ஒன்று இந்த வாளால் அரசரை வெட்டிப் போடுவீர். உடன் என்னை மணந்து இராணியாக ஆக்கி,நீர் என் கணவரின் அரியணை ஏறி ஆட்சி செய்வீராக; அல்லது உம்மையே இவ்வாளால் மாய்த்துக்கொண்டு விடுங்கள். காரணம், உமக்குச் சொந்த மில்லாத பொருளில் நீர் சொந்தம் கொண்டாடியது தவறு. அதாவது உமது மனைவியல்லாத என்னை நிர்வாண நிலையில் பார்த்து இரசித்தது தவறு. என் உடல் எச்சில் பட்டு விட்டதல்லவா? ஆகையால் அப்பொருளைத் தாங்கள் சொந்தமாக்கிக் கொண்டு விடவேண்டும்; அல்லது தாங்கள் இறந்தால், அரசர் உம்மை இத்தகைய தவற்றில் ஈடுபடுத்து வது அத்துடன் நின்றுவிடும்; மற்றும், வேறொருவனையும் அவ்வாறு தூண்டச் செய்யத் துணியார் — அவ்வாறு நினைக்கும் போதே உம் உடல் வெட்டுண்டு மடிந்தது அவர்

---

1. Gyges

க்வனத்துக்கு வந்துவிடும். ஆகையால் ஒன்று நீங்கள் சாகவேண்டும்; அல்லது என் கணவர் அரசர் மடிய வேண்டும். எனக்குக் கணவர் ஒருவர்தான் இருத்தல் வேண்டும், இருக்கவும் முடியும். சீக்கிரம் சொல்லுங்கள். என்ன செய்யப்போகிறீர்?'' என்றாள் அவ் வரசி.

"அம்மையே! பேரரசியே, என்ன செய்வதென்றே புரியவில்லையே; மனம் குழம்பியுள்ளதே; பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே!'' என்றான் கைஜீஸ்[1].

ஒரு கணம் தீவிரமாக யோசித்தான். ஒரு முடிவுக்கும் வந்து விட்டான்.

"அவளது நிர்வாண உடலைப் பார்த்து இரசித்து விட்டேன். அவள் தூய்மை நிலை கெட்டுவிட்டது — காரணம் நான் பார்த்து விட்டது அவளுக்கும் தெரிந்து விட்டது. இனி நான் மடிவதில் என்ன பயன்? நான் நிச்சய மாக வாழ்வேன்! நான் இறந்து படுவதில் கெட்டுப்போன அவளது புனிதத் தன்மை மீண்டும் திரும்பிவிடுமா? கிடையாது; கெட்டது கெட்டதே,'' என்று தனக்குள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

உடன் ஓடினான்; ஒரு வாளை எடுத்து வைத்துக் கொண்டான். அன்றிரவே, எந்த இடத்தில் அரசியின் உடலுக்குக் களங்கம் ஏற்பட்டதோ, அதே இடத்தில் அரசரைக் குத்திக் கொன்றான். மறுநாள் அவ் வரசர் மனைவியை, அவள் விருப்பப்படியே மணந்து கொண்டு, லிடியாவின்[2] அரச பீடத்தில் அமர்ந்து விட்டான். அவ்வரசைக் கைஜீஸ் எளிதில் அபகரித்துக் கொண்டான்.

ஆனால் அந்நாட்டு மக்கள் அவன் அரசபீடம் ஏறுவதை ஏற்க மறுத்தனர். ஆயினும், அவன் அரசாட்சி செய்யத் தகுதி வாய்ந்தவன் என்று டெல்பி கோயிலில்[3] அசரீரி வாக்கு[4] எழுந்ததால், அவனை அரசராக ஏற்க ஒப்புக் கொண்டனர். அவ் வசரீரி வாக்கு வேறுவிதமாக கூறப் படின், அவ் வரசாட்சியை, முன்னர் ஆண்ட ஹிராக்

---

1. Gyges 2. Lydia 3. Delphi Temple 4. Oracle

ளிடுகளின்[1] பரம்பரையினருக்கே கொடுத்துவிடவேண்டும் என்றும் கூறினர்.

உடன் டெல்பி கோயிலுக்குச்[2] சென்று, "கைஜீஸ்[3] அரசாளத் தகுந்தவரா?" என்று கேட்டனர் அந்நாட்டு மக்கள். உடன் அசரீரி வாக்கு ஒன்று ஒலித்தது: "கைஜீஸ் அரசராக இருக்கத் தடை ஏதும் இல்லை," என்று.

அவ்வசரீரி வாக்கைக் கேட்டு மக்கள் பேராரவாரம் செய்து கைஜீஸையே அரச பதவியை ஏற்று அரசாட்சி செய்யுமாறு விரும்பி ஒப்புக்கொண்டனர்.

ஆனால் ஒன்று அவ் வசரீரி கூறிற்று:

"ஹிராக்ளிடிய மக்கள் — பரம்பரையினர் — கைஜீஸின் ஐந்தாவது பரம்பரையில் பழிக்குப்பழி வாங்கி விடுவார்கள்."

அதை லிடியநாட்டுப் பொதுமக்களோ, அரசரைச் சார்ந்தவரோ எவரும்பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இருப்பினும், அவ்வாறான பழிக்குப்பழி அவ் ஐந்தாம் பரம்பரை அரசரிடம் தீர்த்துக் கொள்ளப்பட்டது. ஒலித்த அசரீரி வாக்குப் பொய்த்து விடவில்லை."

விளக்கவுரை :

கைஜீஸ் : கைஜீஸ் மெர்ம்னடே[4] பரம்பரையில் வந்த சிற்றரசர். இவர் ஆண்ட காலம் கி மு. 716 – 678 அதாவது 38 ஆண்டுகள் ஆகும். இவர் டெல்பி கோயிலுக்குக் கொடுத்த நன் கொடையின் அளவைப்போல வேறு எவரும் கொடுத்திலர். இவர் கொடுத்த நன்கொடைகள் அடுத்த நான்காம் அத்தியாயத்தில் விவரிக்கப் படுகின்றன.

அரசி, கைஜீஸுக்கு ஒரு நீதியை எடுத்துரைத்தது ஆய்வுக் குரியது. "ஒரு பொருளைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்ட பின்னரே, அதில் பங்கு கொள்ள வேண்டும். தனக்குச் சொந்த மில்லாத பொருளில் சொந்தம் கொண்டாடக் கூடாது. அவ்வாறு செய்தால், மரண தண்டனையே அதற்கான கழுவாயாகும்."

இந்நீதி உலகப்பொது நீதியாகவே விளங்குகிறது.

---

1. Heraclids 2. Delphi Temple 3. Gyges 4. Mermnade

திருவள்ளுவர் கூறுகிறார்:

" அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.'

—(திருக்குறள் : 178)

பைபிள் கூறுகிறது :

"Thou shall not covet thy neighbour's house, Thou shall not covet they neighbour's wife, nor his man-servant, nor his maid-servant, nor his ox, nor his ass, nor anything that is thy neighbour's".

— (Old Testament: Exodus – 20—17)

மனுநூல் கூறுகிறது :

"The theft of women and precious stones is punishable with death".

—(**The Laws of Manu :** Chapter V)

கௌடலீயம் கூறுகிறது :

"உடன் பிறந்தான் மனைவியைக் கையினால் வலிந்து பற்று பவனுக்கும், மற்றொருவன் வயப்பட்ட கணிகையைச் சேர் பவனுக்கும், குடும்பங்களுக்குக் கேடு விளைவிப்பவனுக்கும், நாற்பத் தெட்டு பணம் தண்டம் விதிக்கப்படும் "

—(கௌடலீயம் : சாணக்கியர் : அதிகாரம் 3,
அத்தியாயம் 77, பக்கம் 566)

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் கூறுகிறது :

" வம்புலாம் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர் பொருள் தாரம் என்றிவற்றை
நம்பினார் இறந்தால் நமன் தமர் பற்றி
எற்றி வைத்து, எரியெழுகின்ற
செம்பினாலியன்ற பாவையைப்
பாவீ! தழுகவென மொழிவதற்கஞ்சி
நம்பனே! வந்துஉன் திருவடி அடைந்தேன்
நைமி சாரண்யத்துள் எந்தாய்!"

—(பெரிய திருமொழி : 1–6–4)

4. கைஜீஸ் டெல்பி கோயிலுக்குக் கொடுத்த நன்கொடை

இந்த முறையில்தான் மெர்ம்னடே[1], ஹிராக்ளிட்[2] மக்கள் அனுபவித்த அரசாட்சியை ஒழித்துக் கட்டினார். அதன் பின்னர், லிடியாவின் அரியணையைக் கைப்பற்றினார். கைஜீஸ்[3], தாம் அரசபதவியில் வலுப்பெற்று உட்கார்ந்தவுடன், பலப்பல அன்பளிப்புகளை டெல்பி கோயிலுக்கு[4] அனுப்பி வைத்தார். அக்கோயிலினுள் உள்ள வெள்ளி முழுவதும் கைஜீஸ் கொடுத்ததே. அத்துடன் பொன்னால் செய்யப்பட்ட பலவகைப் பாத்திரங்களையும் அன்பளிப்பாகக் கொடுத்தார். அப்பொன்கலங்களுள் முக்கியமானவை உணவைக் கலப்பதற்காகக் கொடுக்கப்பட்ட ஆறு பொற்கிண்ணங்கள் ஆகும். இந்தக் கிண்ணங்கள் யாவும் 2500 பவுண்டு எடைகொண்டதாகும். இவை கொரிந்தியரின் பண்டகசாலையில்[5] வைக்கப்பட்டுள்ளன. உண்மையில் அப்பண்டகசாலையைக் கொரிந்தியரின் பொதுப் பண்டகசாலை என்று வழங்கமுடியாது. ஆனால் அது ஈடியனின்[6] மகனாரான சைப்சிலஸ்[7] பண்டகசாலை என்றே வழங்கப்படவேண்டும்.

பிரிஜியாவின்[8] அரசர் மைதாஸிற்கு[9]ப் பிறகு டெல்பி கோயிலுக்கு நன்கொடை கொடுத்த அங்கியர்களுள் கைஜீஸே முதன்மையானவர் ஆவார். மைதாஸின் தந்தை கார்டியஸ்[10] ஆவார். மைதாஸ் தம் அரியாசனத்தை

---

1. Mermnade 2. Heraclids 3. Gyges 4. Delphi Temple 5 Corinthian Treasury 6. Eetion 7. Cypselus 8. Phrygia 9. King Maidas 10. Gordius

அக்கோயிலுக்கு நன்கொடையாக அளித்தார். அவ் அரியணையில் உட்கார்ந்துதான் தம் நீதித் தீர்ப்புகளை வழங்கினார். அவ்வரியாசனம் கைஜீஸ் நன்கொடையாகக் கொடுத்த பொற்கிண்ணத்தைத் தாங்கி நிற்கிறது. அக் காட்சியை இன்றைக்கெல்லாம் கண்குளிரப் பார்த்துக் கொண்டிருக்கலாம். இவ்வாறு கைஜீஸ் நன்கொடையாகக் கொடுத்தனுப்பிய தங்கம் வெள்ளிப் பாண்டங்கள் யாவற்றையும் டெல்பி மக்கள்[1] "கைஜீஸின் கருவூலம்"[2] என்றே கைஜீஸின் பெயரால் வழங்குகின்றனர்.

அரசாட்சியில் நிலையான இடத்தை ஏற்படுத்திக் கொண்ட, கைஜீஸ், மைலிடஸ்[3], ஸ்மர்ணா[4] ஆகிய இடங்களுக்குப் போர் வீரர்களை அனுப்பி, கோலபன்[5] எனும் நகரைக் கைப்பற்றிக் கொண்டார் அவர் ஆண்ட 38 ஆண்டுகளில் அதுவே அவர் செய்த முக்கியமான செயல் ஆகும். அவருக்குப்பின், அவர் மகன் ஆர்டிஸ்[6] அரியணை ஏறினார்.

விளக்கவுரை :

மெர்ம்னடே[7] : கைஜீஸின்[8] பரம்பரை இனத்தின் பெயர்

ஹிராக்ளிட் : லிடியாவை[9] முதன் முதலில் ஆளத் தொடங்கிய மக்கள் இனத்தவர் ஹிராக்ளிட்[10] ஆவர். மற்றும், பக்கம் 51, குறிப்பு - 1 லிடியாவின் விளக்கத்தைப் பார்க்கவும்.

டெல்பி கோயில்[11] : அந்நகரம் போசிஸ்[12] மாவட்டத்தில் இருந்தது. கிரேக்க நாட்டில் மிகவும் புகழ்பெற்ற தலம். காரணம் அப்பொலோ[13] தெய்வத்தின் அசரீரி[14] அங்குப் பெரும் புகழ் பெற்றிருந்தது. அக்கோயில் பார்னஸஸ் மலையின்[15] ஒரு சரிவில் இருந்தது. அதன் முதல் பெயர் பைதோ.[16] இப்பெயரில்தான் ஹோமர்[17] (கி. மு. 850) தம் இலக்கியங்களில் வழங்கியுள்ளார். இப்பெயரே நாளடைவில் டெல்பி என்ற புதிய பெயரால் வழங்கப்படுவதாயிற்று.

---

1. Delphians 2. Gygean Treasury 3. Myletus 4. Smyrna 5. Colophon 6. Ardys 7. Mermnade 8. Gyges 9. Lydia 10. Heraclid 11. Delphi 12. Phocis 13. Apollo 14. Oracle 15. Mt. Parnassus 16. Pytho 17. Homer

மற்றும் அக்கோயில் மிகப் பாதுகாப்பான இடத்தில் கட்டப் பட்டதாலும், கோயிலுள் இருக்கும் பொருள்களை எவரும் கவரவோ களவாடவோ மாட்டார்கள் என்ற நம்பிக்கையாலும், அந்நாட்டின் அரசக்கருவூலத்தின் முக்கிய விலையுயர்ந்த பொருள்கள் அக்கோயிலின் கர்ப்பக் கிருகத்தில் வைக்கப்பட்டு வருவது வழக்கமாக இருந்தது. அதன் காரணமாக, அக்கோயில் மிக்க செல்வம் படைத்த கோயிலாகத் திகழ்ந்தது.

அக்கோயிலின் நடுப்பகுதியில் ஒரு சிறிய துவாரம் காணப் படும். அதிலிருந்து அவ்வப்பொழுது ஒரு வகை நறுமணப் புகை வெளிவரும். அத்துவாரத்தின்மீது ஒரு முக்காலி யிட்டு,[1] அதன்மீது பைதியா[2] என வழங்கப்படும் அக் கோயிலின் பூசாரிணி[3]—குறி சொல்பவள்—உட்கார்ந்து, உடல் முழுவதும் ஓர் அங்கியைப் போர்வையாகப் போர்த்திக் கொண்டு, அசரீரி போன்ற ஒலி எழுப்பிக் குறி சொல்வாள். அப் பூசாரிணி கூறும் சொற்கள், அப்பொலோ[4] தெய்வமே அங்கு வந்து புகை உருவத்தில் கூறுவதாகக் கருதப்பட்டது. அச் சொற்கள் மிக்க விழிப்புடன் ஏடுகளில் எழுதப்பட்டு, பின் அவை அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தமாகச்[5] செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டன.

அங்கு அப்பொலோ அசரீரி இருக்கிறதென்று எவ்வாறு கண்டுபி க்கப்பட்டது? அங்கிருந்த துவாரத்தினின்று நறு மணப்புகை வெளிவந்து கொண்டிருந்தபொழுது சில வெள் ளாடுகள் அத்துவாரத்தின்மீது நின்றதன் காரணமாக, அவற்றிற்கு இழுப்பு ஏற்பட்டு அங்கேயே சுருண்டு விழுந்து விட்டன. அதைக்கண்ட அக்கோயில் பூசாரிகள் தூப தீபங் களிட்டு, வேண்டிக் கொண்டதில், அப்பொலோ தெய்வத்தின் அசரீரிவாக்கு எழுந்தது. அவ் அருள்வாக்கில் அக்கோயிலில் இனிப் பெண்கள்தான்— பூசாரிணிகள்தான்— குறி சொல்ல வேண்டும் என்று கட்டளை பிறந்தது. அன்று முதல் அக் கோயிலில் பூசாரிணி ஏற்படுத்தப்பட்டு, அவளும் அவள் பரம் பரையினருமே குறி சொல்லி வந்தனர். அப்பரம்பரையிலும் பெண்களே குறி சொல்ல அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு அப்பொலோவின் அசரீரி வாக்குத்[6] தொடர்ந்து கேட்கப்படுவ தாயிற்று.

—(A Smaller Classical Dictionary, Page: 185)

---

1. Tripod 2. Pythia 3. Priestess 4. Apollo 5. Hexameter 6. Oracle

அப்பொலோ தெய்வத்தைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

இத்தெய்வம் ஜியுஸ் கடவுளுக்கும்[1] லீடோ[2] தேவதைக்கும் பிறந்தவர்; அர்டமிஸ்[3] என்பாருடன் பிறந்த இரட்டையர்களுள் ஒருவர். இவரது பிறப்பிடம் டெலாஸ் தீவு[4] இத்தீவுக்குத்தான், ஹீரா[5] தேவதையின் கொடுமை தாங்கமுடியாமல் லீடோ ஒடி வந்து விட்டாள்.

அப்பொலோவுக்குப் பல அதிகாரங்கள் உள்ளன: (i) தண்டிக்கும் கடவுளாக (ii) உதவி செய்து, கெடுதல்களை நீக்குவதாக (iii) அருள்வாக்கு—அசரீரி வாக்குத்—தரும் தெய்வமாக (iv) இன்னிசை, கவிதைக்கடவுளாக (v) கால்நடைகளைக் காக்கும் கடவுளாக (vi) நகரங்களை நிர்மாணிப்பதில் பெரும் பங்கு கொள்பவராக (vii) சூரியக் கடவுளாக[6].

கிரேக்க மக்கள்மூலமாகப் பிற்காலத்தில் ரோமானியர்களும் அப்பொலோவைத் தெய்வமாகக் கொண்டாடத் தொடங்கினர்.

ஈடியன்:[7] இவர் சிலிஷியாவில்[8] உள்ள தீபேயின்[9] அரசராவார். அண்டிரோமகே[10] என்பாளின் தந்தை; அண்டிரோமகேயின் கணவர் ஹெக்டர்[11] ஆவார்.

சைப்சிலஸ்:[12] இவர் ஈடியன் என்பாரின் மகன். இவர் கோரிந்த்[13] நாட்டின் கொடுங்கோல் மன்னர். இவர் கி.மு. 655-625 வரை அரசாண்டார் அதாவது 30 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவர் குழந்தையாயிருந்தபொழுது இவர் தாய் இவரைப் பகைவரினின்று காப்பாற்ற ஒரு பேழையில் இட்டு ஆற்றில் மிதக்க விட்டுவிட்டதாக வரலாறு கூறுகிறது. இவருடைய மகன் பெரியாண்டர்[14], தந்தையைப் போலவே ஒரு கொடுங்கோல் மன்னர். சைப்சிலஸ் தம் கருவூலப் பொருள்கள் முழுவதையும் டெல்பி கோயிலிலேயே வைத்திருந்தார் என்றும், அப்பண்டகசாலையைப் பாதுகாப்புடன் வைத்திருந்தார் என்றும் கிரேக்க வரலாறு எடுத்துரைக்கிறது.

பிரிஜியா:[15] இந்நாடு ஆசியாமைனரில்[16] ஒரு பகுதி. இதன் வல்லரசர்கள் கார்டியஸ்[17], மைதாஸ்[18] ஆவர். இவ்விடத்தில்

---

1 Zeus 2. Leto 3. Artamis 4. Island Delos 5 Hera 6. Sun God 7. Eetion 8. Cilicia 9. Thebes 10. Andromache 11. Hector 12. Cypselus 13. Corinth 14. Periander 15 Phrygia 16. Asia Minor 17. Gordius 18. Midas

தான் புல்லாங்குழல் முதன் முதல் செய்யப்பட்ட இடம் புல்லாங்குழல் இசை[1] இங்கிருந்துதான் கிரேக்க நாட்டு முழுவதும் பரவிற்று நாளடைவில் இந்நாட்டின் புகழ் மங்கி விட்டது. இசைக்குப் புகழ்மிக்க நாடாக இருந்த ஒன்று, பின்னர் வலிவிழந்து, மடமை பெருகியதால், மடமைக்குப் புகழ் பெற்ற நாடு என்ற வசைமொழியை ஏற்க வேண்டியதாயிற்று.

மைதாஸ்: இவ்வரசர் கார்டியஸின் மகன் ஆவார். செல்வச் செழிப்பிற்குப் புகழ் பெற்றவர். பிரிஜியா நாட்டின் அரசர்.

இவரைப் பற்றித்தான் "தொட்டதெல்லாம் பொன்" எனும் கதை உருவாயிற்று. அக்கதை கிரேக்க மூலத்தைக் கொண்ட கதையாகும்.

டையோனிஸஸ்[3], தம் நண்பரும் ஆசிரியருமான சைலீனஸை[3] அன்புடன் ஆதரித்து வைத்திருந்த காரணத்துக்காக, அரசர் மைதாஸிடம், "நீ விரும்பிய வரம் ஒன்றைக் கேள், தருகிறேன்" என்று சொல்லவே, மைதாஸ். "தாம் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும்." என்ற வரத்தைக் கேட்டார். டையோனிஸஸ் கடவுளும் புன்முறுவலுடன் அவர் கேட்ட வரத்தைக் கொடுத்து விட்டார். மைதாஸ், தம் மகளைத் தொட்டார். அவள் உடன் பொற்சிலையாக மாறி விட்டாள். பசியெடுத்தது; உணவைத் தொட்டார். உணவும் பொன்னாக மாறி விட்டது. பருக நீரையாவது எடுக்கலாம் என்று எடுத்தால், அதுவும் பொன்னாக மாறி விட்டது. பசிக்கொடுமை அதிகமாயிற்று. பசிக்கு உணவு உட்கொள்ள முடியாத அவல நிலையிலிருந்து தப்ப, மீண்டும் டையோனிஸஸ் கடவுளை வேண்டினார். அதற்கு அவர், திமோலஸ் மலைக்கு[4] அருகில் உள்ள பெக்டோலஸ் நதியில்[5] குளித்தால், பழையபடி வாழலாம் என்றார். அவர், அத்தெய்வம் கூறியபடியே அந்நதியில் மூழ்கி எழுந்து, தம் பழைய நிலையை அடைந்தார். தம் அருமை மகளும் உயிருள்ள மகளாக ஆகிவிட்டாள். ஆனால் ஓர் அதிசயம் நடந்து விட்டது. அவர் குளித்த ஆற்று மணல் முழுவதும் தங்கப் பொடியாக மாறி விட்டது.

---

1. Music of the Flute 2. Dionysus 3. Silenus 4. Mt, Tmolus 5, Pactolus River

மைதாஸைப்பற்றி[1] மற்றொரு கதையும் கூறப்படுகிறது. ஒரு முறை பான்[2] என்பார் புல்லாங்குழலிலும், அப்பொலோ தெய்வம்[3] யாழிலும் பாட்டிசைத்தனர். இவர்கள் இருவருள் எந்த இசை உயர்ந்தது என்று கூற அவர்கள் இருவரும் மைதாஸை நடுவராக நியமித்தனர். மைதாஸ் இறுதியில் பான் என்பாரின் குழலிசையே சிறந்திருந்தது என்று தீர்ப்புக் கூறவே, அப்பொலோ கோபமடைந்து, மைதாஸின் காதுகளைக் கழுதையின் காதுகளாக மாற்றி விட்டார். ஆனால் இது வேறெவர்க்கும் தெரியாது. ஆயினும், தம் முடியை வெட்டிக் கொள்ள நாவிதனிடத்தில் தம் தலையணியைத் தூக்கவே, அதில் செருகி மறைத்து வைக்கப்பட்டிருந்த கழுதைக் காதுகள் அந்நாவிதனுக்குத் தெரிந்து விட்டது. அதை எந்த மனிதனிடத்தும் சொல்லாமலிருந்தால், நாவிதன் தலை வெடித்து விடும் போலிருந்தது. ஆயினும் அரசர் காதுகளைக் கேவலமாகப் பேசக்கூடாது. பேசினால் சிரச்சேதம் ஏற்பட்டு விடும். ஆகையால், அதற்கு ஓர் உபாயம் செய்தான். நான்கு தெருக்கள் கூடும் இடத்தின் நடுவில் ஒரு குழி தோண்டி, அதில் ஒரு நாணற் புல்லை நட்டு[4], அக்குழியினுள் வாய் வைத்து, "அரசர் மைதாஸுக்குக் கழுதைக்காதுகள்" என்று கூறிவிட்டு, மண்ணைப் போட்டு மூடி, தன் இதயத்திலிருந்த பளுவையும் இறக்கி விட்டான். ஆனால், அந்த நாணல் காற்றில் அசைய அசைய, 'அரசர் மைதாஸுக்குக் கழுதைக்காதுகள்' என்ற சொற்கள் ஒலியிட்டு, ஒலமிட்டுக் காட்டுத் தீப்போல் பரவின. அச்செய்தி உடன் ஊர் முழுவதும் பரவிவிட்டது. மிகவும் இரகசியமாக வைத்திருந்த செய்தி எவ்வாறு ஊர் முழுவதும் பரவி விட்டது என்று மனமுடைந்து, மைதாஸ்[4] இறந்து விட்டார். இவ்வாறு கிரேக்கப் புராண வரலாறு கூறுகிறது.

மைதாஸ் தம் பொன்னாலான அரியாசனத்தை டெல்பி கோயிலுக்கு[5] நன்கொடையாக அளித்து விட்டார்.

—(A Smaller Classical Dictionary: Pages 340-341)

கார்டியஸ்.[6] மேற்கூறப்பட்ட மைதாஸ் அரசரின் தந்தை. இவரும் பிரிஜியாவின்[7] அரசராக இருந்தார். இவர் பெயராலேயே பிரிஜியாவின் பழைய தலைநகரம் கார்டியம்[8] என்று வழங்கப்பட்டது. பிரிஜியாவில் உள்நாட்டுக் கலகம் வலுத்துக்

---

1. Midas 2. Pan 3. Apollo 4. Reed 5. Delphi Temple 6, Gordius 7, Phrygia 8, Gordium

காணப்பட்டது. அவ் ஊர்கோயிலில் ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அது கூறிற்று: "ஒரு பெட்டியுடன் ஓர் அரசர் வருவார். அவரால் நாட்டிற்கு நன்மை ஏற்படும்." சில நாள்களில் அசரீரி கூறியது போலவே கார்டியஸ் என்பவர் ஒரு பெட்டியுடன் அந் நாட்டில் நுழையவே, அவரையே அரசராக இருக்குமாறு அந் நாட்டு மக்கள் வேண்டிக் கொண்டனர். கார்டியஸ், கடவுளுக்கு நன்றி செலுத்துவதற்காக, தாம் ஏறி வந்த தேரையே அக்கோயிலில் குடிகொண்டுள்ள ஜியுஸ் கடவுளுக்கு[1] அன்பளிப்பாக அளித்து விட்டார். அத்தேரின் கைப்பிடிகள், அங்கு நாட்டப் பட்ட கோல் ஒன்றுடன் மரப்பட்டைகளால் இறுக முடிச்சுப் போடப்பட்டது. அதை அவிழ்ப்பவர் ஆசியா முழுவதையும் ஆள்வார் என்று அசரீரி வாக்கும் ஒலித்தது. நெடுநாள் அம் முடிச்சை எவராலும் அவிழ்க்க முடியவில்லை. இறுதியில் பேரசர் அலெக்சாந்தர்[2] (கி.மு. 356-323) அம்முடிச்சைத் தம் வாளால் வெட்டி இரு துண்டுகளாக ஆக்கினார். அதன் பின்னரே ஆசியா முழுவதையும்[3] ஆண்டார் என்று வரலாறு கூறுகிறது. அதன் காரணமாகத்தான் அம்முடிச்சு "கார்டியன் முடிச்சு"[4] என்று வழங்கப்பட்டது.

மைலீடஸ்.[5] இது ஆசியா மைனரில்[6] ஒரு சிறந்த நகரமாயிருந்தது.

ஸ்மர்ணா[7]: இதுவும் ஆசியா மைனரில் புகழ் பெற்ற நகரம். இவ்விடம் ஹோமர்[8] (கி. மு. 850) பிறந்த இடமாகக் கருதப்படுகிறது.

கோலபன்[9]: ஆசியா மைனரின் 12 நகரங்களுள் ஒன்று. இதுவும் ஹோமரின் (கி.மு. 850) பிறப்பிடம் என்று சிலரால் கூறப்படுகிறது.

ஆர்டிஸ்[10]: இவர் கைஜீஸின்[11] மகன் ஆவார் லிடியாவின்[12] அரசர். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 678-629 அதாவது 49 ஆண்டுகள் ஆகும்.

---

1. Zeus 2. Alexander, the Great 3. Asia 4. Gordian knot 5. Myletus 6. Asia Minor 7. Smyrna 8. Homer 9. Colophon 10. Ardys 11. Gyges 12. Lydia.

5. ஸொலான் - ஆதன்ஸ் நகரச் சட்ட வல்லுநர்

ஆர்டிஸ்[1] 49 ஆண்டுகள் ஆண்ட பிறகு, அவர் மகன் ஸட்யாட்டிஸ்[2] அரியணை ஏறினார். ஸட்யாட்டிஸ் 12 ஆண்டுகள் ஆண்டு, அவர் இறந்ததும், அவர் மகன் அல்யாட்டிஸ்[3] அரசரானார். அல்யாட்டிஸ் இறந்த பிறகு அவர் மகன் குரோஸஸ்[4] அரசரானார். அப்பொழுது குரோஸஸுக்கு வயது 35. அவர்போர் மேற்சென்று தாக்கிய முதல் கிரேக்க நகரம் எபீசஸ்[5] ஆகும். நாளடைவில் ஹாலிஸ்[6] ஆற்றின் மேற்குப் பகுதிகள் யாவற்றையும் வென்றார்—சிலீஷியா[7], லைசியா[8] தவிர. அவர்தம் ஆட்சியின்கீழ் இருந்த நகர மக்கள் பின்வருமாறு: லிடியர்[9] பிரிஜியர்[10] மைசியர்,[11] மரியாண்டினியர்,[12] சாலிபியர்,[13] பாப்லகோனியர்,[14] திரேசியர்,[15] காரியர்,[16] அயோனியர்,[17] டோரியர்,[18] இயோலியர்,[19] பாம்பிலியர்[20] முதலானோர் ஆவர்.

இவை யாவும் லிடியன் பேரரசில்[21] சேர்க்கப்பட்டபொழுது, சார்டிஸ் நகரம்[22] செல்வத்திலும் அதிகாரத்திலும் உச்சகட்டத்தில் இருந்தது. அப்பொழுது-அந்தக்காலத்தில்-வாழ்ந்து வந்த கிரேக்க தத்துவ ஞானியர்களும் ஆசிரியர்களும் ஒவ்வொருவராகத் தலைநகருக்கு வருகை தந்த வண்ணம் இருந்தனர். அவர்களுள் மிகவும் தலைசிறந்த

---

1. Ardys 2. Sadyattes 3. Alyattes 4. Croesus 5. Ephesus 6. River Halys 7. Cilecians 8. Lycians 9. Lydians 10. Phrygians 11. Mycians 12. Maryandinians 13. Chalibians 14. Paplagonians 15. Thracians 16. Carians 17. Ionians 18. Dorians 19. Aeolians 20. Pamphylians 21. Lydian Empire 22. Sardys

வரும், புகழ்பெற்றவருமான ஸொலான்[1] என்பார் வருகை புரிந்தார். அவர் ஆதன்ஸ் நகரக் குடிமகன்[2] ஆவார். ஆதன்ஸ் நகர மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் அரசியல் நடைபெறுவதற்கான சட்டங்களை[3] இயற்றினார். தாம் இயற்றிய சட்டங்களைத் தாமே மாற்றியமைக்கும் வாய்ப்பைப் பெறாமலிருப்பதற்காக, அவர் 10 ஆண்டுகள் அயல்நாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். அப் பயணத்தின் பொழுது, அவர் சார்டிஸ் நகரத்துக்கு வருகை தந்தார். அவர் அயல்நாட்டுப் பயணத்தை மேற் கொள்வதற்கான காரணம் அவர் மேற்கூறியது மட்டுமன்று, அவர் மற்ற உலக நாடுகளில் சட்டங்கள் எவ்வாறு இயற்றப் பட்டு இயங்குகின்றன என்பதை அறிந்து கொள்வதும் மற்றொரு காரணமாகும்.

அவரில்லாமல் ஆதன்ஸ் குடிமக்கள் அவர் இயற்றிய அரசியல் சட்டங்களை மாற்ற முடியாமல் தவித்துக் கொண்டிருந்தனர்—காரணம், அச் சட்டங்கள் இயங்க, அவற்றின் நன்மை தீமைகளையறிய 10 ஆண்டுக் கால கடுவை அம் மக்கள் தாமே வலுக்கட்டாயமாக ஏற்றுக் கொண்டனர். அதனிடையில் எதையும் மாற்றுவதில்லை என அப்பொலோ தெய்வம்[4] சாட்சியாகச் சத்தியம் செய்தும் கொடுத்து விட்டிருந்தனர்.

அயல் நாட்டுப்பயணம் ஏற்கவேண்டும் எனும் ஆவல் பொங்கியெழ, ஸொலான் தம் வீட்டையும் நாட்டையும் விட்டகன்று, எகிப்தில் உள்ள அமாஸிஸ் நீதிமன்றத் துக்குச்[5] சென்று, அதன் பின்னர் குரோஸஸைக்[6] காணும் பொருட்டுச் சார்டிஸ்[7] நகரத்தை யடைந்தார்.

குரோஸஸ், ஸொலானை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் வரவேற்றார். மூன்று, நான்கு நாள்களுக்குப் பிறகு, அவர் தம் கருவூலத்தைக் காணும் பொருட்டு, தம் காவலாளரை அனுப்பி, அவர்க்கு அக்கருவூலத்தைத் திறந்து காண்பிக்கு

---

1. Solon 2. Athenian 3. Political Laws 4. Apollo 5, Court of Amasis 6, Croesus 7. Sardys

மாறு பணித்தார். ஸொலான் அக்கருவூலத்தைப் பார்வை யிட்டபிறகு, அவரை நோக்கிக் குரோஸஸ் ஒரு கேள்வி கேட்டார். "ஐயன்மீர், தாங்கள் என் கருவூலத்தை நிதான மாகவும் நன்றாகவும் பார்த்திருப்பீர்கள் என நினைக்கிறேன். அவ்வாறாயின் ஒன்று மட்டும் தெரிவியுங்கள்: இவ்வுலகத் தில் நீங்கள் பார்த்தவர்களுள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பவர் யார்? அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல் லுங்கள்," என்று கேட்டார்.

இக்கேள்வி கேட்டதன் பொருள், இத்துணை அளவு செல்வச் செழிப்பு எவரிடம் உள்ளது, தம்மிடமே உள்ளது என்ற அகம்பாவம் கொண்டு வினவினான். ஆனால் ஸொலான், குரோஸஸின் கருவூலத்தைப் புகழ்ந்து குறிப்பிட மறுத்துவிட்டார். தாம் நினைத்த பேருண்மையின் அடிப் படையில், "டெல்லாஸ்[1] எனும் பெயரினரான ஆதன்ஸ் நகரக் குடிமகனாரே[2] அத்தகுதி பெற்றவராவார்," என்று பதிலிறுத்தார்.

குரோஸஸ் அதிர்ச்சியடைந்தார். "இந்த மாதிரி தாங்கள் குறிப்பிடுவதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும். அக் காரணம்தான் யாது? நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று குரோஸஸ்[3] கேட்டே விட்டார்.

"இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உள்ளன," என்று ஸொலான்[4] பதிலிறுத்தார்.

தமக்கு எவ்வாறேனும் இரண்டாவதாகிய அடுத்த இடமேனும் கிடைக்கும் எனத் துடித்துக் கொண்டிருந்த-ஏங்கிக் கொண்டிருந்த-குரோஸஸ், "ஐயா, ஸொலான் அவர்களே! நீங்கள் முதல் மனிதரைக் குறிப்பிட்டு விட்டீர்கள்; போகட்டும். அவருக்கு அடுத்தபடியாக எண்ணப்படும் அதிர்ஷ்டசாலி யார்?" என்று கேட்டார்.

அதற்கு ஸொலான் பதிலிறுத்தார்: "அவ்வாறு மகிழ்ச் சியுடன் காணப்படும் அடுத்த இடத்தில் இருப்பவர் ஆர்கோஸ்[5] நகரத்தைச் சார்ந்த இரு இளைஞர்கள் ஆவர்,"

---

1. Dellas 2. Athenian 3. Croesus 4. Solon 5. Argos

என்று கூறினார். அப்பொழுதுகூட, குரோஸஸுக்கு எந்த வித இடமதிப்பும் தரப்படவில்லை.

"அதற்குக் காரணம் யாது?" எனக் குரோஸஸ் கேட்க, ஸொலான் பதில் கூறினார்:

"அவர்கள் தாயார் வயதானவர், அவள் ஒரு திருவிழாவைக் காணப் பேராவல் கொண்டாள். நடக்கமுடியவில்லை. ஆகவே, அவளை ஒரு வண்டியில் வைத்துத் தள்ளி, தம் தாயாருக்கு அவ்விழாவினைக்காட்ட, ஆர்கோஸ் நகரத்துக்குச் சென்றனர்.

இதைக் கண்ட ஹீரா தேவதை[1] வியந்து, அவ்விருவருக்கும் என்ன வரம் வேண்டும் என வினவினாள். ஆனால் அவ்விருவர்களும் அத்தேவதையை எந்த வரமும் கேட்கவில்லை.

அவர்கள் தாயார் அவர்கள் சார்பாகக் கூறினாள்: "இவர்களுக்கு நல்ல கதியைக் கொடுத்து விடுங்கள்."

இதைக் கேட்ட அவ்விருவரும் பூசை நடாத்தும் பொருட்டு, அவர்தம் கோயில் இருக்கும் இடத்தையடைந்து அங்கே அயர்ச்சி மிகுதி காரணமாக, அக்கோயிலின் வாயிற் படியில் உட்கார்ந்து தூங்கிவிட்டனர். ஆனால் என்ன நடந்தது? அவ்விருவரும் தூங்கினது தூங்கினதுதான். அத் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கவேயில்லை. அவர்களை அத் தூக்கம் மீளா நித்திரையில் அழுத்திவிட்டது[2]

அவ்விருவர்க்கும் இரண்டாம் இடத்தை வழங்கியதைக் கேட்ட குரோஸஸ் மிக்க மனவேதனை அடைந்தார்.

"இறுதியில், என் சொந்த மகிழ்ச்சியைப்பற்றி உங்கள் கருத்துதான் யாது?" என்று குரோஸஸ்[3] கேட்டார்.

"எவன் ஒருவன் இறுதிவரை மகிழ்ச்சியுடன் இருக்கின்றானோ, அவன்தான் கொடுத்து வைத்தவன். அஃதில்லா

---

1. Goddess Hera 2. Death 3. Croseus

விடில், அவன் அதிர்ஷ்டக்காரன் ஆவானே தவிர, மகிழ்ச்சி யுடையவன் ஆகான்,'' என்று ஸொலான்[1] தெரிவித்தார்.

''மற்றும் எவன் ஒருவன் இறுதிவரை அமைதியுடன் வாழ்ந்து வருகிறானோ, மகிழ்ச்சியுடன் இறக்கிறானோ, அவன்தான் சிறந்த மகிழ்ச்சி பெற்றவன் ஆவான்,'' என்று இறுதியாக ஸொலான் கூறிமுடித்தார்.

ஸொலான் இதைக் கூறிவிட்டு நாட்டைவிட்டு-சார்டிஸ்[2] நகரத்தை விட்டு—அகன்றார். உடன் குரோஸஸுக்கு அதிர்ச்சி ஏற்படும்படியான நிகழ்ச்சி ஒன்று நடந்துவிட்டது. தாம் கண்ட கனவின்படியே, தம் மகன் சிறுவன், ஒரு பன்றியின் படிம உருவத்தால் உயிரிழக்க நேர்ந்துவிட்டது.

விளக்கவுரை:

ஸொலான்: ஆதன்ஸ் நகருக்கான அரசியல் சட்டம் இயற்றி யவருள் முதன்மையானவர். அவர் வாழ்ந்து வந்த காலம் கி. மு. 639—559 அதாவது 80 வயது வரை வாழ்ந்திருந்தார். அவர் கி. மு. 639-ல் பிறந்தார். அவர் தந்தையின் பெயர் எக்ஸிசெஸ்டைடிஸ்[3]; தாய் பிசிஸ்டிராடஸ்[4] என்பவரின் சிற்றன்னை. தந்தை மிகுந்த படாடோபத்துடன் வாழ்ந்தவர்; பெருஞ்செலவாளி; ஸொலான் தாமும் தம் தந்தையைப்போலவே வாழ நினைத்தார். செலவிற்குப் பெருந்தொகை தேவைப் பட்டது. அவ்வாறான—பணத்தை அள்ளித் தரும்—தொழிலை ஏற்று நடத்த விரும்பினார். சலமிஸ்[5] யாருக்குச் சொந்தம் என் பதைப்பற்றி, ஆதன்ஸ் நகரத்துக்கும்[6] மெகரா[7] நகரத்துக்கும் கடுமையான விவாதம் நடந்தது. அதில் ஸொலான் பங்கெடுத் துக்கொண்டு விவாதத்தை நடத்தினார். அவர் ஒருவகைத் தத்துவ ஞானி. மெகரா நாட்டினர் தோல்வியைத் தழுவி, நாட்டிற்கு வெளியே துரத்தப்பட்டனர். ஸ்பார்டா[8] இடையில் நடுவராக நின்று, அப்போரைக் கி மு. 594-ல் தீர்த்து வைத்தார். அவர் சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆதன்ஸ் நாட்டுக்கு நல்ல அரசியல் சட்டங்களை[9] இயற்ற உடன் அவருக்கு அதிகாரம் தரப்பட்டது. ஸொலான் இயற்றிய அரசி

---

1. Solon 2. Sardys 3. Execestides 4. Pisistratus 5. Salamis 6. Athens 7. Megara 8. Sparta 9. Political Laws

யல் சட்டங்கள் கி. மு. 590-ல் மர உருளைகளிலும்[1], கனக் கூம்பு களிலும்[2] பொறிக்கப்பட்டன. சட்டங்களை இயற்றியவுடன் தாம் இயற்றிய சட்டங்களைத் தம் அனுமதியில்லாமல் மாற்றக் கூடாது என்ற கட்டுப்பாட்டை ஆதன்ஸ் மக்களுக்கு விடுத்தார். இதைக் காரணமாகக் கொண்டு, 10 ஆண்டுக்காலம் உலகைச் சுற்றி வரத் தொடங்கினார். முதலில் எகிப்து நாடு சென்றார். அங்கிருந்து, சைப்ரஸ் தீவினை[3] அடைந்து, அந்நாட்டு அரசர் பிலோ சைப்ரஸ்[4] என்பவரால் வெகு விமரிசையுடன் வரவேற்கப் பட்டார். அவ் அரசருக்கு ஸொலான், அங்கிருந்த சமவெளி யில் நகரம் ஒன்றை நிர்மாணிக்குமாறு அறிவுறுத்தினார். அவ்வர சரும் அதன்படியே நிர்மாணித்து, அந்நகரத்துக்குச் "சோலி"[5] என்ற பெயரிட்டு வழங்கினார்—ஸொலான் பெயரைக் கௌர விக்கும் முறையில் அவர் லிடியா[6] சென்றார். அங்குக் குரோஸஸைச்[7] சந்தித்தார். அவருக்கும் குரோஸஸுக்கும் நடந்த உரையாடல் இலக்கியப் புகழ் பெற்றதாகும். 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஸொலான் ஆதன்ஸ் நகரை[8] மீண்டும் அடைந்தார். ஆனால் தம் பகைவர்களின்—எதிரிகளின்—கைகள் ஓங்கியிருப் பதைக் கண்ணுற்றார் இருப்பினும், ஆதன்ஸ் நகர மக்கள் தங்களுக்கு ஏதாகிலும் அவ்வப்பொழுது பரிந்துரை செய்யுமாறு கேட்ட வண்ணமிருந்தனர். அவர் 80 வயது வரை வாழ்ந்து கி.மு. 559-ல் காலமானார்.

ஸொலானின் செய்யுள்களும் கவிதைகளும் வரலாற்றுக்கு உதவி செய்யும் வண்ணம் அமைந்துவிட்டன அவர் தம் எழுத்து களில் நல்லொழுக்கத்தையும், நன்னடத்தையையும் வற்புறுதி எழுதி வந்தார் என்பது தெளிவாகிறது.

—(A Smaller Classical Dictionary, Pages 495-496)

ஆர்டிஸ்[9]: இவர் லிடியாவை ஆண்ட முதல் மன்னர் ஆவார் என்று கருதப்படுகிறது. இவர் ஆட்சி செய்த காலம் கி.பி. 678—629 அதாவது 49 ஆண்டுகள் ஆண்டார். அதன் பிறகு இவர் மகன் ஸட்யாட்டிஸ் அரியணை ஏறினார்.

ஸட்யாட்டிஸ்[10]: இவர் ஆர்டிஸின் மகன் ஆவார். இவர் லிடியாவை ஆட்சி செய்த காலம் கி. மு. 629-617 அதாவது

1. Woodens Rollers 2. Triangular Tubes 3. Cyprus 4. Philo Cyprus 5. Soli 6. Lydia 7. Croesus 8. Athens 9. Ardys 10. Sadyattes

12 ஆண்டுகள் ஆண்டார். மைலீசியர்களுடன்[1] 6 ஆண்டுகள் போர் புரிந்தார். இவர் இறக்கும்போது (கி.மு. 617) அப்போரைத் தொடர்ந்து நடத்துமாறு தம் மகன் அல்யாட்டிஸுக்குப் பணித்து விட்டு உயிர் நீத்தார்.

அல்யாட்டிஸ்[2] : இவர் ஸட்யாடிஸின்[3] மகன் ஆவார். இவர் லிடியாவை[4] ஆண்ட காலம் கி.மு. 617-560 அதாவது 57 ஆண்டுகள் ஆண்டார். இவருக்கு எழுப்பப்பட்ட சமாதி[5] இன்றைக்கும் சார்டிஸ்[6] நகரத்தின் வடக்கில் இருப்பதாக அந் நாட்டு மக்களால் குறிப்பிடப்படுகிறது.

குரோஸஸ்[7] : இவரே லிடியாவின் இறுதிப் பேரரசர். இவர் அல்யாட்டிஸின் மகன் ஆவார். இவர் ஆட்சி செய்த காலம் கி. மு. 560—546 அதாவது 14 ஆண்டுகள் ஆண்டார். இவர் பல நாடுகளை வென்று தம் அரசுடன் இணைத்துக் கொண்டார். இதன் விவரம் லிடியர்[8] முதல் பாம்பிலியர்[9] வரை எனும் பகுதியைப் பார்க்க (பக்கம் 65). இவர் புகழ் அயல்நாடுகளுக்குப் பரவியதால், கலைஞர்களும், கவிஞர்களும் இவரது சார்டிஸ் பேரவைக்கு வந்த வண்ணமிருந்தனர். அவ்வாறு வந்தவர்களுள் ஒருவரே ஸொலான்[10]. இவருக்கும் ஸொலானுக்கும் நடைபெற்ற உரையாடல் இலக்கியப் புகழ் பெற்றது. இறுதியில் சைரஸ்[11] அரசருடன் போரிட்டு, தோல்வியைத் தழுவி, தலைநகரம் சார்டிஸ் பகைவரால் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவரைத் தீயிலிட்டுக் கொளுத்தி விடுமாறு சைரஸ் அரசர் ஆணையிட்டார். அப்பொழுதுதான் தமக்கு ஸொலான் கூறிய புத்திமதி நினைவிற்கு வந்தது. உடன் "ஸொலான்" என்று மும்முறை உரக்கக் கூவினார். அதற்குச் சைரஸ், "நீ யாரையோ கூப்பிடு கிறாயே, யார் அவர்?" என்று கேட்க, "அவர் என் நண்பர்; அவர் அரிய புத்திமதிகள் வழங்கியுள்ளார்: "எவர் ஒருவர் இறுதி நாள் வரை மகிழ்ச்சியாக வாழ்கிறாரோ அவரே மகிழ்ச்சியுடன் வாழ்ந்ததாகக் கருதப்பட வேண்டும்," என்று எனக்குக் கூறினார்," என்றார் குரோஸஸ். அவரைக் கொளுத்துவதை உடன் நிறுத்துமாறு கூறி, ஸொலானை வரவழைத்து அவருடன் நண்பரானார். குரோஸஸையும் மன்னித்து, அவரைத் தம் இறுதி நாள் வரைத் தம்முடனேயே வைத்திருந்தார். சைரஸ் மன்னர்

---

1. Milesian 2. Alyattes 3. Sadyattes 4. Lydia 5. Tomb 6. Sardys 7. Croesus 8. Lydians 9. Pompelians 10. Solon 11. Cyrus

இறந்து விட்ட சில ஆண்டுகள் வரையிலும் குரோஸஸ் உயிருடனிருந்தார் என்று கருதப்படுகிறது.

— (A Smaller Classical Dictionary, Pages 172-173)

அமாஸிஸ்[1] : எகிப்தில்[2] உள்ள ஒரு நகரம். இங்குள்ள நீதி மன்றம் புகழ்பெற்றிருந்த காரணத்தால், ஸொலான் அந் நீதி மன்றம் எவ்வாறு இயங்குகிறது என்பதைக் காணச் சென்றார்.

தேவதை ஹீரா[3] : இத் தேவதை ரோமானிய மக்களின்[4] தெய்வமான ஜூனோவுக்கு[5] இணையாகக் கருதப்படுகிறார். ஹீரா ஒரு பெண் தெய்வம். ஹோமரின் படி[6] (கி.மு. 850) இத் தேவதை ஜியுஸ்[7] கடவுளின் மனைவி ஆவார். ஆனால் பொருத்த மற்ற திருமணமாக முடிந்தது கடவுளர்களிடையேயும் பொருத்த மற்ற திருமணங்கள் காணப்படுவது வியப்பாக உள்ளது. ஹீரா தேவதை, தமிழ்நாட்டுத் துர்க்கை போல, கிரேக்க நாட்டுப் பெண்தெய்வமாக விளங்கினாள். இத்தேவதைக்குச் சாமோஸ்[8] தீவில் ஒரு கோயிலும், ஆர்கோஸில்[9] ஒரு கோயிலும் உண்டு.

ஹீராவின் தோற்றம் பெருந்தன்மை வாய்ந்த முகப் பொலிவுடன் சித்திரிக்கப்பட்டுள்ளது. வீரி என்ற தமிழ்ச் சொல் காளி, துர்க்கை முதலான தெய்வங்களைக் குறிப்பிடும். அச் சொல்லே கிரேக்க மொழில் ஹீரா என மருவிற்று.

பன்றியின் படிம உருவத்தால் சிறுவன் உயிரிழத்தல் :

இக்கதை ந்திய நாட்டில் உலவிவரும் கதை போன்று தோற்றமளிக்கிறது. ஆனால் இந்திய நாட்டுக் கதை வராக மிகிரர் காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. வராகமிகிரர் வாழ்ந்து வந்த காலம் கி. பி. 505—587 ஆகும் என்றும், அவர் குப்த சாம்ராஜ்யத்தில் ஜியோதிஷப்புலியாக விளங்கினார் என்றும், அவர் இயற்றியதே ''பிருகத் சம்ஹிதை'' எனும் சோதிட நூல் என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுவர். வராக மிகிரர் இளமையாயிருந்த பொழுது—அவர் 10 வயதாக இருந்த பொழுது ஒரு நிகழ்ச்சி நடந்தது (பக்கம் 73 பார்க்க). குப்தப் பேரரசர் காலத்தில் இரண்டாம் சந்திர குப்தர் விக்கிர மாதித்யன் காலத்தில் (கி. பி. 380—413)—அவர் பேரவையில் நவரத்தினங்கள் இருந்தனர் எனச் சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் இவர்கள் வெவ்வேறு காலத்தில்

---

1. Amasis 2. Egypt 3. Goddess Hera 4. Komans 5. Juno 6. Homer 7. Zeus 8. Samos 9. Argos

விளங்கியவர்கள். காளிதாசர், சந்திரகுப்தர் II விக்கிரமாதித்தியன் காலத்திலும் (கி.பி. 380—413), ஆர்யபட்டர் கி. பி. 5-ஆம் நூற்றாண்டு இறுதியிலும், அவர் எழுதிய ஆரியபட்டீயம் கி.பி. 499-ல் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டது அதன் பின்னர் வராகமிகீரர் (கி.பி. 505—587) இருந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வராகமிகீரர் எழுதிய நூல்கள்: பஞ்ச சித்தாந்திகா - இயற்றப்பட்ட ஆண்டு கி பி. 545. இஃது ஒரு பஞ்சாங்க நூல். அடுத்தது பிருஹத்சம்ஹிதை. இது 106 அதிகாரங்களைக் கொண்டது. பழங்கால இந்தியர்கள் ஜியோதிஷ நூல்களை நன்கு கற்றவராகக் காணப்பட்டனர். பிருக்த் சாதகத்தின் முக்கியமான பகுதி ஹோரா சாஸ்திரம். ஹோரா என்னும் கிரேக்கச் சொல்லே, ஹோரை என்று இந்திய மொழிகளில் பயன்படுத்தப் படுவதாயிற்று. ''இலகுசாதகா'' என்பது சிறிய தொகுப்பு நூல் ஆகும்.

வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்:

''Horoscopy was chiefly an importation from the West, unknown to earlier Indian writers, specially to Kautilya who have no idea of the Planetary influence on human life.

Therefore the prediction of Man's future on the basis of Planetary positions at the time of his birth is largely of foreign origin, though natural Astrology developed in India from the VEDIC AGE.''

—(History of India - Vol I By R. Sathiyanatha Iyer, M.A ,L.T Pages 237-238)

''Varahamihira lived in the 6th Century A.D. and composed the Pancha Siddanta which gives account of the five astronomical Systems.''

—(History of India : Vol I. By R. Sathiyanatha Iyer, M.A.,LT Page 237)

வராகமிகீரர்: (கி.பி. 505-587) இவர் பஞ்ச சித்தாந்தம் எனும் நூலைக் கி.பி 545ஆம் ஆண்டு இயற்றி வெளியிட்டார்.

வராகமிகீரர் பற்றி இந்திய வரலாற்றுக் குறிப்புகள்:

வராகமிகீரரின் இயற்பெயர் மிகீராகுலர். அவர் சிறுவராக இருந்த பொழுது, அவரைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று இன்றளவும் கூறப்பட்டு வருகிறது.

---

1. Varahamihira

வராகமிகிரர் வேதபாடத்தில் ஈடுபட்டுப் படித்துக் கொண்டிருந்த பொழுது, அவரைப் பற்றி ஒரு சுவையான நிகழ்ச்சி கூறப்படுகிறது. அவர் மிகுந்த இளைஞராக இருந்தபொழுது 10 வயது இருக்கும்—அதாவது கி.பி. 515-ல்—அவர் அரசவைக்குத் தம் உறவினர் ஒருவருடன் சென்றார். அன்றுதான் பிறந்த ராஜ குமரானின் ஜாதகத்தை அப்பொழுது அவ் அவையில் நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தனர். அங்கிருந்த சோதிட நிபுணர்கள் அவ் அரசகுமாரனுக்குப் பிற்காலம் 'ஹோ, ஹோ' என விளங்கப் போவதாகக் கூறிக் கொண்டிருந்தனர்.-அரசரின் சன்மானங்களை எதிர்நோக்கி. ஆனால் மிகிராகுலனுக்கு அப்பொழுது வயது 10. உடன் மிகிராகுலன் அவ் அவையிலிருந்து எழுந்து, "இந்தக் குழந்தைக்குப் பாலாரிட்டம் உண்டு. பிறந்த 2 வருடம் 6 மாதம் 3 நாள்கள் வரை பாலாரிட்ட தோஷத்தால் அவதிப்பட நேரிடும். மற்றும் அந்த 2 வருடம், 6 மாதம் 3 நாள்கள் ஆனவுடன், இக்குழந்தைக்கு ஒரு பன்றியினால் மரணம் ஏற்படும்," என்று கூறி முடித்தான். அரசனுக்கும், அவைப்புலவர் சோதிட நிபுணருக்கும் கோவம் வந்தது. ஆயினும் அரசன் நினைத்தான்: "இச்சிறுவன் நம் நன்மையை உத்தேசித்தல்லவோ கூறுகிறான்! ஏன் இவன்மீது கோபப் படவேண்டும்? குழந்தைக்குத் தக்க பாதுகாப்புகள் ஏற்படுத்தி விட்டால் சரியாகிவிடும்" என்று நினைத்து, "சிறுவனே, நீ சொல்கிறபடி அந்த கெடுக்குள் நடக்கவில்லையாயின் உன் தலை சிரச்சேதம் செய்யப்படும், தெரிந்ததா?" என்றான் அரசன். அச்சிறுவனும் வேகமாகத் தன் தலையை அசைத்தான். அரசரின் எச்சரிக்கைக்கும் பயமுறுத்தலுக்கும் சிறுவன் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை.

அரசன் அக்குழந்தைக்குத் தக்க பாதுகாப்புகள் செய்தான். ஒரு தீவின் நடுவில் ஓர் அரண்மனை கட்டி, அங்கே எந்தவித விலங்கையும் உள்ளே விடாமல் பார்த்துக் கொண்டிருந்தனர் அரண்மனைக் காவலர்கள். அத்தீவினுள் குழந்தையை வைத்துவிட்டு, தக்க ஏற்பாடுகள் செய்து விட்டு வெளியே வந்து விட்டான்.

இவ்வாறு 2 ஆண்டுகள் 6 மாதம் 3 நாள்களும் கழிந்தன. "அப்பாடா" என்று பெருமூச்சு ஒன்று விட்டான் அரசன். அன்று அக்குழந்தையை வெளியே எடுத்து வருமாறு கட்டளையிட்டான். இனி அச்சோதிடம் கூறிய சிறுவனைக் கண்டு செய்தி தெரிவிக்க வேண்டுமென்று உள்ளூரத் திட்டமிட்டான்.

உள்ளே சென்ற காவலர்கள் கண்ட காட்சி யாது? அப் பால சோதிடன் கூறியபடி குழந்தை 2 ஆண்டுகள் 6 மாதம் 3 நாள் வரை உயிருடன் இருந்தது. உடன் அவ்விடத்தில் சுவரின்மீது, மேல் பகுதியில் மாட்டப்பட்டிருந்த களிமண்ணால் செய்த பன்றியின் படிமம் ஒன்று, அக் குழந்தையின் தலைமீது விழுந்து குழந்தை இறந்து விட்டது. அப்பொம்மையை மேலே ஒரு பல்லி அசைத்திருக்கிறது. அவ்வளவே. அப்பொம்மை விழுந்து குழந்தையைக் கொன்று விட்டது.

அரசன் குழந்தை இறந்து விட்டதற்காக விசனித்தான். ஆயினும் அப் பால சோதிடன் எத்துணை நுணுக்கமாகக் கூறினான் என வியந்து, அன்றையிலிருந்து அச்சிறுவனே அப் பேரவையின் ஆஸ்தான சோதிடனாக நியமிக்கப் பட்டு விட்டான். அன்று முதல் அச்சிறுவன் வராகமிகீரர் என்று (பன்றி சோதிடம் கூறியதால்) வழங்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

மேற்கூறப்பட்ட இந்தியக் கதைக்கு ஆதாரம் எதுவும் கிடையாது. மிகிராகுலன் ஏன் வராக மிகீரன் என்று வழங்கப் பட வேண்டும் என்பதற்குரிய கற்பனை விளக்கமே தவிர வேறன்று. இக் கற்பனைக் கதை கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் புனையப் பட்டதாகும்.

ஆக இக்கதை கிரேக்க நாட்டில் ஆதாரத்துடன் கூறப்பட்ட கதையின் இந்திய உருவமே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

கிரேக்க நாட்டில் என்ன நடந்தது?

ஸொலான்[1] நாட்டை விட்டகன்றதும், குரோஸஸ்[2] அன்றிரவு தன் சிறுவன் மகன் பன்றி ஒன்றினால் கொல்லப்படுவதாகக் கனவு கண்டான். அதற்குப்பிறகு அவன் மனம் குழம்பத் தொடங்கிற்று. அடுத்த நாள் அச்சிறுவன் தூங்கிக் கொண்டிருக்கும் போது, மேலே மாட்டப்பட்டிருந்த பன்றியின் பொம்மை உருவம் அச்சிறுவன் மீது விழுந்து, தாம் கனவு கண்டபடியே, அச்சிறுவன் இறந்து விட்டான். கனவு உடன் பலித்து விட்டது.

இக் கிரேக்கக் கதைக்கும், இந்தியக் கதைக்கும் எத்துணை ஒற்றுமை காணப்படுகிறது? இந் நிகழ்ச்சி கி.மு. 559 ஆம் ஆண்டு

1. Solon 2. Croesus

நிகழ்ந்ததாகக் கிரேக்க வரலாறு கூறுகிறது. குரோஸஸ் ஆட்சி செய்த காலம் கி. மு. 560—546.

கிரேக்க நாட்டிற்கும் இந்தியா-தமிழ்நாட்டிற்கும் எத்துணை தொடர்பிருந்தால் இத்தகைய கதைகள் பரிமாறிக் கொள்ளப் படும்?

மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். பன்றியின் உருவப் படிமங்களை இந்தியர்கள் - தமிழர்கள் வைத்துக் கொள்வது கிடையாது. அவ்வழக்கம் கிரேக்க நாட்டில்தான் உண்டு. இந்தியர்கள் பன்றியும் கடவுளும் சேர்ந்த ஸராகவதாரம் எனும் தெய்வத்தையே கொண்டாடினர். ஆகவே, இக்கதை முற்றிலும் கிரேக்கக் கதையின் அடிப்படைமீது எழுந்தது என்பது தெற்றென விளங்குகிறதல்லவா?

6. குரோஸஸின் இறுதிக் காலம்

குரோஸஸின்[1] இறுதிக் காலத்தைக் காண்போம். அவருக்குச் சிறுவயதில் ஒப்பற்ற மகன் ஒருவன் இருந்தான். குரோஸஸ் கனவு கண்டவாறு, அச் சிறுவன் பன்றியின் படிம உருவத்தால் உயிரிழந்தான். இரண்டாமவன் ஊமை; அவன் இளையவன். மற்றப்படி, இரண்டாவது மகனுக்குப் பேச்சு வரவில்லையே தவிர, மற்ற எல்லா இலக்கணங்களும் பொருந்தியவனாகக் காணப்பட்டான். குரோஸஸின் செழுமைக் காலத்தில் தம் மகனுக்கு எல்லா வகைச் சௌகரி யங்களையும்-ஏதும் குறைவின்றி-செய்து கொடுத்திருந்தார். அச்சிறுவனும் வளர்ந்து பெரியவனாக ஆகிவிட்டான். குரோஸஸின் நிலை தாழ்ந்து விட்டது. சிறைபிடிக்கப் பட்ட குரோஸஸை நோக்கிப் பாரசீக வீரன்[2] ஒருவன் கையில் வாளேந்தி வேகமாக நெருங்கினான். அவன் அவ்வாறு வருவதை எதிர்த்துத் தடுத்து நிறுத்தவும் முனையவில்லை குரோஸஸ். காரணம், அவ்வளவு மோசமான நிலையெய்தி யிருந்த தான் வாழ்ந்தால் என்ன, வீழ்ந்தால் என்ன எனும் விரக்தி மேலிட்டுக் காணப்பட்டான். வாளேந்தி வேகமாகக் குரோஸஸை நெருங்குவதை, குரோஸஸின் ஊமை மகன் கண்ணுற்றான். உடன் அவன் உடல் நடுங்கிற்று. தன் தந்தையை அப்பாரசீக வீரன் என்ன செய்து விடுவானோ என்று உள்ளூர நடுக்கங்கண்டு, அப்பயத்தின் மிகுதியால்-ஏற்பட்ட பேரதிர்ச்சியால் - உடன், "ஐயா, குரோஸஸைக் கொன்று விடாதீர்," என்று பேசத் தொடங்கி விட்டான். 'ஐயா; குரோஸஸைக் கொன்று விடாதீர்'- இதுதான் அவ் இளைஞன் கூறிய- அவன் வாயினின்று வெளிவந்த-முதல்

---

1. Croesus 2. Persian Soldier

சொற்கள். அதன் பிறகு அம் மகன் தன் இறுதிக் காலம் வரை நன்றாகப் பேசிக் கொண்டிருந்தான்.

இந்த விதத்தில்தான் சார்டிஸ் நகரம்[1] பாரசீகர்களால் கைப்பற்றப் பட்டது. அக் கலவரத்தில் குரோஸஸ்[2] கைது செய்யப்பட்டு, சிறைப்படுத்தத்பட்டார். குரோஸஸ் ஆண்ட ஆண்டுகள் 14; மற்றும் சார்டிஸ் நகரம் முற்றுகையிடப் பட்ட நாள்களும் 14 ஆகும். இவ்வாறு குரோஸஸ் தாமே விரிவாக்கிய பேரரசைத் தாமே—தம் கைகளினாலேயே-அழித்து விட்டார்.

குரோஸஸைச் சங்கிலி கொண்டு பிணைத்து, பாரசீக மன்னர் சைரஸின்[3] முன்னால் கொண்டு நிறுத்தினர். அப்பொழுது 14 லிடிய நாட்டுச் சிறுவர்கள்[4] அங்குக் கொளுத்தப் பட நிறுத்தப்பட்டிருந்தனர்—கடவுளுக்கு அர்ப்பணிப்பதற்கென ஏற்கெனவே வேண்டுதலை செய்து கொண்டபடி. குரோஸஸை அச்சிறுவர்களுடன், அடுக்கி வைக்கப்பட்ட சிதையில் ஏற்றிப் படுக்க வைத்தனர். தீ மூட்டவேண்டும். இனி அதுதான் நடை பெறவேண்டியது. குரோஸஸ், இப்பொழுதும் முன் போலவே ஸொலான்[5] கூறிய சொற்களை— "எந்த மனிதனும் தனக்குச் சாவு வரும் வரை சந்தோஷமாக இருப்பதில்லை. சாவே, ஒரு மனிதனின் இறுதி இன்பம் ஆகும்" என்பதை நினைப்பூட்டிக் கொண்டார். அதுவரை யாதும் பேசாமலிருந்த குரோஸஸ் உடன், "ஸொலான்" என்று மும்முறை உரக்க ஒலியெழுப்பிக் கூவினார்.

அரசர் சைரஸ் அக் கூக்குரலைக் கேட்டு, "ஸொலான் என்பவர் யார்?" என்று வினவினார். வற்புறுத்திக் கேட்டும் சிறிது நேரம் யாதும் பதில் கூறவில்லை. பிறகுதான் பேசத் தொடங்கினார்: "ஸொலான் உலகில் உள்ள ஒவ்வொரு அரசருடனும் பேசியிருக்கவேண்டும். எனக்குத் தரச் செல்வமிருப்பின், முழுவதையும் அவருக்கு அள்ளிக் கொடுத்திருப்பேன்," என்றார். அதன் பின்னர் ஸொலானைப் பற்றி மீண்டும் வற்புறுத்திக் கேட்கவே, ஸொலானின் முழு

1. Sardys 2, Croesus 3. Cyrus 4. Lydian boys 5. Solon

வரலாற்றையும் குரோஸஸ் அடுக்கி வைக்கப்பட்ட அச்சிதை மீது இருந்தபடியே எடுத்துரைத்தார். அவர் சொன்னவை யாவும் எவ்வாறு நடந்தேறின என்றும் எடுத்துக் காட்டினார்.

அச்சிதையின் நான்கு பக்கங்களிலும் நெருப்பிட்டு எரிக்கத் தொடங்கினர். உடன் அரசர் சைரசுக்கு ஓர் எண்ணம் உதித்தது. "இவன் என்னைப் போல நாடுகளை வென்று ஒரு காலத்தில் நன்றாக வாழ்ந்தவனே. மனிதருள் எவரே நிலையாயிருப்பவர்? ஏதோ எனக்கு நல்லூழ் இருந்தது, நான் இவனைச் சிறைபிடித்தேன்? ஏன் நானே இறந்தும் விட்டிருக்கலாம், அல்லது சிறைப் படுத்தப்பட்டு மிருக்கலாம் அல்லவா? ஆகையால் மனிதர்கள் என்ன செய்வார்கள்? அவர்களை விதி எனும் ஒன்று ஆட்டிப் படைக்கும் பொழுது?" என்று எண்ணி, உடன் தம் காவலாளரிடம், "அச் சிதையை நீரிட்டு அணையுங்கள்." என்று உத்தரவிட்டார். ஆனால் சைரஸ்[1] சொல்லி முடிப்பதற்குள், அதற்கிடப்பட்ட நெருப்பு வலிவாக எரியத் தொடங்கிற்று. உடன் குரோஸஸ்[2], "அப்பொலோ[3] தெய்வமே! தங்களுக்கு நான் நன்கொடையாகக் கொடுத்திருந்த பொருள்களுள் ஏதேனும் ஒன்று தங்களுக்குப் பிடித்ததாகயிருந்திருக்குமாயின், இத் தீயினின்று என்னை விடுவியுங்கள்," என்று அப்பொலோ தெய்வத்தைப் பிரார்த்தித்தார். அப்பிரார்த்தனைக்கு இரக்கம் காட்டிய அப்பொலோ தெய்வம், உடன் பெரு மழை ஒன்றை உண்டாக்கி, எரியும் சிதையை ஒரு நொடியில் அணைத்தே விட்டது.

"இதுவே குரோஸஸ் ஒரு நல்ல மனிதர்; தெய்விகச் சக்தி வாய்ந்தவர் என்பதைக் காட்டுகிறது," என்று அரசர் சைரஸ் கருதினார்.

குரோஸஸ் உடன் அச்சிதையினின்று வெளியே எடுத்துப் போடப்பட்டார். குரோஸஸை நோக்கி அரசர், "ஐயா, என் நாட்டின்மீது படையெடுக்க உமக்கு அறிவுறுத்தியது யார்?" என்று கேட்டார்.

---

1 Cyrus 2. Croesus 3. Apollo

"வேந்தே, எவருமிலர். கிரேக்கக் கடவுளர்கள்[1] உங்கள் மீது படையெடுத்துச் செல்ல ஆணையிட்டனர். அவர்களே இப்போருக்குக் காரணம். அமைதியை ஒருவன் நாடுவானே தவிர, போரை எவனும் விரும்பி வரவேற்க மாட்டான். அமைதிக் காலத்தில் மகன், தன் தந்தையை அடக்கம் செய்வான். போர்க்காலத்திலோ, தந்தை, தன் மகனை அடக்கம் செய்வான். இவ்வாறு நேர்வது கடவுளின் விருப்பம் ஆகும்," என்றார் குரோஸஸ்.

"ஐயா, இப்பொழுது தாங்கள் எனக்கு விடுக்கும் புத்தி மதி யாது?" என்று அரசர் சைரஸ் குரோஸஸைக் கேட்டார்.

"வேந்தே, இப்பொழுது நான் தங்கள் அடிமை. 'அடிமை சொல் அம்பலம் ஏறாது' என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். ஆயினும் நீங்கள் கட்டளையிட்டு விட்டதால், கூறுகிறேன். சார்டிஸ் நகரத்தின்[2] செல்வங்களை உங்கள் போர் வீரர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுள் எவன் அதிகமாகக் கொள்ளையடிக்கிறானோ, அவன் தங்களைப் பழிவாங்கக் காத்திருப்பான். அவன் உங்களிடம் கொள்ளையடித்த பொருள்களை உங்களிடம் சேர்க்காமல் ஏமாற்ற வழிவகைகளைச் செய்வான். கொள்ளையடித்த பொருள்கள் முழுவதும் உம்மிடப் வாரா. ஆகையால், ஒன்று செய்யுங்கள். "கொள்ளையடிக்கப்பட்ட பொருள் என்னிடம் ஒப்படைக்கும் பொழுது, அதில் பத்தில் ஒருபாகம் ஜியுஸ்[3] கடவுளுக்குத் தரப்படும்," என்று அறிக்கை விடுங்கள். கடவுள் தண்டிப்பாரோ எனப்பயந்து, எல்லாப் பொருள்களையும் உங்களிடம் சேர்த்து விடுவான். பிறகு அவற்றிலிருந்து பத்தில் ஒரு பகுதியை ஜியுஸ் கடவுளுக்கு அன்பளிப்பாக அளித்து விடுவீராக!" என்றார் குரோஸஸ்.

இப் பதிலைக் கேட்டு முழு திருப்தியடைந்த சைரஸ்[4] அவ்வாறே கட்டளையனுப்பிவைத்தார். கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களும் ஒழுங்காய் வந்து சேர்ந்த வண்ணம் இருந்தன.

---

1. Greek Gods 2. Sardys 3. Zeus 4. Cyrus

குரோஸஸ்[1] தம்மைப் பிணைத்திருக்கும் இரும்புச் சங்கிலியையும் டெல்பி கோயிலுக்கு[2] அனுப்பியருளுமாறு சைரஸ் அரசரை வேண்டிக் கொண்டார். அவரது விருப்பம் போல அச்சங்கிலியும் டெல்பி கோயிலுக்கு அனுப்பப்பட்டு விட்டது.

அப்பொழுது டெல்பியில் ஓர் அசரீரி கேட்டது. "இங்குக் கடவுளர்களும் விதிவிலக்கினர் அல்லர். அவர்களும் துன்பத்தை ஏற்றே ஆகவேண்டும். சார்டிஸ் நகரம்[3] குரோஸஸின் மைந்தர் காலத்தில் இழக்கப்பட்டிருக்கலாமே? அவ்வாறின்றி, குரோஸஸே தம் நகர அழிவைக் காண வேண்டுமா என்றால், கடவுளின் விருப்பத்தை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. மற்றும், குரோஸ்ஸை எரியும் நெருப்பிலிருந்து காப்பாற்றியதும் அக்கடவுளே அல்லவா?" என்று கூறிற்று.

குரோஸஸ் பலவகைப் பரிசுப் பொருள்களைக் கிரேக்கக் கோயிலுக்கு அனுப்பிவைத்தார். பெரிய பொன்னால் ஆன பசு ஒன்றும் குரோஸஸால் அளிக்கப்பட்டது. அப்பசுவையும், பொன்னால் செய்த ஈட்டியொன்றையும் இன்று என் கண்களால் கண்டேன்.

சைரஸ், தம் மகன் கேம்பைஸிஸிடம்[4] குரோஸ்ஸை ஒப்படைத்துவிட்டு, தாம் போர் மேற்சென்று உயிரிழந்தார்

கேம்பைஸிஸ் எகிப்துக்கு[5] எதிராக நடத்திய போரில் குரோஸஸ் பங்கு கொண்டார்."

விளக்கவுரை:

பன்றிப் படிமம்: பன்றியின் படிம உருவத்தால், குரோஸஸின் சிறு குழந்தை உயிரிழந்த வரலாறு, பக்கம், 75 குறிப்புப் பார்க்கவும்.

ஊமை திடீரெனப் பேசுதல்: தன் தந்தையைக் கொன்று விடுவானோ என்ற பயத்தால்—அவ்வதிர்ச்சியால்— அச்சிறுவன் பேசத் தொடங்கியது "அதிர்ச்சிச் சிகிச்சை"[6] என்று வழங்கப்படும். இது மருத்துவர்கள் மேற்கொள்ளும் ஒருமுறை ஆகும்.

---

1. Croesus 2. Delphi 3. Sardys 4. Cambyses 5. Egypt
6. Shock Treatment

ஸொலான்:[1] ஆதன்ஸ் நகரத்தின்[3] அரசியல் சட்டம் இயற்றியவர். இவர் வாழ்ந்த காலம் கி. மு. 639—559 ஆக 80 ஆண்டுகள் வாழ்ந்தார். மற்றும் பக்கம் 69 குறிப்பு 1 பார்க்கவும்.

அப்பொலோ[3] தெய்வத்தினிடம் பிரார்த்தனை

அப்பொலோ, கிரேக்கப் புராண தெய்வங்களுள் தலையாயவர். ஜியுஸ் கடவுளுக்கும் லீடோ தெய்வத்துக்கும் பிறந்த மகன். இரட்டைப் பிள்ளையாகப் பிறந்த மற்றொருவர் அர்டமிஸ்.[4] இவர் தண்டிக்கும் கடவுளாகவும், அசரீரி வழங்கும் கடவுளாகவும், ஆடு மாடுகளைக் காப்பாற்றும் தெய்வமாகவும், சூரியக்கடவுளாகவும் கருதப்பட்டு வந்தார். இவருக்கிருந்த ஏற்றத்தைப் போன்று வேறு எந்தக் கிரேக்கத் தெய்வமும் பெற்றதில்லை.


அப்பொலோ தெய்வம்

இந்தியக் கடவுள்களான இராமர், கிருஷ்ணர், சூரியன், இந்திரன் ஆகியவர்களின் குணங்களின் கலப்பாகச் சித்திரிக்கப் பட்டுள்ளார் அப்பொலோ.

குரோஸஸ்[5] அப்பொலோ தெய்வத்தினிடம் ஆழ்ந்த பிரார்த்தனை புரிந்ததன் காரணமாக, அப்பொலோ மனமிரங்கி மிகுந்த மழையைப் பொழிவித்தார். மற்றும் கடவுளிடம் ஆழ்ந்த பிரார்த்தனை புரிந்தால் கடவுள் கைவிட மாட்டார் என்பது இந்து தத்துவத்தின் சிறந்த கொள்கையாகும்.

துரோபதை துகிலுரியப்பட்ட பொழுது, "கிருஷ்ணா!" என்று கூக்குரலிட்டவுடன், அவிழ்க்கப்பட்ட சேலை, கிருஷ்ணன் "அக்ஷயம்" "மேலும் வளர்வதாக!" என்று கூறிய பொழுது நீண்டு கொண்டே போயிற்று என்பது மகாபாரதம் கூறும் கதையாகும். இது வைஷ்ணவ மரபில் "பரிபூரண சரணாகதி" என்று வழங்கப்படும்.

---

1. Solon 2. Athens 3. Apollo 4. Artemis 5 Croesus

" எல்லையில் ஞானத்தன் ஞானமஃதே கொண்டு
எல்லாக் கருமங்களும் செய்
எல்லையில் மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி யான்
ஓர் துக்கமிலனே."

—(திருவாய்மொழி : 3-10-8)

" நாடினும் நின்னடியே நாடுவன் நாள்தோறும்
பாடினும் நின் புகழே பாடுவன்— சூடினும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகில் என்னே எனக்கு?"

—(இயற்பா: முதல் திருவந்தாதி:88)

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." —(திருக்குறள் : 350)

" More things are wrought by prayer
Than this world dreams of."

– (Mort D' Arthur— Tennyson)

ஜியுஸ் கடவுள்[1]: இவர் ரோமானியக் கடவுளான ஜுபிட்டருக்கு[2] ஒப்பாவார். இவர் குரோனாவுக்கும், ரீயாவுக்கும் பிறந்த மகன் ஆவார். இந்தப் பிரபஞ்சத்தைக் கடவுளர்கள் பிரித்துக் கொண்ட பொழுது, ஜியுஸ் உடன் பிறந்தவர்களான போஸிடான்[3] கடலையும், ஹேடஸ்[4] கீழ் உலகத்தையும், ஜியுஸ் மேல் உலகமாகிய வான இராச்சியத்தையும் பெற்றுக் கொண்டனர். ஆனால் இந்தப்பூமி— பூவுலகம்— எல்லோர்க்கும் பொதுவானதாக ஆயிற்று. ஹோமரின்[5] படி (கி. மு. 850) ஜியுஸ் தம் இருப்பிடத்தை ஒலிவ மலைமீது[6] கொண்டதாகவும், அம்மலை திசாலி நாட்டில் உள்ளது என்றும் கூறப்படுகிறது. அம்மலை உயர்ந்து, வானுலகை எட்டுவதாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது. அவரே உயர்ந்த கடவுளாகவும், நன்மையும், தீமையும் அவர் ஏற்படுத்துவனவே என்றும் நம்பப்படுகிறது. அவரது சின்னங்கள் இடி, மின்னல்; அவர் உண்டாக்குவது பூகம்பம், சூறாவளி, பெருங்காற்று முதலியன. அவருக்கு ஹீரா தேவதை[7] மூலமாக இரண்டு மகன்களும் ஒருமகளும் பிறந்தனர். மகன்கள் பெயர் ஏரஸ்,[8] ஹெபிஸ்டஸ்[9], மகளின் பெயர் ஹிபே[10] அவர் அணியும்மாலை ஒலிவ இலை மாலை[11].

---

1. Zeus 2. Jupiter 3 Poseidon 4. Hades 5. Homer 6. Mt. Olive 7. Hera 8. Ares 9. Haphaestus 10, Hebe 11. Olive leaves.

ஜியுஸ் இந்தியக் கடவுளான இந்திரனுக்கு ஒப்பாவார். இந்திரனே இடி, மின்னல், மழை ஆகியவற்றின் கடவுள்.

சைரஸ்:[1] இவர் பாரசீகப் பேரரசின் ஸ்தாபகராகக் கருதப் படுகிறார். இவர் அக்கமெனிட்[2] குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் தந்தை கேம்பைஸிஸ்[3]; தாய் மந்தனே[4]; தந்தை பாரசீகப் பிரமுகர்; தாய் மிடிய[5] நாட்டு அரசரான அஸ்டியகெஸ்[6] என்பாரின் மகள். அஸ்டியகெஸ், தாம் கண்ட கனவின்படி, தம் பெயரன் ஆசியாவின் பேரரசனாக வரவேண்டும் என்று அக்கனவுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. ஆகவே, அக் குழந்தையைக் கொன்று போடுமாறு ஹர்பகஸ்[7] என்பானிடம் அக்குழந்தையைக் கொடுத்தார். ஆனால் ஹர்பகஸ் மனித இதயம் படைத்தவன். அதன் காரணமாக, அக் குழந்தையைக் கொல்லாமல் ஒரு கூடையில் வைத்து மூடி, அதை ஒரு படகில் வைத்து, ஆற்றில் மிதக்க விட்டு விட்டான். அப்படகை ஓர் ஆட்டிடையன் கண்டு, அக்குழந்தையை எடுத்து வளர்த்தான். பத்தாம் ஆண்டிலேயே (கி.மு. 569) தான் ஓர் அரச பரம்பரை யைச் சார்ந்தவன் என்ற குறிப்புகளுடன் விளங்கலானான். அச்சிறுவன் பாரசீகத்தில் வாழும் தம் பெற்றோர்களிடம் அனுப்பப்பட்டான். சிறுவன் சைரஸ் போர் வீரத்தில் சிறந்து விளங்கினான். அவனுக்கு 20 வயது ஆகும் பொழுது (கி.மு 559) அவன் பாரசீகர்களைத் திரட்டி, அஸ்டியகெஸ்மீது போர் தொடுத்தான். அஸ்டியகெஸ் போரில் தோற்று, சைரஸால் சிறைபிடிக்கப்பட்டார்.

அஸ்டியகெஸ் ஆண்ட நாட்டு மக்கள் மிடிய நாட்டினர். அவர்கள் சைரஸையே அரசராக ஏற்றனர். ஆக, பாரசீகத் திற்கும், மிடிய நாட்டிற்கும் சைரஸே அரசராக விளங்கினார். பிறகு ஆசியாமீது[8] படையெடுத்து ஆசியா முழுவதையும் வென்றார். கி. மு. 546 ல் சைரஸ் லிடியா[9] மீது போர் தொடுத்து, லிடிய மன்னரான குரோஸஸைத்[10] தோல்வி பெறச் செய்து, அவரைச் சிறைபிடித்தார். ஹர்பகஸ், சைரஸின் போர்த்தளபதி. சைரஸ் ஆசியாமைனரில்[11] உள்ள கிரேக்க மன்னர்கள் பலரை வென்றார். அதன் பிறகு அவர் மஸஜெடே[12] மக்கள்மீது போர் தொடுத்தார். ஆனால், சைரஸ் அப்போரில் தோற்றார். மஸஜெடேயின் அரசியான டோமிரிஸ்,[13] சைரஸின் தலையை வெட்டி, இரத்தம் நிரப்பப்

---

1. Cyrus 2. Achamenid 3. Cambyses 4. Mandane 5. Media 6. Astyages 7. Harpagus 8. Asia 9. Lydia 10. Croesus 11. Asia Minor 12, Messagetae 13. Tomyris

பட்டுள்ள தொட்டியில் வீசியெறிந்தாள். வீசி எறிந்து "உன் இரத்த தாகத்தைத் தணித்துக் கொள்" என்றாள். சைரஸ்[1] கொல்லப்பட்ட ஆண்டு கி.மு. 529. ஆக, சைரஸ் கி.மு 579-529 அதாவது 50 ஆண்டுகள் ஆண்டார்.

சைரசுக்குப் பிறகு அவர் மகன் கேம்பைஸிஸ்[2] அரியணை ஏறினார்.

இவ்வரலாற்றை ஸெனபான்[3] முழுமையாகக் கொடுத்துள்ளார். ஸெனபான் வாழ்ந்து வந்த காலம் கி. மு. 444-374 அதாவது 70 ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். அவர் எழுதிய அனபாஸிஸ்[4] எனும் நூலில் சைரஸைப் பற்றிய உண்மையான வரலாற்றைக் கொடுத்துள்ளார். அவர் சாக்ரடீஸின் மாணாக்கர். அவர் எழுதிய வேறு நூல்கள். சைரோபேடியா;[5] மெமோரரோபிலியா[6] (4 பகுதிகள்); பொருளியல்.[7]

—(A Smaller Classical Dictionary : Pages : 576-577)

இன்று நான் கண்டேன் : இது ஹிராடடஸின் கூற்று. அப்பொருள்களைத் தாம் பார்த்ததாக எழுதியுள்ளார். குரோஸஸ்[8] அளித்த பொன் பசுவும், பொன் ஈட்டியும் ஹிராடடஸ் காலம் வரை காப்பாற்றப் பட்டு வந்துள்ளன என்பது இவ்வரலாற்றால் தெளிவாகிறது.

இத்தகைய நுணுக்கமான செய்திகள் கொண்ட தமிழ்நாட்டு வரலாறு இதுவரை உருவாக்கப்படவில்லை என்பதை நோக்க மனம் மிகுந்த வேதனை அடைகிறது.

கேம்பைஸிஸ் : இவர் சைரஸ் அரசின் மகன் ஆவார். அரசாண்ட காலம் கி.மு. 529-522 அதாவது ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்தார். கி. மு. 525-ல் எகிப்தை வென்றார். இவர் சிரியாவில்[9] உள்ள எக்படன[10] எனும் ஊரில் கி. மு. 522 ஆம் ஆண்டில் காலமானார்.

டெல்பி[11] : கிரேக்க நாட்டின் புகழ் பெற்ற அப்பொலோ தெய்வம் உள்ள கோயில். இதில் பூசாரிணிகள் குறி சொல்வர். மற்றும், பக்கம் 59, குறிப்பு-11 பார்க்கவும்.

சார்டிஸ்[12] : இது குரோஸஸ் ஆட்சி செய்த நகரம். இது பாரசீகர்களால் வெல்லப்பட்டது.

எகிப்துக்கு[13] எதிராக நடத்திய போர் : இப்போர் கி. மு. 525-ல் நடைபெற்றது. கேம்பைஸிஸ் எகிப்தை வென்றார்.

---

1. Cyrus 2. Cambyses 3. Xenephon 4. Anabsais 5. Cyropaedia 6. Memorabilia 7. Economics 8 Croesus 9. Syria 10. Ecbatana 11. Delphi 12. Sardys 13. Egypt

7. டெயோஸிஸ், அஸ்டியகெஸ், மித்ரடேடிஸ்

"இதுகாறும் பாரசீகர்கள்[1] லிடியாவை[2] எவ்வாறு அடிமைப்படுத்தினர் என்பதை நான் விளக்கி வந்தேன். இந்த வரலாறு சைரஸ்[3] என்பவரை அறிந்து கொள்ள ஒரு தூண்டு கோலாய் அமைந்து விடுகிறது. இந்தச் சைரஸ் என்பவர்தாம் யார்? குரோஸஸின்[4] பேரரசை ஒழித்துக் கட்டிய இச் சைரஸ் யார்? பாரசீகர் தங்களது முந்தைய நிலையை எவ்வாறு திரும்பப் பெற்றனர்? தேவைப்படின், சைரஸைப் பற்றி மூன்று வகையான வரலாறுகளைத் தர முடியும். ஒவ்வொன்றும் வெவ்வேறான விவரங்களைக் கொண்டவை. நான் பாரசீக வரலாற்று ஆசிரியர்கள்[5] தந்துள்ள சைரஸைப் பற்றிய உண்மையான வரலாற்றையே தந்துள்ளேன்; மற்றவர்கள் கூட்டி, பெருக்கி இல்லா தவற்றையெல்லாம் அவர்மீது ஏற்றி வரைந்துள்ளனர். ஆகையால் நான் உங்களுக்குத் தருவது பாரசீக வரலாற்றாசிரியர்கள் தரும் உண்மையான விவரங்களே.

டெயோஸிஸ்[6]: அஸ்ஸீரியர்கள்[7] ஆசியாவின்[8] வட பகுதியில் 520 ஆண்டுகளாக ஆதிக்கஞ் செலுத்தி வந்தனர். அதன் பிறகு மிடிய மக்கள்[9] புரட்சி செய்த அந்த ஆதிக்கத்தினின்று விடுபட முயன்றனர். அவர்கள் ஒருங்கிணைந்து, ஆயுதம் ஏந்தி விடுதலையைக் கோரி, அஸ்ஸீரியர்களுடன் போரிட்டு, அவர்களது ஆதிக்கத்தினின்று விடுபட்டு வெளியே வந்துவிட்டனர். உடன் தங்களைச் சுதந்தர மக்களாக அறிமுகப்படுத்திக் கொண்டனர். அதை முன்னோடி

---

1. Persians 2. Lydia 3. Cyrus 4. Croesus 5. Persian Historians 6. Deioces 7. Assyrians 8. Asia 9. Medians

யாகக் கொண்டு, அஸ்ஸீரிய ஆதிக்கத்திலிருந்த மற்ற நாடு களும் புரட்சியில் ஈடுபட்டு, தத்தம் சுதந்தரத்தை அடையப் பெற்றனர். இந்த மாபெரும் மாறுதலை உண்டாக்கிய பெருமை டெயோஸிஸ்[1]என்பவரைச் சார்ந்ததே. டெயோஸிஸ் என்பார் பிரயோர்டிஸ்[2] எனும் மிடிய நாட்டுப்[3] பெருமக னாரின் தலை சிறந்த மகன் ஆவார். டெயோஸிஸ் சிறப் பான தகுதி வாய்ந்தவர்; அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்[4] எனும் பேராவல் கொண்டவர். அந்த நாட்டு மக்கள் நல்லது எது, தீயது எது, என்று பகுத்தறியும் தன்மை அற்றவராகக் காணப்பட்டனர். டெயோஸிஸ் நேர்மையாக நடந்து கொண்டது, அந்நாட்டு மக்களுக்கு அவரைப் பிடித்துவிட்டது. அவர் எந்தவிதச் சிக்கலையும் நியாயமாகத் தீர்த்து வைக்க வல்லவர் என்ற புகழ் எங்கும் பரவிற்று.

டெயோஸிஸுக்குத் தீர்ப்புக் கூறும் பணி மேலும் மேலும் வளர்ந்தது என்றால், அதன் பொருள் நாட்டில் குற்றங்கள் கொலைகள் அதிகரித்து விட்டன என்பதே. ஆகவே, அந்நாட்டிற்குத் தலைவர் ஒருவரை நியமிக்க மக்கள் குழு ஒன்று கூடி, அத்தகைய தலையாய மனிதர் டெயோஸிஸே என்ற ஒருமுகமான முடிவுக்கு வந்தனர். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு! டெயோஸிஸ் மிடிய நாட்டின்[5] தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

முதலில் மிடிய மக்களுக்கு மிகச் சிறந்த நகரம் ஒன்றை நிர்மாணிக்க ஏற்பாடுகள் செய்தார். அதன்படி எக்படனா[6] எனும் பெயர் கொண்ட நகரம் நிர்மாணிக்கப்பட்டது. சுற்றிலும் தெருக்களும், நடுவில் அரண்மனையும் இருக்கு மாறு திட்டமிட்டுக் கட்டப்பட்டது. அதன் ஐந்து சுற்றுப் புறங்களும் ஐவகை வர்ணங்கள் அடிக்கப்பட்டு விளங்கின. முதலாவது வண்ணம் வெண்மை, இரண்டாவது கறுப்பு, மூன்றாவது சிவப்பு, நான்காவது நீலம், ஐந்தாவது செம் மஞ்சள். இச் சுற்றுப் புறங்கள் யாவும் அரசரின் இராணுவம்

---

1. Deioces 2. Phraortes 3. Medians 4. Power Monger 5. Media 6. Ecbatana

இருக்கும் இடமாகும். இச்சுற்றுப் புறங்களை அடுத்து தான் மக்கள் வாழும் தெருக்களும், இல்லங்களும் காணப் பட்டன.

டெயோஸிஸின் அரசாட்சி போற்றக்கூடிய நிலையில் அமைந்துவிட்டது. தவறு செய்தவர்கள் தண்டிக்கப் பட்டனர். ஒற்றர்கள் வேவு பார்த்த வண்ணம் இருந்தனர்.

டெயோஸிஸ் 53 ஆண்டுகள் அரசாண்டார். மிடிய நாட்டினை ஒன்றுபடுத்த மிகவும் பாடுபட்டார்—பூஸே[1] பரதஸேனி,[2] ஸ்ட்ருஷாடே[3] அரிசாண்டி[4], பூடி,[5] மேஜி[6] ஆகியவர்களை ஒன்றுபடுத்த முயன்றார்.

டெயோஸிஸ் இறந்தவுடன், அவர் மகன் பிரயோர்டிஸ்[7]— டெயோஸிஸின் தந்தையின் பெயரைக் கொண்டவர்— அரசரானார். டெயோஸிஸ் மீடிய நாட்டில் மட்டும் தம் அரசாட்சியை நிலைநிறுத்தினார். ஆனால் அவர் மகன் பிரயோர்டிஸ் பாரசீகத்தையும்[8] வென்று தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார். அதுதான் அவர் போர்மேற் சென்ற முதல் நாடு. இவ்விருநாடுகளின் கூட்டுறவால் ஆசியாவில்[9] உள்ள வேறு நாடுகளையும் வெல்லப் போர் மேற்சென்றார்; இறுதியாக அவர் அஸ்ஸீரியர்களை[10] எதிர்த் தார். ஆனால் அஸ்ஸீரியர்கள் முழுவேகத்துடன் எதிர்த் துப் போரிட்டனர். அப்போரில் பிரயோர்டிஸும், அவரு டைய வீரர்களும் கொல்லப்பட்டனர்.

பிரயோர்டிஸை அடுத்து அவர் மகன் ஸையக்ஸரிஸ்[11]— டெயோஸஸின்[12] பெயரன்— அரியணை ஏறினார். அவர் அரியணை ஏறியவுடன் தொடங்கிய முதல் பணி அஸ்ஸீரி யரைப் போரில் வெல்வதாகும். தம் தந்தையைக் கொன்ற அந்நாட்டினரைப் பழிக்குப் பழி வாங்க அவர் கைகள் துடித்துக் கொண்டிருந்தன. ஆனால், எதிர்பாராதவிதமாக, சித்தியர்கள்[13] மிடிய நாட்டை[14] வென்று ஸையக்ஸரிஸ்

---

1. Busae 2. Parataseni 3. Struchates 4. Arizanti 5. Budii 6. Magi 7. Phraortes 8. Persia 9 Asia 10. Assyrians 11. Cyaxeres 12. Deioces 13. Scythians 14. Media

இருந்த இடத்துக்கு வந்து, அவரை நாடு கடத்தி, ஆசியா முழுவதையும் தம் ஆட்சிக்குள் கொண்டு வந்தனர்.

சித்தியர்கள்[1], அஸ்கலான்[2] எனும் இடத்தில் இருந்த கோயிலைக் கொள்ளை அடித்தனர். அதன் காரணமாக, அக் கோயிலின் பெண் தேவதை அவர்களுக்கு ஒரு கடுஞ் சாபத்தைக் கொடுத்து விட்டது. அச்சாபத்தால் அவர்கள் யாவருக்கும் பெண் நோய் பீடித்துவிட்டது. அவர்களும் அவர்களின் சந்ததியார்களும் அந்நோயால் இன்றும் அவதிப்படுவதைக் காணலாம். அத்தகைய நோயால் பீடிக் கப்பட்டவர்கள் எனாரீஸ்[3] என்று சித்தியர்களாலேயே வழங்கப்படுகின்றனர். சித்தியர்கள் 28 ஆண்டுகள் ஆசியாவை ஆண்டனர்.

ஒரு நாள் ஸையக்ஸரிஸும், மிடிய நாட்டு மக்களும் சித்தியர்களை விருந்துக் கழைத்து, மது பானத்துடன் நஞ்சு கலந்து கொடுத்து, அவர்களைக் கொன்று, ஆசிய நாட்டைத் திரும்பப் பெற்றனர்.

ஸையக்ஸரிஸ் 40 ஆண்டுகள் அரசாண்டு இறந்து விட்டார். அதற்குப் பிறகு அவர் மகன் அஸ்டியகெஸ் அரியணை ஏறி அரசாளத் தொடங்கினார்.

அஸ்டியகெஸ்[4] : ஸையக்ஸரஸின் மகனான அஸ்டிய கெஸ் அரச பதவியில் அமர்ந்தார். அவருக்கு மந்தனே[5] எனும் பெயர் கொண்ட மகள் ஒருத்தி இருந்தாள். அவள் சிறுமி. ஓர் இரவு, அஸ்டியகெஸ், தம் மகள் மந்தனேயால் ஆசியா முழுவதும் வெள்ளக் காடாக ஆக்கப்படுவதாகக் கனவு ஒன்று கண்டார். அதன் பொருள் யாதென மேஜி களை[6]— குறி சொல்பவர்களைக்— கேட்டார். அவர்கள் கூறிய விளக்கத்தைக் கேட்டு உள்ளம் நடுங்கினார். அதைத் தம் மனத்தில் வைத்துக் கொண்டு, தம் மகளுக்குரிய மணப் பருவம் வந்ததும், மிடிய நாட்டு மருமகனைத் தேடாமல் பாரசீக நாட்டில்[7] உள்ள கேம்பைஸிஸ்[8] எனும் பெயர் கொண்ட பெருமகனார்க்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

---

1. Scythians 2. Ascalon 3. Enarees 4. Astyages 5. Mandane 6. Magi 7. Persia 8. Cambyses

மந்தனேயும்[1] காம்பைஸிஸூம்[2] திருமணம் செய்து கொள்ளும் ஓராண்டு முன்னர் மீண்டும் அஸ்டியகெஸ்[3] கனவு ஒன்று கண்டார். அதில் அவள் யோனியிலிருந்து ஒரு நீண்ட செடி வளர்ந்து, அது ஆசியா முழுவதும் படர்ந்து செல்வதாகக் கனவு வந்தது. இதன் பொருள் யாது என்று மேஜி[4]களைக் கேட்டார் அஸ்டியகெஸ். அதற்கு அவர்கள் விடையாக "உங்கள் மகளின் மகன் உங்களுடைய அரச பீடத்தை அபகரித்துக்கொண்டு, ஆசியா[5] முழுவதும் அவனே அரசாட்சி செய்வான்," என்று விளக்கம் தந்தனர்.

மந்தனேயுக்கும் கேம்பைஸிஸிற்கும் திருமணம் ஆகி, அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அஸ்டியகெஸ் தம் சொந்த பாதுகாவலரை அழைத்து—ஹர்பகஸ்[6] என்பது அவன் பெயர்—"உடன் இந்தக் குழந்தையை எடுத்துச் சென்று எவருமற்ற மலைப்பிரதேசத்தில் பாறைமீது வைத்துக் கொன்றுவிடு. அது உடன் இறந்து போகட்டும். இல்லையேல், நான் உன்னை இவ்வாளால் வெட்டிவிடுவேன்," என்று எச்சரித்தார் அஸ்டியகெஸ். அப் பாதுகாவலனும் அவ்வாறே செய்வதாக வாக்களித்துக் குழந்தையை எடுத்து ஓரிடத்தில் வைத்தான்.

மித்ரடேடிஸ்[7] : அப்பொழுதுதான் மித்ரடேடிஸ் எனும் பெயர் கொண்ட ஆட்டிடையன் ஒருவன் அங்குத் தற்செயலாக வந்தான். மித்ர[8] என்றால் தலைப்பாகை[9] என்று பொருள்; அதை அணிபவர் மித்ரடேடிஸ் எனப் பட்டனர். ஹர்பகஸ் செய்யப்போகும் செயலைக் கேட்டுத் துணுக்குற்று, அவ்வழகு பொருந்திய குழந்தையைத் தான் எடுத்து வளர்ப்பதாகக் கூறி, தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையை ஹர்பகஸிடம் கொடுத்துவிடுவதாக வாக்களித்துத் தன் வீட்டுக்குச் சென்றான். அவ் ஆட்டிடையன் வீட்டினுள் நுழைந்ததும், அப்பொழுதுதான் தன் மனைவி ஓர் இறந்த குழந்தையைப் பெற்றெடுத்ததாகத் தெரிந்து கொண்டான். தான் கொணர்ந்த உயிருள்ள குழந்தையைத் தன் மனைவி பக்கத்தில் விட்டு விட்டு, தன் மனைவிக்குப்

---

1. Mandane 2. Cambyses 3. Astyages 4. Magi 5. Asia 6. Harpagus 7. Mitradates 8. Mitra 9. Turban

பிறந்த இறந்து விட்ட குழந்தையை ஹர்பகஸிடம்[1] கொடுத்து விட ஓடோடிப் போனான். ஹர்பகஸும் அவ்இறந்த குழந்தையை வாங்கி, அதை வெட்டி, முன்கொணர்ந்த குழந்தையின் அங்கிகளையே போட்டு, அஸ்டியகெஸிடம் எடுத்துச் சென்றான். அவ் ஆட்டிடையனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஒன்று அரச குடும்பத்தில் பிறந்த குழந்தை தனக்குக் கிடைத்தது. இரண்டாவது, தன் இறந்து போன சாதாரண குழந்தைக்கு அரசமரியாதையுடன் புதைக்கும் சடங்கு நடைபெறப் போகிறது என்பது. அதனால்தான் ஆட்டிடையனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

பத்தாண்டுகள் உருண்டோடின. ஆட்டிடையன், மித்ரடேடிஸ்[2] வளர்த்த மகனும் மற்றப் பிள்ளைகளும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அச் சிறுவன் தான் அரசனாக நடிப்பதாகவும், மற்றவர்கள் மந்திரி தளபதி ஆகியவர்களாக நடிக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்து கொண்டான். அதில் அர்டம்பரெஸ்[3] என்பவரின் மகன் சரியாக நடிக்காத காரணத்தால், அவனுக்குக் கசையடி கொடுக்க வேண்டும் என்று அந்நடிகர் அரசன் கூறி, சட்டையை அவிழ்த்து முதுகில் கசையடியையும் தந்தான். அடி பலமாக விழுந்ததால், கூக்குரலிட்டுக்கொண்டு, அச் சிறுவன் தன் தந்தை அர்டம்பரெஸிடம் ஓடி முறையிடவே, அத் தந்தையும் அச்செய்தியை அரசரிடம் தெரிவித்தான்.

உடன் அச்சிறுவன் அரசர் அஸ்டியகெஸின்[4] முன் கொண்டு வரப்பட்டான். "சிறுவனே! இவனை ஏன் இவ்வாறு தோல் புடைக்கும்படியாக அடித்தாய்?" என்று கேட்க, அதற்குச் சிறுவன், "நாங்கள் ராஜாங்க விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். இவன் தன் பணியைச் சரிவரச் செய்யவில்லை. சோம்பேறித்தனத்துடன் நின்று கொண்டிருந்தான். ஒரு தளபதி வாளாக நின்று கொண்டிருந்தால், இராச்சியம் என்னாவது? அதனால் அரச தண்டனையாக அவனுக்குக் கசையடி கொடுத்தேன். அதில் என்ன தவறு?" என்று மிடுக்காகப் பதில் கூறினான்.

---

1. Harpagus 2. Mithradates 3. Artembares 4. Astyages

அச்சிறுவன் பதில் கூறின முறையில் அரசருக்குச் சற்றே ஐயம் வந்து விட்டது. "ஓர் ஆட்டிடையன் மகன், அரசனைப்போல் பேசி நடிப்பதென்றால், உள்ளுக்குள் ஏதோ மாறாட்டம் நேர்ந்துள்ளது. இதை விசாரித்து அறிய வேண்டும்," என்று தம் ஆள்களைக் கூப்பிட்டு அவ் ஆட்டிடையன் மித்திரடேடிஸைத் தன் முன் உடன் கொணர்ந்து நிறுத்துமாறு கட்டளையிட்டார்.

மித்ரடேடிஸ் முதலில் அச்சிறுவன் தன் மகனே என்று கூறினாலும், அஸ்டியகெஸ் தம் காவலர்களிடம், "இவனை உள்ளே தள்ளி உதைத்துச் சூடு போடுங்கள்," என்று கட்டளையிட்டதுமே, அக்காவலர்கள் அவ் ஆட்டிடையனை அடிக்க, வலிபொறுக்க முடியாமல், நடந்த வரலாற்றை உண்மையாகக் கூறிவிட்டான். தன் மனைவி பிரசவித்த இறந்த குழந்தையைக் கொடுத்து, அதற்குப்பதில் உயிருள்ள அச்சிறுவனை வாங்கியதாகவும், ஆனால் அது எவருடைய குழந்தை என்பது தனக்குத் தெரியாது என்றும் கூறினான்."

விளக்கவுரை:

லிடியா[1]: இந்நாடு கிரேக்க நாட்டின் ஒரு பகுதியாகும். இந்நாடு லைடஸ்[2] எனும் பெயர் கொண்ட மன்னரால் நிர்மாணிக்கப்பட்டதால், லிடியா எனும் பெயரால் வழங்கப்பட்டது. மற்றும் பக்கம் 51, குறிப்பு-1 பார்க்கவும்.

சைரஸ்[3]: இவ்வரசர் வாழ்ந்து வந்த காலம் கி. மு. 579-529 அதாவது 50 ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். மற்றும் பக்கம் 84, குறிப்பு-1 பார்க்கவும்.

டெயோஸிஸ்[4]: இவர் மிடிய நாட்டுப்[5] பெருமகனாரான பிரயோர்டிஸின்[6] மகன் ஆவார். இவர்தாம் சுதந்தர மிடிய நாட்டின் முதல் அரசர். அஸ்ஸீரியர்களிடமிருந்து[7] பிரிந்து சுதந்தரமாக வாழ முற்பட்டனர் மிடிய நாட்டு மக்கள். டெயோஸிஸ் ஆட்சி செய்த காலம் கி.மு. 709-656 அதாவது 53 ஆண்டுகள் நாட்டை ஆண்டார். இவர் எக்படன[8] எனும் புதியநகரை நிர்மாணித்தார். அந்நகரிலே அரசரின் அரண்மனை கட்டப்பட்டது.

---

1 Lydia 2. Lydus 3. Cyrus 4. Deioces 5. Media 6. Phraortes 7. Assyrians 8. Ecbatana

இவர் கி.மு. 656-ல் இறந்ததும்,இவர் மகன் பிரயோர்டிஸ் II[1] அரியணை ஏறினார்.

எக்படன: இந்நகரம் டெயோஸஸினால் நிர்மாணிக்கப்பட்டது. இது மிடிய மக்களின் புதிய தலைநகரம். இதன் மற்றொரு பெயர் ஹமதன் இது ஒரன்டே மலையின் அடிவாரத்தில் இருப்பிடத்தைக் கொண்டிருந்தது. அதன் பிறகு இந்நகரமே பாரசீக[2], பார்த்திய[3] அரசர்களின் கோடைக்கால இருப்பிடமாக விளங்கலாயிற்று.

பூஸே...மேஜி: இவை மிடிய நாட்டில் சிறு பகுதிகளாக விளங்கியவை. பூஸே[4], பரதஸேனி[5], ஸ்ட்ருஷாடெஸ்[6], அரிசான்டி[7], பூடி[8], மேஜி[9] ஆகியவர்கள் மிடிய நாட்டினைச் சார்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். டெயோஸிஸ், இவர்கள் யாவரையும் ஒன்றிணைக்கவும், சமாதானத்துடன் வாழவும் அரும்பாடுபட்டதாக் ஹிராடடஸ் கூறுகிறார். இவர்களுள் மேஜி என்பவர் குறி சொல்பவர் ஆவர்.

பிரயோர்டிஸ்: டெயோஸஸ் இறந்தவுடன், பிரயோர்டிஸ், தம் தந்தையின் அரியணைமீது அமர்ந்தார். இவர் பாரசீகத்தை வென்றார். இறுதியில் அஸ்ஸீரியாவின்[10] தலைநகரான நினேவா[11] மீது படையெடுத்துச் சென்று, அதை முற்றுகையிடும் பொழுது இவர் கொல்லப்பட்டார். இவர் ஆண்ட காலம் கி. மு.650-634 அதாவது 22 ஆண்டுகள் அரசாட்சி செய்தார்.

ஸையாக்ஸரிஸ்:[12] இவர் பிரயோர்டிஸ் அரசரின் மகன் ஆவார். தம் தந்தை இறந்தவுடன் கி. மு. 634-ல் அரியணை ஏறினார். இவர் மிடிய[13] நாட்டு அரசர்களுள் வீரம் படைத்தவர். இவர் அஸ்ஸீரியர்கள், சித்தியர்கள்[14], அல்யாட்டிஸ்[15] என வழங்கப்பட்ட லிடியாவின்[16] அரசர் ஆகியவர்களுடன் போர் செய்தார். இவர் கி. மு. 594-ல் இறந்து விட்டார். ஆக இவர் ஆண்ட காலம் கி. மு. 634-594 அதாவது 20 ஆண்டுகள் ஆகும். நாடு கடத்தப்பட்ட 20ஆண்டுகளையும் சேர்த்தால் முழுவதும் 40 ஆண்டுகள் என ஹிராடடஸ் கூறுகிறார் போலும். அல்யாட்டிஸ் ஆண்ட காலம் கி.மு. 617-560 அதாவது 57 ஆண்டுகள் ஆண்டார்.

---

1. Phraortes II 2. Persia 3. Parthia 4. Busae 5. Parataceni 6. Strushates 7. Arizanti 8. Budii 9. Magi 10. Assyria 11. Nineveh 12. Cyaxares 13. Media 14. Scythians 15. Alyattes 16. Lydia

சித்தியர்கள்[1]: இவர்கள் ஹிராடடஸ் கூற்றின் படி, ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்த நாடோடி இனத்தவர் ஆவர். இவர்கள் ஆட்டிடையர்கள், மாடு மேய்ப்பவர்கள். இவர்கள் தங்கள் கால்நடைகளின் தீவனத்துக்காக ஆங்காங்கு நகர்ந்து கொண்டேயிருப்பர். இவர்கள் பெட்டி போன்ற அமைப்பை வீடாக அமைத்துத் தங்களுடன் எடுத்துச் செல்வர். இவர்கள் கிரேக்கர்களுடன் வாணிகம் நடத்தி வந்தனர். இவர்கள் இறுதியில் சர்மேஷிய மக்களால் வெல்லப்பட்டனர்.

அஸ்கலான்[2]: இது பிலிஸ்டைன்[3] மக்களின் முக்கிய நகரங்களுள் ஒன்று. இங்கு அம்மான் கோயில்[4] மிகப் புனிதமானதாகக் கருதப்பட்டது. அக்கோயிலில் உள்ள செல்வத்தைச் சித்தியர்கள் கொள்ளையிட்டனர். அதன் காரணமாக அக்கோயிலின் பெண்தெய்வம் அவர்களுக்குக் கடுஞ்சாபம் கொடுத்து விட்டது. அதன்படி, சித்தியர்களுள் பெரும்பாலோர் பெண்நோய் பீடித்து அவதிப்பட்டனர்.

எநாரீஸ்[5]: பெண்நோயால்[6] பீடிக்கப்பட்டு அவதியுறும் சித்தியர்கள் எநாரீஸ் என்று வழங்கப்பட்டனர். இதில் உள்ள நாரி எனுஞ் சொல், நாரிகை என்ற தமிழ்ச் சொல்லின் சிதைவே. நாரிகை என்றால் பெண் என்று பொருள்படும் (எ-டு) அர்த்த நாரி, நாரீ பாகன். ஆக, பெண்நோய் என்று பொருள்படும் சொல் எந்நாரீ என்றே வழங்கப்பட்டது. தமிழிலிருந்து கிரேக்கம் கொண்ட சில தமிழ் சொற்களுள் இதுவும் ஒன்று.

> "நாணா ளவனையிந் நாரிகை"
>
> —(பரிபாடல் : 12—56)

> "நாரியரில் லையிஞ் ஞாலமே ஏழும் என்ன"
>
> — (கம்பராமாயணம் : கைகேசி சூழ் : 22)

இதுபோன்று பல தமிழ்ச் சொற்கள் கிரேக்கத்தில் புகுந்தன. தமிழிலிருந்து கிரேக்கத்தில் புகுந்த சொற்களின் விவரம் "தோற்றுவாய்", பக்கம் 19 பார்க்கவும்.

அஸ்டியகெஸ்[7]: அஸ்டியகெஸ், ஸையக்ஸரஸின்[8] மகன் ஆவார். அவர் தம் மகள் மந்தனே[9]வுக்குப் பிறந்த ஆண்

---

1. Scythians 2. Ascalon 3. Philistine 4. Ammon Temple 5. Enarees 6. Female Disease 7. Astyages 8. Cyaxeres 9. Mandane

குழந்தையை எவ்வாரேனும் கொன்று விடச் சொன்னதாகவும், அதையெடுத்துச் சென்ற ஹர்பகஸ்[1] அதைக் கொல்லாமல், வேறு ஓர் இறந்த குழந்தையை வெட்டி அஸ்டியகெஸிடம் காட்டியதாகவும், பின்னர் அச் செய்கை வெளிப்பட்டு, எவ்வாறு ஹர்பகஸ் தன் மகன் ஊனையே உண்ணச் செய்த தாகவும், அதையறிந்த ஹர்பகஸ் பழிக்குப் பழிவாங்கி விட்ட தாகவும் ஆக இவற்றின் விவரங்களே இங்குக் கூறப்படுவன வாகும்.

இறுதியில் அஸ்டியகெஸ் தம் பெயரன் சைரஸால் நாடிழக்கச் செய்யப்பட்டு, அரசபதவி பிடுங்கப்பட்டு, அவரின் அடிமை யாகவே இருந்து தமது வாழ்நாளைக் கழித்து, அவரிடமே இறந்தார். அவர் ஆண்டகாலம் கி.மு. 594—559 ஆக 35 ஆண்டுகள் அரசாட்சி செய்தார்.

மந்தனே[2] : அஸ்டியகெஸின் மகள். அவளை மிடிய நாட்டு[3] வாசியை மருமகனாகத் தேர்ந்தெடுக்காமல், கேம்பைஸீஸ் எனும் பெயர் கொண்ட பாரசீக வேந்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

கேம்பைஸிஸ்[4] : அஸ்டியகெஸின் பாரசீகநாட்டு மருமகன்; மந்தனேயின் கணவன். இவர்களுக்குப் பிறந்த குழந்தையே சைரஸ்[5] ஆவான். சைரஸ் தன் பாட்டனாரையே போரில் வென்று, சிறைபிடித்து, அடிமையாகத் தன் அவையிலேயே வைத்துக் கொண்டான்.

ஹர்பகஸ் : இவன் அஸ்டியகெஸின்[6] நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். இவன்தான் குழந்தை சைரஸைக் கொல்லாமல், ஓர் ஆட்டிடையனிடம் கொடுத்து, அவனுடைய இறந்த குழந்தையை எடுத்து, வெட்டி, அதை அஸ்டியகெஸுக்குக் காட்டி ஏமாற்றி விட்டான். இவ்வாறு ஏமாற்றியதற்காக, அஸ்டியகெஸ், இவனுடைய மகனையே கொன்று 'பிள்ளைக் கறியமுது' இட்டான். அதையறிந்த ஹர்பகஸ் பழிக்குப் பழிவாங்க வன்மங் கொண்டு, சைரஸின் ராணுவத்துக்குத் தலைமைதாங்கி, அஸ்டியகஸைப் போரில் தோல்வி பெறச் செய்து அடிமையாக்கிச் சைரஸிடமே கொண்டு வந்தான். சைரஸின் பாட்டனாரான அஸ்டியகெஸ் தம் இறுதி நாள் வரை சைரஸிடமே இருந்து உயிர் விட்டார்.

1. Harpagus 2. Mandane 3. Median 4. Cambyses 5. Cyrus 6. Astyages

மித்ரடேடிஸ்[1]. இவர் ஓர் ஆட்டிடையர். ஹார்பகஸ் எடுத்து வந்த குழந்தை சைரஸைத் தன் மனைவியின் பக்கத்தில் விட்டு விட்டு, தன் மனைவி பிரசவித்த இறந்த குழந்தையை எடுத்து வந்து ஹார்பகஸிடம் கொடுத்தார். அவர் நோக்கம் முதலாவது தம் மனைவிக்கு உயிருள்ள குழந்தை கிடைத்தது; இரண்டாவது, தன் இறந்துவிட்ட குழந்தைக்கு அரச மரியாதையுடன் ஈமக்கிரியைகள் நடைபெறும். பின்னர் அஸ்டியகெஸ் இவரைப் பயமுறுத்திக் கேட்கவே, உண்மையை ஒப்புக் கொண்டு, தம் வளர்ப்பு மகனாக இருந்த சைரஸை, அஸ்டியகெஸிடமே கொடுத்து விட்டார். பின்னர், சைரஸ் அவருடைய பெற்றோர்களாகிய கேம்பைஸிஸ்—மந்தனேயிடம் அனுப்பப்பட்டு விட்டார்.

அர்டம்பரெஸ்[2] : ஆட்டிடையர் ஒருவரின் மகனாக சைரஸ் வளர்ந்துவரும் பொழுது, அச் சைரஸுடன் விளையாடிய சிறுவன் ஒருவனின் தந்தை. இவர் அஸ்டியகெஸ் அரசரிடம் பணியாற்றி வந்தார். விளையாட்டில் தான் அரசனாக நடித்ததால், அர்டம்பரெஸின் மகனைக் கசையால் நையப்புடைத்து விட்டான். அதன் காரணமாக அச் சிறுவனின் முதுகில் புண் ஏற்பட்டு விட்டது. அச்சிறுவன் தன் தந்தையிடம் சொல்லவே, அத்தந்தை அர்டம்பரெஸ் அரசர் அஸ்டியகெஸிடம் சென்று முறையிட்டான். உடன் சிறுவன் சைரஸ் அரசவைக்கு வரவழைக் கப்பட்டு, அவனை வளர்த்த தந்தை மித்ரடேடிஸ் கூறிய வாக்கின்படி, அச் சிறுவனே சைரஸ் என்று தெரிந்து கொண்டு, சைரஸ் அங்குவரக் காரணமாயிருந்த, அர்டம்பரெஸுக்கும் அவன் மகன் சிறுவனுக்கும் வெகுமதிகள் பல கொடுத்து அனுப்பி வைத்தார் அரசர் அஸ்டியகெஸ். சிறுவன் சைரஸ் தன் தந்தை கேம்பைஸிஸிடம்[3] அனுப்பப் பட்டு விட்டான்.

---

1. Mithradates 2. Artembares 3. Cambyses

8. ஹர்பகஸ், சைரஸ்

“ஹர்பகஸ்[1] : அரசர் அஸ்டியகெஸ்,[2] ஹர்பகஸைக் கூப்பிட்டு, உண்மையைக் கூறுமாறு பயமுறுத்தினார். ஹர்பகஸும் நடந்த விவரங்களைக் கூறி, அக் குழந்தை அரச குழந்தை சைரஸ்[3] தான் என்றும் கூறினான். அஸ்டிய கெஸ், தாம் கோபம் கொண்டதாகக் காட்டிக் கொள்ள வில்லை. “நல்லது, இவன் உயிருடன் இருப்பது எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? இவன் என் பெயரன் அல்லவா?” என்று கூறிச் சென்றுவிட்டார். அதனால் அரசர் தம் உள்மனத்தில், ஹர்பகஸுக்குச் சரியான தண்டனை தர வேண்டும் என உறுதி கொண்டுவிட்டார்.

பிள்ளைக் கறியமுது அளித்தல்: உடன், அரசர் அஸ்டிய கெஸ், அன்று மாலை அரசவையில் ஒரு விருந்து நடப் பதாகவும், அதற்கு ஹர்பகஸும், அவன் மகனும் வரவேண்டும் என்று கூறி, அம்மகனைச் சிறிது முன் கூட்டியே அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டார். ஹர்பகஸுக்குப் பெருமகிழ்ச்சி— தனக்கும் தன் மகனுக்கும் அரசவை விருந்து கிடைக்கப் போகிறதே என்று.

ஹர்பகஸின் மகன்— 13 வயதுச் சிறுவன்— சிறிது முன்னதாக, அரசரின் கட்டளைப்படி, அரசவைக்கு அனுப் பப்பட்டு விட்டான். அச்சிறுவன் தனியே அழைத்துச் செல்லப்பட்டு, கொல்லப்பட்டான். அவனது மாமிசத்தை ஒரு கிண்ணத்தில் வைத்து, அதன்மீது வாசனைப் பண்டங்கள் தூவி, மற்றொரு கிண்ணத்தில் அவன் முகம், கால், கை

---

1. Harpagus 2. Astyages 3. Cyrus

முதலிய அங்கங்கள் வெட்டப்பட்டு மூடிவைக்கப் பட்டிருந்தன.

விருந்தும் நடந்தது. ஹர்பகஸுக்கு முதலில் முதல் கிண்ணத்திலிருந்த மாமிசம் பரிமாறப்பட்டது. அவன் அதைச் சிறிது உண்டான். "ஐயா, ஹர்பகஸ், இந்த ஊன் நன்றாக இருக்கிறதா? இந்த விலங்கின் மற்றப் பகுதிகளையும் பார்க்கிறீர்களா?" என்று கூறி, அடுத்த அறைக்கு அழைத்துச் சென்று, அங்குக் கிண்ணத்தில் மூடிவைக்கப் பட்டிருந்த அவன் மகனின் துண்டிக்கப்பட்ட மற்ற உடற் பகுதிகளும், முகமும் காட்டப்பட்டன. ஹர்பகஸ் உள்ளூர மிகவும் விசனித்தான்; ஆயினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "இதை என் மனைவிக்கு எடுத்துச் செல்கிறேன். அவள் மிகவும் மகிழ்ச்சியடைவாள்" என்று கூறி வீட்டிற்கு எடுத்துவந்து, அவற்றைப் பூமியில் குழி தோண்டிப் புதைத்தான். தன் பிள்ளைக்கறியையே தான் உண்ணுமாறு ஹர்பகஸ் தண்டிக்கப்பட்டான்.

அரசரைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று ஹர்பகஸ்[1] சபதம் செய்துகொண்டான். "உயிர்குப் பதில் உயிர், அல்லது தன் அரசபதவி இழந்து நாட்டை விட்டு ஓட வேண்டும்; ஓடி அலைய வேண்டும்; அலைந்து மடிய வேண்டும்." இது தான் ஹர்பகஸ் செய்த சபதம்.

இதற்குள் அஸ்டியகெஸ்,[2] மேஜி[3] எனும் குறி சொல்பவர்களை அணுகி, "நீங்கள் முன்னர் கூறியது கவனமிருக்கிறதா? சிறுவன் சைரஸ் ஆசியாவுக்கெல்லாம் அரசனாக வருவான் என்று நீங்கள் கூறியதை நினைவுபடுத்திப் பாருங்கள். இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்?" என்று கூறினார் அஸ்டியகெஸ். அதற்கு அக் குறிசொல்பவர்கள், "அரசே, இவன் விளையாட்டில் அரசனாக நடித்துவிட்டான். மறுமுறை வாழ்க்கையில் அவ்வாறு அரசனாக வருவதென்பது முடியாத காரியம்," என்று அரசருக்குப் பதில் கூறி அனுப்பிவிட்டனர். "அவனைப் பெற்றோர்களிடம் அனுப்பிவிடுங்கள்," என்றும் கூறினர்.

---

1. Harpagus 2. Astyages 3. Magi

அஸ்டியகெஸும் அவ்வாறே அச்சிறுவன் சைரஸைத் தம் மகள் மந்தனேயிடம் அனுப்பிவிட்டார். மந்தனேயின் கணவர்தாம் அரசர் கேம்பைஸிஸ்.

மந்தனேயும், கேம்பைஸிஸும்,[1] இறந்ததாகக் கருதப் பட்ட தங்கள் மைந்தனைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு, உள்ளம் பூரித்து, அவனது உச்சிமோந்து, நன்றாக வளர்த்து வந்தனர். அச்சிறுவன் பெயர்தான் சைரஸ். சைரஸும் அரச பரம்பரையில் பிறந்தவனாதலால், போர்வீரத்திலும், வில் வித்தையிலும் சிறந்து விளங்கினான். மற்றும் வாலிப வயதை அடைந்தான்.

சைரஸ்:[2] பாரசீகத்தில்[3] சைரஸ் சிறந்த வீரப்பெருமக னாக, வளர்ந்தார். ஹர்பகஸ்[4] சைரஸை நட்புக்கொண்டு, அவர்மூலமாக அஸ்டியகெஸ் அரசரைப் பழிவாங்கத் திட்ட மிட்டான்.

ஹர்பகஸ் தனிப்பட்ட எப்பொருளையும் அனுப்பமுடி யாது. வழி முழுவதும் காவல் படை காத்துநிற்கின்றனர். ஆகையால் ஒருசில வேடர்களையழைத்து, முயல் ஒன்றைக் கொன்று, அதன்வயிற்றைக் கிழித்து, அதனுள் தான் எழுதிய கடிதத்தை வைத்து, தைத்து, அவ்வேடு வர்கள் மூலமாகச் சைரஸுக்கு அக்கடிதத்தைச் சேர்க்க ஏற் பாடுகள் செய்யப்பட்டன. வேடர்களையும், அவர்கள் அடித்த முயலையும் கண்ட காவலர்கள் அவர்களை வெளியே போக விட்டுவிட்டனர். அவ்வேடர் தலைவன், அம்முயலைச் சைரஸிடம் கொடுத்துவிட்டு, அம்முயலைக் கிழித்து சைரஸே அதன் வயிற்றில் உள்ள கடிதத்தை எடுத்துப் பார்க்குமாறு கூறினான். சைரஸும் அவ்வாறே செய்து, அக்கடிதத்தைப் படித்து, ஹர்பகஸின் கருத்தையறிந்து கொண்டார்.

அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: "ஹர்பகஸாகிய நான் தண்டிக்கப்பட்டு விட்டேன் — காரணம் உன்னைக் கொல்லாமல் உயிருடன் விட்டதற்காக. இனி நீதான் அஸ்டியகெஸை[5] வென்று பழிக்குப்பழி வாங்க

1, Cambyses 2. Cyrus 3. Persia 4. Harpagus 5. Astyages

வேண்டும். என் உதவி என்றும் உனக்கு உண்டு,'' என்று இருந்தது.

உடன் சைரஸ் பாரசீகர்களை[1] ஒன்று திரட்டி, அஸ்டிய கெஸ்மீது படையெடுத்துச் சென்றார். அப்படை அஸ்டிய கெஸின்[2] எல்லையை அடைந்ததும், ஹர்பகஸ் அப்படையின் தளபதியாக ஆனான். மிடியர்களும்[3] போர்புரிந்தனர். இருப் பினும் அவர்கள் பாரசீகப்படை முன்னர் நிற்கமுடிய வில்லை. ஹர்பகஸ் அப்படையின் தளபதி. இறுதியில் அஸ்டியகெஸ் தோல்வியடைந்தார். அஸ்டியகெஸ் சிறை பிடிக்கப்பட்டார்.

அப்பொழுது ஹர்பகஸ் அஸ்டியகெஸ்முன் தோன்றி, அவரைக் கண்டபடி ஏசி, அவமானப்படுத்தினான்.

அப்பொழுது அஸ்டியகெஸ் கூறினார்: "ஹர்பகஸ், நீயே எனக்குப்பதிலாக அரசனாக வந்திருக்கலாம். மிடியர் களின் மானமும் காப்பாற்றப் பட்டிருக்கும். அதை இழந்து, மாற்றான் ஒருவனை ஏன் அரசனாக ஆக்கினாய்? அப் பொழுதும் நீ அவனுக்கு அடிமைதானே? சுதந்தரமாக வாழ உனக்கு ஏன் தெரியவில்லை?'' என்றார்.

சைரஸ், தம் பாட்டனார் அஸ்டியகெஸைத் தம் அவையில் அவர் இறக்குமளவும் வைத்திருந்தார்—தன்னைக் கொன்று விடாமல், மேஜிகள்[4] கூறியபடி தம் தாய் தந்தை யரிடம் உயிருடன் அனுப்பியதற்கு நன்றிக்கடனாக.

அஸ்டியகெஸ் 35 ஆண்டுகள் ஆண்டார்.

சைராஸைப்[5] பற்றி மேலும் அடுத்துவரும் அத்தியாயங் களில் காணலாம்.''

விளக்கவுரை :

ஹர்பகஸ்[6] : அரசர் அஸ்டியகெஸின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். அஸ்டியகெஸைப் பழிக்குப்பழி வாங்கினான். ஹர்பகஸ், தம்மை ஏமாற்றினான் என்பதற்காக அரசர் அஸ்டியகெஸ் அவனுக்குப் பிள்ளைக்கறியமுதிட்டான். சைரஸ்

---

1. Persians 2. Astyages 3. Medians 4. Magis 5. Cyrus 6. Harpagus

அரசருக்கு இராணுவத் தளபதியாக அமைந்து, அஸ்டியகெஸை வென்று, சிறைப்படுத்தி, அவரை ஏளனம் செய்தான் என்பது தான் இங்குக் கூறப்பட்ட வரலாற்றின் சுருக்கம்.

இவ்வாறான பிள்ளைக்கறி அமுது சமைத்து உண்ட கதை சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்துள் காணப்படுகிறது. பெரியபுராணம் இயற்றிய சேக்கிழாரின் காலம் இரண்டாம் குலோத்துங்கன் காலமாகும். அதாவது கி.பி. 1113—1150 ஆகும்.

'' யாதும் அறியதில்லை இனி ஈண்ட அருளிச் செய்யும்'' என
நாதன் தானும் ''ஒரு குடிக்கு நல்ல சிறுவன் ஒருமகனைத்
தாதை அரியத்தாய் பிடிக்கும் பொழுதில் தம்மில் மனமுவந்தே
ஏதம் இன்றி அமைத்த கறியாம் இட்டுண்பது'' என மொழிந்தார்.

— (பெரியபுராணம், சிறுத்தொண்டநாயனார்-51)

'' உம்மைப்போல நீறிட்டார் உளரோ? உண்பீர்நீர்'' என்று,
செம்மைக்கற்பில் திருவெண் காட்டம்மை தம்மைக் ''கலந்திருத்தி
வெம்மை இறைச்சி சோறிதனில் மீட்டுப் படையும் எனப் படைத்தார்
தம்மை ஊட்டவேண்டி அவர் உண்ணப்புகலுந் தடுத்தருளி.''

— (பெரியபுராணம் : சிறுத்தொண்டர் : 78)

இங்குப் பக்தியின் மேலீட்டால் பிள்ளைக் கறியமுதுண்டார். ஆனால் கிரேக்க இலக்கியத்தில் வன்மம் காரணமாகப் பழி வாங்கும் நோக்கத்துடன்—பிள்ளைக் கறியமுது படைக்கப் பட்டது.

தன்மகனைத் தானே வெட்டிக் கறிசமைத்து உண்ணுதல் இயற்கைக்கு விரோதமானது (Most unnatural). எவரும் செய்ய ஒருப்படார். ஆனால் கிரேக்க நாட்டில் நடந்தது, தந்தை தன் மகனைக் கொல்ல வில்லை. ஆயினும் கொல்லப்பட்ட மகனின் ஊனைத் தெரியாமல் உண்டு, பின்னரே தெரிந்து கொண்டான். இது இயற்கைக்கு ஒத்துவருவது (Natural).

தமிழ்ப் புராணங்கள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே ஏற்பட்டன என்பது பலரது துணிபு. பெரியபுராண காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.

"The portions of the Puranas...were apparently compiled during the Gupta Age (320—520 A.D).

— (An Advanced History of India By Dr. R. C. Majumdar, P. 207)

ஆகையால் இங்குக் கூறப்பட்ட பெரியபுராணச் செய்தி கிரேக்க வரலாற்றிலிருந்து வந்த மாற்று உருவமே. கிரேக்க வாலாறு கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

மேஜி[1] : குறி சொல்பவர்கள். மிடிய நாட்டின்[2] ஒரு பகுதி மக்கள்.

சைரஸ்[3] : இவர் வாழ்ந்து வந்த காலம் கி.மு. 579—529 ஆக 50 ஆண்டுகள் ஆகும். இவருக்குப் பிறகு இவர் மகன் கேம்பைஸிஸ்[4] கி. மு. 529-ல் அரியணை ஏறினார். மற்றும் பக்கம் 84, குறிப்பு—1 பார்க்கவும்.

---

1. Magi 2. Media 3. Cyrus 4. Cambyses

9. பாரசீக மக்களின் பழக்க வழக்கங்கள்

"பின் வருவன பாரசீக மக்களின்[1] பழக்க வழக்கங் களாகும். எனக்குத் தெரிந்தவரை நான் அவற்றை விவரிக் கிறேன்.

சிலை செய்தல், கோயில் எழுப்புதல், பலிபீடம் அமைத்தல் ஆகியவை அவர்கள் ஒப்புக் கொண்டவை அல்ல. காரணம் அவர்கள் சமயம் கிரேக்க சமயம்[2] போன்றதன்று. ஜியுஸ்[3] கடவுள் வானராச்சியம் முழுவதையும் ஆண்டுக் கொண்டிருப்பவர். அவர்கள் சூரியன், சந்திரன், பூமி, நெருப்பு, நீர், காற்று ஆகியவற்றை வணங்குகின்றனர். இவையே அவர்களின் ஆதி தெய்வங்கள். பின்னர் அஸ்ஸீரி யர்களிடமிருந்தும்,[4] அரேபியர்களிடமிருந்தும்[5] மித்ரா[6] எனும் கடவுளை வணங்கக் கற்றுக் கொண்டனர்.

இனிச் சடங்குகளைப் பற்றிக் கவனிப்போம். அவர்கள் தங்கள் தெய்வங்களுக்கு நிவேதனம் (பலி) அளிக்கும் பொழுது, அவர்கள் எந்தப் பலி பீடத்தையும் நிர்மாணித்துப் பயன் படுத்துவதில்லை; தீ மூட்டுவதில்லை; புல்லாங்குழல் ஊதி ஒலி எழுப்புவது கிடையாது. மாலைகள் போடுவ தில்லை; சோற்றைப் பலீ பீடத்தில் இறைப்பதும் கிடையாது. இவை யாவும் நமக்குக் கைவந்த செயல்களே—சடங்குகளே. ஆனால் சடங்குகள் எவையேனும் செய்ய வேண்டின், கீழே இலைகளைப் பரப்பி வைக்கின்றனர். அவ்விலைகள் பசுமை

---

1. Persians 2. Greek Religion 3. Zeus 4. Assyrians 5. Arabians 6. Mitra

மாறாத நறுமண இலைகள்[1] ஆகும். மற்றும் அவ்இலைக் கொத்துகளைத் தலைமுடிகளில்—தலையணிகளில்[2]—செருகி வைத்துக் கொள்கின்றனர். தம் கடவுளுக்குப் பலியிட வேண்டிய விலங்கை, ஒரு தனியான இடத்துக்கு எடுத்துச் சென்று, அங்கு அரசனும் அரசியும் வாழப் பிரார்த்தனை செய்துவிட்டு—தம் சொந்த நலனுக்குப் பிரார்த்தனை புரியக் கூடாது—அவ்விலங்கைப் பலியிட்டு, சமைத்து, அவ் உணவிற்கு வாசனைப் பண்டங்கள் சேர்த்து—அதாவது இலவங்கம், ஏலம் முதலியவை இட்டு—அதை இலையில் முழுவதும் கொட்டிப் பரப்புகின்றனர், இது முடிந்ததும், மேகஸ்[3] எனப்படும் பூசாரி இனத்தவர்—இவர் அச்சடங்கின் தொடக்கம் முதல் இறுதிவரை இருப்பார்—ஏதோ மந்திரங்கள் போன்ற சொற்களை முணுமுணுப்பர். அச்சொற்கள் கூறப் பட்டவுடன், அவர்களின் கடவுள் அங்குத் தோன்றுவதாகக் கருதப்படுகிறது. சிறிது நேரம் கழித்து, அவ்விலங்கின் ஊனை இலையிலிருந்து எடுத்துத் தம் இட்டப்படி எது வேண்டுமாயினும் செய்வர்.

எல்லா நாள்களையும் விட, தன் பிறந்த நாளையே[4] ஒவ்வொரு பாரசீகரும்[5] விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம். மிக்க செல்வந்தராயின், எருது, குதிரை, ஒட்டகம் அல்லது கழுதை—இவற்றுள் ஏதேனும் ஒன்றை வெட்டிச் சமைத்து, வாசனைப் பண்டங்களிட்டு உண்பர். ஏழை யாயின், சிறிய விலங்குகளை அவ்வாறே செய்து உண்பர். முக்கியமான பதார்த்தங்கள் சிலவனவே. ஆனால், பேரிந்து பழவகைகள், சிறு தின்பண்டங்கள் ஆகியவை பல கோப்பை களில் வைக்கப்படும். காரணம், கிரேக்கர்கள் உண்ணும் பொழுது எதையும் மீதம் வைக்காமல், மேசைகள் பசியோ டிருக்க,[6] உண்டு விடுவர் என்றும், ஆனால், பாரசீகர்கள் நிறைய உணவு வகைகளை வைப்பதால், எல்லாவற்றையும் உண்டு விடாமல், பலவற்றை மேசைமீதே வைத்து விடுவர் என்றும் கூறப்படுகிறது. மேசைமீது தின்பண்டங்கள் மீதி இருப்பின், மேசைக்குப் பசி எடுக்காதல்லவா? அவர்கள் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புவர்,

---

1. Myrtle leaves 2. Head Dress 3. Magus 4. Birth Day 5. Persians 6, Keep the Table hungry

மதுபானம்[1] அருந்துவதில் விருப்பம் மிகுதியும் உடையவர். ஆனால், குடித்து விட்டு, ஒருவர் மற்றவர் எதிரில் வாந்தியெடுப்பது அநாகரிகமாகக் கருதப்பட்டது.

ஏதாவது ஒரு செயலில் முடிவு எடுக்கவேண்டுமென்றால், அப்பிரச்சினையை, நன்றாக மதுபானம் செய்திருந்த போது, அவர்முன் வைப்பர்; அதைப்பற்றி விவாதிப்பர்; அப்பொழுது அவ்வீட்டின் உரிமையாளர் அவர்களுக்குள் நடந்த விவாத விவரங்களை, மறுநாள் அவர்கள் குடிபோதையற்ற சாதாரண நிலையில் இருக்கும் பொழுது எடுத்துரைப்பார். அப்பொழுதும், அப்பிரச்சினைக்குரிய தீர்வுகள் அங்கீகரிக்கப்பட்டால், அதுவே தீர்மானமாகக் கொள்ளப்படுகிறது. இல்லையெனில், நிராகரிக்கப்பட்டுவிடும். மாறாக, அவர்கள் சுயநிலையில் விவாதிக்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் அடுத்த நாள் குடிபோதையில் உள்ளபோது வைத்து, அங்கீகரிக்கப்பட்டால், அதுவே தீர்மானமாக எடுத்துக் கொள்ளப்பட்டுவிடுகிறது.

பாரசீகர்கள் தெருவில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது, அவர்கள் செய்யும் வணக்கத்தின் முறைகளைக் கொண்டு, எதிர்ப்படுபவர், தம் நிலையைச் சார்ந்தவரா, அல்லது கீழானவரா என்று தெரிந்து கொள்ளலாம். காரணம் அவர்கள் சொற்கள் கொண்டு விசாரிப்பதில்லை. ஆனால், பார்த்தவுடன் முத்தமிடுவர்—தங்களுக்குச் சமமானவராயின் உதட்டிலும், சற்றுத் தாழ்ந்தவராயின் தாடையிலும் முத்தமிடுவர். மிகமிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவராகக் கருதப்படும் ஒருவர், கீழே விழுந்து தம் அங்கங்கள் பூமியில் படியுமாறு நமஸ்கரிப்பார்.

உறவினர்களை வரவேற்பதிலும் சில முறைகள் உள்ளன. மிகவும் நெருங்கியவர்களாயின், சிறந்த உபசாரமும், நடுத்தரமானவராயின் சிறிது உபசாரமும் செய்து, தொலை உறவினராயின், அவர்களைச் சட்டை செய்யாமலே இருந்தும் விடுவர்.

தாங்கள் தாம் உலகத்து இனத்தவர்களிலேயே உயர்ந்தவர் என்றும், தம் உறவினர்களிடையே நெருங்கிப் பழகியும்,

---

1. Wine

உறவினர் அல்லாதாரிடத்து நெருங்கிப் பழகாமல் ஏனோ தானோ என்றும் இருந்துவிடுவர். இதே மாதிரிதான் மிடிய மக்களும்[1] இருந்தனர்.

பாரசீக மக்களைப்[2] போன்று, உடன் அந்நிய மரபு களையும், பண்பாடுகளையும் ஏற்றுக்கொள்பவர் வேறு எவரையும் காணமுடியாது. எடுத்துக்காட்டாக, மிடிய மக்கள் அணியும் போர் ஆடைகளையே இவர்கள் உடன் ஏற்றுக் கொண்டுவிட்டனர். அதே போல இன்பக் கேளிக்கை களும் உடன் பின்பற்றப்பட்டன. ஒவ்வொருவருக்கும் பல மனைவியர் உண்டு. பணியாளர்களும் பலர் உள்ளனர். இது கிரேக்க மக்களிடமிருந்து[3] பெற்ற பண்பாடாகும். பல மனை வியரை மணந்து, பல மக்களைப் பெறுவதன் காரணமாக தாங்கள் ஆண்மைத் தன்மையில் நிகரற்றவர் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே என்று கூறப்படுகிறது. நிறைய குழந்தை உள்ள குடும்பத்திற்கு அரசரிடமிருந்து வெகுமதிப் பொருள்கள் கிடைத்துக் கொண்டிருக்கும். ஆண் பிள்ளைகள் 5 வயது முதல் 10 வயது வரை கல்வி கற்கி றார்கள். அவர்களுக்கு மூன்று கலைகள் மட்டும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன — குதிரையேற்றம், வில்வித்தை உண்மையே பேசுதல். ஐந்து வயது வரை குழந்தை தாயாரிடமே வைத்து வளர்க்கப்படுகிறது அக்குழந்தைகள் தத்தம் தந்தைகளைப் பார்ப்பது கிடையாது. காரணம் அச் சிறு வயதில் இறக்க நேரிடின், தந்தை அதிகம் வருத்தப்பட மாட்டான் அல்லவா? நாட்டுக்குச் செய்ய வேண்டிய பணி களில் தடைகள் ஏதும் ஏற்படாதல்லவா? என்னைப் பொறுத் தவரை, இப்பழக்கம் நல்ல பழக்கமாகவே நான் கருது கிறேன்.

ஒரே ஒரு குற்றத்துக்காக, அரசர்கூட, குற்றவாளியைக் கொலை செய்யக்கூடாது. இதுகாறும் அவர்களுள் எந்த மகனும் தந்தையையோ, தாயையோ கொன்றது கிடை யாது. பொய்பேசுவதை மிகுந்த மானக்கேடான செயலாகக் கருதுகின்றனர். மற்றும் எவருக்கும் கடனாக எதையும் கொடுப்பதில்லை. காரணம், கடன் வாங்கியவன், திருப்பிக்

---

1. Medians 2. Persians 3. Greeks

கொடுக்க இயலாமைக்குப் பொய்கள் பல கூறவேண்டிய சூழ்நிலை உருவாகும். இதனால் பணம் கடனாகக் கொடுக்கப்படுவது கிடையாது.

மற்றும் பெருவியாதிக்காரர்கள்[1] தனியே ஒதுக்கப்பட்டு வாழுமாறு செய்து விடுகின்றனர். நகரத்தில் நுழைய அனுமதி அளிப்பதில்லை. அவர்கள் அதற்குக் கூறும் காரணம்: அந்நோய் பீடிக்கப்பட்டவர்கள் சூரியக் கடவுளை நிந்தனை செய்தனர் என்று கூறப்படுகிறது. மற்றும், வெள்ளைப் புறாக்களும் நகரின் உள் அனுமதிக்கப்படுவதில்லை. அப் பறவைகளும் சூரியனை நிந்தனை செய்த குற்றத்தைச் செய்தனவே என்றும் காரணம் காட்டுகின்றனர். அவர்களைப்பற்றி ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது: அவர்கள் தங்கள் பெருமையைக் காட்டிக் கொள்ளத் தங்கள் பெயரின் இறுதியில் "இஸ்" எனும் எழுத்தைச் சேர்த்துக் கொள்கின்றனர்.

இவை யாவும் நான் நன்றாக அறிந்தனவே. இன்னுமொரு வழக்கம் அவர்களிடம் காணப்படுகிறது—அதாவது சடலங்களைப் புதைக்கும் செயல். ஒவ்வோர் ஆண் பாரசீகனின் பிணமும் ஏதாவது ஒரு பறவையாலோ, நாயாலோ கிழிக்கப்பட்டு அவ்வூனைச் சிறிது உண்டபிறகே, அப் பிணத்தைப் புதைக்க ஏற்பாடுகள் செய்கின்றனர். மேஜி[3] என்பவர்கள் இவ்வழக்கத்தை மேற்கொண்டுள்ளதை நான் அறிவேன். பாரசீகர்கள்[4] பொதுவாக, சடலத்தை மெழுகால் பூசி, அதன் பின்னரே அதைப் புதைக்க ஏற்பாடுகள் செய்வர்.

மேஜி எனப்படும் குருமார்கள், எகிப்திய குருமார்களினின்று[5] வேறானவராகக் காணப்படுகின்றனர். எகிப்தியர்கள்[6], கடவுளுக்குப் பலி கொடுக்க வேண்டும் போது மட்டுமே, விலங்கைக் கொல்கின்றனர். ஆனால், மேஜி எனப்படும் குருமார்கள் நாய்கள், மனிதர்கள் தவிர, மற்ற யாவற்றையும் தங்கள் கைகளாலேயே அவற்றின் கழுத்தை

---

1. Lepers 2. 'Es' 3. Magi 4. Persians 5. Egyptian Priests 6. Egyptians

இறுக்கிக் கொன்றுவிடுகின்றனர் — எவையாயினும், எறும்புகள். பாம்புகள், விலங்குகள், பறவைகள். ஆயினும், அது அவர்களிடம் காணப்படும் வழி வழி வந்த மிகப் பழமையான பழக்கமாகும்.[1] ஆகையால், பாவம், அதை அப்படியே வைத்துக் கொள்ளட்டும்!''

விளக்கவுரை:

சிலை செய்தல், கோயில் எழுப்புதல்: இவை இந்தியர் பண்பாட்டை—முக்கியமாகத் தமிழகப் பண்பாட்டை—ஒத்திருக்கின்றன. ஆனால், பாரசீக மக்களிடம்[2] இவை காணப்படவில்லை என்று கூறுகின்றார் ஹிராடடஸ்

நம் தென்னிந்தியாவில், கோயில், சிலை இல்லாத இடங்களைக் காண்பதரிது.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டா''

என்பது ஆன்றோர் பழமொழி. இப்பழக்கங்கள் தமிழ்நாட்டிலிருந்து கடல் கடந்து சென்றவையே.

''கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புனலி யமைத்து''

—(பட்டினப்பாலை 286-287)

ஜியுஸ்[3]: கிரேக்கர்கள்[4] போலவே, முதலில் அவர்கள் ஜியுஸ் கடவுளையே தொழுது வந்தனர். வான இராச்சியம் முழுவதையும் ஆள்வதாகக் கருதுவது பண்டையக் கொள்கை. பின்னர், பாரசிகர் மித்ரா எனுங் கடவுளை வணங்க—தொழ - அஸ்ஸீரியர்களிடமிருந்து[5] கற்றுக் கொண்டனர். மித்ரா என்பதற்குச் சூரியன் என்று பொருள் உண்டு. ஆக, பாரசிகர்கள் பின்னர் சூரியக் கடவுளைத்[6] தொழுது வரலாயினர்.

மித்ரா[7]: இக்கடவுள் ஒளிக்கும், அறிவுக்கும் அதிபர் எனப் பாரசிக மரபு கருதி வருகிறது. அவர்களின் முக்கியமான தெய்வ ஆராதனை சூரிய தேவனுக்குச் செய்வதேயாகும். சூரியனும், சூரிய வணக்கமும் பாரசிக மக்களின் தொன்றுதொட்டு வந்த பழக்கமாகும்.

மித்ரா, மித்திரன் என்றால் சூரியன் என்று பொருள்படும்.

(நாம தீப நிகண்டு-95)

1. Very old custom 2. Persians 3. Zeus 4. Greeks 5. Assyrians 6. Sun-God 7. Mitra

"ஓம் மித்ரஸ்ய, வருணஸ்ய" என்று ஓதுகிறது வேதங்களும் உபநிடதங்களும். மித்ர[1] என்பது சூரியனையும், வருண என்பது மழைக் கடவுளாகிய இந்திரனையும் குறிப்பிடும் சொற்களாகும்.

தமிழ்நாட்டில் மித்ரா வருணர்[2] என்ற சொல், அகத்தியரின் பெற்றோரைக் குறிப்பிடுவதாகும். (அபிதான சிந்தாமணி)

தெய்வங்களுக்கு நிவேதனம் அளித்தல்: இங்குக் கூறப்படுவன யாவும் தமிழ்நாட்டுப் பண்பாட்டினை ஒத்திருப்பதைக் காண லாம். கிரேக்க நாட்டில்[3] இவை யாவும் காணப்பட்டன என்றும், பாரசீகர்கள் இவற்றைச் செய்வதில்லை என்றும் ஹிராடடஸ் இங்குக் குறிப்பிடுகிறார். பலிபீடம் அமைத்தல், புல்லாங்குழல் ஊதுதல், மாலைகள் போடுதல், சோற்றைப் பலி பீடத்தின்மேல் இறைத்தல் ஆகிய இவை யாவும் தமிழ்நாட்டுப் பண்பாடுகளே. இவை தமிழ்நாட்டிலிருந்து கடல் கடந்து சென்ற பனையேறிகளாகிய பினீசியர்களால் அவர்கள் நாட்டில் கடைபிடிக்கப்பட்டு, பின்னர் கிரேக்க நாட்டில் புகுத்தப்பட்டன வாகும்.

கடவுளுக்குப் பலியிடுதல்பற்றி ஐங்குறு நூறு கூறுகிறது:

"மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம் பலிச் செய்த வீரர் நறுங்கையள்"

—[ஐங்குறு நூறு: 259-(3-4)]

மற்றும் நற்றிணை 343, பதிற்றுப்பத்து-30, அகநானூறு-166 ஆகியவை தெய்வத்துக்குப் பலியிடுதல் பற்றிக் குறிப்பிடு கின்றன.

நறுமண இலைகள்: இவை பசுமை மாறாத நறுமணம் வாய்ந்த இலைகள் ஆகும். தமிழ்நாட்டில், கடவுளுக்கு நிவே தனம் செய்ய—படையல் படைக்க—வாழை இலைகளைப் பரப்பி வைப்பர். ஆகவே, இவ்வழக்கமும் தமிழ்நாட்டின் பண்பாடே.

மேகஸ்[5]: இவர்கள் பாரசீக மக்களின் குருமார்கள். மிடிய நாட்டில் இத்தகைய மக்கள் குறிகள் சொல்பவராகக் கருதப்படு கின்றனர்; மற்றும் அவர்கள் மேஜி[6] என்ற பெயராலும் வழங்கப் படுகின்றனர்.

---

1. Mitra 2. Mitra-Varuna 3. Greece 4. Myrtles 5. Magus 6. Magi

உணவு, விருந்து: பாரசீகர் நிறைய உண்பர் என்பதையே ஹிராடட்ஸின் விவரங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

மேசைகள் பசியோடிருக்க[1]: மேசைமீது வைக்கப்பட்ட உணவை மீதம் இல்லாமல் எல்லாவற்றையும் உட்கொண்டு விட்டால், மேசைகள் பசியோடிருக்கின்றன என்றும், அவ்வா றான மேசைகள் பசிமேசைகள் என்றும் அவர்களால் வழங்கப் பட்டன என்று ஹிராடட்ஸ் கூறுகிறார்.

பிரச்சினைகள் தீர்க்கப்படல்: பாரசீக மக்கள்[2] குடிபோதை யிலும், சாதாரண நிலையிலும் எப்பிரச்சினையை எவ்விதமாக அணுகுகிறாரோ, அதுவே தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விடுகிறது. இரு நிலைகளிலும் சமமாக ஒரு பிரச்சினையை அணுகுவதே சரியான முறை என்பது பாரசீகர்களின் அசையாத நம்பிக்கை என்று ஹிராடட்ஸ் கூறுகின்றார்.

வணக்க முறைகள்: இம்முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடு கின்றன. தமிழ்நாட்டில், பெரியவர்களைக் கண்டால் "சாஷ் டாங்க நமஸ்காரம்" எனும் வணக்க முறை அனுட்டிக்கப்படும். அதாவது எட்டு அங்கங்களும் தரையில் படியுமாறு நமஸ்கரித்து எழுதல்.

"இரு கை, இரு முழங்கால், இரு தோள், மார்பு, நெற்றி ஆகிய எட்டுறுப்புகள் நிலந்தீண்டச் செய்யும் நமஸ்காரம்" சாஷ்டாங்க நமஸ்காரமெனப்படும்.

—(Tamil Lexicon: Vol III, Page 1398)

மூன்று கலைகள்: பாரசீக மக்களுக்கான மூன்று முக்கியக் கலைகளாவன: குதிரையேற்றம்; வில் வித்தை; உண்மையே பேசுதல் இவை முழுவதும் இந்தியப் பண்பாட்டில் அமைந்தவை யாகும். பண்டைக் காலத்தில் ஹிந்துக்கள் இவற்றை மேற் கொள்ள வற்புறுத்தப்பட்டனர்—முக்கியமாக அரச குடும்பத் தினர் இவற்றை மேற்கொண்டு ஒழுக வேண்டும். "பொய் பேசுவது" என்பது பாரசீகர்களிடம் காணமுடியாத ஒரு பண் பாடு ஆகும். ஆபத்து வந்தாலும் பொய் பேசக்கூடாது என்பது பாரசீகர்களது கட்டுப்பாடான வழக்கம்.

ஆனால் இந்திய நாட்டிலும், தமிழ்நாட்டிலும், ஆபத்துவரின் பொய் கூறலாம் என்று சற்றே வளைந்து கொடுத்துள்ளது—அரிச்சந்திர புராணத்தைத் தவிர.

---

1. Tables being hungry 2. Persians

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்." —(திருக்குறள்: 292)

இறுதியில் 'இஸ்'[1] சேர்த்துக் கொள்ளுதல் : பாரசீகர்கள்[2] தங்கள் பெருமையைக் காட்டிக் கொள்ள தங்கள் பெயர்களின் இறுதியில் "இஸ்" எனும் எழுத்தைச் சேர்த்துக் கொள்வது வழக்கம். அப்பொழுதுதான் அவர்கள் யாவரையும் விட உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் உதிக்கக் கூடும் என்பதே அவர்களது நம்பிக்கை.

எடுத்துக்காட்டாகச் சில பெயர்கள் : அரியாண்டிஸ்,[3] அர்டமிஸ்,[4] அர்ஸமிஸ்,[5] அமெஸ்டிரிஸ்,[6] அர்டாக்டிஸ்,[7] அர்டபாஸிஸ்[8], கேம்பைஸிஸ்[9], சைரஸ்[10] டாரியஸ்,[11] டெயோஸிஸ்,[12] டையோனிஸஸ்;[13] பௌசானியஸ்,[14] மித்ரடேடிஸ்,[15] மில்டியாடிஸ்,[16] மெஸிஸ்டியஸ்,[17] சிசோஸ்டிரிஸ்,[18] ஸெர்க்ஸிஸ்,[19] ஸையக்ஸரிஸ்[20].

பெருவியாதிக்காரர்கள்[21]: இத்தகைய நோயாளிகள் நகரத்துக்கு வெளியே ஒதுக்குப்புறத்தில் வாழுமாறு திட்டம் செய்யப்பட்டிருந்தனர். இன்றும், பல்வேறு நாடுகளிலும் அத்தகைய நோயாளிகளுக்குத் தனிப்பட்ட இடம் ஒதுக்கப்படுவதைக் காணலாம்.

சடலங்களைப் புதைத்தல்[22] : சடலங்களைப் புதைக்கும்முன், அவை கழுகுகளுக்கும் வல்லூறுகளுக்கும் உணவாக அளிக்கப் படுகின்றன. அப்பறவைகள் ஊனைக் கொத்திக் கிளறிய பிறகே, அச்சடலங்கள் உரிய முறையில் புதைக்கப்படுகின்றன. இந்நிலை-இம்முறை-ஹிராடடஸ் காலத்திலேயே காணப்பட்டன.

இம்முறை இன்றும் பாரசீகப் பெருமக்களால் பின்பற்றப் படுகின்றது.

மார்க்கோபோலோ (கி.பி. 1254-1324) கூறுகிறார் : பாரசீக நாட்டைப் பற்றி மார்க்கோபோலோ நிறையச் செய்திகளைக் கொடுத்துள்ளார். பாரசீகத்தின் வரலாறு, மூன்று ஞானியர் பற்றிய வருணனை, அக்கினி வழிபாடு, பாரசீகத்தின் எண் வகை அரசாங்கம், குதிரை வளர்ப்பு, கழுதை வளர்ப்பு, நாட்டில் விளைச்சல் முதலான விவரங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

---

1. Es 2. Persians 3. Ariyantes 4. Artames 5. Arsamis 6. Amestiris 7. Artactis 8. Artabasis 9 Cambyses 10. Cyrus 11. Darius 12. Deioces 13. Dionysus 14. Pausanius 15. Mithradates 16. Miltiades 17. Mesistius 18. Sesostris 19. Xerxes 20. Cyaxeres 21. Lepers 22. Burial.

"இவ்வணிகப் பெருமக்கள் நாணயமும் நேர்மையும் வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தம் இன்னுயிர் போவதாக இருப்பினும், பொய் என்ற சொல்லே இவர்கள் நாவிலிருந்து வெளி வராது."

- (மார்க்கோபோலோ ; பக்கம் 64)

சடலங்கள் பற்றி யுவான்சுவாங் (கி. பி. 629-645) கூறுகிறார்.

"இறந்தோர்களின் சடலங்களை எரிப்பதற்கும், புதைப் பதற்கும், ஈமக்கடன்களைச் செய்வதற்கும் ஏற்றுக் கொள்ளப் பட்ட மூன்றுவித வழக்கங்கள் நடைமுறையில் மேற்கொள்ளப் படுகின்றன. இவற்றுள் முதலாவது எரித்தல். சிதையாகக் கட்டைகள் அடுக்கப்பட்டு, அவற்றின்மீது சடலத்தை வைத்துச் சுட்டெரிப்பார்கள் இரண்டாவது, நீரில் மிதக்க விடுதல். சடலத்தை ஓடும் நதியின் வெள்ளத்தில் அப்படியே விட்டுவிட்டு அழுகிக்கெடுமாறு செய்து விடுவர். மூன்றாவது. காட்டில் எறியப்படல். சடலத்தை அடர்ந்த காட்டில் கழுகுகளும், விலங்குகளும் இரையாகத் தின்னுமாறு எறிந்து விடுவார்கள்."

—(யுவான் சுவாங் : பக்கம் 53)

விலங்குபலி[1] : மேஜி[2] எனப்படும் பாரசீகக் குருமார்கள்[3] செய்வதற்கும், எகிப்தியக் குருமார்கள்[4] செய்வதற்கும் உள்ள வேறுபாட்டினை இங்கு எடுத்தியம்புகிறார். எகிப்தியர்[5] கடவுளுக்காக அர்ப்பணிக்க வேண்டிய விலங்குகளை மட்டுமே கொல்கின்றனர். மேஜி எனப்படும் பாரசீகக் குருமார்கள் நாய்கள், மனிதர்கள் தவிர மற்ற விலங்குகளைத் தம் கைகளாலேயே கழுத்தைத் திருகிக் கொன்று விடுகின்றனர். இச் செயல் எகிப்திய குருமார்களின் செயலுக்கு நேர் எதிராக உள்ளது என்று கூறுகிறார் ஹிராடடஸ். எகிப்தில், விலங்கினைப் பலிபீடத்தில்[6] வைத்துக் கூரான கத்தியால் அதன் தலையைத் துண்டித்து விடுவர்.

மேஜியின் இப்பழக்கம் வழிவழி வந்த பழக்கமாதலால், அதை எளிதில் மாற்ற முடியாது என்ற கருத்தில், "பாவம் அப் பழக்கத்தை அவர்கள் அப்படியே வைத்துக் கொள்ளட்டும்!" என்று பரிவுணர்ச்சியுடன் ஹிராடடஸ் கூறுகிறார்.

உலகில் பல்வேறு பகுதிகளில் பலவேறு விசித்திரமான வழக்கங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் இதுவும் ஒன்றே.

---

1. Animal sacrifice 2. Magi 3. Persian Priests 4. Egyptian Priests 5. Egyptians 6. Sacrificial Altar,

10. பாபிலோன்

''ஹர்பகஸ்[1] மேற்கு ஆசியாவையும்[2], அதன் தென் பகுதியையும் தலைகீழாக்கிவிட்டார். அதேபொழுது, அவர் அரசர் சைரஸ்[3] வடக்கு, கிழக்கு ஆசியப் பகுதிகளுடன் போரிட்டு, அங்குள்ள எல்லா நாடுகளையும்—ஒன்றுகூட விடாமல்—வென்று அடக்கி அடிமைப் படுத்திவிட்டார். அவர்களின் சிறிய வெற்றிகளைப் பற்றிக் குறிப்பிடப் போவதில்லை. ஆயினும், அவற்றுள் ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட எண்ணுகிறேன். அந்நாடே அவருக்குப் பலத்த எதிர்ப்பைக் கொடுத்ததாகும்.

ஆசியாவின் மிகுதியான பகுதிகளை வென்று, அவற்றை அடக்கிய பிறகு, அவர் அஸ்ஸீரியாவுக்குத்[4] தம் கருத்தினைச் செல்லவிட்டார். அஸ்ஸீரியா, தன்னுள் அடங்ப்க பெற்றிருக்கும் மாபெரும் நகரங்களுக்குப் பெரும் புகழ் பெற்றிருந்தது, அவற்றுள் மிகவும் ஆற்றல் படைத்ததும், புகழோங்கியதுமான நகரம் பாபிலோன்[5] என்பதே. அஸ்ஸீரியாவின் பழைய தலைநகரம் நினேவ[6] வீழ்ந்தபிறகு, பாபிலோன் எனப்பட்ட புதியநகரம் நிர்மாணிக்கப்பட்டது. அது சதுரமான உருவம் கொண்டது. ஒவ்வொரு பக்கமும் 14 மைல் நீளம் உடையது; அதன் சுற்றளவு 56 மைல்கள்; அது தன் பேரெல்லையுடன், உலகில் உள்ள எல்லா நகரங்களையும்விட முதன்மையான நிலையில் இருக்கிறது. அதைச் சுற்றி ஒரு பெரும் அகன்ற ஆழம்மிக்க அகழி இருக்கிறது. அவ்வகழி நிறையத் தண்ணீர் உள்ளது. அதன் நடுவில் நீண்ட சுவர்

---

1. Harpagus 2. West Asia 3. Cyrus 4. Assyria 5. Babylon 6. Nineva

ஒன்று காணப்படுகிறது. அதன் அகலம் 50 முழ அளவும்[1], உயரம் 250 முழ அளவும் கொண்டதாய்க் காணப்பட்டது. அவ்வகழை அகழ்ந்து, அதனால் கிடைத்த மண் என்ன செய்யப்பட்டது என்றும், அச்சுவர் எப்படிக் கட்டப்பட்ட தென்பதையும் இனி நான் கூறுவேன்.

அகழப்பட்ட மண், செங்கற்கள் செய்யப் பயன்பட்டது. அகழ, அகழ, அகழப்பட்ட மண்ணால் செங்கற்கள் செய்து குவிக்கப்பட்டன. சுண்ணாம்புக்குப் பதில் மிகச் சூடான கொதிநிலையில் உள்ள நிலக்கீல்[2] பயன்படுத்தப்பட்டது. பக்கத்தில் படிகள் கட்டி, அதன் பின்னர்ச் சுவர்களை எழுப்பினர். ஒவ்வொரு முப்பது செங்கல் உயரத்தினிடையேயும் கோரைப்பாய்கள் இடப்பட்டன. அச்சுவரின் உச்சிமீது ஓர் அறை கொண்டவரிசை கட்டப்பட்டது. அவை உள் பக்கம் நோக்கி இருந்தன. அவற்றில் நான்கு குதிரைகள் பூட்டப் பட்ட தேர்[3] மிக எளிதாக ஓடக்கூடியதாக இருந்தது. அந்தச் சுவர்களுக்கிடையில், நூறு வாயில்கள் இருந்தன. அவ் வாயிற் கதவுகள்[4] யாவும் வெண்கலத்தால் ஆக்கப் பட்டிருந்தன.

பாபிலோனிலிருந்து[5] எட்டு நாள்கள் பயண அளவில், இஸ்[6] எனும் நகரம் இருக்கிறது. அந்நகரம் அதே பெயர் கொண்ட ஆற்றின் கரையில் நிர்மாணிக்கப்பட்டது. அவ் ஆறு,யூப்ரடீஸ்[7]நதியின் ஒரு கிளை ஆறு ஆகும்.இங்கிருந்து தான் பாபிலோனின் சுவர் கட்டப்பட நிலக்கீல்[8] பெருவாரி யான அளவில் எடுத்துச்செல்லப்பட்டது. யூப்ரடீஸ் எனும் ஆறு, மிகவேகமாக ஓடும் நீரைக் கொண்டுள்ளது; ஆறும் மிக ஆழமானது. அது ஆர்மீனியாவில்[9] புறப்பட்டு, பாரசீக வளைகுடாவில்[10] சென்று கலக்கிறது. அந்த ஆறு பாபி லோன் நகரின் நடுவில் பாய்ந்து, அந்நகரை இரண்டாக ஆக்குகிறது. பாபிலோனின் சுவர்கள் அவ் ஆற்றின் இரு கரைகளையும் ஒட்டிக் கட்டப்பட்டிருக்கின்றன. அவ் ஆற்றில் பாயும் நீர் அந்நகரின் அகழியில் பாய்ந்து ஓடு

---

1. Cubit 2. Hot Bitumen 3. Chariot drawn by four horses 4. Gates 5. Babylon 6. Is 7. Euphrates 8. Bitumen 9. Armenia 10. Persian Gulf

கின்றது. அவ்வகழி என்றும் வற்றாத நீரைக் கொண்டுள்ளது. அந்நகரத்தினுள் பல கட்டடங்கள், பல மூன்றடுக்கு மாடிகளையும் பல நான்கடுக்கு மாடிகளையும் கொண்டுள்ளன. ஆற்றைப் பார்த்து நிற்கும் தெருக்கள் சரியான நேர்கோட்டில் அமைந்தவை ஆகும். அத்தெருக்கள் கூடும் முனையில் வெண்கலக் கதவு ஒன்று உண்டு. அதைத் திறந்தால், ஆற்று நீரை அடையலாம். அதாவது ஆற்றுக்குச் செல்ல, அவ்வெண்கலக் கதவைத்திறந்து கொண்டு தான் போகவேண்டும். அவ்வாறே ஆற்றிலிருந்து நகரத் தெருவிற்குள் நுழையவேண்டுமெனில், அவ்வெண்கல வாயிலைத் திறந்து கொண்டுதான் உள் நுழையமுடியும்.

மேற்கூறப்பட்ட அப்பெரிய மதில்சுவர்தான் அந்நாட்டிற்குப் பாதுகாப்பு அரண் ஆகும். அந்நகரத்தினுள்ளே மற்றொரு சுவரும் உள்ளது. ஆனால், முன்கூறப்பட்ட சுவர் போன்று அத்துணை கடினமானதன்று. வலிமையிலும் குறைந்து காணப்படுவதே. நகரின் ஒவ்வொரு பாதியிலும் கோட்டை[1] ஒன்று கட்டப்பட்டுள்ளது. அவற்றின் ஒன்றனுள் அரசரின் அரண்மனை உள்ளது. அவ் அரண்மனையைச் சுற்றிலும், கனமான, உறுதியான சுவர் கட்டப்பட்டுள்ளது. மற்றப் பாதியில் அதாவது—இரண்டாவதனுள்—பெல் கோயில்[2] கட்டப்பட்டுள்ளது. பெல் கடவுளே, பாபிலோனின்[3] ஜியுஸ்[4] கடவுள் ஆவார். அக்கோயில் சதுரமான அளவினைக் கொண்டது. ஒவ்வொரு பக்கத்தின் நீளமும் 2 பர்லாங் அளவு உடையதாகும். அதற்கு வெண்கலக் கதவுகள் உள்ளன. அக்கோயில் இப்பொழுதும் காணப்படுகிறது. அதற்குச் சதுரமான மையக் கோபுரம் உண்டு. அது ஒன்றன்மீது ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளது. அதில் எட்டு அடுக்குகள் உள்ளன. அதில் ஏறிச்செல்பவர்களுக்குச் சிறிது ஓய்வெடுத்துக்கொள்ள இருக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த எட்டு மாடங்களையும், முன் பக்கமாகக் கட்டப்பட்டுள்ள சுழல் கோபுரம்[5] வழியாகவும் அடையலாம். மேல் மாடத்தில் ஒரு சாய்வுக் கட்டில் காணப்படும். அதனருகில் பொன்னால் ஆகிய மேசை

---

1. Fort 2. Bel Temple 3. Babylon 4. Zeus 5. Spiral tower

ஒன்றும் போடப்பட்டுள்ளது. அந்தக் கோயிலில் எவ்வகை உருவமும் கிடையாது. அங்குப் படுக்கை கொள்வது, கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அஸ்ஸீரிய நாட்டு மங்கையே[1]. (இது பெல் ஆலயத்தின் குருமார்களாகிய கால்டியர்களின்[2] கூற்று என்று நம்புவோமாயின் அதை ஒப்புக் கொள்ளலாம்!) அந்தப்படுக்கையில் கடவுள் இரவில் வந்து படுக்கிறார் என்பதை நான் நம்பத் தயாராக இல்லை. இதே போன்ற கதை ஒன்று எகிப்தியர்களால்[3] தீபே[4] கோயிலைப் பற்றிக் கூறப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே. அங்கும் அக்கோயில் இரவு முழுவதும் ஒரு மங்கை தனித்துத் துயில் கொள்வதாகவும், பாபிலோனின் கோயிலில் படுக்கை கொள்ளும் மங்கையைப்போன்று, அவள் எந்த ஆடவனுடனும் பால் சேர்க்கை வைத்துக்கொள்ளக் கூடாது என்பதாகவும் கூறப்படுகிறது. மற்றும், பதரா[5] என்னும் லைசிய நகரத்தில்,[6] அசரீரிவாக்கு[7] அளிக்கும்—அதாவது குறி சொல்லும்—குருமார்கள் அவ் இரவு முழுவதும் அக்கோயிலில் வைத்துப் பூட்டப்பட்டு விடுகின்றனர்.

பாபிலோன் கோயிலின் அடித் தளத்தில், இரண்டாவது மூலஸ்தானம் உள்ளது. அதில் பெல்[8] கடவுளின் திருவுருவம்-பொன் அரியாசனத்தின்மீது அமர்ந்த நிலையில் உள்ள பொன்னாலான உருவம்—காணப்படுகிறது. அதன் அருகில் பொன் மேசை ஒன்றும் உள்ளது. அவற்றைச் செய்வதற்கு மொத்தம் 22 டன் எடையுள்ள பொன் பயன்படுத்தப் பட்டது என்று கால்டியர்கள் எனக்குக் கூறினர். அக் கோயிலுக்கு வெளியே பலிபீடம்[9] ஒன்று உள்ளது. அது பொன்னால் செய்யப்பட்டது. அதற்கருகில் வெண்கலத்தால்[10]செய்யப்பட்ட பலிபீடம் ஒன்றும் உள்ளது. இதன் மீது தான் செம்மறி ஆடுகள் பலியாகக் கொடுக்கப்படுகின்றன. அந்தப் பெரிய பலிபீடத்தில் கால்டியர்கள் ஒவ்வோர் ஆண்டும் 2¾ டன் நிறையுள்ள சாம்பிராணியைக்[11] கொட்டுகிறார்கள்—அதுவும் பெல் கடவுளின் திருவிழா நடைபெறும் பொழுது. சைரஸ்[12] காலத்தில் அங்கே, 15 அடி உயரமுள்ள

1. Assyrian woman 2. Chaldeans 3. Egyptians 4. Thebes 5. Patara 6 Lycia 7. Oracle 8. Bel 9. Altar 10. Bronze 11. Frankincense 12. Cyrus

ஒரு மனிதனின் உருவம் பொன்னால் செய்யப்பட்டு வைக்கப் பட்டிருந்தது. இதைக் கால்டியர்கள் கூறினர். ஆனால் நான் அதைப் பார்க்கவில்லை. ஹைஸ்டாஸ்பஸின்[1] மகனான டாரியஸ் அதைக் கடத்திச் செல்லத் திட்டமிட்டிருந்தார். ஆயினும், அதற்குப் போதிய தைரியம் கொண்டாரல்லர். அவர் மகன் ஸெர்க்ஸிஸ்[2] அக்குருமார்களைக் கொன்று அப் பொன் உருவத்தைக் கடத்திக் கொண்டுபோய் விட்டார்."

விளக்கவுரை:

பாபிலோன்[3]: பண்டைய நாகரிகங்கள் விளங்கிய நகரங்களுள் முக்கியமானது பாபிலோன் நகரமாகும் மிகவும் புகழ் பெற்றிருந்த நாகரிகம் இங்கு நிலவி வந்தது. இந்நகரம் யூப்ரடீஸ் நதியின்[4] இரு கரைகள்மீதும் கட்டப்பட்டதாகும். இது கடவுள் பால்[5] என்பவரால் நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்நகரம் பல நூற்றாண்டுகள் அஸ்ஸீரியப்[6] பேரரசின் ஆதிக்கத்தில் இருந்தது. அது சுதந்தர நகரமாக விளங்கிய காலம், நபோபோலஸ்ஸார்[7] என்பவர் ஆட்சியின் காலத்திலாகும். இவர் நெபுசட்நேசர்[8] என்பாரின் தந்தை. நபோபோலஸ்ஸார், மிடிய நாட்டு அரசராகிய சையாக்ஸரிஸ்[9] என்பாருடன் சேர்ந்து, அஸ்ஸீரியன் பேரரசை வீழ்ச்சியடையச் செய்து, நினேவ[10] நகரத்தைக் கி.மு. 606-ல் அழித்தனர். அடுத்து நெபுசட்நேசர் காலத்தில் (கி.மு. 604-562) பாபிலோன் நகரம் உச்சகட்டப் புகழ் பெற்றது. பாபிலோனின் பேரரசு யூப்ரடீஸ் நதிமுதல் எகிப்து[11] வரை பரவியிருந்தது. அவருடைய இறப்பிற்குப்பின் மீண்டும் அது தளர்ச்சியடைந்தது. சைரஸ் அரசர்[12] தொடுத்த போரில்- மிடிய நாட்டுடன்[13] இணைந்து செய்த போரில்—பாபிலோன்[14] வீழ்ச்சியுற்றது (கி.மு. 538). அப்பொழுது அந்நகரத்தைப் பாரசீகப் பேரரசின்[14] தலைநகர்களுள் ஒன்றாக ஆக்கினார் சைரஸ் அரசர்—மற்ற இரு தலைநகரங்கள் சூஸா[15] எக்படன[16] ஆகும். சைரஸின் பின்தோன்றல்கள் காலத்தில் பாபிலோன் பொலிவிழந்து நின்றது. டாரியஸ் I[17] அந்தக் கோட்டைகளையும் பாதுகாப்புகளையும் ஒழித்துக் கட்டினார். காரணம் அதன் மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர் என்பதற்காக. பேரரசர் அலெக்

1. Hystaspus 2. Xerxes 3. Babylon 4. Euphrates 5. Baal 6 Assyrian 7. Nabopolassor 8. Nebuchadnezzar 9. Cyaxares 10. Nineva 11. Egypt 12. Cyrus 13. Media 14. Persian Empire 15. Susa 16. Ecbatana 17. Darius I

சாண்டரின்[1] இறப்புக்குப் பிறகு (கி.மு. 323) பாபிலோன் சிரியா நாட்டு[2] அரசாங்கத்தின் ஒரு பகுதியாக ஆகிவிட்டது செல்யூகஸ் நிகேடரால்[3] ஆளப்பட்டு, இறுதியில் அந்நகரம் மறைந்தே விட்டது. அதனுடைய அழிபாடுகள் இன்றும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

—(A Smaller Classical Dictionary: Page 95)

ஹார்பகஸ்[4] : அரசர் சைரஸின்[5] பிற்கால இராணுவ தளபதி. அஸ்டியகெஸ்[6] சிறுவன் சைரஸ் என்பானைக் கொல்ல ஆணையிட்ட பொழுது, அக்குழந்தையைக் கொல்லாமல், ஓர் ஆட்டிடையனிடம் கொடுத்துக் காப்பாற்றியவன். மற்றும் பக்கம் 65, குறிப்பு-1 பார்க்கவும்.

சைரஸ்: அஸ்டியகெஸின் பெண் வயிற்றுப் பெயரன் பின்னர் பாரசீக நாட்டு மன்னராக விளங்கினார். தம் உயிரைக் காத்தமைக்காக ஹார்பகஸைத் தம் இராணுவத் தளபதியாக ஆக்கினார். சைரஸ் வாழ்ந்து வந்த காலம் கி. மு. 579—529 அதாவது 50 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். அவர் ஆண்ட காலம் கி மு. 558—529 அதாவது 29 ஆண்டுகள் ஆண்டார். மற்றும் பக்கம் 84, குறிப்பு 1 பார்க்கவும்.

அஸ்ஸீரியா[7]: இது பழமையான நாகரிகம் விளங்கிய நாடாகும். அதன் தலைநகரம் நினேவ[8]. இந்நகரம் கி.மு.606-ல் நபோபோலஸ்ஸாரும்,[9] மிடிய நாட்டரசர் சையாக்ஸரஸும்[10] சேர்ந்து போர் செய்ததால், அழிக்கப்பட்டு விட்டது. அதன்பின் பாபிலோன் தலைநகரமாக ஆக்கப்பட்டது. நினேவ நகரம் நைனஸ்[11] என்ற பெயராலும் வழங்கப்பட்டது. அஸ்ஸீரியாவின் புகழ் பெற்ற ஸ்தாபகர் நைனஸ் என்பவர் ஆவார். அவர் பெயராலேயே நைனஸ் நகரம் நிர்மாணிக்கப்பட்டது. பழங்காலத்தில் மிடிய[12] பெர்ஸிஸ்[13], ஆர்மீனியா,[14] சிரியா[15], பினீசியா[16], பாலஸ்தீனம்[17]— ஜுதா[18] அரசு தவிர— யாவற்றையும் உட்கொண்டிருந்தது. அதன் அரசர் செனாசெரீப்[19]. ஜெருசலேம்[20] மீது தொடுத்த போரில் (கி.மு. 714) அவர் தோல்வியடைந்ததன் காரணமாக, மிடிய அரசு தனியே

---

1. Alexander the Great 2. Syria 3. Selucas Nicator 4. Harpagus 5. Cyrus 6. Astyages 7. Assyria 8. Nineva 9. Nabopolassar 10. Cyaxares 11. Ninus 12. Media 13. Persis 14. Armenia 15. Syria 16. Phoenicia 17. Palestine 18. Judea 19. Sennacherib 20. Jerusalem

பிரிந்து விட்டது, கி. மு. 606-ல் நினேவ[1] எடுத்துக் கொள்ளப் பட்டு, ஸையக்ஸரிஸ்[2] அரசரால் அஸ்ஸீரியப் பேரரசு[3] அழிக்கப்பட்டு விட்டது.

பின்னர் பாபிலோனியப் பேரரசு[4] தோன்றி, பாபிலோன் தலைநகரமாக ஆக்கப்பட்டது.

எகிப்தின் தீபே கோயில்[5]: தீபே நகரம் எகிப்தின்[6] வட பகுதியின் தலைநகரமாக விளங்கிற்று. அங்குள்ள கோயிலே தீபே கோயில் ஆகும். அது டையோஸ்பாலிஸ்[7] மலைமீது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கி மு. 1600 அளவில் அம்மோன்[8] தெய்வத்தின் இருப்பிடமாகத் திகழ்ந்தது. மற்றும் அது பெரும் புகழ் பெற்றிருந்தது. ஹோமரால்[9] (கி.மு. 850) அந்நகரம் புகழப் பட்டது அதற்கு 100 வாயில்கள்[10] இருந்தனவாகவும், ஒவ்வொரு வாயிலின் வழியாக 200 தேர்கள்[11]—நான்கு குதிரைகள் பூட்டிய தேர்களும் அதன் வீரர்களும் அடங்கியது—உள்ளே எளிதாகப் போகக் கூடிய அளவு பெரியதாக இருந்ததெனவும் ஹோமர் குறிப்பிட்டுள்ளார். இதன் அழிபாடுகள் இன்று நைல் நதிச்[12] சமவெளியில் 6 மைல் அளவு வரைக் காணப்படுகிறது. ஹோமர் கூறியது உண்மையாகவே இருக்கக் கூடும் என்று அழிபாடுகளைப் பார்த்த பிறகு தெரிகின்றது

பதரா[13]: இது லைசிய நாட்டின்[14] முக்கிய நகரம்—தலை நகரமும் ஆகும். இங்கு அப்பொலோ தெய்வத்துக்குச்[15] சிறந்த ஒரு கோயில் உண்டு. அங்கே அசரீரி கிளம்பி, குறிகள் சொல்லப் படுகின்றன.

கால்டியர்[16]: இவர்கள் மெசபொடேமியாவின்[17] வடக்கே யிருந்தவர் என்று ஸெனபான்[18] (கி.மு. 444-374) கூறுகின்றார். பின்னர் கால்டியர்கள் ஆதிக்கம் பெற்றுப் பாபிலோனை ஆண்டு வந்தனர்.

பெல்[19]: இவர் பாபிலோன் நகரில் நிர்மாணிக்கப்பட்ட கோயிலின் கடவுள்.

---

1. Nineva 2. Cyaxares 3. Assyrian 4. Babylon 5. Thebes of Egypt 6. Egypt 7. Diaspolis 8. Ammon 9. Homer 10. Gates 11. Chariots 12. Nile River 13. Patara 14. Lycia 15. Apollo 16. Chaldeans 17. Mesopotamia 18. Xenophon 19. Bel

டாரியஸ்[1]: இவர் ஹைஸ்டாஸ்பஸின்[2] மகன். டாரியஸ் I என்று வரலாற்றில் குறிப்பிடப்படுகிறார். இவர் பாரசீகத் தளபதிகள் எழுவருள் ஒருவர். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 521-485 ஆக 36 ஆண்டுகள் ஆண்டார். பாரசீக நாட்டின்[3] முதல் வேந்தர் எனக் கருதப்படுகிறார். இவருடைய முக்கிய நோக்கம் கிரேக்க நாட்டை[4] வெல்ல வேண்டும் என்பது. ஆனால் இவர் தம் வாழ்நாளில் அதைச் செய்ய முடியாமல் இறந்து விட்டார். அப்பணியைத் தம் மகன் ஸெர்க்ஸிஸிடம் தொடர்ந்து நடத்துமாறு விட்டுச் சென்றார். ஸெர்க்ஸிஸ் கிரேக்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார்.

ஸெர்க்ஸிஸ்[5]: இவர் டாரியஸின் மகன் ஆவார். தந்தை இறந்த பிறகு இவர் அரியணை ஏறினார். இவர் கி. மு. 485-465 அதாவது 20 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவரே பாபிலோன் கோயிலில்[6] இருந்த பொன்னால் ஆன மனித உருவத்தை எடுத்துச் சென்றார் என்று கூறப்படுகிறது.

தம் தந்தை முற்றுப் பெறாமல் விட்டுச் சென்ற கிரேக்க நாட்டின் மீதான படையெடுப்பை மேற்கொண்டார். கிரேக்க நாட்டைக் கி.மு. 480-ல் வென்றார். பின்னர் சார்டிஸ்[7] நகரத்தில் நுழைந்தார். பாரசீகர் அயோனியாவில்[8] வெற்றி பெற்றனர்; அதே நாளில் அவரது போர்த் தளபதி மர்டோனியஸ்[9] சார்டிஸ் நகரில் கி.மு. 479-ல் தோல்வியடைந்தார்.

20 ஆண்டுகள் ஆட்சிக்குப் பிறகு, கி. மு. 465-ல், அவர் இராணுவத் தளபதி அர்டபானஸ்[10] என்பவரால் கொலை செய்யப்பட்டார். ஸெர்க்ஸிஸ் ஆட்சி அத்துடன் முடிவடைந்தது.

---

1. Darius 2. Hystaspes 3. Persia 4. Greece 5. Xerxes 6. Babylon Temple 7. Sardis 8. Ionia 9. Mardonius 10. Artabanus

11. பாபிலோன் முதன்முதல் கைப்பற்றப் படுதல்

"கோடைக் காலத் தொடக்கத்தில் சைரஸ்[1] பாபிலோன் மீது[2] படையெடுக்கத் தொடங்கினார். சைரஸ் அந்நகரத்தின ருகில் வந்ததும் அவரைப் பாபிலோனிய மக்கள் எதிர்த்துப் போரிட்டனர். இருப்பினும், அவர்களால் அப்படையெடுப் பின் வலிமையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதன் காரணமாகத் தோல்வியை ஒப்புக்கொண்டு, யாவரும் அந்நக ரத்தின் மையத்திலுள்ள கோட்டைக்குள் புகுந்து கொண் டனர். அவர்கள் சைரஸின் நாடு சேர்க்கும் பேராசையை நன்கு அறிந்திருந்தனர். ஒரு நாடு ஆனதும், அடுத்த நாடு என்று இவ்வாறு அவர் நாடுகளை வென்று கொண்டே வந்ததும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் தங்கள் கோட் டைக்குள் பல ஆண்டுகளுக்குத் தேவையான தானியங் களைச் சேமித்து வைத்திருந்தனர். சைரஸ் வெளியிலிருந்து நீண்ட நாள்கள் முற்றுகை இட்டார். அவர் மிகவும் அலுத்துப் போய்த் திரும்பிவிடலாமென்று இருந்த பொழுது, ஒருவர் உபாயம் ஒன்றை எடுத்துரைத்தார். (அது அவரு டையதாகவும் இருக்கலாம்!) சைரஸ் தம் சேனையின் ஒரு பகுதியை யூப்ரடிஸ்[3] உள்ளே நுழைந்து பாயும் இடத்திலும் மற்றொரு பகுதியை, அது வெளியே செல்லும் இடத்திலும் நிறுத்தி வைத்தார். அந்த ஆற்றின் வேகம் குறைந்து, ஆழமும் குறைந்து காணப்பட்டபொழுது, படை வீரர்களை முன்னோக்கிச் செல்லுமாறு பணித்தார். உடன் சில நல்ல முரட்டுப் பணியாளர்களைக் கூப்பிட்டு, அவ் ஆழமில்லாத ஆற்றின் நீரைப் பக்கத்தில் இருந்த ஏரி ஒன்றனுக்குத்

1. Cyrus 2. Babylon 3. Euphrates

திருப்பச் சொன்னார். இதன் காரணமாக, ஆற்றின் ஆழம் மிகவும் குறைந்து, நீர் முழங்கால் அளவிற்கும் கீழே வந்து விட்டது. உடன் தம் படைவீரர்களை விரட்டி, அந்நகரத்தினுள் புகுமாறு கட்டளையிட்டார். சைரஸ் என்ன செய்தார் என்பது பாபிலோனிய மக்களுக்குத்[1] தெரியாது, தெரிந்திருந்தால், அவர்கள் சைரஸின் படை வீரர்களை உள்ளே நுழையவிட்டு,எல்லா வாயில்களையும்[2] மூடிவிட்டால். அவர்கள் வெளியே போக முடியாமல் திணறி, பாபிலோனிய மக்களால் கொல்லப் பட்டிருப்பர். ஆனால் சைரஸ் உள் நுழைந்தது பாபிலோனிய மக்களுக்கு வியப்பூட்டுவதாகவே இருந்தது. சைரஸ் வெளியே முற்றுகையிட்டு, உள்ளே நுழையும் பொழுது கூட, அக்கோட்டையினுள் திருவிழா ஒன்றில் பாபிலோனிய மக்கள் ஈடுபட்டிருந்ததாகவும், கேளிக்கைகளில் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்ததாகவும், பாபிலோனிய மக்களே இச்செய்திகளைக் கூறினர் என்றும் சொல்லப்படுகிறது. சைரஸின்[3] படை வீரர்கள் உள்ளே நுழைந்து போரிட்ட பொழுதுதான் அவர்கள் தங்களின் உண்மை நிலையை உணர்ந்தனர். ஆக இவ்வாறு சைரஸ் அரசர் பாபிலோன் நகரை முதன் முதல் கைப்பற்றிய வரலாறு இங்குக் கூறப்பட்டது.''

விளக்கவுரை:

பாபிலோன்[4] பிடிப்பட்டது: பாபிலோன் முதன் முதல் பிடிபட்ட வரலாறு இங்குக் கூறப்படுகிறது. பாபிலோன் நகர் யூப்ரடீஸ்[5] நதியின் இருமருங்கிலும் நிர்மாணிக்கப் பட்டிருந்தது. ஆகையால், ஆற்றைக் கடந்து உள்ளே நுழைவது என்பது கடினமான செயலே. அதனால்தான், அதன் வேகம் சற்றுக் குறைந்தவுடன், அந்நீரை ஓர் ஏரிக்குத் திருப்பி, ஆற்றின் ஆழம் குறைந்ததும், நகரினுள் நுழைந்து விட்டனர். அப்பொழுது கோட்டையின் கதவு திறந்திருந்தால்தான், அவர்கள் உள்ளே நுழைந்திருக்க முடியும். சைரஸின் படைவீரர்கள் அவற்றைக் கடந்து உள்ளே வரமுடியாது என்ற உறுதியான எண்ணத்தில், அவர்கள் அக்

1. Babylonians 2. Gates 3. Cyrus 4. Babylon
5. Euphrates

கோட்டை வாயிலை[1] மூடத் தவறியிருக்க வேண்டும். அவர்கள் செய்த தவறே சைரஸுக்குப் பேருதவியாய் அமைந்து, படை வீரர்கள் கோட்டையுள் நுழைய அனுமதித்தது. பாபிலோனிய மக்கள்[2] கோட்டைக்குள் தானியங்களைக் குவியல் குவியலாகக் குவித்து வைத்திருந்த காரணத்தால், அவர்கள் ஆண்டு முழுதும் உண்டு களித்து வாழ்ந்திருந்ததின் பயனாக, வெளியே வந்திருந்த பேராபத்தைச் சிறிதும் அறிந்தாரல்லர். உணவு உண்டு களித்து வாழ்வதிலேயே காலம் கழிப்பவர்க்கு மந்த புத்தி ஏற்படுவதால், அவர்கள் எதையும் பொறுப்புணர்வுடன் கவனிக்கத் தவறி விட்டனர் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

''வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்!''

—(மகாகவி சுப்பிரமணிய பாரதியார்-சுதந்தரப் பள்ளு)

''கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள்
குழுவினில் புகுதலொட்டோம்.''

—(நாலாயிரதிவ்வியப் பிரபந்தம்- திருப்பல்லாண்டு-3-2)

1. Gates of the Fort 2. Babylonians

12. பாபிலோனியரின் செல்வமும் பழக்க வழக்கங்களும்

"பாரசீகப் பேரரசு[1] பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், அரசருக்கும், அவருடைய இராணுவத்துக்கும் உணவு வகைகள் தங்குத்தடையின்றி வந்து கொண்டிருப்பதற்காகவே ஆகும். பன்னிரண்டு மாதங்களுள் நான்கு மாதங்களுக்கு வேண்டிய-தேவையான- உணவுப் பண்டங்கள்-தானியங்கள்-பாபிலோன் நகரத்திலிருந்தே[2] வந்து குவிந்த வண்ணம் இருந்தன. மற்ற எட்டு மாதங்களுக்கும் ஆசியாவின்[3] மற்றப் பகுதிகளிலிருந்து உணவுப் பண்டங்கள் வருகின்றன. இது எதைக் காட்டுகிறது? அஸ்ஸீரியாவின்[4] விளைச்சல் ஆசியாவின் முழுவிளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு உள்ளது என்பதே. அஸ்ஸீரியாவின் ஆளுநர்ப் பதவி மற்ற எல்லாப்பதவிகளைவிட மிக உயர்ந்ததாகவும், அதிக வருமானம் உள்ளதாகவும் கருதப்பட்டு வந்தது. ஆளுநர்ப் பதவியைப் பாரசிகர்கள்[5] சத்ராபி[6] எனும் பெயரால் வழங்குகின்றனர். எடுத்துக்காட்டாக, அர்டபாஸிஸின்[7] மகனான திரிதன்டெக்மி[8] என்பவர் அச் சத்ராபிப் பதவியை அரசருக்காக வகித்த பொழுது, ஒவ்வொரு நாளும் வெள்ளி அர்டபா[9] நாணயத்தைப் பெற்று வந்தார். அர்டபா என்பது ஐந்து புஷல் அளவு அல்லது ஐந்து பைன்டுகள் அளவு உள்ள ஒரு பாத்திரமாகும். அப்பாத்திரத்தின் அளவுள்ள வெள்ளி

---

1. Persian Empire 2. Babylon 3. Asia 4. Assyria 5. Persians 6. Satrapy 7. Artabazes 8. Tritantaechmes 9. Artaba

நாணயங்களை அன்றாடம் பெற்று வந்தார். மற்றும், தமக்குச் சொந்தமான யுத்தக் குதிரைகளுடன்—800 விதையடிக்கப்படாத குதிரைகளும், 16,000 பெட்டைக் குதிரைகளும்— அதாவது ஒவ்வோர் ஆண் குதிரைக்கும் 20 பெட்டைக் குதிரைகள் வீதமாக— இருந்தன. மற்றும், மிகுந்த எண்ணிக்கையில், இந்திய நாய்கள்[1] வளர்க்கப்பட்டு வந்தன. அந்நாய்களுக்குத் தீனி தருவதற்காக நான்கு பெரிய கிராமங்கள் வரி செலுத்துவதினின்று விலக்களிக்கப் பட்டிருந்தன. இவ் அட்டவணையே பாபிலோன் நகர ஆளுநரின் செல்வத்தைக் கணக்கிட உதவும் என்றால், அந்நாட்டின் வளம் எத்தகையது என்று கூறவும் வேண்டுமா?

அஸ்ஸீரியாவில்[2] மழை குறைவாகவே பெய்யும். அம் மழை விதை முளைக்கச் செய்யவும், வேர்கள் ஊன்றி வளரவுமே போதுமானதாக இருக்கும். அப்பயிர்களுக்கு வேண்டிய நீர்ப்பாசனம் ஆற்று வெள்ளத்தாலும், ஆற்று நீராலும்– எகிப்தில்[3] செய்யப்படுவதைப் போன்று-நடத்தப் படுவதில்லை. ஆனால் உழவர்கள் கைகளால் அடிக்கப்படும் குழாய்கள் மூலமாக[4] நீர் பாய்ச்சப்படுகிறது. எகிப்தைப் போல ஆங்காங்கே சிறு ஏரிகள் காணப்படுகின்றன. அவற்றை மரக்கலத்தின் உதவியால்தான் கடக்க வேண்டும். தானிய உற்பத்தியில் உலகிலேயே மிகுந்த செல்வம் படைத்தது அஸ்ஸீரியாவே. வயல்களில் அத்தியோ, திராட்சையோ, ஒலிவமரமோ பயிரிடப் படுவதில்லை. ஆனால் கோதுமையும் பார்லியும் மற்ற எல்லா இடங்களையும் விட 300 அல்லது 400 மடங்கு அதிகமாக விளைகின்றன. இவர்கள் எள்ளிலிருந்து[5] பிழியப்படும் எண்ணெயைத் தவிர வேறெதையும் பயன் படுத்துவதில்லை. காட்டு அத்தியைப் போல[6], மிகுதியாகப் பயிரிடப்படும் பழம் பேரீந்து ஆகும்[7].

யூப்ரடீஸ்[8] நதியில் விடப்படும் படகுகளைக் காண்போம். அவை வட்டவடிவமாகவே உள்ளன — கேடயம்

1. Indian dogs 2. Assyria 3. Egypt 4. Hand pumps 5. Sesame 6. Wild fig 7. Dates 8. Euphrates

போன்று. தென்னைமரத்தின் பட்டைகளினின்று செய்த குடுவைகளுள் மதுவை நிறைத்துக் கொண்டு ஆற்று நீரின், ஓட்டத்தை ஒட்டியே சென்றுவிடுவர். அப்படகுக்கு இயக்குநர் இருவர் உள்ளனர்—ஒருவர் முன்புறத்திலும், மற்றவர் பின்புறத்திலும் இருந்து துடுப்புகளைப் பயன்படுத்திப் படகினை ஓட்டிச் செல்வர். ஒவ்வொரு படகிலும் ஒரு கழுதை இருக்கும். சிலவற்றில் பல கழுதைகளும் காணப் படும். விடப்பட்ட படகு பாபிலோனை அடைந்ததும், அதில் உள்ள பண்டங்கள் இறக்கப்பட்டு, படகு பிரித்துப் போடப்படும். பண்டங்களை விலைபேசி விற்றுவிடுவர். அப்படகுகளை ஆற்றின் எதிர்த் திசையில்-ஆற்றோட்டத் துக்கு எதிராக- ஓட்டிச் செல்வதென்பது முடியாத செயலே. ஆர்மீனியாவுக்குத்[1] திரும்பியதும், அதே அமைப்புக் கொண்ட புதிய படகுகளைத் தயாரித்துக் கொள்கின்றனர்.

பாபிலோனிய மக்களின்[2] உடைகள் லினனால்[3] ஆக்கப் பட்டனவாகும். அவை அவர்கள் கால்வரை நீண்டு தொங்கும். அதற்குமேல் ஆட்டு ரோமத்தால் செய்த சிறு சட்டையை அணிவர். அவர்கள் தங்கள் தலைமயிரை நீளமாக வளர்க்கின்றனர்; தலைப்பாகை அணிகின்றனர்; உடல் மேல்பகுதியில் வெள்ளைத் துணியைப் போர்த்துக் கொள்வர். ஒவ்வொருவருக்கும் சொந்தமான அரக்கு முத்திரை உண்டு; தனியாகச் செய்து, அலங்கரிக்கப்பட்ட ஊன்று கோலும் உண்டு.

அங்கு ஆண்டுக்கொரு முறை திருமண வயது வந்த இளம் பெண்கள் ஓர் இடத்தில் கூடி நிற்பர். அவர்களைச் சுற்றி வட்ட வடிவத்தில் அவர்களை மணக்க விரும்பும் ஆண்கள் கூட்டம் இருக்கும். அப்பெண்களை ஏலமிடு வோன் ஒருவன் ஏலம் விடுவான்- மிக உயர்ந்த விலைக்கு அழகான பெண்களை. அவ்வழகான பெண் உடன் விலை போய்விடும். அப்பெண் விலை போனதும், அழகற்ற- உடற்குறையுள்ள-பெண்கள் ஏலமிடப்படுவர். அவர்களைப் பெரும்பாலும் ஏழைமக்களே விலைபேசி இட்டுச்செல்வர்— காரணம் செல்வந்தர் அழகு மிக்க பெண்களை முதலிலேயே

---

1. Armenia 2. Babylonians 3. Linen

விலைபேசி வாங்கி விடுவதால், சில பெண்களை முடவர்களும், குருடர்களும் விலைபேசி இட்டுச் செல்கின்றனர். இவ்வாறு அழகான பெண்கள் விலைபேசுவதில் கிடைக்கும் பணம், அழகற்ற பெண்களுக்கு—ஊனமுற்ற பெண்களுக்கு -வரதட்சணையாகக்[1] கொடுக்கப் பயன்படுத்தப்படும். ஒருவர் தம் மகளைத் தமக்கு இஷ்டமானவருக்கு திருமணம் செய்து வைக்க முடியாது; சட்டம் அதைத் தடுக்கிறது. எவரேனும், ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதென்றால்தான் அப்பெண்ணை விலை பேசித் தம்முடன் அழைத்துச் செல்லலாம். திருமண நோக்கமின்றி, பொழுது போக்கிற்காக, எப்பெண்ணையும் தம்முடன் அழைத்துச் செல்ல முடியாது. கணவன் மனைவிக்கு இடையே காணப்படும் பொருத்தமற்ற -சண்டை சச்சரவுமிக்க வாழ்க்கைக்கு —அவளுக்கு கொடுக்கப்பட்ட "வாங்கின விலையை"த் திருப்பிக் கொடுத்து விட்டுப் பிரிந்து விடலாம். சட்டம் அவ்வாறு பிரிய அனுமதிக்கிறது. திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்துடன், ஒருவர் ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள- விலைக்கு வாங்க- மற்றக் கிராமங்களிலிருந்து வருவதற்கும் சட்டம் அனுமதிக்கிறது.

இந்தப் போற்றத்தக்க பழக்கம் நாளடைவில் வழக்கத்தில் சிறிது சிறிதாகக் குறைந்து வருவதாயிற்று. அதற்குப் பதில் கீழ்நிலையிலுள்ள பெண்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள விபசாரம் செய்யச் சட்டம் அனுமதி வழங்கியது புதுமையான செயலாகும். அவ்வாறு விபசாரம் செய்யும் பெண்கள் தங்கள் ஏழ்மையினின்றும் விலகி, சுகமான வாழ்வு வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நோயாளிகளைப்[2] பற்றிச் சிறிது பார்ப்போம். அந்நகரில் மருத்துவர் எனப்படுபவர்கள் சிறப்பாகக் கிடையாது.நோயுற்றவர்கள், குறிப்பிட்ட ஒரு தெருவில், கொண்டு வைக்கப்படுவர். போவோர் வருவோர் அந்நோயுற்றவர்களைக் கவனித்து, தங்கள் குடும்பத்தில் அந்தமாதிரி நோய் வந்தால் என்ன செய்திருப்பார்களோ, அந்த அனுபவ வைத்திய முறைகளை அந்நோயாளிக்குக் கூறி, அதன்படி

1. Dowry 2. Sick Persons

நடந்து கொள்ளுமாறு அறிவுறுத்துவர். எந்த மனிதரும் நோயாளியாய்க் கிடத்தியிருப்பவரை விசாரிக்காமல், பேசாது மௌனமாகக்[1] கடந்து செல்லக் கூடாது. ஒவ்வொருவரும் அவருக்கு என்ன நேர்ந்தது என்று உசாவ வேண்டும்.

பாபிலோனிய மக்கள்[2] தங்களுள் இறந்தவர்களைத் தேன் ஊற்றிப் புதைத்துவிடுவர்—எகிப்தியர்களைப்[3] போல. பாபிலோனிய ஆணும் பெண்ணும் பால்சேர்க்கை அதாவது கலவி செய்து சிற்றின்பம் அனுபவித்தவுடன், ஒருவகைத் தூபம் போட்டு, அத்தூபத்திற்கு எதிர் எதிராக இருவரும் உட்கார்ந்து, அப்புகையை உள் இழுத்து, காலையில் குளித்து விடுவர். அவ்வாறு குளிக்காமல், விட்டில் உள்ள எப்பாத்திரத்தையும் கையால் தொடவும் மாட்டார். இவ்விஷயத்தில் அவர்கள் அரேபிய மக்களை நிகர்க்கின்றனர்.

இம்மக்களுள் ஒரு விநோதமான பழக்கம்—மிகவும் அருவருக்கத்தக்க பழக்கம்—உண்டு. அது மிகவும் வெட்கக் கேடான செயலாகும். இந்த நாட்டைச் சார்ந்த எந்தப் பெண் ஆயினும் அவள் தன் வாழ்க்கையில் ஒருமுறை அப்ரோடைடி[4] கோயிலுக்குச் சென்று, அங்கு உட்கார்ந்து, தன்னை ஓர் அன்னியனுக்கு அர்ப்பணிக்கவேண்டும் என்பதே.

செல்வந்தர்களாயிருக்கும் பெண்கள் தங்கள் பரிவாரங்களுடன் வந்து, அங்கு ஒரு செபமாலையுடன் உட்கார்ந்து விடுவர். அங்குப் போவோர் வருவோர் இவர்களை உடன் பணம் கொடுத்து அழைத்துச் சென்று விடுவர். ஒரு பெண் அங்கே உட்கார்ந்துவிட்டால், எவனாவது அவள் மடியில் காசு போட்டு அழைத்துச் செல்லும் மட்டும் அங்கேதான் உட்கார்ந்திருக்க வேண்டும். அவ்வாறு ஒருவன் பணத்தை அவள் மடியில் வீசி எறியும் பொழுது, “மிலிட்டா தெய்வத்தின்[5] பெயரால் இதைப் போடுகிறேன்” என்று கூறிப்போட வேண்டும். அவ்வாறு போடப்படும் பணத்தின் மதிப்பு

---

1. In silence 2. Babylonians 3. Egyptians 4. Aphrodite 5. Goddess Mylita

முக்கியமன்று. ஒருமுறை போட்டால், அது புனிதத் தன்மை அடைந்து விடுகிறது. அவ்வாறு போடும் பணத்தை எவரும் மறுக்கக்கூடாது என்று சட்டம் கண்டிப் பாகக் கட்டளையிட்டுள்ளது. கடவுளே மனிதன் உருவில் வந்து அவளை அழைத்துப் போவதாக ஐதிகம். எவன் ஒருவன் முதன் முதல் ஒருத்தியின் மடியில் காசைப்போடு கிறானோ, அவனுடன் அவள் சென்று படுக்க வேண்டும். அவ்வாறு அவனுடன் கலவி செய்தவுடன்—உடலுறவு கொண்டவுடன்—அக்கடவுளுக்கு அவள் செய்ய வேண்டிய கடமை தீர்ந்துவிட்டதாகக் கருதப்படும். ஆனால், இது முடிந்து, கோயிலை விட்டு வெளியே தன் வீட்டிற்குச் சென்று விட்டால், அவளை அவள் கணவர் தவிர வேறெ வரும் நெருங்க முடியாது. எவ்வளவு பெரிய தொகை அவளுக்கு ஆசை காட்டித் தரப்பட்டாலும்கூட உயர்ந்த, சிறந்த அழகு வாய்ந்த பெண்கள் தங்கள் வீட்டிற்கு வெகு விரைவிலேயே திரும்பி விடுகின்றனர் ஆனால் அழகற்ற வர்கள், உடல் ஊனமுற்றவர்கள், ஏழை எளிய மக்கள் ஏறக் குறைய மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் வரையிலும் கூடக் காத்திருக்கின்றனர்—காசு போட்டுத் தன்னை எந்த அயலானும் படுக்க அழைத்துச் செல்லாமல். இப்பழக்கம் சைப்ரஸில்[1] உள்ள பழக்கத்தைப் போன்றதாகவே உள்ளது.

இப் பழக்கங்களுடன், அவர்களுள் மூன்று இனத்தவர் களிடம் காணப்படும் சிறப்பான பழக்கமும் உண்டு. அதாவது அவர்கள் தாங்கள் பிடிக்கும் மீனைத்தவிர வேறெதையும் உணவாக உட் கொள்வதில்லை. அவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை வெயிலில் உலர்த்தி, காய்ந்த வுடன், அவற்றை இடித்துத் தூளாக்கி உரலில் வைத்து அரைப்பர். அவ்வாறு பெற்ற மீன் பொடியை லினன்[2] துணியில் சல்லடை போன்று சலித்து, கிடைக்கும் மாவு போன்ற பொருளைத் தோசையாகவோ, அடையாகவோ, வில்லைகளாகவோ சுட்டுத் தின்கின்றனர். தங்கள் ருசிக் கேற்றவாறு ரொட்டியாகவும் செய்து[3] உண்கின்றனர்.''

---

1. Cyprus 2. Linen 3, Baked into Bread

விளக்கவுரை :

பாபிலோனிய மக்களின்[1] செல்வம் : பாபிலோன்[2] நகரை இருமருங்காகப் பிரித்துச் செல்லும் யூப்ரடீஸ் நதியின் வற்றாத நீர்ப்பெருக்கே, அந்நகரத்தின் குன்றாத செழுமைக்கு முக்கியக் காரணமாகும். ஆசியாவின் முழுவிளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு இந்நகரம் ஒன்றிலேயே விளைகின்றது என்று ஹிராடடஸ் கூறுகிறார்.

ஆளுநர் திரிதண்டெக்மி[3] : பாபிலோனிய நகரின் ஆளுநர்ப் பதவி வகித்தவர் அர்டபாஸஸின்[4] மகனார் திரிதண்டெக்மி எனப்படுபவர் ஆவார். இவருடைய செல்வத்தைப் பார்க்கும் பொழுது,அந்நாட்டின் முழுச் செல்வமும் எத்தகைய தாயிருக்கும் என்று நம்மையே கணக்குப் போட்டு வியக்குமாறு செய்து விடுகிறார் ஹிராடடஸ் ஆசிரியர். ஆளுநர் திரிதண்டெக்மி ஒவ்வொரு நாளும் பெற்ற வெள்ளி நாணயங்கள் ஐந்து புஷல் அளவு அல்லது ஐந்து பைன்டுகள் அளவு ஆகும்.

அர்டபா[5] : இஃது ஒரு நாணய அளவாகும். ஓர் அர்டபா என்பது ஐந்து புஷல் அளவு அல்லது ஐந்து பைன்டுகள் அளவு ஆகும். ஐந்து புஷல் கொள்ளும் ஒரு பாத்திரத்தில் நிறைய வெள்ளி நாணயத்தைத் திரிதண்டெக்மி அன்பளிப்பாகப் பெற்று வந்தார்.

இந்திய நாய்கள்[6] : அன்று போருக்கு உதவி செய்ய இந்திய நாய்கள் அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இன்று ராஜ பாளைய நாய்கள் புகழ்பெற்றவை. அன்று, தமிழ் நாட்டின் நாய்களே அனுப்பப்பட்டிருக்கலாம்.

எள்ளிலிருந்து பிழியப்படும் எண்ணெய்[7] : பாபிலோனிய மக்கள் எள்ளிலிருந்து பிழிந்த எண்ணெயையே பயன்படுத்தி வந்தனர். தமிழ்நாட்டில் இந்த எண்ணெயே "நல்ல எண்ணெய்"[8] என்று வழங்கப்படுவதாயிற்று. "சனி நீராடு" என்பதில் நீராடு என்பது எண்ணெய் தேய்த்துக் குளித்தலையே குறிப்பிடும்.

சத்ராபி[9]: இது சத்ரபதி போன்ற ஒரு பதவி ஆகும். சத்ரபதி எனும் சொல் க்ஷேத்ரபதி என்பதன் திரிபே. க்ஷேத்ரபதி

1. Babylonians 2. Babylon 3. Tritantaechmes 4. Artabazus 5. Artaba 6. Indian Dogs 7. Sesame 8. Gingelly Oil 9. Satrapy

என்றால் "ஓர் இடத்தின் தலைவன்" என்றே பொருள்படும். எடுத்துக்காட்டாகச் சத்திரபதி சிவாஜி[1] (கி.பி. 1646-1680) என்பவரைக் கூறலாம். ஆக, சத்ரபதி என்ற சொல் க்ஷேத்ரபதி என்ற சொல்லின் திரிபே. பேரரசர் அலெக்சாண்டர்[2] கி.மு. 323-ல் இறந்தவுடன் அவருடைய இராச்சியம் பல சத்ராபிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சத்ராபியையும் ஓர் ஆளுநர் ஆண்டு வந்தார்.

தென்னைமரப் பட்டை[3] : இது இந்தியாவின் தென்பகுதியாக விளங்கிய தமிழ் நாட்டிலிருந்தும் கேரள நாட்டிலிருந்தும் அயல்நாடுகளுக்குக் கடல் கடந்து எடுத்துச் செல்லப் பட்டு,, அங்கே பயிரிட்டனர் என்றும், அதனால் அவர் பாமேசியர், பனேசியர் என்றும் வழங்கப்பட்டனர் என்றும் தெரிகிறது. மற்றும் பனையேறிகள் எனப்படும் வீரம் மிக்க மக்கள் தமிழ்நாட்டிலிருந்து கடல் கடந்து சென்று, பினீசியர் எனப்பெயர் கொண்டு, சிரியா நாட்டுக் கடற்கரை ஓரங்களில் குடியேற்றங்களை நிறுவினர். இது ஏற்கெனவே பக்கம் 35 குறிப்பு — 2-ல் கண்டோம். ஆக தென்னையும், கப்பல் எனப் படும் தோணி செய்யப்பட்ட முறை தென்னிந்தியாவிலிருந்து தமிழ் நாட்டிலிருந்தும், கேரள நாட்டிலிருந்தும் மேலைநாடு களுக்குச் சென்றது என்றது இதனால் அறிகிறோம். அன்றைக்குக் கேரளம், தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிற்று.

கேரளம் என்ற சொல் அசோகர் (கி.மு. 273-224) கல் வெட்டில்தான் முதல்முதலாகக் காணப்படுவதாகவும், அவர்களே "கேரளபுத்ரா" என்று வழங்கப்பட்டனர் என்றும் ஆங்கில வரலாற்றாசிரியர்கள் வரைந்துள்ளனர்.

ஆனால் கேரளம் எனும் சொல் கி.மு. பல நூற்றாண்டு களுக்கு முன்னரேயே வால்மீகி இராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

"சோளாந் பாண்டியாந் ஸ கேரளாந்"

— (கிஷ்கிந்தா காண்டம், : 42-12)

இதன் பொருள் "சோழ நாடும், கேரளத்தோடு கூடிய பாண்டி நாடும்" என்பதே. ஆக, கேரளம், அக்காலத்தில் பாண்டி நாட்டுடன் இணைந்திருந்தது என்றும், அது தமிழ் நாட்டைச்

1, Chatrapathi Sivaji 2. Alexander the Great 3. Palm,

சார்ந்திருந்தது என்றும் தெரிய வருகிறது. மற்றும் தமிழ் நாட்டில் சோழர், சேரர், பாண்டியர் ஆண்டனர் என்றும் தெரிகிறது. ஆக தென்னை பனை யாவும், தமிழ்நாட்டிலிருந்து கடல்கடந்து அயல்நாடுகளுக்குப் பினீசியர்களால் (பனையேறி களால்) எடுத்தேகப்பட்டன என்று கொள்வதும் பொருத்தமே.

தாலமி (கி. பி. 119—161) கூறுகிறார்:

"கேரள புத்ரா என்ற சொல்லே சேர போத்ரா என்று வழங் கப்பட்டது.

—(தாலமி: அதி: 85, பக்கம் 312)

பாபிலோனிய மக்களின் உடைகள்[1]: இவர்கள் உடுத்தும் உடைகள் தமிழர்கள் உடுத்தி வந்த உடைகள் மாதிரியே காணப் பட்டன. கால்வரை தொங்கும் ஆடை, தலை மயிரை நீளமாக வளர்த்தல், உடல் மேல் பகுதியில் வெண்மை ஆடையைப் போர்த்திக் கொள்ளுதல் — இவை யாவும் தமிழர்களின் பண்பாடே. சாக்ரடீஸ்[2] (கி. மு 469—399) எனும் தத்துவ ஞானியார், இந்தியஉடை அணிந்திருந்தார் எனக் கிரேக்க வரலாறு[3] கூறுகிறது.

திருமண முறைகள்[4]: ஒவ்வோர் ஆண்டும் பெண்களை விலை கூறி ஆடவர்க்குத் திருமணம் செய்து வைப்பது என்பது ஒரு சமுதாயமே ஏற்று நடத்தி வந்த நற்பணியாகும். திருமணம் உத்தேசமே தவிர, வேறு எந்நோக்கத்துடனும் பெண்களை விலை பேசக் கூடாது என்றொரு சட்டம் அன்றைக்கு நிலவி யிருந்தது.

சமூகமே ஏற்றுத் திருமணங்களை நடத்தியதால்தான் அன்றைக்கு விபசாரம் இருக்கவில்லை. ஆனால் நாளடைவில் இப்பழக்கம் மறைந்து விடவே, ஒவ்வொரு கன்னியும் தன் திருமணத்திற்கு விபசாரம் செய்து பணம் சேர்த்தாள். ஆனால் அவ்வாறு செய்ய அன்றைக்குச் சட்டம் உதவியளித்தது என்று ஹிராடடஸ் கூறுகிறார்.

நோயாளிகள்[5]: நாட்டில் உள்ள நோயாளிகளைச் சமு தாயமே கவனித்துக் கொள்கிறது என்றால், அதைவிடச் சிறந்த முறை வேறெதுவும் இருக்க முடியாது. போவோர், வருவோர் ஒவ்வொருவரும் அந்நோயாளியை விசாரித்துச் செல்லவேண்டும்

1. Dress of Babylonians 2. Socrates 3. Greek History 4. Marriage Customs 5. Sick Persons

என்பது நாட்டின் சட்டம். மருத்துவர்கள் இல்லையே தவிர, நாட்டில் ஒவ்வொருவரும் அனுபவ வைத்திய முறைகளை மேற் கொண்டிருந்தனர் என்பது இதனால் தெளிவாகிறது

குளியல்: ஆணும் பெண்ணும் கலவி செய்து சிற்றின்பம் அனுபவித்தபிறகு, அவர்கள் குளித்துவிட்டே பாத்திரங்களைத் தொடவேண்டும் என்று கூறுவது தென்னிந்திய தமிழர்க் குடும் பங்களில் உள்ள பழக்க வழக்கத்தையே மேற்கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. பினீசியர்[1]களால் இப்பழக்கம் அஸ்ஸீரிய நாட்டிற்கும்[2] பின்னர் பாபிலோனுக்கும்[3] பரவச் செய்யப்பட்டது. பினீசியாவிலிருந்து சில பழக்க வழக்கங்கள் பின்னர் கிரேக்க நாட்டினர்களால்[4] ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அயலானுடன் சேர்க்கை: இது நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகிறது. இவ்வாறு தெய்வத்துக்காக—தெய்வக் கட்டளையாக - ஏற்று அயலானுடன் சேர்வது பாவச் செயலாகக் கருதப்படவில்லை. தம் உடலைக் கடவுளுக்கு அர்ப்பணிக்க வேண்டும். கடவுள் நேரே வரமாட்டார். மனிதன் உருவில் தான் வருவார். ஆக கோயிலுள் எதிர்படும் மனிதனே கடவுட் சொரூபம் எனக் கொண்டு உடல் சேர்க்கை கொள்ளப்பட்டது. ஆனால், கோயிலுக்கு வெளியே வந்ததும், அப்பெண்களை எவ்வளவு பணம் கொடுத்தாலும், விலைக்கு வாங்கி விட முடியாது. இது அப்பெண்ணின் மன உறுதியைக் காட்டுகிறது. திருக்குறள் கூறுகிறது:

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்." —(திருக்குறள். 54)

சைப்ரஸ்[5] 'தீவிலும் இவ்வாறான பழக்கம் நிலவி வந்ததென ஹிராடடஸ் கூறுகிறார். சைப்ரஸ் தீவில் அப்ரோடைடி தெய்வ வழிபாடு சிறந்திருந்தது.

இவ்வாறான வழக்கம் பைபிளில்[6] குறிப்பிடப்பட்டுள்ளது:

"Lie down until the morning. And she lay at his feet until the morning and she rose up before one could know another. And he said, let it not be known that a woman came unto the floor". —(Old Testament, Ruth-3-14)

மீன் மட்டும் உண்பவர்: இவ் இனத்தவர் இக்தியோபகி[7] என்ற பெயரால் வழங்கப்பட்டனர்.

பிளினி (கி.பி. 23—79) கூறுகிறார்:

"இக்தியோபகி மீன் மட்டும் உண்ணும் இனத்தவர்."

—(பிளினி: அதி: 5 பக்கம் 105)

---

1. Phoenician 2. Assyria 3. Babylon 4. Greeks 5. Cyprus 6. Bible 7. Ichthiophagi

13. சைரஸும் மஸஜெடே மக்களும்

"அஸ்ஸீரியாவை[1] வென்றதும், சைரஸின்[2] அடுத்த அவா மஸஜெடே[3] மக்களை வெல்லவேண்டும் என்பதே. மஸஜெடே மக்களின் நாடு மிகத் தொலைகிழக்கில்—அரக்ஸிஸ் நதிக்கும்[4] அப்பால்—இருந்தது. அவர்கள் போரில் மிக்க தேர்ச்சியடைந்தவர்களாயும், சித்தியன்[5] பரம்பரையைச் சார்ந்தவர்களாயும் காணப்பட்டனர். அரக்ஸிஸ் எதைப் போன்று இருந்தது என்பது சரிவரத் தெரியவில்லை. சிலர் அது டான்யூப் நதி[6]யை விடப்பெரியதென்றும், சிலர் அவ்வளவு பெரியது அன்று என்றும் கூறுகின்றனர். அதில் பலப்பல தீவுகள் காணப்படுகின்றன என்றும், ஒவ்வொன்றும் லெஸ்போ[7] அளவு உள்ளதாகவும் செய்தி கிடைத்துள்ளது. அத்தீவுகளின் மக்கள் வேர்களை உண்டே வாழ்கின்றனர். மற்றும் அவர்கள் ஒருவகைப் பழத்தை வைத்துக்கொண்டுள்ளனர். அப் பழமரம் அங்குப் பயிரிடப்படுகிறது. அம் மக்கள் விருந்தின்போது தீ ஒன்று மூட்டி, அதைச் சுற்றி அவர்கள் உட்கார்ந்து, அப் பழத்தினை ஒவ்வொன்றாக அத்தீயில் எறிவர். அப்பழம் புகையைக் கிளப்பும். அப் புகை அவர்களை ஒரு மயக்கத்திலும் போதையிலும் ஆழ்த்திவிடும். மற்றும், மேலும் மேலும் பழங்களை அத்தீயில் விட்டெறிய, புகை அதிகமாகி, அதன் காரணமாக அவர்கள் எழுந்து குதித்துக் கும்மாளமடித்துப் பாடி நடனமாடுவர். அப்பழத்தின் புகை அவர்களை அத்தகைய பெரும் போதையில் ஆழ்த்திவிடும்.

---

1. Assyria 2. Cyrus 3. Massagetae 4 River Araxes 5. Scythian 6. River Danube 7. Lesbo

அரக்ஸிஸ் ஆறு மடீனி நாட்டில்[1] உள்ளது; மற்றும் அங்குதான் உற்பத்தியாகிறது. அதற்கு 40 கழிமுகங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சதுப்பான சேறுள்ள நிலத்தில் காணப்படுகிறது. அங்கு மக்கள் மீன் உணவை உட்கொண்டு வாழ்கின்றனர். மற்ற கிளைகள் காஸ்பியன் கடலில் விழுகின்றன. காஸ்பியன்[2] என்பது ஒரு தனி கடலே. மற்ற எந்தக் கடலுடனும் அதற்குத் தொடர்பு கிடையாது. மெடிடெரேனியன்,[3] அட்லாண்டிக்[4], இந்தியப் பெருங்கடல்[5] ஆகிய இவை ஒரே கடலின் பல்வேறு பகுதிகளாக விளங்குவதுபோல அது இருக்கவில்லை. தனியான ஒரு கடலாகவே உள்ளது. அதற்கு மேல் காகஸஸ்[6] மலைத்தொடர் நீண்டு தொடர்ந்து செல்கிறது. இங்கே மரம் ஒன்று உள்ளது. அதன் இலைகளை இடித்துச் சாறுபிழிந்து உலர்த்தி வில்லைகளாக ஆக்குகின்றனர். அவ்வில்லைகளை நீரிலிட்டுக் கரைத்துத் துணியை நனைத்தால், அந்தச் சாயம் என்ன செய்தாலும் மங்காமல் உறுதியாகவே இருந்துவிடும். அதில் நனைத்த நூலை வைத்து ஆடை நெய்கின்றனர். அவ் ஆடையின் சாயம் என்றும் மங்குவதில்லை. ஆனால், அவ்விடத்திய மக்கள் விலங்குகள் போல வெட்ட வெளியிலேயே கலவி செய்து சிற்றின்பம் அனுபவிக்கின்றனர்.

சைரஸ்[7] அரசர், மஸஜெடே[8] மக்களைப் போரில் வெல்ல மிகவும் முனைந்தார். இதற்குக் காரணங்கள் இரண்டு உள்ளன. முதலாவது தாம் மனித பிறவிக்கு அப்பாற்பட்டவர் என்ற கருத்து; இதுகாறும் போர்மேற்சென்ற நாடுகளில் தோல்வியே கண்டதில்லை; வெற்றி ஒன்றையே கண்டார். ஒரு முறை ஒரு நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார் எனின், அந்நாடு அடிமைப்படுவதினின்று தப்ப முடியாது என்பது அதுகாறும் அவர் கண்ட உண்மை.

அக்காலத்தில் மஸஜெடேயின் அரசியாக இருந்தவள் டோமிரிஸ்[9] என்பவள் ஆவாள். அவள் தன் கணவன் இறந்தவுடன் அந்த அரியணையில் தான் அமர்ந்தாள்; ஆட்சி செய்

1. Matieni 2. Caspian 3. Mediterranean 4. Atlantic 5. Indian Ocean 6. Caucasus 7. Cyrus 8. Massagetae 9. Tomyris

யத்தொடங்கினாள். சைரஸ் அரசர், அவளைத் தம் மனைவியாக ஆக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் தூது ஒன்று விடுத்தார். ஆனால், அவளுக்குத் தெரியும், அவர் தன்னை மனைவியாக ஆக்கிக்கொள்ள விழையவில்லை; தன் நாட்டை மனைவியாக்க விழைகின்றார் என. சைரஸின் சூழ்ச்சி பலிக்கவில்லை. அதன் பிறகு, எதிர்த்து வலிமையால் வெற்றிகொள்ளலாம் எனச் சைரஸ் முடிவெடுத்தார். உடன் அவ் அரசியிடமிருந்து சைரஸுக்குக் கடிதம் ஒன்று கிடைத்தது. "மிடிய நாட்டுப் பேரரசே! என் நாட்டின்மீது படையெடுத்து உங்களுக்கு என்ன வந்துவிடப் போகிறது? என்னையும் என் நாட்டையும் வாழவிடுங்கள். சமாதானத்துடன் வாழ முயலுவோம். ஆனால் உறுதியாக மஸஜெடே மக்களைப் போரில் ஈடுபடுத்துவேன் என்று நீங்கள் நினைப்பின், நீங்கள் பாலத்தை மேற்கொண்டு தொடர்ந்து கட்ட வேண்டாம். மூன்று நாள்களுக்குப்பிறகு நாங்களே உங்கள் பக்கம் வருவோம். அல்லது நீங்கள் எங்கள் பக்கம் வந்து சேர்வதாயினும் சரி, வாருங்கள்!" என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தாள்.

இதற்கிடையில் சைரஸ், தம் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துபேசி, குரோஸஸ்[1] கூறியபடியே தாம் ஆற்றைக் கடந்து, பகைவர் நாட்டினுள் புகத் திட்டமிட்டார். மற்றும், குரோஸஸின் பாதுகாப்பில் தம் மகன் கேம்பைஸிஸைத்[2] தம் நாட்டுக்கு அனுப்பிவிட்டார்—அவன்தான் தமக்குப் பின்னர் விளங்கப் போகும் அரசன் என்று உறுதியாக நினைத்து. இருவரும் பாரசீகத்துக்குத்[3] திரும்பிச் சென்று விட்டனர்.

உடன் சைரஸ் தம் இராணுவத்துடன் ஆற்றைக்கடந்து மஸஜெடே[4] நாட்டினுள் புகுந்தார். மஸஜெடே மக்கள், அவ் இராணுவ மக்கள்மீது பாய்ந்து சிதறி ஓடச் செய்தனர். இருப்பினும் சைரஸ் அரசரின் வீரர்கள் தங்கள் உணவிற்காக நிறைய தானியங்களைச் சமைத்து, மதுபானத்தையும் அருந்துவதற்காக நிறைய வைத்திருந்தனர். பாரசீக இராணுவம் சிதறிவிடவே, மஸஜெடே மக்கள், அங்கு வைக்

---

1. Croesus 2, Cambyses 3. Persia 4. Massagetae

கப்பட்டிருந்த ஆகாரத்தையும் உண்டு, மதுபானத்தையும் அருந்தி, மிகுந்த போதையில் ஆழ்ந்திருந்தபோது, மீண்டும் சைரஸின் இராணுவ வீரர்கள் அங்கு வந்து மஸஜெடே மக்களை வெகு எளிதில் கொன்று குவித்தனர். அத்துடன், அந்நாட்டின் அரசி டோமிரிஸின்[1] மகன் ஸ்பார்கா பைஸிஸை[2]ச் சிறைப்படுத்தி எடுத்துச் சென்று விட்டனர்.

அவ்வாறு எடுத்தேகப்பட்ட டோமிரிஸின் மகன், சைரஸை நோக்கித் தன் தளைகளைக் கழற்றிவிடுமாறு வேண்டினான். அவ்வாறே சைரஸும் அனுமதி கொடுத்து, அம்மகன் தன் தளைகளைக் கழற்றி, கைவிலங்கையும் நீக்கி விடவே, அவன் ஒரு சிறு கத்தியை எடுத்துக் கொண்டு தன்னையே மாய்த்துக் கொண்டு விட்டான்.

இதற்கிடையில் டோமிரிஸும், சைரஸுக்குக் கடிதம் ஒன்று எழுதி, தன் மகனை விட்டுவிடுமாறு மிக்க இரக்கம் தோன்ற வேண்டினாள். ஆனால் அவ்வேண்டுகோளுக்குச் சைரஸ் செவிசாய்த்தார் அல்லர். இருப்பினும், மஸஜெடே மக்கள் என்றும் இல்லாத வீரத்துடன் போர்புரிந்து, சைரஸின் இராணுவ வீரர்கள் தோல்வியைத் தழுவுமாறு செய்துவிட்டனர். அந்தப் போரில் சைரஸ் உயிரிழந்தார்.

மஸஜெடே மக்களின் அரசி டோமிரிஸ், யுத்தகளத்தில் சைரஸ்அரசரின் உடலைக் கண்டுபிடித்து,அவ்வுடலில் உள்ள தலையை மட்டும் வெட்டி, ஒரு தொட்டி நிறைய இரத்தம் நிரப்பி அதில் சைரஸின்[3] தலையை வீசி எறிந்தாள். "உன் இரத்த வெறியைத் தீர்த்துக் கொள்," என்று கூறிவிட்டு, அவ்விடமிருந்து அவ்வரசி அகன்று விட்டாள்.

சைரஸ் அரியணைமீது அமர்ந்து அரசாட்சி செய்த காலம் 29 ஆண்டுகள் ஆகும்.

இவ்வாறாகச் சைரஸ் மன்னர் தம் முடிவைத் தாமே தேடிக்கொண்டார் என்று கூறப்படுகிறது. சைரஸைப் பற்றிய உண்மையான வரலாறு எதுவோ, அதை மட்டுமே இங்கு நான் கொடுத்திருக்கிறேன்.

---

1. Tomyris 2. Sparga Pises 3. Cyrus

மஸஜெடே[1] மக்களின் உடை, சித்தியர்களின்[2] உடைகளைப் போன்றே காணப்படுகின்றன. சிலர் குதிரை ஏற்றம் செய்வர்; சிலர் செய்யார். அவர்கள் பயன்படுத்துவது பொன், வெங்கலம் உலோகம் மட்டுமே. அவர்களுள் வில் எய்பவர் பலர் உள்ளனர். வெள்ளி, இரும்பு அவர்கள் அறிந்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் மனைவி எனும் மங்கை ஒருத்தி உண்டு. ஆனால் எல்லா மனைவிகளும் எவருடனும் வேறுபாடின்றிப் பழகலாம்; கலவி செய்யலாம்; சிற்றின்பம் அனுபவிக்கலாம் என்ற வழக்கம் அவர்களிடையே காணப்பட்டது. ஒருவர் ஒரு மங்கையுடன் கலவி செய்து சிற்றின்பம் பெறவிரும்பினால், அவர் செய்ய வேண்டியது, தன் அம்பறாத்தூணியை[3] அம்மங்கையின் பெட்டிக்கு முன் வைத்துவிட்டு உள்ளே செல்ல வேண்டும். அவ்வளவே. அவ் அம்பறாத் தூணி வெளியில் இருக்கும்வரை வேறு எவரும் உள்ளே நுழையக்கூடாது.

அவர்களுள் மற்றொரு பழக்கமும் காணப்படுகிறது. ஒருவர் மிகவும் வயதடைந்துவிட்டால், அவர் உறவினர் யாவரும் அவ் வயோதிகருக்கு விருந்து ஒன்று அளிப்பர். பின்னர், ஆடு, மாடுகள் வெட்டப்படும் இடத்திற்கு அனுப்பப்படுவார். அவரது உடல் துண்டாக்கப்பட்டதும், அவரது ஊனால் செய்யப்பட்ட உணவை அவர் உறவினர் யாவரும் உண்பர். ஆனால், நோய்வாய்ப்பட்டவர்கள் கொன்று தின்னப் படுவது கிடையாது. அவர்கள் புதைக்கப்படுகின்றனர். அந் நாட்டு மக்களுக்கு விவசாயம், பயிரிடுதல் தெரியாது. ஆகையால் அவர்கள் அரக்ஸிஸ் ஆற்றில்[4] கிடைக்கும் மீன்களை மட்டும் உண்டு வாழ்பவர் ஆவர்.

அவர்கள் தொழுதெழும் ஒரே கடவுள் சூரியன்[5] ஆகும், அக்கடவுளுக்குக் குதிரைகள் பலியிடப் படுகின்றன. இவ்வாறு பலியிடப்படுவதன் நோக்கம், சுறுசுறுப்பாக இயங்கும் கடவுளுக்குச் சுறுசுறுப்பாய் இயங்கும் விலங்கு பலியிடப்படுவதே. மற்றும், மஸஜெடே மக்கள் நிறையப் பால் அருந்துவர்.”

---

1. Massagetae 2. Scythians 3. Quiver Box 4. River Araxes 5. Sun God

விளக்கவுரை:

மஸஜெடே[1]: இந்நாட்டு மக்கள் போர் புரிவதில் வல்லவர்கள். மத்திய ஆசியாவில்[2], ஜக்ஸார்டிஸ்[3] ஆற்றுக்கு வடக்கே உள்ளது இவர்களது நாடு. ஜக்ஸார்டிஸ் நதியைத்தான் ஹிராடடஸ், அரக்ஸிஸ்[4] என்று குறிப்பிட்டார். காஸ்பியன் கடலுக்குக்[5] கிழக்கே வாழும் எல்லா நாடோடி மக்களும் மஸஜெடே எனும் பெயரால் வழங்கப்பட்டனர். படையெடுத்துத் தோல்வி காணாத சைரஸ்[6], இறுதியில் இவர்கள்மீது படையெடுத்து, போரில் தோற்றுக் கொல்லப்பட்டார். இம்மக்களின் அரசியாகத் திகழ்ந்தவள் டோமிரிஸ்[7] ஆவாள்.

அரக்ஸிஸ்[8]: இந்த ஆற்றின் உண்மையான பெயர் ஜக்ஸார்டிஸ் என்பதே. ஜக்ஸார்டிஸின் நவீன பெயர் சிர் டார்யா[9]. இந்நதி ஏரல் கடலில் கலக்கிறது; உற்பத்தியிடம் டியன்ஷான் மலைத்தொடர்[10]. இந்நதிக் கரையில் குடிகொண்ட மக்கள் இனம் ஜக்ஸார்தே[11] எனப்படும் சித்தியர்[12] இனம் ஆகும்.

லெஸ்போ[13]: இஃது ஈஜியன் கடலில்[14] உள்ள பெரிய தீவு. ஆசியா மைனரில்[15] ஒரு பகுதி. இத்தீவில் கல்வியிற் சிறந்தவர்கள் பலர் பிறந்திருக்கின்றனர். கவிஞர்கள்: டெர்பாண்டர்[16] அல்சேயஸ்[17], ஸாஃபோ[18]; வரலாற்றாசிரியர் ஹெல்லானிகஸ்[19] தத்துவஞானியர் தியோ பாஸ்ட்ரஸ்[20].

பழமரம்[21]: இது கஞ்சா வகைச் செடியில் காய்த்த காயையும், பழத்தையும் குறிப்பிடும். கஞ்சாச் செடி போதையைத் தரும். ஒருவகை இலையாகும். இது சீனாவில் மிகுதியாகப் பயிரிடப்பட்டு, பின்னர் இந்திய மண்ணிலும் பயிரிடப்படுவதாயிற்று. இந்துச் சாமியார்கள் கஞ்சாப் புகை பிடிப்பதில் விருப்பமுள்ளவர்கள். முகலாயர் காலத்தில் முஸ்லிம்கள் தாங்கள் பிடிக்கும் ஹுக்காக்களில் இக் கஞ்சா நிறையப் பயன்படுத்தப்

---

1. Massagetae 2. Asia 3. Jaxartes 4. Araxes 5. Caspian Sea 6. Cyrus 7. Tomyris 8. Araxes 9. Syr Darya 10. Tienshan Mountain Range 11. Jaxartae 12. Scythians 13. Lesbo 14. Aegaean sea 15. Asia Minor 16. Terpanter 17. Alcaeus 18. Sappho 19. Hellanicus 20. Theophastrus 21. Narcotic Tree

பட்டது. இப்பழத்தின் புகையைச் சுவாசிக்கும் மக்கள், போதையேறி, தன்னினைவு இழந்து கூத்தாடுவர் என்று கூறப்பட்டுள்ளது. கஞ்சா, கிரேக்க மொழியில் கஞ்சோபியர்[1] என்று வழங்கப்பட்டது.

காஸ்பியன் கடல்[2]: அரக்ஸிஸ்[3] எனப்பட்ட ஜக்ஸார்டிஸ் நதி[4] ஏரல் கடலில்[5] கலந்தது. அக்காலத்தில் ஏரல் கடலுக்கும் காஸ்பியன் கடலுக்கும் வேறுபாடு காணத் தெரியவில்லை.

சாயம் அளிக்கும் மரம்: இச்செடி பிற்காலத்தில் அவுரி அல்லது இண்டிகோ[6] என்று வழங்கப்பட்டது. துணிகளை இச்சாயத்தில் நனைத்து, சாயமேற்றி, அயல்நாடுகளுக்கு அனுப்பும் வாணிகத்தில் ஈடுபட்டனர்.

இந்த அவுரிச் சாயத்தைப் பற்றி **மார்க்கோபோலோ** (கி பி. 1254-1324) பின்வருமாறு கூறுகின்றார்:

"மிகவும் உயர்ந்த வகையைச் சார்ந்த அவுரி எனும் நீலச் செடியும் பெருவாரியான அளவில் பயிராக்கப்படுகிறது. இச்செடிகளைப் பாத்திகளில் மூலிகைகளைப் போன்று பயிரிட்டு, அவற்றை வேர்களுடன் பிடுங்கி, தண்ணீர் நிரம்பிய தொட்டிகளில் இட்டு, அவை தாமே நன்றாக ஊறி அழுகிப் போகும் அளவுக்கு விட்டு விடுகின்றனர். அதன் பிறகு அச்செடிகளையும், இலைகளையும் கசக்கிப் பிழிந்து, அவற்றினின்று வரும் சாற்றைக் கிண்ணங்களில் கொட்டிக் காய வைக்க, அச்சாறு சில நாள்களில் இறுகிக் கட்டிகளாகிவிடும். அக்கட்டிகளைச் சிறுசிறு துண்டுகளாகச் செய்து[7], இப்பொழுது நமக்குக் கொடுக்கப்படும் அளவில் விற்பனைக்கு அனுப்புகிறார்கள்."

—(மார்க்கோபோலோ: அதி: 8, பக்கம் 72)

டோமிரிஸ்[8]: இவள் மஸஜெடே மக்களின்[9] அரசியாகத் திகழ்ந்தாள். தன் கணவன் இறந்த பிறகு, அந்நாட்டைத் தானே அரசியாயிருந்து ஆண்டு வந்தாள். சைரஸுக்கும்[10] அரசி டோமிரிஸுக்கும் நடந்த போரினையும், அதில் டோமிரிஸின் மகன் ஸ்பார் காபைஸிஸ்[11] இறந்து விட்டதும், சைரஸ் தோல்வி அடைந்ததும், அவர் தலை வெட்டப்பட்டு இரத்தம் நிரப்பப்பட்ட தொட்டியில் வீசியெறியப்பட்டதும் ஆகிய விவரங்களை ஹிராடடஸ் இங்குத் தருகிறார்.

---

1. Consopeare 2. Caspian Sea 3. Araxes 4. Jaxartes 5. Aral Sea 6. Indigo 7. Cakes 8. Tomyris 9. Massagetae 10. Cyrus 11. Sparga Pises

கேம்பைஸிஸ்[1]: சைரஸின் மகன். தந்தை இறந்ததும் அம் மகன் காம்பைஸிஸ் பட்டமெய்தி கி. மு. 529-522 ஆக 7 ஆண்டுகள் அரசாட்சி செய்தார். கி. மு. 525-ல் எகிப்தை வென்றார். இவர் ஸிரியாவில்[2] எக்படன[3] எனும் இடத்தில் நோய் கண்டு, கி. மு. 522-ல் காலமானார். காம்பைஸிஸ், தம் பாட்டனாரின் பெயரான காம்பைஸிஸ் என்பதையே வைத்துக் கொண்டிருந்தார். ஆக சைரஸின் தந்தை காம்பைஸிஸ் I என்றும், அவருடைய மகன் கேம்பைஸிஸ் II என்றும் வழங்கப்படலாயினர்.

சைரஸ்: அஸ்டியகெஸின்[4] பெண் வயிற்றில் பிறந்த பெயரன். இவர் வாழ்ந்து வந்த காலம் கி. மு. 579-529 ஆக 50 ஆண்டுகள் வாழ்ந்தார். ஆனால் அரசாண்ட ஆண்டுகள் 29 அதாவது கி. மு. 558-529. கி. மு. 529-ல் போரில் கொல்லப்பட்டு இறந்தார். மற்றும் பக்கம் 84, குறிப்பு-1 பார்க்கவும்.

பெண்கள் எவருடனும் வேறுபாடின்றிக் கலவி செய்யலாம்:

மஸஜெடே மக்கள் நாடோடி இனத்தைச்[5] சார்ந்தவர்கள் ஆனதால், அற வாழ்வை—கட்டுப்பாடான வாழ்க்கையை—அவர்களிடம் காண முடியாது. அதன் காரணமாக, அவர்களிடம் கற்பிற்கு இலக்கணம் காணமுடியாது. அம்புப் பெட்டியை அவர்கள் கூண்டின்முன் வைத்துவிட்டு, உள்ளே அந்தப் பெண்ணுடன் கலவி செய்யலாம் என்பது மஸஜெடே மக்களின் வியப்பு மிக்க சட்டமாக இருந்தது.

வயதானவர் இறத்தல்: வயதானவர்களுக்கு விருந்து வைத்துக் கொல்லுதல் சில நாடுகளில் காணப்பட்டது.

அதிலும் நோயுற்றவர்கள் புதைக்கப்பட்டனர்.

சூரிய வழிபாடு[6]: பாரசீகர் போல[7], மஸஜெடே மக்களும்[8] சூரிய வழிபாட்டினர் ஆவர். அச்சூரியக் கடவுளுக்குக்[9] குதிரைகள் பலியிடப்பட்டன. குதிரை[10] சுறுசுறுப்பான விலங்கு. ஆக, சுறுசுறுப்பான சூரியக் கடவுளுக்கு, சுறுசுறுப்பான குதிரைகளைப் பலியிடுவது நியாயமே எனக் காரணம் கற்பிக்கப்படுகிறது.

மீன் மட்டும் உண்ணுதல்[11]: மஸஜெடே மக்கள் மீனை உலர்த்திப் பொடி செய்து, அதைக் கொண்டு தோசை, ரொட்டி

---

1. Cambyses 2. Syria 3. Ecbatana 4. Astyages 5. Nomads 6. Sun-worship 7. Persians 8. Massagetae 9. Sun-God 10. Horse 11. Fish Eater

முதலியவை செய்து உண்பர். அரக்ஸிஸ்[1] ஆற்றில்—அதாவது ஜக்ஸார்டிஸ்[2] ஆற்றில்—மீன்கள் எப்பொழுதும் கிடைக்கும். இந்த அரக்ஸிஸ் ஆறுதான் பின்னர் சிர் தார்யா[3] என்று வழங்கப் பட்டது. இந்த ஆறு ஏரல் கடலில் கலக்கிறது.

மீன் மட்டும் உண்பவர் இக்தியோபகி[4] என்ற பெயரால் வழங்கப்பட்டனர்.

பெரிப்ளூஸ் (கி. பி. 50-80) எனும் நூல் கூறுகிறது:

“முதல் முதல் அவ்வலைஞர்கள் இஃதியோபகி என்ற பெயராலேயே வழங்கப்பட்டனர்.”

– (பெரிப்ளூஸ்: அதிகாரம் 1, பக்கம் 6)

1. Araxes 2, Jaxartes 3. Syr Darya 4. Ichthiophagi

புத்தகம் 2

1. முதல் ஆதி இனத்தவர்

''சைரஸ்[1] பேரரசருக்குப் பிறகு அவர் மகன் கேம்பை ஸிஸ்[2] அரியணை ஏறினார். ஆட்சியை ஏற்று நடத்தத் தொடங்கியதும், எகிப்தின்மீது[3] படையெடுத்துச் செல்லும் முயற்சியில ஈடுபடலானார்.

சம்மேடிகஸ்[4] அரசாட்சிக்கு முன்னர், உலகில் எல்லா இனங்களைக் காட்டிலும் தங்கள் இனமே மிகப் பழமை வாய்ந்த இனம் என்று எகிப்தியர்கள்[5] நினைக்கலாயினர். ஆனால், சம்மேடிகஸின் ஆட்சியேற்புக்குப் பிறகு, அந்த இனத்தின் பழங்காலத் தன்மைக்கு ஒரு முடிவுகட்டத் திட்ட மிட்டார். அதன் காரணமாக சம்மேடிகஸின் காலம் முதற் கொண்டு பிரிஜியர்களே[6] முதன்மையான இனத்தவர் என்றும், எகிப்தியர்கள் அவர்களுக்கு இரண்டாவது நிலையை வகிப் பவரே என்றும் எண்ணப்படலாயிற்று. இதற்குச் சம்மேடிகஸ் மிக்க ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு ஒரு வழியைக் கண்டு பிடித்தார். அவ் இருவர் இனத்திலும் எளியகுடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு குழந்தையை எடுத்து, ஓர் ஆட்டிடைய னிடத்தில் கொடுத்து வளர்க்கச் சொன்னார். ஆனால், ஒரு நிபந்தனை மட்டும் விதித்தார்—எவரும் அக் குழந்தைகள் எதிரே ஒரு சொல் கூடப் பேசக்கூடாது என்று. அவ் ஆட்டி டையன் அவ்வப்பொழுது வெள்ளாடுகளைக் கொணர்ந்து, அக் குழந்தைகளுக்குப் பால் கறந்து கொடுத்துவிட்டு, அழைத்துச் சென்றுவிடுவான். இவ்வாறு செய்வதன்காரணம்,

---

1. Cyrus 2- Cambyses 3, Egypt 4, Psammetichus 5, Egyptians 6, Phrygians

அக்குழந்தைகள் தங்கள் புரியாத மழலைப் பேச்சுக்குப் பின், எந்தச் சொல்லைச் சொல்கிறார்கள் என்பதைக் கண்டு, அதுவே அக்குழந்தைகள் பேசும் முதல் சொல் ஆனதால், அந்தச்சொல் எந்த இனத்தைச் சார்ந்தது என்று கண்டு, அக்குழந்தை இனமே முதல் ஆதி இனம் எனக்கண்டுபிடித்து விடலாம் என்பதே. அவ்வாறே ஏற்பாடுகளும் செய்யப் பட்டன.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் அவ் ஆட்டிடையன் அக் குழந்தைகள் இருக்கும் குடிசையின் கதவுகளைத் திறக்கும்பொழுது, இரண்டு குழந்தைகளும் தங்கள் விரித்த கைகளுடன் அவ் ஆட்டிடையனிடம் தாவிச் சென்று, "பிகோ"[1] என்ற சொல்லைக் கூறின. அரசன் அவ்விரு குழந்தைகளையும் தன்னிடத்திற்குவர ஏற்பாடுகள் செய்தான். அவ்வரசனைக் கண்டதும் அக்குழந்தைகள் அதே 'பிகோ' என்ற சொல்லைக் கூறிக்கொண்டு அரசனிடம் ஓடி வந்தன. உடன் அரசன் தன் அவைப் புலவர்களைக் கூப்பிட்டு "பிகோ" எனும் சொல் எம்மொழியைச் சார்ந்தது என்று கூறுங்கள் என்றான். அவர்களும் பல ஆராய்ச்சிகள், வாதங்களுக்குப் பிறகு, அச்சொல் பிரிஜியன் மக்கள் மொழி[2] என்றும், "பிகோ" எனும் சொல், "ரொட்டி"[3] எனப்படும் சொல்லின் உருவமே என்றும் கூறினர். இக்கூற்றினைக் கேட்ட எகிப்தியர்[4], தாங்கள்தாம் ஆதியினத்தவர் என்று கொண்ட கருத்தைப் பிரிஜியர்களுக்கு[5] விட்டுக் கொடுத்தனர். அன்றுமுதல் பிரிஜியர்களே ஆதி இனத்தவர் எனும் கருத்து வெளிப்படையாகவே ஒப்புக் கொள்ளப்பட்டது. இக்கதையையே கிரேக்கர்கள்[6] வேறு விதமாகக் கூறிவந்தனர். அதாவது அக்குழந்தைகளை வளர்க்கும் செவிலியர்களின் நாக்குகள் துண்டிக்கப்பட்டன என்றும், அவர்கள் பேச முடியாத காரணத்தால், குழந்தைகள் தாங்களாகவே எச்சொல்லையும் கூறும் என்றும், அவ்வாறு கூறும் முதல் சொல்லை வைத்து ஆதி இனத்தைக் கண்டுபிடிக்கலாம்

---

1. Becos 2. Phrygian Language 3. Bread 4. Egyptians 5. Phrygians 6. Greeks

எனவும் கூறி வந்தனர். ஆனால், குருமார்கள்[1] கூறிய கதையையே நான் இங்கு எடுத்துக் கூறியுள்ளேன்."

விளக்கவுரை :

புத்தகம் 2-ல் எகிப்தைப் பற்றிய ஆதி வரலாறும், புவியியல் வர்ணனைகளும், பிரமிடுகள்[2], அரசர்கள் பற்றிய விவரங்களும் தரப்பட்டுள்ளன.

சைரஸ்[3] : இவர் கி.மு. 579 - 529 வாழ்ந்த காலம் ஆகும். அதாவது 50 ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். மற்ற விவரங்களுக்குப் பக்கம் 84, குறிப்பு-1 பார்க்கவும்.

கேம்பைஸிஸ்[4] : இவர் சைரஸ் அரசரின் மகன். இவர் ஆண்ட காலம் கி.மு. 529-522. அதாவது 7 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

சம்மேடிகஸ்[5] : இவர் எகிப்தின்[6] மன்னராக விளங்கினார் இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 671-617 அதாவது 54 ஆண்டுகள் ஆண்டார். சீதோ மன்னர் இறந்தவுடன், சுதந்திரமடைந்த 12 நாடுகளுள் இவர் ஆண்ட நாடும் ஒன்றாகும். முதலில் மற்ற அரசர்களால் நாடு கடத்தப்பட்டாலும், பின்னர் அயோனியர்[7] காரியர்[8] இனத்திலுள்ள கொள்ளைக்காரர்களின் உதவி கொண்டு, அவ்வரசர்களை வென்று எகிப்தின் தலைசிறந்த அரசராக ஆனார். ஆயினும், அவர் தம் ஆட்சியில் அன்னியர்கள் பலர் பணி செய்ய அமர்த்தப்பட்டனர் என்ற காரணமாக. அவர் ஆட்சியிலிருந்த இராணுவ மக்கள் ஆயிரக்கணக்கான அளவில் எதியோபியா[9]விற்குக் குடியேற்றம் செய்தனர். அவ்வாறு நாடுவிட்டு நாடு சென்ற 240,000 மக்களுக்கு எதியோபியாவில் புகலிடம் கொடுத்து, அவ்வரசர், அவர்களுக்காகத் தனிமுகாம்களை அமைத்துக் கொடுத்தார்.

—(A Smaller Classical Dictionary : Page 433)

பிரிஜியர்கள்[10] : ஆசியா மைனரில்[11] ஒரு பகுதியின் பெயர். பிரிஜியா. இந்நாட்டில் கார்டியஸ்,[12] மைதாஸ்[13] ஆகியவர்கள் அரசர்களாக இருந்துள்ளனர். இந்நாடு குரோஸஸால் வெல்லப்பட்டு, பாரசீகப்[14] பேரரசுடன் இணைக்கப்பட்டு விட்டது.

---

1. Priests 2. Pyramids 3. Cyrus 4. Cambyses 5. Psammetichus 6. Egypt 7. Ionians 8. Cari 9. Ethiopia 10. Phrygians 11. Asia Minor 12. Gordius 13. Midas 14. Persia

அன்று முதல் கிரேக்கர்களாலும்[1], ரோமானியர்களாலும்,[2] அடங்கி நடப்பதற்கும், மடமைத் தனத்துக்குச் சுட்டிக் காட்டப் பட காரணமாகவும் ஆயினர்.

இங்குப் பிரிஜியர்கள் ஆதி இனத்தவரா, எகிப்தியர் ஆதி இனத்தவரா என்பதைச் சம்மேடிகஸ் ஒரு பரிசோதனை செய்து மெய்ப்பித்தார் என்றும், அதில் பிரிஜியர்களே ஆதி இனத்தைச் சார்ந்தவர் என்றும், எகிப்தியர் அப் பிரிஜியர்களுக்கு இரண்டாம் நிலையிலேயே எண்ணப்படக் கூடியவர் என்றும் அவ்வாராய்ச்சி யால் கண்டுபிடிக்கப்பட்டதாக ஹிராடடஸ் கூறுகிறார்.

மற்றும் பக்கம் 61, குறிப்பு-15 பார்க்கவும்.

பிகோ[3] : இச்சொல் பிரிஜியன் மொழியில் "ரொட்டி"[4] எனும் பொருளைத் தரும் சொல்லாகும். பிரிஜியன் மொழி யிலேயே குழந்தை 'பிகோ' என்ற சொல்லைக் கூறியதால் அதுவே எகிப்திய மொழியைவிடப் புராதனமானது என்று தீர்ப்புக் கூற அரசருக்கு உதவிற்று.

1. Greeks 2. Romans 3. Becos 4. Bread

2. எகிப்தியர்களின் வானவியல் வளர்ச்சி

"**எகிப்தின் கணக்கியல்:** எகிப்தியர்கள்[1] வானவியலை[2] நன்கு கற்று, கூர்ந்து நோக்கி, ஆராய்ச்சி செய்து, சூரியனை உலகம் சுற்றிவர ஓராண்டுக்காலம் ஆகும் என்பதை அறிந்து, அவ் ஆண்டினைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்தனர். இவ்வாறு அறிந்து பிரித்தவர்களுள், எகிப்தியரே முதன்மையாக நிற்பவர். என் கருத்துப்படி, எகிப்தியரின் கணக்கிடும் முறை, கிரேக்கர்களின்[3] கணக்கியலைவிட மேலானதாக—சிறந்ததாக—விளங்குகிறது. எகிப்தியர்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் 30 நாள்களாக வைத்து, மீதி 5 நாள்களைஇடைஇடையே ஒவ்வொரு மாதத்திற்கு ஏற்றி, முழுவதையும் ஓர் ஆண்டாக ஆக்கிவிட்டுள்ளனர். கிரேக்கர்கள் எகிப்தியர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட 12 கடவுளரின் பெயர்களை 12 மாதங்களுக்கு இட்டனர். மற்றும் எகிப்தியர்கள் முதன் முதலாகக் கடவுளர்களுக்கு உருவமும், சிலைகளும், பலிபீடங்களும்[4] அமைத்தவர் ஆவர். எகிப்தை ஆண்ட முதல் மன்னன் மின்[5] ஆவார். அவர் அரசராக வரும்பொழுது, தீபே[6] தவிர அந்நகரத்தைச் சுற்றியுள்ள இடங்கள் யாவும் சகதி நிறைந்து காணப்பட்டது. எகிப்து[7], நைலஸ்[8] நதியின் நன்கொடையாகும். குருமார்கள்[9] எனக்கு இது பற்றி ஏதும் அறிவிக்கவில்லை.

எகிப்தின் புவியியல்: எகிப்தின் கடற்கரையின் நீளம், 60 ஷோனி[10] ஆகும். ஒவ்வொரு ஷோனஸ்ஸும்[11], எகிப்திய

---

1. Egyptians 2. Astronomy 3. Greeks 4. Altars 5. Min 6. Thebes 7. Egypt 8. Nilus 9. Priests 10. Shoeni 11. Shoenus

60 ஸ்டேடியா[1] அல்லது 7 மைல் அளவிற்கு ஒப்பாகும். அங்கு வாழும் மக்கள் தங்கள் நிலங்களை ஸ்டேடியா எனும் அளவிலும் (பர்லாங்)[2], பரந்த நிலப்பரப்பைப் பர்ஸாங்[3] எனும் அளவிலும் கணக்கிடுகின்றனர். ஒரு பர்ஸாங் என்பது 30 ஸ்டேடியாவுக்கு ஒப்பாகும். மற்றும் 60 ஸ்டேடியா என்பது ஒரு ஷோனஸ் ஆகும். ஆகையால் எகிப்தியக் கடற்கரையின் நீளம் 3600 ஸ்டேடியா அளவு உள்ளது (அதாவது ஏறக்குறைய 420 மைல்கள்).

ஹீலியோ போலிஸ்[4]இடத்திலிருந்து கடற்கரை எவ்வளவு தொலைவோ, அதே தொலைவுதான், பன்னிரு கடவுளர்களின் பலிபீடத்திலிருந்தும் அதாவது ஆதன்ஸ்[5] நகரிலிருந்து பைசா[6] வரையில் கணக்கிடப்பட்ட தொலைவாகும். இரண்டும் ஒரே தொலைவு அளவினைக் கொண்டது என்ற கூற்று தவறானதே. ஆதன்ஸிலிருந்து பைசா வரையில் உள்ள சரியான தொலைவு 1500 மைல் (15 குறைந்ததாகும்). முன்னது சரியாக 1500 ஆகும். ஒரு பக்கத்தில் அரேபிய வளைகுடாவைச்[7] சார்ந்த மலைகள் காணப்படுகின்றன. இம் மலையிலிருந்துதான் மெம்பிஸ்[8] நகரத்தில் காணப்படும் பிரமிடுகளுக்குத் தேவையான பாறைகள் வெட்டியெடுக்கப் பட்டன.

லிபியா[9] பக்கமாக மற்றொரு மலைத்தொடர் காணப் படுகிறது. அங்கேயும் பிரமிடுகள்[10] காணப்பட்டன.

ஹீலியோ போலிஸிலிருந்து தீபே[11] வரையில் சென்றால்' அதன் தொலைவு 81 ஷோனி[12] ஆகும். அதாவது 4860 ஸ்டேடியா (552 மைல்கள்).

எகிப்தின்[13] கடற்கரையின் நீளம் 420 மைல்களும், கடற்கரையிலிருந்து உள் நாட்டிலிருக்கும் தீபே நகரத்துக்கு உள்ள தொலைவு 714 மைல்களும் ஆகும். அங்கிருந்து எலிபெண்டைன்[14] செல்ல வேண்டுமாயின், கூட 210 மைல்களாகும்.

---

1. Stadia 2. Furlong 3. Parsang 4. Helio Polis 5. Athen 6. Pisa 7. Arabian Gulf 8. Mempis 9. Libya 10. Pyramids 11. Thebes 12. Shoeni 13. Egypt 14. Elephantine

நைலஸ்[1] ஆற்றின் கழிமுகத்தில் 5 கிளை ஆறுகள் காணப்படுகின்றன. இந்தக் கழிமுகத்தில் காணப்படும் நைலஸ் ஆற்றின் கிளை, அங்குப் பக்கத்திலுள்ள எந்த ஆற்றுக்கும் ஈடுகாட்ட முடியாததாகும். நைலஸ் ஆற்றைத் தவிர, சிறுசிறு ஆறுகளும் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக அஷிலஸ் ஆறு[2], அகர்னானியா[3] நாட்டின் வழி யாகப் பாய்கிறது."

விளக்கவுரை:

எகிப்தியர்கள்[4] : இவர்கள் எகிப்தைத்[5] தாயகமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். வானவியலில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். ஆண்டுக் காலத்தையும், அவ் ஆண்டைப் பன்னிரண்டு பங்காகப் பங்கிட்டு, ஒவ்வொன்றையும் ஒரு கடவுளின் பெயரால் வழங்கினர்.

மின்[6] : எகிப்தை ஆண்ட முதல் மன்னர் மின் எனப் பட்டார். மெம்பிஸ்[7] நகரம் நைல் நதியால் மூழ்கிப்போகாத வாறு, ஓர் அணைகட்டி, அவ் ஆற்றுநீரைத் திசை திரும்பச் செய்தார். மெம்பிஸ் நகரத்தில் புகழ் பெற்ற பிரமிடுகள் இருக்கின்றன.

தீபே[8] : வட எகிப்தில் இருந்த மிகப் புகழ் பெற்ற இடம். அது உலகிலேயே மிக பழமையான இடம் என்று கருதப்பட்டது. அது நைல் நதியின் இரு மருங்கிலும் இருந்தது—பாபிலோன்[9] யூப்ரடீஸ்[10] நதியின் இருமருங்கிலும் இருந்தது போல. கி.மு. 1600-ல் அந்நகரம் அம்மோன்[11] தெய்வ வழிபாட்டிற்குப் பெயர் பெற்றிருந்தது. மற்றும், கி.மு. 1600-ல் அது தலைநகரமாகவும் விளங்கிற்று. ஹோமர்[12] அதைப் பற்றிக் கூறுகிறார். "இந் நகரத்தில் 100 வாயில்கள் உள்ளன. ஒவ்வொரு வாயிலின் வழியாக 200 தேர்ப் படைகள் தாராளமாக நுழைந்து செல்லக் கூடும். அதன் சுற்றளவு 140 ஸ்டேடியா அதாவது ஏறக்குறைய 14 மைல்கள்." அங்கு அந்நகரத்தின் அழிபாடுகள் காணப்படு கின்றன.

அந்நகரம் இருந்த இடத்தில் இப்பொழுது 4 சிற்றூர்கள் இருக்கின்றன. அவையாவன : கார்னாக்[13], லக்ஸார்,[14] மெடினே அபு[15], குர்னௌ[16].

---

1. Nilus 2. Achelous 3. Acarnania 4. Egyptians 5. Egypt 6. Min 7 Memphis 8. Thebes 9. Babylon 10. Euphrates 11. Ammon 12. Homer 13. Karnak 14. Luxor 15. Medinae Abu 16. Gournou

எகிப்தியத் தீபே கோயில் வேறு, கிரேக்க நாட்டில்[1] உள்ள தீபே கோயில் வேறு. இரண்டையும் ஒன்று எனக்கொண்டு மனம் குழம்பக்கூடாது.

நைலஸ் ஆறு[2] : இந்நதி பின்னர் நைல்நதி என வழங்கப் பட்டது. ஆப்பிரிக்காவில் இதுதான் நீளமான நதி. எகிப்தின் வளத்திற்கு இந்நதியே முக்கியக் காரணம். "எகிப்து, நைல் நதியின் நன்கொடை"[3] என்று வழங்கப்பட்டது. இது ஹிராடடஸ் காலத்திலும் அதற்கு முந்தியும் வழங்கப்பட்டது.

குருமார்கள்[4]: இவர்கள் தீபே நாட்டு[5] அம்மோன்[6] கோயிலில் இருப்பவர் ஆவர். வானவியல் முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர். கடவுளர்க்கும், மக்களுக்கும் இடையே நின்று, கடவுளின் அருளை அசரீரி வாக்கால் அறிவிப்பவர்.

ஷோனி[7] : ஒருமையில் இது ஷோனஸ்[8] எனப்படும். பன்மையில் ஷோனி. ஒரு ஷோனஸ் என்பது 60 ஸ்டேடியா அளவிற்கு ஒப்பாகும். (7 மைல்கள்)

ஸ்டேடியா[9]: ஒருமையில் ஸ்டேடியம்[10] என்று வழங்கப் படும். பன்மையில் ஸ்டேடியா. ஒரு ஸ்டேடியம் என்பது 582 அடிகள் ஆகும். அதாவது ஏறக்குறைய 1 பர்லாங் தூரத்தைக் குறிப்பிடும். கிரேக்க அளவுப்படி 606 அடிகள் கொண்டதாகும். கிரேக்க ஆசிரியர்கள் யாவரும் ஸ்டேடியாவையே பயன்படுத்தி யுள்ளனர்.

பிளினி (கி.பி. 23-79), **பெரிப்ளூஸ்** (கி.பி. 50-80) குறிப்பிடு கின்றன.

பிளினி (புத்தகம் VI, அதி 21, குறிப்பு 8, பக்கம் 12)

பெரிப்ளூஸ் (அதிகாரம் 1, குறிப்பு 5, பக்கம் 3)

தாலமி (அதிகாரம் 1, குறிப்பு 8, பக்கம் 10)

— (Latin English Dictionary — Page 538)

இவ்வளவுப்படி, கடற்கரையின் நீளம் 3600 ஸ்டேடியா என்றால், ஒரு ஸ்டேடியம் ஒரு பர்லாங் தொலைவு என்ற அளவின்படி 3600 ஸ்டேடியாவிற்கு 450 மைல்கள் ஆகும்.

---

1. Greece 2. Nilus River 3. Egypt The Gift of the Nile 4. Priests 5. Thebes 6. Ammon 7. Shoeni 8. Shonus 9. Stadia 10. Stadium

ஆதன்ஸிலிருந்து[1] பைசா வரை[2] : ஆதன்ஸ் நகரம் முதல் பைசா வரை உள்ள தொலைவு 1500 ஸ்டேடியா-15 ஸ்டேடியா - அதாவது 1485 ஸ்டேடியா ஆகும். (185 மைல்கள்.)

ஹிலியோ போலிஸிருந்து[3] கடற்கரை உள்ள தொலை வாகும். அதாவது 185 மைல்களாகும்.

நைலஸ்[4]: இது இன்று நைல் நதி[5] என்று வழங்கப்படுகிறது. ஹிராடடஸ் காலத்தில் (கி.மு. 484 - 408) நைல் ஆற்றுக் 5 கழிமுகத்தில் 5 கிளை ஆறுகள் இருந்தன.

ஹீலியோ போலிஸ் : இது சூரியநகரம் எனப்படும். ஹீப்ரு மொழியில் பாலாத் என்று வழங்கப்பட்டது. ஹீலியோ போலி ஸிலிருந்து தீபே வரை உள்ள நீளம் 81 ஷோனி; அதாவது 4860 ஸ்டேடியா அல்லது 610 மைல்கள்

அஷிலஸ்[6] : இது கிரேக்க நாட்டின் மேற்குப் பகுதியாகிற அகர்னானியாவில்[7] பாய்கிறது. அகர்னான் தலைமையில் குடியேற்றம் செய்தனர்.

எலிபெண்டைன்[8] : நைல் நதியின் இடையே உள்ள ஒரு தீவு.

---

1. Athens 2. Pisa 3. Helio Polis 4. Nilus 5. Nile 6. Achelous 7. Accarnania 8. Elephantine

3. நைலஸ் நதியின் உற்பத்தியிடமும், பாய்ந் தோடும் வழிகளும்

"நைலஸ் நதியின்[1] உற்பத்தியிடத்தைப்பலரிடம் விசாரித்தேன். ஆனால், எவரேனும் சரியான பதிலைக் கூறவில்லை. அக்கேள்வியை அவர்கள் ஒரு பொருட்டாக மதித்ததாகவே எனக்குப் புலப்படவில்லை. ஒருவர் கூறினார்: தீபே[2] அருகிலுள்ள சையீனுக்கும்[3] எலிபெண்டைனுக்கும்[4] இடையே இரண்டு குன்றுகள் கூம்புபோன்று உள்ளன. அவற்றின் பெயர் குரோபி[5], மோபி[6]. அவற்றின் இடையே ஆழம் கண்டு பிடிக்க முடியாத நைலஸ் நதி பாய்ந்தோடுகிறது. அதில் பாதியளவு நீர் எகிப்தை நோக்கி வடதிசையிலும், மற்றப்பாதி எதியோபியாவை[7] நோக்கித் தென் திசையிலும் பாய்கிறது. அந்நதியின் ஆழம் கண்டு பிடிக்க முடியாது என்பதை அரசர் சம்மேடிகஸ்[8] ஆயிரக்கணக்கான பாதம்ஸ்[9] நீளமுள்ள கயிற்றில் கல்லைக் கட்டிவிட்டு, எவ்வளவு ஆழம் கயிற்றை விட்டாலும் அந்நதியின் தரைப்பாகம் கிடைக்கவேயில்லை எனும் சோதனையால் தெளிவாக உறுதியாயிற்று. ஆயினும் இதற்கு நான் கூறும் சமாதானம், அவ்வரசர் நதியில் விட்ட கயிறு ஏதோ ஒரு சுழல் நீர்ப் பகுதியில்[10] சிக்கிக் கொண்டு விட்டதால், எவ்வளவு நீளமான கயிறு விடப்படினும், அக்கயிறு கீழே தரையை நோக்கிப் போகாமல், சுழல் நீரில் சுழன்று சுழன்று ஓரிடத்திலேயே இருப்பதாயிற்று.

---

1. Nilus 2. Thebes 3. Syene 4. Elephantine 5. Crophi 6. Mophi 7. Ethiopia 8. Psammetichus 9. Fathoms 10. Whirl Pool

அதன் காரணமாக எவர் கூறுவதையும் ஏற்றுக் கொள்ளாமல், நானே எலிபெண்டைன்[1] வரையில் சென்றேன். அதற்கும் அப்பால் உள்ளவற்றை அங்குள்ள மக்கள் சொல்லக் கேட்டேன். அங்கிருந்து நைலஸ் நதி[2] பல திருப்பங்கள் கொண்டு—மியாண்டர் போல[3]—12 ஷோனி[4] தொலைவு செல்கிறது. அப்பொழுது சமவெளி ஒன்று வருகிறது. அங்கே அந்த ஆறு இரு சமமாக ஒரு தீவினால்—தகோம்ஸோ[5] ஏரியின் நடுவில் உள்ள தீவினால்— பிரிக்கப்படுகிறது. எலிபெண்டைனுக்குத் தெற்கே, எதியோபிய மக்கள் வசிக்கின்றனா. அதற்கு வடக்கே எகிப்தியர்கள்[6] வாழ்கின்றனர். அத்தீவுக்கும் அப்பால், எதியோபிய மக்களின் நாடோடி இனத்தவர் வசிக்கின்றனர். அந்த ஏரிக்கும் அப்பால் 40 நாள்கள் சென்றால், ஓர் இடம் வரும். மீண்டும் அங்கிருந்து 12 நாள்கள் படகில் சென்றால், மேரோ[7] எனும் பெரு நகரம் காணப்படும். அதுதான் எதியோபிய[8] மக்களின் தலை நகரம். அம்மக்கள் ஜியுஸையும்[9], டையோனிஸஸையும்[10] தொழுகின்றனர். இங்கு ஜியுஸ் கடவுளின் அசரீரி வாக்குக்[11] கேட்பதாக நம்பிக்கை உண்டு.

எலிபெண்டைனிலிருந்து அதன் தலை நகரத்துக்கு[12]—மேரோவுக்கு 'எத்துணைத்தொலைவோ, அதேதொலைவை அவ் ஆற்றின் வழிச்[13] சென்றால், டெஸர்டர்கள்[14] எனப்படும் மக்களைச் சந்திக்கலாம். அவர்களின் பெயர் அஷாம்[15]. இச் சொல்லுக்குக் கிரேக்க மொழியில், அரசரின் இடப்பக்கத்தில் நிற்பவர் என்று பொருள்படும். இவர்கள் 240, 000 எகிப்திய இராணுவ வீரர்கள் ஆவர். சம்மேடிகஸ்[16] ஆட்சிக் காலத்தில் இந்த 240, 000 மக்களும் அவர் ஆட்சியிலிருந்து விலகி, எதியோபிய அரசுக்கு வந்துவிட்டனர். எகிப்தியருக்கு நாட்டின் பலவேறு இடங்களில் தணிக்கைச் சாலைகள்[17] இருந்தன. எதியோபிய மக்களைக் கண்காணிக்க எலிபெண்டைனில் ஓர் இடமும், பெலூஷியத்தில்[18] டாப்னே[19] எனும்

---

1. Elephantine 2 Nilus 3. Meander 4. Shoeni 5. Tachomso 6. Egyptians 7. Meroe 8. Ethiopia 9. Zeus 10. Dionysus 11. Oracle 12. Capital 13. River Way 14. Deserters 15. Asham 16. Psammetichus 17. Check posts 18. Pelusium 19. Daphne


இடத்தில் அரேபியர்களைக்[1] கண்காணிக்க வேறோர் இடமும் உள்ளன. அரசர் சம்மேடிகஸ் ஆட்சியில் இவ் இராணுவ வீரர்கள் 3 ஆண்டுகள் ஒரே இடத்தில் முகாமில் இருந்தனர். அது எகிப்திய வீரர்களுக்குப் பிடிக்கவில்லை. அதன் காரணமாக'அத்துணை எகிப்திய வீரர்களும்— 240,000 எகிப்திய வீரர்களும்— எதியோபிய மக்களுடன் இணைந்து விட்டனர். இதையறிந்த அரசர் சம்மேடிகஸ், அவ்வீரர்களைத் துரத்திச் சென்றார். இறுதியில் அவர்களை ஓரிடத்தில் சந்தித்து, "உங்கள் மனைவி, குழந்தைகள், தெய்வங்கள் யாவரையும் தவிக்க விட்டுச் செல்வது நியாயம் தானா? உடன் திரும்பி விடுங்கள்," என்று பணிந்து இரங்கி அழைப்பு விடுத்தார். ஆனால், அவ் இராணுவ வீரர்களின் தலைவன், தன் மறைவிடத்திலிருந்த ஆண் குறியைத் தொட்டுக் காண்பித்து, "இது எங்கெங்குச் செல்கிறதோ, அங்கெல்லாம் மனைவிகளையும், மக்களையும் சம்பாதித்துக் கொள்வோம்; தாங்கள் அதற்குக் கவலற்க!" என்று மிடுக்காகப் பதிலிறுத்தான். அந்த இராணுவ வீரர்களை எதியோபிய அரசன்[2] வரவேற்று, தன் அரசில் இருக்குமாறு செய்து, தனக்குப் பகையாக விளங்கிய சில எதியோபிய மக்களை[3] ஒழித்துக் கட்ட அவர்களைப் பயன்படுத்திக் கொண்டான்."

விளக்கவுரை:

நைலஸ் நதியின்[4] உற்பத்தியிடம் : இச்செய்தி 19 ஆம் நூற்றாண்டில் விளங்கிய டேவிடு லிவிங்ஸ்டன்[5] (கி.பி.1813-1872) என்பவரால்தான் சரியாகத்தெரிய வந்தது. இவ்வளவு நவீன வசதிகளிருந்தும், உற்பத்தியிடத்தைக் கண்டுபிடிக்க முடியாதிருந்தபொழுது, அன்றைக்கால மக்கள்-பழமொழிகளாலும், மூடநம்பிக்கைகளாலும் காலத்தை ஓட்டி விட்ட பெரும்பான்மையான மக்கள்— இவற்றை எவ்வாறு அறிந்திருக்க முடியும்? அதனால் தான் பலரைக் கேட்டும் விடை கிடைக்கவில்லை என்றும், அக்கேள்வியை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்றும் ஹிராடடஸ் வியப்புமிக்குக் கூறுகிறார். (நைலஸ்— நைல்நதி)

---

1. Arabians 2. Ethiopian King 3. Ethiopians 4. River Nile 5. David Livingstone



நைல் நதியும், மத்தியக் கிழக்கு நாடுகளும்

தீபே[1]: எகிப்திய நாட்டில்[2] உள்ள தீபே மிகவும் புகழ் பெற்றிருந்ததாகும். மற்றும், பக்கம் 149, குறிப்பு-8 பார்க்கவும்.

சையீன்[3]: தீபே நகரத்துக்கருகில் ஒரு குன்று இருந்ததாகவும், அக்குன்றின் பெயர் சையீன் என்றும் ஹிராடடஸ் குறிப்பிடுகிறார். அது இன்று பர்காபென்காசி என்று வழங்கப்படுகிறது.

எலிபெண்டைன்[4]: இது நைல் நதியின் இடையே இருந்த ஒரு தீவு ஆகும். இத்தீவின் தலைநகரமும் எலிபெண்டைன் என்ற பெயராலேயே வழங்கப்பட்டது. இது சையீன் நகரத்துக்கு எதிர்ப்புறமாக இருந்தது. சிறிய அருவிக்கு 7ஸ்டேடியா[5] (7 பர்லாங்கு) தொலைவில் இருந்தது. மற்றும், இது எதியோபியா நாட்டின் எல்லையில், எகிப்தியர்களின் பாதுகாப்பு அரணாகப் படைப்பலத்துடன் விளங்குவதாயிற்று. ஆனால் அதைப் பாதுகாத்தவர்கள் பாரசீகப்படைகளும்[6], ரோமானியப் படைகளுமேயாம்[7]. எலிபெண்டைன் இன்று வாடிஹாபா[8] என்று வழங்கப்படுகிறது.

இத்தீவில் அக்காலத்தில் யானைகள் கூட்டம் கூட்டமாக நீர் அருந்த வந்ததால், இத்தீவு எலிபெண்டைன் என்று வழங்கப்பட்டதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

—(A Smaller Classical Dictionary: Page 205)

குரோபி[9], **மோபி**[10]: இவை இரண்டும் கூம்பிய குன்றுகள் இவற்றிடையே நைல் நதி[11] பாய்ந்தோடுகிறது என்று ஹிராடடஸ் கூறுகிறார். இன்று அப்பெயர்கள் காணப்படவில்லை. கூம்பிய குன்றுகளும் கால வெள்ளத்தால் சிதைந்து மறைந்து போயிருக்கும். நைல் உற்பத்தி ஆகும் ஏரி, இன்று ஆல்பர்ட் ஏரி[12] என்றும், அது உற்பத்தியாகும் மலை, ரூவென் சோரி[13] என்றும் வழங்கப்படுகின்றன. ரூவென்சோரி மலையின் உயரம் 16794 அடிகள் (5038 மீட்டர்).

மியாண்டர்[14]: வளைந்து வளைந்து சென்று வழியைக் கண்டு கொள்ளத் திக்கு முக்காடச் செய்யும் பாதை. இது மையாண்ட்ராஸ்[15] எனும் நதியின் பெயரால் ஏற்பட்ட சொல்லாகும்.

---

1. Thebes 2. Egypt 3. Syene 4. Elephantine 5. Stadia 6. Persians 7. Romans 8. Wadi Hafa 9. Crophi 10. Mophi 11. River Nile 12. Lake Albert 13. Ruvensori 14. Meander 15. Maiandros

ஷோனி[1]: ஒருமையில் ஷோனஸ்[2] எனப்படும். இவ் அளவு 60 ஸ்டேடியா[3] கொண்டதாகும். 12 ஷோனி, 720 ஸ்டேடியா அளவாகும் (அதாவது 90 மைல்). ஒரு ஸ்டேடியா, ஏறக் குறைய ஒரு பர்லாங்குக்குச் சமமாகும். மற்றும் பக்கம் 150, குறிப்பு-9 பார்க்கவும்.

தகோம்ஸோ[4]: அக்காலத்தில் ஓர் ஏரியின் பெயராகத் திகழ்ந்தது. இன்று இது "தானா ஏரி"[5] என்று வழங்கப்படு வதாகக் கூறப்படுகிறது. மேற்கே சையீன்[6] பகுதி இருந்தது. ஆப்பிரிக்கா, ஓர் இருண்ட கண்டமாகவே கருதப்பட்டு வந்துள்ளது.

மோரோ[7]: இது தீபே[8], சையீன் ஆகிய இடங்களுக்கும் தெற்கில் நைல்நதிக்கரைமீது இருந்த எதியோபியர்களது[9] தலைநகரம். ஹிராடடஸ் தாமே வரைந்த உலகப் படத்தினின்று இதன் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளலாம் இன்றைக்கு இதன் அழிபாடுகள், கார்டுமிற்கும், பெர்பெர் இடத்திற்கும் இடையில் காணப்படுகின்றன. இது அபிசீனியாவின் வட பகுதியில் இருந்தது.

டையோனிஸஸ்[10]: மெகஸ்தனிஸ்[11] கூற்றுப்படி டையோ னிஸஸ் கிரேக்க நாட்டிலிருந்து[12] இந்தியாவிற்கு வந்தார் என்றும், அவர் இமயமலையில் உள்ள மேரு சிகரத்தின்மீது தம் படையுடன் இளைப்பாறி, திராட்சைப்பழரசமும், மது பானமும் அருந்தி உடல் நலம் ஆக்கப்பெற்றார் என்றும் பின்னர் அப்பானம் செய்யும் முறையையும் வகைகளையும் இந்தியர்க்கு எடுத்துரைத்தார் என்றும் கூறுப்படுகிறது.

கிரேக்கப் புராண வரலாற்றில், டையோனிஸஸ், தீபே நகரில் பிறந்தார். இந்நகரம் கிரேக்க நாட்டில் பியோஷியா[13] எனும் பகுதிக்குத் தலைநகரமாக விளங்கிற்று. இன்று அப்பகுதி வயோஷியா[14] என்று வழங்கப்படுகிறது. அவர் ஜியுஸ்[15] என்ற நெருப்புக் கடவுளுக்கும், தீபே[16] நாட்டின் இளவரசி செமிலி[17] என்பாளுக்கும் திருமகனாய்த் தோன்றினார். அவர் தம் சொந்த முயற்சியால் கடவுள் தன்மையைப் பெற்றார். மற்றும்

---

1. Shonei 2. Shonus 3. Stadia 4. Tachomsu 5. Thana Lake 6. Syene 7. Meroe 8. Thebes 9. Ethiopian 10. Dionysus 11. Megasthenes 12. Greece 13. Boeotia 14, Vaiotia 15, Zeus 16. Thebae 17, Semele

டையோனிஸஸ், ஜியுஸ் கடவுளுக்குத் தொடை வழியாகப் பிறந்தார் என்றும் கிரேக்கப் புராண வரலாறு கூறுகிறது.

இம்மாதிரியான அல்வழிப் பிறப்புகள் இந்தியப்புராண வரலாறுகளிலும் காணப்படுகின்றன. வீமன் தொடை வழியாகப் பிறந்தானென்று மகாபாரதம் கூறுகிறது.

—(மெகஸ்தனிஸ்: அதிகாரம் 4: பக்கம் 37—38)

ஜியுஸ்: கிரேக்கப் புராண வரலாற்றில்[1] இவர் தீக்கடவுளாக[2]—நெருப்புத் தெய்வமாக— கருதப்படுகிறார் - இந்தியரின் அக்னிக் கடவுள் போல், இடிமின்னலுக்கு அதிபதியான இந்திரன் போல, தீப்பொறி பறக்கும் நெற்றிக் கண்களையுடைய சிவபிரான் போல. தம் உண்மையான உருவத்தைக்காண இவர் மனைவி செமிலி விரும்பியதாகவும், அவர் அப்பொழுது தீப் பிழம்பாகக் காட்சியளித்ததாகவும், அவர் மனைவி அப்பொழுது நிறை கர்ப்பிணியாயிருந்ததால், அவள் டையோனிஸஸை[7] ஈன்று ஜியுஸிடத்தில் கொடுத்தவுடன், அவள் தீப்பிழம்பால் எரிக்கப்பட்டதாகவும், டையோனிஸஸை ஜியுஸ் கடவுள் தம் தொடையில் வைத்துக் காப்பாற்றியதாகவும், அவன் நிறை மாதமானதும், அவனை வெளியே எடுத்து விட்டதாகவும், அதன் காரணமாக டையோனிஸஸ்[3], ஜியுஸ் கடவுளுக்குத் தொடை வழியாகப் பிறந்தார் என்று கூறப்படுவதாகவும் ஆக இச்செய்திகள் கிரேக்கப்புராண வரலாறுகளில் காணப்படுகின்றன.

ஜியுஸ் என்ற சொல் தேஜஸ்[4] அதாவது ஒளி என்பதன் மாற்று உருவமே என்றும், இந்திரன், சிவபிரான் ஆகியவர்களே கிரேக்கப் புராணங்களில் ஜியுஸ் என்று வழங்கப்படுகிறார் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பேதம்[5] : 6 அடி. கடல் ஆழத்தை அளக்கும் ஓர் அடிப்படை அளவு.

---

1. Greek Mythology 2. God of Fire 3. Dionysus 4. Thejas 5. Fathom

4. எகிப்தியர்களின் விநோதமான சில பழக்க வழக்கங்கள்

"எகிப்தைப்பற்றி[1] நான் நிறையக் கூற வேண்டுமென்று ஆவல் கொண்டுள்ளதற்குக் காரணம், அங்கே உலகின் மற்ற எல்லாப் பகுதிகளையும் விடப் பேருருவில் நினைவுச் சின்னங்கள்[2] காணப்படுகின்றன என்பதே. எகிப்தின் தட்ப வெப்பநிலை மாறுபட்டும், நைலஸ் நதியின்[3] போக்குப் பேரளவில் இருப்பினும் அவற்றை ஒரு பொருட்டாக நான் மதிப்பதில்லை. ஆனால் அங்குள்ள எகிப்திய மக்களின் நடை உடை பாவனைகள்—பழக்கவழக்கங்கள்—சாதாரண மனித இனத்தின் பழக்கவழக்கங்களுக்குத் தலைகீழாகவும்—முற்றிலும் மாறாகவும் கூடக்—காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பெண்கள் கடைகளுக்கும் சந்தைகளுக்கும்[4] செல்கின்றனர்; வாணிகத்தில் ஈடுபடுகின்றனர். அதே பொழுது ஆண்கள் வீட்டினுள் இருந்து கொண்டு, துணிகள் நெய்கின்றனர். சாதாரணமாக, நூற்கண்டைக் கீழிருந்து மேலாகச் செலுத்துவது வழக்கம்; ஆனால் இவர்கள் மேலிருந்து கீழாகவே செலுத்துகின்றனர். ஆண்கள் தங்கள் தலைகள்மீது பொருள்களை மூட்டையாகக் கட்டிச் சுமந்து செல்வர்; பெண்கள் தங்கள் தோள்களில் சுமந்து செல்கின்றனர். மற்றும் மலசலம் கழிப்பதிலும் கூட வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெண்கள் நின்று கொண்டே சிறுநீர் கழிப்பர்; ஆண்களோ உட்கார்ந்து கொண்டு சிறுநீர் கழிப்பர். எகிப்தியமக்கள் வீட்டிற்குள் சென்று மலங்கழிப்பர். ஆனால் தெருவில் உட்கார்ந்து

1. Egypt 2. Monuments 3. River Nilus 4. Markets

கொண்டு உணவு உட்கொள்வர். அதற்கு அவர்கள் கூறும் காரணம், எதுமுக்கியமோ, எதை "யாவரும் பார்க்கக் கூடாதோ, அதை வீட்டினுள் செய்யவேண்டும். எது அசிங்கமானதில்லையோ, அருவருப்பைக் கொடுப்ப தில்லையோ அதை வெளியே செய்தல் வேண்டும். எதற்கு நாம் வெட்கப்படவேண்டுமோ அதை வீட்டினுள் மறைவாகச் செய்தல் வேண்டும்; வெட்கப்படவேண்டாததற்கு எங்குச் செய்தால் என்ன? அதனால்தான் தெருவில் உணவு உட் கொள்ளப்படுகிறது' என்று சமாதானம் கூறுகின்றனர்.

எந்தப் பெண்ணும் குருபீடத்தில்[1] அமர்ந்தது கிடையாது. குருமாராக விளங்கியதும் கிடையாது; பூசாரிணியாகப்[2] பூசை செய்யக்கூடாது. ஆண்களே குருமார்களாய் விளங்கி வந்தனர். சிலர் தங்கள் பெற்றோர்களை இட்டமிருந்தால் காப்பாற்றலாம். அஃது அவரவர் விருப்பம். ஆனால், பெண்கள் தங்கள் பெற்றோர்களைக் காப்பாற்றியே தீர வேண்டும்—அவர்கள் விரும்பாவிட்டாலும்கூட.

எகிப்தியக் குருமார்கள்[3] தங்கள் தலைமயிரை மழித்து விடுகின்றனர். மற்ற எல்லா இடங்களிலும் குருமார்கள் தங்கள் தலை மயிரை மழிப்பதில்லை; அதற்குப் பதிலாக வளர்த்துக்கொள்கின்றனர். எவராகிலும் ஓர் உறவினர்க்குக் கருமாதி சடங்குகள் செய்யவேண்டுமாயின், இறந்தோனின் உறவினர்கள் யாவரும் தலைமயிரை மழித்துக் கொள்ள வேண்டும். ஆனால், எகிப்தில்[4], அவ்வாறான உறவினர்கள், முகத்தில், மோவாய்க் கட்டையில் மயிர் வளர்த்துத் துக்கம் கொண்டாடுவர். உலகின் எல்லா மக்களும் கோதுமை, பார்லி ஆகியவற்றை உணவாகக் கொள்கின்றனர். ஆனால் எகிப்திய மக்கள் கோதுமை, பார்லியைப் பயன்படுத்துவ தில்லை. அவர்களது உணவு மட்டரக தானியமாகும். அதை அவர்கள் "ஜீ"[5] என்று வழங்குவர். தினைமாவைக் காலில் துவைத்து உருண்டையாக்குகின்றனர். ஆனால் களி மண்ணையும் மாட்டுச் சாணத்தையும் கைகளில் பிசைந்து, உருட்டிவைக்கின்றனர்.

---

1. Priestly Office 2. Priestess 3. Egyptian Priests 4. Egypt 5. Zea

எகிப்திய ஆண்கள் சுன்னத்துச்[1] செய்துகொள்கின்றனர்; ஆனால் உலகின் மற்றப் பகுதிகளில் உள்ள மக்கள் இயற்கையாகவே விட்டுவிடுகின்றனர்; சுன்னத்துச் செய்து கொள்வதில்லை. எகிப்திய ஆண்கள் இரண்டே துணிகளை மட்டும் உடுப்பர். ஆனால் பெண்கள் ஒரு துணியை மட்டுமே உடுப்பர்.

எழுதுவதில்[2] கிரேக்கர்கள் இடமிருந்து வலம் எழுதுவர்; ஆனால் எகிப்தியர்கள்[3] வலமிருந்து இடம் எழுதுவர். இவ்வாறு எழுதுவதுதான் எளிது என்றும், நியாயமான முறை என்றும், எகிப்தியர் வாதாடுவர். கிரேக்கர்களின்[4] எழுதும் முறை அழகற்றது; பொருத்தமற்றது; அசிங்கமானதுங்கூட என்று எகிப்தியர்கள் கூறுகின்றனர். எழுத்தில் இரு வகைகள் அவர்களிடம் காணப்படுகின்றன—அவற்றுள் ஒன்று புனிதம் வாய்ந்தது; மற்றொன்று எளிமை வாய்ந்தது.

அவர்கள் எல்லா நாட்டினரைக் காட்டிலும் சமயப்பற்று மிக்கவர்கள். அச் சமயச்சார்பான பழக்கவழக்கங்களுள் சில பின் வருமாறு: அவர்கள் பித்தளைக் கோப்பைகளில்தான் பானம் அருந்துவர்; அக்கோப்பைகளை அன்றாடம் சாம்பல் பொடி கொண்டு தேய்த்துவிடுவர்—இதன்படி ஒவ்வொருவரும் தத்தம் கோப்பைகளைச் சுத்தமாகக் கழுவி வைத்துக் கொள்வர். அவர்கள் லினனால்[5] நெய்யப்பட்ட ஆடைகளையே உடுக்கின்றனர். ஆடைகளை அன்றாடம் துவைத்துக் கட்டுவர்.

குருமார்கள்[6] ஒன்று விட்டு ஒரு நாள் சர்வாங்க க்ஷவரம் செய்து கொள்வர்; காரணம் அவர்கள் உடல் மயிரினுள் பேன் முதலிய சந்துக்கள் புகுந்து, சமயச் சடங்கின் பொழுது தொந்தரவு கொடுக்கும் என்பதாலும், சமயச் சடங்கு அதனால் தடைபடுவது நல்லதல்ல என்பதாலும் அவர்கள் மழித்தலை மேற்கொண்டுள்ளனர். குருமார்கள் பேபிரஸ் நாணலால்[7] செய்த காலணிகளையே அணிவர். அவர்கள்

1. Circumcision 2. Writing 3. Egyptians 4. Greeks 5. Linen 6. Priests 7. Papyrus reeds

குளிர் நீரில் பகலில் இருமுறை முழுகிக் குளிக்கின்றனர்; இரவில் இருமுறை குளிக்கின்றனர். இத்துடன் சமயச் சடங்குகள் பலவற்றை ஏற்ற வண்ணம் உள்ளனர். இவ்வளவு கட்டுப்பாடுகள் கொண்ட வாழ்க்கையை மேற்கொள்கிறவர்கள் என்று அனுதாபம் காட்டினால், அவர்களுக்குப் பல சலுகைகளும் நன்மைகளும் உள்ளன. அவர்களுக்கு என எந்தச் சொந்தச் செலவும் கிடையாது. மாவினால் செய்யப்பட்ட உணவுப்பண்டம் — கொழுக்கட்டை — கிடைத்துவிடுகிறது. வாத்துக்கறியும், மதுவும் நிரம்பக் கிடைக்கின்றன. மீனை அவர்கள் கையால் கூடத் தொடக் கூடாது. மொச்சைப் பயிர்- மொச்சைக்கொட்டை-அவர்கள் கண்களாலும் பார்க்கக் கூடாது. அங்கே மொச்சை பயிரிடுவது கிடையாது. ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு குருமார் தனியாகக் கிடையாது. ஆனால் முழுவதுமாக ஓர் எண்ணிக்கை உள்ளனர். அவர்களின் தலைமைக் குரு இறந்து விட்டால், அவருடைய மகன் அப்பதவிக்கு அமர்த்தப்படுகிறான்.

எருதுகள் பலியிடப்படும் முறை: எருதுகள்[1] யாவும் இபாபஸ்[2] அல்லது ஆபிஸ்[3]கடவுளின் சொத்து என்று கருதப்படுகிறது. எருது பலியிடத் தகுதி பெற்றதுதானா என்பது பின்வருமாறு சோதனை செய்யப்படுகிறது. அவ்வெருதின்மீது, ஒரு கறுப்பு மயிர் இருந்தாலும், அவ் எருது பலியிட உதவாது-தூய்மையற்றது. முதலில் அதை நிற்க வைத்து, அடுத்து அதை அதன் முதுகின் பகுதி கீழிருக்கக் குப்புறப் படுக்க வைத்து, அதன் பின் அதன் நாக்கை இழுத்து, அது சுத்தமாக இருக்கிறதா என்று பார்த்து, பிறகு அதன் வாயைச் சோதித்துச் சரியான அளவில் அவ்வாலின் மீது ரோமம் வளர்ந்துள்ளதா என்பதைக் கண்டு அவையாவற்றையும் குறித்துக் கொள்வர். இந்தச் சோதனைகளில் தேர்ச்சி பெற்றதும், அவ்எருதின்[4] கொம்புகளுக்குப் பேபிரஸ் நாணலைச் சுற்றிவிடுவர். அந்நாணல் அணியை அரக்கு கொண்டு, தம் பிரத்யேக முத்திரை கொண்டு[5] காப்பிட்டு விடுவர். அவ் எருது இறுதியாக எடுத்தேகப்படுகிறது. இவ்வாறு சடங்குகள் மூலமாகச் சோதனை நடைபெறாத

1. Bulls 2. Epaphus 3. Apis 4. Bull 5. Seal

எருதினைப் பலியாகக் கொடுத்தால், பலியிட்டவர்க்குத் தண்டனை அவரைச் சிரச்சேதம் செய்துவிடுதலே யாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட, முத்திரையிடப்பட்ட எருதைப் பலிபீடத்துக்கு அழைத்துச் செல்வர். அங்குப் பெருந் தீ மூட்டுவர். அத் தீயில் சாராயத்தையும்[1], மற்றப் பொருள் களையும் இட்டு, பிரார்த்தனைகள் புரிந்தவுடன், அவ் எருதின்மீது சாராயத்தை ஊற்றி, அதற்கான மந்திரங்கள் போன்ற சொற்களைக் கூறி, அதன் தலையைத் துண்டித்து விடுகின்றனர். மற்றும் அத்தலைக்கு மட்டும் சிறப்பான வசை புராணம் பாடுகின்றனர். பின்னர் அத் தலையைக் கிரேக்க மக்களுக்கு[2] விற்று விடுகின்றனர் அல்லது ஆற்றில் எறிந்து விடுகின்றனர். அவ்வாறு வசைபுராணம் பாடுவது, தங்கள் நாட்டிற்கோ, குடும்பத்துக்கோ நேரவிருக்கும் ஆபத்து வெட்டப் பட்ட அத்தலைமீது வந்து படியட்டும் என்பதற்காகவே. அதன்பின் அவ் எருதின் தோல் உரிக்கப் பட்டு, ஊனை வேறாகப் பிரித்து விடுவர்.

அவ்வாறு உடலை வெட்டும் பொழுது, குடலையும் கொழுப்பையும் அப்படியே விட்டு விடுகின்றனர். அதன் பிறகு, கால்கள், தோள்கள், கழுத்து, பின்பாகம் ஆகிய யாவும் துண்டாக்கப்பட்டு, அச் சடல உடலுக்குள் ரொட்டி, தேன், அத்திப் பழம், வாதுமைக் கொட்டைகள், சாம்பிரர்ணி மற்றும் வாசனைப் பண்டங்கள் வைத்து மூடி விட்டு, அவ் உடலின்மீது எண்ணெய் ஊற்றி, அதைக் கொளுத்தி விடுகின்றனர். இந்தப் பலியிடுவதற்குமுன் யாவரும் உண்ணாமல் பட்டினியிருந்து விரதம் காக்கின்றனர். மற்றும் அவ்வுடல் தீயினால் எரிக்கப்படும் பொழுது அம்மக்கள் தங்கள் மார்புகளில் இரண்டு கைகளாலும் அடித்துக் கொண்டு[3] சுற்றிவருவர். இவ்வாறான மாரடித்தல் அந்த உடல் தீயினில் வெந்து போகும் வரை நடைபெறும். அத் தீ அணைந்ததும், அதில் மிகுந்திருக்கும் ஊனை எடுத்து யாவரும் அதைக் கடவுள் பிரசாதம் எனப் புசிப்பர்.

பசுக்கள் பலியிடப்படுவதில்லை: எகிப்தியர்கள்[4] யாவரும் எருதுகளையும்[5], எருதுக் கன்றுகளையும் பலியிடப் பயன்

1. Wine 2. Greeks 3. Beating their breasts 4. Egyptians 5. Bulls

படுத்துகின்றனர்—அவ் எருதுகள் சோதனைகளில் தேர்ச்சி பெற்றபிறகு. ஆனால், எக் காரணத்தைக் கொண்டும் பசுவைப்[1] பலியிடுவது கிடையாது; அதைப் பலியிடவும் கூடாது என்ற சட்டமும் உள்ளது. காரணம் பசுக்கள் ஈஸிஸ்[2] கடவுளுக்குப் புனிதமானவையாகக் கருதப் படுகின்றன. ஈஸிஸ் தேவதையின் சிலை ஒரு பெண்தேவதை யின்உருவச் சிலையாகும்; அத்தெய்வச் சிலைக்குப் பசுவின் இரண்டு கொம்புகள் உள்ளன. அத்தெய்வம் கிரேக்கத் தெய்வமான இய[3] என்பதை ஒப்பதாகும். கிரேக்கர்களும்[4] பசுவை மிகப் புனிதமான விலங்காகக் கருதுகின்றனர்.

இறந்துவிட்ட பசுக்களையும் எருதுகளையும் எகிப்தில் என்ன செய்கிறார்கள்? பசுக்கள் ஆற்றில் எறியப்பட்டு விடுகின்றன. எருதுகள், நகரத்தின் புற எல்லைப் பகுதியில் அதன் கொம்புகள் மட்டும் நிலத்தின் மேலே தெரியுமாறு புதைக்கப்பட்டு விடுகின்றன. அச் சடலம் அழுகி, மக்கிப் போனதும், புரோஸோபிடிஸ்[5] எனும் தீவிலிருந்து ஒரு படகு வந்து அங்குள்ள எலும்புகளை எடுத்துச் சென்றுவிடுகிறது. அந்தத் தீவு, நைலஸ் நதியின்[6] கழிமுகத்தில் உள்ளது. அத் தீவின் சுற்றளவு 9 ஷோனி[7]. அத் தீவினுள் பல சிற்றூர்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று அடார்பெகிஸ்[8]. இங்கிருந்து தான், எருதுகளின் எலும்புகளைப் பொறுக்கிச் செல்லும் படகு புறப்படுகிறது. இவ்விடத்தில் அப்ரோடைடி[9] தேவ தைக்கு ஓர் ஆலயம் படைக்கப்பட்டுள்ளது. அடார்பெகிஸிலி ருந்து புறப்பட்ட படகு பல் வேறு நகரங்களுக்குச் சென்று, எருதுகளின் எலும்புகளைப் பொறுக்கிப் படகில் இட்டு எடுத்துச் செல்லும். இயற்கையான மரணம் எய்தும் மற்ற விலங்குகளும் இவ்வாறே புதைக்கப் படுகின்றன. அவை கொல்லப்படுவது கிடையாது. அது அந்நாட்டின் சட்டமாகும்.

ஆடுகள் பலியிடப் படுதல்: மென்டெஸில்[10] வசிப்பவர்கள்—மென்டேஸியர்கள்[11]—வெள்ளாடுகளைப் பலியிடுவதில்லை—

---

1. Cow 2. Isis 3. Io 4. Greeks 5. Prosopitis 6. Nilus 7. Shoeni 8. Atarbechis 9. Aphrodite 10. Mendes 11. Mendesians

செம்மறி ஆடுகளை மட்டுமே பலியிடுவர். அதற்கு மாறாக் தீபே[1] நகரத்தினர் செம்மறி ஆடுகளைப் பலியிடுவதில்லை. காரணம் ஜியுஸ் கடவுள்[2] ஹீராக்ளீஸுக்கு[3]த் தம் உருவத்தைக்காட்ட, ஒரு செம்மறிஆட்டை வெட்டி, அதன் தலையில் தன் தலையை நுழைத்து[4] அதன் உடலைத் தன் உடல்மீது போர்த்திக் காட்சிகொடுத்ததனால் செம்மறி ஆடு ஜியுஸ் உருவத்தில் பங்கு பெற்றுள்ளதாக ஐதிகம். ஜியுஸ் கடவுளுக்குச் செம்மறி ஆட்டுக் கொம்புகள் காணப்படுகின்றன. இதன் காரணமாகத்தான் தீபே மக்கள்[5] செம்மறி ஆட்டைப் பலி கொடுப்பதில்லை.

கோயிலினுள் ஒழுங்கும் கட்டுப்பாடும்: ஆண்களும் பெண்களும் கலவி செய்து சிற்றின்பத்தில் ஈடுபடுவது கோயிலினுள் தடுக்கப்பட்டது. அது குற்றமாகவும் கருதப்பட்டது; அல்லது வெளியில் கலவி செய்து, கை கால்களைக் கழுவாமல் கோயிலினுள் நுழைவதும் குற்றமாகக் கருதப்பட்டது. கிரேக்கர்கள்[6], எகிப்தியர்கள்[7] தவிர வேறெந்த நாடுகளிலும் இத்தகைய பழக்கம் வழக்கத்தில் இல்லை என்றே உறுதியாகக் கூறலாம். சிலர் இதற்கு ஒரு :வினா எழுப்புகின்றனர். கடவுள் முன்னர் விலங்குகளும் மனிதர்களும் சமமே. விலங்குகள்—பசு, பறவை, முதலிய விலங்குகள்—கோயிலினுள் உடல் கூட்டுறவு கொள்வதைக் கடவுள் தடுக்கவில்லை. அவ்வாறிருக்க மனிதர்கள் மட்டும் ஏன் கோயிலில் கலவி செய்யக் கூடாது? ஆனால் இதை நான் ஏற்கத் தயாராக இல்லை. புனிதமான இடத்தில்—சமயத் தொடர்புள்ள இடத்தில்— அருவருக்கத் தக்கச் செயல்களைச் செய்வது வருந்தத்தக்கதே. அவற்றை நான் ஏற்கவில்லை, ஒப்புக்கொள்ளவும் மாட்டேன். எகிப்தியர் இந்த விஷயத்தில் மிகுந்த கட்டுப்பாடுகளுடன் விளங்குகின்றனர்.

அன்றாடப் பழக்க வழக்கங்கள்: எகிப்தியர்கள், தங்கள் முன்னோர்களைப் பற்றிய குறிப்புகளை வைத்துக் கொண்டுள்ளனர். அக்குறிப்புகளே எகிப்தின் உண்மை வரலாறாகக்

---

1. Thebes 2. Zeus 3. Heracles 4. Mask 5. Thebans
6. Greeks 7. Egyptians

காணப்படும். அக்குறிப்புகளிலிருந்தும், இன்றைக்கு அவர்களின் பழக்கங்களிலிருந்தும் சில செய்திகளைத் தர விழைகின்றேன்.

ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு—பேதி மருந்து[1]உட்கொள்கின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணம்: நம் உடலில் ஏற்படும் வியாதிகள் பெரும்பான்மையானவை நாம் உட்கொள்ளும் உணவிலிருந்து ஏற்படுவனவே. உடலினுள் வேண்டாத நச்சுப் பொருள்களை[2] வெளியேற்றா விட்டால், அவை சேர்ந்து நோய்களை உண்டு பண்ணும். அவற்றை வெளியேற்றிவிட்டால், உடல் நன்றாக இருக்கக் கேட்பானேன்? எகிப்தியர்[3] லிபியர்களுக்கு[4] அடுத்தபடியாக சிறந்த உடற்கட்டுடன் காணப்படுகின்றனர். மாவில் செய்த தின்பண்டங்களை உண்பர். அதை அவர்கள் சில்லெஸ்டு[5] என்று வழங்குவர். பார்லியால் செய்யப்பட்ட ஒருவகை மதுபானத்தை அருந்துவர்; சிலவகை மீன்களைப் பச்சையாகவே உண்பர். வாத்துகளையும் சமைத்துஉண்பர். செல்வந்தர்கள் விருந்திற்குப் பிறகு, அங்குக் கூடியிருப்பவர்க்கு, அவர் பணியாளர்கள், 18 அங்குலம் முதல் 3 அடி வரையுள்ள சடலம் போன்ற ஒரு பொம்மை உருவத்தை ஒவ்வொருவருக்கும் காண்பித்துச் செல்வர். மற்றும் பின் வரும் வாக்கியத்தையும் உச்சரித்துப் போவர்: ''நீங்கள் மது அருந்தும்போதும், இன்பமாயிருக்கும் போதும் இந்த உடலைப் பாருங்கள்; நீங்கள் இறந்தவுடன் இந்த உடல் போலத்தான்—சடலம் போலத்தான்—ஆகிவிடுவீர்கள்!''

எகிப்தியர்கள் ''லைனஸ் கீதம்''[6] பாடுகின்றனர். இந்தப் பாட்டுடைத் தலைவன் எகிப்தில்மட்டும்[7] புகழ் பெற்றவன் அல்லன்— பினீசியா[8], சைப்ரஸ்[9], மற்றும் பல இடங்களில் கூடப் புகழுடன் விளங்கினான். லைனஸ் எனும் சொல்லுக்கு நேரான எகிப்தியச் சொல் ''மானரோ''[10] என்பதாகும். அந்த மானரோவுக்கு- எகிப்திய முதல் மன்னனுக்கு—ஒரு மகன் இருந்தான். ஆனால் அவன் இளமையிலேயே இறந்து விட்டான்— அதற்காக அம் மகன்மீது பாடிய கழிவிரக்கப் பாடலே ''லைனஸ் கீத''மாகும்.

---

1. Laxatives 2. Toxins 3. Egyptians 4. Libyans 5. Cyllest 6. Linus song 7. Egypt 8. Phoenicia 9. Cyprus 10. Maneros

எகிப்தியர்களுள் மற்றொரு பழக்கமும் உண்டு. தங்களை விட வயதானவர்கள் வந்துவிட்டால், தாங்கள் உட்கார்ந்திருக்கும் இருக்கையை விட்டு எழுந்து, வந்த அந்த வயோதிகரை உட்காரச் சொல்லி உபசரிப்பர். வயது அதிகமாக ஆக, மதிப்பும் அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. மற்றும் வணக்கத்துக்குரிய ஒருவரைத் தெருவில் கண்டு விட்டால், கைகளை முழங்கால் அளவிற்கு எடுத்துச் சென்று உடலை வளைத்து வணங்கி எழுவர்.

ஒருவரைப் புதைக்கும் பொழுது, ஆட்டுரோமத்தால் ஆன உடைகளுடன் புதைக்கக் கூடாது எனும் ஒரு விதியைக் கொண்டுள்ளனர். அதற்குச் சமயத் தொடர்பான விளக்கத்தையும் தருகின்றனர்.

ஒவ்வொரு கடவுள் பெயரையும் ஒவ்வொரு மாதத்திற்கு இட்டு, ஒவ்வொரு மாதமும் எந்த தெய்வத்துக்கு உகந்தது என்பதையும் வரையறுத்தவர்களுள் எகிப்தியர்களே முதலாமவராகக் கருதப்படுகின்றனர். ஒவ்வொரு மனிதனின் பிறந்த தேதியைக் கொண்டு, அவனது குணங்கள், இலாப நட்டங்கள், செல்வச் சேமிப்பு, ஆயுள் முதலியவற்றைக் கணித்துச் சொல்வதிலும் எகிப்தியர்களே[1] முதலாமவர் ஆவர். இதைப் பின்னர் கிரேக்கர்[2] பயன்படுத்திக் கொண்டனர். கிரகணம்[3] போன்ற வியப்பூட்டும் செய்திகளைக் குறித்து வைத்துள்ளனர்.

மருத்துவ நிலைமை:[4] எகிப்தில்[5] மருத்து நிலை தனிப்பட்ட முறையில் விளங்கிற்று. அங்கு ஒரு நோய்க்கு ஒரு மருத்துவர்— கண் நோய்களுக்குக் கண் மருத்துவர்; காது நோய்களுக்குக் காது மருத்துவர்; பல் நோய்களுக்குக் பல் மருத்துவர்; வயிற்றுக் கோளாறுக்கு வயிற்று மருத்துவர். இவை போல மருத்துவர் பலர் இருந்தனர்.

ஈமக் கிரியைகள்:[6] ஒருவர் இறந்து விட்டால், அத் துக்கத்தைக் கொண்டாட, தங்கள் தலை, முகம் முழுவதும் சேற்றை[7]க் குழைத்துப் பூசிக்கொள்கின்றனர். இறந்தவரின் சடலத்தை வீட்டினுள்ளே வைத்து விட்டு, இறந்தவரின்

1. Egyptians 2. Greeks 3. Eclipse 4. Medicine 5. Egypt 6. Obsequies 7. Mud

பெண் உறவினர் யாவரும் ஒன்று சேர்ந்து, தங்கள் ஆடைகளை ஒன்றுடன் ஒன்று முடிந்து, அந்நகரத்தைச் சுற்றித் தங்கள் திறந்த மார்பில் அறைந்து கொண்டு வலம் வருவர். ஆண்களும் அவ்வாறே ஆடைகளை முடிந்து கொண்டு மார்பில் அறைந்து கொண்டு வலம் வருவர். இறந்தோர்க்குச் செய்யும் சடங்குகள் செய்து முடிக்கப்பட்டதும், அந்த உடலைச் சடலப் பாதுகாப்புச் செய்ய[1] எடுத்துச் சென்று விடுவர்.

விளக்கவுரை

நினைவுச்சின்னங்கள்[2] : இவை பிரமிடுகள்[3] என்று வழங்கப்படும். கிரேக்க மொழியில் பிரமிஸ்[4] என்று வழங்கப்பட்ட இச்சொல், இலத்தீனிலும், பிறகு ஆங்கிலத்திலும் பிரமிட் என்று வழங்கப்படுவதாயிற்று. எகிப்திய அரசர்கள்[5] இறந்தவுடன் அவர்கள் சடலத்தைப் பக்குவம் செய்து, உயிருள்ள உருவம் போன்ற ஒன்றை உருவாக்குவர்[6]. அச்சடலத்தை வைத்து, அதன்மீதுதான் பாறைக் கற்களாலான கட்டடம் எழுப்பப்படும். இவை முதன் முதல் பாரோக்கள்[7] எனும் அரசர்களுக்கு ஏற்படுத்தப்பட்டன. இக்கட்டடங்கள் 4600 ஆண்டுகளுக்கும் மேலாகவே எகிப்தின் கடுவெப்பத்தையும், சூறாவளியையும் பொருட்படுத்தாமல் உன்னதமாக வீற்றிருக்கின்றன என்றால், அவற்றிற்காக எத்துணைக் கடின உழைப்பு செலவிடப்பட்டிருக்க வேண்டும்! இப்பிரமிடுகள் யாவும் நைல்நதி[8] ஆற்றுக்கு மேற்கே மெம்பிஸ்[9] எனும் நகரத்தின் அருகிலே காணப்படுகின்றன.

இதன் மற்ற விவரங்களைப் பின்னர் வரும் 'சியாப்ஸ்[10] கட்டிய பிரமிடுகள்' என்ற தலைப்பில் பிரமிடுகள் என்ற விளக்கவுரையில் காண்க.

வியப்பூட்டும் பழக்க வழக்கங்கள்: ஆண்கள் வீட்டிலிருந்து கொண்டு துணி நெய்தல்; பெண்கள் வெளியே சென்று வருதல்; ஆண்கள் தலைமீது மூட்டைகளைச் சுமத்தல்; பெண்கள் தோள்களில் சுமத்தல்; ஆண்கள் உட்கார்ந்து கொண்டு சிறுநீர்

---

1. Embalming 2. Monuments and Memorials 3. Pyramids 4. Piramis 5. Egyptian Kings 6. Mummy 7. Pharos 8. Nile 9. Mempis 10. Cheops

கழித்தல்; பெண்கள் நின்றுகொண்டு சிறுநீர் கழித்தல்; தெருவில் உணவு உட்கொள்ளுதல்; ஆனால் வீட்டினுள் மலசலம் கழித்தல்; ஆண்களுள் குருமார்[1] உண்டு; பெண்களுள் குருமார்கள் கிடையாது. ஆக இத்தகைய வியப்பு மிக்க பழக்க வழக்கங்கள் உலகில் சில நாடுகளில் அன்று முதல் இன்று வரை காணப்படுகின்றன.

மார்க்கோபோலோ (கி.பி. 1254 - 1324) கூறுகிறார்:

"இந்நாட்டு மக்கள் (மசூலி, லார் நாடுகள்) தங்கள் இயற்கை உபாதைகளை நீக்க - மலங்கழிக்க - கடற்கரைக்குச் சென்று அங்குள்ள மணலில் வெளியிட்ட கழிவுப் பொருள்களை நாலாபக்கங்களிலும் பரப்பிவிடுவர். அம்மலத்தில் கிருமிகள் உற்பத்தியாவதைத் தடுப்பதற்காகவே என்று அதற்குக் காரணம் காட்டுவர்."

—(மார்க்கோபோலோ, அதிகாரம் 7, பக்கம் 70)

தலைமயிர் வளர்த்தல்: எல்லா இடங்களிலும் குருமார்கள் தலைமயிரை வளர்க்கின்றனர்[2] என்று ஹிராடடஸ் கூறுகிறார். ஆனால், எகிப்தில் மட்டும்[3] தலைமயிரை மழித்துக் கொண்டு விடுகின்றனர் என்றும் கூறுகிறார். கருமாதிகள், சடங்குகள் செய்யும் பொழுது தலைமயிரையும் முகமயிரையும் மழித்து விடுவர். இஃது உலகமெங்கும் காணப்படும் நிலை என்று கூறி, எகிப்தில் அதற்கு மாறாக தலைமயிரும் தாடியும் வளர்ப்பர் என்றும் முடிக்கிறார்.

இந்தியாவில்—தமிழ்நாட்டில்—குருமார்கள் சிலர் தலைமயிரையும் தாடியையும் வளர்த்து வந்தனர். பண்டைய ரிஷிகள், முனிவர்கள் அவ்வாறே விளங்கிவந்தனர். வசிஷ்டர், விசுவாமித்திரர், ஜனகர், அகஸ்தியர் முதலானோரைக் குறிப்பிடலாம். சைன குருமார்கள் தங்கள் தலைமயிரை மழித்துக் கொண்டனர். தாடியும் வளர்ப்பதில்லை. இவ்விருவகைகளும் நீட்டல் மழித்தல் என்று கூறப்படும். இவற்றைக் குறித்துத் திருவள்ளுவர் கூறுகிறார்:

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்." —(திருக்குறள்: 280)

எகிப்தியர் சுன்னத்துச் செய்து கொள்ளுதல்:[4] இவ்வழக்கம் அராபியர்களாலும்[5], முஸ்லிம்களாலும்[6] பிற்காலத்தில் பின்பற்றப்படுவதாயிற்று இவ்வழக்கம் உள் உடற்சுத்தத்தைக்

1. Priests 2. Grow hair 3. Egypt 4. Circumcision 5. Arabians 6. Muslims

கருதியும், சிற்றின்பத்தைப் பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்று கருதியும் பழக்கத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இப்பழக்கம் விவிலிய நூல் எனும் பைபிளில்[1] குறிப்பிடப் பட்டுள்ளது:

"And when a stranger shall sojourn with thee, and will keep the Passover to the Lord, let all his males be **circumcised** and then let him come near and keep it; and he shall be as one that is born in the Land; for **no uncircumcised** person shall eat thereof"

—(Old Testament, Exodus: 12-48)

ஆண்கள் இரண்டு துணிகளையும், பெண்கள் ஒரே துணியையும் உடுத்துதல்:

இங்கு உடுப்பது என்பது, அவர்கள் இரண்டு துணிகளை மட்டுமே வைத்துக் கொள்வர் என்பது இதற்குப் பொருள் அன்று. ஆண்கள் ஒரு துணியைக் கீழேயும், மற்றொரு துணியைப் போர்வையாகவும், மார்மீதும் போர்த்திக் கொள்வர் என்றும், பெண்கள் ஒரே துணியை இடுப்பிலிருந்து கால்வரை உடுப்பர் என்றுமே இதற்குப்பொருள். பெண்கள் ஒரே துணியை உடுப்பது இன்றும் இந்தியாவில் மேலைக் கடற்கரையில் கேரளநாட்டில்[2] காணப்படும் காட்சியாகும். அதனால் ஒவ்வொருவரிடத்தில் துணிகள் —ஆடைகள்— நிறைய வைத்திருப்பர்; ஆயினும் உடுப்பவை இரண்டு மட்டுமே.

இந்தியாவிலும் — தமிழ்நாட்டிலும்— எல்லாப் பகுதிகளிலும் பழங்காலத்தில் இரண்டு துணிகளையே உடுத்தி வந்தனர். ஒன்று கச்சையாகக் கட்டிக்கொள்வது; இரண்டாவது மேல் அங்க வஸ்திரமாகும்.

"கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவர்க்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே ',

—[புறநானூறு : 189 - (3-4)]

எழுதும் முறை :[3] பெரும்பாலான மக்கள் உலகமெங்கும் இடமிருந்து வலம்தான் எழுதி வந்தனர். ஆனால் எகிப்தியர்[4] வலமிருந்து இடம் எழுதி வந்ததாக ஹிராடடஸ் கூறுகிறார். இவ்வாறு வலமிருந்து இடம் எழுதும் பழக்கம் பிற்காலத்தில்

1. Bible 2. Kerala 3. Writing method 4. Egyptians

அரேபியர் களாலும்[1] முஸ்லிம்களாலும்[2] பின்பற்றப்பட்டது.

சீனர்கள்[3] ஜப்பானியர்கள்[4]மேலிருந்து கீழாகவும்,அராபியர் கள், முஸ்லிம்கள் வலமிருந்து இடமாகவும், இந்தியா[5] உட்பட மற்ற எல்லா நாட்டு மக்களும் பொதுவாக இடமிருந்து வலமாக வும் எழுதி வந்தனர்; எழுதியும் வருகின்றனர்.

அன்றாடம் துணிகளைத் துவைத்தல்: இப்பழக்கம் இந்தியா விலிருந்து மேலை நாடுகளுக்குச் சென்றது. காரணம் மேலை நாடுகள் யாவும் குளிர் நிறைந்த பிரதேசங்கள். ஆகையால் அன்றாடம் குளிப்பதே அருமை; அவ்வாறிருக்கும்பொழுது துணிகளை எங்கே அன்றாடம் துவைப்பது? ஆகையால் இப்பழக்கம் இந்தியாவிலிருந்து தான் மேலை நாடுகளுக்கும் சீனா போன்ற கீழைநாடுகளுக்கும் பரவிற்று.

மதகுருமார்[6] ஒன்றுவிட்டு ஒருநாள் மயிரை மழித்துக் கொள்ளுதல்: இப்பழக்கமும் சைனர்களிடமிருந்து[7] மேலை நாட் டுக்குச் சென்ற பழக்கமே. பேன் முதலிய சந்துக்கள் துன்புறா வண்ணம், மயிரை மழித்துக் கொள்வர் சைன மரபினர். அதே கொள்கை யில்தான், அவை மனிதனைத் துன்புறுத்தாவண்ணம், எகிப்தியக் குருமார்களும் தலைமயிரை வளரவிடாமல் ஒன்று விட்டு ஒரு நாள் மழித்துக் கொண்டனர்.

இந்தியாவில் – தமிழ்நாட்டில்[8]—யாகம் நடக்கும் பொழுது அதை நடத்தும் குருமார்கள் அவ்வாறே தலை மயிரை மழித்துக் கொள்வதை இன்றும் பல இடங்களில் காணலாம்.

அன்றாடம் நான்கு முறை குளியல்: இந்திய நாட்டு ரிஷிகளும் ஞானியர்களும், மடாதிபதிகளும் தினம் மூன்று முறை குளிக்க வேண்டும் என்பது சந்நியாஸி ஆச்ரமத்தின்[9] விதி. எகிப்து[10] நாட்டில், தினம் நான்கு முறை குளித்தனர்—பகல் இருமுறை, இரவு இரு முறை. இந்தியர்கள்—தமிழ்நாட்டு மடாதிபதிகள்— செய்து வந்தது "திரிகால ஸ்நானம்" என்று வழங்கப்பட்டது.

இபாபஸ்[11] அல்லது ஆபிஸ்[12]: இது மெம்பிஸ்[13] நகரத்துப் புனிதம் வாய்ந்த எருது ஆகும். அவ் எருதின் பெயர் ஆபிஸ். அவ் எருதே[14] எகிப்தியர்களால்[15] கடவுளாகக் கருதப்பட்டது.

---

1. Arabians 2. Muslims 3. Chinese 4. Japanese 5. India 6. Priests 7. Jains 8. Tamilnadu 9. Ascetics 10. Egypt 11. Epaphus 12. Apis 13. Mempis 14. Bull 15. Egyptians

சில குறிப்புகளைக் கொண்டு, அதைத் தெய்வமாகக் கொண்டாடினர். மெம்பிஸ் நகரத்தில் அவ் எருதுக்குத் தனியாக வசிக்கும் இடம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அங்கே அது ஓடுவதற்கும், மேய்வதற்கும் பரந்த எல்லைப் பரப்பு உண்டு. அதன் பிறந்த நாள் எகிப்தில் கடவுளின் பிறந்த நாளாகக் கொண்டாடப் பட்டது. அதன் இறப்பு நாடு முழுவதும் துக்க நாளாகக் கருதப் பட்டது. அடுத்த புனிதமான எருது எகிப்தியர்களால் பொறுக்கியெடுக்கப்படும் வரை, அத் துக்கநாள் செயல்படுத்தப் பட்டு வந்தது.

அத்தகைய புனிதமான எருதின் இலக்கணங்கள் ஹிராடட ஸால் தரப்பட்டுள்ளன. இறுதியில் அஃது எவ்வாறு பலியிடப்படு கிறது என்பதும் விரிவாகவே தரப்பட்டுள்ளது.

மாரடித்துக் கொள்ளுதல்[1]: துக்கச் சடங்கின் இறுதியில் மாரடித்துக் கொள்ளுதல் நடைபெறுகிறது. இவ்வழக்கம் இந்தியாவில்—தமிழ்நாட்டில்- நெடுங்காலமாக இருந்து வரு கிறது. மொகரம் பண்டிகையில் முஸ்லிம்களின் ஒரு பகுதியினர் மாரடித்துக் கொள்வதாக ஒரு சடங்கு இன்றும் நடைபெற்று வருகிறது.

"மாரடித்துத் திரியும்..."

(அரிச்சந்திர புராணம்—நாடகம்: 36)

மார்க்கோபோலோ: (கி. பி. 1254-1324) மாரடித்துக் கொள்ளு தல் பற்றிப் பின்வருமாறு வர்ணிக்கிறார்:

"இந்தநாட்டின் பெரிய கனதனவான்கள் இறந்துவிட்டால், அவர்கள் மனைவிமார்கள் தங்கள் க்ணவர்களை நினைத்துக் கொண்டு நான்கு வாரங்கள் தொடர்ச்சியாக அழுது புலம்புவர். இவ்வாறு அழுது புலம்புவதற்கெனக் கூலி பெறும் ஆள்களும் நிறையக் கிடைக்கிறார்கள். இருப்பவர் இறப்பவர்களுக்கு அழுது புலம்புவது அன்னாரின் ஆன்ம சாந்திக்காக என நம்பப் படுகிறது.

இற தவரின் பத்தாம் நாள் சடங்கில் உறவினர்கள்—பெண் கள்—பிண்டத்தைக் கண்டு மாரடித்துக் கொள்ளுதல் இன்றும் நடைபெறும் காட்சி.

—(மார்க்கோபோலோ: அதி 2: பக்கம் 105)

---

1. Beating their breasts

பசுப் பலி கிடையாது[1]: பசுவிற்கு முக்கியப் பாதுகாப்புக் கொடுத்து வந்தது நம் தமிழ்நாடும், பரந்த இந்திய நாடும் ஆகும். வடநாட்டார் அதை "கோசம்ரக்ஷணம்" என்றும், அதையே தமிழ்நாட்டார் "பசுப் பாதுகாப்பு"[2] என்றும் வழங்கி வருகின்றனர். பசு ஒரு தெய்விக அம்சமாக இந்தியாவும், தமிழ்நாடும் கருதி வருகின்றன. பசுவில் காமதேனு நினைத்ததை எல்லாம் நினைத்தவாறே தரும் சக்தி படைத்தது என்று புராணங்கள் வர்ணிக்கின்றன.

திருவள்ளுவர் பசுவைப் பற்றிக் கூறியுள்ளவை:

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின்."

—(திருக்குறள்: 560)

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்
கிரவின் இளிவந்த தில்."

– (திருக்குறள்: 1066)

"வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று."

—(திருக்குறள்: 273)

புறநானூறு கூறுகிறது.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்"

– (புறநானூறு: 9-1-2)

(ஆ-பசு: பெற்றம்-பசு)

ஆகையால் இந்துக்கள் பசுவைக் காப்பாற்றுவார்களே தவிர, கொல்வதில்லை. இப்பழக்கம் இந்தியாவிலிருந்தே - தமிழ் நாட்டிலிருந்தே—மேலை நாடுகளுக்குச் சென்றது என்பது ஒப்புக் கொள்ளக்கூடிய கருத்தாகும். பசுவைக்கொல்லுதல் கோ ஹத்தி என்று வழங்கப்படும்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்"

—(திருநாவுக்கரசர்: தனித்திருத் தாண்டகம்)

ஆ—பசு—பசுவை உரித்து, அதன் ஊன் உண்பவர் புலையர் என்றே குறிப்பிடப்படுகின்றனர். பசுக்கொலை எவ்வாற்றாலும் கண்டித்து ஒதுக்கப்பட்டது.

1.Cow Sacrifice 2. Cow Protection

ஈஸிஸ்[1]: எகிப்தியத் தெய்வங்களுள்[2] இது முக்கியமான பெண் தெய்வமாகும். இப்பெண் தெய்வம் ஆஸிரிஸ்[3] என்பாரின் மனைவியும், ஹோரஸ்[4] என்பாரின் தாயும் ஆவார். முதலில் அவர் பூமித் தெய்வமாகக் கருதப்பட்டார். பின்னர் சந்திரனின் தேவதையாகக் கருதப்பட்டார். கிரேக்க மக்கள், இத்தெய்வத்துக்கு ஒப்பாக டெமீடரையும்[5], இயவையும்[6] கூறுவர். பிற்காலத்தில் இவர் ரோமானியக் கடவுளாகப் பெரும் புகழ் எய்தினார். இத்தெய்வத்துக்கு முக்கியமான கோவில் ரோம் நகரில் கட்டப்பட்டது. இத்தெய்வத்தைப் பூசை செய்யும் குருமார்கள் லினன் ஆடைகளையே[7] உடுத்த வேண்டும் என்ற சட்டம் அந்நாட்டில் உள்ளது.

—(A Smaller Classical Dictionary: Page 285)

புரோஸோபிடிஸ்[8]: இஃது ஒரு சிறிய தீவு. இது நைல் நதிக் கழிமுகத்தில்[9] இருந்தது. அங்கிருக்கும் படகில் ஏறி வந்து மக்கள் புதைக்கப்பட்ட எருதுகளின் எலும்புகளை எடுத்துச் செல்வர். அவ்வாறு எடுத்துச் செல்ல அவர்களுக்கே அதிகாரம் உண்டு. அத்தீவின் முக்கிய நகரம் அடார்பெகிஸ்[10]. இவ்விடத்திலிருந்து தான் எருதுகளின் எலும்புகளைப் பொறுக்கப் படகுகள் புறப்படுகின்றன.

மென்டெஸ்[11]: இத்துறைமுகம் நைல் நதிக் கழிமுகத்தில் இருந்தது. அக்கழிமுகத்தின் பெயர் "மென்டெஸியன் வாயில்"[12] என்பதாகும். அப்பெயராலேயே அதன்மீதுள்ள துறைமுகம் மென்டெஸ் என்றே வழங்கப்பட்டது. மென்டெஸியர்கள் வெள்ளாடுகளைப் பலியிடுவதில்லை.

தீபே[13]: எகிப்தின் மிகவும் புகழ்பெற்ற இடம். நைல் நதியில் இருமருங்கிலும் இருந்தது. இந்நாட்டினர் செம்மறியாடுகளைப் பலியிடுவது கிடையாது. அதற்கான காரணம், ஜியுஸ் கடவுள் செம்மறி ஆட்டின் தோலைப் போர்த்துக்கொண்டு காட்சியளித்தார் என்பதும், அவர் உருவமாகக் கருதப்படும் செம்மறி ஆட்டைப் பலியிடுவதில்லை என்பதுமே. மற்றும் பக்கம் 175, குறிப்பு 8 பார்க்கவும்.

ஜியுஸ்[14]: இக்கடவுள் திக்கடவுள் ஆவார். இவர் மனைவி

---

1. Isis 2. Egyptian Gods 3. Osiris 4. Horus 5. Demeter 6. Io 7. Linen 8. Prosopitis 9. Nile Delta 10. Atarbechis 11. Mendes 12. Mendesian Mouth 13. Thebes 14. Zeus

செமிலி[1]. இவருடைய மகன் டையோனிஸஸ்[2]. மற்றும் பக்கம் 108, குறிப்பு-3 பார்க்கவும். இது தேஜஸ்[3] அதாவது ஒளி எனும் வடமொழிச் சொல்லின் சிதைவே.

ஹீராக்கிளிஸ்[4]: இவர் ஹெர்க்குலீஸ்[5] எனும் பெயரால் வழங்கப்படுகிறார். இவர் கிரேக்க தெய்வங்களுள் முதன்மை யானவர். இவர் ஜியுஸ் கடவுளின்[6] மகன். ஹிராக்ளிஸ், ஹிந்துக் கடவுள் கிருஷ்ணனுக்கு[7] ஒப்பாவார். இருவருடைய வரலாறுகளும் ஒன்றுபோலக் காணப்படும். மிக்க உறுதியான உடல் அமைப்பைப் பெற்றவராகச் சித்திரிக்கப்படுகிறார். ஹிராக்ளிஸுக்குச் சிங்கத்தோலும், ஒரு குறுந்தடியும் சின்னங் களாகத் தரப்பட்டுள்ளன.

மெகஸ்தனிஸ் (கி.மு. 302-296) ஹிராக்ளிஸைப் பற்றிக் கூறுகிறார்:

"கிரேக்கக் கடவுள் போல, அக்கடவுளுக்குச் சிங்கத்தோலும், குறுந்தடியும் சின்னங்களாகத் தரப்பட்டுள்ளன. மற்ற மக்கள் யாவரையும் விட அவரே வலிமை மிக்கவராக, வலிமையுடைய வர்களுள் முதன்மையாக நின்றார். மக்களைத் துன்புறுத்தும் விலங்கினங்களிடமிருந்து, அம்மக்களைக் காப்பாற்றும் தெய்வ மாக விளங்கினார்," —(மெகஸ்தனிஸ், அதி : 5, பக்கம் 43)

ஜியுஸ் கடவுளுக்குச் செம்மறியாடுகள்[8] பலி கொடுப்பதில்லை: ஹிராக்ளிஸ் ஒருமுறை தம் தந்தை ஜியுஸின் உருவத்தைக் காண விழைந்தார். ஜியுஸ் தீக் கடவுள் ஆனதால், தம் உருவத் தைக் காட்டினால், மகன் தீயில் எரிந்து விடுவான் என்று, அதற்கு ஓர் உபாயம் செய்தார். தம் உருவத்தை ஒரு செம் மறி ஆட்டுக்கடாவின் உள் செலுத்தி, தம் தலையை அதன் தலையிலும், தம் உடலை அதன் உடலிலும் பதிய வைத்துக் காட்சி கொடுத்தார். நேரடியான உருவம், காணப்படாவிடினும், ஹிராக்ளிஸ் ஒருவாறு சமாதானமடைந்து விட்டார். அதன் காரணமாகத்தான், தீபே மக்கள்[9] ஜியுஸ் கடவுளுக்குச் செம்மறி ஆட்டைப் பலியிடுவதில்லை. ஜியுஸ் கடவுளின் ஒரு சின்னமாகச் செம்மறி ஆடு ஆகிவிட்டது.

கோயிலினுள் சில கட்டுப்பாடுகள் : கோயில் ஒரு புனிதமான இடம். அதனுள் சிற்றின்பச் சேர்க்கை[10] வைத்துக் கொள்ளக்

---

1. Semily 2. Dionysus 3. Thejes 4. Heracles 5. Hercules 6. Zeus 7. Sri Krishna 8. Sheeps 9. Thebans 10. Sexual Intercourse

கூடாது என்பது தமிழ்நாட்டவரின் சீரிய கொள்கை. அதன் காரணமாகத்தான் கோயிலுக்குள் செல்லும் போது, கைகால் களை நன்றாகக்கழுவி விட்டு உள்ளே போக வேண்டும் என்பது விதி.

இன்றைக்கும் கன்னியாகுமரி[1] போன்ற கோயில்களில் "போத்தி" எனும் அர்ச்சகர் ஓராண்டு அக்கோயிலின் இல்லத் திலேயே இருக்க வேண்டும் என்றும், அவர்கள் அவ் ஓராண்டுக் காலம் தம் மனைவியுடன் கலவி செய்யக்கூடாது என்றும், மிகுந்த கட்டுப்பாடுடன் வாழவேண்டும் என்றும் விதிகள் விதிக் கப்பட்டுள்ளன.

ஆகையால் இத்தகைய கட்டுப்பாடுகளும் விதிகளும் எகிப்து[2]க்குத் தமிழ்நாட்டிலிருந்தே சென்றன என்று தைரிய மாகக் கூறலாம்.

பெண்கள் சேர்க்கையை அறவே ஒழிக்க, சில கோயில்களின் துறவிகளே இன்றும் பூசை செய்கின்றனர். அத்தகைய கோயில்களில் இச்சிற்றின்பச் சேர்க்கை என்ற பிரச்சினைக்கே இடம் இருக்காது. (எ-டு): சென்னை—அம்பத்தூர்—ஆவடி பாதையில் விளங்கும் ஸ்ரீவைஷ்ணவி கோயில், திருமுல்லைவாயில்.

முன்னோர்களின் குறிப்புகள்: எகிப்தியர்கள் தங்கள் முன் னோர்களின் செயல்களையும் வாழ்ந்த ஆண்டுகளையும் குறிப் பெடுத்து வைத்துள்ளனர். அவ்வரலாறுகளை ஆராய்ந்து, ஒன்றிணைத்தால், எகிப்தின் வரலாறு கிடைக்கும். இவ்வாறு ஆராய்ந்துதான் ஹிராடடஸ் எகிப்தின் வரலாற்றைத் தந்துள்ள தாகத் தாமே ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதே போன்று தென்னிந்தியாவிலும்[3] சிரியன் கிறித்தவர் கள்[4] 2000 ஆண்டுகளுக்கு மேலாக, தத்தம் குடும்பத்தின் முன் னோர் வரலாறுகளைப் பதிய வைத்துள்ளனர். அவை "ரிகார்ட்ஸ்"[5] என்று வழங்கப்படுகின்றன.

பெரிப்ளூஸ் நூல் (கி. பி. 50–80) குறிப்பிடுகிறது:

"இப் பகுதியில் கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் யூதர்கள் தங்கித் தம் இருப்பிடங்களை ஏற்படுத்திக் கொண் டனர். அவை யூதர் அமைவிடங்கள் எனப்பட்டன. இப்பட்ட யங்கள் ரிகார்ட்ஸ் என்று வழங்கப்பட்டன."

—(பெரிப்ளூஸ்: அதி: 54, பக்கம் 224)

---

1. Cape Comorin 2. Egypt 3. South India 4. Syrian Christians 5. Recorts

மூன்று நாள்கள் பேதி மருந்து[1] உட்கொள்ளுதல்: தமிழ் நாட்டில் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முறை விளக்கெண்ணெய் கொடுப்பார்கள். அவ்வழக்கம் அரேபிய மக்களாலும், எகிப்திய மக்களாலும் பின்பற்றப்பட்டு வந்தது. விளக்கெண்ணையைத்[2] தமிழர்கள் "பிள்ளை வளர்ப்பான்" என்று கூறுவது வழக்கம். இது பினீசிய மக்களால்[3] பரப்பப்பட்ட பழக்கமாகும்.

விருந்திற்குப் பின்னர் ஓர் உருவத்தைக் காண்பித்தல் : இது குடியை மிதமாகக் குடிக்க வேண்டும் என்பதற்கும், குடி அதிகமாயின், இறுதியில் இந்நிலையையே அடைய நேரிடும் என்பதை எச்சரிக்கவுமே அவ்வுருவக் காட்சி பயன்படுத்தப் பட்டது. குடியால் உடலம் சடலமாவது திண்ணம் என்ற செய்தியைத்தான் அவ்வுருவம் எடுத்துரைக்கிறது.

லைனஸ் கீதம்[4]: இக்கீதம் பினீசியா,[5] சைப்ரஸ்,[6] எகிப்து[7] ஆகிய நாடுகளில் புகழ்பெற்றிருந்தது. லைனஸ் என்ற சொல்லுக்கு எகிப்திய மொழியில் "மானரோ"[8] என்பதாகும். அம்மன்னன் மகன் இறந்து விட்டதற்காகப் பாடும் ஒருவகைக் கீதமே "லைனஸ் கீதம்" ஆகும். இது அரிச்சந்திர புராணத்தில் "சந்திரமதி புலம்பல்" என்பதை ஒக்கும்.

ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு கடவுளின் பெயர் :

பெரிப்ளூஸ் நூல் (கி. பி. 50-80) கூறுகிறது : "மேலை நாடு களுக்கு முற்காலத்தில் மார்ச் மாதம்தான் ஆண்டுத் தொடக்க மாயிருந்தது. ஜூலியஸ் சீசர் நாடகத்தில் "Beware the Ides of MARCH" என்பதை நோக்குக. ஆகஸ்டு என்பது அக்கணக்கில் ஆறாவது மாதம் (செக்ஸ்டிலிஸ் — சஷ்டி — ஆறாவது); செப்டம்பர் — (செப்டெனியல் — சப்த — ஏழாவது); அக்டோபர் (அக்டெனியல் - அஷ்ட—எட்டு); எட்டாவது மாதம்; நவம்பர். (நவம் — ஒன்பது) ஒன்பதாம் மாதம்; டிசம்பர் (டிசம்பரிஸ்-தசம் — பத்து), பத்தாவது மாதம் ஆக இவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளது.

—(பெரிப்ளூஸ் : அதி. 6 குறிப்பு 24 பக்கம் 27)

---

1. Laxative 2. Castor oil 3. Phoenicians 4. Linus Song 5. Phoenicia 6. Cyprus 7. Egypt 8. Maneros

ஒவ்வொரு கிழமையையும் ஒரு கடவுளின் பெயரால் வழங்கியது போன்று: (ஞாயிறு — சூரியன்; திங்கள் — சந்திரன், செவ்வாய் — முருகன்; புதன் — விஷ்ணு; வியாழன் — குரு; வெள்ளி — சுக்ரன்; சனி — சனீஸ்வரன். ஒவ்வொரு மாதமும் ஒரு கடவுளின் பெயரால் கிரேக்க நாட்டிலும் எகிப்திலும் வழங்கப்படுவதாயிற்று.

துக்கம் ஏற்பு[1]: முகம் முழுவதும் சேற்றைப்[2] பூசிக் கொள்வது எகிப்திய நாட்டின் பழக்க வழக்கத்துள் ஒன்றாகும். மற்றும் சடலத்தை வீட்டினுள் வைத்து விட்டு, ஊரார்க்குத் தெரியப்படுத்தப்படும். ஈமச்சடங்குகள் நடந்தேறிய பிறகு, அச்சடலம் பாதுகாப்புச் செய்ய அனுப்பப்பட்டுவிடும். சடலப் பாதுகாப்பு முறை[3] — அதிகாரம் 7, பக்கம் 187-ல் பார்க்கவும்.

---

1. Mourning 2. Mud 3. Embalming

5. பூனை, முதலை

"பூனை[1]; முதலில் வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளைப் பற்றிக் கவனிப்போம். பூனை வீட்டில் வளர்க்கப் படும் முக்கியமான விலங்கு ஆகும். இங்குப் பூனை ஒரு முறை குட்டிகளை ஈன்றால், மீண்டும் அப்பெண் பூனை கடுவன் பூனையைத்[2] தன் அருகில் சேர்ப்பதில்லை. இவ்வாறு ஒவ்வொரு பெண் பூனையும் செய்து வந்தது கடுவன் பூனைக்குக் கோவம் ஊட்டியது. அதனால் திருட்டுத் தனமாக அப்பூனைகளின் சிறு குட்டிகளைக் கடித்துக் கொன்று விடும். ஆனால் தின்பதில்லை. பெண் பூனை தன் குட்டிகளை இழந்தவிடத்து, தன் வர்க்கம் நிலைக்கவேண்டி, மீண்டும் கடுவன் பூனையைத் தேடிச் செல்லும். இவ்வாறு ஒவ்வொரு வீட்டிலும் ஓர் ஆண் பூனையும், ஒரு பெண் பூனையும் வளர்க்கப்படுகின்றன.

ஒரு வீடு தீப்பற்றி எரிந்தால், அங்குக் காணப்படும் காட்சி தனிப்பட்டதுதான். அத்தீயைப் பற்றி எவரேனும் சிறிதும் கவலை கொள்ள மாட்டார். அதை அணைக்கவும் முயலமாட்டார். அவர்கள் பத்திரமாகப் பாதுகாப்பது தங்கள் பூனையையே. ஒவ்வொருவரும் வரிசையாக நின்று, பூனையை அத்தீயினின்றும் காப்பாற்ற முயல்வர். அப்படியும் ஓரிரண்டு பூனைகள், அக்கூட்டத்தின் பெருக்கத் தினால் மிரண்டு, அத் தீயிற்குள் பாய்ந்தேவிடும். இந் நிகழ்ச்சி எகிப்தியர்களுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கும்.

---

1. Cat 2. Male Cat

ஒரு வீட்டில் ஒரு பூனை இறந்துவிடில், அவ் வீட்டிலுறைபவர் யாவரும் தங்கள் புருவங்களை மழித்துக் கொள்வர். ஒரு நாய் இறந்துவிடில், தங்கள் உடல் முழுவதும்—தலை உள்பட— சர்வாங்க க்ஷவரம் செய்து கொள்வர். இறந்த பூனைகள் புபாஸ்டிஸ்[1] எனும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே சடலப் பாதுகாப்பு செய்யப்பட்டு, புனிதம் வாய்ந்த பேழையிலிட்டு, தனியான இடத்தில் புதைக்கப்படும். நாய்களும்[2] அவ்வாறே புனிதமான சடங்குகளுடன் புதைக்கப்படும். கரடிகளும்[3]- இவை எப்பொழுதாகிலும் காணப்படும்- ஓநாய்களும்[4] அவை இறந்த இடங்களிலேயே புதைக்கப்படட்டு விடும்.

முதலை[5]: முதலை குளிர் காலத்தின் நான்கு மாதங்களில் எவ்வித உணவையும் எடுத்துக் கொள்வதில்லை. அது நான்கு கால்கள் உள்ள விலங்கு. நீரிலும் இருக்கும்; நிலத்திலும் இருக்கும். தன் முட்டைகளைத் தரையில்— கடற்கரையில்— இடும். அதன் அருகிலேயே நாள் முழுவதும் இருக்கும். இரவில், நீர் வெதுவெதுப்பாய் இருப்பதால், முதலை நீரினுள் சென்றுவிடும். முதலைக் குட்டிக்கும், அதன் தாய்க்கும் பேரளவில் வேறுபாடுகள் காணப்படும்— நீளத்தில். நன்றாக வளர்ந்த முதலையின் நீளம் 23 அடிகள் இருக்கும். அதன் பற்கள் ஒன்றன் பக்கத்தில் ஒன்று பொருந்துவதாகக் காணப்படும். இரையைப் பிடித்த பொழுது அவ் இரை நழுவிச் சென்றுவிட முடியாது. அதற்கு நாக்குக் கிடையாது. கீழ்த்தாடை அசையாமல் நிலைபெற்றிருக்கும். அது நீரில் பார்வையைச் செலுத்த முடியாது. நிலத்தில் அதன் பார்வை மிகவும் கூர்ந்து காணப்படும். அது நீண்ட நேரம் நீரில் இருப்பதால் அட்டைப் பூச்சிகள்[6] அதன் வாயைச் சுற்றிலும் மொய்த்துக் கொண்டு விடுகின்றன. மற்ற எல்லா விலங்குகளும் முதலையை விட்டு விலகிச் சென்று விடுகின்றன.

தீபே நாட்டில்[7], மோயரிஸ் ஏரியில்[8] உள்ள முதலைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதைப் புனிதமாக[9]

---

1. Bupastis 2. Dogs 3. Bears 4. Wolves 5. Crocodile
6. Leeches 7. Thebes 8. Moeris Lake 9. Sacred

ஏற்று, அதைப் பழக்கி, அதற்குக் காதணிகளும், பொன்னாலோ, கண்ணாடியாலோ ஆன வளையல்களையும் அதன் முன்காலில் இடுவர். மற்றும் அம்முதலைக்குச் சிறப்பான உணவுகள் அளிக்கப்படும்; சிறப்பான சடங்கு முறைகளும் உண்டு. அது இறந்து விட்டால், அது சடலப் பாதுகாப்புச் செய்யப்பட்டு[1], புனிதமான இடத்தில்—புனிதமான அறைகளில்—புதைக்கப்படும்.

இதற்கு மாறாக, எலிபெண்டைன்[2] அருகில் உள்ள முதலைகள் புனிதமானவையாகக் கருதப்படுவனவல்ல: அவை உணவாகக் கொள்ளப்பட்டும் வருகின்றன.

முதலையை எவ்வாறு பிடிக்கின்றனர்? சுவை மிக்க அவ்வாறான முறை ஒன்றைக் கூறுவேன். ஒரு கொக்கியில் பன்றியின் இறைச்சியைச் செருகி வைத்து அதைக் கடல்மீது மிதக்க விடுவர். கரையிலிருந்து கொண்டு உயிருள்ள பன்றி[3] ஒன்றைப் பலமாக அடிப்பர். அவ் அடிகள் தாங்காமல், அப்பன்றி கூச்சலிடும். அக் கூச்சல் முதலையின் கவனத்தை ஈர்க்கும். உடன் கடலினுள் இருக்கும் முதலை[4] வேகமாக வெளிவரும். வெளிவந்ததும் கொக்கியில் செருகப்பட்டிருக்கும் பன்றி இறைச்சியை உண்ணப்போகும். உடன் கொக்கி இழுக்கப்படும். முதலை கரைக்கு இழுக்கப்பட்டு விடும். கரைக்கு இழுக்கப்பட்டதும், அவர்களுடைய முதல் வேலை அம்முதலையின் கண்களில் களிமண்ணை[5] அப்பி விடுவதேயாகும். இவ்வாறு கண்களை மண்ணால் மறைக்காவிடில், அது செய்யும் அட்டூழியங்களும் அதனால் விளையும் விபரீதங்களும் ஏட்டில் அடங்கா."

விளக்கவுரை:

பூனை[6]: இவ்விலங்கு உலகமெங்கும் வீட்டு விலங்காகவும் செல்லப் பிராணியாகவும்[7] வளர்க்கப்பட்டு வந்துள்ளது; இன்றும் வளர்க்கப்பட்டு வருகிறது.

எகிப்திய மக்கள்[8] தங்கள் வீடு தீப்பற்றி எரிவதாயிருந்தால் கூட, அதைப்பற்றிச் சிறிதேனும் கவலை கொள்ளாமல், தாங்கள்

---

1. Embalmed 2. Elephantine 3. Boar 4. Crocodile 5. Clay 6. Cat 7. Pet Animal 8. Egyptians

வளர்க்கும் பூணையைப் பற்றியே தங்கள் முழு கவனத்தையும் செலுத்துவர் என்று ஹிராடடஸ் கூறுவது, விலங்குகளின்மீது எகிப்தியர் கொண்டுள்ள பாச உணர்வைக் காட்டுகிறது.

பூனை இறந்து விட்டால் அவ்வீட்டில் உள்ளோர் அனை வரும் துக்கம் ஏற்கும் வகையில் தத்தம் புருவங்களை மழித்துக் கொள்வர் என்று கூறுவது வியப்பு மிக்க வழக்கமாகத் தோன்றுகிறது.

பூனை இலத்தீனிலும், கிரேக்கத்திலும் ''ஃபெலிஸ்''[1] என்று வழங்கப்படும். வீட்டுப் பூனை ''ஃபெலிஸ் டொமெஸ்டிகா''[2] என்று வழங்கப்படும்.

தொல்காப்பியத்தில் காட்டுப்பூனை வெருகு என்ற சொல் லால் வழங்கப்படுகிறது.

''மூங்கா, வெருகு, எலி, மூவரி அணிலொடு
ஆங்கு அவை நான்கும் குட்டிக்கு உரிய''
—(தொல்காப்பியம், மரபு இயல்: 6)

பூனை, பூசை என்று தமிழ் இலக்கியங்களில் வழங்கப் பட்டுள்ளது:

''ஓசைபெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென''
—(கம்பராமாயணம், பாலகாண்டம், அவையடக்கம் 4)

நாய்: இச்சொல் தொல்காப்பியத்தில் ஆளப்பட்டுள்ளது.

''நாயே, பன்றி, புலி, முயல் நான்கும்
ஆயும் காலை குருளை என்ப''
-- (தொல்காப்பியம்: மரபு இயல்: 8)

இதனால், தென்னிந்தியாவில் நாய் எனும் விலங்கே முதலில் இருந்தது என்பதும், பின்னரே பூனை வந்தது என்பதுமான செய்திகள் நமக்குத் தெரிய வருகின்றன.

பூனையும், புலியும் ஒரே மாதிரியாக இருந்த காரணத்தி னால், புலி என்ற சொல்லே கிரேக்கத்திலும் இலத்தீனிலும் புகுந்து 'ஃபெலிஸ் என்று பூனையைக் குறிப்பிட வழங்குவ தாயிற்று. வீட்டுப்பூனை 'ஃபெலிஸ் டொமெஸ்டிகா[4]' என்று வழங்கப்பட்டது.

---

1. Felis 2. Felis Domestica

முதலை: இச்சொல் கிரேக்க மொழியில் குரோகோடிலஸ்[1] என்று வழங்கப்பட்டது. தமிழில் "கரா" என்பது முதலையைக் குறிப்பிடும். ஆக, கரா எனும் இவ் வேர்ச்சொல்லே, கிரேக்க மொழியில் குரோகோடிலஸ் எனும் சொல்லின் வேர்ச்சொல் லாகவும் அமைந்து விட்டது.

தொல்காப்பியம் கூறுகிறது:

"சொல்லிய கரா மொடு ஒருத்தல் ஒன்றும்"

—(தொல்காப்பியம், மரபியல்: 37)

முதலையின் பற்களின் அமைப்பைப்பற்றிக் கூறுகிறார் ஹிராடடஸ்.

இந்திய முதலைகளே பெயர் பெற்றவை. ஹிந்துப் புராணத்தில் "கஜேந்திர மோக்ஷம்" என்னும் பகுதியில் யானையின் காலை ஒரு முதலை கவ்விக் கொண்டதாகவும், அவ் யானை "முதலே, முதலே" என்று தான் முதலையின் பிடியில் அகப்பட்டுள்ளதைத் தெரிவிக்கும் பொழுது ஆதி மூலமான நாராயணன் தன்னைக் கூப்பிடுவதாக எண்ணி, தன் சக்ராயுதத்தை எடுத்து, அம்முதலையைக் கொன்று யானையைக் காப்பாற்றியதாகக் கதை வருகிறது.

"கராவதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து
சென்றுநின்று ஆழி தொட்டானை.'

—(நாலாயிர திவ்வியப் பிரபந்தம்: பெரிய திரு: 2 3-4)

"கவளமாகதத்த கரியுய்யப் பொய்கைக்
கராம் கொளக் கலங்கி உள் நினைந்து
துவளமேல் வந்துதோன்றி வன்முதலை
துணிபடச் சுடுபடை துரந்தோன்."

—(பெரிய திருமொழி 9-1-2)

முதலையைப் பிடிக்கும் வழிவகைகள் கூறப்படுகின்றன. தமிழ் நாட்டு வீட்டு வைத்திய முறையில் குழந்தைகளின் கக்குவான் இருமலுக்கு[2] முதலைக் கறியைச் சுட்டுக் குழந்தைகளுக்குக் கொடுப்பது வழக்கம். இவ்வழக்கத்தையே எகிப்தியர்களும் பின் பற்றினார்கள்.

---

1. Crocodilus 2. Whooping Cough

6. நீர் யானை, பீனிக்ஸ் பறவை

"நீர் யானை:[1] பேபர்மிஸ்[2] எனப்படும் மாவட்டத்தில் நீர் யானை மிகப் புனிதமான விலங்காகக் கருதப் படுகிறது. மற்ற எந்த இடங்களிலும் அவ்வாறு கருதப்படுவது கிடையாது. அவ்விலங்கிற்குக் கால்கள் நான்கு உள்ளன; குளம்புகள் எருதைப் போன்று காணப்படுகின்றன. சப்பை யான மூக்கு: அதன் பிடரி மயிரும் வாலும் குதிரையின் பிடரி மயிரையும் வாலையும் ஒத்திருக்கும். மிகவும் துருத்தி நிற்கும் கொம்பு. குதிரைக் கனைப்பைப் போன்ற குரல். அளவு, பெரிய ஓர் எருதின் அளவை ஒத்திருக்கும். அதன் தோல் மிகுந்த தடிப்பாக இருக்கும். அத்தோல் உலர்ந்ததும் அதை வெட்டி அம்புகள்[3] செய்வார்கள். எஃகு போன்று வலிமை பெற்றிருக்கும்.

பீனிக்ஸ் பறவை[4]: பீனிக்ஸ் பறவை மிகப் புராதனப் பறவையாகக் கொண்டாடப் படுகிறது. அத்தகைய பறவை ஒன்றினைச் சித்திரங்களில் ஒன்றில்தான் கண்டிருக்கி றேனே தவிர, நேரில் பார்த்தது கிடையாது. அப்பறவை ஹீலியோ போலிஸ்[5] நகரத்திற்கு வருவதாகக் கேள்விப்பட்ட துண்டு. ஆனால் 500 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அப்பறவை வருமாம். அதுவும் அதன் தாய்ப் பறவை இறக்கும் நாளன்று வந்து போகும். சித்திரத்திலிருந்து நான் கண்டு கொண்டது, அதன் சிறகுகள் பொன் மயமானவை; மற்றும் ஒரு பகுதி சிவப்பு நிறம் கொண்டது. அஃது உருவத்திலும், பருமனிலும் ஒரு கழுகை ஒத்திருக்கும்.

---

1. Hippopotamus 2. Papermis 3. Arrows 4. Phoenix 5. Heliopolis

பீனிக்ஸ் பறவை பற்றிக் கதை ஒன்று கூறப்படுகிறது. அது தன் தாய்ப் பறவையை ஒரு வாசனைக் கலவைப் பிண்டமாக ஆக்கி, அதை அரேபியாவிலிருந்து ஹீலியோ போலிஸுக்குக் கொண்டு வந்து சேர்க்கும். இதைச் செய்து முடிக்க, முதலில் ஒரு முட்டை அளவுள்ள ஒரு சாதனத்தைத் தேடி, அதை நன்றாகச் சுத்தம் செய்து, பின்னர் தன் இறந்த தாயை அம்முட்டையினுள் அடக்கி, அதன் மேல் முழுவதும் வாசனைப் பண்டங்களைக் கலவையாகச் செய்து பூசி, அப்படியே அதை எகிப்தில்[1] உள்ள ஹீலியோ போலிஸுக்கு எடுத்து வந்து விடும். எனக்கு இக்கதை கூறப்பட்டதே போலக் கொடுத்திருக்கிறேன். ஆனால், நான் அதை நம்பத் தயாராக இல்லை.''

விளக்கவுரை

நீர் யானை : இவ்விலங்கு பேபர்மிஸ் எனும் இடத்தில்—எகிப்தில்—ஒரு புனிதமான விலங்காகக் கருதப்படுகிறது. நீர்யானை அதன் தோலுக்காகவே வேட்டையாடப்படுகிறது. நீர்யானை[2] காண்டாமிருகம் முதலிய விலங்குகள் ஆப்பிரிக்காவில் மிகுதியாய் இருந்தன. அவற்றின் தோல், கொம்பு முதலியவை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

பெரிப்ளூஸ் நூல் : கூறுகிறது. (கி.பி. 50-80)

''அவ்விடங்களில் யானைகளும் காண்டாமிருகங்களும் வேட்டையாடப்பட்டு, சைனியம் எனும் பகுதி வழியாகக் கோலோ கிராமத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. உயிருடன் வந்த யானைகளும் காண்டாமிருகங்களும்[3] கொல்லப் படுகின்றன. யானைத் தந்தமும், காண்டாமிருகக் கொம்பும் உயர்ந்த விலையுள்ள வாணிகப் பொருள்களாகும்.''

—(பெரிப்ளூஸ்: அதி. 4; குறிப்புகள் 8, 9, பக்கம் 12, 15)

பீனிக்ஸ் பறவை[4] : இந்தப் பறவையைப் பற்றிப் பிளினி (கி. பி. 23-79) ஒரு தனி அதிகாரமே கொடுத்துள்ளார்:

''எதியோபியா[5] இந்தியா ஆகிய இருநாடுகளிலும் மிக விசித்திரமானதும், பலவகை வண்ணங்களமைந்த இறக்கை

1. Egypt 2. Hippopotamus 3. Rhinoceros 4. Phoenix bird 5. Ethiopia

களைக் கொண்ட வெவ்வேறு பறவை வகைகளைக் காணலாம். இப்பறவைகளுள் முதன்மையான இடத்தை வகிப்பது பீனிக்ஸ் எனப்படும் அரேபிய நாட்டுப் பறவையே[1]. இருப்பினும் இப் பறவை உண்மையில் இருக்கிறதா, இல்லையா, இஃது ஒரு கற்பனையா என்பது என்னால் உறுதியாகக் கூற முடியாது.

இந்த உலகத்தில் ஒரே ஒரு பீனிக்ஸ் பறவைதான் உள்ளது. இப்பறவையை எவரும் பார்த்திருக்க முடியாது. அது பெரிய கழுகு அளவு[2] இருக்கும் என்று நம்பப்படுகிறது.''

—(பிளினி அதி. 44, குறிப்பு-3, பக்கம் 309)

பீனிக்ஸ் பறவை ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது என்றும், அது தனக்குத் தானே சூரியஒளியில் சூல் கொண்டு விடுகிறது என்றும், அதில் சந்தனம் முதலிய வாசனைக் கட்டைகள் கொண்டு சிதை அடுக்கி, நெருப்பிட்டு, அதில் தன்னைத்தானே அர்ப்பணிக்கும் பொழுது[3], அப்புகையிலிருந்து ஒரு சிறு புழுப் போன்ற பறவை வெளியாகிறது என்றும், அப்புழு எங்கோ சென்று, வளர்ந்து, தாய்ப் பறவையைப் போலப் பெரிதாகிறது என்றும், அது 500 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகிறது என்றும் பலவாறாகக் கூறப்படுகின்றன.

ஹிராடடஸ் கூறிய செய்திகளையே சிறுது மாற்றி, பிளினி தருகிறார். இது கர்ண பரம்பரைச் செய்தி அல்லவா? நாட்டுக்கு நாடு மாறுபட்டும், வேறுபட்டும் வழங்குவது இயல்பேயன்றோ?

---

1. Arabian bird 2. Vulture 3. Self-Sacrifice

7. சடலப் பாதுகாப்பு

"சடலப் பாதுகாப்பு[1] ஒரு தனியான கலை. அதற்குரிய பணி தனிப்பட்ட முறையில் அமைந்துள்ளது. சடலப் பாதுகாப்பாளர்களிடம் ஒரு சடலம் கொண்டுவரப்பட்டதும், அவர்கள் மரத்தினால் செய்யப்பட்ட மாதிரிப் படிமங்களைக் காண்பிக்கின்றனர். அவை இயற்கையில் உயிருடன் இருப்பதுபோலவே வண்ணங்கள் தீட்டப்பட்டிருக்கும்[2]. மற்றும் அவை, தரத்தில் வேறுபாடுகள் கொண்டுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்ததென்பது—மிக்க செலவினங் கொண்டது என்பது—ஓர் ஆளைக் குறிப்பிடும்படியான படிமம் ஆகும்—அவ் ஆளின் பெயரை இச் சந்தர்ப்பத்தில் கூற என் நா கூசுகிறது. அதற்கடுத்தபடியான நல்ல படிமம், குறைவான வேலைப்பாடுகளும், மலிவான விலையும் கொண்டது. மூன்றாவது யாவற்றையும்விட விலைமிக்க குறைந்ததே. இவ்வாறான மாதிரிப் படிமங்களில் உள்ள வேறுபாடுகளைச் சடலம் கொணர்பவர்க்கு உணர்த்தியவுடன், அவர்க்கு எந்த மாதிரியான சடலப் பாதுகாப்புப் படிமம் தேவை என்று கேட்கின்றனர். அச் சடலத்தின் உறவினர்கள் தங்களுக்குப் பிடித்த மாதிரியையும் தரத்தையும் கூறிய பிறகு, அதற்கான விலையைப் பேசி முடிவு செய்து, அச் சடலத்தை அப் பாதுகாப்பாளரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்று விடுகின்றனர்.

முதல் தரம்: முதல் தரம் என்பது பின்வருமாறு செய்யப்படுகிறது: மூக்கின் வழியாக, மூளையின் எல்லாப் பகுதிகளும் கொக்கியிட்டு எடுத்துவிடப் படுகின்றன. அவ்வாறு எடுத்துவிட முடியாமல் எஞ்சியிருப்பவை, மருந்து செலுத்தி

---

1. Embalming 2. Mummy

வெளிக்கொணரப்படுகின்றன. பிறகு வயிற்றைக் கூரான எரிகல் கொண்டு[1] இரண்டாகக் கிழித்து, அதனுள் இருக்கும் குடல் வகைகளைக் களைந்து விடுவர். குடல் இருந்த வயிற்றின் உட் பகுதி மருந்துகளிட்டு நன்றாகக் கழுவப்படுகின்றது. அதற்குத் தென்னை, பனை ஆகியவற்றிலிருந்து செய்த சாராயத்தைப்[2] பயன் படுத்துவர். அதன்பின் அவ்விடத்தைத் தூய்மையான போளம்[3], வாசனைப் பண்டங்கள்[4], இலவங்கம்[5], இலவங்க பத்திரி[6]— சாம்பிராணி[7], குங்கிலியப் பொடி[8] நீங்கலாக—வாசனைப் பெருள்களை இட்டு நிரப்புவர். பிறகு அறுத்த வயிற்றுப் பகுதியை மீண்டும் தைத்து, அவ்வுடலின் மீது வாசனைப் பண்டங்கள், வெள்ளைப் போளம்[9] முதலான மருந்து வகைகளைத் தடவி, 70 நாள்களுக்கு எண்ணெய்க் கொப்பரையில்[10] வைத்துவிடுவர். அதற்கு மேல் ஒரு நாள்கூட வைப்பது கிடையாது. இந்த 70 நாள்கள் ஆனவுடன்—அதற்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் நாள் கடப்பதில்லை—அச்சடலத்தை எண்ணெய்க் கொப்பரையிலிருந்து எடுத்து, கழுவி, துடைத்து, வெட்டப்பட்ட லினன் துணிகள்[11] கொண்டு அலங்காரம் செய்து, அதற்கெனத் தனியாகச் செய்த பெட்டியில் அதை வைத்து, அடியில் கோந்து போன்ற வச்சிரப் பிசினைத்[12] தடவிவிடுவர்—கீழே நழுவி விழுந்துவிடாதபடி. எகிப்தியர்கள் இதற்காக வச்சிரப் பிசினைப் பயன் படுத்துகிறார்களே தவிர, வெற்று மரப் பிசினைப்[13] பயன்படுத்துவது கிடையாது. இந்த நிலையில் அச்சடலம் பாதுகாக்கப்பட்டு, அதன் உறவினரிடம் ஒப்படைக்கப் பட்டு விடுகிறது. அக் குடும்பத்தினர் அதற்காக மரத்தாலான பெட்டி ஒன்றைச் செய்து—அப் பெட்டி மனித உருவைப்போல அமைந்திருக்கும்—அப்பெட்டியில் அப் பண்படுத்திய சடலத்தை வைத்து, அதை நன்றாக மூடி, நடு அறையில் சுவரின்மீது தக்க பாதுகாப்புடன் சாய்த்து வைத்து விடுவர்.

---

1. Flint stone 2. Palm wine 3. Pure bruised myrrh 4. Aromatic substances 5. Clove 6. Clove leaves 7. Frankincense 8. Resin 9. Balsamodendrum 10. Natrum 11. Linen cloth 12. Gum 13. Glue

இரண்டாம் தரம்: செலவு குறைவாக இருக்கவேண்டு மென்று ஒரு குடும்பத்தினர் எண்ணினால், அதற்கான ஏற்பாடு பின்வருமாறு செய்யப்படுகிறது. மூளையையோ, மற்றவற்றையோ கொக்கி போட்டுத் துளைத்தெடுப்ப தில்லை. ஆசனவாயில் வழியாக, தேவதாரு எனப்படும் செவ்வகில் எண்ணெயை[1] உடலுக்குள் புகுத்தி, அத்துவா ரத்தை மூடி—உட்செலுத்தப்பட்ட மருந்து, எண்ணெய் வகைகள் வெளியே வந்துவிடாத வண்ணம்—எண்ணெய்க் கொப்பரையில் ஊறச் செய்து விடுவர். அதற்குரிய நாள் களுக்குப் பிறகு, அவ்வுடலை எடுத்து, உள்ளே செலுத்தப் பட்ட செவ்வகில் எண்ணெயை வெளியே போகுமாறு செய்து விடுவர். இப்பொழுது அம்மருந்தின் பயனாக மூளை, குடல், உள்கொழுப்பு ஆகியவை யாவும் குழம்புபோல் வந்து வெற்று எலும்பும் அதன் மீதுள்ள தோல் மட்டுமே எஞ்சி நிற்கும். பிறகு அவ்வுடல் அதன் குடும்பத்தினரிடம் கொடுத் துவிடப்படும்—வேறு எவ்வித அலங்காரங்களும் இன்றி.

மூன்றாம் தரம்: இஃது ஏழை பாமர மக்களுக்காக ஏற்பட்டமுறை. குடலிலுள்ள அசுத்தப் பொருள்கள், பேதி மருந்து ஒன்றினால் வெளியேற்றப்பட்டு, அதற்குரிய நாள் கள்வரை எண்ணெய்க் கொப்பரையிலிட்டு, பிறகு உரியவர்க ளிடம் அதைக் கொடுத்து விடுகின்றனர். அவர்கள் அச்சட லத்தை எடுத்துச் சென்று விடுகின்றனர். இச் சடலப் பாது காப்புமுறை நீண்ட நாள்கள் நீடித்திருப்பதில்லை.

ஒரு கனவானின் மனைவி இறந்தவிடத்து, அல்லது மிகவும் அழகான பெண் அல்லது புகழடைந்த மங்கை நல்லாள் ஒருத்தி இறந்த விடத்து, இறந்த பெண்ணின் சடலம் உடனே சடலப் பாதுகாப்பாளரிடம் ஒப்படைக்கப் படுவது கிடையாது. ஆனால், மூன்று நான்கு நாள்கள் கழிந்த பிறகே கொடுக்கப்படும். இது அச் சடலத்துக்கு எவ்வித இன்னலும் ஏற்படாமலிருப்பதைத் தடுக்கவேயாகும். அம்மாதிரி ஒரு பெண் இறந்தவுடன் சடலப் பாதுகாப்பாள ரிடம் ஒப்படைக்கப் பட்டபோது, ஏதோ அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் நேர்ந்து விட்டன. அதன் காரணமாகத்தான்

---

1. Oil of cedar

அழகான பெண்களின் சடலம் உடன் ஒப்படைக்கப் படுவது கிடையாது.

எகிப்தியரோ,[1] அயல்நாட்டவரோ[2] ஓர் ஆற்றில் மூழ்கிக் கிடந்த பொழுது, அல்லது முதலையால் சாகடிக்கப் பட்டிருப்பின், அதற்கடுத்துள்ள ஊராரின் கடமை அச் சடலத்தை சடலப் பாதுகாப்பிற்கு அனுப்பி விட வேண்டும்; மற்றும் அதற்கு விரிவான முறையில் சடங்குகள் நிறை வேற்றி வைக்கப்பட வேண்டும். அச் சடலம் அதற்கான இடு காட்டில் முக்கியமான பகுதியில் புதைத்து வைக்கப்படும். அந்தச் சடலத்தை எவரும் தொடக்கூடாது; அதை நைலஸ் நதியின் குருமார்கள்[3] மட்டுமே தொட அருகதை பெற்றுள் ளனர்—அதன் உறவினர்களோ, நண்பர்களோ கூட அதைத் தொடக் கூடாது. அச் சடலப் புதைப்பை அக்குருமார்கள் தங்கள் கைகளாலே செய்து முடிக்கின்றனர். அதை அக்குரு மார்களே எடுத்துக் கல்லறைக்குள் வைக்கின்றனர்—அச் சடலம் மனித உடலைவிடப் புனிதத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்பட்டதே அதற்குக் காரணம்.

அரசர்கள்[4] இறந்து விட்டால், மிகப் பெருமிதமான செலவில் இச் சடலப் பாதுகாப்பு நடைபெறும். அச்சடலம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் கெட்டு விடுவதில்லை[5]. அதற்குப் பயன்படுத்தும் பொருளின் தரத்தைப் பொறுத்தே அச் சடலப் பாதுகாப்பு அமைகிறது.''

விளக்கவுரை:

சடலப் பாதுகாப்பு: இது ஆங்கிலத்தில் 'எம்பாமிங்'[6] என்று வழங்கப்படும். கிரேக்க மொழியில் ''கண்டியோ''[7] என்று வழங்கப்பட்டது.

சடலப் பாதுகாப்பைப் பற்றி முதல் முதல் வரலாற்றில் இடம் பெறுமாறு எடுத்துக் கூறியவர் ஹிராடடஸே ஆவார்.

சடலப் பாதுகாப்பிற்குப் போளம்[8], இலவங்கம்[9], இலவங்க

---

1. Egyptian 2. Foreigner 3. Priests of the River Nilus 4. Kings 5. Mummy 6. Embalming 7. Condio 8. Myrrh 9. Clove

எண்ணெய் (இலவங்கத் தைலம்)[1], இலவங்க இலை (இலவங்க பத்திரி)[2] ஆகிய பொருள்கள் பயன்படுத்தப்பட்டன.

போளத்தில் மூன்று வகைகள் உள்ளன:

1. கரிய போளம்[3] 2. சிவப்புப் போளம்[4] 3. வெள்ளைப் போளம்[5]. இவற்றுள் வெள்ளைப் போளமே அரசர்கள்[6], பாரோக்கள்[7] ஆகியவர்களின் சடலங்களைப் பாதுகாக்கப் பயன் படுத்தப்பட்டது. இதன் மற்றொரு பெயர் ''பிடெல்லியம்''[8] என்பதாகும். அது தமிழில் 'பிதலோனா' என்று வழங்கப் பட்டது.

விவிலிய நூலாகிய பைபிளில்[9] பிதலோனா குறிப்பிடப் பட்டுள்ளது:

''And the Gold of the land is good;
there is BDELLIUM and Onyx stone.''
—(Old Testament: Genesis: 2-12)

இப்போளம்[10], அதிலும் முக்கியமாக வெள்ளைப் போளம்—பால்சமோதேந்திரம்— கேரள நாட்டிலும்[11], இமயமலையி லும்,[12] பலுசிஸ்தானத்திலும்[13] தயாரிக்கப்பட்டது. இப் பிசினைப் பக்குவப்படுத்தி, இறந்த சடலத்தின்மீது பூசி, பல நூற்றாண்டுகள் வரைக் கெடாமல் வைத்திருந்தனர் நம் பண்டைய இந்தியர்களும், தமிழ்நாட்டவர்களும். எகிப்தியர்[14] தங்கள் அரசர்களையும், பாரோக்களையும் இவ்வாறு பதப். படுத்தி, அவற்றை ''மம்மிகள்''[15] என்ற பெயரால் வழங்கினர். பிரமிடுகளில்[16] அரசரின் பதப்படுத்தப்பட்ட சடலங்கள் வைத்துக் காப்பாற்றப்பட்டன. மூவாயிரம் ஆண்டுகள் வரை, அவற்றின் உயிர் எங்கிருந்தாலும் வந்து புகுந்து கொள்ளும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையே அவ்வாறு சடலங்களைப் பதப்படுத்தி வைத்தற்குரிய போதிய காரணமாகும்.

எண்ணெய்க் கொப்பரை: சடலத்தைக் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில்[17] இட்டு எடுத்து விடுவர். இது பழங்காலம் முதற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட முறை.

---

1. Clove oil 2. Clove Leave (Malapatra) 3. Aloe 4. Hepatic Aloe 5. Balsamodendrum 6. Kings 7. Pharos 8. Bdellium 9. Bible 10. Myrrh 11. Kerala 12. Himalayas 13. Baluchistan 14, Egyptians 15. Mummies 16. Pyramids 17. Natrum

எண்ணெய்க் கொப்பரை, கடாரம் என்று வழங்கப்படும். கடாரம் என்ற சொல்லே ஆங்கிலத்தில் புகுந்து கால்ட்ரன்[1] என்று வழங்கப்பட்டது. இக்கடாரம், கிரேக்க மொழியில் ஏனம்[2] என்றே வழங்கப்பட்டது. தமிழில் ஏனம் என்றால் வாய கன்ற பாத்திரம் என்று பொருள்படும். ஆக பல தமிழ்ச் சொற்கள் பண்டைக் காலத்திலேயே கிரேக்க மொழியில் புகுந்து களிநடம் புரிந்தன என்பது இதனால் தெரிய வருகிறது.

இராமாயணத்தில் தசரதர் இறந்ததும், அவரை எண்ணெய்க் கொப்பரையில் இட்டு வைத்ததாக அக்காவியம் கூறுகிறது:

''தையர் கடல் நின்றெடுத்தவனைத் தயிலக்கடலின்
தலை உய்த்தார்''

—(கம்பராமாயணம்: அயோத். கா: தைல மாட்டு: 608)

தென்னை, பனை சாராயம்[3]: தென்னை மரத்திலிருந்தும், பனை மரத்திலிருந்தும் எடுக்கப்பட்ட நீரைக் கள்ளாக்கி, அக் கள்ளைப் பதப்படுத்தி, சாராயமாக்கி, அச்சாராயத்தைச் சடலம் சுத்தம் செய்யப் பயன்படுத்தினர். இச்சரக்குகள் கேரள நாட்டி லிருந்து[4], மேலைநாடுகளுக்கும், அரேபியா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன எனப் பெரிப்ளூஸ் முதலிய நூல்கள் கூறுகின்றன.

இலவங்கம்,[5] இலவங்கத் தைலம், இலவங்கப் பத்திரி: இலவங்கம் கிரேக்க மொழியில் சின்னமன்[6] என்று வழங்கப் பட்டது. கேரள நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இலவங்கமும் இலவங்கப் பத்திரியும் சோமாலிலாந்தில் தூய்மை செய்யப்பட்டு அங்கிருந்து எகிப்து, ரோம் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இலவங்கப் பத்திரி[7] என்பது இலவங்க இலை (பத்திரி-இலை). இலவங்கம் மலைநாட்டுப் பொருள் என்று கிரேக்கர் தெரிந்து கொண்ட காரணத்தால், அதை மலபோத்ரம்[8] (மலை-பத்திரம்) என்று வழங்கினர்.

மலபோத்ரம் என்பதை இலத்தீன் அகராதி பின்வருமாறு வர்ணிக்கிறது:

''An Indian or Syrian PLANT from which a costly ointment was prepared.''

—(Latin-Eng. Dictionary: Page 331)

---

1. Cauldron 2. Aenum 3. Palm wine 4. Kerala 5. Clove 6. Cinnamon 7. Clove Leaves 8. Malabothram

“இலவங்கப்பட்டை[1] இந்தியாவிலிருந்து—கேரளத்திலிருந்து[2] மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.”

—(பெரிப்ளூஸ்: அதி: 56, குறிப்பு 2, பக்கம் 236)

இலவங்கப் பத்திரியுடன்[3] சடாமாஞ்சியும் ஏற்றுமதி செய்யப்பட்டது. சடாமாஞ்சி, நார்டஸ்[4] என்றும், ஸ்பைக் நார்டு[5] என்றும் வழங்கப்பட்டது. நார்டஸ் என்பது நாளத்தம் என்பதன் திரிபே. சடாமாஞ்சியை எண்ணெயில் இட்டு,அவ் எண்ணெயை ஆப்பிரிக்கர்கள்—எதியோபியர்கள்[6]—தலைக்குத் தடவிக் கொள்வர். எதியோபியர்கள் தலையில் நரை மயிரே காண முடியாது. இன்றைக்கும் அவர்களின் தலைமயிர் சுருள் சுருளாகக் கறுப்பாகவே இருக்கிறது.

சாம்பிராணி[7]: இது தூபம் இடவும், தலை மயிருக்கு வாசனைப் புகை செலுத்தவும் பயன்படுகிறது. இது “ப்ராங்கின் சென்ஸ்”[8] என்று வழங்கப்படும். கொசுக்களை ஒழிக்கவும் வீட்டில் நறுமணப் புகை திகழவும் முற்காலம் முதற்கொண்டு வீடுகளிலும் கோயில்களிலும் பயன்படுத்தப்பட்டு வருவதாயிற்று. அகிலும் நறுமணப் புகை எழுப்பப் பயன்பட்டது.

பெரிப்ளூஸ் நூல் (கி. பி. 50—80) கூறுகிறது:

“இவ்விடத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்: சாம்பிராணி, அகில், இறுகிய குங்கிலியம்...”

—(பெரிப்ளூஸ்: அதி: 8, பக்கம் 31)

ஸ்டிராபோ (கி. மு. 64—கி.பி. 24) கூறுகிறார்:

“இங்கேதான் சாம்பிராணியும் மற்ற வாசனைப் பண்டங்களும் மிகுந்த அளவில் விளைகின்றன.”

—(ஸ்டிராபோ: வரலாறு)

செவ்வகில் எண்ணெய்[9]: இதுவும் மலையாள—கேரள நாட்டில் - விளைவிக்கப்படும் தேவதாரு மரத்தின் எண்ணெய். இது மரத்திற்கு மெருகேற்ற இன்று பயன்படுத்தப்படுகிறது. அன்றைக்கு இதுவே துப்புரவு செய்யும் மருந்தாகப்[10] பயன்படுத்தப்பட்டது.

---

1. Malabothram 2. Kerala 3. Clove leaves 4. Nardus 5. Spikenard 6. Ethiopians 7. Incense 8. Frankincense 9. Oil of cedar 10. Cleansing Agent

ஆற்றில் மூழ்கிய பிணம்: அவ்வாறான அநாதைப் பிணங்களுக்குச்[1] சடங்குகள் செய்ய நைல்நதிக் குருமார்களுக்கே[2] அதிகாரம் உண்டு. உறவினர்களோ, நண்பர்களோ, ஏன் பெற்றோர்கள் கூட அப்பிணத்தைத் தொட அனுமதிக்கப்பட மாட்டார். அவ்வாறான பிணங்களுக்கு ஈமக்கடன் செய்வது மிகவும் புனிதமான செய்கையாக எகிப்தியக் குருமார்களால்[3] கருதப்பட்டு வந்தது.

ஹிந்துக்களாலும் தமிழர்களாலும் இது ''அநாதைப் பிரேத சம்ஸ்காரம்'' என்று வழங்கப்பட்டு, அத்தகைய ஈமச்சடங்குகளை நடத்துவது நாட்டிற்கு நலன் விளைவிக்கும் என்று கருதப் பட்டது. இத்தகைய சடங்குகளைச்செய்தல் புனிதமானதாகவும் கருதப்பட்டு வருகிறது.

அரசர் சடலப் பாதுகாப்பு[4]: இதைத்தான் ''மம்மிகள்''[5] என்று வழங்குவர் எகிப்திய மக்கள். முதலில் இம் மம்மிகள் அடங்கிய சடலப் பெட்டியை வைத்து, அதன்மீதே பிரமிடுகள்[6] கட்டப்பட்டன. எவரும் உள் புகுந்து அப்பெட்டியை நகர்த்தவோ, அப்புறப்படுத்தவோ முடியாது. அரசர்களுக்குச் சடலப் பாதுகாப்புச் செய்வதென்றால் மிகக் கவனமாகவும், செலவு நிறையச் செய்யவும் வேண்டும். இது ஒரு நாடே ஏற்றுக்கொண்டு நடத்தும் செலவினமல்லவா? அதன் காரணமாக, வேலைப் பாடுகளுக்குக் கேட்பானேன்?

பிற்காலத்தில் சில இடங்களில் இச்சடலங்களும், அவற்றின் அருகில் வைக்கப்பட்ட பொன் வெள்ளிப் பாத்திரங்களும் சில குறிப்பிட்ட கள்வர்களால் களவாடிச் செல்லப்பட்டு விட்டன. பிரமிடுகளாகிய கல்லறைகளை ஏதும் செய்ய முடியவில்லை. அவை மட்டும் இன்றும் அவ்வாறே பெருமிதமாகக் காட்சியளித்துக் கொண்டு நிற்கின்றன!

---

1. Unclaimed Drowned Bodies 2. Priests of the River Nile 3. Egyptian Priests 4. Embalming King's Body 5, Mummies 6 Pyramids

8. மின், எகிப்தின் முதல் அரசர்

"மெம்பிஸ் நகரத்தை[1] வெள்ளத்தினின்று காப்பாற்ற ஓர் அணையை எழுப்பினவர் எகிப்தின் முதல் அரசர் மின்[2] என்பவரே ஆவார் என்று எகிப்தியக் குருமார்கள்[3] என்னிடம் தெரிவித்தனர். அவ் ஆறு, லிபிய நாட்டின்[4] எல்லையில் மணற்குன்றுகளின் அடிப்பகுதிகளில் பாய்ந்து செல்வது வழக்கமாயிருந்தது. மெம்பிஸ் நகரத்திலிருந்து 100 பர்லாங் அளவில் காணப்பட்ட அவ்வளைவில் ஓர் அணையைக் கட்டி, அவ் ஆற்று நீரை ஒரு புதிய கிளை ஆற்றுக்குப் போகுமாறு அவ்வரசர் திருப்பம் செய்தார். அது இருமலைகளுக்கு இடையில் காணப்படும் பாதையின்நடுவில் அமைந்துள்ளது. இன்றைக்குக் கூட நைலஸ்நதி ஏற்படுத்திய திருப்பம், பாரசீகர் களால்[5] கவனித்து வரப்பட்டது; அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் அவ் அணையைக் கெட்டிப் படுத்திக் கொண்டு வந்தனர். காரணம், அந்த ஆறு, வெள்ளத்தினால் கரை புரண்டால், மெம்பிஸ் நகரம் முழுவதும் நீரினுள் அமிழ வேண்டிய நிலை ஏற்படும். அந்த ஆறு திருப்பப்பட்ட இடத்தில் உள்ள நிலத்தின்மீது மெம்பிஸ் என்ற நகரத்தை அவ் அரசர் எழுப்பினார். அது எகிப்தில் ஒரு குறுகலான இடத்தில் அமைந்துள்ளது. பிறகு அதன் வடக்கிலும், மேற்கிலும், பூமியை அகழ்ந்து, ஓர் ஏரியை உண்டாக்கி, அவ் ஆற்றின் நீர் அவ் ஏரியில் வந்து விழுமாறு செய்யப் பட்டது. அத்துடன், அவ் அரசர் மிகப் பெரியதும், புகழ்

---

1. Mempis 2. Min 3. Egyptian Priests 4. Libya 5. Persians

மிக்கதுமான- வியப்பு மிகுந்த- ஹெபீஸ்டஸ் கோயிலைக்[1] கட்டினார் என்று அக் குருமார்களே என்னிடம் கூறினர்.

மின் சந்ததியினர்:[2] அதற்கு அடுத்து, மின் அரசரைப் பின் பற்றி அவர் இறப்பிற்குப் பிறகு தொடர்ந்து அரியணை ஏறிய 330 அரசர்களின் பெயர்களை அக் குருமார்கள் எனக்கு எடுத்துரைத்தனர். அவர்களுள் 18 பெயர்களைத் தவிர, மற்ற யாவரும் எகிப்தியர்களே[3]. அப் பதினெண் அரசர் களும் எதியோபியர்கள்[4] ஆவர். அத்துடன் ஓர் எகிப்திய மங்கையும்[5] அரசாண்டாள். இறுதியில் கூறப்பட்ட மங்கை யின் பெயர் நைடோகிரிஸ்[6]. பாபிலோனின் அரசியினது[7] பெயர் போன்றே இவளது பெயரும் காணப்பட்டது.

எகிப்தியர்கள் மேற்கூறப்பட்ட நைடோகிரிஸ் என் பாளின் அண்ணனை- எகிப்தின் அரசராக இருந்தவனை- கொன்று விட்டு அத்தங்கையை- நைடோகிரிஸை- அரசியாக விளங்குமாறு வற்புறுத்தி விட்டனர். அவர்கள் செய்கைக்குப் பழி வாங்க ஒரு திட்டம் வகுத்தாள் அப் புதிய ராணி. அதன்படி ஒரு பெரிய அறையைப் பூமிக்கடியில் கட்டி, அதன் திறப்பு விழாவைக் கொண்டாடுவதாகப் பாசாங்கு செய்து, தன் அண்ணனைக் கொன்றதற்குக் காரணமா யிருந்தவர்களை விருந்து ஒன்றுக்கு அழைத்து, பூமியின் அடியில் கட்டப்பட்டிருந்த கட்டடத்தில் குழுமியிருக்குமாறு செய்தாள். அந்த அறை முழுவதும் நிரம்பி, உணவு உட் கொள்ளும் சமயத்தில், மறைவாக மறைத்து வைக்கப்பட்டி ருந்த பெரிய நீர்க் குழாயைத் திறந்து விட்டு, அங்குக் கூடியிருந்தவர்கள் யாவரையும் நீரில் அடித்துச் சென்று போகுமாறு செய்து விட்டாள். அவளைப் பற்றி மேலும் ஒரு செய்தி எனக்குக் கூறப்பட்டது. அவ்வரசி எகிப்தியர் தன்னைக் கொன்றுவிடுவர் எனப்பயந்து, சாம்பல் குவியலில் திடீரெனப் பாய்ந்து, தன் உயிரை மாய்த்துக் கொண்டாள்.

இவரைத் தவிர மற்ற அரசர்கள் குறிப்பிடும்படியான எச்செயலையும் தம் அரசாட்சியில் செய்யவில்லை. ஆனால் அவர்களுள் இறுதியானவரான மோரிஸ்[8] என்பவர் அதற்கு

---

1. Hephaestus 2. Min Dynasty 3. Egyptians 4. Ethiopians 5. Egyptian woman 6. Nitocris 7. Queen of Babylon 8. Moeris

ஒரு விதிவிலக்கு. அவர் ஹெபீஸ்டஸ் கோயிலின்[1] வடக்கு திக்கு ஒரு வாயிலை[2] அமைத்தார். மற்றும், அங்குள்ள ஓர் ஏரியும், அதனுள் காணப்படும் பிரமிடுகளும்[3] அவர் ஆணையினால் கட்டப் பட்டனவாகும். அந்த ஏரியின் பரப்பளவையும், பிரமிடுகளின் அளவுகளையும் பின்னர் கூறுகிறேன்.''

விளக்கவுரை

மின்[4] : இவரே எகிப்திய அரசர்களுள் முதலாம் அரசர் ஆவார். இவரைப் பற்றி ஹிராடடஸ் தரும் விளக்கங்களே தவிர, மற்ற எந்த வரலாறும் இவரைப் பற்றித் தெரிவிக்கவில்லை. மெம்பிஸ் நகரம் நைல்நதியின் கிளை நதியால்[5] மூழ்கிப்போகாதவாறு, ஓர் அணை கட்டி அவ் ஆற்று நீரைத் திசை திருப்பினார்.

மெம்பிஸ்[6] : இது பழங்கால எகிப்தின்[7] தலைநகரமாக விளங்கிற்று. இது தீபே நகரத்துக்கு[8] அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றிருந்தது. தீபே நகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, மெம்பிஸ் நகரமே எகிப்தின் தலைநகரமாக[9] ஆயிற்று. இந்நகரம் நைல்நதியின் மேற்குப்பகுதியில், பிரமிடுகள் கட்டப் பட்ட இடத்திற்கு 10 மைல் வடக்கே நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

ஹெபீஸ்டஸ்[10] : இக்கடவுள் தீக்கடவுள்[11] என்று கூறப்படுகிறது. ரோமானியர்[12] இக்கடவுளை வல்கானஸ்[13] என்று வழங்கினர். ஹோமரின்[14] (கி.மு. 850) கூற்றுப்படி, இவர் ஜியுஸ்[15] கடவுளுக்கும் ஹீரா[16] தேவதைக்கும் பிறந்த மகன் ஆவார். இவர் கால்கள் ஊனமுற்றவராகவும், வலிமையற்றவராகவும், சித்திரிக்கப்பட்டுள்ளார். இவர் தாய் தன் மகனைக் கண்டு வெறுத்ததால், இவர் ஒலிம்பஸ்[17] மலையிலிருந்து உருட்டிவிடப்பட்டார். நீர்த்தேவதைகள் தேடிஸ்,[18] யூரினோம்[19] இருவர்களும் உருண்டு விழுந்த ஹெபீஸ்டஸைக் காப்பாற்றி 9 ஆண்டுகள் வளர்த்தனர். பின்னர் இவர்

---

1. Hephaestus Temple 2. Gate way 3. Pyramids 4. Min 5. Barnch of River Nile 6. Mempis 7. Egypt 8. Thebes 9. Capital 10. Hephaestus 11. Fire God 12. Romans 13. Vulcaanus 14. Homer 15. Zeus 16. Hera 17. Olympus 18. Thetis 19. Eurynome

ஒலிம்பஸ் மலைக்குத் திரும்புவதாகவும், ஒலிம்பஸ் மலைத்தேவர்களுள் இவர் தலைசிறந்தவராகக் கலைக்கடவுளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதாகவும் ஹோமர் கூறுகிறார். பிற்கால இலக்கியங்களில் இவர், சைக்ளாப்ஸ்[1] எனப்படும் ஒற்றைக் கண்ணுள்ள இராக்கதர்களைப் பணியாளர்களாகக் கொண்டிருந்தார் எனவும் கூறப்படுகிறது. கிரேக்கக் கடவுள் ஹெபீஸ்டஸின் இருப்பிடம் லெம்னாஸ் தீவு ஆகும்.

ஹெபீஸ்டஸ் அப்ரோடைடி[2] எனும் அழகுத் தேவதையை மணந்ததாகவும் கிரேக்கப் புராண வரலாறு[3] கூறுகிறது.

நைடோகிரிஸ்[4]: இவள் பாபிலோன் அரசியின்[5] பெயரையே கொண்டுள்ளாள். தன் அண்ணன் கொல்லப்பட்டபின் அரசுரிமை எய்தினாள். இச்செயலுக்குப் பழி வாங்கிய வரலாறே இங்குக் கூறப்படுகிறது. இறுதியில் இவள் சாம்பல் குவியலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள்.

இவளே மூன்றாவது பிரமிடைக்[6] கட்டியவள் என்று கூறப்படுகிறது.

மோரிஸ்[7] : இவர் எகிப்திய அரசர்களுள் இறுதியானவர் என்று ஹிராடடஸ் கூறுகிறார். இவர் ஹெபீஸ்டஸ் கோயிலின்[8] வடபகுதி வாயிலை அமைத்தார். மற்றும் ஓர் ஏரியை உண்டாக்கி, அதனுள் பிரமிடுகள் கட்டவும் ஆணையிட்டார்.

330 அரசப் பரம்பரைகள் எகிப்தை ஆண்டனர் என்றும், முதல் அரசர் மின் எனவும், இறுதி அரசர் மோரிஸ் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விவரங்கள் யாவும் எகிப்தியக் குருமார்களால்[9] தரப்பட்டன என்று ஹிராடடஸ் குறிப்பிட்டுள்ளார். 330 அரச பரம்பரையினரால் ஆளப்பட்டது என்பது குறைந்தது 2000 ஆண்டுகளாவது கழிந்திருக்க வேண்டும் என்பதே இங்குக் குறிப்பிடப்படும் செய்தியாகும். தீபே நகரம்[10] கி.மு. 1600-ல் உச்சப் புகழ்க்கட்டத்தில் இருந்தது. அந்நகரம் முற்றுகையிடப்பட்டு அழிந்த பிறகே, மெம்பிஸ் நகரம்[11] நிர்மாணிக்கப்பட்டது என்று வரலாறுகள் கூறுகின்றன.

தீபே நகரத்தில் அம்மோன் தெய்வ[12] வழிபாடு புகழ் பெற்று விளங்கிற்று.

---

1. Cyclops 2. Aphrodite 3. Greek Mythology 4. Nitocris 5. Queen of Babylon 6. Third Pyramid 7. Moeris 8. Hephaestus 9. Egyptian Priests 10. Thebes 11. Memphis 12. Ammon

9. சிசோஸ்டிரீஸ்

"இதுவரை கூறப்பட்ட எந்த எகிப்திய அரசரும்[1] தாம் வென்ற நாடுகளையும், பெற்ற வெற்றிகளையும் நினைவு படுத்தும் வண்ணம் எவ்வகை நினைவுச் சின்னங்களையும் எழுப்பியதில்லை. அவர்களைத் தொடர்ந்து எகிப்தின் அரசரான சிசோஸ்டிரிஸ்[2] என்பவரைப் பற்றிக் கூறுகிறேன்.

குருமார்கள்[3] பின்வருமாறு கூறினர்: சிசோஸ்டிரிஸ் முதன் முதல் கப்பற் படையொன்றை ஏற்படுத்திக்கொண்டு, அரேபிய வளை குடாவிலிருந்து[4] புறப்பட்டு, இந்தியப் பெருங்கடல்[5] வழியாக, அதன் கரையோரமாகச் சென்று, கரையிலிருந்த இனங்கள் அனைவரையும் வென்று, இறுதியில் நீர் நிலைகள் சேறும் சகதியுமாக இருந்தமையால், அதற்கும் அப்பால் போகாமல் எகிப்திற்கே[6] திரும்பிவிட்டார். மீண்டும் சக்தி வாய்ந்த படையைத் திரட்டிக் கொண்டு, ஆசியா[7] கண்டத்தின்மீது படையெடுத்துச் சென்று, தம் வழியில் குறுக்கிட்ட எல்லா நாடுகளையும் வென்று, அந் நாட்டு மக்களைத் தமக்கு அடங்கி நடக்குமாறு பணித்து, கப்பம் கட்டுமாறு கட்டளையிட்டுச் சென்றார். வழியே எந் நாடாவது மிகுந்த வீரத்துடன் போராடி, இறுதியில் தோற்றுவிடின், அவ்விடத்தில் ஒரு கற்றூண் எழுப்பி, அதில் தாம் தம் சேனையின் வலிமையால் வெற்றி பெற்றதாகப் பொறித்துத் தம் ஊரையும் பேரையும் குறிப்பிட்டுச் செல்வார். அவ்வாறின்றி எந்த ஒரு நகரமாவது எதிர்ப்பு ஏதேனுமின்றி, உடன் சரணடைந்த தென்றால், அக்

---

1. King of Egypt 2. Sesostris 3. Priests 4. Arabian Gulf 5. Indian Ocean 6. Egypt 7. Asia

கற்றூணில் அங்ஙகரத்தை வென்றதாகவும் செதுக்கி விட்டு, அதன் பின்னர், அங்ஙகரின் பெயருக்கிறுதியில் ஒரு மங்கை யின் பெண் குறியை[1]ச் சித்திரமாகச் சேர்த்தும் விடுவர். அதன் பொருள் அந்த நகர மக்கள், பெண்களை விட வீரத்தில் வல்லவர் அல்லர் என்பதே. ஆசியாவை வென்ற பிறகு ஐரோப்பாவை[2] அடைந்து, அங்கே சித்தியர்களையும்,[3] திரேசியர்களையும்[4] தோல்வியுறச் செய்தார். இதுதான் சிசோஸ்டிரிஸ் வென்ற, அடைந்த இறுதிப் பகுதியாகும். காரணம், அதற்கும் அப்பால் எவ்விதக் கற்றூண்களும், வெற்றிச் சின்ன விளக்கங்களும், நினைவுச் சின்னங்களும்[5] காணப்படவில்லை.

சிசோஸ்டிரிஸ்[6] திரும்பி வரும்பொழுது, பாஸிஸ்[7] ஆற்றுக்கு வந்தார். அங்கே தம் படை வீரர்களுள் சிலரைக் குடியேறச் செய்தார். அல்லது சிலர் அவர் படையைத் துறந்து சென்று விட்டனர் என்றும் கூறலாம். இதில் எது உண்மையோ நான் அறியேன். இருப்பினும் கோல்சியர் களின்[8] மூதாதையர்கள் எகிப்தியர்களே[9] ஆவர். இதை அவர் களிடம் வினவி, அவர்கள் வெளியிட்ட குறிப்புகளால் தெரிந்து கொண்டேன். எகிப்தியர்கள் கோல்சியர்களைப் பற்றிக் கூறுவதை விட, கோல்சியர்கள் எகிப்தியர்களைப் பற்றி உண்மையான வரலாறுகள்[10] பலவற்றை, விளக்கங் களுடன் அளிக்கின்றனர். மற்றொன்று, அவர்கள் ஓரினத் தவர் என்று கண்டு கொண்டது நிற வகை மூலமாக— கோல்சியர்களும், எகிப்தியர்களும், எதியோபியர்களும்[11] கறுப்பு நிறத் தோல் கொண்டவர்கள். மேலும் ஒன்று, இம் மூவரும் உலகில் காணப்படாத வழக்கமாகிய சுன்னத்துச்[12] செய்து கொள்கின்றனர். தெர்மடான் நதிக்கருகிலும்[13], பார்தீனியஸ்[14] நதிக்கருகிலும் வசிக்கும் சிரியன் மக்களும்[15] மற்றும் அவர்களின் அண்டையிலுள்ள மேக்ரோனியர் களும்[16] சுன்னத்துச் செய்து கொள்ளும் வழக்கத்தைக் கோல்சியரிடமிருந்து, மிக அண்மையில் ஏற்றதாகக்

---

1. Woman's genital 2. Europe 3. Scythians 4. Thracians 5. Monuments and Memorials 6. Sesostris 7. Phasis 8. Colchians 9. Egyptians 10. True facts 11. Ethiopians 12. Circumcision 13. Thermadon River 14. Parthenius 15. Syrians 16. Macronians

கூறினர். பினீசியர்களும்[1] மற்ற சிரியர்களும் அவ்வழக்கத்தைக் கோல்சியரிடமிருந்து மிக அண்மையில் ஏற்றதாகக் கூறினர். உலகில் 'வேறெந்த நாட்டு மக்களும் சுன்னத்துச் செய்து கொள்வதில்லை. ஆகையால், சுன்னத்துச் செய்து கொள்பவருக்கு ஆதிகர்த்தா எகிப்தியரே ஆவர். ஒன்று நான் நேரில் கண்டது: பினீசியர் ஒருவர் கிரேக்க சமூகத்தின் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டால், அவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்குச் சுன்னத்துச் செய்யாமல் இயற்கையாகவே விட்டு விடுகின்றனர்.

சிசோஸ்டிரிஸ் எழுப்பிய நினைவுச் சின்னங்கள், வெற்றி வாசகப் பாறைகள் பெரும்பாலும் அழிந்து விட்டன என்றாலும், பாலஸ்தீனத்தில்[2] ஓரிரண்டு இருப்பவற்றை நான் கண்டேன். அத்தூணின் வாசகத்தின் இறுதியில் பெண் குறி ஒன்று[3] செதுக்கப்பட்டிருந்ததையும் கண்டேன்.

அயோனியாவில்[4] பெரும் பாறைகளில்—எபீசஸ்[5] முதல் போசியா[6] வரை செல்லும் பாதையில் – சிசோஸ்டிரிஸின்[7] இரண்டு உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அவ்வுருவங்களை நானே பார்த்தேன். அவற்றின் உயரம் 7 அடி; வலக்கையில் ஓர் ஈட்டியும், இடக்கையில் ஒரு வில்லும் செதுக்கப்பட்டிருந்தன. மற்றும் எகிப்திய மொழியில், "என் தோள் வலிமையால், இந் நாட்டை வென்றேன்" என்ற வாசகமும் பொறிக்கப்பட்டிருந்தது.

குருமார்கள்[8] மேலும் கூறினர்: சிசோஸ்டிரிஸ் தம் வெற்றிகளுக்குப் பின்னர், போரில் கிடைத்த சிறைக் கைதிகளுடன் தம் நாடு திரும்பினார். தம் நாடு திரும்பும் பொழுது தம் தம்பியானவர், பெலூஷியம்[9] அருகில் உள்ள டாப்னே[10] என்னுமிடத்தில் தம்மைச் சந்தித்தார். சிசோஸ்டிரிஸ், தம் தம்பியிடமே, தாம் போர்மீது செல்வதன் முன்னர், தம் நாடாகிய எகிப்தை விட்டுச் சென்றார். தம் அண்ணனையும் அவர் மகன்களையும் ஒரு விருந்தில் பங்கு

---

1. Phoenicians 2. Palestine 3. Woman's genital 4. Ionia 5. Ephesus 6. Phochea 7. Sesostris 8. Priests 9. Pelusium 10. Daphnae

கொள்ளுமாறு ஏற்பாடுகள் செய்தார். அவர்கள் உணவு அருந்திக் கொண்டிருக்கும் பொழுது, அவ்விடத்தைச் சுற்றிலும் கட்டைகளை அடுக்கித் தீ மூட்டினார். இதை உடன் அறிந்த சிசோஸ்டிரிஸ், தம் மனைவியிடம், "இனி என்ன செய்வது? நாம் யாவரும் மடிய வேண்டியதுதானா?" என்று கேட்டார். உடன் அவர் மனைவி, "நம் புதல்வர் அறுவர்களுள் இருவரை ஒரு பாலமாக அமைத்து, அத் தீயைத் தாண்டிச் சென்று விடுவோம்," என்று வழியொன்று கூறினாள். அரசர் தம் மனைவி கூறிய யோசனைப்படியே நடந்தார். அதன் காரணமாகத் தம் புதல்வர்களுள் இருவர் தீயில் மடிய, மற்றவர் யாவரும் உயிர் தப்பி விட்டனர்—புதல்வர்கள் நால்வர் உள்பட.

மீண்டும் சிசோஸ்டிரிஸ் பெரும் படையுடன் எகிப்து[1] வந்து, தம் தம்பியை வென்று, அவனுக்குச் சிறைத் தண்டனையைக் கொடுத்தார்:

சிசோஸ்டிரிஸ் ஒருவர் மட்டுமே எதியோபியாவை[2] ஆட்சி செய்தார் நினைவுச் சின்னமாக, தமதும், தம் மனைவியின் உருவப் படிமங்கள் 45 அடி உயரமும், தம் நான்கு மகன்களின் நினைவுச் சின்னங்கள் 30 அடி உயரமும் கொண்டனவாகக் காணப்பட்டன. அச் சின்னங்கள்- கற் சிலைகள்— ஹெபீஸ்டஸ் கோயிலின்[3] முன் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

அதற்குப் பல ஆண்டுகள் பிறகு, டாரியஸ் அரசர்[4] தம் சிலையையும் அக் கோயிலில் நிறுத்த அனுமதி கேட்டார். அப்பொழுது ஹெபீஸ்டஸின் குருமார்கள்[5] அதற்கு அனுமதி தர மறுத்து விட்டனர். காரணம் வினவிய பொழுது, அவர்கள் டாரியஸ் மன்னரிடம், "சிசோஸ்டிரிஸ்[6] பெரும் வெற்றிகள் பெற்றார்- சித்தியன் அரசர்களை வென்றார்; தாங்கள் அவர்களை வெல்லவில்லை; ஆகையால் அவரது வெற்றிக்கு உங்களது வெற்றி எவ்வாற்றாலும் ஈடு கட்ட முடியாது. அதன் காரணமாகத்தான் தங்களுடைய உருவச்

---

1. Egypt 2. Ethiopia 3. Hephaestus 4. Darius 5. Priests 6. Sesostris

சிலையை இக் கோயிலின் முன் வைக்க அனுமதி தரமாட்டோம்,'' என்று கூறி விட்டனர். அவர்கள் கூறிய காரணத்தின் நியாயத்தை ஏற்று, டாரியஸ் அரசர் மேலும் அதை வற்புறுத்தாமல் சென்று விட்டார்.

சிஸோஸ்டிரிஸ் இறந்ததும், அவருடைய மகன் பீரான்[1] தம் தந்தையின் அரியணையில் உட்கார்ந்தார்.''

விளக்கவுரை :

சிசோஸ்டிரிஸ்[2] : இவர் எகிப்திய நாட்டுப் புராணகால கதாநாயகன்[3]. எகிப்திய மன்னர்களுள் ஒருவர். அதன் காரணமாக இவர் ஆண்ட ஆண்டுகள் முதலியன குறிக்கப்பட வில்லை. பல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் முன்னர் நடந்த நிகழ்ச்சிகள் என்று இவற்றைக் கொள்ள வேண்டும். (சுமார் கி.மு. 4000)

வெற்றிச் சின்னங்கள் பொறித்த கற்றூண்கள்[4] :

சிசோஸ்டிரிஸ் பல நாடுகளின்மேல் போரின்மீது சென்று, அவற்றைவென்று தாம் பெற்ற வெற்றிகளைக் கற்றூண்களில் பொறிக்கும் பொழுது, ''இந்நாடு என் தோள் வலிமையால் போரில் வெற்றி பெற்றது'' என்ற வாசகத்தைப் பொறித்தார்.

பாலஸ்தீனத்தில்[5] கண்ட பெண்குறியிட்ட கற்றூண்கள்[6] :

சிசோஸ்டிரிஸ் பாலஸ்தீனத்தை வென்ற பொழுது அந் நாட்டவர் எதிர்ப்புத் தெரிவிக்காமலேயே சரணடைந்தனர். அதனால் அந்நாட்டில் தம் வெற்றியைக் குறிக்கும் வாசகத்தைக் குறித்து விட்டு—பொறித்து விட்டு—இறுதியில் ஒரு பெண்குறி உருவத்தையும் செதுக்கினார். அதாவது எதிர்ப்பில்லாமலே பணிந்தவர், பெண்களின் வீரத்தைக் காட்டிலும் மேலானவர் அல்லர், குறைந்தவர்களே என்ற பொருள் அமையுமாறு அவ்வுருவம் செதுக்கப்பட்டது.

இந்தியப் பெருங்கடலின்[7] கடற்கரை வழிச் செல்லுதல் :

இங்கு இந்தியப் பெருங்கடல் என்று கூறுவது அன்றைய உலகில் அரேபியன் கடலையே[8] குறித்தது. சிசோஸ்டிரிஸ்

---

1. Pheron 2. Sesostris 3. Egyptian Mythological King 4. Engraved or Inscribed Monuments 5. Palestine 6. Pillar with the woman's genital inscribed 7. Indian Ocean 8. Arabian Sea

அரேபியன் கடல் வழியாகச் சிந்துநதிக் கழிமுகம்[1] வரை வந்து, திரும்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. சிந்து நதியின் கழிமுகம் கரையிலிருந்து உள்வரை—ஏறக்குறைய 50 மைல் வரை—சேறும் சகதியுமாகத்தானிருக்கும்—காரணம் சிந்து நதி பல சிறு கிளை களாகப் பிரிந்து, கழிமுகமேற்படுத்திக் கடலில் கலந்து விடு கிறது. இச் சேறும் சகதியும் உள்ள பகுதியைத்தான் ஹிராடடஸ் குறிப்பிட்டார்.

பெரிப்ளூஸ் நூல் (கி.பி. 50—80) கூறுகிறது :

"அதற்குப்பின் சிந்தியா எனும் நாட்டின் கடற்கரை பரந்து செல்கிறது. அக்கடற்கரைப் பகுதியில் ஓர் ஆற்றின் கழிமுகம் உள்ளது. அக்கழிமுகம் நீர் நிறைந்ததும், சேறு அதிகமாயும் காணப்படுகிறது. இந்த இடத்தில் வந்து விழும் நதியின் பெயர் சிந்தஸ் என்பது."

—(பெரிப்ளூஸ் : அதி-38, பக்கம் 137)

பிளினி (கி.பி. 23-79) கூறுகிறார்:

"இப்பிரதேசத்து ஆதிவாசிகளால் இந்நாட்டில் பாயும் நதி சிந்தி என்று வழங்கப்படுகிறது. தான் போகும் பாதையில் 19 கிளைகளைக் கொணர்ந்து கொட்டும் நீரைச் சேர்த்துக் கொண்டு இறுதியில் கடலில் சேர்கிறது."

—(பிளினி : புத்தகம் VI : அதி-23, பக்கம் 36)

சித்தியர்கள்[2] : இவர்கள் இந்தியாவின் வடபகுதியிலும், கருங்கடல் பகுதியிலும் வசித்து வந்தனர். அவர்கள் நாடு சித்தியா[3] என்று வழங்கப்பட்டது. சித்தியாவின் இறுதி அரசர் கொண்டாபோரஸ்[4]. அவர் கி.பி. 40-ல் பட்டமெய்தி, கி. பி. 60-ல் காலமானார். அவர் அரசாண்ட காலம் 20 ஆண்டுகள் ஆகும்.

—(The Early History of India By Dr. Vincent Smith M. A. Page 217)

திரேசியர்கள்[5] : இவர்களது நாடு திரேசியா[6]. இந்நாடு ஐரோப்பாவில் டான்யூப் நதியின்[7] தென்பகுதியிலும், கருங் கடலின்[8] மேற்குப் பகுதியிலும் விளங்கிற்று. இங்குப் பல மலை நாட்டு இனத்தவர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இரத்த வெறி கொண்டவர்கள்; கொடூரத் தன்மை வாய்ந்தவர்கள்; இருப் பினும் வீரம் பொருந்தியவர்கள்.

---

1. River Indus 2. Scythians 3. Scythia 4. Kondaphorus 5. Thracians 6. Thracia 7. River Danube 8. Black Sea

கோல்சியர்கள்[1] : கோல்சி[2] எனும் நாடு ஆசியாவின்[3] ஒரு பகுதி ஆகும். அதன் மேற்கெல்லை யூக்ஸின்[4]; வடக்கெல்லை காகஸஸ் மலைகள்[5]; கிழக்கெல்லை ஐபீரியா[6]. இந்நாடு இயா[7] என்று வழங்கப்பட்டது. அதன் நதி பாஸிஸ்[8] மிகவும் புகழ் பெற்றது. இந்நாடு பண்டைக் காலத்தில் லினன்[9] துணிக்குப் புகழ் பெற்றது.

பாஸிஸ் ஆறு : இது கோல்சி நாட்டின் முக்கிய ஆறு[10]. கிரேக்க நாட்டில்[11] மிக்க புகழ் பெற்ற நதி.

தெர்மடான்[12], **பார்தீனியஸ் நதிகள்**[13] : இந்நதிகள் கோல்சி நாட்டில் பாய்ந்தன. இந்நாட்டில் இவ்வாறுகள் பாய்வதன் காரணமாக, லினன் துணிகள் இங்கு ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன.

இந்நாட்டு மக்கள் சுன்னத்துச் செய்து கொண்டனர்[14] :

கோல்சியர்கள் எகிப்தியர்களிடமிருந்து[15] இவ்வழக்கத்தைப் பெற்றனர் என்றும், எகிப்தியர் எதியோபியரிடமிருந்து[16] பெற்றனர் என்றும், எகிப்தியர், எதியோபியர் இருவருமே சுன்னத்துச் செய்து கொண்டனர் என்றும், அவ்வாறு செய்து கொள்ளுதல் சுகாதார நலனை முன்னிட்டு என்றும், வாலிப வயதில் சிற்றின்பத்தை முழுவதும் துய்க்க அது பெரும்பாலும் உதவுகிறது என்றும் காரணங்கள் கூறப்படுகின்றன. முஸ்லிம் மக்களிடமும்[17], அராபியர்[18] களிடம் இப்பழக்கம் மிகுதி.

மேக்ரோனியர்கள்[19]: மேக்ரோனி நாட்டு மக்கள். இவர்கள் சிரியா[20] நாட்டைச் சார்ந்தவர்கள்.

பினீசியர்கள்[21]: தமிழ்நாட்டிலிருந்து கி.மு. 2000 அளவில் கடற்பயணம் செய்து, சிரியன் கடற்கரையில் குடியேற்றம் அமைத்துக் கொண்டு, அங்கிருந்து பல நாடுகளுக்கும் பரவினர். இவர்கள் தமிழ்நாட்டுப் பனையேறிகள் ஆவர். பனையேறிகளே கடல் கடந்து குடியேற்றம் அமைத்து, தங்களைப் பினீசியர்கள் என்று வழங்கிக் கொண்டனர். பனையேறிகள் என்ற

---

1. Colchians 2. Colchi 3. Asia 4. Euxine 5. Caucasus 6. Iberia 7. Aea 8. Phasis 9. Linen 10. River 11. Greece 12. Thermadon 13. Parthenius 14. Circumcision 15. Egyptian Mythology 16. Ethiopians 17. Muslims 18. Arabians 19. Macronians 20. Syria 21. Phoenicians

சொல்லின் மரூஉவே பினீசியர்கள். மற்றும் பக்கம் 35, குறிப்பு-2 பார்க்கவும்.

அயோனியா:[1] இது ஆசியா மைனரின்[2] மேற்குக் கடற்கரைப் பகுதியில், காரியா,[3] இயோலிஸ்[4] இவற்றுக்கிடையே இருந்தது. இந்நாடு கி. மு. 1044-ல் நிர்மாணிக்கப்பட்டது. லிடியன் அரசர் குரோஸஸால்[5] முதலில் இந்நாடு வெல்லப்பட்டது. இரண்டாம் முறை தளபதி ஹர்பகஸாலும்[6] (கி. மு. 545) இந்நாடு வெல்லப்பட்டது.

அயோனியர்[7] என்ற சொல்லே தமிழில் 'யவனர்' என்று வழங்கப்பட்டது. இச்சொல் தமிழ் இலக்கியத்தில் பலஇடங்களில் குறிப்பிடப்படுகின்றது.

''வேள்வித்தூணத் தசைஇ யவனர்
ஓதிவிளக்கின் உயர்மிசைக் கொண்ட''

—(பெரும்பாணாற்றுப்படை: (316-317)

''அடல்வாள் யவனர்க் கயிராது புக்காங்கு''

—(சிலப்பதிகாரம்: ஊர்காண்: 67)

''வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்''.

—(முல்லைப்பாட்டு: 61)

''கைவயிற் கொண்ட நெய்யகல் சொரியும்
யவனப்பாவை யணி விளக் கழல''

—(பெருங்கதை: (1.47: 175)

''யவனர் தந்த வினை மாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி''.

—(அகநானூறு: 149-7-11)

''யவனர் நன் கலந்தந்த தண்கழல்தேறல்
பொன்செய் புனை கலத்தேந்தி நாளும்''

—(புறநானூறு: 56: 18-19)

''அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்''

—(மணிமேகலை: 19:107)

''நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து''

—(பதிற்றுப்பத்து: II-8)

---

1. Ionia 2. Asia Minor 3. Caria 4. Aeolis 5. Lydian King Croesus 6. Harpagus 7. Ionians

"யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும்"

—(பெருங்கதை: 1:58)

பெலூஷியம்[1]: இவ்விடம் தென் எகிப்தில்[2] இருந்தது. இங்குப் பல போர்கள் நடந்தன.

டாப்னே[3]: பெலூஷியம் அருகில் இருந்த ஊர். இதுவும் எகிப்தின் தென்பகுதியில் இருந்தது.

இங்கு தன் அண்ணனை—அரசரை—ஓர் அறையில் வைத்து, அதைச்சுற்றிலும் தீமுட்டி எரித்தல் என்னும் நிகழ்ச்சி பாண்டவர்களைக் கொல்ல அரக்கு மாளிகையைத் துரியோதனன் நிர்மாணித்ததாக மகாபாரதம் கூறுகிறது. இரண்டிற்கும் நிகழ்ச்சிகளில் அரச குடும்பக் காழ்ப்பில்—எவ்வளவு ஒற்றுமை காணப்படுகிறது! கிரேக்கமும் தமிழ்நாடும் பரிமாறிக்கொண்ட கதைகளுள் இதுவும் ஒன்றாகும்.

டாரியஸ் I அரசர்:[4] இவர் பாரசீக மன்னர்[5] இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 521-485 அதாவது 36 ஆண்டுகள் ஆண்டார். இவர் ஹைஸ்டாஸ்பஸ்[6] என்பவரின் மகன். அவர் தம் நாட்டை 20 சத்ராபிகளாகப்[7] பிரித்தார். அவருக்குப் பின் அவர் மகன் ஸெர்க்ஸிஸ்[8] பட்டமெய்தினார்.

டாரியஸின் குறிக்கோள் கிரேக்க நாட்டின்மீது படையெடுத்து அதை வெல்ல வேண்டும் என்பதே. ஆனால், அவர் தம் ஆசை நிறைவேறாமல் இறக்கும்போது, கிரேக்க நாட்டுப் படையெடுப்பைத் தம் மகன் கையில் ஒப்படைத்து இறந்தார். அவர் மகன் ஸெர்க்ஸிஸும் அவ் ஆசையை நிறைவேற்றி வைத்தார். மற்றும், புத்தகம், 3 அதிகாரம் 3 பார்க்கவும்.

ஹெபீஸ்டஸ் கோயில்[9]: இக்கடவுள் தீக்கடவுள்; இக்கோயில் தீக்கடவுளின் கோயில். ஹெபீஸ்டஸ்[10], ஜியுஸ்[11] கடவுளுக்கும் ஹீரா[12] தேவதைக்கும் பிறந்த மகன்; கால் ஊனமடைந்தவர். மற்றும் பக்கம் 197, குறிப்பு-10 பார்க்கவும்.

இக்கோயிலின் குருமார்கள் மிக்க புனிதமானவர்கள் என்றும், அரசர்களும், கோயிலுக்குள் வந்து காணிக்கை செலுத்திவிட்டுச் செல்ல வேண்டும் என்ற பழக்கமும், சட்டமும் இருந்தன.

---

1. Pelusium 2. Southern Egypt 3. Daphnae 4. Darius I 5. Persian King 6. Hystaspus 7. Satraphy 8. Xerxes 9. Hephaestus Temple 10. Hephaestus 11. Zeus 12. Hera

பின்னர் ஹெபீஸ்டஸ், அப்ரோடைடி[1] தேவதையை—அழகே உருவான தேவதையை—மணந்ததாகக் கிரேக்கப் புராண வரலாறு கூறுகிறது. இக்கிரேக்கப் புராண வரலாற்றில் பல இந்தியக் கதைகளின் மூலங்கள் காணப்படுகின்றன. அப்ரோடைடி, ஹெபீஸ்டஸுக்குத் துரோகம் செய்து, அவரைக் கைவிட்டு, ஏரிஸ் என்னும் யுத்தக் கடவுளை நேசித்து அவர்மீது காதல் கொண்டு வாழ்ந்தாள் என்றும் அதே கிரேக்கப் புராண வரலாறு கூறுகிறது.

"Her worship combined with Hellenic
conceptions, many features of Eastern origin."
– (A Smaller Classical Dictionary, Page 55)

பீரான்[2]: சிசோஸ்டிரிஸின்[3] மகன். சிசோஸ்டிரிஸ் இறந்த பிறகு அவர் மகன் பீரான் அரியணை ஏறினார் (கி. மு. 3950).

1. Aphrodite 2. Pheron 3. Sesostris

10. ராம்ஸிநிடஸும் திருடர்களும்

"புரோடியஸ்[1] அரசருக்குப் பிறகு ராம்ஸிநிடஸ்[2] அரியணை ஏறினார். அவர் ஹெபீஸ்டஸ் கோயில்[3] மேற்கு வாயிலின் கதவுகளை அமைத்தார். அவ்வாயிலை எதிர் நோக்கி இருக்கும் இரு சிற்பங்களையும் அவர் செதுக்கி வைத்தார். அவை ஒவ்வொன்றும் 38 அடிகள் உயரம் கொண்டவை. வடபகுதியில் உள்ள சிலை கோடைக்காலம்[4] என்றும், தென்பகுதியிலுள்ள சிலை குளிர்காலம்[5] என்றும் எகிப்தியர்களால் வழங்கப்பட்டன. முதல் கூறப்பட்ட கோடைக்காலச் சிலையை மிக்க மரியாதையோடும், புனிதத் தன்மையோடும் வணங்குவர்; இரண்டாவது கூறப்பட்ட குளிர்காலச்சிலைக்கு அவர்கள் செலுத்தும் மரியாதை முதல் கூறப்பட்டதற்கு நேர் மாறானதே.

ராம்ஸிநிடஸ் அரசரிடம் ஏராளமாக வெள்ளிப் பாளங்கள் இருந்தன; வேறு எந்த அரசரிடமும் அவ்வளவு வெள்ளிப்பாளங்கள் கிடையா. அவ்வெள்ளிப்பாளங்களைக் காக்கப் பாறைக்கற்களாலான சுவர்களை எழுப்பி, அறைகள் கட்டி வைக்கத் திட்டமிட்டார். அதன்படியே அந்நாட்டுக் கைதேர்ந்த கொல்லன் ஒருவன் அதைக் கட்டி முடிக்க ஒப்புக் கொண்டான். ஆனால் அக்கொல்லன் தன் மனத்துக்குள் ளாகவே சூழ்ச்சி ஒன்றைச் செய்தான். அச் சூழ்ச்சி யாதெனில், அதன் வெளிப்புறச்சுவரின் நடுவில், சுண்ணாம்பு, காரை ஏதும் பூசாமல் ஒரு பெரியகல்லை அப்படியே வைத்து விடுவது என்றும், தேவையானபோது அக்கல்லை எடுத்து உள்ளிருக்கும் வெள்ளிப்பாளங்களை ஒவ்வொன்

---

1. Proteus 2. Rhampsinitus 3. Hephaestus Temple
4. Summer statue 5. Winter statue.

றாக எடுத்து விட்டு, இறுதியில் அக்கல்லை முன்பிருந்த வாறே வைத்து விடுவது என்றும் ஒரு முடிவெடுத்தான். இச் சூழ்ச்சி அவனுக்கு மட்டுமே தெரியும். கட்டடம் தயாரா னதும், அரசரின் வெள்ளிப்பாளங்கள்[1] அதற்கெனக் கட்டப் பட்ட அறையில் வைத்துப்பூட்டப்பட்டு, அரசரின் முத்திரை வைக்கப்பட்டது. காவல்காரர்கள் அதன் வாயிற்கருகில் நின்று கொண்டு கைகளில் வாளேந்திக் காத்து வந்தனர்.

அக் கட்டடம் கட்டிய கொல்லனுக்கு இறுதிக்காலம் நெருங்கியது. தன் மகன்களைக் கூப்பிட்டு, தான் அரச கருவூலத்துச் சுவரில் எத்தகைய சூழ்ச்சியைச் செய்துள்ளான் என்பதையும், ஒரு குறிப்பிட்ட அளவுள்ள கல்லை நகர்த் தினால், அது வெளி வந்துவிடும் என்பதையும் கூறி உடன் உள்ளிருக்கும் பாளங்களுள் ஒன்றை எடுத்து வந்து விற்று வாழ்க்கை நடத்தலாம் என்றும், அவ்வாறே வாழ் நாள் உள்ளளவும் அப்பாளங்களை விற்றே வாழ்க்கை நடத்தலாம் என்றும் விளக்கினான். அப் புத்திமதியைக் கவனமாகப் பயன்படுத்தி விழிப்பாக இருந்து வேலையை முடித்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டுத் தன் ஆவியை நீத்தான் அக்கொல்லன்.

அக்கொல்லனின் புதல்வர்கள் அடுத்த நாளிலிருந்தே அச்சூழ்ச்சியை நிறைவேற்ற முயன்றனர். அவர்கள் இரவில் வந்து சுவரில் இருந்த குறிப்பிட்ட கல்லை நீக்கி, எவ்வளவு வெள்ளிப்பாளங்களை எடுத்துச் செல்லலாமோ அத்துணை வெள்ளிப்பாளங்களை எடுத்துச் சென்றனர். அடுத்த நாள் அரசர் தம் கருவூலம் எப்படி உள்ளது என்பதை அறிய, தான் இட்ட முத்திரையை அகற்றி உள் சென்று பார்த்தார். பாளங்கள் எண்ணிக்கையில் குறைவுபட்டனவாகத் தோன் றின. பூட்டு நன்றாகவேயிருந்தது; உடைக்கவில்லை; காவலா ளிகள் நன்றாகவே அறைக் கதவுகளைக் காவல் காத்தனர். அவ்வாறும் வெள்ளிப்பாளங்கள் களவு போயின என்றால், அஃது எவ்வாறு நிகழ்ந்திருக்கும் என்பதையறிய மேலும் பல காவற்காரர்களை அமர்த்தினார். அத்துடன் அவ் வெள்ளிபபாளங்களுக் கருகில் பொறி[2] ஒன்றை வைத்தார்;

1. Silver slabs 2. Trap

எவரேனும் உள் நுழைந்தால் அப்பொறி உள் நுழைந்த வனைக் காட்டிக் கொடுத்துவிடும் தன்மை வாய்ந்தது.

உடன் அண்ணனும், தம்பியும் அன்றிரவு நடந்தது ஏதுமறியாமல், பின்புறமுள்ள கல்லை எடுத்து உள்ளே காலை வைத்தவுடன், அப்பொறி ஓலமிட்டது. காவற்காரர் அங்குமிங்கும் ஓடலாயினர். உடன் அண்ணன், தன் தம்பியிடம் "நாம் இருவரும் இன்று அகப்பட்டுக் கொண்டோம்; தப்பிச் செல்ல வழி கிடையாது; ஆனால் ஒன்று உள்ளது; என்னை வெட்டி என் தலையுடன் வெளியேறிக் கல்லை அப்படியே மூடிவிட்டுச் சென்றுவிடு என்று கூறினான். அப்பொழுது யோசனை செய்ய நேரமே இல்லை. உடன் தன் கையிலிருந்த வாளால் தன் அண்ணனின் தலையை வெட்டி, உடலை அங்கேயே போட்டுவிட்டு, அக்கல் துவாரத்தின் வழியே வந்து, மீண்டும் அக்கல்லை முன்பிருந்தவாறே மூடிவிட்டான். மூடிவிட்டு, வெட்டப்பட்ட தன் அண்ணனின் தலையுடன் வீட்டிற்கு ஓடி வந்து விட்டான். பொறி செய்த அமளியைக்கேட்டு, அரசர் உடன் வந்து தம் கருவூலத்தைத் தம் சாவிகள் கொண்டு திறந்து பார்த்தார். உள்ளே தலையில்லாத முண்டம் ஒன்று காணப்பட்டது. இருப்பினும் பூட்டு பூட்டியபடியே இருக்க எவ்வாறு அம்முண்டம் உள்ளே புகுந்திருக்கும் என்றும், காவலர்கள் சரியாகத்தானே காத்து வந்தார்கள் என்றும் மனத்தில் குழம்பிக் கொண்டிருந்தார் அரசர் ராம்ஸினிடஸ்[1].

தம்பி எடுத்துச் சென்ற தலையைத் தன் தாய் கண்ணுற்று மற்ற உடல் பகுதி எங்கே என்று கேட்டு, அதை அரசரிடம் சொல்வதாகப் பயமுறுத்தினாள். அதற்குள் அத்தாய் அவ் அரண்மனைப் பக்கம் போக, அங்கே அந்தத் தலையில்லாத முண்டம் தொங்கவிடப் பட்டிருந்தது. அதைக்கண்ட தாய், அது தன் மகனுடைய தலையில்லாத உடலே என்று கண்டு கொண்டு, வீட்டிற்கு வந்து, தன் மற்ற மகனிடம் கூறி, அத்தலையில்லாத உடலைக் கொண்டு வருமாறு பணித்தாள். அதனிடையே, அங்கு மாட்டப்பட்டிருந்த தலையில்லாத உடலுக்குக் காவலர்களை

---

1. Rhampsinitus

வைத்து விட்டு, யார் இதை எடுத்தேக விரும்புகிறார்களோ, அவர்களின் முகவரியைத் தெரிந்து கொள்ளுமாறு தம் காவலர்களிடம் பணித்தார் அவ்வரசர். அப்பொழுது தலை இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு, திருடனை அறிந்து கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் அவ்வறிப்பு தெரிவித்தது.

அம்மகன் மேலும் ஒரு சூழ்ச்சி செய்தான். ஒரு மூட்டையில் சாராயக் குடுவைகளை[1] வைத்துக் கொண்டு, அவற்றை ஒரு கழுதையின் மீதேற்றி, அரண்மனைக் காவலர்கள் அவ்வுடலைக் காத்து வரும் இடத்துக்கு ஓட்டி வந்தான். அங்கே அக்காவலர்கள் அவன் யாரென்று வினவி, அம் மூட்டையைத் தொட்டதும், அது அவிழ்ந்து, அதில் உள்ள சாராயக் குடுவைகள் யாவும் கீழே விழுந்து சிதறின. சாராயம் வெளியே தெறித்து விழுந்தது. சாராய வாசனையைக் கண்ட காவலர்கள் சிதறிய அக் குடுவைகளிலிருந்த சாராயத்தை நன்றாக அருந்தினர். அருந்ததின் பயனாக மயக்க முற்ற நிலையில் உள்ளபொழுது, அங்குத் தொங்கவிடப்பட்டிருந்த தலையற்ற உடலை அம்மூட்டையில் எடுத்துக் கட்டிக் கழுதைமீது போட்டுக் கொண்டும், அக்காவலர்களின் மீசையைப் பாதி மழித்து விட்டும் அத் தம்பி மகன் சென்று விட்டான்.

அரசன் அடுத்த நாள் அங்கு வந்து பார்த்தபோது, அத் தலையற்ற உடலும் திருட்டுப் போயிருந்ததை உணர்ந்தார். "இத்தகைய திருட்டில் கைதேர்ந்த அவனைப் பிடித்து விடவேண்டும்" என்று உறுதி கொண்டு அதற்கான ஏற்பாடுகள் செய்தார். அந்தத் திருடனைப் பிடிக்க ஏற்பாடு செய்த வழிதான் என்ன, மேற் கொண்ட முயற்சிகள் யாவை என்பனவற்றை குருமார்கள் கூறியது மிக விநோதமாகவே இருந்தது. இருப்பினும் நான் அதை நம்பத் தயாராக இல்லை.

ஒரு அழகான பெண்ணைக் கூப்பிட்டு, அவளைத் தாசியாக்கி. அவளிடம் வருவோர் யாவரையும், "நீ செய்த மிக்க அதிசயமான செயல் எது?" என்று கேட்க வேண்டும் என்றும், அவ்வாறு எவரேனும் தலையை வெட்டி அரச

1, Wine caskets

வெள்ளிப் பாளத்தை எடுத்தேகியதாகச் சொன்னால், உடன் அந்த ஆளைப் பிடித்துக் கொண்டு, அரசருக்குச் செய்தி உடன் அனுப்ப வேண்டும்'' என்றும் அரசர் கட்டளையிட்டிருந்தார்.

அதே போல் அத் தாசி தன்னிடம் வருவோர் போவோரை அக் கேள்விகள் கேட்டும், எதிர்பார்த்த விடை கிடைக்கவில்லை. ஒரு நாள் முற்கூறப்பட்ட தலை வெட்டிய தம்பிரானாகிய தம்பி அவள் வீட்டுக்கு வருகை தந்தான். அப்பொழுது அவன் தன்னுடன் ஓர் உடற் பகுதியை வெட்டி, கீழ்ப் பகுதியை எறிந்து விட்டு, மேல் பகுதியை மட்டும்— அதிலும் தலையை நீக்கிக் கை, மார்பு மட்டும் உள்ள பகுதியை மட்டும்— ஒரு மூட்டையில் கட்டி வெளியே வைத்து விட்டு உள் நுழைந்தான்.

அத் தம்பி, அத்தாசியுடன் இணைந்திருக்கும் பொழுது, அவள் எப்பொழுதும் கேட்கும் கேள்வியாகிய, "நீ செய்த மிக்க அதிசயமான செயல் எது?'' என்றதைக் கேட்டாள். அவளிடத்தில் கலவியில் இணைந்திருந்த காரணத்தால், தன்னையுமறியாமல், "நான் தலையை வெட்டி அரச வெள்ளிப் பாளத்தை எடுத்துச் சென்றேன்,'' என்று கூறினான். அதற்கு அவள், ''அரசனது தலையையா?'' என்று கேட்க, "இல்லை, என் அண்ணன் தலையை'' என்று உண்மையைக் கூறிவிட்டான். உடன் அத்தாசி அவனை இறுகப் பிடித்துக் கொண்டு, அரசனுக்கு ஆள் அனுப்பி விட்டாள். அதையறிந்த அத் தம்பிமகன் அங்கிருக்கும் விளக்கை ஊதி அணைத்து விட்டு, வெளியே வந்து மூட்டையில் வைத்திருந்த உடலின் மேற்பகுதியான கைகளை எடுத்து, உள் சென்று அத்தாசியின் கைகளில் உடன் தன் கைபோல் கோர்த்து விட்டு, வெளியே வந்து ஓடி மறைந்து விட்டான். ஆயினும் அத்தாசி அவனுடைய கைகளைத் தான் தான் பிடித்துக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டு மிகவும் இறுக அவ் வெட்டப்பட்ட கைகளை இருளில் பிடித்துக் கொண்டிருந்தாள்.

உடன் அரசரும் பரிவாரங்களும் அத்தாசியின் வீட்டுக்கு வந்து, அவளை விளக்குப் போட்டுப் பார்த்தனர். அவள்

கைகளில் பாதி உடல் இல்லாத— கைகள் மார்பு மட்டும் உள்ள உடல்— இறுகப் பற்றியிருந்ததைக் கண்டனர். அரசன் மேலும் வியப்படைந்தார். தாசியும் அத்தலையற்ற உடலைக் கீழே போட்டாள்.

உடன் அத்தாசியின் கைகளைக் கழுவிச்சுத்தம் செய்து, தம் அரண்மனைக்குத் திரும்பி, ''தலையை வெட்டி, உடலை எடுத்துச் சென்ற தம்பி எங்கிருந்தாலும், வந்தால் மன்னிக்கப் படும், வெகுமதியும் கொடுக்கப்படும்'', என்று அவ் அரசர் ராம்ஸினிடஸ்[1] பறையறை விக்கச் செய்தார்.

இதில் ஏதும் சூழ்ச்சி இல்லை என அறிந்த அத் தம்பி மகன், உடன் அரசர் முன் சென்று, தான் அதுகாறும் நடத்திய செயல்களை யாவரும் வியந்திடுமாறு தெரிவித்தான். அவன் தந்த விளக்கம் அரசரை மிகவும் வசீகரித்தது. அரசர் மிக்க வியப்புற்று, ''உன்னைப் போன்று சிறந்த மூளையுள்ள வேறு எவரையும் பார்க்க முடியாது. ஆகையால் உன் செயலுக்கு இதோ, என் வாழ்த்துக்கள். மற்றும், இதோ என் மகள் இவள்; இவளை மணந்து சுகமாக வாழ்வாயாக!'' என்று அவர்கள் இருவரையும் வாழ்த்தி, அவனை அரசாங்கத்தில் ஒரு திறமை மிக்க ஆலோசகனாக[2] இருக்க ஏற்பாடு செய்தார்.

''எகிப்தியர்களே[3] உலகில் மிகுந்த புத்திசாலிகள். ஆனால், தலை வெட்டிய தம்பிரானின் செயல் அவர்கள் யாவரையும் தோல்வி பெறச் செய்து விட்டதே!'' என்று கூறி அரசர் மிக்க வியப்பில் ஆழ்ந்தார்.''

விளக்கவுரை:

புரோடியஸ்[4] : இவர் கிரேக்க புராணகால அரசர்களுள்[5] ஒருவர் ஆவார். ஏறக்குறைய கி. மு. 4000 ஆண்டளவில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவர் போஸிடானின்[6] மகன் ஆவார். இவருக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். அவர்களின் பெயர் டெலிகோனஸ்,[7] பாலிகோனஸ்.[8] புரோடியஸ் எகிப்தின் அரசராகப்[9] பல்லாண்டு வாழ்ந்திருந்தார்.

ராம்ஸினிடஸ் : இவரும் எகிப்தின் அரசர். இவர் மேற் கூறப்பட்ட புரோடியஸ் என்பாரின் மகன் ஆவார். இவர்

---

1. Rhampsinitus 2. Advisor 3. Egyptians 4. Proteus 5. Greek Mythological Kings 6. Poseidon 7. Telegonus 8. Polygonus 9. Egyptian King

கி. மு. 4000 அளவில் அரியாசனம் ஏறிப் பல ஆண்டுகள் ஆட்சி செய்ததாகக் கிரேக்கப் புராண வரலாறு[1] கூறுகிறது. இவர் ஹெபீஸ்டஸ் கோயிலுக்கு[2] மேற்கு வாயிலின் கதவை[3] அமைத்தார். மற்றும் அவ்வாயிலினருகில் இரண்டு சிலைகளைச் செதுக்கி வைத்தார். ஒன்றின் பெயர் கோடைக்காலம்,[4] மற்றதின் பெயர் குளிர்காலம்.[5] கோடைக் காலத்தை மக்கள் வரவேற்பர். அதுபோல, அச்சிலையை மக்கள் போற்றி. அதற்கு விழா எடுத்தனர். குளிர்காலத்தை மக்கள் வெறுப்பர். அது போல, அச்சிலையை மக்கள் ஒதுக்கி வைத்துவிட்டனர்.

ராம்ஸிநிடஸிடம்[6] நிறைய வெள்ளிப் பாளங்கள்[7] இருந்தன. அதைப் பாதுகாக்கக் கல்லாலான ஓர் அறையைக் கட்ட எண்ணினார். அவ்வூர்க் கொல்லன் அம் மதிற்சுவரில் ஒரு கல்லை மட்டும் பூசாமல் விட்டு, வெள்ளிப்பாளம் களவாடத் திட்ட மிட்டிருந்தான். அவன் மகன்கள் அக்கல்லை எடுத்து, வெள்ளிப் பாளங்களை எடுத்தேகும் போது ஒருநாள் அகப்பட்டுக் கொள்ள, சூழ்ச்சியால் தப்பி அரசரே திகைக்குமாறு பல சாகசங்களைப் புரிந்து, இறுதியில் அரசர் மகளையே மணந்து, அரசாங்கத்தின் சிறந்த ஆலோசகரானான் என்று வரலாறு கூறுகிறது.

இதைப் போன்ற கதை இந்திய நாட்டிலும், தமிழ் நாட்டிலும் உண்டு. ஆனால் இந்தியக் கதையில் சூழ்ச்சிக்காரன் பிடிபட்டு கொல்லப் படுகிறான். கிரேக்க மூலத்திலோ, அச் சாகசக்காரன் அரசரின் மருமகனாகவே ஆகிவிடுகிறான்.

இந்திய நாட்டில் விளங்குவது பிற்காலத்திய கதை. ஆக இக்கதை கிரேக்க மூலத்திலிருந்து இந்திய நாட்டிற்கு வந்திருக்க வேண்டும்.

ஹெபீஸ்டஸ் கோயில் : தீக்கடவுள்.[8] ஹெபீஸ்டஸ்[9] ஜியுஸ்[10] கடவுளுக்கும் ஹீரா[11] தேவதைக்கும் பிறந்த மகன். காலில் ஊனமுள்ளவர். இவர் அப்ரோடைடியை[12] மணந்தார். ஆயினும் துரோகம் செய்துவிட்டார். மற்றும், பக்கம் 207 குறிப்பு-9-பார்க்கவும்.

இக்கோயிலுக்குத்தான் மேற்கு வாயிற்கதவை ராம்ஸி நிடஸ் அரசர் அமைத்ததாக ஹிராடடஸ் கூறுகிறார்.

---

1. Greek Mythology 2. Hephaestus Temple 3. Western Entrance gate 4. Summer 5. Winter 6. Rhampsinitus 7. Silver slabs 8. Firegod 9. Haphaestus 10. Zeus 11. Hera 12. Aphrodite

11. சியாப்ஸ் கட்டிய பிரமிடுகள்

"குருமார்கள் மற்றும் தொடர்ந்து கூறினர்:

ராம்ஸினிடஸ்[1] காலம் வரை எகிப்தின் அரசாட்சி நேர்மையாகவும், எல்லா வளங்கள் நிறைந்தும் காணப்பட்டது. ஆனால் அவரைப் பின்தொடர்ந்து அரியணை ஏறிய சியாப்ஸ்[2] எனும் அரசர் எகிப்தை[3] எல்லாத் துயரத்துக்கும் ஆளாகும்படிச் செய்து விட்டார். அவர் கோயில்கள் யாவற்றையும் மூடினதோடன்றி, மக்கள் தத்தமக்குரிய சமயங்களைப் பின்பற்றவும் அனுமதிக்கவில்லை. அவர்களை எவ்வித விதிவிலக்குமின்றித் தம் சொந்த நலத்துக்காக அடிமைகளாகப் பணியாற்ற வற்புறுத்தினார். சிலர் அரேபிய நாட்டு மலைகளிலிருந்து[4] பாறைகளை வெட்டி, அவற்றை நைலஸ்நதி வரை இழுத்து வர நியமிக்கப் பட்டனர். அங்கிருந்து படகில் ஏற்றப்பட்டு அடுத்தக் கரைக்கு எடுத்துச் செல்லப்படும். அக் கரையில் அப்பாறைகள் இறக்கப்பட்டு, அங்குக் காத்திருப்பவர்களால் அவை லிபியன் மலைக்கு[5] எடுத்துச் செல்லப்பட்டன. இப்பணி மாதம் மும்முறை நடைபெறும். ஒவ்வொரு முறையும் நூறாயிரம் பெயர்கள் அப்பணியில் அமர்த்தப்பட்டனர். இந்த விதமாக அடிமைகள் பணியாற்றுவது பத்து ஆண்டுகள் வரை நடைபெற்றது. அப்பத்து ஆண்டுகளும் அப் பாறைகளை எடுத்துச் செல்லும் பாதை செப்பனிடப் பட்டது. அதற்கான செலவு ஒரு பிரமிட் கட்டும் அளவு செலவாகும். அப்பாதையின் நீளம் 5 பர்லாங் 60 அடிகளே.

---

1. Rhampsinitus 2. Cheops 3. Egypt 4. Arabian Mountains 5 Libyan Mountain

அங்குக் கட்டப்பட்ட பிரமிடின் உயரம் 48 அடி- உச்சிவரை. அப்பிரமிடு முழுவதும் தேய்த்து, மழ மழவெனத் தோற்றம் பெறச் செய்யப்பட்டது. அப்பிரமிடு அடியில் சதுரமான உருவத்தில் அமைக்கப்பட்டது. அதன் பக்கங்களில் பறவைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டன.

மற்றொரு பிரமிடு கட்டப்பட்டது. அதன் உயரம் 800 அடி; அதன் அடிப்பகுதி சதுரமானது; அச்சதுர அடிப் பகுதியின் ஒவ்வொரு பக்கத்தின் நீளமும் 800 அடி என்றும் கூறப்படுகிறது. அதில் பயன்படுத்தப்பட்ட எந்த ஒரு பாறைத்துண்டும் 30 அடி சதுரத்திற்குக் குறைவில்லை.

அதைக் கட்ட ஒரு யுக்தி மேற் கொள்ளப்பட்டது. அப்பாறைக்கற்கள், கட்டைகள் பயன்படுத்தப்பட்டு, சாரம் கட்டி அதன்மீது மெதுவாக ஒரு தளத்துக்கு வேண்டிய கற்களை ஒவ்வொன்றாக ஏற்றுவர். முதல் அத்திவாரம் முடிவடைந்ததும், அதை இருப்பிடமாக வைத்து, அதன் மீது இரண்டாம் தளத்துக்கு ஏற்பாடுகள் செய்வர். அதாவது சாய்வான தளத்தில் யுத்த தளவாடங்களை எவ் வாறு ஏற்றுவார்களோ அவ்வாறு ஏற்றினர். அதன் முடிவு பெறும் பணிகள் மேலிருந்து தொடங்கி கீழ்வரை செய்து கொண்டு வரப்படும். அப்பிரமிடின் கல் ஒன்றில் பின்வரு மாறு குறிப்பிடப்பட்டுள்ளது: அடிமைக் கூலிகளுக்காக முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு வகையில் எவ்வளவு செலவிடப்பட்டது என்பது குறிப்பிடப்பட்ட துடன், அதை எனக்குப் படித்தும் காண்பித்தனர். அதில் 1600 டேலன்டுகள்[2] வெள்ளி நாணயம் செலவிடப் பட்டதாக இருந்தது. இதைத் தவிர அவர்கள் உணவுக்கு, உடைக்கு மற்றும் பல வசதிகளுக்கு எத்துணை அளவு செலவிடப் பட்டிருக்க வேண்டும் என்பதையும் சராசரியாகக் கணித்தும் விடலாம். மற்றும் இந்த செலவு அந்தப் பிரமிடு முடியும் வரையில்— கற்களை மலைப்பகுதியிலிருந்து கொணர் வதற்கும், பூமிக்கடியில்ஒருசுரங்க அறையைக்கட்டுவதற்கும் அதன் மீது—சதுரமான அத்திவாரத்தின் மீது—கட்டடம்

---

1. Pyramid 2. Talents

எழுப்புவதற்கும் எவ்வளவு செலவு ஆகியிருக்கும்? (நான் நினைக்கிறேன்—அது சிறிய தொகையன்று. மிகப் பெரிய தொகையாகவே இருக்கவேண்டும்!)

சியாப்ஸுக்கு[1] எந்தக் குற்றமும் பெரியதாகத் தோன்ற வில்லை. அவருக்குப் பணமுடை ஏற்பட்டதென்றால், தம் மகளை விபசார விடுதி ஒன்றனுக்கு அனுப்பிவைத்து, அதற்கென ஒரு கட்டணத்தை யீட்டுமாறு கட்டளையிடப் பட்டாள். அக்கட்டணத்தின் பெறுமானம் எவ்வளவு என்பது எனக்குக் குறிப்புத் தரப்படவில்லை. அத்துடன் அம்மகளும், தன்பங்கில் இன்னொன்றும் விதித்தாள். தன்னிடம் இன்பம் பெறும் ஒவ்வொருவரும் ஒரு சதுரக் கல்லை - பாறையைக்— கொண்டுவர வேண்டுமென்று விதித்தாள். அவ்வாறு ஈட்டிய கற்களைக் கொண்டே, அவள் நடுவில் விளங்கும் பிரமிடைக் கட்டி முடித்தாள் என்று கூறுகிறது.

சியாப்ஸ் 50 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அதன் பிறகு அவரது ஆட்சி பீடத்திற்கு அவர் தம்பி ஷெப்ரன்[2] அரசராக இருக்க அமர்த்தப்பட்டார்.

ஷெப்ரனின் ஆட்சி, சியாப்ஸின் ஆட்சி போலவே கொடுங்கோன்மை மிக்கதாக விளங்கிற்று. அவர் ஒரு சிறிய பிரமிடைக்[3] கட்டினார். இப்பிரமிட், சியாப்ஸின் பிரமிடுக்குக் கீழே காணப்படுகிறது.

ஷெப்ரன் 56 ஆண்டுகள் ஆண்டார். சியாப்ஸ் ஆண்டது 50 ஆண்டுகள், ஆக, மொத்தம் 106 ஆண்டு களாக, எகிப்தில்[4] உள்ள கோயில்களின் கதவுகள் திறக்கப் படவில்லை, என்று எகிப்திய மக்கள் கூறினர். நாட்டில் வறுமை தாண்டவமாடிற்று. அவ் அரசர்கள்மீது மக்கள் அத்துணை அளவு வெறுப்புற்றதன் காரணமாக, அப்பிரமி டுகளை அவ் அரசர்கள் பேரில் வழங்க விருப்பப் படாமல், பிலிடிஸ்[5] எனும் ஓர் ஆட்டிடையன் பெயரில்—அப்பொழுது அங்கு அவ் ஆட்டிடையன் ஆடுகள் மேய்த்துக் கொண்டி ருந்தான்— வழங்கினர் என்றால், அம்மக்கள் அவ் அரசர்கள்

---

1. Cheops 2. Chepren 3. Small Pyramid 4. Egypt 5. Philitis.

மீது கொண்ட வெறுப்பின் அளவை அறுதியிட்டுக் கூறத் தான் முடியுமா?

ஷெப்ரனுக்குப்[1] பிறகு மைசெரீனஸ்[2] அரச பதவி வகித்தார். மைசெரீனஸ் சியாப்ஸின் மகன் ஆவார். மைசெரீனஸ், தம் தந்தை கொண்ட கொள்கைகளை முழுவதும் மாற்றியமைத்தார். கோயில்களைத் திறந்து வைத்தார். அடிமையாக்கப் பட்டிருந்த மக்கள், தத்தமக்குரிய சமயங்களைப் பின்பற்றலாமென அறிவித்தார். ஒவ்வொரு வரும் தமக்கேற்ற தொழிலைச் செய்ய அனுமதித்தார் நீதி செலுத்துவதில் மிக நுணுக்கமாக ஆய்ந்து தீர்ப்பு வழங் கினார். அதன் காரணமாக எகிப்திய அரசர்கள் யாவருள்ளும் இவர் மாபெரும் புகழ் படைத்தவரானார். மற்றும் எவர் ஒருவராகிலும் தாம் வழங்கிய தீர்ப்பில் மகிழ்ச்சியடையாம லிருந்தால், அவருக்கு உண்மையாகவே நட்டமேற்பட்டி ருந்தால், அவருக்குத் தம் சொந்த சொத்திலிருந்து எவ்வளவு சேர வேண்டுமோ, அதைக் கொடுத்து விட ஏற்பாடுகள் செய்வார். ஆகையால் எவரும் அவரை வெறுத்ததே கிடையாது.

மைசெரீனஸுக்கு இடையூறு ஒன்று நேர்ந்தது. தம் மகள் சிறு குழந்தையாயிருந்த போதே இறந்து விட்டாள். அது அவருக்குப் பேரிடிபோன்று காணப்பட்டது. தங்கள் முன்னோர்கள் கோயில்களை 106 ஆண்டுகள் மூடிவைத் திருந்தனர்; யாவரையும் அடிமைப் படுத்தியிருந்தனர். தாமோ அக் கோயில்களைத் திறந்து, அடிமைகளுக்குப் புனர்வாழ்வைக் கொடுத்தார்— இவ்வளவு நன்மை செய்தும், கடவுள் ஏன் தம்மை அத்தகைய சோதனைக்கு உள்ளாக்க வேண்டு மென்று எண்ணமிடலானார். அக்கடவுள் தம் மகள் சிறு குழந்தையை ஏன் எடுத்துக் கொண்டுவிட வேண்டும், காரணம் தெரியவில்லையே எனப் பல முறை முறையிட்டார். இறுதியில் தம் மகள் உடலை மரத்தாலாய பசு ஒன்றின்[3] வயிற்றில் வைத்து, அதன்மீது பொன் வேய்ந்து, அன்றாடம் அதற்குத் தூப தீபம் காட்டி எப்பொ

---

1. Chepren 2. Mycerinus 3. Wooden ox.

ழுதும் ஒரு நந்தா விளக்கை அதன் அருகில் எரியுமாறு பணித்தார்.

மைசெரீனஸ்[1] தமக்குஇன்னும் ஆறுஆண்டுகளே ஆயுள் உள்ளது என்பதை உறுதியுடன் தெரிந்து கொண்டார். அப்பொழுதிலிருந்து அவர் பகல் இரவு தோன்றாதபடி எப்பொழுதுமே விளக்கு வெளிச்சத்தில் இருந்து கொண்டு, கேளிக்கைகளில் ஈடுபட்டுக் காலத்தைக் கழிக்கலானார். அவரும் ஒரு சிறிய பிரமிடைக் கட்டி[2] முடித்தார். அது சதுரமான அடித்தளத்தைக் கொண்டது — கீழ்ப்பாதி எதியோபியன் கற்களாலானது[3].

மைசெரீனஸ் கட்டிய பிரமிடை, ரோதாபிஸ்[4] எனும் அரசுப் பணியாள் - பெண் பணியாள்- கட்டியதாகக் கிரேக்க மக்கள் கூறுவர். நான் கூறுகிறேன், அவர்களுக்கு ரோதாபிஸ் யார் என்பதே தெரியாது என்று. மற்றும், ரோதாபிஸ் அமாஸிஸ்[5] அரசரின் காலத்தில்- பல ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்து வந்தவளேயன்றி, மைசெரீனஸ் காலத்தில் அன்று.

ரோதாபிஸ்: ரோதாபிஸ் பிறப்பில் ஒருதிரேசியன் ஆவாள். அவள் இயட்மான்[7] என்பாரின் அடிமைப்பெண். இயட்மான் என்பார் ஹெபிஸ்டாபலிஸ்[8] என்பாரின் மகன். மற்றும் கதை எழுதுபவரான ஈசாப்பின்[9] துணை- அடிமை ஆவாள் அந்த ரோதாபிஸ். ஆகையால் ஈசாப்பும் இயட்மானின் அடிமையாக வாழ்ந்து வந்தார்.

ரோதாபிஸ் விபசாரம் செய்து பொருள் ஈட்டினாள். அவள் ஒரு சிறந்த பேரழகி. எகிப்தில்[10] வாழ்ந்து வந்தாள். தான் விபசாரத்தில் ஈட்டிய பொருளைப் பத்தில் ஒரு பங்கை டெல்பி கோயிலுக்கு[11] அன்பளிப்பாகக் கொடுத்து விட்டாள். நௌகிராடிஸ்[12] எனும் இடம் பேரழகிகள் வாழ்ந்து விபசாரம் செய்யும் புகழ் பெற்ற இடமாகும். அவ்விடத்திலேயே

---

1. Mycerinus 2. Small Pyramid 3. Ethiopian stones 4. Rhodopis 5. Amasis 6. Thracian 7. Iadmon 8. Hephaestopolis 9. Aesop 10. Egypt 11. Delphi 12. Naucratis

ரோதாபிஸ் குடியேறித் தன் தொழிலைச் செய்து வாழ்ந்து வந்தாள்.''

விளக்கவுரை:

ராம்ஸிநிடஸ்[1] : கி.மு. 4000 ஆண்டு அளவில் எகிப்தை[2] ஆண்ட புராண கால அரசர்.[3]. எண்ணற்கரிய வெள்ளிப் பாளங்களை[4] வைத்திருந்தார். மற்றும் பக்கம் 214, பார்க் கவும்.

சியாப்ஸ்[5] : இவர் கொடுங்கோன்மைக்குப் புகழ்பெற்ற அரசர். அடிமைகளை ஈடுபடுத்தி, கசையடிகள் கொடுத்து, வேலை வாங்கி, கற்களை மலைப்பகுதியிலிருந்து இழுத்து வரச் செய்து, பிரமிடைக் கட்டினார். சிறிதும் ஈவு இரக்கம் அற்ற இவர் 56 ஆண்டுகள் ஆண்டார். இவர் குஃபு[6] எனும் வேறு பெயராலும் வழங்கப்பட்டார்.

லிபியன் மலை[7] : லிபியா[8] எனுஞ்சொல், கிரேக்க இலக்கியங்களில் ஆப்பிரிக்காவைக்[9] குறிப்பிட்டதாகும். பிற்காலத்தில் லிபியா, ஆப்பிரிக்காவின் வடக்கிலும், நைல் நதியின்[10] மேற்கிலும் உள்ள பகுதிகளைக் குறிப்பிடலாயிற்று. அஃது ஒரு பாலைவனப் பகுதியாகும். பிரமிடு கட்ட, அரேபியன் மலையிலிருந்து[11] கற்கள், லிபியன் மலைக்கு எடுத்துவர பட்டன என்று ஹிராடடஸ் கூறுகிறார். இப் பணி மாதம் மும் முறை நடந்தேறும் என்றும், ஒவ்வொரு முறையும் நூறாயிரம் (ஓர் இலட்சம்) அடிமைகள் பணியில் அமர்த்தப் பட்டனர் என்றும் அவரே கூறுகிறார்.

சாரம் கட்டிப் பாறைகளை ஏற்றல்:

மிகப் பண்டைக் காலத்திலேயே, பெரும் கனமான கற்களைக் கட்டடங்கள் மேல் ஏற்றச் சாரம் இட்டு, அதன்மீது மெதுவாகக் கற்களைச் சாய்வு தளத்தில் ஏற்றினர். அதே முறைதான் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் கட்டப்பட்ட பொழுதும் பின்பற்றப் பட்டது. அக் கோயிலின் உச்சியில் உள்ள பிரமரந்திர தளத்தை

---

1. Rhampsinitus 2. Egyptian King 3. Mytholo gical 4. Silver slabs 5. Cheops 6. Khufu 7. Libyan Mountains 8. Libya 9. Africa 10. Nile 11. Arabian Mountain

—25½ அடி சதுரமான பாறாங்கல் — 80 டன் எடையுள்ள ஒரே கல்லை— சாரப்பள்ளம் ஒன்று அமைத்து தஞ்சைக்கு 4 மைல் தொலைவு 216 அடி உயரம் ஏற்றி, விமானத்தின் உச்சியில் வைத்துள்ளனர் எனில் (இது கட்டப்பட்ட ஆண்டு கி.மு. 1003-1009) மிகப்பழங்காலத்தில் அத்தகைய பல கற்களைச் சாரமிட்டு ஏற்றினர் என்பதை அறிய எத்துணை வியப்பாக உள்ளது.

டேலன்டுகள்[1] : இது கிரேக்க நாட்டில்[2] வழங்கிய நாணய வகை. ஒரு டேலன்டம்[3] என்பது ஏறக்குறைய 235 பவுன் மதிப்புப் பெற்றதாகும். ஆகையால் 1600 டேலன்டுகள் என்பது 376000 பவுன் மதிப்பு உள்ளதாகும் இத்தொகை ஒன்றை, முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றுக்குச் செலவழிக்கப்பட்டதெனில், மற்ற வகைகளில் எத்துணை செலவு ஏற்பட்டிருக்கும் என்று ஹிராடடஸ் நம்மைக் கேட்கிறார்.

ஷெப்ரன்[4]: இவர் எகிப்திய அரசர் சியாப்ஸின்[5] தம்பி யாவார். இவரும் கொடுங்கோல் மன்னராகவே வாழ்ந்து வந்தார். இவர் 56 ஆண்டுகள் ஆண்டார். இவர் அண்ணன் சியாப்ஸ் ஆண்ட ஆண்டுகள் 50. ஆக மொத்தம் 106 ஆண்டுகள் கொடுங்கோலாட்சி நடைபெற்றது. இவர் காஃப்ரா[6] என்று வழங்கப்பட்டார்.


மைசெரீனஸ்[7] : இவர் சியாப்ஸ் அரசரின் மகன். தந்தைக்கு நேரிடை எதிராக நல்லவற்றையே செய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்டு, அதன்படியே செயலாற்றினார். இவர் அரசாட்சி யாவராலும் போற்றப்படுவதாயிற்று. இவர் நான்காவது பரம்பரையைச் சார்ந்தவர் என்றும், கி.மு. 3800 அளவில் வாழ்ந்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

ரோதாபிஸ்[8] : இவள் ஒரு சிறந்த பேரழகி. எகிப்தில் வாழ்ந்து வந்து விபசாரம் செய்து பொருள் ஈட்டினாள். தான் ஈட்டிய பொருளில் பத்தில் ஒரு பங்கை டெல்பி கோயிலுக்கு[9] அன்பளிப்பாக அளித்துவிட்டாள். இவள் அமாஸிஸ்[10] அரசர் காலத்தில் வாழ்ந்து வந்தாள். இறுதியில் நௌகிராடிஸ்[11] எனும் விபசார நகரில் வாழ்ந்து வந்தாள்.

---

1. Talents 2. Greece 3. Talentum 4. Chephren 5. Cheops 6. Khafra 7. Mycerinus 8. Rodhopis 9. Delphi 10. Amasis 11. Naucratis.

பிரமிடுகள்[1]: கடந்த 4600 ஆண்டுகளுக்கும் மேலாக; மாபெரும் சமாதியறைகள் பிரமிடுகள் எனப்பெறுபவை— மத்திய எகிப்திய நாட்டில்[2] – மிகச் சூடான மணற் பிரதேசத்தில்-



பெரிய பிரமிடும், மற்ற இரு பிரமிடுகளும்
மற்றும் மூன்று சிறிய பிரமிடுகளும்.

வேரூன்றி இருந்தன. மிகுந்த சூடோ, குளிரோ, சூறாவளியோ, எரிகற்களோ அவற்றை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவை

1. Pyramids 2. Central Egypt

இன்று நின்று காட்சியளிக்கும் நிலை ஒவ்வொருவரையும் வியப்புக் கடலில் ஆழ்த்துகின்றது. அவை பாரோக்கள்[1] எனப்படும் எகிப்திய அரசர்களின் சடலங்களைப் பாதுகாத்து நிற்கக் கட்டப்பட்டன. அவற்றுள் ''மம்மிகள்''[2] பெயர்த்தெடுக்கப் பட்டு விட்டன. விலையுயர்ந்த பொருள்கள் யாவும் களவாடப் பட்டுவிட்டன. இருப்பினும், பெரும் சதுரக் கற்பாறைகளால் கட்டப்பட்ட அம் மாபெரும் பிரமிட் கட்டடத்தை எவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இந்தப் பழங்கால எகிப்திய மன்னர்களின்[3] பிரமிடுகள்—சமாதியறைகள்—நைல்நதியின்[4] மேற்குப் பகுதியில் உள்ள—மெம்பிஸ்[5] நகருக்கு அருகே அன்று அவை கட்டப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை கீஸேயின்[6] மூன்று பெரிய பிரமிடுகள் ஆகும். இப்பிரமிடுகள் கி. மு. 2690 முதல் கி. மு. 2560 வரை கட்டப்பட்டன என்றும், அவை பிரமிட் காலத்தைச் சார்ந்தன என்றும் வரலாற்றாசிரியர்கள் ஆய்ந்து குறிப்பிட்டுள்ளனர்.

பக்கம் 223-ல் உள்ள படத்தின் விளக்கம்:

முதலாவது: மிகப்பெரிய பிரமிடு[7]: இப்பிரமிடு—அரச சமாதி—அரசர் குஃபு[8] என்று வழங்கப்பட்ட சியாப்ஸ்[9] எகிப்திய அரசரால் கட்டப்பட்டது. இது சதுரமானது, நீளம்—அகலம் 756 அடி, உயரம் 481 அடி இதன் அத்திவாரம் 13 ஏக்கர் நிலத்தில் இடப்பட்டது.

இரண்டாவது: அடுத்துப் பெரியது[10]: இது அரசர் காஃப்ராவின்[11] பிரமிடு. காஃப்ரா என்பவரே ஷெப்ரன்[12] ஆவார். இது பெரிய பிரமிடைவிடச் சிறியது. இதன் உயரம் 471 அடி; அடித்தளம் சதுரமானது. நீளம்—அகலம்—707¾ அடி.

மூன்றாவது: அதற்கும் அடுத்தது[13]: இது மென்கௌராவின்[14] பிரமிட் எனப்படும். மென்கௌரா என்பவரே மைசெரீனஸ்[15] ஆவார். இது முன் கூறப்பட்ட பிரமிடின் பாதியளவே. உயரம் 218 அடி: அடித்தளம் சதுரம்—நீளம் அகலம்—356½ அடி.

மூன்றாவது பிரமிடுக்கும் முன்னால் இருப்பவை, மூன்று சிறிய பிரமிடுகள்[16]. அவற்றுள் இரண்டாவது பிரமிடு அதாவது

---

1. Pharos 2. Mummies 3. Egyptian Kings 4. Nile 5. Memphis 6 Gizeh 7. Biggest Pyramid 8. Kufu 9. Cheops 10 Next bigger 11. Khafra 12. Chepren 13. Next bigger 14. Menkaura 15. Mycerinus 16. Small lesser Pyramids

நடு சிறிய பிரமிடு சியாப்ஸ் அரசரின் மகள்[1] தான் சேகரித்த பணத்தைக் கொண்டு கட்டப்பட்டதாகும்.

பெரிய பிரமிடில் மூன்று முக்கியப் பகுதிகள் உள்ளன. அப் பகுதிகளுள் முதலாவது கிங்ஸ் சேம்பர்[2]; இரண்டாவது வெல்[3]; மூன்றாவது குவீன்ஸ் சேம்பர்[4]. இப்பிரமிடில் 23 இலட்சம் தனிக் கற்பாறைகள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கற்பாறையின் எடை 2½ டன் முதல் 15 டன் வரை எடை உள்ளதாகும்.

கீஸே[5] இடத்தில் உள்ள பிரமிடுகளைத் தவிர, எகிப்தில்[6] சக்கரா[7] எனுமிடத்தில் அடுக்குப் பிரமிடு உள்ளது. அதில் 6 சமமற்ற அடுக்குகள் உள்ளன. அதன் உயரம் 204 அடி; அடித் தளம் நீளம் 411 அடி; அகலம் 358 அடி.

பெரிய பிரமிடின்[8] அடித்தளத்தின் சதுர உருவத்தின்—நீள அகலங்களுங்கிடையே வித்தியாசம் 9 அங்குலங்களே. அக்காலத் திலேயே எத்தகைய நுணுக்கிய வேலைப்பாடுகளுடன் அவை அமைக்கப்பட்டன!

இப்பிரமிடுகளின் வெகு தொலைவில் மனித முகச் சிங்கம் எனும் உருவம் ஒன்று உள்ளது. அதுதான் சூரியக்கடவுளின் சிலை, ஸ்பிங்ஸ்[9] என்று வழங்கப்படும். அதன் உதடுகளில் இலே சாகப் புன்னகை தவழும். இந்தியாவில் சிங்க முக மனிதன் உண்டு. அதுதான் நரசிம்மாவதாரம் -மனிதஉடலும், சிங்க முகமும்.

இவ்வளவு செலவு செய்து—அடிமை ஆள்கள், பணச்செலவு, கால விரயம்—அரசர், அரசிகளின் பாதுகாப்பிட்ட மம்மிகள் எனப்படும் சடலங்கள் நிலைத்திருக்கும் என்று எண்ணியகருத்துப் பறிபோய் விட்டது. மம்மிகளும், பொருள்களும் பாரோக்கள்[10] காலத்திலேயே சமாதித் திருடர்களால்[11] களவாடப்பட்டன. எடுக்க முடியாதவை, பின்னர் கை தேர்ந்தவர்களால் நீக்கப் பட்டன. எவராலும் எடுக்க முடியாதது, அழிக்க முடியாதது அங்கு வானளாவ ஓங்கி நிற்கும் கற்பாறைச் சமாதிகளே. அவையே இன்றைக்குப் போவோர் வருவோர்க்குக் காட்சி கொடுத்துத் தாமும் பெருமிதத் தோற்றத்துடன் நிற்கின்றன.

—(The Book of Knowledge, Vol VI: Page 313)

---

1. Daughter of Cheops 2, King's chamber 3. Well 4. Queen's chamber 5. Gizeh 6. Egypt 7. Sakkara 8. Big Pyramid 9. Sphinx 10. Pharos 11, Tomb robbers

12. ஹெகெடியஸ் — வரலாற்றாசிரியர்

''இதுவரை எகிப்தியர்களும்[1] அவர்களின் குருமார்களும்[2] கொடுத்த விவரங்களின் ஆதாரங்களின் பேரிலேயே நான் செய்திகளைத் தொகுத்துக் கூறியுள்ளேன். அவர்கள் கூறினர்: எகிப்திய முதல் அரசருக்கும், ஹெபீஸ்டஸின்[3] குருமாரான இறுதி அரசருக்கும் இடையே 341 பரம்பரைகள் விளங்கின. ஒவ்வொரு பரம்பரைக்கும் இடையே ஓர் அரசரும், ஒரு குருமாரும் ஆட்சி செலுத்தினர். மூன்று பரம் பரைகளுக்கான ஆண்டுகள் 100 எனக் கொண்டால் 300 பரம்பரைக்கு ஆன ஆண்டுகள் 10,000 ஆகும், மீதி 41 பரம் பரைகள் 1340 ஆண்டுகள் அதிகம் எடுத்துக் கொள்ளும். ஆக மொத்த ஆண்டுகள் அப்பரம்பரைகளைச் சார்ந்தவை 11340 ஆகும். இந்த ஆண்டுக் கணக்கில் முதலிலேயோ, இடையிலோ, இறுதியிலோ எந்தக் கடவுளும் மனித உருவம் எடுத்து வரவில்லை; அதாவது கடவுள் அவதாரம் ஏற்பட வில்லை. இம்மாதிரி நிகழ்ச்சி, இதற்கு முன்னர் இருந்த அரசர்களிடம் நிகழ்ந்ததில்லை; அல்லது பின்னர் வந்த அரசர்களிடமும் நிகழ்ந்தது கிடையாது.

ஹெகெடியஸ்[4], வரலாற்றாசிரியர், தீபே[5] நகரத் துக்கு வருகை தந்தார். ஜியுஸ் கடவுளின்[6] குருமார்கள் ஹெகடியஸ் தம் மூதாதையரின் 16 ஆவது பரம்பரையில் கடவுள் தொடர்பு பெற்றிருந்ததாகக் கூறிய பொழுது, எடுத்துக் காட்ட அங்குள்ள தம் ஒவ்வொருவரின் மூதாதை

---

1. Egyptians 2. Priests 3. Hephaestus 4. Hecataeus 5. Thebes 6. Zeus

யரையும் விளக்கிக் காட்டினார். அந்தக் கோயிலின் பெரிய அறையில் உள்ள சிலைகளை ஒவ்வொன்றாக எண்ணினார். ஒவ்வொரு நிலையும் தம் மூதாதையரின் தந்தை—மகன் எனும் முறையில் அமைக்கப் பட்டிருந்ததை ஹெகடியஸ் எடுத்துரைத்தார். இறுதியில் இறந்த குருமாரின் சிலை முதற்கொண்டு, அவர் தந்தை, தந்தையின் தந்தை, என்ற வாறு 16 பரம்பரையைச் சுட்டிக் காட்டினார். அவ்வாறான பதினாறாவது பரம்பரை ஒரு கடவுள் சிலையாக உள்ளது என்றதைக் குருமார்கள் நம்பவில்லை. அக்குருமார்களின் நம் பிக்கை, எந்த மனிதனுக்கும் தன் பரம்பரைத் தலைவராகக் கடவுளர் எவரும் இருந்தது கிடையாது. அவர்கள் அதற்கு விளக்கம் கூறியதன் சுருக்கம் பின்வருமாறு: ஒவ்வொரு சிலையும் ஒரு கனவானை—அதாவது பிராமிஸ்[1] என்பதைக்—குறிப்பிடும் என்று கூறினர். சிலைகள் மனிதர்களைக் குறிப் பிட்டனவேயன்றி, எக்கடவுளர்களையும் குறிப்பிடவில்லை.''

விளக்கவுரை:

ஹெகெடியஸ்[2] (கி. மு. 530 - 450) : இவர் மைலீடஸ்[3] எனும் இடத்தைச் சார்ந்தவர். கிரேக்க வரலாற்றாசிரியர்களுள்ளும்[4] புவியியலாசிரியர்களுள்ளும்[5] தலை சிறந்தவர். கி மு. 500-ல் தம் நாட்டினரைப் பாரசீகருக்[16] எதிராகப் போரிட வேண்டாம் எனத் தடுத்து நிறுத்தியவர். இவர் எகிப்து[7] முதலிய பல நாடு களுக்குச் சென்றுள்ளார்; ஹிராடடஸின் சமகாலத்தவர். இருப் பினும் அவரது நூல்களுள் ஒன்றேனும் இன்று நமக்குக் கிடைக் கவில்லை.

ஹெகெடியஸ் தீபே[8] நகரத்துக்கு வந்த பொழுது ஏற்பட்ட நிகழ்ச்சியை ஹிராடடஸ் கூறுகிறார்.

இங்குக் கூறப்பட்ட ஆண்டுகளும், பரம்பரைகளும், பரம் பரை ஆண்டுகளும் தோராயமானவையே. உத்தேசமாக இவ்வளவு இருக்கலாம் என்று குருமார்களால் கணிக்கப்பட்டது. இப்புள்ளிகளில் உண்மையைக் காண முடியாது; உண்மையான வையும் அல்ல.

---

1. Piromis 2. Hecataeus 3. Miletus 4. Greek Historians 5, Geographers 6, Persians 7. Egypt 8· Thebes

கிரேக்க காலத்தைப் போல, இந்திய நாட்டுக் காவியங்க ளிலும் அத்தகைய காலக் குழப்பங்கள் ஏற்பட்டதுண்டு. இராமா யணத்தில் தசரதர் 60,000 ஆண்டுகள் ஆண்டார் எனவும், பரதர் 14 ஆண்டுகள் பாதுகையை வைத்து அயோத்தியில் இராமருக்குப் பதிலாக் ஆண்டார் எனவும், சுந்தர காண்டம் முழுவதும் ஒரே நாளில் நடைபெற்ற வரலாறு எனவும், இறுதியில் இராமர் பல ஆயிரம் ஆண்டுகள் ஆண்டார் என்றும் கூறுவது ஒரே காவியத்தில் இக் கால வரையறை ஒருவகை மயக்கத்தை அளிக்க வல்லதே. உலகில் உள்ள இதிகாசங்கள் யாவும் இக் குறை பாட்டுக்கு உட்பட்டனவாகவே காணப்படுகின்றன.

ஜியுஸ் கடவுளின்[1] குருமார்கள்: ஜியுஸ் ஒரு தீக் கடவுள் ஆவார். தீபே நாட்டின் முக்கியக் கடவுள். அக் கடவுளின் கோயிலில் பணிபுரிந்து அசரீரி வாக்கு அளிக்கும் குருமார்கள் பலர் இருந் தனர். அவர்கள், தங்கள் ஒருவருக்கு மட்டுமே கடவுட் பரம் பரை உண்டு; மற்றவர்களுக்குக் கிடையாது என்றும் கூறுவர்; மற்றும் அவ்வாறு கூறிக் கொள்பவர் ஒரு கனவானைக் குறிப் பிட்டே கூறுவர். சிலைகள் மனிதர்களைக் குறிப்பிட்டனவே யன்றி, எக்கடவுளையும் குறிப்பிடவில்லை. கடவுளர் சிலை களுக்குக் கால வரையறை கிடையாது. கடவுளர்களின் குருமார் களுள்[2] சிலர் அரசர்களாகவும் எகிப்தில் ஆட்சி புரிந்தனர்.

---

1. Zeus 2. God's Priests

13. அமாஸிஸ் புரிந்த பணிகள்

"அமாஸிஸ்[1] நகைச்சுவை உணர்வு வாய்ந்தவர். அவர் அரசராவதற்கு முன்னர், அவர் குடிப்பார்; கேலிகள் செய்வார்; சிரித்துப் பேசுவார். பணமுடை ஏற்பட்டதெனின் திருடவும் செய்வார். இவரைக் கோவிலில் வைத்து, இவர் குற்றவாளியா, அல்லரா என அசரீரி வாக்கைக் கேட்டால்[2], அவ்வாக்கு ஒரு முறை "உண்டு" எனவும், சில முறைகள் "இல்லை" எனவும் பதில் கூறும். இல்லையென்றால் அம் மக்கள் விட்டு விடுவர்; உண்டு, ஆம் என்று பதில் கிடைத்தால், தண்டனை ஏற்க நேரிடும்.

ஆகையால் இவர் அரசாட்சி ஏற்றதும், தம்மைக் குற்றவாளி என்று 'சொன்ன கடவுள்மீது அதிக நம்பிக்கை கொண்டார். அக்கடவுள் உண்மையைக் கூறிற்று. 'இல்லை' என்று சொன்ன கடவுள் மீது—தாம் குற்றவாளி என்று தம் உள் மனத்திற்குத் தெரிவதால்—நம்பிக்கை இழந்தார். அக்கடவுள் உண்மையை மறைத்தது.

அமாஸிஸ் பட்டமெய்தியதும், அவரது முதல் பணி, அத்தினே கோயிலுக்கு[3]—சாயிஸில்[4] உள்ளது—மிகச்சிறந்த வாயிலைக் கட்டி முடித்தார். பிறகு அக்கோயிலுக்குப் பெருவாரியான சிலைகளையும், பல ஆள்களையும், ஸ்பிங்க்ஸ்களையும்,[5] பிரமிடு கட்டப்[6] பல கற்களையும் வழங்கினார். மிகவும் வியக்கத்தக்கது, ஒரே கல்லினைக்

---

1. Amasis 2. Oracle 3. Athenae 4. Sais 5. Sphinx 6. Pyramid

குடைந்து[1], அதில் பெரிய அறை ஒன்றை உண்டாக்கி, அதை எலிபெண்டைனிலிருந்து எடுத்து வரச் செய்தார். அவ்வாறான கல் அறையைக் கொண்டு வர 3 ஆண்டுகள் பிடித்தன. அவ் அறையின் நீளம் 21 முழம்[2]; அகலம் 14 முழம்; உயரம் 8 முழம். உள்ளே அறையின் நீளம் 18⅚ முழம்; அகலம் 12 முழம்; உயரம் 5 முழம். அக்கல் அறையை நகரத்தினுள் கொண்டு செல்லவில்லை. காரணம் அதைக் கொணரும் பொழுது, அதில் ஒரு நீகிரோ அடிமை[3] சிக்கி, நசுக்குண்டு இறந்து விட்டான். இதை ஓர் அபசகுனமாக அரசர் எடுத்துக் கொண்டு, அக்கல்லறையை நகரத்தினுள் எடுத்துச் செல்லாமல், நகரின் வெளிப்புறத்தில் வைத்து, அங்கேயே அதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கட்டளையிட்டார்.

ஒவ்வொரு கோயிலுக்கும் பற்பல உருவச் சிலைகளை அன்பளிப்பாகக் கொடுத்தார். ஒவ்வொன்றும் 75 அடி உயரம் உள்ளது. அதே இடத்தில் எதியோபியக் கற்களாலான[4] இரு சிலைகளை—ஒவ்வொன்றும் 20 அடி உயரம் உள்ளது—நிர்மாணித்தார். மெம்பிஸில்[5] உள்ள ஈஸிஸிற்குப்[6] புகழ் பெற்ற கோயிலைக்கட்டினார் அமாஸிஸ்.

அமாஸிஸ்[7] காலத்தில்—அவர் ஆட்சியிலிருந்தது—20,000 நகரங்களாகும். சுங்கச் சாவடிகளை[8] அமைத்தார். ஒவ்வொரு பிரசையும்—பிரதேச கவர்னர் நோமார்க்[9] என்பவர் முன்—தம்மிடம் உள்ள சொத்தின் விவரங்களைக் கூற வேண்டும். அது நேர்மையான முறையில் ஈட்டப்பட்டதா என்பதையும் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்க முடியவில்லை என்று தெரிந்தாலும் அச் சொத்தை வைத்திருப்பவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு விடும்.

அமாஸிஸ் கிரேக்கர்களை[10] விரும்பினார். அவர்களுக்குப் பல சலுகைகளை வழங்கினார். கிரேக்கர் தங்களுக்கெனப் பல கோயில்களைக் கட்டிக் கொண்டனர். அவற்றுள் முக்கியமானது ஹெலனியம்[11] என்பது.

---

1. Rock-Cut Cave 2. Cubit 3. Negro Slave 4. Ethiopian stones 5. Memphis 6. Isis 7. Amasis 8. Toll Gates 9. Nomarch 10. Greeks 11. Hellenium

டெல்பிகோயில்[1] தீப்பிடித்து எரிந்துவிட்டதால், அதைப் புதுப்பிக்க அவர்கள் அமாஸிஸைக் கேட்டபொழுது, உடன் அவர் 1000 டேலன்டுகள்[2] படிகாரத்தைக்[3] கொடுத்து உதவினார்.

அமாஸிஸ் கிரேக்கப்பெண்[4] ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். அப்பெண் சைரீன்[5] நகரத்திலிருந்து வந்தவள். அவள் பெயர் லாடிஸ்[6]. அவள் ஒரு பெரு வணிகரின் மகள் ஆவாள். சில காலம் வரை அந்தத் திருமணம் நடைபெறவில்லை. காரணம், அமாஸிஸ் அப்பெண்ணுடன் படுக்கப் போகும் போதெல்லாம், அவளிடம் உடலுறவு கொள்ள முடியாமல் ஏதோ ஒன்றினால் அவர் தடுக்கப் பட்டார். இவ்வாறு சில மாதங்கள் கழிந்தன.

இறுதியாக அமாஸிஸ் அவளுக்கு எச்சரிக்கை செய்தார். "இன்று நான் உன்னுடன் உடல் உறவு கொள்ள வேண்டும்; அது முடியாது தடைபட்டதென்றால், உடன் நீ இறக்க வேண்டும்; வேறு வழியேயில்லை," என்று இறுதியாகக் கூறி விட்டார். ஆகையால் அப்பெண் மிக்க வருத்தமுற்று, உள்ளம் சோர்ந்து, அப்ரோடைடி[7] தெய்வத்தை வேண்டினாள். "இன்று இரவு நாங்கள் இருவரும் இன்பமாக உடலுறவு கொண்டால், உனக்கு ஒரு சிலை செய்து உன் கோயிலில் வைக்கிறேன். இனி என்னைச் சோதனை செய்யாதே!" என்று மனமுருகி வேண்டிக் கொண்டாள். அப்ரோடைடி எனும் அத் தெய்வத்தின் மனம் இரங்கிற்று.

அன்று இரவு அமாஸிஸூம்[8] லாடிஸூம் உடலுறவு கொண்டனர். அமாஸிஸ் மிகுந்த இன்பமடைந்தான். அன்றையிலிருந்து அவர்கள் அன்பு மேலும்மேலும் வளர்ந்து வருவதாயிற்று.

அதன் பின்னர் லாடிஸ் ஒரு சிலை செய்து, அதை அப்ரோடைடி தெய்வத்தின் கோயிலுக்கு அனுப்பி வைத்தாள். அச்சிலையை இன்று நான் பார்வையிட்டேன்.

---

1. Delphi 2. Talents 3. Alum 4. Grecian Lady 5. Cyrene 6. Ladice 7. Aphrodite 8. Amasis

சைப்ரஸ் தீவைத்[1] தாக்கி, அதை வெற்றி கண்டு, தமதாக்கிக் கொண்ட முதல் மனிதர் அமாஸிஸ் அவரே ஆவார். அத்தீவினர் தமக்குக் கப்பம் செலுத்த வேண்டு மென்று வற்புறுத்திக் கப்பத்தை வசூலிக்கவும் செய்தார்."

விளக்கவுரை:

அமாஸிஸ்: இவர் எகிப்தின் மன்னராக[2] ஆட்சி செய்த காலம் கி. மு. 570—526. அதாவது 44 ஆண்டுகள் ஆண்டார். இவர் ஆட்சியில் எகிப்து[3] மிகவும் சுபிட்சத்துடன் காணப் பட்டது. கிரேக்கர்களுக்கும்[4] எகிப்தியர்களுக்கும்[5] இடையே ஓர் அரிய பிணைப்பை உண்டாக்கினார். இந்த உறவு முன்னை விட மிகச் சிறப்புற விளங்க உதவிற்று. இப்பகுதியில் அமாஸிஸின் காதல் காவியம் குறிப்பிடப்படுகிறது.

அத்தினே கோயில்[6]: அத்தினே என்னும் சொல் ஆதன்ஸ்[7] எனும் சொல்லின் திரிபே. கிரேக்க ஆதன்ஸ் போல, எகிப்திலும் ஓர் ஆதன்ஸ் தெய்வம் அதாவது அத்தினே தெய்வக்கோயில் கட்டப்பட்டது. அக்கோயிலுக்கு அமாஸிஸ் பெரும் அளவில் சிலைகள், ஆள்கள், ஸ்பிங்குகள்[8]— மனிதமுகச் சிங்கங்கள்— பாறைக்கற்கள் முதலியவற்றைப் பரிசுப் பொருள்களாக— அன்பளிப்பாகக்—கொடுத்தார்.

ஒரே கல்லினைக் குடைந்த அறை:

21×14×8முழங்கள்[9] அளவுகள் கொண்ட ஒரு பெரும்பாறை யில் $18\frac{5}{6}$×12×5 முழங்கள் அளவுகள் கொண்ட ஓர் அறை செதுக் கப்பட வேண்டுமெனில், எத்துணை ஆள்கள், எவ்வளவு ஆண்டு கள் வேலை செய்திருக்க வேண்டும்? அவ் அறையைக் கோயிலின் கர்ப்பக்கிரகமாக ஆக்க நினைத்திருந்தார் போலும். ஆனால் அதை நகர்த்தியவுடன் ஒரு நீகிரோ அடிமை[10] அதில் நசுக்குண்டு மடிந்ததால், ஏதோ சகுனத்தடை ஏற்பட்டதாக எண்ணி, அதை நகர்த்தாமல் அவ்விடத்திலேயே-ஊருக்கு வெளியிலேயே-விட்டு வைத்தார். அதை அங்கிருந்தே பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆணையும் பிறப்பித்து விட்டார்.

இதே போன்ற கற்குகைகள்— கற்களை— மலைகளைக் குடைந்து அமைத்த குகைக் கோயில்கள்— தென்னிந்தியாவில்

---

1. Cyprus Island 2. Egyptian King 3. Egypt 4. Greeks 5. Egyptians 6. Athenae 7. Athens 8. Sphinx 9. Cubits 10. Negro slave

மாமல்லபுரத்திலும்[1], எல்லோராவிலும்[2] காணப்படுகின்றன. மற்றும் பேரரசர் அசோகர் காலத்தில் (கி.மு. 273 -224) குடைந்தெடுக்கப்பட்ட பராபர் குகைக்கோயில்களையும் குறிப்பிடலாம். அக்குடைவு ஆஜீவர்களாகிய சமணர்களால் உண்டாக்கப்பட்டது. இவை சுதாமா குகைகள் என்று வழங்கப்பட்டன. மாமல்லபுரத்தில் உள்ள கல் ரதங்களின்[3] பெயர் சப்த ரதங்கள்[4] அல்லது ஏழு தேர்கள். மற்றும் இவை பஞ்சபாண்டவர் இரதங்கள்[5] என்றும், குகைக்கோயில்கள்[6] என்றும் வழங்கப் பட்டு வருகின்றன.

அக் கல்ரதங்கள் செதுக்கப்பட்ட ஆண்டுகள் கி.பி. 650—660 அதாவது நரசிம்ம பல்லவ மன்னன் காலத்தில். ஆக, கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் விளங்கிய கிரேக்கக்கலை—எகிப்தியக்கலை —கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் விளங்கிய அசோகப் பேரரசரால் பின்பற்றப்பட்டு, பின்னர் கி பி. 7ஆம் நூற்றாண்டில் நரசிம்ம பல்லவமன்னரால் பின்பற்றப்பட்டது என்பது இதனால் தெரிய வருகிறது.

இந்தியக்கலைக்கு— சிற்பக்க்லைக்கு— மாமல்லபுரம் சிற்பங்கள் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

மெம்பிஸில்[7] உள்ள ஈஸிஸ்[8]: ஈஸிஸ் எகிப்தின் பெண் தெய்வங்களுள் முக்கியமானதாகும். இத்தேவதை ஆஸிரிஸ்[9] என்பவரின் மனைவி. ஹோரஸ்[10] என்ற மகனாரின் தாய். ஹோரஸ், சூரியனின் கடவுள் ஆவார். ஈஸிஸ் பூமியின் தேவதையாகவும் பின்னர் சந்திரனின் கடவுளாகவும் கருதப்பட்டார். இந்த ஈஸிஸ் தெய்வத்தின் கோயில் மெம்பிஸ் நகரத்தில் நிர்மாணிக்கப் பட்டிருந்தது.

ஹெல்லெனியம்[11]: கிரேக்கர்களுக்கு அமாஸிஸ்[12] பல சலுகைகளை அளித்தார். அவற்றுள் ஒன்று கிரேக்கர்களுக்கு எகிப்தில் தங்கள் மரபிற்கான கோயில்களைக் கட்டிக் கொள்ளுதல். அவ்வாறு அமாஸிஸ் அனுமதியளித்துக் கிரேக்கர்களால் நிர்மாணிக்கப்பட்ட கிரேக்கக் கோயில் ஹெல்லெனியம் என்பது.

ஹெலென்[13] என்பவர் டியூகாலியன்[14] என்பாரின் மகன்;

---

1. Mamallapuram 2. Ellora 3. Stone Cars 4. Septa—Racia—Seven Pagodas 5. Panchapandavar Rathangal 6. Cave Temples 7. Memphis 8. Isis 9. Osiris 10. Horus 11. Hellenium 12. Amasis 13. Helen 14. Deucalion

தாய் பிர்ரா[1]; இவர் மகன்கள் இயோலஸ்[2], டோரஸ்[3], ஜூதஸ்[4]. இவர் திசாலியில் பிதியாவின்[5] அரசராக இருந்தார். இவருக்குப் பிறகு இவர் மகன் இயோலஸ் பட்ட மெய்தினார்.

ஹெலென் கிரேக்கமக்களுக்கு ஆதிவாசி, முதல் மனிதராகப் புராணங்கள் கூறுகின்றன. ஹெல்லனிஸ்[6]— கிரேக்கர்— மக்களின் பரம்பரையில் தோன்றியவராகவும், இவரே கிரேக்கப் பரம்பரைக்குத் தோன்றக் காரணமாயிருந்ததாகவும், இவரே கிரேக்க இனத்தில் - கிரேக்க அரசர்களில்—முதலாமவர் என்றும் கிரேக்கப் புராண வரலாறுகள் கூறுகின்றன.

(A Smaller Classical Dictionary—Page 248)

டெல்பி[7]: இக்கோயில் கிரேக்க நாட்டில் இருந்த மிகப் புராதனக் கோயில். இங்கே அசரீரி கேட்கப்படும் என்றும், அரசர்களும் பொது மக்களும் இங்குக் குறிகேட்ட வண்ணம் இருந்தனர் என்றும் வரலாறுகள் தெரிவிக்கின்றன. இங்குத் தீப்பற்றி எரிந்த செய்தி கூறப்படுகிறது. மற்றும் பக்கம் 59, குறிப்பு—11 பார்க்கவும்.

டேலன்டுகள்[8]: ஒரு டேலன்ட் 235 பவுன் மதிப்புள்ளதாகும். இங்கு 1000 டேலன்டுகள் என்பது 235000 பவுன் ஆகும். இத்தொகையை அமாஸிஸ் டெல்பி கோயிலைப் புதுப்பிக்கக் கொடுத்துள்ளார்.

லாடிஸ்[9]: இவள் கிரேக்கப்பெண். இவளை மணக்க வேண்டும் என்று அமாஸிஸ் விரும்பினார். இருப்பினும் அவளுடன் இணைய முடியவில்லை. இறுதியில் அவளுக்கு இறுதிநாள் எச்சரிக்கை விடுத்தார். உடன் அவள் அப்ரோடைடி தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து, அமாஸிஸுடன் இன்பமாக இணைந்தாள். லாடிஸ் தான் வேண்டிக் கொண்டபடி ஒரு சிலையை அப்ரோடைடி கோயிலுக்கு அனுப்பி வைத்தாள்.

அப்ரோடைடி[10]: இது ஓர் அழகுத் தெய்வம். இத் தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து தாங்கள் கோரிய வரத்தைப் பெறுவர். எகிப்தில் அப்ரோடைடி கோயில் புகழ்பெற்றது. அப்ரோடைடியை ஹெபீஸ்டஸ்[11] மணந்ததாகக் கூறப்படுகிறது. மற்றும் பக்கம் 207, குறிப்பு-9 பார்க்கவும்.

சைப்ரஸ் தீவு[12]: இது மத்திய தரைக் கடலில்[13] ஒரு பெருந்தீவு. சிரியாவுக்கு[14] மேற்கே உள்ளது இங்கு அப்ரோடைடி தெய்வ வழிபாடு சிறப்புற்றிருந்தது. இத் தெய்வ வழிபாடு பினீசியர்களால்[15] சைப்ரஸ் தீவில் புகுத்தப்பட்டது. அப்ரோடைடி, தமிழ்த்தெய்வம் ரதியை நிகர்ப்பவள்.

---

1. Pyrrha 2. Aeolus 3. Dorus 4. Xuthus 5. Phthia in Thessaly 6. Hellenes 7. Delphi 8. Talents 9. Ladice 10. Aphrodite 11. Hephaestus 12. Cyprus Island 13. Mediterranean Sea 14. Syria 15. Phoenicians

புத்தகம்-3

1. கேம்பைஸிஸின் படையெடுப்பும், அமாஸிஸின் மரணமும்

"சைரஸின்[1] மகன் கேம்பைஸிஸ்[2] எகிப்தின்மீது[3] படையெடுக்க முயன்ற போது, அமாஸிஸ்[4] அரச பீடத்தில் அங்கு அமர்ந்திருந்தார். கேம்பைஸிஸின் படையில் பல நாடுகளிலிருந்து வரவழைக்கப் பட்ட போர் வீரர்கள் இருந்தனர். அவர்களுள் அயோனிய கிரேக்கர்களும்[5] இயோலிய கிரேக்கர்களும்[6] இருந்தனர்.

கேம்பைஸிஸின் படையெடுப்பிற்கான காரணங்களுள் முக்கியமானவை பின்வருமாறு: கேம்பைஸிஸுக்கு அமாஸிஸின் மகளைத் தம் நாட்டில் கொணர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அவா மேலிட்டது-அவளை மனைவியாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தாலன்று; ஆனால் அவளை அந்தப்புரத்து மகளிர்களின் தலைவியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தாலே ஆகும். இக்கருத்து அமாஸிஸின் மனத்தை வெகுவாகக் குழப்பிற்று. ஏற்கெனவே பாரசீகம்[7] என்றாலே நடுங்கிக் கொண்டிருப்பவர் அமாஸிஸ், மகளை அரசரின் மனைவியாக்கினால், பிறக்கப் போகும் பிள்ளைக்கு இராச்சியம் கிடைக்கும். ஆனால், மகளிர்க்குத் தலைவியாயிருப்பதென்றால், வெற்றுக் கூலி வேலை செய்யும் பணியாள்தானே? இருப்பினும் ஒரு புதிய

---

1. Cyrus 2. Cambyses 3. Egypt 4. Amasis 5. Ionian Greeks 6, Aeolian Greeks 7. Persia

கருத்து அமாஸிஸுக்குத் தோன்றிற்று. அதன்படி அவர் காலஞ் சென்ற அரசர் ஏப்ரீஸின்[1] மகள் நிடெடிஸ்[2] என்பவளுக்கு உயர்ந்த ஆடைகளையும், பொன் அணிகளையும் அணிவித்தார். அவள் உயரமாகவும், அழகாகவும் இருந்தாள். அவளைத் தம் மகள் என்று கூறி, பாரசீகத்திற்குக் கேம்பைஸிஸிடம் அனுப்பி வைத்தார். ஒரு நாள் அவளை அழைக்கும் பொழுது, "அமாஸிஸின் மகளே!" என்று விளித்தார் கேம்பைஸிஸ் மன்னர். அதற்கு அப்பெண், தான் ஏப்ரீஸின் மகளே தவிர, அமாஸிஸின் மகள் அல்லள் என்றும், தன்னை வெறொருவனின் மகள் என்று கருதவும் கூப்பிடவும் தன் மனம் இடந்தரவில்லை என்றும் கூறினாள். ஆகையால் அவள் கேம்பைஸிஸை நோக்கி, "ஐயா, பெருந்தகை அரசே! உங்களை அமாஸிஸ் எவ்வாறு ஏமாற்றி விட்டார் என்பது உங்களுக்குத் தெரியாது. என்னைத் தம் மகள் போல ஆடை அணிகளை அணிவித்து அனுப்பி வைத்தார் - உண்மையில் நான் அவர் மகள் அல்லள். நானோ ஏப்ரீஸ் என்பவர் மகள் ஆவேன். ஏப்ரீஸ் அவருடைய எசமானன்; அமாஸிஸீற்கு[3] எதிராக எகிப்தியர்களைக்[4] கலகம் விளைவிப்பதில் தலைமை தாங்கி நடத்தியதற்காக என் தந்தை ஏப்ரீஸ், அமாஸிஸால் கொல்லப் பட்டார். இதை நன்கு அறிந்து கொள்வீராக!" என்று கூறினாள். தன் தந்தையைக் கொன்றதற்காக அமாஸிஸைப் பழி வாங்க வேண்டுமென ஏப்ரீஸின் மகள் உறுதி பூண்டாள். இச்சூழ்ச்சியை அறிந்த கேம்பைஸிஸுக்கு,[5] உள்ளூறக் கோபம் பொங்கி எழுந்தது. இதையே முக்கிய மான காரணமாக ஏற்றுப் போருக்குத் தயாரானார்.

மற்றொரு காரணமும் சிலரால் கூறப்படுகிறது. கேம்பைஸிஸ் என்பவர் ஏப்ரீஸின் மகள் நிடெடிஸுக்குப் பிறந்தவர் என்றும், தன் கணவரைக் கொன்ற அமாஸிஸ் மீது பழிவாங்கத் தன் மகனைக் கொண்டே தீர்த்துக் கொள்ளுதல் மிகப் பொருத்தமானதே என்றும் கூறினர்.

---

1. Apries 2. Nitetis 3. Amasis 4. Egyptians 5. Cambyses

எது எவ்வாறாயினும், கேம்பைஸிஸ் அமாஸிஸால் ஏமாற்றப் பட்டார். அது ஒன்றே போருக்குப் போதுமான காரணமாயிற்று.

எகிப்தில்[1] நுழைய வேண்டுமாயின் பாலைவனத்தில் பயணம் செய்தாக வேண்டும். மூன்று நாள்கள் நீர் சிறிதும் இல்லாத பாலைவனத்தில் பயணமேற்க வேண்டும்.

சிரியா நாட்டைச் சார்ந்த பாலைவனப் பகுதியில்[2] நீருக்கு என்ன செய்தனர்? பினீசியா[3], கிரீஸ்[4] முதலிய நாடுகளிலிருந்து எகிப்தில் உள்ள மெம்பிஸ் நகரத்துக்கு[5] மது பானம் குடுவைகளில் நிரப்பப்பட்டு வந்த வண்ணம் இருந்தன. மதுவைப் பயன் படுத்திவிட்டு, அக் காலிக் குடிவைகளில் நைல் நதி நீரை[6] நிரப்பிச் சிரியன் பாலைவனப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தனர். அதன் காரணமாகத்தான், ஆயிரக்கணக்கான மதுக் குடுவைகள் மெம்பிஸ் நகரில் மதுவுடன் இறக்கப்பட்டாலும், காலியான குடுவை ஒன்றேனும் அந்நகரில் காணப்படவில்லை— காரணம் அவை நீர் நிரப்பப்பட்டு பாலைவனப்பகுதிக்கு அனுப்பப் பட்டு விட்டன. பின்னர் தான் பாரசீகர்கள்[7] அணை கட்டி நீரைத் தேக்கிப் பயன்படுத்தலாயினர்.

அரேபிய நாட்டு[8] அரசரும் கேம்பைஸிஸிற்கு[9] உதவி யளிக்க வாக்களித்தார். ஒட்டகத்தின்மீது நீர்ப் பைகளை ஏற்றி, போர் வீரர்களுக்குப் போதிய நீர் தரப்பட்டது.

கேம்பைஸிஸின் படையெடுப்பை எதிர்க்க, சம்மேனிடஸ்[10] அமாஸிஸின்[11] மகன்—நைல் நதிக்[12] கழிமுகத்தில் தம் இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டார். ஆனால், அப் படையெடுப்புத் தொடங்குவதற்கு முன்னமேயே அமாஸிஸ் இறந்து விட்டார். அவர் 44 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவரது உடல் சடலப் பாதுகாப்புச் செய்யப் பட்டு[13] தமக்கென ஏற்படுத்தப்பட்ட சமாதியில் சாயிஸ்[14] எனும் இடத்தில் உள்ள அத்தினே கோயிலில்[15] அடக்கம் செய்யப்பட்டது.

---

1. Egypt 2. Syrian Desert 3. Phoenicia 4. Greece
5. Memphis 6. Nile river 7. Persians 8. Arabian king
9. Cambyses 10. Psammanitus 11. Amasis 12. Nile Delta
13. Embalmed 14. Sais 15. Athenae Temple

அன்று வரை மழையே கண்டிராத பாலைவனத்தில மழை பெய்தது. எகிப்து மழையையே கண்டதில்லை. ஆனால் அன்று மட்டும் மழை பெய்தது.''

விளக்கவுரை :

கேம்பைஸிஸ் : சைரஸ்[1] அரசரின் மகனார்; பாரசீகத்தின்[2] அரசர்; அவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 529-522 ஆக 7 ஆண்டுகளே ஆண்டார். கி.மு. 525-ல் எகிப்தை வென்றார். சிரியாவில்[3] எக்படன[4] எனும் இடத்தில், தொடையில் கத்தியால் ஏற்பட்ட புண் காரணமாக நோய்கண்டு, கி.மு 525-ல் இறந்து விட்டார். மற்றும் பக்கம் 85 பார்க்கவும்.

சைரஸ் : இவர் அஸ்டியகெஸின்[5] மகன் ஆவார் இவர் வாழ்ந்து வந்த காலம் கி.மு. 579-529 அதாவது 50 ஆண்டுகள் ஆகும். ஆயினும் இவர் அரசாண்ட காலம் கி.மு. 558-529 அதாவது 29 ஆண்டுகள் ஆண்டார் மற்றும் பக்கம் 84, குறிப்பு-1 பார்க்கவும்.

ஏப்ரீஸ்[6] : இவர் அமாஸிஸிற்கு எதிராக எகிப்தியர்[7] களைக் கலகம் விளைவிக்கத் தலைமை தாங்கினார். அதை யறிந்த அமாஸிஸ் அத்தலைவரைக் கொன்று விட்டார். அவரு டைய மகளே நிடெடிஸ்.[8] அவளைத் தம் மகள் எனக் கூறிப் பாரசீக மன்னர் கேம்பைஸிஸிடம் அனுப்பி வைத்தார் அமாஸிஸ். அவள் அரசர் கேப்பைஸிஸிடம் உண்மையைக் கூறி, அதனால் பாரசீகர்களால்[9] எகிப்து[10] அழியக்காரணமானாள்.

சிரியா நாட்டைச் சார்ந்த பாலைவனப் பகுதி[11]

ஆப்பிரிக்காவின்[12] பாலைவனப் பகுதியின் ஒருபாகம் சிரியா நாட்டைச் சார்ந்தது. சிரியா நாடு ஆசியாமைனரில்[13] மேற்குப் பகுதியில் மத்தியதரைக் கடலை[14] ஒட்டியிருந்தது.

சம்மேனிடஸ்[15] : இவர் அமாஸிஸின்[16] மகன் ஆவார். பாரசீகப் படையெடுப்பினைத் தடுக்கப் பெரு முயற்சிகள் செய்தும், பலனில்லை. போரில் தோற்றுவிட்டார். இவர்

---

1. Cyrus 2.. Persia 3.Syria 4. Ecbatana 5. Astyages 6. Apries 7. Egyptians 8. Nitetis 9. Persians 10. Egypt 11. Desert Belonging to Syria 12. Africa 13. Asia Minor 14. Mediterranean Sea 15. Psammanitus 16. Amasis

6 மாதங்களே அரசாண்டார். கி.மு. 525-ல் போரில் தோற்றார். ஆட்சி செய்த ஆண்டும் கி.மு. 525. இவர் கி.மு. 523-ல் காலமானார்.

அமாஸிஸ் : இவர் எகிப்தின்[1] மன்னராக (கி.மு. 570-526) ஆட்சி செய்தார் அதாவது 44 ஆண்டுகள் ஆண்டார். இவர் ஆட்சியில் எகிப்து சுபிட்சத்துடன் இருந்தது. பாரசீகர்[2] எகிப்தின்மீது படையெடுத்துச் செல்வதன் முன்னமே கி.மு. 526-ல் காலமாகி விட்டார். அதன்பின் அவர் மகன் சம்மேனிடஸ் அரியணை ஏறி ஆறு மாதங்களே ஆட்சி செய்தார். (கி.மு. 525). பாரசீக அரசர் கேம்பைஸிஸினால்[3] தோல்வி யடைந்து விட்டார். அமாஸிஸ் காலத்தில் எகிப்தில் நல்ல ஆட்சி நடைபெற்றது. அமாஸிஸின் மகன் சம்மேனிடஸ் கி.மு. 523-ல் காலமாகி விட்டார்.

சாயிஸ்[4] : எகிப்தில் அத்தினே கோயில் இருந்த இடம். இங்குத் தான் அமாஸிஸின் உடல் சமாதி வைக்கப்பட்டது.

அத்தினே கோயில்[5] : ஆதன்ஸ் நகரில்[6] உள்ள கோயிலைப் போலவே, எகிப்திலும் ஒரு கோயில் சாயிஸ் எனும் இடத்தில் கட்டப் பட்டது. அக்கோயிலுக்கு அமாஸிஸ் அரசர் பல பரிசுகள் அன்பளிப்பாக அளித்துள்ளார். பெரிய அளவில் சிலைகள், வெள்ளிப் பாளங்கள், ஸ்பிங்குகள்[7] ஆகியவற்றையும் கொடுத்துள்ளார்.

மற்றும் பக்கம் 232, குறிப்பு - 6 பார்க்கவும்.

ஒட்டகம்[8] : இதுவே பாலைவனக் கப்பல் என்று வழங்கப் படும். இதன் முதுகின்மீது தோற் பைகளில் நீரை நிரப்பி ஏற்றி நீரில்லாப் பகுதிகளில் செல்வர்.

---

1. Egypt 2. Persians 3. Cambyses 4. Sais 5. Athenae Temple 6 Athens 7. Sphinx 8. Camel

2. சம்மேனிடஸ்[1]

பாரசீகர்கள் பாலைவனத்தைக் கடந்து, எகிப்தியச் சேனை[2] இருந்த இடத்துக்கருகில் தம் நிலையை ஏற்படுத்திக் கொண்டனர்; போர் செய்யத் தம்மை தயாரித்துக் கொண்டனர். போர் தொடங்குவதற்கு முன்னர், எகிப்திய சேனையில் பணி புரிந்து வரும் கிரேக்க நாட்டு வீரர்களும்,[3] காரிய நாட்டு வீரர்களும்,[4] எகிப்துக்கு[5] எதிராக ஓர் அந்நிய நாட்டுப்படையெடுப்பை ஊக்குவித்ததற்காகப் பேன்ஸ்[6]என்பவரைப் பழி வாங்கத் தீர்மானித்தனர். அவர் போர் முகாமில் இருந்த பொழுது, அவருடைய மகன்கள் இருவரையும் வீட்டிலிருந்து இழுத்து வந்து, போர் முகாமில் பேன்ஸ் இருக்குமிடத்துக்கு அழைத்து வந்து, அவர் எதிரே வாயகன்ற பாத்திரத்தை வைத்து, அவர் மகன்கள் ஒவ்வொருவர் தலையையும், அப்பாத்திரத்தில் அவர்கள் இரத்தம் விழுமாறு வெட்டினார்கள். இருமகன்களும் இவ்வாறு கொல்லப்பட்டு, பேன்ஸ் பழி வாங்கப் பட்டார். உடன் அந்த இரத்தத்தின் மீது மதுவையும் நீரையும் ஊற்றி, அந்தச் சேனையிலிருந்த ஒவ்வோர் ஆளும்- பணியாள் உள் பட.. யாவரும்- அந்த இரத்த பானத்தைப் பருகினர். அது முடிந்ததும் போர் துவங்கிற்று. மிகுந்த போராட்டத்துக்குப் பிறகு, பலத்த ஆள், பொருள் இழப்பிற்குப் பிறகு எகிப்தியச் சேனை பின் வாங்க நேர்ந்தது.

இந்தப் போர் நடந்த இடத்தை நான் பார்க்க நேர்ந்தது. குவியல் குவியலாக எலும்புகள் காணப்பட்டன. இறந்த

---

1. Psammanitus 2. Egyptian Army 3. Greeks 4. Carian Army 5. Egypt 6. Phanes

பாரசீகர்களின் எலும்புக் குவியலும், எகிப்தியச் சேனையின் எலும்புக் குவியலும் தனித்தனியாகக் காணப்பட்டன. அந்த எலும்புகளில் பாரசீகர்களின்[1] எலும்புகளைத் தொட்ட பொழுது, தொட்டவுடன் அவ்வெலும்பு நொறுங்கித் தூளாகி விட்டது; அதே பொழுது எகிப்தியர்களின் கபால எலும்பைத்[2] தொட்ட பொழுது, அது மிகவும் கடினமாக இருந்தது. அதை உடைக்க வேண்டுமாயின், ஒரு கல்லைக் கொண்டு தான் உடைக்க வேண்டும். அவ்வெலும்பு அத்துணைக் கடினமாக இருந்தது. அதற்குக் காரணம் யாதெனவினவிய பொழுது, அங்குள்ளவர் கூறினர்: எகிப்தியர்கள் சிறு குழந்தையாயிருப்பது முதல் தங்கள் தலை மயிரை மழித்துக் கொண்டு விடுவர். அதனால் தலைக் குள்ளிருக்கும் கபால எலும்பு[3] சூரிய கிரணத்தால் கடினமாகி இறுகிவிடுகிறது. அதன் காரணமாக, எந்த எகிப்தியருக்கும்[4] தலையில் வழுக்கையோ,[5] சொட்டையோ ஏற்படுவது கிடையாது. உலகம் முழுவதும் தலை வழுக்கை காணப்பட்டாலும், எகிப்தில் எகிப்தியரிடத்தில் அத்தகைய வழுக்கையைக் காண முடியாது. அதற்கு மாறாகப் பாரசீகர் எப்பொழுதும் தலைக்குத் தலைக் கவசத்தை அணிந்து வந்ததால், தலைமீது சூரிய கிரணம் பட வசதியில்லாமல், தலையில் வழுக்கை தோன்றத் தொடங்கிற்று. பாரசீகர்களுள் தலை வழுக்கையுடையவர்களே அதிகமாக உள்ளனர்.

பாரசீகச் சேனை எகிப்தின் தலைநகரமான மெம்பிஸ்[6] நகரத்தை முற்றுகையிட்டன. சில நாள்களில் மெம்பிஸ் நகரம் விழுந்தது. அதன் அருகில் இருந்த லிபியர்களும்[7], எகிப்திற்கு நேர்ந்த கதியைக் கண்டு, கத்தியின்றி, இரத்த மின்றி, போரின்றிச் சரணடைந்தனர். கேம்பைஸிஸ்[8] லிபியர் அனுப்பிய பரிசுகளை[9] மனமுவந்து ஏற்றுக் கொண்டார். அதே பொழுது சைரீனில்[10] இருந்து வந்த பரிசை இகழ்ந்து பேசினார். காரணம், அவர்கள் அனுப்பிய தொகை மிகச் சிறியது. அதன் பெறுமானம் 500 மினே[11] வெள்ளி நாணயமே. அதாவது ஏறக் குறைய 2000 பவுன் மதிப்பு

---

1. Persians 2. Egyptian's skull bone 3. Skull bone 4. Egyptians 5. Baldness 6. Memphis 7. Libyans 8. Cambyses 9. Prizes 10. Cyrene 11. Minae

மட்டுமே. இருப்பினும், அதைத் தம் கைகளில் பெற்று, தம் சேனை வீரர்களிடம் வீசியெறிந்தார்.

சம்மேனிடஸ்[1] அரியணை ஏறி ஆறு மாதங்களே ஆகியிருக்கும். அவரை மான பங்கம் செய்யப் பாரசீகரும், அரசர் கேம்பைஸிஸுும் உறுதி பூண்டு, அதன்படி அவர் மகளை, மற்றப் பெண்களுடன் ஆற்றுக்கனுப்பி நீர் கொணருமாறு பணித்தார். இக் காட்சியைச் சம்மேனிடஸ் பார்த்து, வருத்தம் ஏதுமின்றி வாளாவிருந்தார். ஆனால் அவளுடன் இருந்த மற்றப் பெண்களின் தந்தையர்கள் சம்மேனிடஸ் இருக்கும் இடம் வந்து ஓ வென அலறினர். அடுத்ததாக, சம்மேனிடஸின் மகன் வாயில் துணி சுற்றப் பட்டு, கழுத்தில் ஒரு கயிற்றுடன் மற்ற எகிப்திய வாலிபர் களுடன்[2], சம்மேனிடஸ் முன்பாகக் கொலை செய்யப்பட அழைத்துச் செல்லப்பட்டான். அவர்களைத் தூக்கிலிடும் காரணமாகவும் இருக்கக் கூடும். அதைப் பார்த்த சம்மேனிடஸ், தலையைக் குனிந்து கொண்டாரே தவிர, ஒரு சொல்லேனும் கூறவில்லை. மற்ற தந்தையர்கள் அழுது புரண்டுத் தத்தம் தலைகள்மீது அடித்துக் கொண்டு ஓல மிட்ட வண்ணம் இருந்தனர்.

அப்பொழுது சம்மேனிடஸிற்கு எதிராக, தம்முடன் ஒன்றாக உணவருந்திய கனவான் ஒருவர், தாம் சம்பாதித்த பொருள் யாவற்றையும் இழந்து, வறியவராய், சம்மேனிடஸ் எதிரில் செல்லலானார். ஆனால், தம் மகளுக்கும் மகனுக்கும் நேர்ந்த அவல கதியைப் பார்த்து நினைத்து-ஏதும் வருத்தம் தெரிவிக்காத அவர்- அவ் வயோதிக வறியவரைக்[3] கண்ட பொழுது, தம் தலைமீது அடித்துக் கொண்டு 'கோ' வெனப் புலம்பினார். இந்நிகழ்ச்சியைக் கேம்பைஸிஸிற்கு[4] அறிவித் தனர். அவரும் அதற்கான காரணத்தை வினவ ஆள்களை அனுப்பி வைத்தார். அதற்குச் சம்மேனிடஸ், "சைரஸின்[5] பெருமகனார் கேம்பைஸிஸ் அவர்களே! என் துன்பங்கள் கண்ணீருக்கு அப்பாற் பட்டனவே; ஆனால் பொருளிழந்து, வறுமையடைந்து, வயோதிக நிலையில் கேட்பாரற்று என்

---

1. Psammanitus 2. Egyptian lads 3. Aged pauper
4. Cambyses 5. Cyrus

நண்பர் இருந்த அவல நிலையைக் கண்டு நான் அழாமல்-கண்ணீர் உகுக்காமல்— இருக்க முடியவில்லை. வயோதிகத்தில் வறுமையடைந்து காணப்படுவது யாவற்றிலும் கொடுமையானதே,'' என்று பதிலிறுத்தார்.

கேம்பைஸிஸ் இப்பதிலைக் கேட்டு மனம் உருகினார். உடன் தன் ஆள்களிடம், சம்மேனிடஸின் மகனைக் கொல்ல வேண்டாம் என உத்திரவிட்டார். ஆனால், அதற்குள் அம் மகன் கொல்லப்பட்டு விட்டான். இருப்பினும் சம்மேனிடஸ், எல்லா வசதிகளுடன் கேம்பைஸிஸுடன் இருக்க அனுமதிக்கப்பட்டார்.

சம்மேனிடஸ் உண்மையான அன்புடன் நடந்து கொண்டிருந்தால், அவருக்கு அவரது நாட்டைத் திருப்பிக் கொடுத்து அவரையே அரசராக இருக்கவும் அனுமதித்திருப்பார், அரசர் கேம்பைஸிஸ். இவ்வாறு செய்வது பாரசீகர்களின்[1] பரம்பரைக் குணமாகும். ஆனால், சம்மேனிடஸ், தம் தலைவர் கேம்பைஸிஸிற்கு எதிராகப் பாரசீகர்களைக் கொல்லச் சதித் திட்டம் ஒன்று தயாரித்தது கேம்பைஸிஸுக்குத் தெரிந்து விட்டது. உடன் அவர் ஓர் எருதை வெட்டி, அதன் இரத்தத்தை ஒரு கிண்ணத்தில் பிடித்து, அந்த இரத்தத்தைப் பருகுமாறு சம்மேனிடஸுக்குக் கட்டளையிட்டார். சம்மேனிடஸின் இறுதிக் காலம் அத்துடன் முடிந்து விட்டது. வேறு எந்த நன்றியைக் கொன்றாலும் பாரசீகர்கள் பொறுத்துக் கொள்வர். ஆனால் செய்யந் நன்றி கொன்ற மகனை அழித்தே தீர்வர். சம்மேனிடஸ் அத்தகைய சீற்றத்துக்குப் பலியானார்.''

விளக்கவுரை :

சம்மேனிடஸ்[2]: இவர் அமாஸிஸின்[3] மகன். ஆறு மாத காலமே ஆண்டார் (கி.மு. 525). பின்னர் கேம்பைஸிஸின் அவையில் எல்லா வசதிகளுடன் இருந்தார். ஆனால் கேம்பைஸிஸிற்கு எதிராகச் சதித்திட்டத்தில் ஈடுபட்டதால், அவர் கி.மு. 523-ல் எருதின் இரத்தத்தைப் பருகுமாறு செய்து இறந்தார். அவர் கேம்பைஸிஸின் பேரவையில் 2 ஆண்டுகளே இருந்தார்.

---

1. Persians 2. Psammanitus 3. Amasis

பேன்ஸ்[1]: இவர் எகிப்து நாட்டைப்[2] பாரசீகருக்குக்[3] காட்டிக் கொடுத்தார். கேம்பைஸிஸை எகிப்தின்மீது படையெடுக்கச் சதி செய்தார். இதற்கு ஈடாக, அவர் மகன்கள் இருவரும் தலைகள் அறுக்கப்பட்டு இறந்தனர்.

தலைவழுக்கை[4]: எகிப்தியர் தலை மயிரை மழித்துக்கொள்வதால், சூரிய கிரணம்பட்டு, கபால எலும்பு உறுதிப்படுகிறது என்றும், அவ்வாறு தலைமீது சூரிய கிரணம் படாமல் தலையணியணிவதால், பாரசீகர்களின் கபால எலும்பு உறுதியாயிருப்பதில்லை என்றும் ஹிராடடஸ் கூறுகிறார்.

இன்றைக்கும் கைகால்கள் உறுதியில்லாத—சூம்பிய நிலையிலுள்ள—குழந்தைகளுக்கு ஆலிவ் எண்ணெய்த் தடவிச் சூரிய ஒளி படும்படி விடுவர். அதனால் எலும்புகள் வலுவடைகின்றன என்று மருத்துவர் கூறுகின்றனர்.

மற்றும் தமிழ் நாட்டில் குழந்தைகளுக்கு ஓராண்டிற்குள் தலை மொட்டையடித்தல் பிரார்த்தனையாகச் செயல் படுத்தப் படுகிறது. இக்கருத்தும், "மொட்டையடித்தால் கட்டையாகும்" என்ற தமிழ் நாட்டுப் பழமொழியை ஒட்டியே ஏற்பட்டதாகும்.

லிபியர்கள்[5]: லிபியா நாட்டினர். முற்காலத்தில் ஆப்பிரிக்கா, முழுவதும் லிபியா என்றே வழங்கப்பட்டது. லிபியா ஆப்பிரிக்காவில் நைல் நதிக்கு[6] மேற்கே உள்ளது.

சைரீன்[7]: வட ஆப்பிரிக்காவில்[8] நிர்மாணிக்கப்பட்ட கிரேக்க நகரங்களுள் முக்கியமானதாகும். இந்நகரம் வட ஆப்பிரிக்காவில் அலெக்சாந்திரியாவுக்கும்[9], கார்த்தேஜுக்கும்[10] இடையே இருந்தது. இது பாட்டஸ்[11] என்பவரால் கி மு. 631-ல் நிர்மாணிக்கப்பட்டது. அவரும் அவருடைய சந்ததியார்களும் எட்டுத் தலைமுறைகளாகச் சைரீன் பகுதியை ஆண்டு வந்தனர். இப்பகுதி கடற்கரையிலிருந்து உள்ளே 10 மைல் தள்ளியிருந்தது. பின்னர், எகிப்தியத் தாலமிகளின்[12] ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதன் அழிபாடுகள் மிகப் பரந்து காணப்படுகின்றன. சைரீன் எனும் பகுதியே, காலிமேக்கஸ்[13], எரடாஸ்தெனிஸ்[14], அரிஸ்

---

1. Phanes 2. Egypt 3. Persians 4. Baldness 5. Libyans 6. Nile 7. Cyrene 8. North Africa 9. Alexandria 10. Carthage 11. Battus 12. Egyptian Ptolemies 13. Callimachus 14. Eratosthenes

டிப்பஸ்[1] முதலான புகழ் பெற்ற மக்கள் விளங்கிய இடம் ஆகும். இதன் முதற்பெயர் பெண்டபாலிஸ்[2] அதாவது ஐந்து நகரங்கள் கொண்ட அமைப்பாகும். அவையாவன: சைரீன், அப்பொலோனியா[3], தாலமெய்[4], ஆர்ஸினோ[5], பெரெனிஸ்[6].

மெம்பிஸ்[7]: எகிப்தின்[8] தலைநகரம். பிரமிடுகள்[9] கட்டப்பட்ட இடம். நைல் நதிக்கு[10] மேற்குக் கரையில் விளங்கிற்று:

நண்பரைக் கண்டு வருந்துதல்: தமக்கு எதுவரினும் வருக; ஆனால் தம்முடன் நன்றாக வசதியுடன் இருந்த ஒருவரை அவர் வறுமையுற்ற நிலையில் காண்பது, கழிவிரக்கத்தை உண்டாக்கி விடும். அதுதான் நட்பின் இலக்கணம்.

திருவள்ளுவர் கூறுகிறார்:

“ அழிவி னவை நீக்கி ஆறுய்த் தழிவின் கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.”

—(திருக்குறள்: 787)

ஆங்கிலப் பழமொழி கூறுகிறது:

“ True Friendship is to share His sorrow with Thine
And make Your joy His joy.”

—(Proverbs)

செய்நன்றி கொல்லுதல்: எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டு. ஆனால் செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை. இதையே தான் திருக்குறள் வலியுறுத்துகிறது:

“எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”

—(திருக்குறள்: 110)

செய்ந்நன்றி கொன்ற சம்மேனிடஸ்[11], கேம்பைஸிஸின்[12] சீற்றத்துக்கு ஆளாகி, கொல்லப்பட்டார்.

---

1. Aristippus 2. Pentapolis 3. Appolonio 4. Ptolemais 5. Arsinoe 6. Berenice 7. Memphis 8. Egypt 9. Pyramids 10. Nile 11. Psammanitus 12. Cambyses

3. கேம்பைஸிஸின் அட்டூழியங்களும் முடிவும்

''அடுத்து, கேம்பைஸிஸ்[1] கார்த்தேஜினியர்[2] மீதும், அம்மோனியர்கள் மீதும்[3], நீண்ட ஆயுள் பெற்று வாழும் எதியோபியர்கள்[4] மீதும் படையெடுத்துச் சென்றார். தீபே[5] நகரத்தில் முகாமிட்டு, 40,000 போர் வீரர்களையனுப்பி, அம்மோனியர்களை வெற்றி கொள்ளக் கட்டளை பிறப்பித்தார். பிறகு, எதியோபியாவை வெல்லப் படையெடுத்தார். ஆனால், அவர்கள் நாட்டினுள் செல்லச் செல்ல உணவு ஏதும் கிடைக்கவில்லை. தங்கள் சேனையிலுள்ள 10 பேருக்கு ஒருவர் வீதம் வெட்டப்பட்டு உணவாகக் கொள்ளப்பட்டனர். இதையறிந்த கேம்பைஸிஸ் தம் சேனையைத் திரும்பி வந்து விடுமாறு கட்டளை அனுப்பினார்.

எகிப்தில்[6] ஆபிஸ்[7] அல்லது இபாபஸ்[8] என்று வழங்கப்படுவது ஒரு தெய்வப் பசுவின்[9] கன்று. அது இயற்கையாகச் செனை பெறாது. வானத்திலிருந்து ஒரு மின்னல் வந்து தாக்கினதும், அக் கன்னிப் பசு கருவுறுவதாக எகிப்தியர் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். கேம்பைஸிஸ் அத்தெய்வப் பசுவின் வரலாற்றை நம்ப மறுத்து, அதைக் கொணருமாறு செய்து, அதன்மீது தம் ஈட்டியைப் பாய்ச்சினார். ஆனால் அந்த ஈட்டி, அக்கன்றைக் கொல்லாமல், அதன் கால் தொடையில் பாய்ந்து அதை முடமாக்கிச் சென்றது. கேம்பைஸிஸ் அதற்கு வெகு மகிழ்ச்சியடைந்தார். எகிப்தியக் குருமார்கள்[10] இதையறிந்தவுடன், அக்கன்று இருந்த

---

1. Cambyses 2. Carthagenians 3. Ammonians 4. Ethiopians 5. Thebes 6. Egypt 7. Apis 8. Epaphus 9. Sacred calf or Divine calf 10. Egyptian priests

இடத்தை நோக்கி விரைந்து சென்று பார்க்க, அது இறந்து கிடந்தது. அவ் இறந்த கன்றை எடுத்துத் தக்க மரியாதை யுடனும், சடங்குகளுடனும், கேம்பைஸிஸிற்குத் தெரியா மலேயே புதைத்து விட்டனர்.

கேம்பைஸிஸ், மெம்பிஸ்[1] நகரை விட்டு, சாயிஸ்[2] நகரை அடைந்தார். அங்குப் போனவுடன் என்ன செய்ய வேண்டும் என முன் கூட்டியே திட்டமிட்டுச் சென்றார். அமாஸிஸின் அரண்மனைக்குச் சென்றதும், அவரது சடலத் தைச் சமாதியறையிலிருந்து வெளியே எடுத்துப் போட்டார். அச் சடலத்தை எவ்வளவு இழிவு படுத்த முடியுமோ, அவ் வளவு இழிவு படுத்தி விட்டார். அதைச் சாட்டை கொண்டு அடித்தார்; ஆணிகள் கொண்டு குத்தினார், அதன் மீதுள்ள ரோமங்களை நீக்கினார். அவ்வுடல் பாதுகாப்புச் செய்யப் பட்டதால்[3], எவ்வளவு ஓங்கி அடித்தும் அது உடைகிற வழியாயில்லை. இறுதியில் அதைக் கொளுத்தி விடச் செய்தார். நெருப்பைப் பாரசீகர்கள்[4] கடவுளாகக் கருதினர். அதன் காரணமாக, அவர்கள் பிணத்தை எரிப்பதில்லை. இக் கொள்கைக்கு முற்றிலும் மாறாக, அமாஸிஸின்[5] சடலத்தை எரித்தார். இந்த வழக்கம் எகிப்தியரிடம்[6] கிடையாது. சடலத்தை எந்த ஒரு விலங்கோ அல்லது புறாக் களோ உண்ணக் கூடாது என்பது எகிப்திய நாட்டுச் சட்டம். அதன் காரணமாகத்தான், சடலங்கள் பாதுகாக்கப் பட்டு, பார்வைக்கு வைக்கப் படுகின்றன.

ஆனால் எகிப்தியர் இதை மறுக்கின்றனர். பாரசீக மன்னர்[7], சமாதியிலிருந்து எடுத்த உடல் அமாஸிஸின் உடல் அன்று என்றும், அது அவர் அரிய பணியாளரின் சடலம் என்றும் கூறப்பட்டது. அமாஸிஸே, தம்மை வேறோர் இடத்தில் புதைக்குமாறு முன்கூட்டியே கட்டளையிட்டார் என்றும், தாம் இறப்பதற்கு முன் அத்தகைய எச்சரிக்கையை விடுத்தார் என்றும் கூறப்படுகிறது. ஆனால், நான் இக் கதையை நம்பத் தயாராக இல்லை.

---

1 Memphis 2. Sais 3. Embalmed 4. Persians 5. Amasis 6. Egyptians 7. Persian King

கேம்பைஸிஸிற்குப்[1] புத்தி மாறாட்டம் ஏற்பட்டு விட்டது என்று எகிப்தியர் கூறினர். கேம்பைஸிஸ் தம் கூடப் பிறந்த சகோதரனான ஸ்மெர்டிஸ்[2] என்பவரைக் கொன்று விட்டார். அடுத்தது, தம் தங்கையை— கூடப் பிறந்த சகோதரியை— தம்முடன் எகிப்திற்குக் கூட வந்தவளைத்—திருமணம் செய்து கொள்ள விழைந்தார். தம் சகோதரிமீது காதல் கொண்டு, அவளை மணக்க உத்தேசித்து, அரச நீதிபதிகளை, அவ்வாறு செய்து கொள்ள ஏதாகிலும் சட்டம் உள்ளதா, அனுமதிக்கிறதா என்று கேட்டார் கேம்பைஸிஸ். அவர்கள் இருதலைக் கொள்ளி எறும்பு போல் ஏதும் பதில் சொல்ல முடியாமல் தவித்தனர். சட்டம் இருக்கிறது என்றால், நாட்டு மக்கள் தங்களைக் கொன்று போட்டு விடுவார்கள் என்றும், இல்லை என்றால் அரசன் கொன்று போட்டு விடுவான் என்றும் பயந்துநின்றனர். அதற்காக அவர்கள் ஒரு யுக்தி செய்தனர்: "அரசே நாட்டில் உறுதியாக ஒரு சட்டம் உள்ளது. அதுதான் அரசர் தம் இட்டம் போல எதுவாயினும் செய்யலாம்," என்று கூறினர். இதைச் சொல்லி அரசர் எப்படியாயினும் செய்து விட்டுப் போகட்டும் என்று விட்டு விட்டனர். அரசரும் தம்முடன் பிறந்த சகோதரியை மணந்து கொண்டார். இது அந்த நாட்டில் அதுகாறும் கண்டிராத புது ஏற்பாடு. அச் சகோதரியைத்தான் தன்னுடன் மனைவியாக எகிப்திற்கு[3] அழைத்து வந்திருந்தார். ஏதோ, நாய்க்குட்டிச் சண்டை ஒன்றில் அவள் ஏதோ பேசி விட்டாள் என்று குற்றஞ்சாட்டி, அவளைக் கொன்று விட்டார். தம் மனைவியின் தானத்திலிருந்த சகோதரி வெட்டப்பட்டு இறந்தாள்.

பிரிக்ஸாஸ்பஸ்[4], கேம்பைஸிஸ் பேரவையில் இருக்கும் ஒரு கனவான். அவரிடம், "என்னைச் சிலர் பைத்தியம், பித்தன் என்றெல்லாம் கூறுகிறார்களே, அது உண்மையா?" என்று காம்பைஸிஸ் கேட்டார். அவர் அதற்கு எந்த விடையும் கூறவில்லை. அவர் விடை ஏதும் கூறவில்லை என்பதற்காகப் பிரிக்ஸாஸ்பஸின் மகனை வர

---

1. Cambyses 2. Smerdis 3. Egypt 4. Prexaspes

வழைத்து, "பிரிக்ஸாஸ்பஸ் நண்பனே, இதோ இந்த அம்பை[1] உன் மகன்மீது எய்யப்போகிறேன். இந்த அம்பு, உன் மகன் இதயத்தில் சரியாகப்பாய்ந்ததென்றால், நான் பைத்தியம் அல்லன்; ஆனால் அது அவன் உடம்பில் வேறெங்காகிலும் பாய்ந்தால், அப்பொழுது என்னைப் பைத்தியம் என்று அறிவாய்'', என்று கூறி விட்டு, உடன் தம் வில்லில் அம்பைத் தொடுத்து நாணேற்றி, அம் மகனின் மார்புமீது பாயுமாறு விட்டார். அவ் அம்பு அச் சிறுவன் மார்பைத் துளைத்துச் சென்றது. அவ் அம்பு அச்சிறுவன் இதயத்தில் பாய்ந்ததா என்பதையறிய, அவனது உடலை வெட்டி, இதயத்தைச் சோதனை போடச் செய்தார். அவர் விட்ட அம்பு இதயத்தின் ஊடே பாய்ந்து வெளி வந்திருந்தது. "இதோ பார்த்தாயா! இவ் அம்பு உன் மகனின் இதயத்தில் பாய்ந்து வெளி வந்துள்ளது. நான் பைத்தியமாக இருந்தால், எனக்குக் குறி வைத்து அடிக்கத் தெரியுமா?" என்று கேட்டார். அச் சிறுவனின் தந்தையின் கண்களில் நீர்ப்பெருக, வாயடைத்துப் போய் ஏதும் பேசாமல் வாளாவிருந்து விட்டார்.

தம் நண்பர் குரோஸஸை[2] நோக்கி, "ஐயா, தாங்கள் என் தந்தை சைரஸுக்குப் புத்திமதி கூறுவதாகக் கூறி, அவரைக் கெடுத்தீர். இப்பொழுதோ எனக்குப் புத்திமதி கூறுகிறீர்? உம்மைக் கொன்றொழிப்பேன்," என்று வில்லை எடுத்து நாணேற்றப் போனார். அக்கணமே குரோஸஸ் ஓடி மறைந்து விட்டார். ஒரு நாள் கழித்துக் "குரோஸஸ் எங்கே?" என்று கேட்க அவரைக் கேம்பைஸிஸிடம் கொணர்ந்து நிறுத்தினர். கேம்பைஸிஸ்[3] அவரை ஏற இறங்கப் பார்த்து வாளாவிருந்து விட்டார்.

மற்றும் கேம்பைஸிஸ் அங்குள்ள ஹெபீஸ்டஸ்[4] கோயிலுக்குச் சென்று, அங்கிருந்த தெய்வப் படிமங்களைச் சின்ன பின்னப்படுத்தினார்.

கேம்பைஸிஸ் இறுதியாகச் சிரியாவின்[5] நகரமான எக்படனவில்[6] இருந்தார். தம்மைச் சூழ்ந்திருந்தவர்களை

---

1. Arrow 2. Croesus 3. Cambyses 4. Hephaestus 5. Syria 6. Ecbatana

நோக்கி, "இந்த அரசை மிடியர்களிடம்[1] ஒப்படைக்காதீர்கள். ஸ்மெர்டிஸ்[2] என்ற பெயரால் இங்கு ஓர் ஆள் அனுப்பப் பட்டுள்ளார். அவரை நன்கு விசாரியுங்கள்," என்றார்.

அவர்களும் அந்த ஆளை நன்கு விசாரித்த பொழுது, அவன், "என்னை அனுப்பியவர்கள் மேஜி[3] இனத்தவர்— இரண்டு மேஜிகள்— அதில் ஒருவர் ஸ்மெர்டிஸ் என்ற பெயரை உடையவர்" என்றான்.

"ஐயோ, கெட்டேன், என் தம்பியை வீணாகக் கொன்று விட்டதன் பலன், அவன் பெயரால் மேஜி இனத்தவர் அரசைக் கைப்பற்றியுள்ளனர்," என்று கூறி, குதிரை மேலேறிச் சென்று உடன் அவ்விரு மேஜிகளையும் ஒழிக்கத் தம் வாளை உறையிலிருந்து உருவினார்—மிக வேகமாக. அவ்வாளின் உறை நழுவி, அவ்வாளின் கூர்முனை அவரது தொடையைத் துளைத்தது. அப்புண்ணால் இனி உயிர் பிழைப்பது கடினம் என்று தெரிந்தது. அந்த வாள் அவரது தொடையைத துளைத்த இடம்— அந்த ஆபிஸ்[4] கன்றுக் குட்டியின் தொடையில் அவர் முன்னர் எய்திய ஈட்டி எந்த இடத்தில் பாய்ந்ததோ, அதே இடத்தில் இந்த வாளும் அவரது தொடையைத் துளைத்துப் புண்ணாக்கிற்று. அப் புண் எந்த ஊரில் அவருக்கு ஏற்பட்டது என்று, தாம் இருக்கும் ஊரை வினவ, அவ் ஊர் எக்படன என்று பதில் கிடைத்தது. "இங்கேதான் நான் மடிய வேண்டும் என்று விதி கட்டளையிட்டுள்ளது," என்று கூறி, கேம்பைஸிஸ் மிகவும் மனம் நொந்து கண்ணீர் விட்டுக் கதறினார். பாரசீக மக்கள்[5]— வீரர்கள்—தங்கள் அரசர் கண்ணீருடன் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணச் சகிக்காமல், தங்கள் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு கோவென அழுது ஓலமிட்டனர். சிறிது நேரத்தில் கேம்பைஸிஸின் தொடையில் மரத்துப்போனது போன்ற ஓர் உணர்ச்சி தோன்றிற்று; உடல் சில்லிட்டது. ஆம்! கேம்பைஸிஸ் இறந்து விட்டார்—அவர் ஏழு ஆண்டுகள் 5 மாதங்கள் அரசாட்சி

1. Medes 2. Smerdis 3. Magi 4. Apis 5. Persians

செய்தார். அவருக்கு குழந்தைகள் இல்லை; ஆணும் இல்லை; பெண்ணும் இல்லை.

கேம்பைஸிஸ்[1] அரியணையை அபகரித்த ஸ்மெர்டிஸ் மேகஸ்,[2] ஏழு மாதங்கள் அப்பீடத்தில் அமர்ந்து ஆட்சி செய்தார். அதன் பிறகு ஸ்மெர்டிஸ் மேகஸும், அவருடன் இருந்த மற்றொரு மேஜி இனத்தவரும் ஒரு சதி திட்டத்தால் கொல்லப்பட்டனர். அடுத்து, டாரியஸ்[3], ஹைஸ்டாஸ் பஸின்[4] மகன், பாரசீக மன்னராக[5] அரியணையில் அமர்ந்தார்.''

விளக்கவுரை:

கார்த்தேஜினியர்[6]: கார்த்தேஜ்[7] எனும் குடியிருப்பு பினீசியர்களால்[8] வட ஆப்பிரிக்காவில்[9], மத்திய தரைக்கடலை[10] யொட்டி ஏற்படுத்தப்பட்டது. ரோமுலஸ்[11] என்பவரால் ரோம்[12] நிர்மாணிக்கப்படுவதற்குச் (கி.மு. 753) சரியாக 100 ஆண்டுகளுக்கு முன் அதாவது கி. மு. 853-ல் கார்த்தேஜ் குடியிருப்பு நிர்மாணிக்கப்பட்டது. அதன் முதல் பெயர் போஸ்ரா[13] என்று வழங்கப்பட்டது. போஸ்ரா என்றால் கோட்டை அல்லது அரண் என்பது பொருளாகும்.


மற்றும் பினீசியர்கள் கடலைக் கடக்கப் பரிசில் பயன்படுத்தினர். அது தென்னை, பனை மரங்களால் ஆனது. பரிசில் சென்று புதிய குடியிருப்பை ஏற்படுத்திய காரணத்தால் அந்நகரம் போர்ஸா[14] என்று வழங்கப்பட்டது. பரிசு என்ற சொல்லே போர்ஸா என்று பினீசியமொழியில் வழங்கப்பட்டது. அதுவே போஸ்ரா என்று மருவி, கோட்டையையும் அரணையும் குறிப்பிடுவதாயிற்று.

ஆக போஸ்ரா, போர்ஸா இவற்றுக்குத் தமிழ் வேர்ச்சொல் பரிசு—பரிசல் என்பதே. பரிசல் என்றால் தெப்பம், ஓடம் என்பது பொருள். பரிசு—சிற்றோடம்.

---

1. Cambyses 2. Smerdis Magus 3. Darius 4. Hystaspes 5. Persian King 6. Carthagenians 7. Carthage 8. Phoenicians 9. North Africa 10. Mediterranean Sea 11. Romulus 12. Rome 13. Bosra 14. Borsa

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பினீசிய மக்களின் நாணயம்[1] ஒன்றில் படகு இருப்பதையும், அது கேரள, தமிழ்நாட்டுப் படகையும்[2], கட்டு மரத்தையும் ஒத்திருக்கிறது என்பதையும்,



பினீசியர்களின் படகுச் சின்னம் பொறித்த நாணயம்
(கி. மு. 6ஆம் நூற்றாண்டு)

அதை ஒரு தமிழன் தலைப்பாகையுடன் உட்கார்ந்து துடுப்பால் தள்ளுவதையும், பின்னால் சூலம்[3] போன்ற சின்னம் ஒன்று மாட்டப்பட்டிருப்பதையும் கண்டு மகிழலாம். இந் நாணயமே, அன்று தமிழர் தமிழ் நாட்டிலிருந்து கடல் கடந்து சென்று - பனையேறிகளே—பினீசியர்களாகி, படகைப் பயன் படுத்திப் பல குடியேற்றங்களை அமைத்தனர் என்பதை நன்கு தெளிவுறுத்துகிறது. இந்நாணயம், கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் புழக்கத்தில் இருந்த பினீசிய நாணயமாகும்.

அவர்களின் தண்டனையளிக்கும் விதம் சிலுவையில் ஆணி கொண்டு அறைதல் ஆகும். சிலுவை என்பது ஒரு நீண்ட மரப் பலகை. பியூனிக் யுத்தங்கள்[4] மூன்று நடைபெற்றன. அவை ரோமானிய மக்களுக்கும்[5] கார்த்தேஜிய மக்களுக்கும்[6] ஏற்பட்ட போராகும். அவற்றுள் மூன்றாவது போரில் (கி. மு. 146) கார்த்தேஜ்[7] அழிக்கப்பட்டு விட்டது. பின்னர் ஜூலியஸ் சீஸர்[8] காலத்திலும் (கி. மு. 100—44), அகஸ்டஸ் சீஸர்[9] காலத்திலும் (கி. மு. 63—கி. பி. 14) அது மீண்டும் வலுவடைந்து குடியேற்றம் மறுபடியும் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால், கி. பி. 698-ல் இறுதியாக, அராபியர்களால்[10] உருத் தெரியாமல் அழிக்கப்பட்டு, அத்துடன் அந்நகரம் மறைந்தே விட்டது.

---

1. Phoenician coin 2. Boat 3. Trident 4. Punic Wars 5. Romans 6. Carthagenians 7. Carthage 8. Julius Caesar 9. Augustus Caesar 10. Arabians

அம்மோனியர்கள்[1]: அம்மோனியா[2] எனும் நகரவாசிகளைக் குறிப்பிடும் சொல்லாகும். அம்மோனியா என்பது ஆப்பிரிக்காவில் லிபியன் பாலைவனத்தில்[3] ஒரு பாலைவனச்சோலையாகத் திகழ்ந்தது. அது சீவா[4] என்ற பெயரால் வழங்கப்பட்டது. பின்னர் பேரரசர் அலெக்சாண்டர்[5] (கி. மு. 356—323) அங்கு விஜயம் செய்தார். அவ்விடத்தில் வாழும் குருமார்கள், கடவுளின் புதல்வராகக் கருதப்படுகின்றனர்.

எதியோபியா[6]: இது ஆப்பிரிக்காவின்[7] வடகிழக்குப் பகுதி. அங்கு வாசனைப்பண்டங்கள் மிகுதியாக விளைந்தன. இது மலைப்பகுதியும், பாலைவனம் சார்ந்த பகுதியுமாகும். ஆப்பிரிக்கர், பொதுவாக எதியோபியர் என்ற பெயராலேயே வழங்கப்பட்டனர். எதியோபியர்களைப் பற்றி பழமொழி ஒன்று உண்டு. "எதியோபியர் தம் தோலை வெளுப்பாக்கிக் கொள்ள முடியுமா?" "Can an Ethiop change his skin?" நல்ல உடல் கட்டுடன் விளங்குபவர்கள்.

ஆபிஸ் அல்லது இபாபஸ்[8]: ஆபிஸ் என்பது எகிப்தியரின் கடவுள். இஃது ஒரு தெய்வீகப் பசுவின் தெய்வீகக் கன்று. மெம்பிஸ் நகரத்தின்[9] புனிதம் வாய்ந்த எருது[10]. இதன் பெயர் ஆபிஸ். அதற்குத் தனியான வசிக்கும் இடம்; மேயும் இடமும் தனி. அதன் பிறப்பும், இறப்பும் நாட்டு மக்களால் விசேடமாகக் கொண்டாடப் பட்டன. மற்றும் பக்கம் 171, குறிப்பு 11 பார்க்கவும்.

கேம்பைஸிஸ்[11]: அப்புனிதம் வாய்ந்த எருதை ஈட்டி கொண்டு தாக்கி அதை முடமாக்கியதால், அத் தெய்வம் வெகுண்டு, எந்த இடத்தில் எந்தத் தொடையில் ஈட்டி பாய்ந்ததோ,அவருடைய அதே இடத்தில் அதே தொடையில் அவர் தம் வாளாலேயே காயமுற்று, அப்புண் சீழ்ப்பிடித்து, அப்புண்ணே கேம்பைஸிஸின் உயிரைக் கொண்டும் போயிற்று. உண்மையில் தெய்வ சக்தி உண்டு என்று அக்காலத்திலும் நம்பப்பட்டு வந்தது. இக்கொள்கை உலகமெங்கும் பரந்து காணப்பட்டது.

மெம்பிஸ்: இது எகிப்தின்[12] தலைநகரம்; பிரமிடுகள் கட்டப்பட்டு விளங்கிய இடம்.

---

1. Ammonians 2. Ammonia 3. Libyan desert 4. Siwah 5. Alexander the Great 6. Ethiopia 7. Africa 8. Apis or Epaphus 9. Memphis 10. Sacred bull 11. Cambyses 12. Egypt

சாயிஸ்[1]: இது அரசர் அமாஸிஸ் சடலப்பாதுகாப்புச் செய்த உடல் புதைக்கப்பட்ட இடம்; அதாவது அரசர் அமாஸிஸின் சமாதி அறை இருந்த நகரம்.

அமாஸிஸ்[2]: இவர் எகிப்தின் அரசராக கி மு. 570-526 ஆக 44 ஆண்டுகள் ஆண்டு வந்தார். இவர் ஆட்சியில் எகிப்து சுபிட்சமாக இருந்தது. இவர் பாரசீகர் படையெடுத்து வருவதற்கு முன்னரேயே கி.மு. 526-ல் காலமாகி விட்டார். மற்றும் பக்கம் 220 பார்க்கவும்

கேம்பைஸிஸ்: இவ்வதிகாரத்தில் கேம்பைஸிஸ் செய்த அட்டூழியங்கள் வர்ணிக்கப்பட்டுள்ளன. இறுதியில் அவர் எக்படன எனும் நகரில் புண்ணில் சீழ்ப்பிடித்து[3], மரத்துப்போய், அதனால் இறந்து விட்டார் (கி மு. 522). அவர் 7 ஆண்டுகள் 5 மாதங்கள் ஆண்டதாக ஹிராடடஸ் கூறுகிறார். அதாவது கி. மு. 529-522. ''மனிதன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்'' என்னும் பழமொழி கேம்பைஸிஸின் வாழ்க்கையில் உண்மையாயிற்று.

ஹிராடடஸ், கேம்பைஸிஸிற்குக் குழந்தைகள் கிடையா என்று கூறியுள்ளார். ஆனால் மற்றோரிடத்தில் கேம்பைஸிஸின் மகனே சைரஸ்[4] என்றும், அச்சிறுவன் நீண்ட நாள்களுக்குப் பின்னரே கேம்பைஸிஸிடம் வந்ததாகவும் கூறியுள்ளார். இவ்விரு கூற்றுக்ளும் மயக்கம் தருவனவே. ஆகையால், கேம்பைஸிஸ் அரசருக்குக் குழந்தைகள் இல்லை என்றும், கேம்பைஸிஸின் சகோதரன் மகனே சைரஸ் ஆவான் என்றும் கொள்ளுதலே பொருத்தமானது. தன் சகோதரன் மகன், தன் மகனாகவே கருதப்படுதல் உலக இயல்பு அல்லவா?

திருவள்ளுவர் கூறுகிறார்:

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்."

—(திருக்குறள்: 319)

சகோதரியை மணத்தல்: பாரசீகர்களில்[5] சகோதரிகளை மணத்தல் முதல் முதல கேம்பைஸிஸின்[6] காலத்தில்தான் ஏற்பட்டது. அவர் தம் சகோதரியைக் கி.மு. 524-ல் மணந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. ஆகையால் சகோதரியை மணப்

---

1. Sais 2. Amasis 3. Gangrene 4. Cyrus 5. Persians 6. Cambyses

பதற்கு முன்னோடியாக, முதல் முதல் வழிகாட்டியவர் கேம்பைஸிஸே ஆவார்.

பின்னர் சாரசன் மக்களாலும்[1], முஸ்லிம் மக்களாலும்[2] சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் பின்பற்றப்பட்டது.

பாரசீகர்கள் இதற்குக் காரணம் கூறுவது வியப்பாகவே இருக்கும். ஒரே விலங்கில் வெளிவரும் ஆணும் பெண்ணும் இணைந்து குட்டிகள் போடுகின்றனவே? அவை அண்ணன் தங்கை உறவுகள் பார்க்கின்றனவா? அல்லவே. மற்றும் ஒரு பசுவின் கன்று, அடுத்த நாட்டிற்குப் போய் வளர்ந்து, மீண்டும் அதே இடத்திற்கு வந்து, தன் தாய் பசுவுடன் கூடி, கன்றுகளை ஈன வில்லையா? இப் "பசு தர்மம்" ஏன் "மனித தர்மமாக" இருக்கக் கூடாது என்று காரணங் காட்டுகின்றனர்.

ஆனால் இந்தியர்களும் தமிழ் நாட்டினரும் கோத்திரம் பார்த்துத்தான் திருமணம் செய்து கொள்வர். ஒரே கோத்திரத்தில் உள்ள பெண்ணை மருமகளாக வரிக்க மாட்டார்கள். அதனால்தான் "கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு" என்ற பழமொழி தமிழ் நாட்டில் நீண்ட காலமாக வழங்கி வருகிறது.

பிரிக்ஸாஸ்பஸ்[3]: கேம்பைஸிஸின் அரசவையில் இருந்த ஒரு கனவான். அவர் மகனைத் தாம் பைத்தியமில்லை என நிரூபிக்கக் கொன்றார்—கூரிய அம்பு போட்டு. மகன் கொல்லப்படுவதைக் கண்டு, தந்தை விசனத்துடன் வாளாயிருக்க நேர்ந்ததற்கு அன்றைய அரசியலின் சூழ்நிலையே காரணமாகும்.

எக்படன[4]: இது சிரியா[5] நாட்டின் பிற்காலத் தலைநகராக விளங்கிற்று. இவ்விடத்தில் தான் கேம்பைஸிஸ் கி. மு. 522—ல் இறந்து விட்டார்.

ஸ்மெர்டிஸ் மேகஸ்[6]: மேஜி[7] இனத்தைச் சார்ந்த ஸ்மெர்டிஸ்[8] எனும் பெயரைத் தாங்கிய ஒருவர், கேம்பைஸிஸ் அரசர் தலைநகரில் இல்லாதபோது—எக்படன எனும் நகரில் இருக்கும் போது—தாமே அரசர் என முடி சூட்டிக் கொண்டு, அரியணை ஏறி ஏழு மாதங்கள் மட்டுமே அரசாண்டார். பின்னர் ஒரு சதித் திட்டத்தால் கொல்லப்பட்டார்.

---

1. Saracens 2. Muslims 3. Prexaspes 4. Ecbatana 5, Syria 6. Smerdis Magus 7. Magi 8. Smerdis

டாரியஸ்[1]: இவர் ஹைஸ்டாஸ்பஸின்[2] மகன் ஆவார். இவர் பாரசீக மன்னராகக்[3] கி. மு. 521—485 வரை அதாவது 36 ஆண்டுகள் ஆண்டு வந்துள்ளார். இவர் பாரசீகத் தலைவர்களுள் எழுவருள் ஒருவர். ஸ்மெர்டிஸை ஒழித்துக் கட்டியவர். அவர் தம் நாட்டை 20 சத்ராபிகளாகப் பிரித்தார். ஒவ்வொரு சத்ராபியும்[4] இவ்வளவு கட்ட வேண்டும் என்று விதித்தார். டாரியஸ் ஆட்சியின் முக்கியமான நிகழ்ச்சி பாரசீகர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரே. இவர் கிரேக்க நாட்டை வெல்லத் தம் மைந்தன் ஸெர்க்ஸிஸிடம்[5] விட்டுவிட்டுச் சென்றார். இவர் கி.மு 485-ல் காலமானார்.

இவர் மகன் பெயர் ஸெர்க்ஸிஸ். இவர் பாரசீக அரசராகக் கி. மு. 485–465 ஆக 20 ஆண்டுகள் ஆண்டார். ஸெர்க்ஸிஸின் முதற் பெயர் ஒகஸ்[6]. அரியணை ஏறி வைத்துக்கொண்ட பெயர் நோதஸ்[7]. ஆனால் வரலாற்றில் முழுவதும் ஸெர்க்ஸிஸ் என்ற பெயராலேயே வழங்கப்பட்டு வந்தார். இவர் கி. மு. 465-ல் தளபதி வீரன் அர்டபானஸ்[8] என்பவரால் கொலைசெய்யப்பட்டு இறந்து விட்டார்.

மற்றும், பக்கம் 120, குறிப்பு-1 பார்க்கவும்.

---

1. Darius 2. Hystaspes 3. Persian King 4. Satrapy 5. Xerxes 6. Ochus 7. Nothus 8. Artabanus

4 டாரியஸும் அவரது இருபது சத்ராபிகளும்

"மேஜியை[1] ஒழித்துக் கட்டுதல்: பாரசீக அரசராக அரியணை ஏறிய ஸ்மெர்டிஸ் மேகஸ்[2] என்பவருக்குக் காதுகள் கிடையா. சைரஸ்[3] அரசராயிருந்த பொழுது, ஸ்மெர்டிஸ் மேகஸ் செய்த ஒரு நம்பிக்கைத் துரோகமான செயலுக்கு அவன் காதை வெட்டி விட்டார்.

காது வெட்டப் பட்டவன் தான் ஸ்மெர்டிஸ் மேகஸ் என்று கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. கேம்பைஸஸின் தம்பி ஸ்மெர்டிஸ் ஏற்கெனவே கொல்லப்பட்டு விட்டான்.

ஏமாற்று வித்தைக்காரனான ஸ்மெர்டிஸ் மேகஸை— பாரசீக அரியணையைச் சூழ்ச்சியால் கவர்ந்து கொண்டவனை— அவ்வரச பதவியிலிருந்து ஒழித்துக் கட்ட எழுவர் அடங்கிய ஒரு குழு ஏற்பாடு செய்யப் பட்டது. அவ் எழுவர்களாவன: ஓடேனஸ்,[4] அஸ்பதைன்ஸ்[5], கோப்ரியாஸ்[6], இன்டாப்ரெனிஸ்[7], கோப்ரியாஸ் மெகபைஜஸ்[8], அஸ்பதைன்ஸ் ஹைடார்னஸ்[9]; இவர்களுடன் இறுதியாகச் சேர்ந்தவர் டாரியஸ்[10]. டாரியஸ் பாரசீகத்தில் சூஸா[11] நகரத்தின் ஆளுநர்; ஹைஸ்டாஸ்பஸ்[12] என்பவரின் மகன் ஆவார்.

இவர்கள் எழுவரும் ஒருங்கிணைந்து, வஞ்சகன் ஸ்மெர்டிஸ் மேகஸை ஒழித்துக் கட்டத் திட்டமிட்டுச் சபதம் செய்து கொண்டனர்.

---

1. Magi 2. Smerdis Magus 3. Cyrus 4. Otanes 5. Aspathines 6. Gobryas 7. Intaphrenes 8. Gofryas Meagabyzus 9. Aspathines Hydarnes 10. Darius 11. Susa 12. Hystaspes

எவ்வாறு அரண்மனையுள் நுழைவது? டாரியஸ் தாமே முதலில் நுழைவதாகக் கூறினார். "என் தந்தையின் கடிதத்தை அரசர்க்கு நேரில் கொடுக்க வேண்டுமென்று பொய் கூறி உள்ளே சென்று விடலாம். என்னை யாவருக்கும் தெரியும். எவரும் என்னைத் தடுக்க மாட்டார்கள். தடுக்கிறவர்கள் எவராயினும் அவரை நம் எதிரியாகக் கருதுவோம். நீங்களும் தொடர்ந்து உள் நுழைந்து விடுங்கள். பிறகு நடப்பதைப் பார்த்துக் கொள்ளலாம்," என்று டாரியஸ் கூறி அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தார். அப்பொழுது இரண்டு சோடிக் கழுகுகளை[1] ஏழு சோடிப் பருந்துகள்[2] துரத்திச் செல்வதைக் கண்டனர்; போகும் போதே, அந்த இரண்டு கழுகுகளைத் தங்கள் நகங்களாலும், அலகினாலும் பிய்த்து விட்டுச் சென்றன. இந்நிகழ்ச்சியைத் தாங்கள் செய்யப் போகும் பணிக்கு வெற்றி தரும் நன்நிமித்தமாகக் கருதினர்.

அரண்மனைக்குள் நுழைந்ததும், சிறு போராட்டம் நடைபெற்றது. அதில் அஸ்பதைன்ஸுக்குக்[3] காலில் அடியும், இன்டாப்ரெனிஸுக்குக்[4] கண்களில் காயமும் ஏற்பட்டன. கண் போனாலும் அவர் பிழைத்துக் கொண்டார். டாரியஸும்[5] கோப்ரியாஸும்[6] நேரே அரண்மனைக் கூடத்தினுள் நுழைந்தனர். நுழைந்ததும் இவ்விருவர்களும் மேஜி[7] இருவர்களையும் பிடித்து அவர்கள் உடலில் ஈட்டியைப் பாய்ச்சினர். அவ்விரு மேஜிகளும் அவ்விடத்திலேயே இறந்து விட்டனர். உடன் பாரசீகர்கள்[8] டாரியஸின் கருத்தையும் செயலையும் கண்டு, அங்குள்ள மேஜிகள் யாவரையும் தாக்கிக் கொன்றுபோட்டனர். இருள் சூழ்ந்தது. அத்துடன் அவர்கள் பணி பூர்த்தியாகி விட்டது. இல்லாவிடில், எல்லா மேஜிகளும் பூண்டோடு[9] ஒழித்துக் கட்டப்பட்டிருப்பர். அந்த இனமே அழிந்துவிட்டிருக்கும். இந்த நன்னாளை ஆண்டுதோறும் பாரசீகர்கள் மேகோபோனியா[10] எனும் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். அன்று

---

1. Vultures 2. Hawks 3. Aspathines 4. Intaphrenes 5. Darius 6. Gobryas 7. Magi 8. Persians 9. Extinct 10. Magophonia

மட்டும் காலையிலிருந்து, அடுத்த நாள் காலை வரை எந்த மேஜியும் தன் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை.

டாரியஸ் அரசராகத் தேர்ந்தெடுக்கப் படுதல்:

அன்றைக்குக் குழுவினர் செய்த ஆலோசனையில், பாரசீகத்திற்கு[1] அரசுரிமைப் பதவியே நன்மை செய்ய வல்லது என்று டாரியஸ் வாதாடி, அந்த எழுவருள் எவர் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்கு ஒரு வழியும் கூறப்பட்டது. அவர்கள் யாவரும ஒவ்வொரு குதிரைமீது ஏறி உட்கார்ந்ததும். எவரது குதிரை முதலில் கனைத்துப் பேரொலி எழுப்புகிறதோ, அக்குதிரைமீது அமர்ந்திருப்பவரே பாரசீகத்தின் அரசராகக் கடவர் என்ற முடிவுக்கு வந்தனர்.

அவ்வாறே அவர்களும் - எழுவர்களும் - தத்தம் குதிரை மீது ஏறி உட்கார்ந்ததும், டாரியஸின் குதிரையே முதலில் கனைத்துப் பேரொலி எழுப்பிற்று. அதன்படி டாரியஸ் பாரசீக நாட்டின் அரசராகத்[2] தேர்ந்தெடுக்கப் பட்டார்.

டாரியஸின் நாடு ஆசியா முழுவதும்[3] பரவி நின்றது— அரேபியா நாடு[4] தவிர.

டாரியஸ் திருமணம் செய்து கொண்ட பெண்கள் சைரஸ்[5] அரசரின் இரு மகள்கள் ஆவர்—அடோஸா'[6] அர்டிஸ்டோன்[7]. அதன் பின்னர் சைரஸின் மகன் ஸ்மெர் டிஸின்[8] மகளான பார்மிஸையும்[9], இறுதியாக ஓடேனஸ்[10] மகளையும் மணந்து கொண்டார். ஓடேனஸ், மேகஸ்ஸைக்[11] காட்டிக் கொடுத்து ஒழித்துக்கட்ட உதவிய நண்பர் ஆவார்.

டாரியஸ் அரியணை ஏறியதும், குதிரைமீது உள்ள வீரன் போன்ற சிலை ஒன்று நிறுவப்பட்டது. அச்சிலையின் பீடத்தில் பின்வரும் வாசகம் பொறிக்கப்பட்டது:

---

1. Darius 2 Persian King 3. Asia 4. Arabia 5. Cyrus 6. Atossa 7. Artystone 8. Smerdys 9. Parmys 10. Oatanes 11. Magus

"டாரியஸ் ஹைஸ்டாஸ்பஸின்[1] மகனார்: தம் குதிரையின் அதிட்டத்தாலும், தம் மனைவி ஈபேரஸின்[2] கற்பினாலும், பாரசீக அரியணையை டாரிஸ் வென்று, அதில் அமர்ந்தார்."

பின்னர் டாரியஸ் தம் அரசைப் பல பகுதிகளாகப் பிரித்து, அவற்றைச் சத்ராபிகள்[3] எனப் பெயரிட்டார். அவ்வாறு அவர் ஏற்படுத்திய சத்ராபிகளின் எண்ணிக்கை 20. ஒவ்வொரு சத்ராபிக்கும் ஓர் ஆளுநரை[4] நியமித்து, ஒவ்வொன்றும் தமக்கு எவ்வளவு கப்பம் கட்ட வேண்டும் என்பதையும் நிர்ணயம் செய்தார்.

அதன் காரணமாக, நாளடைவில் மக்கள் மனத்தில் ஒரு கருத்து நிலவுவதாயிற்று; டாரியஸ் ஒரு வணிகர்; கேம்பைஸிஸ்[5] ஒரு கொடுங்கோலன்; சைரஸ்[6] ஒரு தந்தை—முதல்வர் இலாபமே குறிக்கோளாகக்கொண்டவர்; இரண்டாமவர் தம் மக்கள் நலனைக் கருத்தில் ஏற்காமலே கொடுங்கோலாட்சி செய்தவர்; மூன்றாமவரான சைரஸ், மக்களின் நலனை ஒன்றே தம் மனத்தில் வைத்துப் பாடுபட்டவர்—அவரே நாட்டின் நலன் காத்த உண்மையான தந்தை ஆவார்.

டாரியஸின் இருபது சத்ராபிகளும், வருமானமும்:

டாரியஸின், இருபது சத்ராபிகளும் பின்வருமாறு வரிப் பணம் கட்டினர்:

1. அயோனியர்,[7] ஆசியாவின் மெக்னீசியர்கள்,[8] இயோலியர்,[9] காரியர்,[10], லைசியர்,[11] மில்யர்,[12] பாம்பிலியர்[13]— இவர்கள் யாவரும் சேர்ந்து கொடுத்த வரி வெள்ளி 400 டேலன்டுகள்[14].

2. மைசியர்,[15] லிடியர்,[16] காபேலியர்,[17] ஹைடெனியர்-[18] இவர்கள் கொடுத்த வரி 500 டேலன்டுகள்.

---

1. Hystaspes 2. Oebares 3. Satrapy 4. Governor 5. Cambyses 6. Cyrus 7. Ionians 8. Magnesians of Asia 9. Aeolians 10. Carians 11. Lycians 12. Milyans 13. Pamphlyians 14- Talents 15. Mysians 16. Lydians 17. Cabalians 18. Hytenians

3. ஹெல்லெஸ்பாண்டின் தென்கடல்பகுதி[1], பிரிஜியர்[2], ஆசியாவின் திரேசியர்[3], பாப்லகோனியர்[4], மிரியாண்டிணியர்[5], சிரியா நாட்டினர்[6]-இவர்கள் கொடுத்த வரிப்பணம் 360 டேலன்டுகள்.

4. சிலிசியர்[7]- 500 டேலண்டுகள் வெள்ளி; மற்றும் 360 வெண்மை நிறமுள்ள குதிரைகள்.

5. போஸிடியம்[8]- சிலிசியத்திற்கும்[9] சிரியாவிற்கும்[10] உள்ள இடைப்பகுதி (அரேபியா நாடு[11] தவிர)—
இவர்கள் கொடுத்த வரிப்பணம் 350 டேலன்டுகள்.

6. எகிப்து[12]- லிபியர்[13] உள்பட, சைரீன்[14], பார்கா[15].—
இவர்கள் கொடுத்த வரிப்பணம் 700 டேலன்டுகள்.

மோரிஸ்[16] ஏரிப் பகுதியிலிருந்து கிடைக்கும் மீன் வாணிகத்திலிருந்து கிடைக்கும் பணம்; மற்றும், 120,000 மரக்கால் தானிய வகைகள்-மெம்பிஸ் நகரில் வெள்ளை அரணில்[17] வைக்கப்பட்டுள்ள பாரசீகப் படை வீரர்களுக்கான உணவு வகைகளுக்காக.

7. சட்டாகைடியர்[18], காந்தாரியர்[19], டாடிசேயர்[20], அபார்த்தியர்[21]- இவர்கள் கொடுத்த வரிப்பணம் 170 டேலன்டுகள்.

8. சூஸா[22]-இந்நகரத்தவர் கொடுத்த வரிப்பணம் 300 டேலன்டுகள்.

9. பாபிலோன்[23], அஸ்ஸீரியா[24]— இவர்கள் கொடுத்த வரிப்பணம் 1000 டேலன்டுகள்.
மற்றும் 500 அலிகள்[25].

10. எக்படன[26], மிடியாவின்[27] மீதிப்பகுதி, இவர்கள் கொடுத்த வரிப்பணம் 450 டேலன்டுகள்.

---

1. Southern Sea Coast of Hellespont 2. Phrygians 3. Thracians of Asia Minor 4. Paphlagonians 5. Mariyandynians 6. Syrians 7. Cylicians 8. Posidium 9. Cilicium 10. Syria 11. Arabia 12. Egypt 13. Libyans 14. Cyrene 15. Barca 16. Moeris lake 17. White castle in Memphis 18. Sattagydians 19. Gandharians 20. Dadicaens 21. Apartaens 22. Susa 23. Babylon 24. Assyria 25. Eunuchs 26. Ecbatana 27. Media

11 காஸ்பியர்[1], பௌஸிகேயர்[2], பந்திமதியர்[3], தாரிதேயர்[4]- இவர்கள் கொடுத்த வரிப்பணம்
200 டேலன்டுகள்.

12. பாக்டிரியர்[5]-இவர்கள் கொர்டுத்த வரிப்பணம்
360 டேலன்டுகள்.

13. பாக்டிகா — ஆர்மீனியர்களும் அவர்களை அடுத்திருப்பவரும் உள்பட—கருங்கடல் வரை. 400 டேலன்டுகள்.

14. சகார்டியர்[6], சாரங்கியர்[7], தம்மேனியர்[8], யூதியர்[9], மைசியர்[10], பாரசீக வளைகுடாவில்[11] உள்ள தீவுகள்—
இவர்கள் கொடுத்த வரிப்பணம் 600 டேலன்டுகள்.

15 சாஸேயர்[12], காஸ்பியர்[13], இவர்கள் கொடுத்த வரிப் பணம் 250 டேலன்டுகள்.

16. பார்த்தியர்[14], கோரஸ்மியர்[15],சோக்டியர்[16], அரியா நாட்டினர்[17] இவர்கள் கொடுத்த வரிப்பணம்
300 டேலன்டுகள்.

17. பரிகேனியர்[18], ஆசியாவின்[19] எதியோபியர்[20]
இவர்கள் கொடுத்த வரிப்பணம் 400 டேலன்டுகள்.

18. மெட்டீனியர்[21], ஸாஸ்பையர்[22], அலரோடியர்[23]- இவர்கள் கொடுத்த வரிப்பணம் 200 டேலன்டுகள்.

19. மோஸ்ஷி[24], திபரேனி[25], மெக்ரோனி[26], மோஸினோஸி[27], மரேயா[28]- இவர்கள் கொடுத்த வரிப்பணம்
300 டேலன்டுகள்.

20. இந்தியர்கள்[29]- அன்றைய உலகத்தில் புகழ்பெற்ற நாடு—மிகப்பெருந்தொகை கட்டினர். இவர்கள் கொடுத்த வரிபபணம் பொன் துகள் மற்றும் வெள்ளி.
360 டேலன்டுகள்.

---

1. Caspiar 2. Pausicaeans 3. Panthimathians 4. Daritaens 5. Bactrians 6. Sagartians 7. Sarangians 8. Thammaneans 9. Utians 10. Mycians 11. Persian Gulf 12. Sacaens 13. Caspians 14. Parthians 15. Chorasmians 16. Sogdians 17. Arrians 18. Paricanians 19. Asia 20. Ethiopians 21. Matienians 22. Saspiers 23. Alarodians 24. Moschi 25. Tibareni 26. Macrones 27. Mosynocei 28. Mareas 29. Indians

பொன்துகள்[1] வெள்ளியைவிட[2] 13 மடங்கு விலை யுள்ளது. இந்தியர்கள் தரும் பொன்துகள் அளவு 4680 டேலன்டுகள். இந்தியர்களே யாவரையும்விட அதிகமாக வரி கட்டுகின்றனர்.

ஆகையால் டாரியஸின் மொத்த வருமானம் 14560 யூபியன் டேலன்டுகள்[3] அதாவது ஏறக்குறைய 3552000 பவுன்கள் ஆகும்.

இவை தவிர, ஒவ்வோர் ஆண்டும் 100 ஆண்பிள்ளைகள், 100 பெண்கள் வந்து சேர்ந்தனர்; அரேபியாவிலிருந்து[4] 25½ டன் எடையுள்ள வாசனைப் பண்டங்கள்[5]—அதன் பெறுமானம் 1000 டேலன்டுகள். இவ்வளவும் டாரியஸ் அரசரின் வருமானம்[6] ஆகும்.''

விளக்கவுரை :

ஸ்மெர்டிஸ் மேகஸ்[7]: இவர் வஞ்சனை செய்து பாரசீக அரசராகி, ஏழு மாதங்களே அரசாட்சி செய்தவர் (கி.மு. 521). சைரஸ்[8] அரசரால் காதுகள் அறுக்கப்பட்டவர். இவரை அடையாளங் கண்டு கொள்ள அச் சின்னபின்னமே உதவிற்று

எழுவர் அடங்கிய குழு: இக்குழுவில் எழுவர் இருந்தனர். உண்மையான ஸ்மெர்டிஸ் மேகஸைக் கண்டுபிடித்துப் போலியாக நடிப்பவனுக்குத் தண்டனை கொடுக்கவே அக்குழு நியமிக்கப் பட்டது அவ் எழுவரும் ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்காமல் இருப்பதாயும், ஒற்றுமையுடன் இருப்பதாயும் சூளுறை செய்து பணியாற்றிவந்தனர். இவ் எழுவர்களின் பெயர்களையும் ஹிராடடஸ் கொடுத்துள்ளார். அவர்களுள் இறுதியாகச் சேர்ந்தவர் டாரியஸ்[9] என்றும் கூறியுள்ளார்.

கழுகு, பருந்து சகுனம்: அவ் எழுவர் அடங்கிய குழுவினர் ஸ்மெர்டிஸ் மேகஸை ஒழித்துக் கட்டப் புறப்பட்டபொழுது இரண்டு சோடிக் கழுகுகளை[10] ஏழு சோடிப் பருந்துகள்[11] துரத்திச்சென்று துன்புறுத்தியதைக் கண்டனர், உடன் தாங்கள் மேற்கொண்டு செல்லும் பணி வெற்றியடையும் என்று உறுதி பூண்டனர்.

---

1. Gold dust 2. Silver 3. Euboean talents 4. Arabia 5. Aromatic Substances 6. Income of King Darius 7. Smerdis Magus 8. Cyrus 9. Darius 10. Vultures 11. Hawks

இவ்வாறு சகுனம் பார்ப்பது தமிழ்நாட்டில் முதன் முதல் ஏற்பட்ட பழக்கமாகும். தீய கனவு, கெட்ட சகுனம், அசரீரி ஒலி ஆகிய இம்மூன்றும் எவ்வாறு முன்கூட்டியே ஒருவருக்கு ஏற்படுகின்றனவோ அதன்படி நிகழ்ச்சியின் தன்மையும் அவருக்கு நடைபெறும் என்றும், பலாபலனும் அவ்வாறே நிகழும் என்றும் நீண்ட காலமாகத் தமிழ் நாட்டில் நிலவி வரும் நம்பிக்கை. பல்லி சொல்லுக்குப் பலன், வல்லூறு படுபட்சி பலன்கள் முதலியன தமிழ்நாட்டில் நிலவி வந்த நம்பிக்கைகளாகும்.

பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன:

''புதுப்புள் வரினும், பழம்புள் போகினும்''

—(புறநானூறு. 20—18)

''புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை''

—(புறநானூறு: 204—10)

கம்பராமாயணம் கூறுகிறது:

''ஏகும் அளவையின் வந்தன வலமும் மயில் இடமும்
காகம் முதலிய முந்தின தடை செய்வன கண்டான்.''

—(கம்பராமாயணம், பாலகாண்டம்: பரசுராமப் படலம்-5)

இங்கு மயில் வலம் வருவது நற்சகுனம்; காகம் இடம் செல்வது தீய சகுனம். காகம் இடம் செல்வதால் பரசுராமன் வந்து தடை செய்தல் நிகழ்ந்தது. மயில் வலம் வந்ததால் அத்தடை நீங்கி, பரசுராமனை இராமபிரான் வெற்றி கொள்ளுதல் நடைபெற்றது.

மற்றும் வியாசர் இயற்றிய மகாபாரதத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:

''அசுவத்தாமா முதலியோர் கானகத்தில் ஓர் ஆலமரத்தினடியில் உட்கார்ந்ததும், அங்கு ஒரு கோட்டான் பல காக்கைகளைக் கொல்லக் கண்டு, அச்சுவத்தாமா தாமும் பாண்டவர்களை அவ்விதம் கொல்ல நிச்சயித்துக் கிருபரையும் கிருதவர்மாவையும் எழுப்பித் தாம் செய்ய விரும்பினதைச் சொல்லி ஆலோசனை செய்தார்''

—(ஸ்ரீ மகாபாரதம், ஸௌப்திக பர்வம், அத்தி—1)

மார்க்கோபோலோ (கி. பி. 1254—1324) பின்வருமாறு எழுதுகிறார்:

''இவர்கள் பண்டங்களை விலைக்கு வாங்கும் பொழுது, அவ் அங்காடியின் சுவர்மீது ஓடும் பல்லியை நோக்குவர். அப்பல்லி

போகிற திசையைக் கூர்ந்து கவனித்து, எத்திசையிலிருந்து சத்தமிடுகிறது என்று காது கொடுத்துக் கேட்பர். பல்லி சொல்லும் பலனை ஆராய்ந்து, அவ்வணிகர்கள் தங்கள் அன்றைய வாணிகத்தை அதற்கேற்றவாறு முடித்துக் கொள்வர்.

மற்றும் இவர்கள் வீட்டிலிருந்து கிளம்பும்பொழுது, யாராவது தும்மும் ஒலியைக் கேட்டால், உடன் இவர்கள் தம் வீட்டிற்குத் திரும்பச் சென்று உட்கார்ந்து விடுவர்.''

—(மார்க்கோபோலோ: அதி: 7, பக்கம் 67)

மேற் காட்டப்பட்ட நிகழ்ச்சிகளிலிருந்து கழுகுச் சகுனமும், காக்கைச் சகுனமும் பண்டைக்காலத்தில் உலகெங்கும் காணப்பட்டன என்பதும், கழுகும் காக்கையும் இந்தியாவுக்கே உரியனவாகையால், அவை இந்திய மரபின் அடிப்படையிலே எழுந்தன என்பதும் தெளிவாகக் காணக் கிடக்கிறது.

கோப்ரியாஸ்[1]: எழுவர் அடங்கிய குழுவில் இருந்த ஒருவர். இவர் போலி ஸ்மெர்டிஸ் மேகஸை[2]க் கட்டிப் பிடிக்க, அவர் உடலில் டாரியஸ்[3] ஈட்டியைப் பாய்ச்சினார். அதன் காரணமாக ஸ்மெர்டிஸ் மேகஸ் கொல்லப்பட்டார்.

மேகோபோனியா[4]: மேஜி[5] இருவரை ஒழித்து, பாரசீகர் ஆட்சியை டாரியஸ் பிடித்து அதில் அமர்ந்த நாள். இந்நாள் அந்நாடு முழுவதும் ஒரு கொண்டாட்ட நாளாகக் கருதப்படுகிறது. அன்று மட்டும் எந்த மேஜியும் காலையிலிருந்து அடுத்த நாள் காலை வரை வெளியே தலை காட்டுவதில்லை. வீட்டினுள்ளேயே பதுங்கியிருப்பது வழக்கம். இந்நாள் மேஜியின் துக்க நாளாகவும், பாரசீகரின்[6] வெற்றி நாளாகவும் கொண்டாடப்பட்டு வந்தது. இந்நாள் மேகோபோனியா என்ற பெயர் கொண்டு வழங்கப்பட்டது.

ஈபேரஸ்[7]. இவள் டாரியஸின் முதல் மனைவி; தாம் அரசராவதற்கு முன், தம் தந்தை சூஸாவின் ஆளுநராக[8] இருந்தார். அப்பொழுது டாரியஸ் செய்து கொண்ட திருமணத்தில் வந்த முதல் மனைவி ஈபேரஸ். அவளுடைய பணிவிடைகள் டாரியஸைப் பெரிதும் கவர்ந்தன. தம் வெற்றிகள் யாவற்றிற்கும் அவளே காரணமாவாள் என உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

---

1. Gobryas 2. Smerdis Magus 3. Darius 4. Magophonia 5. Magi 6. Persians 7. Oebares 8. Governor of Susa

சத்ராபிகள்:[1] இது சத்ரபதி அல்லது க்ஷேத்திரபதி என்ற சொல்லின் மாற்று உருவமே. டாரியஸ் அரசர்[2], தம் நாட்டை 20 பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் சத்ராபி எனப் பெயரிட்டு, அப்பகுதிக்கு ஆளுநர்[3] ஒருவரை நியமித்தார். மற்றும் பக்கம் 130, குறிப்பு-9 பார்க்கவும்.

டாரியஸின் வருமானம்: இதில் அவர் வென்ற நாடுகள், வரி செலுத்தும் நாடுகள் பெயர்கள் யாவும் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு சத்ராபியிடமிருந்து பெற்ற வெள்ளி நாணய மதிப்பும் தரப்பட்டுள்ளது. அதன்படி டாரியஸின் மொத்த வருமானம் 14560 யூபியன் டேலன்டுகள் அதாவது ஏறக்குறைய 3552000 பவுன்கள் மதிப்புள்ளதாகும். இவைதவிர வாசனைப் பண்டங்கள் ஆண்கள், பெண்கள் ஒவ்வொரு பிரிவிலும் 100 பெயர்கள், மற்றும் அலிகள்.

டேலன்டுகள்:[4] இது கிரேக்க நாட்டில் வழங்கிய வெள்ளி நாணய வகை. ஒரு டேலன்டம்[5] என்பது ஏறக்குறைய 235 பவுன் பெறுமானமுள்ளதாகும். மற்றும் பக்கம் 222, குறிப்பு-1 பார்க்கவும். இது பாபிலோனிய வெள்ளி அளவாகும். வெள்ளி நாணயம் டேலன்டம் எனப்பட்டது.

இந்தியர்கள் கட்டும் வரிப்பணம்: இந்தியர்களே[6] யாவரினும் அதிக பெறுமானமுள்ள வரியைக் கட்டினர் என்று ஹிராடடஸ் கூறுகிறார். 4680 டேலன்டுகள் பொன் துகள்[7] கொடுத்தனர் என்றால், அதன் பெறுமானம் ஏறக்குறைய 11,00,000 (பதினோரு இலட்சம்) பவுன் மதிப்புப் பெற்றதாகும். இவ்வளவு பெரிய தொகை மற்ற எந்தச் சத்ராபியும் கட்டவில்லை.

யூபியன் டேலன்டுகள்:[8] யூபியா[9] என்பது ஈஜியன் கடலில்[10] இருந்த மிகப்பெரிய தீவு. அங்குப் புழக்கத்தில் இருந்த நாணய வகை யூபியன் டேலன்டுகள் என்று வழங்கப்பட்டன. இது பொன் நாணய அளவாகும். பொன் நாணயம் யூபியன் டேலன்டம் என்று வழங்கப்பட்டது.

டாரியஸ்: இவர் ஹைஸ்டாஸ்பஸின்[11] மகன்; பாரசீக மன்னர். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு.521-485 ஆக 36 ஆண்டுகள் ஆண்டார். இவர் அரசாட்சியின் முக்கிய நிகழ்ச்சி கிரேக்கப் போர் ஆகும். இவர் கி. மு. 485-ல் காலமாகும் பொழுது, கிரேக்க நாட்டுப்படையெடுப்பைத் தம் மகன் ஸெர்க்ஸிஸிடம்[12] விட்டுச் சென்றார். மற்றும், பக்கம் 256, குறிப்பு-1 பார்க்கவும்.

---

1. Satrapies 2. King Darius 3. Governor 4 Talents 5. Talentum 6. Indians 7. Gold dust 8. Euboean Talents 9. Euboea 10. Aegean sea 11. Hystsaspes 12. Xerxes

5. இந்தியக் குலமரபினர்

"இந்தியர்கள்[1] பாரசீகத்திற்கு[2] வரியாகக் கட்ட வேண்டிய பெருமளவிலான பொன்துகளை[3] எவ்வாறு பெறுகின்றனர் என்பதைக் கூறுவேன்.

இந்தியாவிற்கு கிழக்குப் பகுதியில் மணல் நிறைந்த பாலைவனம் ஒன்று உள்ளது. எனக்குத் தரப்பட்ட செய்திகளினின்று நான் அறியவருவது, இந்தியாதான்[4] மிக மிகக் கிழக்குத் திசையில் உள்ள நாடாகும். அதற்கும் அப்பால் ஒரே பாலை வனம்தான்[5]. அது உயிர் வாழத் தகுதியற்றது.

இந்தியர்களுள் மலை நாட்டு இனத்தவர் பலர் இருக்கின்றனர். அவர்கள் இந்தியக் குலமரபினர்[6] என்றும் வழங்கப் படுகின்றனர். அவர்கள் பல மொழிகளைப் பேசும் இனத்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுள் சிலர் நாடோடிகள்; ஆடு மாடுகள் மேய்ப்பவர் சிலர்; சிலர் அவ்வாறு இல்லை. சிலர் ஆற்றுப் பகுதியில் இருக்கும் சேற்றுப் பகுதியில் வசிக்கின்றனர். அவர்கள் பச்சைமீனை சமைக்காமலேயே அப்படியே உண்கின்றனர். அம்மீன்களை நாணல்களால்[7] செய்யப்பட்ட படகுகளிலிருந்துகொண்டு பிடித்து வலையில் சேர்ப்பர். ஒவ்வொருவரும் ஒரு படகில் ஏறிச் செல்வர். ஒவ்வொரு படகும் ஒரே மரத்துண்டால் ஆனது. அந்த இனத்தவர், ஆற்றில் விளையும் நாணல் கொடியிலிருந்து[8] கிடைக்கும் கயிறுகளைப் பின்னி ஆடைகள் நெய்கின்றனர். அவற்றை ஒன்று சேர்த்து,

---

1. Indians 2. Persia 3. Gold dust 4. India 5. Desert 6. Indian tribes 7. Reeds 8. Flax

கல்லின்மீது மோதி அடித்து, அதை ஒரு பாய் போன்று பின்னி, தங்கள் மார்புகள்மீது, மார்புக் கவசங்கள் போன்று அணிந்து கொள்கின்றனர்.

அதற்கும் அப்பால் உள்ள கீழை நாட்டில் உள்ள குலமரபினர் படேய்[1] என்ற பெயரால் வழங்கப்படுவர். அவர்கள் பச்சை மாமிசத்தை உண்டு வாழ்கின்றனர். இந்த மக்களின் பொதுவான வாழ்க்கையை விவரிக்குமிடத்து, ஒரு மனிதன் தீவிர வியாதியால் படுத்து விட்டான் எனில், அவனைக் கொன்று விடுகின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணம்: உடலை வியாதியால் முற்றவிட்டு விட்டால், அந்த உடலின் ஊன் கெட்டு எதற்கும் பயன்படாமல் போய் விடும் என்பதே. இந்த நிலையில் உடல் ஊனமுற்றோர் வியாதியால் பீடிக்கப் பட்டாலும், அவர்கள் எவ்வளவுதான் தடுத்தாலும், அவர்கள் கொல்லப்பட்டு, அவ் ஊனை உண்டு விடுகின்றனர். அதே முறையில் ஒரு பெண் நோயுற்றால், ஆண், பெண் பாகுபாடு காண்பதில்லை. பெண்கள் பலர் கூடி அவளைக் கொன்று, ஆண்களைப் போலவே கூடித் தின்று விடுவர். எவராகிலும் நோயின்றி நீண்ட காலம் வாழ முற்பட்டால், அவர் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டு, புசிக்கப் பட்டு விடுகின்றனர்— இவ்வாறு நேர்வது மிக அபூர்வமே— காரணம் எல்லோரும் எந்த விதத்திலாவது, ஏதோ ஒரு நோய் வந்து, அவர்களை வாட்டி, வயோதிகம் வருவதற்கு முன்னரே கொல்லப் பட்டு, அவர்கள் நண்பர்களால் புசிக்கப் பட்டு விடுகின்றனர்.

வேறொரு குலமரபினர் உள்ளனர்; அவர்களின் போக்கு வேறு விதமாக உள்ளது. அவர்கள் எந்தவிதமான உயிரையும் கொல்வதில்லை; அவர்கள் விதைகள் விதைப்பது கிடையாது. சொந்த வீடுகள் வைத்துக் கொள்வதில்லை; சைவ உணவையே[2] மரக்கறி வகைகளையே— உண்டு வாழ்கின்றனர். அவர்கள் நாட்டில் ஒருவகைப் பயிர்[3] உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அதில் தினைச் செடியின் விதைகளைப் போல, கதிர்கள் காய்க்கின்றன. அவற்றை முதிர்ந்ததும் உதிர்த்து[4]; வேக வைத்து உண்கின்

1. Padaei 2. Vegetarians 3. Paddy 4. Reap

றனர். அதையே மாவாக அரைத்துத் தின்பண்டங்கள்—சிற்றுண்டிகள்— செய்து சாப்பிடுகின்றனர்.

இந்தக் குல மரபினருள் ஒருவர் நோயுற்றால், அவர் தம் நண்பர்களை விட்டுப் பிரிந்து, இறப்பதற்குத் தனியான ஒதுக்கிடம் ஒன்றனுக்குச் சென்று விடுவர். அவரைப் பற்றி, மற்றவர் எந்தக் கவலையும் கொள்வதில்லை. அவரது நோயைப் பற்றியோ, அவரது இறப்பைப் பற்றியோ நினைப்பது கூட இல்லை.

நான் மேற்கூறிய இந்தியக் குலமரபினர் யாவரும் ஆடு மாடுகளைப் போல, வெட்ட வெளியிலேயே சிற்றின்பம் அனுபவிக்கின்றனர்[1]. அவர்கள் தோல் எதியோபியர்களின்[2] தோல் போன்று கறுப்பானதே. மற்ற மக்களுடைய விந்து போல அந்த மக்களுடைய விந்து[3] வெளுப்பாக இல்லை—தோல் போன்று கறுப்பாகவே உள்ளது. இதே நிலைதான் எதியோபியர்களிடமும் காணப்படுகிறது. இந்த நாடு பாரசீக நாட்டிலிருந்து[4] வெகு தொலைவில் உள்ளது, தெற்குப் பக்கமாய்ப் பரவி உள்ளது. இந்நாட்டினர் டாரியஸுக்கு[5] என்றும் அடிமைப் பட்டது கிடையாது. கப்பம் கட்டியதும் இல்லை.''

விளக்கவுரை:

பச்சை மீனை உண்ணுதல்: மீன் உண்பவர் என்பதால், இம் மக்கள் ஆற்றங்கரை ஓரங்களிலும், கடற்கரைப் பகுதிகளிலும் இருப்பர். அத்தகையவர்களைத்தான் ஹிராடடஸ் குறிப்பிடு கிறார். பச்சை மீன் உண்பவர், இக்தியோபகி[6] என்ற பெயரால் வழங்கப்படுகின்றனர்.

பெரிப்ளுஸ் நூல் கூறுகிறது: (கி.பி. 50—80)

''முதன் முதல் அவர்கள் இக்தியோபகி என்றபெயராலேயே வழங்கப்பட்டனர்.''

—(பெரிப்ளுஸ், அதிகாரம் 1, பக்கம் 6)

---

1. Copulate 2. Ethiopians 3. Semen 4. Persia 5. Darius 6. Ichthyophagy

கறுப்புத்தோல் கொண்டவர்களாக இருந்தனர். நல்ல உடற் கட்டு வாய்ந்தவர்; மற்றும் பக்கம் 253, குறிப்பு-6 பார்க்கவும்.

விந்துவின் நிறம் கறுப்பு: இங்குக் குறிப்பிடப்படும் மக்களின் விந்து[1] நிறம் கறுப்பு முதலிய செய்திகள் யாரோ சொல்லக் கேட்டுக் கற்பனையாகவே எழுதப்பட்டவையாகும். இவற்றை ஆதாரச் செய்திகளாக ஏற்றுக்கொள்ளக்கூடாது.

டாரியஸ்:[2] இவர் பாரசீக மன்னராகத்[3] தேர்ந்தெடுக்கப் பட்டார். கி. மு. 521—485 வரை 36 ஆண்டுகள் ஆட்சி செய் தார். மற்றும் பக்கம் 256, குறிப்பு-11 பார்க்கவும்.

டாரியஸுக்குப் பிறகு அவர் மகன் ஸெர்க்ஸிஸ்[4] அரியணை ஏறினார் (கி.மு. 485).

---

1. Semen 2. Darius 3. Persian King 4. Xerxes

6. பொன் அகழும் எறும்புகள்

''மற்றும் தொலைவில் உள்ள வடபகுதி நாடுகளில், கஸ் பாடிரஸ்[1] அருகிலும், பாக்டையீகா[2] நாட்டிற்கு அருகிலும் வேறான இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்கள் பாக்டிரியர்களைப்[3] போன்ற வாழ்க்கையை நடத்துகின்றனர். அவர்கள் இந்தியக் குல மரபினர்[4] யாவரையும் விட போர் வீரத்தில் சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் தாம் பொன் துகளைச்[5] சேகரிக்கச் செல்கின்றனர். இந்தியாவின்[6] இந்தப் பகுதியில்தான் அப் பாலைவனம் இருக்கிறது.

இந்தப் பாலை வனத்தில்[7] மிகப் பெரிய அளவிலான ஒரு வகை எறும்பு[8] காணப்படுகிறது. அவ் எறும்பு குள்ள நரியை[9] விடப் பெரியது. ஆனால் நாயைப் போல[10] அவ்வளவு பெரியதன்று. அங்குப் பிடிக்கப்பட்ட எறும்புகள் பாரசீக அரசரின் அரண்மனையில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிராணிகள், பூமியைத் தோண்டும் பொழுது. மண்ணைக் குவியல் குவியலாக வெளிக் கொணர்ந்து தள்ளுகிறது—நம் நாட்டு எறும்புகள் மண்ணை வெளியே கொணர்ந்து தள்ளுவது போல. அவை நம் நாட்டு எறும்பைப் போலவே உருவ அமைப்பில் உள்ளன. அளவில் மிகப் பெரியனவே. அவை வாழும் மணலில் நிறையப் பொன் பதிந்துள்ளது. இப் பொன்னை எடுக்கவே இந்தியர்கள் அந்தப் பாலை வனத்திற்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்கின்றனர். ஒவ்வொருவரும் மூன்று ஒட்டகங்களைக்[11]

---

1. Caspatyrus 2. Pactyica 3. Bactrians 4. Indian tribes 5. Gold Dust 6. India 7. Desert 8. Ant 9. Fox 10. Dog 11. Camels

கவசமிட்டுத் தயாரித்துக் கொள்கின்றனர். அவற்றுள் ஒன்று பெண் ஒட்டகம். அதன்மீது அவர்கள் சவாரி செய்வர். மற்றும், அவ் ஒட்டகம் அண்மையில் குட்டியை ஈன்றதாக இருக்கும். அதன்மீது சவாரி செய்பவர் தமக்கு இருபுறங்களிலும் ஆண் ஒட்ட கங்களை அமர்த்திக் கொள்வர். அவர்கள் சவாரி செய்யும் ஒட்டகங்களின் ஓட்டம், குதிரையின் ஓட்டத்தினை நிகர்க்கும். குதிரைகளை விட அதிக கனமான சுமையைத் தாங்கக் கூடியவை. நான் ஒட்டகத்தை விவரிக்க வேண்டியதில்லை. காரணம், அஃது எவ்வாறு காணப்படுகிறது என்பதைக் கிரேக்கர்கள்[1] அறிந்ததே. ஆனால் ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். அது அவர்களுக்குப் புதிய செய்தியாக இருக்கும். அதாவது அதன் பின்னங் கால்களில் நான்கு தொடைகள் காணப்படும், நான்கு முழங்கால்கள் உள்ளன. அதன் பிறப்புறுப்புகள்[2] தன் வாலை நோக்கிக் காணப்படுகின்றன. இவ்வாறு அவர்கள் தம் பயணத்துக்குத் தம்மைத் தயார் செய்து கொள் கின்றனர். அவர்கள் திட்டமிட்டுச் செயல் பட்டு, நாளின் மிகச் சூடான வேளையில் – அந்த எறும்புகள் வெயிலின் சூடு தாங்காமல் தாங்கள் தோண்டிய குழிக்குள் சென்று இளைப் பாறிக் கொண்டிருக்கும் பொழுது— அவர்கள் சென்று அங்குக் குவிக்கப்பட்ட மண் குவியலை எடுத்துப் பைகளில் போட்டுக் கொண்டு விடுவர். இந்தப் பகுதியில், உலகின் மற்றப் பகுதிகளைப் போல், நடுப்பகலில் சூடு அதிகமாயிருப் பதில்லை. ஆனால் காலையில்தான் மிகச் சூடாக இருக்கும்- பொழுது விடிவதிலிருந்து கடைகள் மூடப்படும் வரை. இவ் வேளையில் –காலைப் பகுதியில் - கிரீஸில்[3] உச்சி வேளையில் சூரியன் காய்வதை விட அதிகச் சூட்டுடனே கிரணங்கள் வீசும். அப்பொழுது இவ் உள்ளூர் வாசிகள் தங்களை நீரில் மூழ்கச் செய்துகொள்கின்றனர் — அச் சூட்டைப் பொறுத்துக் கொள்ள. மதிய வேளையில் சூடு குறைந்து விடுகிறது. இங்கிருப்பது போலவேதான் அங்கும் காணப் படுகிறது; மதியத்திற்குப் பின்னர், மற்ற நாடுகளில் காலை வேளைகளில் காணப்படும் வெப்பநிலை போலவே காணப் படும். மாலை நெருங்கியதும் குளிர் அதிகமாகிறது சூரியன் மறைந்ததும் ஒரே கடுங் குளிர்தான்.

---

1. Greeks 2. Genitals 3. Greece

பொன் இருக்கும் இடத்தை இந்தியர்கள் அடைந்தவுடன், தாங்கள் கொணர்ந்த பைகளில் அங்குக் குவிக்கப்பட்டிருந்த மணலை நிரப்பிக் கொண்டு,தம் இருப்பிடத்துக்கு எத்துணை வேகமாகச் செல்ல முடியுமோ, அத்துணை வேகமாகச் சென்று விடுகின்றனர். (பாரசீகர்கள்[1] கூறுவதை நம்பினால்). அவ் எறும்புகள் மோப்பம் பிடித்து, அவ்வாறு மணலை எடுப்பவர்களை விரட்டி விரட்டித் துரத்தும். உலகில் வேறெந்தப் பிராணியும் அவ் எறும்புகளின் ஓட்டத்தை நிகர்க்க முடியாது. அவ் எறும்புகள் புறப்படுவதற்குமுன் அவ் இந்தியர்கள்[2] புறப்பட்டு ஓடாவிடின், ஓர் இந்தியனாகிலும் உயிருடன் திரும்பமாட்டான் என்பது உறுதி. ஆண் ஒட்டகங்கள், பெண் ஒட்டகங்களை[3] விட மிக மெதுவாகச் செல்கின்றன. அவை பின்னால் தங்கி விடுகின்றன. பெண் ஒட்டகங்களோ, தாங்கள் அண்மையில் ஈன்ற குட்டிகளை நினைத்துக் கொண்டு, மிகவேகமாக வீடு வந்து சேர்ந்துவிடும்—அவர்கள் கொணர்ந்த மணல் மூட்டையுடன்.

பாரசீக மக்களின் கருத்துப்படி, பெரும்பாலான பொன்[4] இவ்வாறுதான் பெறப்படுகிறது— நான் மேலே விளக்கியது போல. அவர்கள், பொன்னின் ஒரு சிறிய பகுதியைச் சுரங்கம்[5] வெட்டி எடுக்கின்றனர். ஆயினும் அதன் அளவு குறிப்பிடத் தக்கதாக இல்லை.

உலகின் தொலை நாடுகள் மிகுந்த கனிம வளங்களைப் பெற்றுள்ளன. அவை மிக உயர்ந்த விலங்கினங்களையும், தாவர இனங்களையும் விளைவிக்கின்றன. மிக மிகக் கீழ்த்திசையில் உள்ள நாடு நான் இங்கு விவரித்த இந்தியாவே.[6] இந்தியாவில் விலங்குகளும் பறவைகளும் வேறு இடங்களில் இருப்பதை விடப் பெரியனவாய் இருக்கின்றன— ஒரு விதிவிலக்கு மட்டும் கூறலாம் - இந்தியக் குதிரைகள்[7], நைசிய நாட்டுக் குதிரைகளை விட[8]- மிடிய நாட்டுக் குதிரைகளால்[9] பிறப்பிக்கப் பட்டவற்றை விட - உருவத்திலும் தரத்திலும்

1. Persians 2. Indians 3. Female Camels 4. Gold 5. Gold Mine 6. India 7. Indian Horses 8. Nicean Horses 9. Median Horses

குறைந்தனவே. இங்கேயும் பொன் சுரங்கத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப் படுகிறது; ஆற்று மணலுடன்[1] கூட அடித்து வரப்படுகிறது. அல்லது நான் மேலே கூறிய முறை போல எறும்புகளினின்று களவாடியது. மற்றும் சில மரங்கள் காடுகளில் பேரளவில் உள்ளன. அவை ஆட்டு ரோமத்தை விட நல்ல உயர்தரமான பொருளைத் தருகிறது[2]— அவை அழகாகவும், மிருதுவாகவும், தரத்தில் உயர்ந்தும் காணப்படுகின்றன. அவற்றை இந்தியர்கள் ஆடைகளை நெய்யப் பயன்படுத்திக் கொள்கின்றனர்."

விளக்கவுரை :

பொன் அகழும் எறும்புகள்[3]:

ஹிராடடஸ் கூறியதையே, மெகஸ்தனிஸூம்[4] (கி.மு. 302—296) கூறியுள்ளார்.

"சான்றாகப் பொன் அகழும் எறும்புகளைப் பற்றிய செய்திகளும், புனைந்துரை கதைகளும், விலங்குகள், மக்கள் முதலானவர்களின் அங்கமாறுபாடுகளும், மற்றும் அவர்கள் கொண்டுள்ள சிறந்த வியப்புமிக்க பழக்க வழக்கங்களும் அப்புனைந்துரைக் கதைகளுக்கு எடுத்துக் காட்டாய்க் கூறலாம்."

—(மெகஸ்தனிஸ் : அதி : 18, பக்கம் 108)

டையோகிஸார்ட்[5] : (கி.பி. 2ஆம் நூற்றாண்டு) பொன் அகழும் எறும்புகளைப் பற்றிக்கூறுகிறார்:

"மக்கள் பொன்னை எறும்புகளிடமிருந்து பெறுகின்றனர். அவ் எறும்புகள் நரிகளைவிட உருவத்தில் பெரியனவாகக் காணப்படுகின்றன. ஆனால், அவற்றின் நடை, வேகம் முதலிய யாவும் நம் கிரேக்க நாட்டு எறும்பு போலவே காணப்படு கின்றன. அவை பூமியை அகழ்ந்து பொன் எடுக்கின்றன. அவற்றால் வெளியே தள்ளப்படும் மண்ணில் - மணலில்—பொன் துகள் மிகுதியும் கலந்திருப்பதால், அம் மணல் மிகவும் ஒளி பொருந்தியதாகக் காணப்படுகிறது. இவ்வாறு அகழ்ந்தெடுத்த பொன் துகள் கலந்த மணல் மேடுகள் அருகருகே குவியல்

1. River Sand 2. Wool (Cotton) 3. Gold Digging Ants
4. Megasthanes 5. Diochysort

குவியலாகக் காணப்படுகின்றன. இவற்றைச் சூரிய ஒளியில் பார்த்தால் கண்கள் கூசும். சில பொழுது அப்பேரொளியால் கண்கள் கெட்டும் விடுவதுண்டு. பலர் இவ்வாறு அம்மண்ணை எடுக்க வந்து, தங்கள் கண்பார்வையை இழந்தும் விட்டிருக்கின்றனர். இப்பொன் அகழும் நிலத்திற்கு அருகில் உள்ள மக்கள் இப்பொன்னை எடுத்தேகும் எண்ணத்துடன், அச்சிறிய பாலைவனத்தைக் கடந்து, ஓட்டம் வாய்ந்த குதிரைகள் பூட்டிய வண்டிகளில் ஏறிவருகின்றனர். அவ் எறும்புகள், நடுப்பகலில் தாங்கள் தோண்டிய குழிகளுள் பதுங்கியிருக்கும் பொழுது, அவற்றால் வெளியே தள்ளப்பட்ட பொன் கலந்த மணலை எடுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிவிடுகின்றனர். இவ்வாறு அவர்கள் அம்மணலை எடுத்துச் சென்றதைச் சில எறும்புகள் அறிந்ததும், அவை மிகுந்த ஓட்டத்துடன் அப்பொன்மணலை எடுத்துச் சென்றவரைத் துரத்திச் சென்று, அவர்களைக் கடித்துத் துன்புறுத்துகின்றன. மற்றும், அவர்களுடன் இறுதிவரை போராடுகின்றன. அப்போரில் ஒன்று தாங்களாவது மடிய வேண்டும்; அல்லது அம் மணலை எடுத்துச் சென்றவர்களாவது மடிய வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அவ் எறும்புகள் போரிடுகின்றன. அதன் காரணமாக, அவ்வெறும்புகளுக்கு அப் பொன்னின் அருமை நன்கு தெரிந்ததே. ஆக அப்பொன் மணலுக்காக, அவ் எறும்புகள் தங்கள் உயிரையும் தர—இழக்கத்—தயாராக இருக்கின்றன என்பது இதனால் தெரிய வருகிறது."

—(டையோகிஸார்ட் : வரலாறுகள்)

ஹிராடடஸ் கூறியதையே, மெகஸ்தனிஸ்[1] கூறுகிறார். மெகஸ்தனிஸ் கூறியவற்றையே டையோகிஸார்ட்[2] கூறுகிறார். ஆக, பொன் அகழும் எறும்புகளைப் பற்றி முதன் முதல் எடுத்துக் கூறியவர் ஹிராடடஸே ஆவார்.

நைசிய நாட்டுக் குதிரைகள்[3] :

நைசியா என்பது ஆசியாவின்[4] புகழ்பெற்ற நகரம்; அது பித்தினியாவில்[5] இருந்தது. அங்கு மிடிய நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட குதிரைகளை,[6] நைசிய நாட்டுக் குதிரை களுடன் கலவி செய்து, புதிய வீரமிக்க குதிரைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

---

1. Megasthenes 2. Diochysort 3. Nicean Horses 4. Asia 5. Bithynia 6. Median Horses

மிடிய நாட்டுக் குதிரை[1] :

பாரசீக நாட்டின்[2] ஒரு பகுதி மிடிய நாடு. அக் குதிரைகள் மிக்க வீரம் பொருந்தியவை. இவற்றுடன் நைசிய நாட்டுப் பெட்டைக் குதிரைகளைக் கலவி செய்து, வீரமிக்க குதிரைகளை அக்காலத்தில் உற்பத்தி செய்தனர்.

ஆற்று மணலிலிருந்து பொன் எடுத்தல் :

முன்னர் ஆற்றங்கரை மணலில் பொன்துகள்கள் இருந்ததால் அப் பொன் துகள்கள் அம்மணலிலிருந்து சலித்து எடுக்கப் பட்டன.

"பொன் கொழித்து இழிதரும் போக்கருங் கங்கை."

—(பெரும்பாணாற்றுப் படை : 431)

மரத்தில் வளரும் ஆட்டுரோம வகை[3] :

மரத்தில் வளரும் "ஆட்டுரோமம்" என்று பஞ்சை வர்ணித்தார் ஹிராடடஸ். அதன் பெயரை அவருக்கு எவரும் சொல்லவில்லை போலும்! அதை எடுத்து ஆடை நெய்து கொள்கிறார்கள் என்று கூறினார். இங்குக் குறிக்கப்படுவது ஆடைநெய்யப் பயன்படும் பஞ்சே.[4]

"பஞ்சியுங் களையாப் புண்ணர்."

—(புறநானூறு : 353—16)

"இலவம் பஞ்சில் துயில்"

—(ஆத்திசூடி : 26)

"பஞ்சணி விரலினார்தம் படைநெடுங் கண்களெல்லாம்"

—(கம்பராமாயணம் : பாலகாண்டம் : உலாவியற் : 10)

"பஞ்சிய மெல்லடிப் பின்னைதிறத்து முன்னாள்"

—(நாலாயிர : பெரிய திரு : 3—4—4)

---

1. Median Horses 2. Persia 3. Sheep's wool from trees 4. Cotton

7. அரேபியா நாட்டின் வாசனைப் பண்டங்கள்

"மற்றும், மிக மிகத்தெற்குப் பக்கமாகக் காணப்படுகிறது அரேபியா நாடு[1]. அரேபியா நாடு ஒன்றுதான், சாம்பிராணி[2] போளம்[3], காஸியா[4] அதாவது இலவங்கப்பட்டை, இலவங்கம்[5], லெடனான்[6] என்று வழங்கப்படும் பிசின்வகை[7] ஆகியவற்றை விளைவிக்கின்றன. போளம் தவிர மற்றவை யாவும் சேகரிப்பதற்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்து விடும். சாம்பிராணியைச் சேகரிக்கும் பொழுது, அவர்கள் குங்கிலிய வகையை[8] எரிக்கிறார்கள் (இக் குங்கிலியம் பினீசியர்களால்[9] கிரேக்கநாட்டுக்குக்[10] கொண்டுவரப்பட்டது). அதனால் எழும்புகை, பறக்கும் பாம்புகளை[11] விரட்டி விடுகின்றது. இதே பாம்பினம் எகிப்தில்[12] பிரவேசிக்கத் தொடங்கிற்று; அப்பாம்புகள் சிறியவை; பல வண்ணங்களில் காணப்பட்டன; அவற்றுள் பெரும்பாலானவை சாம்பிராணி—அகில்—தரும் எல்லா மரங்களிலும் இருந்து கொண்டு, எவரையும் அம்மரங்களை அண்டவொடாமல் பாதுகாத்துவருகின்றன. அப்பாம்புகளை ஓட்டி விடுவதற்கான ஒரே வழி, குங்கிலிய வகையை அம்மரங்களின் அடிப்பகுதியில் எரித்துப் புகை எழுப்புவதாகும். அதில் எழும் புகை அப்பாம்புகளைத் துரத்திவிடும். அப்பாம்புகள் உலக முழுதும் பரவிவிடும் என்றும், இயற்கை அவ்வாறு பரவவிடாமல் தடுத்து நிறுத்துகிறது என்றும், விரியன் பாம்பைப்போல[13], இயற்கை அவற்றைப் பரவாமல் தடுத்துவிடுகிறது என்றும்

---

1. Arabia 2. Frankincense 3. Myrrh 4. Cassia 5. Cinnamon or clove 6. Ledanon 7. Gum 8. Storax 9. Phoenicians 10. Greece 11. Flying snakes 12. Egypt 13. Adder

அராபியமக்கள்[1] கூறுகின்றனர். ஒவ்வொரு சீவனை, மற்றொரு சீவன் உண்டு விடுகிறது. நச்சுத்தன்மை வாய்ந்த- கொடுமை வாய்ந்த - உயிரிகள் தங்கள் இனங்களைப் பெருக்கிக் கொள்ள முடிவதில்லை. முயல்[2]— எடுத்துக்காட்டாக—எல்லா விலங்குகளும் முயலை உண்கின்றன. பறவைகள்—மனிதர்கள் உள்பட— யாவும் மிகமிக அதிகமான அளவில் பெருகித் தம் இனம் அழிந்து போகாதவாறு காப்பாற்றி வருகின்றன. ஒரு முயலின் கர்ப்பப்பையில் உரோமம்[3] செறிந்திருப்பதைக் காணலாம்— அது சிறியதாயினும், பெரியதாயினும், அல்லது அப்பொழுதுதான் பிறந்த முயலாயினும் சரி.

மற்றும், சிங்கம்[4] எல்லா விலங்கினையும்விட மிக்க வன்மை வாய்ந்தது—கொடூரமிக்கது; ஒரே ஒரு சிங்கக்குட்டியைத் தான் பெறுகிறது. காரணம், அக்குட்டி பிறக்கும் பொழுது, தாய்ச்சிங்கம் தன் குட்டியை மட்டும் வெளித் தள்ளவில்லை; தன் கர்ப்பப்பையையும் வெளித்தள்ளி விடுகிறது. மீண்டும் கருவுற அதற்கு கர்ப்பப்பை கிடையாது. தாய் சிங்கத்தின் கர்ப்பப்பையில் வளரும் குட்டிச்சிங்கம் தன் நகங்களால் சிறிது சிறிதாக அக்கர்ப்பப் பையைக் கிழித்து விடுகிறது. அதன் காரணமாகத் தான் வெளிவரும் பொழுது, தானிருக்கும் கர்ப்பப்பையையும் வெளியே கொணர்ந்து விடுகிறது.

முயல்போல விரியன் பாம்புகளும்[5], பறக்கும் பாம்புகளும்[6] பெருக்கமடைந்து விடுமாயின், மனிதர்களால் உலகில் வாழமுடியாது. அதிர்ஷ்டவசமாக அவை அவ்வாறு பெருக்கமடைவதில்லை. காரணம் அவை— ஆணும் பெண்ணும் கலவி செய்யும் பொழுது—பெண் இனம், ஆண் இனத்தின் விந்து வெளிவரும் பொழுது, அந்த ஆண் பாம்பின் கழுத்தை இறுகக் கவ்விக்கொள்கிறது. அத்துடன் அவ் ஆண் பாம்பு இறந்து விடுகிறது. பெண்பாம்பு மட்டும் பிழைத்து விடுகிறதா? தான் கருவுற்ற குட்டிகளை ஈனும் பொழுது, அவை தாயின் கர்ப்பப்பையைச் சிதைத்து விடு

1. Arabians 2. Hare 3. Fur 4. Lion 5. Adders 6. Flying snakes

கின்றன. அந்நோய் தாங்காது அத்தாய்ப் பாம்பு இறந்து விடுகிறது. ஆகவேதான் அதன் இனம் பெருக்கமடையாமல் ஒரே நிலையில் இருக்கிறது. மற்றப் பாம்பினங்கள் முட்டையிட்டு, அம்முட்டைகளிலிருந்து பாம்புகள் வெளியேறுகின்றன. இப்பாம்புகள் மனிதர்க்குத் தீங்கு செய்யாதவை. அரேபியாவில் பறக்கும் பாம்பு மிக மிக அதிகமாக இறப்பதன் காரணம், அந்த இனம் உலகின் வேறு எந்தப் பகுதியிலும் கிடையாது. காணவும்பட மாட்டாது. ஆனால் விரியன் பாம்புகளோ— இவ்வுலகின் எல்லாப் பகுதிகளிலும் சகசமாகக் காணப்படுகின்றன.

இலவங்கப்பட்டையைச்[1] சேகரிக்க அரேபியர்[2] வெளிச் செல்லும் பொழுது, தங்கள் உடல்களையும், முகங்களையும் எருமை மாட்டின் தோல் கொண்டும், மற்ற விலங்கின் தோல் கொண்டும் முழுவதும் தங்களை மூடிக்கொள்கின்றனர். அந்தப் பட்டையுள்ள மரங்கள் ஆழமில்லாத ஏரிப்பகுதிகளில் விளைகின்றன. அங்கே இறக்கையுள்ள பருத்த வௌவால்கள்[3] இங்கும் அங்கும் தாவிப் பறந்து கீரிச்சிட்ட வண்ணம் உள்ளன. அவை மிகவும் நச்சுத் தன்மை பொருந்தியவை. இலவங்கப்பட்டையை மரங்களிலிருந்து எடுக்கும்பொழுது, அவ்வௌவால்கள் வெட்டுபவர்களின் கண்களுக்கு ஊறு செய்யாமல்[4] பார்த்துக்கொள்ள வேண்டும்.

இலவங்கம்[5] எடுக்கப்படும் முறை மேலும் வியப்பு மிக்கதாய் உள்ளது. இலவங்கம் எங்கிருந்து வருகிறது, எந் நாட்டிலிருந்து வருகிறது, எங்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்பவை அவர்களுக்குத் தெரியா. அவர்கள் கொண்ட கருத்து இதுதான்: எங்கோ ஓர் இடத்தில்—டையோனிஸஸ்[6] வளர்க்கப்பட்ட இடத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது என்பது மட்டுமே. அவர்கள் கூறும் விளக்கம் இதுவே: இலவங்கம் எனப்படும் உலர்ந்த பட்டைகள்— குச்சிகள்— அவை இலவங்கம் என்று பினீசியர்களிடமிருந்து[7] நாம் தெரிந்து கொண்டது— பெரிய பறவைகளால் எவரும் ஏறிச் செல்ல முடியாத மலையின் உச்சியில் கூடு கட்டச் சேகரிக்கப்படுகின்றன. அக் குச்சிகளைப் பெற அரேபியர்கள் ஒரு

---

1. Cassia 2. Arabians 3. Bats 4. Damaging the eyes 5. Cinnamon or clove 6. Dionysus 7. Phoenicians

தந்திரம் செய்கின்றனர். எருது, கழுதை அல்லது மற்ற விலங்குகளை வெட்டி, அதன் மாமிசங்களை ஒரு கூறாக இணைத்து, அக் கூண்டுகள் இருக்கும் இடத்திற்கு அடியில் வைத்து விடுகின்றனர். அம்மாமிச இணைப்புகள் அப் பறவைகள் உடன் நான்கைந்து ஒன்று கூடி எடுத்துச் செல்லும் அளவுக்கு இணைக்கப்படும். இத்துண்டுகளைப் பறவைகள் கண்டு, அவற்றை நான்கைந்து பறவைகள் ஒன்று கூடி, எடுத்துப் பறந்து தம் கூட்டில் வைத்துக் கொள்ள முயலும்பொழுது, அம்மாமிசத் துண்டுகளின் பளுத் தாங்க முடியாமல், அக்கூண்டுகள் நொறுங்கி கீழே விழுந்து விடும். அதற்காகக் காத்திருக்கும் மக்கள் ஓடிச் சென்று அக்குச்சிகளை எடுத்துக் கொள்வார். அக் குச்சிகளைச் சேகரித்து, மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

லெடனான்[1] அல்லது (அரேபியரின்[2] கூற்றுப்படி) லேடனம்[3] எனும் பொருளைப் பெறும் முறை மேலும் வியப்பூட்டுவதாக இருக்கும். அது வாசனை மிக்க பொருளாய் உள்ளது. ஆண் ஆடுகள்— வெள்ளாடுகள்[4]— அங்குள்ள புதர்களின் இலைகளைத் தின்னும் பொழுது, பிசின் போன்ற அதன் பொருள் அவ் ஆடுகளின் தாடிகளில் ஒட்டிக் கொண்டுவிடும். அவ் ஆட்டின் தாடிகளிலிருந்து அப் பண்டத்தைப் பெறுவர். அது வாசனை தரும் பொருளாகவும் தூபம் போடும் பொருளாகவும், சாம்பிராணி போன்றும்[5] பயன் படுத்தப்படுகிறது.

அரேபியாவைப்[6] பற்றிப் போதுமான அளவு கூறி விட்டேன். அந் நாடு முழுவதும் மண்வாசனையாக, நறு மண்வாசனை வீசுகிறது. மற்றொன்று கூறப்பட வேண்டியது, செம்மறியாடு[7]. அங்கு இருவகை ஆடுகள் காணப்படுகின்றன. அவை போன்று வேறு எங்கும் காண முடியாது. முதல் வகைச் செம்மறி ஆட்டுக்கு 4½ அடிக்குக் குறையாமல் நீளமுள்ள வால் காணப்படும். அவ்வால்களைப் பூமியில் படும்படிச் செய்தால், தரையின் உராய்வால்

1. Ledanon 2. Arabians 3. Ladanum 4. He- goats 5. Frankincense 6. Arabia 7. Sheep

அவற்றில் புண்கள் உண்டாகி, ஆடுகளைத் துன்புறுத்தி விடும். அதைத் தடுக்க அவற்றின் வால்களில் சிறிய வண்டி போன்ற சாதனங்களைப் பொருத்தி, அவ் வால்கள் பூமியில் படாதபடி அமைத்து விடுகின்றனர். இரண்டாவது வகை செம்மறியாட்டிற்கு 18 அங்குலமுள்ள தட்டையான வால் உண்டு.

தென் மேற்கு எல்லைக்கப்பால் உள்ள நாடு எதியோபியா[1]. இங்கே பொன் பெருமளவில் கிடைக்கிறது. மற்றும் உருவத்தில் பெரிய யானைகளும்[2], அவற்றின் தந்தங்களும்[3] கிடைக்கின்றன. காடு போல மரங்கள் வளர்கின்றன. இங்குள்ள மக்கள், உலகில் உள்ள மக்களை விட உயரம் வாய்ந்தவர்களாய் உள்ளனர். நல்ல உடற் கட்டுடனும், நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

தகரத் தீவுகள்[4] என்பன பற்றி எனக்குத் தெரியாது. இருப்பினும் நமக்குத் தகரம் வந்து கொண்டுதானிருக்கிறது. ஒரு கால் தகரமும்[5], ஓர்க்கோலையும்[6] உலகின் இறுதிப் பாகத்திலிருந்து வருகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது."

விளக்கவுரை:

அரேபியா நாடு[7]: இங்கு அரேபியா நாடு என்று குறிப்பிடப் படுவதன் பொருள், அரேபியன் கடலை[8] ஒட்டி விளங்கும் இந்திய மேற்குக் கடற்கரைப் பகுதியும்[9], ஆப்பிரிக்காவின்[10] வடகிழக்குப் பகுதியும், எதியோபியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியும்[11] ஆகும். இந்தியாவின் கேரளப்பகுதியில்[12] விளையும் வாசனைப் பண்டங்கள் யாவும் அரேபியாவில் உள்ள சில துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து ரோம்[13], கிரேக்கநாடு[14], ஆசியா மைனர்[15] ஆகிய பகுதிகளுக்குப் பங்கிடப்பட்டு வந்தன. அதன் காரணமாகத்தான் வாசனைப் பண்டங்கள் அரேபியாவில் விளைந்தன என்று ஹிராடடஸ் கூறுகிறார்.

---

1. Ethiopia 2. Elephant 3. Tusks 4. Tin Island 5. Tin 6. Amber 7. Arabia 8. Arabian Sea 9. West coast of India 10. Africa 11. Eastern Coast 12. Kerala 13. Rome 14. Greece 15. Asia Minor

சாம்பிராணி[1]: இந்தியச் சாம்பிராணியும், அகிலும்[2] நறுமணப்புகை எழுப்பி, மனத்திற்கு ஒரு வகைக் கிளர்ச்சியை ஏற்படுத்தி விடுகிறது. இப்பொருள் இந்தியாவின் மேலைக் கடற்கரையிலுள்ள காம்பே[3] எனும் இடத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு, அரேபியா, ரோம் முதலிய மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. மற்றும் பக்கம் 193, குறிப்பு—7 பார்க்கவும்.

போளம்[4]: போளத்தில் 3 வகைகள் உள்ளன:

1. வெள்ளைப்போளம்— பால்சமோர்தேந்திரான்[5] என்று வழங்கப்படுகிறது.

2. கரியபோளம்—ஆலோ[6] என்று வழங்கப்படுகிறது.

3. சிவப்புப்போளம்—ஹெபடிக் ஆலோ[7] என்று வழங்கப்படுகிறது.

வெள்ளைப்போளம், பிடெல்லியம்[8] என்றும் வழங்கப்பட்டது. இம்மருந்துச் சரக்கு விவிலிய நூலாகிய பைபிளில்[9] குறிப்பிடப்பட்டுள்ளது.

"There is bdellium and onyx stones."

—(Old Testament Genesis- 2-18)

மற்றும் பக்கம் 191, குறிப்பு—3 பார்க்கவும்.

காஸியா[10] எனும் இலவங்கப்பட்டை: காஸியா என்பது இலவங்கப்பட்டையைக் குறிப்பிடும் சொல்லாகும். எபிரேயக் குருமார்கள்[11] இலவங்கத்தைப்[12] பயன்படுத்தி வந்தனர்; இலவங்கத் தைலமும்[13] பயன்படுத்தப்பட்டு வந்தது.

பிளினி (கி.பி. 23-79) குறிப்பிடுகிறார் (பிளினி: அதி. 37)

பெரிப்ளூஸ் (கி.பி. 50-80) நூல் குறிப்பிடுகிறது.

"இலவங்கம் மிகவும் விலை உயர்ந்த பொருளாகும். இது தமிழில் கருவாப்பட்டை என்று வழங்கப்படும். அதன் பத்திரி (இலைகள்), பூ, தைலம் ஆகிய யாவும் மருந்தாகப் பயன்பட்டன.

---

1. Frankincense 2. Agil 3. Cambay 4. Myrrh 5 Balsamodendrum 6. Aloe 7. Hepatic Aloe 8. Bdellium 9. Bible 10. Cassia 11. Egyptian priests or Hebrew priests 12 Clove 13. Clove oil

அதன் காரணமாக அவை மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன.''
—(பெரிப்ளூஸ் அதி: 9, பக்கம் 36)

மற்றும் பக்கம் 193, குறிப்பு-1 பார்க்கவும்.

இலவங்கப்பட்டை சேகரிக்கும் முறை வியப்பு மிக்க தாயுள்ளது.

இலவங்கம்: இது கிரேக்க மொழியில் சின்னமன்[1] என்று வழங்கப்பட்டது. இந்தியாவில் கேரளப் பகுதியிலிருந்து[2] இலவங்கம் ஏற்றுமதி செய்யப்பட்டது. மருத்துவத் தந்தை ஹிப்பாக்ரடீஸ்[3] (கி.மு. 460-357) என்பவராலும் இலவங்கமும் அதன் தைலமும் பயன்படுத்தப்பட்டன..

மார்க்கோ போலோ (கி.பி. 1254-1324) கூறுகிறார். ''இப் பண்டம் மலையாளத்திலும், இலங்கையிலும், திபெத்திலும் விளைகிறது. இது பருத்து வளர்கின்றது. இது ஜனவரியில் பூ விடுகிறது ஏப்பிரலில் பழம் பழுக்கிறது; மே, ஜூன் மாதங்களில் அதன் பட்டைகளில் தைலம் நிரம்பிக் காணப்படுகிறது. அப் பொழுது அப்பட்டைகள் செதுக்கப்பட்டு, அவற்றிலிருந்து இலவங்கத் தைலம் இறக்கப்படுகிறது.''
—(மார்க்கோ போலோ: பயண வரலாறு)

ஸ்டிராபோ (கி.மு. 64- கி.பி. 24) கூறுகிறார்: ''இங்கேதான் சாம்பிராணியும்[4] வாசனைப்பண்டங்களும்[5] மிகுதியாக விளை கின்றன. இங்கே உள்ள இஸிஸ் நதியும், நைல்நதியும், இலவங்கம் உற்பத்தியாகும் இடம் வரை செல்கின்றன.''
—(ஸ்டிராபோ- வரலாறு)

லெடனான்[6]: இஃது ஒரு பிசின் வகையாகும். இது பெறப் படும் முறை இங்குக் கூறப்படுகிறது. வெள்ளாடுகளின் தாடி களில் ஒட்டிக் கொண்டுள்ள பிசினை எடுத்துப் பயன் படுத்து கின்றனர். அதுவே லேடனம்[7] என்றும் வழங்கப்படுகிறது.

குங்கிலியம்: இது ஸ்டோரேக்ஸ்[8] என்று வழங்கப்படுகிறது. இது தூபம் போடப் பயன்படும். இதைத் தூபமிட்டுப் பறக்கும் பாம்புகளை அப்புறப்படுத்தி விடுகிறார்கள்.

---

1. Cinnamon 2. Kerala 3. Hippocrates 4. Frankincense 5. Aromatic Substances 6. Ledanon 7. Ladanum 8. Storax

செம்மறியாடு: வெள்ளாடு, செம்மறியாடு— இவற்றை யொட்டி விவரித்திருப்பதானது, ஹிராடடஸ் இவை யாரோ சொல்லக் கேட்டு எழுதியவை என்று ஊகிக்கப்படுகிறது.

எதியோபியா[1]: இது ஆப்பிரிக்காவின்[2] வடகிழக்குப் பகுதி யில் உள்ளது. அங்குள்ளவர்கள் நிறம் கறுப்பு. நல்ல உடல் கட்டு உடையவர். மற்றும் பக்கம் 253, குறிப்பு—6 பார்க்கவும்.

தகரத் தீவுகள்[3]: தகரம்[4] இந்தியாவின் தென்கிழக்கில் உள்ள மலேயா[5] தீபகற்பத்திலிருந்து எடுத்து ஏற்றுமதி செய்யப் பட்டது. ஆனால் ஹிராடடஸுக்கு, அத் தகரம் எங்கிருந்து வருகிறது என்பது தெரியாது என்று கூறிவிட்டார்.

ஓர்க்கோலை: இது அம்பர்[6] என்று வழங்கப்பட்டது. இது வாசனைப்பண்டமாக விற்கப்பட்டது. இதுவும் இந்தியாவின் தென்கிழக்குத் தீவுகளிலிருந்து[7] எடுக்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டது. எகிப்திய குருமார்கள்[8] இதைக் கடவுளுக்கு நறுமணம் ஊட்டப் பயன்படுத்தினர்.

மற்றும், ஓர்க்கோலை கடல்படு திரவியங்கள் ஐந்தனுள் ஒன்றாகும்.

—(சீவகசிந்தாமணி 63-உரை)

---

1. Ethiopia 2. Africa 3. Tin Islands 4. Tin 5. Malaya Archipilago 6. Amber 7. East Indies 8. Egyptian priests

8. மருத்துவர் டெமோசிடஸ்

"பிரிஜியா[1], லிடியா[2], அயோனியா[3], ஆகிய பகுதிகளின் ஆளுநராயிருந்த ஒரேடஸ்[4] என்பவரைச்சந்திக்கும் எண்ணத் துடன், பாலிக்ரடீஸ்[5], கிரேக்க நாட்டைச்[6] சார்ந்த சாமோஸ்[7] தீவிலிருந்து புறப்பட்டார். ஆனால், பாலிக்ரடீஸின் மகள்' தான் ஏதோ கெட்ட— தீய- கனவு கண்டதால், தன் தந்தை யைப் பயணம் ஏற்க வேண்டாமெனத் தடுத்து நிறுத்தினாள். இருப்பினும் பாலிக்ரடீஸ் ஒரேடஸ் என்பவரைப் பார்க்கப் புறப்பட்டு விட்டார். தம்முடன் சில நண்பர்களையும் அழைத்துச் சென்றார். அந்நண்பர்களுள் முக்கியமானவர் குரோடோனா[8] எனும் இடத்தைச் சார்ந்தவரும், காலிபோனின்[9] மகனுமான டெமோசிடஸ்[10] என்பவர் ஆவார். அக்காலத்தில் அவர் சிறந்த மருத்துவராகக்[11] கருதப் பட்டார். டெமோசிடஸ் தம் தந்தையின் துன்புறுத் தலைத் தாங்க முடியாமல், பாலிக்ரடீஸுடன் மெக்னீ ஷியாவை[12] அடைந்தார். சைரக்யூஸ்[13] பிரபுவைத் தவிர, மற்ற எந்தக் கிரேக்க அரசரையும் பாலிக்ரடீஸுடன் இணைத்து, ஒப்பிட்டுக் கூற முடியாது. அத்துணை அளவு புகழும், நல்ல தன்மையும் பெற்றிருந்தார். ஆனால் பாலிக்ரடீஸ் ஊரில் நுழைந்ததும், அவர் வருகையை அறிந்து, தம் ஆள்களை அனுப்பி அவரைக் கொன்று விடுமாறு ஒரேடஸ் கட்டளையிட்டிருந்தார். அவ் ஆள்களும் பாலிக்ரடீஸைக் கொன்று, அவர் உடலை ஒரு சூலச் சிலு வையில் தொங்க விட்டிருந்தனர். அவருடன் வந்த சாமோஸ்

---

1. Phrygia 2 Lydia 3. Ionia 4. Oroetus 5. Polycrates 6. Greece 7. Samos 8. Crotona 9. Calliphon 10. Democedes 11. Physician 12 Magnesia 13. Syracuse

தீவினரை மட்டும்[1] விட்டு விட்டு, மற்றவர்களை யுத்தக் கைதிகளாகச் சிறையிலடைத்து விட்டார்.

பாலிக்ரடீஸைக் கொன்ற ஒரேடஸை எவ்வாறு பழி வாங்குவது என்று பாரசீக மன்னர் டாரியஸ்[2] யோசனை செய்தார். ஒரு முடிவுக்கும் வந்தார். அதன் படி, சில நம்பிக்கையான ஆள்களைக் கூப்பிட்டு, சில ஓலைகளைத் தம் கையொப்பமிட்டு எழுதி, அதை மெக்னீஷியாவில் உள்ள ஒரேடஸ் முன் சென்று உரக்கப் படிக்குமாறு கட்டளையிட்டிருந்தார். அத்தூதுவனும் அக்கடிதங்களை ஒவ்வொன்றாக அவ் ஆளுநர் ஒரேடஸ்[3] முன் உரக்கப் படித்தான். முதல் கடிதத்தைப் படிக்கும் பொழுது, அவரைச் சூழ்ந்து நின்றவர்கள் டாரியஸ் மன்னருக்கு விசுவாசமாக இருக்கிறார்களா என்பதை அறிந்து கொண்டான். இரண்டாவது கடிதத்தைப் படிக்கும் பொழுது, அவர்கள் தாங்கள் ஏந்தியிருந்த ஆயுதங்களைத் தூதுவன் காலடியில் வைத்தனர். மூன்றாவது கடிதமும் படிக்கப் பட்டது. ''நீங்கள் யாவரும் ஒரேடஸைக் கொல்ல வேண்டும். இது டாரியஸ் மன்னரின் ஆணை,'' என்ற வாசகத்தைப் படித்ததும், ஒரேடஸைச் சூழ்ந்திருந்த காவலர்கள் யாவரும் ஒரேடஸ்மீது பாய்ந்து, அவரை வெட்டி வீழ்த்தினர். அத்துடன் ஒரேடஸின் சரித்திரமும் முடிவு பெறுகிறது. அரசர் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று நினைத்தது எளிதில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

ஒரேடஸ் இறந்தவுடன் அவரது சொத்துகள் யாவும் அரசுடைமையாக்கப்பட்டன. அடுத்துச் சில நாள்களுள், டாரியஸ் மன்னர், தம் நாட்டிற் கருகில் இருந்த காட்டிற்கு வேட்டையாடச் சென்றார். அங்கு ஒரு சிறிய சகதி உள்ள இடத்தைத் தாண்ட வேண்டுமென்று டாரியஸ் நினைத்தார். அதைத் தாண்டும் பொழுது, தம் கால் சுளுக்கிக் கொண்டது;[4] சற்றே முறுக்கியும் கொண்டது. உடன் அரசர் தம் அரண்மனையிலுள்ள எகிப்திய மருத்துவர்களை[5] அழைத்துத் தமக்கு நேர்ந்த கால் முறுக்கைச்சீர் செய்யுமாறு பணித்தார். ஆனால் அவர்கள் டாரியஸ் மன்னரின் கால்

1. Samians 2. Persian King Darius 3. Oroetus 4. Sprain in his leg 5. Egyptian Physicians

வலியை அதிகமாக்கி விட்டனர். அப்பொழுது டாரியஸுக்கு ஒரு பெரியவர் கூறினார். "நீங்கள் டெமோசிடஸ்[1] எனும் பெயர் கொண்ட கைதேர்ந்த மருத்துவரை உடன் அழைத்து வாருங்கள். உடன் வலி முழுவதையும் குணப்படுத்தி விடுவார் என்றும் கூறினார். டாரியஸின் ஆள்களும் சென்று டெமோசிடஸ் என்பாரைக் கண்டு பிடித்தனர். அவர் கந்தல் ஆடையும், கைகளில் இரும்புச் சங்கிலி பிணைக்கப்பட்டும் இருந்தார்.[2] ஒடேஸின்[3] அடிமை ஆட்களுள் கேட்பாரற்றுக் கிடந்தார். டாரியஸின் ஆள்கள் சென்று டெமோசிடஸை அழைத்து வந்தனர். டாரியஸ் அவரை நோக்கி "ஐயா, உமக்கு மருத்துவம் செய்யத் தெரியுமா? உம்மைப் பற்றி கேள்விப் பட்டுள்ளேன். என்ன சொல்கிறீர்?" என்று கேட்டார். அதற்கு டெமோசிடஸ், தாம் அடிமை நிலையி லிருந்து விடுபட்டுக் கிரேக்க நாட்டுக்குத்[4] திரும்பிப் போக முடியாதென்றெண்ணி, "எனக்குத் தெரியாது," என்றார். உடன் டாரியஸ்[5] தம் ஆள்களிடம் இரும்பு சூலத்தையும் கசையையும் கொண்டு வரச் சொன்னார். உடன் டொமோ சிடஸ், "சில மருத்துவர்களிடம் கேட்டு வைத்துள்ளேன், அவ்வளவே," என்று பதிலிறுத்தார். "சரி, அதுவே போதும். என் கால் முறுக்கையும், வலியையும் குணப்படுத்தும்," என்று டாரியஸ் கூறி, அவருடைய விலங்குகளை அவிழ்த்துத் தம்மை அவரிடம் மருத்துவச் சிகிச்சைக்கு ஒப்படைத்தார். டெமோசிடஸ் சில மூலிகைகளைக் கொண்டு வரச் செய்து, அவற்றைப் பிழிந்து, அரசரின் கால்களின் மேல் தடவி, அரசர் அன்று தூங்குமாறு செய்தார். அடுத்து அரசர் கொஞ்சம் கொஞ்சமாக எழுந்து உலாவினார். தம் கால் முறிந்து விட்டதோ எனப் பயந்த டாரியஸ் அரசர் சில நாள்களில் பூரண குணம் அடைந்து விட்டார். டெமோசிடஸுக்கு அரசர் டாரியஸ் நிறையப் பரிசுகள் தந்தார் உடன் தம் அந்தப்புரத்துக்கு அவரை அனுப்பி, தம் மனைவியர்களுக்கு அம்மருத்துவரை அறிமுகப் படுத்தி விட்டார். அவர்களும் தங்கள் கணவரின் காலை முழுவதும் குணமாக்கியதற்காக, உடன் தங்கள் அலமாரிகளைத்

---

1. Democedes 2. Chained hands 3. Oates 4. Greece 5. Darius

திறந்து கோப்பை கோப்பையாகப் பொன் நாணயங்களை அவருக்குப் பரிசாக அளித்தனர். அவ்வாறு கோப்பைகளில் அள்ளி எடுக்கும் பொழுது கீழே விழுந்து சிதறிய நாணயங் களை அவர்கள் பணியாளன் சிடான்[1] என்பவன் பொறுக்கி வைத்துக் கொண்டதன் காரணமாக அவன் சேர்த்து வைத் ததே பெருஞ் செல்வமாக விளங்கிற்று என்றால், டெமோசிடஸ் அந்தப்புர அரசிகளிடமிருந்து பெற்ற தொகையின் மதிப்பு எவ்வளவு இருக்கும்? இலேசில் கணக்கிட முடியுமா? முடியாது.

டெமோசிடஸ் முதலில் குரோடோனாவில்[2] வசித்து வந்தார். தம் தந்தையின் துன்புறுத்தலைப் பொறுக்க முடியாமல், அவர் ஈஜினா[3] எனும் இடத்துக்கு வந்தார். அவ்வூர் மக்கள் அவருக்கு மாதம் 1 டேலன்டு[4] அதாவது 240 பவுன் ஊதியம் அளித்தனர். அதற்கு அடுத்து ஆதன்ஸ் நகர மக்கள்[5] அவரை மருத்துவராக ஏற்படுத்தி, மாதம் 100 மினே[6] அதாவது 400 பவுன் ஊதியம் கொடுத் தனர். அடுத்த ஆண்டில் பாலிக்ரடீஸ்[7] அவருக்கு 2 டேலன்டு அதாவது 480 பவுன் ஊதியம் தந்து, சாமோஸ்[8] தீவுக்கு அவரை அனுப்பினார். டெமோசிடஸின்[9] மருத் துவப் புகழ் மேலும் மேலும் ஓங்கியது; வருமானமும் அதிக மாகக் கிடைக்கத் தொடங்கிற்று.

அச் சமயத்தில்தான் பாலிக்ரடீஸுடன் சேர்ந்து ஒரேடஸ் ஆளுநரிடம்[10] வந்தார். அங்குப் பாலிக்ரடீஸ் கொலை செய்யப்பட, டெமோசிடஸ் சிறைக் கைதியாக்கப்பட்டு, சங்கிலி கொண்டு பிணைக்கப்பட்டு அவதியுற்றிருந்தார். அவரைக் கைதியாக்கிய ஆளுநர் ஒரேடஸும் டாரியஸ்[11] ஆள்களால் கொல்லப்பட்டு விட்டார். அதன் பிறகு டெமோ சிடஸ், தம் சுளுக்கேறிய கால்களைக் குணமாக்க டாரியஸ் அரசரால் வரவழைக்கப்பட்டார். அவ் அரசரின் கால் முறிவைக் குணப்படுத்திப் பெரும் அளவில், அவரிடமிருந்து சன்மானம் பெற்றார்.

---

1. Siton 2. Crotona 3. Aegina 4. Talent 5. Athenians 6. Minae 7. Polycrates 8. Samos 9. Democedes 10. Oroetus 11. Darius

டாரியஸ் அரசருக்குக் காலை குணமாக்கிய பிறகு, டெமோசிடஸ் சூஸா நகரில்[1] பெரிய வீட்டில் தங்கி, அரசர் விருந்தில் அவ்வப்பொழுது பங்கு கொண்டார். அவருக்கு எல்லா வசதிகளும் சௌகர்யங்களும் அளிக்கப்பட்டன—ஒன்றைத்தவிர—கிரேக்க நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கான விடுதலை ஒன்றைத் தவிர. எகிப்திய மருத்துவர்களுக்குத்[2] தரப்பட்ட கண்டனப் பத்திரத்தை மீண்டும் திரும்பப் பெற்று, அரசர் அவர்களைத் தண்டிக்காமலிருக்க ஏற்பாடு செய்தார். மற்றும், எலிஸ்[3] நாட்டினின்று வந்த குறி சொல்பவர் ஒருவரை[4] அடிமைகளுடன் வாழ்வதினின்றும் தடுத்து, அவரைத் தம் இருப்பிடத்துக்குக் கொணர்ந்து வைத்துக் கொண்டார்.

இத்துடன் டெமோசிடஸின் கதை முடிந்துவிட வில்லை. சிலநாள்களுக்குள் டாரியஸின்[5] மனைவி ஒருத்திக்கு மார்பில் கட்டி ஒன்று தோன்றி, அது உடைந்து, சீழ் பெருகிப் பெரும் துன்பத்தைக் கொடுத்து வந்தது. அதை வெளியில் சொல்லிக் கொள்ள அவ் அரசி மிகவும் வெட்கப்பட்டாள்; இருப்பினும் வேதனை தாங்க முடியவில்லை. உடன் டாரியஸ் டெமோசிடஸைத்[6] தம் மனைவியிடம் அனுப்பி, அக்கட்டிக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கக் கோரினார். டெமோசிடஸும் அவள் கட்டியைப் பரிசோதித்து, தக்க மருந்திட்டு, சில நாள்களில் பூரண குணம் அடையச் செய்து விட்டார். அதன் காரணமாக, டெமோசிடஸ் அவ்வரசியின் பேரன்புக்குப் பாத்திரரானார்.

டெமோசிடஸ் ஒரு நாள் அரசியிடம், கிரேக்க நாட்டை[7] டாரியஸ் அரசர் வெல்ல வேண்டும் என்றும், அதற்கான முயற்சிகளைச் செய்யப் பணியாளர்களையும், அவர்களுக்கு வழிகாட்டத் தம்மையும் அனுப்பி வைக்க அரசரிடம் பரிந்துரைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அரசியும் அரசரிடம் தக்க தருணத்தில் இதைத் தெரிவித்து, டெமோசிடஸ் வழி காட்டுவதற்காகக் கிரேக்க நாடு செல்வதற்கு அனுமதியும் பெற்று விட்டார். அரசர் டாரியஸுக்கும்

1. Susa 2. Egyptian Physicians 3. Elis 4. Soothsayer 5. Darius 6. Democedes 7. Greece

கிரேக்க நாட்டின்மீது படையெடுத்து வெல்ல வேண்டு மென்ற ஆவல் நீண்டநாள்களாக அவர் உள்ளத்தில் கிளர்ந்த வண்ணமிருந்தது. அதை உத்தேசித்துத் தம் வீரர்களுடன் டெமோசிடஸை வழி காட்டக் கிரேக்க நாட்டிற்கு அனுப்பி வைத்தார். டெமோசிடஸும் அரசர் அனுப்பிய வீரர்களுடன் கிரேக்க நாட்டில் டாரென்டம்[1] எனும் பகுதியை அடைந்தார். டாரென்டம் அடைந்து, ஒரே கூட்டம் நிறைந்த இடத்தில் புகுந்து மாயமாய் மறைந்து விட்டார். அவருடன் சென்ற வீரர்கள் வழி தெரியாமல் திண் டாடினர். எவ்வாறோ, இன்னல்கள் ஏற்று, அவ் வீரர்கள் ஆசியாவை அடைந்தனர். அவர்கள் புறப்படு முன்னர் டெமோசிடஸ் அவர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்லி, அதை அரசர் டாரியஸிடம் கூறுமாறு பணித்தார். அதாவது பாரசீக மன்னரின் அவையில் பலரால் புகழ்ந்து கொண் டாடப்படும் மைலோவின்[2] மகளை மணக்கப் போவதாகச் சொன்னார். இதனால் அறிய வேண்டியது, டெமோசிடஸ் தம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் போற்றக் கூடிய பெரும் புகழ் பெற்ற மருத்துவர் என்பதே. டாரியஸ் இவ்வுண் மையை அறிய வேண்டும் என்பதற்காகவே தமது திருமணச் செய்தியை எட்ட விட்டார். டெமோசிடஸும், மைலோவின் மகளை மணந்து கொண்டார்.

பாரசீகர்கள் குரோடோனாவிலிருந்து[3] புறப்பட்டு, இயபிஜியக் கடற்கரையில்[4] கப்பலுடைந்து அவர்கள் சிறைப் படுத்தப் பட்டனர். அதன் பிறகு கில்லஸ்[5] என்பவரால் அப் பாரசீகர்கள்[6], டாரியஸ் மன்னரின்[7] அவைக்கு அழைத்து வரப்பட்டனர். அச் சிறைக் கைதிகளை மீட்க டாரியஸ் பெரும் பொருள் கொடுக்க வேண்டியதாயிற்று.

அவ்வாறு கிரேக்க நாட்டினுள் முதன் முதல் அடி யெடுத்து வைத்த பாரசீகர்கள் டாரியஸ் அரசரின் போர் வீரர்களே. அரசர்கள் அங்குச் சென்ற காரணம், கிரேக்க நாட்டைப் பற்றிய செய்திகளை நன்கு அறிந்து வரவேண்டும் என்பதே.

---

1. Tarentum 2. Milo 3. Crotona 4. Iapygian 5. Gillus 6. Persians 7. Darius

இதையடுத்து டாரியஸ்[1] சாமோஸ் தீவின் மீது[2] படையெடுத்து அதைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார். சாமோஸ் தீவிலுள்ள மக்களை— மீன் பிடிக்கும் வலையில் ஒரே முறையில் மீன்களை அடைத்து இழுப்பது போல— அடிமையாக்கி விட்டார். சாமோஸ் தீவினர் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அத் தீவின் மக்கள் விடுதலையை[3] விரும்புபவர் அல்லர் என்பதும், அடிமை வாழ்வை ஏற்பதையே பெரிதும் விரும்பினர் என்பதும் டாரியஸ் சாமோஸ் தீவின் படையெடுப்பினால் தெரிய வந்த செய்திகள்.''

விளக்கவுரை:

பாலிக்ரடீஸ்[4] (கி.மு. 532-522): இவர் சாமோஸ் தீவின் கொடுங்கோல் மன்னருள் ஒருவர். மிகுந்த செல்வாக்குப் படைத் திருந்தார். இவரிடம் கப்பற் படை இருந்தது. தம் அருகில் இருந்த பல தீவுகளைத் தம் ஆதிக்கத்தில் வைத்திருந்தார். கற்றோர் பலர், கவிஞர் பலர், இவர் அவையை அலங்கரித்தனர். இருப்பினும், சார்டிஸ்[5] பகுதியின் சத்ராபியான[6] ஒரேடஸ் இவரைத் தம் இருப்பிடத்துக்கு அழைத்து, இவர் வந்ததும் இவரைக் கொன்று சிலுவையில் அறைந்தார் (கி.மு. 522). பாலிக்ரடீஸ் ஆட்சி செய்த காலம் கி. மு. 532-522 அதாவது 10 ஆண்டுகள் ஆண்டார் என்று கூறப்படுகிறது.

ஒரேடஸ்:[7] டாரியஸ் அரசராக அரியணை ஏறியவுடன் ஒரேடஸ் என்பவரைப் பிரிஜியா[8], லிடியா[9], அயோனியா[10] ஆகிய பகுதிகளுக்கு ஆளுநராக[11] நியமித்தார். ஒரேடஸ் பாலிக்ரடீஸை நயவஞ்சகமாகக் கொன்றதால், அதற்கு அவரைப் பழி வாங்க டாரியஸ் அரசர் ஆள்களை அனுப்பி அவரைக் கொன்று போடச் செய்தார். அவர் இறந்த ஆண்டு கி.மு. 521 ஆகும்.

பிரிஜியா: இப்பகுதி மூன்றாவது சத்ராபியைச் சார்ந்ததாகும்.

லிடியா: இப்பகுதி இரண்டாவது சத்ராபியைச் சார்ந்திருந்தது எனத் தெரிய வருகிறது.

---

1. Darius 2. Samos 3. Liberty 4. Polycrates 5. Sardys 6. Satrapy 7. Oroetes 8. Phrygia 9. Lydia 10. Ionia 11. Governor

அயோனியா: இப்பகுதி முதல் சத்ராபியைச் சார்ந்திருந்தது. இம்மூன்று பகுதிகளும் இணைந்ததே சார்டிஸ் சத்ராபி என வழங்கப்பட்டது. அச் சத்ராபிக்கு ஒரேடஸ் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். அயோனியர் என்பது யவனர் என்று தமிழில் வழங்கப்பட்டது. காவிரிப் பூம்பட்டிணத்தில் யவனரிருக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

''யவனர் இயற்றிய வினைமாண் பாவை''

(நெடுநல் வாடை: 101)

மற்றும் பக்கம் 260, குறிப்பு-7, பக்கம் 206, குறிப்பு-1 பார்க்கவும்.

டெமோசிடஸ்[1]: இவர் குரோடோனாவைச்[2] சார்ந்த மருத்துவர்[3]. முதலில் ஈஜினாவிலும்[4], பிறகு ஆதன்ஸ் நகரிலும்[5], அதன் பின்னர் சாமோஸ் தீவிலும் மருத்துவம் செய்து[6] புகழ் பெற்றார். அவர் பாலிக்ரடீஸுடன்[7] கி. மு. 522-ல் சிறைப்படுத்தப்பட்டார். டாரியஸ் அரசரின்[8] அழைப்பின் பேரில், சூஸா[9] நகரத்துக்கு வரவழைக்கப்பட்டார். அங்கே அவர் அரசரின் கால் முறிவையும், அவர் மனைவியின் மார்பில் ஏற்பட்ட கட்டியையும் குணப்படுத்திப் பெரும் புகழும் செல்வமும் அடைந்தார். தந்திரமாக அரசர் மனைவியிடம், கிரேக்க நாட்டை வெல்ல, அதைக் கண்ணோட்டம் செய்ய வேண்டுமென்று கூறி, அரசரின் அனுமதி பெற்று, கிரேக்க நாடு[10] சென்று, டாரென்டம்[11] எனும் இடத்தில் தப்பித்துச் சென்று எங்கோ மறைந்து விட்டார். பிறகு குரோடோனாவில் வாழ்க்கையை நடத்தினார். அங்கு அவர் புகழ் ஓங்கி, மைலோ[12] எனப்படும் பாரசீக மன்னர் அவையிலிருந்த மல்யுத்த வீரரின்[13] மகளை மணந்து கொண்டார் (கி.மு. 519).

சாமோஸ் தீவு[14]: இத்தீவு ஈஜியன் கடலில்[15] உள்ள முக்கியமான தீவுகளுள் ஒன்றாகும். அயோனியா[16] கடற்கரைக்கும் அப்பால் உள்ளது. முதன் முதல் அவர்களின் கப்பற்படை வலிமை மிக்கதாகக் காணப்பட்டது. ஆசியா மைனர் எதிரில் உள்ள கடற்கரைப் பகுதிகள் பலவற்றைத் தமதாக்கிக் கொண்டனர். பல குடியேற்றங்களை நிறுவினர். முதலில் பிரபுக்களின் ஆட்சியிலும், பின்னர் குடியரசாக நிலவியும், அதன் பின்

---

1 Democedes 2. Crotona 3. Doctor 4. Aegina 5. Athens 6. Medical Treatment 7. Polycrates 8. Darius 9. Susa 10. Greece 11. Tarentum 12. Milo 13. Wrestler 14. Samos Island 15. Aegean Sea 16. Ionia

பாலிக்ரடீஸ் என்பாரது கொடுங்கோல் மன்னரது ஆட்சியிலும் இருந்தது (கி. மு. 532). அது ஈஜியன் கடலில் கொடி கட்டிப் பறந்திருக்கும் ஆனால் பாலிக்ரடீஸின் இறப்பு அப் புகழுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டது (கி. மு 522). அப்பொழுது எகிப்துடன்[1] வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தது. அத்தீவு சில கொடுங்கோல் அரசர்களின் ஆட்சிக்குப் பிறகு கி. மு. 479-ல் சுதந்தரமடைந்தது. கி.மு 440-ல் பெரிக்ளீஸின்[2] படையெடுப்பால், அதன் சுதந்தரம் பாதிக்கப்பட்டு மீண்டும் அடிமை நாடாக ஆக்கப்பட்டு விட்டது. கி. மு. 84-ல் அத்தீவு ஆசியாவுடன் இணைக்கப்பட்டுவிட்டது. ஆண்டனி[3] கிளியோபாத்ரா[4] காலத்தில் (கி.மு. 32) அத் தீவு மீண்டும் தலை தூக்கத் தொடங்கிற்று. பிறகு ஆக்டேவியானஸ்[5] என்பவரால் அத் தீவு மீண்டும் சுதந்திர நாடாகவே ஆக்கப்பட்டு விட்டது. அத் தீவின் அழிபாடுகள் இன்றும் சாமேஸ் தீவின் பல பகுதிகளில் காணப் படுகின்றன.

விடுதலையை விரும்புபவர் அல்லர்: சாமோஸ் தீவின்[6] மக்கள் ஹிராடடஸ் காலத்திலும் அதற்கு முன்னும் கொடுங்கோல் மன்னர் பலரால் ஆளப்பட்டு வந்தனர். அக் கொடுங்கோலர் களின் ஆட்சியில் அம்மக்கள் பட்ட துன்பத்தை எண்ணி. அவர்கள் அடிமைகளாக[7] இருப்பதே நல்லது — அதுவே மேலானது என்று கருதி விட்டனர் போலும்.

டாரியஸ்[8]: இவர் பாரசீக மன்னர்[9]. ஹைஸ்டாஸ்பஸ்[10] என்பாரின் மகன். அவர் அரசாட்சி செய்தது. கி. மு. 521 - 485 வரை அதாவது 36 ஆண்டுகள் ஆட்சி செய்தார். கிரேக்க நாட்டை[11] வென்றுவிடத் திட்டமிட்டார் அச் செயலைத் தம் மகன் ஸெர்க்ஸிஸிடம்[12] விட்டுவிட்டு, கி.மு. 485-ல் காலமானார். மற்றும் தாம் வென்ற நாடுகளில் 20 சத்ராபிகளை[13] அமைத்து, ஒவ்வொரு சத்ராபிக்கும் ஓர் ஆளுநரை[14] நியமித்தார்.

மற்றும் பக்கம் 256, குறிப்பு- 1 பார்க்கவும்.

---

1. Egypt 2 Pericles 3. Antony 4. Cleopatra 5. Octavianus 6. Samos Island 7. Slaves 8. Darius 9. Persian King 10. Hystaspes 11. Greece 12. Xerxes 13. Satrapies 14. Governor

9. ஜோபைரஸ், பாபிலோனின் ஆளுநர்

"பாரசீகரின் கப்பற்படை[1] சாமோஸ் தீவுக்குப்[2] புறப் பட்ட பிறகு, பாபிலோன்[3] கலகம் செய்வதில் ஈடுபட்டது. அக்கலகம் மிக்க முன்னேற்பாட்டுடன் செய்யப் பட்டது. பாபிலோனிய மக்கள்[4], தங்கள் நகரம் முற்றுகையின் போது அவதியுறாதிருப்பதற்காக உணவைச் சேமிக்கத் தொடங் கினர். அதன்படி ஒரு வீட்டில், ஓர் ஆண், அவன் தாயார், தான் தேர்ந்தெடுக்கப்படும் மற்றொரு பெண்— ரொட்டி சுட்டு அளிப்பதற்காக— ஆகியவர்களைத் தவிர மற்ற எல்லாப் பெண்களும் கொல்லப் பட்டனர். அவர்கள் கழுத்தைத் திருகிக் கொன்று விட்டனர். எல்லா ஆண்களும் போர் முகாமில் இருக்க வேண்டும். இதனால் ஒவ்வொரு பெண்ணின் உணவும் நகர முற்றுகையின் போது பயன் படும் என்ற கருத்தாலே அச் செயல் செய்யப்பட்டதாகும்.

டாரியஸூம்[5] ஆயுதம் தாங்கிய அவர் போர் வீரர்களும் பாபிலோன் நகரை முற்றுகையிட்டனர். இருபது மாதங்கள் தொடர்ந்து முற்றுகையிட்டும், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இறுதியில் இருபதாம் மாத முடிவில், ஓர் அதிசயம் நடை பெற்றது. மெகபைபஸஸின்[6] மகனான ஜோபைரஸ்[7] என்பவருக்கு ஒரு கருத்து உதயமாயிற்று. அவர் மேகஸ்[8] என்பவரைக் கொன்ற ஏழு சதி திட்டக்காரர்களுள் ஒருவரான மெகபைபஸஸின் மகன் ஆவார்.

---

1. Persian Fleet 2. Smos Island 3. Babylon 4. Babylonians 5. Darius 6. Magabyzus 7. Zopyrus 8. Magus

ஜோபைரஸ், டாரியஸிடம் சென்று, "பாபிலோனை வெற்றி கொள்வதென்பது அவ்வளவு முக்கியமான காரியமா?" என்று வினவி, "அஃது அத்துணை முக்கிய மானது என்று தாங்கள் கருதினால், அதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு, அவ்வழியை இதோ கூறுகிறேன். கேளுங் கள்," என்று கூறத் தொடங்கினான்.

"என்னை நானே அங்க வீனனாக்கிக் கொண்டு மூக்கையும், காதுகளையும் அறுத்துக் கொண்டு, உம்மிட மிருந்து ஓடி பாபிலோனியரிடம் சென்று ஓலமிடுவேன். தாங்கள் என்னை அவ்வாறு செய்து விட்டதாக. அவர்கள் என்மீது நம்பிக்கை கொள்வர். அடுத்து நீங்கள் 2000 வீரர் களை, ஈட்டி மட்டும் தாங்கி வரச் சொல்லுங்கள். அவ் வீரர் களை நான் ஒருவனே வெட்டி வெற்றி வாகை சூடுவேன்; என் மீது அவர்களுக்கு உள்ள நம்பிக்கை மேலும் சிறிது அதிக மாகும். அடுத்த வாரம் 4000 பேர்களை ஆயுதமின்றி அனுப் புங்கள். அவர்களையும் நான் ஒருவனே கொல்வேன்; வெற்றி கொள்வேன். என்மீது பாபிலோனிய மக்களுக்கு[1] முழு நம்பிக்கை ஏற்பட்டுவிடும். பிறகு பாபிலோனின் கதவின் சாவிகளை[2] என்னிடமே கொடுத்துவிடுவர். ஆதன் பிறகு நான் செய்வதைப் பாருங்கள்," என்றான்.

இந்த வழி டாரியஸுக்குப்[3] பிடித்திருந்தது. அவரும் ஜோபைரஸ்[4] கூறியவாறே நடந்து கொண்டார். எவ்வாறா யினும் பாபிலோனிய மக்களை அடிமைப் படுத்திவிட வேண்டும் என்பதே டாரியஸின் அவா. முதலில் 2000 பேர்களை ஜோபைரஸ் கொன்றான். பின்னர் 4000 பேர்களைக் கொன்றான். ஆகையால் இதைக் கண்ட பாபி லோனிய மக்கள் இவன் ஒருவன்தான் பாபிலோனியாவைக் காப்பாற்ற முடியும் என்று கூறி, பாபிலோனின் கதவுகளின் சாவிகளை ஜோபைரஸிடம் கொடுத்து விட்டனர்.

அதன் பிறகு டாரியஸ் தம் போர் வீரர்களை அம்மதில் அருல் ஜோபைரஸ் குறிப்பிட்ட இடத்தில் தாக்குமாறு பணித்தார். பாபிலோனிய மக்கள் மதில்மீது ஏறத் தொடங்

---

1. Babylonians 2. Babylonian Gate key 3. Darius 4. Zopyrus

கினர். உடன் காலந்தாழ்த்தாமல், ஜோபைரஸ் தன்னிடமிருந்த சாவிகள் கொண்டு, பாபிலோன் நகரின் முக்கிய கதவுகளைத் திறந்து விட்டான். அவ்வழிகளின் ஊடே டாரியஸின் வீரர்கள் புகுந்து, பாபிலோனியர் பலரைச் சிறைப்படுத்தினர். இறுதியாகப் பாபிலோன்[1] டாரியஸ் வசம் ஆயிற்று. மக்கள் பெல்[2] கோவிலுள் புகுந்துகொள்ள ஓட்டமாய் ஓட முற்பட்டனர்.

பாபிலோனின் பெண்கள் மிகக் குறைவு என்பதற்கான காரணத்தை டாரியஸ் அம் மக்களிடம் வினவினார். ஒரு குடும்பத்தில் உணவைச் சேமிக்கும் பொருட்டு, தான், தன் தாய், ஒரு பெண் தவிர, யாவரும் கொலை செய்யப்பட்டனர் என்று அவர்கள் கூறினர். உடன் டாரியஸ் பக்கத்து நாடுகளிலிருந்து கணிசமான தொகையாகப் பெண்களை அனுப்பிவைக்குமாறு கட்டளையிட்டார். அக்கட்டளைப் படியே, பக்கத்து நாடுகளிலிருந்து வந்து குழுமிய பெண்களின் தொகை ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமாயிருந்தது. "இவர்களே இனி வருங்காலத் தாய்மார்களாக விளங்கட்டும்," என்று டாரியஸ் அவர்களுக்கு ஆசி கூறினார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு பிறந்த பாபிலோனிய மக்கள்[3], அப் பெண்கள் மூலமாகப் பிறந்த சந்ததிகளே.

டாரியஸின்[4] மனத்தில், தம் நாட்டிற்கு உண்மையாகத் தியாகம் செய்தவர்களுள், ஜோபைரஸே[5] முதன்மையானவர் என்ற கருத்து வலுவாக விழுந்தது. ஜோபைரஸுக்குப் பல விருதுகள் அளிக்கப்பட்டன; ஒவ்வோர் ஆண்டும் டாரியஸ், பாரசீகர்களுக்கு[6] மிகவும் பிடித்த அரிய பரிசுகளை ஜோபைரஸுக்கு அளித்தார். மேலும் ஜோபைரஸை பாபிலோனின் ஆளுநராக[7] ஆக்கினார். அப்பதவி அவர் உள்ளவும் அவரை விட்டு விலகாது என்றும், அவர் வரி ஏதும் கட்ட வேண்டியதில்லை என்றும் டாரியஸ் அரசர் ஓர் ஆணை பிறப்பித்தார்.

ஜோபைரஸின் மகன் பெயரும் மெகபைஸஸ்[8]. அம் மெகபைஸஸ், எகிப்தில்[9] உள்ள அத்தீனியர்கள்[10], அவர்கள்

---

1. Babylon 2. Bel Temple 3. Babylonians 4. Darius 5. Zopyrus 6. Persians 7. Governor 8. Megabyzus 9. Egypt 10. Athenians

கூட்டிணைப்புக்கு எதிராகப் படைத்தளபதியாக விளங்க லானான்.''

விளக்கவுரை:

பாபிலோன்[1]: இது அஸ்ஸீரியாவின்[2] முதல் தலைநகரம். அதற்கடுத்தது எக்படன[3] தலைநகரமாயிற்று. மற்ற விவரங்களுக்குப் பக்கம் 117; குறிப்பு-3 பார்க்கவும்.

பைபிளில்[4] பாபிலோன் பலவிடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது :

"Then the king made Daniel a great man and gave him many great gifts and made him rule over the whole province of Babylon ''

—(Old Testament, Daniel, 2-48)

சாமோஸ் தீவு[5] : ஈஜியன் கடலின்[6] புகழ்பெற்ற தீவுகளுள் ஒன்று. மற்றும், பக்கம் 294, குறிப்பு—14 பார்க்கவும்.

ஜோபைரஸ் :[7] இவர் மெகபைஸஸின்[8] மகன் ஆவார். பாரசீகர்களுள்[9] புகழ் பெற்றவர். இவர் டாரியஸ் அரசருக்குப்[10] பாபிலோனை வெல்லும் உபாயத்தைக் கூறி,அதன்படியே தன் மூக்கையும் காதுகளையும் தாமே அறுத்துக்கொண்டு, பாபிலோனியரின் இரக்கத்தையும் அனுதாபத்தையும் பெற்று, இறுதியில் டாரியஸுக்குப் பாபிலோனின் கதவுகளைத்[11] திறந்து விட்டவர். பாபிலோனின் வீழ்ச்சிக்குப் பிறகு, டாரியஸ் அவரைப் பாபிலோனின் ஆளுநராக[12] அவர் ஆயுள் உள்ளவும் நியமித்தார். மற்றும் அவர் எத்தகைய வரியும் கட்டவேண்டியதில்லை என்றும் கட்டளைப் பிறப்பித்தார்.

"ஜோபைரஸ் ஓர் உண்மையான பாரசீகர்; அவர் மூக்கு, காது அறுபட்டு நிற்பதை நான் பார்த்திருக்க வேண்டாம்; அவர் நன்றாகக் குணமடைந்து முழுமனிதராக முன்போல ஆகி விடுவாரென்றால், இதைப் போல இருபது பாபிலோனைக் கொடுத்தால் கூட நான் வாங்க மாட்டேன். அவர் உயிர்தான் பெரிதே தவிர, பாபிலோன் எனக்கு ஒரு பொருட்டன்று,'' என்று டாரியஸ் அவருக்குப் புகழ் ஆரம் புனைந்தார்.

---

1. Babylon 2 Assyria 3. Ecbatana 4. Bible 5. Samos Island 6. Aegean Sea 7. Zopyrus 8. Megabyzus 9. Persians 10. Darius 11. Gates of Babylon 12. Governor

புத்தகம்-4

1. சித்தியர்கள்

"பாபிலோன்[1] பிடிபட்ட பிறகு, டாரியஸ் சித்தியாவின்[2] மீது படையெடுத்தார். சித்தியர்கள்[3] முன்னொரு சமயம் மிடிய நாட்டின்[4] மீது படையெடுத்துச் சென்றனர்; அப்பொழுது டாரியஸ்[5] அரசருக்குப் பொருளும், ஆள்களும் பெரும் அளவில் இருந்தமையால், அச் சித்தியர்களைப் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருந்தார். சித்தியர்கள் 28 ஆண்டுகள் வட ஆசியா[6] முழுவதையும் தம் ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர். வெளியிலேயே அத்துணை காலமும் இருந்து, 28 ஆண்டுகள் கழித்துத் தம் நாடு திரும்பினர். அவர்கள் தத்தம் இல்லங்களுக்குச் சென்று பார்க்கும் பொழுது, ஒரு பேரிடி அவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தது. அவர் அவருடைய பெண்கள், பிள்ளைகள் யாவரும் தங்கள் நாட்டிலிருந்த அடிமைகளைத் திருமணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்திக்கொண்டிருந்தனர். காரணம், சித்தியப்பெண்கள்[7] திருமணமின்றி, ஆண் உறவின்றி எவ்வளவு ஆண்டுகள் காத்திருப்பர்? ஆகையால்தான் அடிமைகளைத் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டனர்.

உள் நாட்டிலேயே கலப்புத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்த பொழுது, 28 ஆண்டுகள் கழித்துத் திரும்பி

---

1. Babylon 2. Scythia 3. Scythians 4. Media 5. Darius 6. North Asia 7. Scythian girls

வந்த வீரர்களை அவர்கள் உள்ளே நுழைய அனுமதிக்க வில்லை.

இதற்கு அச் சித்திய வீரர்கள் ஒரு யுக்தி செய்தனர். ஆயுதம் தாங்கினாலல்லவோ, தாங்களும் போர் வீரர்கள் என்ற எண்ணம் ஓங்க, எதிரிட்டுப் போரிடுகின்றனர். ஆனால் ஆயுதத்தை வைத்து விட்டு, நல்ல பெரிய கசை களை[1] ஏந்திச் சென்றால், அக்கசையைப் பார்த்தவுடன் தங்களுடைய அடிமை வாழ்வு கவனத்துக்கு வந்து, உடன் ஓட்டமெடுப்பார்கள்; அல்லது அடிபணிந்து விடுவர். அவ் வாறே அச் சித்தியவீரர்கள் தங்கள் ஆயுதங்களை வைத்து விட்டு, கசையைக் கைகளில் ஏந்தியவுடன், சித்தியர்களின் அடிமைகள் உடன் தங்கள் அடிமை வாழ்வை நினைந்து ஓட்டமெடுத்தனர். வெளிச் சென்ற வீரர்களும் உள் நுழைந்து தத்தம் குடும்பத்துடன் சேர்ந்து ஒன்று படலாயினர்.

இந்தச் சித்தியர்கள்மீது[2] படையெடுக்க டாரியஸ்[3] ஏற் பாடுகள் செய்தார்.

சித்தியர்கள் தங்கள் ஆதி வரலாற்றைப் பின்வருமாறு கூறுகின்றனர். தங்கள் நாட்டில் முதல் முதல் வாழ்ந்த மனிதர் டார்கிடௌஸ்[4] என்ற பெயர் கொண்டவர் ஆவார். அவருக்கு முன் அந்த நாட்டில் எந்த மனிதனும் வாழ்ந்த தில்லை. அவர் ஜியுஸ்[5] கடவுளுக்கும் போரிஸ்தனிஸ் ஆற்றின்[6] மகளுக்கும் பிறந்த மகனாவார். இங்குப் பரம் பரை வழியாகச் சொல்லப்பட்டு வரும் கதையைக் கூறு கிறேன். இருப்பினும் எனக்கு அதில் நம்பிக்கை கிடையாது.

டார்கிடௌஸுக்கு மூன்று மகன்கள் இருந்தனர்—லிப் போக்ஸெயிஸ்[7], அர்ப்போக்ஸெயிஸ்[8], கோலாக்ஸெயிஸ்[9]. அவர்கள் ஆண்டு கொண்டிருந்த பொழுது, ஒரு பொன் ஏர், ஒரு பொன் நுகத்தடி, ஒரு பொன் கோடரி ஆகிய இம் மூன்றும் வந்து விழுந்தன. அவர்களுள் மூத்தவனே முதலில் அவற்றைக் கண்டான். அவன் அவற்றை எடுக்க

1. Whips 2. Scythians 3. Darius 4. Targitaus 5. Zeus 6. River Boristhenes 7. Lipoxais 8. Arpoxais 9. Colaxais

ஓடி வந்தான். அப்பொற் கருவிகள் தீப்பற்றி எரியத் தொடங்கிற்று. இரண்டு பேரும் தீக்குப்புறம்பாக நின்று கொண்டிருந்த பொழுது, அத் தீ அணைந்து விட்டதால், இரண்டாமவன் அவற்றை எடுக்க ஓடினான். உடன் அவை தீப்பற்றி எரியத் தொடங்கிற்று. சிறிது நேரத்தில் அது அணைந்து விட்டது. பின்னர் மூன்றாமவன் அப் பொற் கருவிகளை நெருங்கி, அவற்றை எடுத்துத் தன் அரண் மனைக்குச் சென்று விட்டான். மூத்தவர்களாகிய இருவரும் இச்சம்பவம் தெய்வத்தினுடையது; அவ் ஆணை கடவுளிட மிருந்து வந்ததாகவே எண்ணி கடைக் குட்டியிடம் தங்கள் அரசுகளைக் கொடுத்து விட்டனர்.

லிப்போக்ஸெயிஸின் சந்ததியினர், இப்பொழுது இருக் கும் ஔகடே[1] எனப்படும் மக்களாவர்; இரண்டாவது தம்பி அர்ப்போக்ஸெயிஸின் சந்ததியார் காடியாரி[2] எனப்படும் மக்கள் ஆவர்; மற்றும் அவர்கள் டிரஸ்பீஸ்[3] என்றும் வழங்கப்படுவர். மூன்றாவதும் இறுதியான தம்பியுமான கோலாக்ஸெயிஸின்[4] சந்ததியார் அரச பரம்பரையைச் சார்ந்த சித்தியர்கள்[5] ஆவர். அவர்கள் இப்பொழுது பரலடே[6] என்ற பெயரால் வழங்கப்படுகின்றனர். வானத் திலிருந்து வந்த பொற்கருவிகளையும் பத்திரமாகப் பாது காத்து வருகின்றனர்.

கோலாக்ஸெயிஸ் தம் அரசைத் தம் மைந்தர்களுக்காக மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்.

இந்நாட்டின் வடபகுதியில் பயணம் செய்ய முடியாது என்ற எண்ணம் வலுப்பெற்றுள்ளது. இறகுகள்[7] பெருவாரி யான அளவில் வானத்திலிருந்து வந்து பூமியின்மீது விழு கின்றன.

பாண்டஸின் கிரேக்கர்கள்[8] சித்தியர் வரலாறு[9] பற்றிப் பின்வருமாறு செய்திகளைத் தருகின்றனர். அவர்கள் தரும் விளக்கம் வேறு வகையில் அமைந்துள்ளது. அவர்கள்

---

1. Auchatae 2. Catiari 3. Trespies 4. Colaxais 5. Scythians 6. Paralatae 7. Feathers 8. Greeks of Pontus 9. History of Scythians

கூற்றின்படி, ஹீராக்ளிஸ்[1] இந்தப் பகுதிக்கு வந்தார். அவர் வந்த காலம் குளிர்காலம்; கடுங்குளிர் நிறைந்திருந்தது. அதன் காரணமாகத் தம் தேரில் பிணைக்கப்பட்டிருந்த குதிரைகளை அவிழ்த்து விட்டு, தம்மிடமிருந்த சிங்கத் தோலை[2]த் தம் மீது போர்த்திக் கொண்டு, அலுப்பின் காரணமாகத் தூங்கி விட்டார். தூங்கி எழுந்தவுடன், தம் குதிரைகள் அவை விடப்பட்டிருந்த இடத்தில் காணப்படவில்லை. அந்த இடம் முழுவதும் சுற்றினார்; மற்றும் அந்நாடு முழுவதும் சுற்றிவிட்டார். குதிரைகள் காணப்படவில்லை. இறுதியில் ஹைலியா[3] எனும் குகையை வந்தடைந்தார். அங்கே ஒரு விரியன் பாம்புப் பெண்ணைப்[4] பார்த்தார். அதாவது இடுப்பிலிருந்து தலைவரை மானிடப் பெண் உருவம்; இடுப்பிற்குக் கீழ் ஒரு பாம்பின் உருவம். ஒருக்கணம் ஹீராக்ளிஸ் கண் கொட்டாமல் அவ் அதிசயப் பெண் உருவத்தைப் பார்த்தார். உடன் அவளிடம் தம் குதிரைகளை எங்கேயாவது அவள் பார்த்தாளா என்று கேட்டார். அதற்கு அவள், அவர் குதிரைகள் மிகவும் பாதுகாப்பாகத் தன்னிடம் உள்ளதென்றும், அவற்றைத் திருப்பித்தர ஒரே ஒரு நிபந்தனை உண்டு என்றும் கூறினாள். அதாவது அப்பாம்புப் பெண்ணுடன்- நாக கன்னிகையுடன்- ஹீராக்ளிஸ் படுக்கை கொண்டு, கலவி செய்ய வேண்டும் என்பதே. ஹீராக்ளிஸுக்குத் தம் குதிரைகள் தேவைப்பட்டதால், அவரும் அவளிட்ட நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டார். அவளோ குதிரைகளைத் தராமல் காலத்தை நீட்டிக் கொண்டு சென்றாள் — அவ் ஹீராக்ளிஸுடன் இன்பம் அனுபவித்துக் கொண்டே காலம் கடத்தினாள். இறுதியில் அவள் அவருடைய குதிரைகளை அவரிடம் தந்து, "இங்கே மேய்ந்த குதிரைகளைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்தேன். இதோ இவை உங்களுடையவை; மற்றும் உமக்கும் எனக்கும் இப்பொழுது 3 ஆண் குழந்தைகள் உள்ளன. அவற்றை என்ன செய்யட்டும்?" என்று கேட்டாள். அதற்கு ஹீராக்ளிஸ், "இதோ, என் வில் உள்ளது. அவர்கள் பெரியவர்களானதும் இதை நாணேற்

1. Heracles 2. Lion's skin 3. Hylea 4. Serpent girl

றச் சொல். எவன் சரியாக நாணேற்றுகிறானோ, அவனை உன்னுடன் வைத்துக்கொள்; மற்ற இருவர்களையும் வெளியே துரத்திவிடு," என்று அறிவுறுத்தினார்.

மூவரும் பெரியவர்களாயினர். முதல் மகன் அகதிர்ஸ் ஸசும்[1], இரண்டாவது மகன் கெலோனஸஸசும்[2] அவ்வில்லை நாணேற்ற முடியவில்லை. மூன்றாமவனும், கடைக்குட்டியு மான சித்திஸ்[3] என்பவன் அவ்வில்லை எடுத்து, வளைத்து நாணேற்றினான். சித்திஸ், தன் தாயருகில் இருக்க அனு மதிக்கப்பட்டான். ஹீராக்ளிஸின் மகன் சித்திஸ் என்பவனின் சந்ததியார்களே சித்தியர்[4] என்று வழங்கப்பட்டு, அவர்களே அந்நாட்டை ஆண்டு வரலாயினர்."

விளக்கவுரை :

சித்தியா:[5] ஹிராடடஸ் குறிப்பிடும் சித்தியா நாடு ஐரோப்பாவின்[6] தென் கிழக்குப் பகுதியாகும். அந்நாடு கார்ப்பேதியன் மலைகளுக்கும்[7] டான் நதிக்கும்[8] இடையேயுள்ளது. அவர்கள் நாடோடி இனத்தவர். நிலையான ஓர் இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டு வாழாதவர்; அவர்கள் மூடிய பெட்டிக் குள்[9] வசித்து வந்தனர். அவர்களிடம் குதிரைப் படை இருந்தது. மற்றும் வில் வித்தையிலும் வல்லுநர்கள் அதன் காரணமாகத்தான் டாரியஸ் அரசர்[10] அந்நாட்டின்மீது கி.மு. 507-ல் படையெடுத்தபோது, அவர் சித்தியர்களுக்கு எதிராகப் போரிட முடியாத நிலையை நன்கு உணர்ந்தார். போகும் இடங்களிலும் விட்டுப்போன இடங்களிலும் உள்ள யாவற்றையும் அழித்துக் கொண்டே செல்லும் தன்மையுடையவர். ரோமானியரின் காலத்தில்[11] சித்தியா என்பது வட ஆசியா[12] முழுவதும் உட்கொண்ட பகுதியாகவே கருதப்பட்டது. சித்திஸ் என்ற வீரர் நிர்மாணித்த காரணத்தால், அந்நாடு சித்தியா என்று வழங்கப்பட்டது என்று ஹிராடடஸ் கூறுகிறார்.

ஜியுஸ்[13]: இவர் கிரேக்க நாட்டின் தீக்கடவுளாகக் கருதப் படுகிறார். இந்திய நாட்டு அக்னிக்கும், இந்திரனுக்கும் ஒப்பாவார். மற்றும் பக்கம் 158 பார்க்கவும்.

---

1. Agathyrsus 2. Gelonuses 3. Scythes 4. Scythians 5. Scythia 6. Europe 7. Carpathian Mts 8. River Don 9. Closed Box 10. Darius 11, Roman Times 12. North Asia 13. Zeus

சித்திஸ்[1]: ஹீராக்ளிஸீக்கும் நாக கன்னிகைக்கும் பிறந்த மகன்; இவன் பெயரால் நிர்மாணிக்கப்பட்ட நாடே சித்தியா. சித்தியா நாட்டு மக்கள் சித்தியர் என்று வழங்கப்பட்டனர்.

போரிஸ்தனிஸ்[2]: இந்நதி நீப்பர்[3] என்றும், பின்னர் தனப்ரிஸ்[4] என்றும் வழங்கப்பட்டது. இது ஐரோப்பிய சர்மேஷியாவில்[5] உள்ளது. யூக்ஸைன் கடலில்[6] (கருங்கடலில்) விழுகிறது. அதன் கழிமுகத்தில் போரிஸ்தனிஸ் நகரம் உள்ளது. கருங்கடல் கிரேக்க மொழியில் பாண்டஸ் யூக்ஸைனஸ்[7] என்று வழங்கப்பட்டது. பாண்டஸ்—நீர் நிலை; யூக்ஸைனஸ்—விருந்தோம்பும் பண்பு கொண்டது எனும் பொருள்படும்.

இறகுகள்[8] **விழுகின்றன**: இந்த இறகுகள் என்பவை வெண்மையான பனித் திவலைகள்[9]. குளிர் மிகுந்த நாடானதால் வெண்மை நிறம் வாய்ந்த பனித்திவலைகள் பெரும் அளவில் காணப்படும்.

பாண்டஸின் கிரேக்கர்கள்: பாண்டஸ்[10] என்பது கருங்கடல்; அதைச் சுற்றிலும் வசிக்கும் கிரேக்கர்கள்[11] இங்குக் குறிப்பிடப்படுகின்றனர்.

ஹீராக்ளிஸ்[12]: ஹீராக்ளிஸ் என்ற சொல் ஹெர்க்குலீஸ்[13] என்ற சொல்லின் திரிபே. ஹெர்க்குலீஸ் கிரேக்க நாட்டுப் புராண வீரர்களுள் மிகவும் சிறந்தவர் ஆவார். அவருக்கே எத்தகைய வீரச்செயலுக்கும் முதலிடம் அளிக்கப்படுகிறது. இளமையில் தம் மனைவி மக்களைக் கொன்றவராகக் கருதப்பட்டார். யூரிஸ்தியூஸ்[14] அரசரிடம் சென்று, அவரிட்ட செய்ய முடியாத பணிகளை நிறைவேற்றிக் காட்டினார். அந்தேயுஸ்[15] எனும் இராக்கதனை வென்றார். டியானிரா எனும் இளமங்கையை மணந்து கொண்டார். மிகுந்த உடற் கட்டுடன் விளங்கும் கிரேக்கக் கடவுளாக ஹெர்க்குலீஸ் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

—(Greek Mythology, Page 159)

ஹிந்துப் புராணங்களில் ஹீராக்ளிசுக்கு நிகராகக் குறிப்பிடக் கூடியவர்கள்: இந்திரன், பலராமன், வீமன்.

---

1. Scythis 2. Boristhenes 3. Dnieper 4. Danapris 5. Sarmatia 6. Euxine Sea 7. Euxinus 8. Feathers 9. Ice flakes 10. Pontus 11. Greeks 12. Heracles 13. Hercules 14. Eurystheus 15. Antaeus

குறுந்தடியும் சிங்கத்தோலும் சின்னங்கள்[1]

பகைவர்களை ஒடுக்கக் குறுந்தடியும், சிங்கத்தை ஆட்கொண்டதன் அடையாளமாக, அச்சிங்கத்தோலை ஆடையாக உடுத்தியும் போர்வையாகப் பயன்படுத்தியும் வந்தார் என்று தெரிகிறது.

தமிழ்நாட்டில் பரமசிவனார் புலித்தோலை அணிபவராகவும், கைகளில் திரிசூலம் ஏந்துபவராகவும் புராணங்கள் வர்ணித்துள்ளன.

''கலை தலம் சூலம் மழுக்கனல்
    கண்டை கட்டங்கம் கொடி
சிலை இவை ஏந்திய எண்டோட்
    சிவற்கு மனஞ் சொற் செய் கை''

—(பொன் வண்ணத் தந்தாதி: 88)

''விரிதரு புலியுரி விரவிய அரையினர்''

—(திருஞான: தேவாரம்: திருவராகம் 1)

மெகஸ்தனிஸாலும் ஹிராக்ளிஸ், குறிப்பிடப்பட்டுள்ளார் (கி. மு. 302—296):

தீயின் வழியாகவே ஹெர்க்குலீஸ் வானுலகம் சென்றான். அங்கு ஹீராவின் மகளாகிய ஹீபியை மணந்து கொண்டான். வானுலகில் மட்டும் அவன் வியத்தகு வலிமையை அடக்கிக் கொண்டு வாழ்ந்தானா? சொல்வதற்கில்லை. அங்கிருந்த கடவுளர் யாவருக்கும் ஹெர்க்குலீஸ் ஒரு புதிராகவே காணப்பட்டான்.

தமிழ் நாட்டில் ஹிராளிக்ஸ்—ஹெர்க்குலீஸ்—மலையத்துவஜ பாண்டியனாகக் கருதப்பட்டான்''

—(மெகஸ்தனிஸ்: அதி: 5 குறிப்பு: 2 பக்கம் 45)

மற்றும் பக்கம் 175, குறிப்பு 4 பார்க்கவும்.

---

1. A thick staff and a Lion's skin.

2. ஆசியாவும் ஐரோப்பாவும்

"ஆசியாவின்[1] பெரும்பகுதி டாரியஸால்[2] கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. மற்றும் சிந்து நதி[3] கடலுடன் கலக்கிறதா என்பதையறிய அவாவினார். நைல் நதியைத்[4] தவிர, சிந்து நதி ஒன்றில்தான் முதலைகள் பெரும் அளவில் காணப்படுகின்றன. சிந்து நதி கடலுடன் கலக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க ஒரு திட்டம் வகுத்து, அதற்கான மக்களை நியமித்தார். காரியண்டியின்[5] வாசியாகிய ஸ்கைலாக்ஸ்[6] தலைமையில் அக் கண்டு பிடிப்புத் தொடங்கிற்று. பாக்டிகா[7] மாவட்டத்தில் உள்ள காஸ்படைரஸ்[8] எனும் இடத்தினின்று புறப்பட்டு, கிழக்கு முகமாக நதியின் வழியைத் தொடர்ந்து சென்றனர். பின்னர் கடலையடைந்தனர். அதன் பிறகு மேற்கே திரும்பி, கடற் கரையோரமாகவே சென்று, 30 மாதங்கள் பயணம்செய்து எகிப்திய அரசர்[9] லிபியாவைச்[10] சுற்றி வரப் பினீசியர்களை[11] எந்த இடத்திலிருந்து அனுப்பினாரோ, அந்த இடத்துக்கே அவர்கள் வந்து சேர்ந்தனர். இந்தக் கடற் பயணம் முடிந்த பிறகு, டாரியஸ் இந்தியர்களை[12] வென்று, அவர்களை அடக்கினார். தென் கடலை நிலையாகப் பயன் படுத்தத் தொடங்கினார். இந்த விதத்தில் ஆசியா முழுவதும்— கீழ்த் தொலை நாடுகள் தவிர மற்ற எல்லா நாடுகளும் — கடலால் சூழப்பட்டுள்ளது. ஆகையால், ஆசியாவும் லிபியா போலவே, கடலால் சூழப்பட்ட நாடாகவே பூகோள ரீதியாகக் காட்சி யளிக்கிறது.

---

1. Asia 2. Darius 3. Indus River 4. Nile River 5. Cariandian 6. Skylax 7. Pactyica 8. Caspatyrus 9. Egyptian's king 10. Libya 11. Phoenicians 12. Indians

ஐரோப்பாவின்[1] கதையே வேறாக உள்ளது. காரணம் அதற்குக் கிழக்கிலும் வடக்கிலும் கடல் இருக்கிறதா இல்லையா என்பது எவருக்கும் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் தெரியும். அதன் அளவு ஆசியாவும், லிபியாவும் சேர்ந்து எவ்வளவு இருக்குமோ, அத்துணை அளவு பெரியதாக உள்ளது. இன்னொன்று என் மனத்தைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. அதாவது ஒரே பரப்பில் உள்ள நீண்ட நிலத்தொகுதிக்கு ஏன் தனிப்பட்ட முறையில் மூன்று பெயர்கள் வைத்திருக்க வேண்டும் என்பதே தெரிய வில்லை—அதுவும் பெண்கள் பெயர்களாக. மற்றும் நைலஸ் நதியும் பாஸிஸ் நதியும்[2] அதற்கு எல்லைகளாக ஏன் குறிக்கப்பட்டுள்ளன என்பதும் விளங்கவில்லை. முதன் முதலாக எல்லை வகுத்தவர் யார் என்பதும் எனக்குத் தெரியாது. கிரேக்கர்களுள்[3] பெரும்பாலோர், லிபியா நாடு[4] அங்குள்ள ஒரு பெண்ணின் பெயரால் வழங்கப்பட்ட தாகவே கருதுகின்றனர். மற்றும் ஆசியா[5] என்ற பெயர், பிரொமீத்தியஸ்[6] என்பாரின் மனைவியின் பெயரால் ஏற்படுத்தப் பட்டது என்றும் கூறுகின்றனர். ஆனால் லிடியர்கள்[7] அப்பெயர் தங்கள் இனத்தைச் சார்ந்து இடப் பட்டது என்றும்; அது பிரொமீத்தியஸின் பெயரால் வழங் கப்படவில்லை என்றும், ஆனால் அது ஆசீஸ்[8] என்ற பெயரின் அடிப்படையாக வழங்கப்பட்டது என்றும் கூறினர். ஆசீஸ் என்பவர் கோடிஸ்[9] மகனாரும், மனேயின்[10] பெயரனும் ஆவார். அவர்தம் குலப்பெயரைச் சார்டிஸ்[11] நகரில் உள்ள குல மரபுக் குடிகளான ஆசியாஸ்[12] என்ப வருக்கு இட்டு வழங்கினார்.

ஐரோப்பாவைப்[13] பற்றி ஒன்றும் தெரியாது; அது கடலால் சூழப்பட்டதா, அல்லது அப் பெயர் முதல் முதல் எப்படி வழங்கப்படலாயிற்று என்பதற்கான காரணங்களும் தெரியவில்லை. நாம் கூறுவது ஒன்றே. அப்பெயர்— யூரோபா[14] எனும் பெயர் கொண்ட நாடு— தீரேயின்[15]

---

1. Europe 2. River Phasis 3. Greeks 4. Libya 5. Asia 6. Prometheus 7. Lydians 8. Asies 9. Cotys 10. Manes 11. Sardys 12. Asias 13. Europe 14. Europa 15. Tyre

மங்கையின் பெயரால் நிர்மாணிக்கப்பட்டது என்பது மட்டும் உறுதி.

ஆனால் யூரோபா ஆசிய நாட்டுவாசி; அவள் பினீசியாவிலிருந்து[1] கிரீட் தீவிற்கும்[2], கிரீட்டிலிருந்து லைசியாவுக்கும்[3] கப்பலில் சென்றாள். அவள் பெயர் எவ்வாறு பொருந்தும் என்பது எனக்குத் தெரியவில்லை.

இருப்பினும் எல்லோருக்கும் அறிமுகமான அந்த மூன்று பெயர்களாலேயே— ஆசியா, ஐரோப்பா, லிபியா ஆகிய இப் பெயர்களாலேயே அந்தந்த நாடுகளை இனிக் குறிப்பிடுவேன். அப்பெயர்களையே நான் இனிப் பயன் படுத்துவேன்."

விளக்கவுரை:

சிந்துநதி:[4] முதல் முதல் சிந்து நதி இந்தியாவில் உள்ளது என்பதை அறிந்தவர் டாரியஸே[5] ஆவார். அவருக்குப் பிறகே, மகா அலெக்சாந்தர்[6] (கி.மு. 356-323) சிந்து நதியை (கி. மு. 326) அடைந்து அதன் தன்மையை அறிந்தார்.

சிந்துநதியை அளக்க அலெக்சாந்தர் தம் கப்பற்படைத் தளபதியான நியார்க்கஸ்[7] என்பாரை அனுப்பினார். அவர் சிந்து நதி வழியாகவே சென்று, அதன் கழிமுகத்தையடைந்து, பின்னர் கடற்கரையோரமாகவே கப்பலூர்ந்து பாரசீக வளைகுடாவை[8] அடைந்தார் (கி.மு. 326 - 325) அவர் தாம் ஏற்ற பயணத்தை வரலாறாக எழுதியுள்ளார். அவற்றுள் சில பகுதி அர்ரியன் இண்டிகா[9] எனும் நூலிலும் (கி.பி. 90-180) தரப் பட்டுள்ளன.

நைல்நதி[10] சிந்துநதிகளில் முதலைகள்: இவ்விரு நதிகளிலும் முதலைகள்[11] பெரும் அளவில் இருந்தன. நைல்நதியில் காணப் படும் முதலைகள் பற்றி ஏற்கெனவே, புத்தகம் 2. அதிகாரம் 5, பக்கம் 180-ல் தரப்பட்டுள்ளது. சிந்து நதியிலும் முதலைகள் அதிகமாயிருந்தன என்று இந்திய வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

---

1. Phoenicia 2. Crete 3. Lycia 4. River Indus 5. Darius 6. Alexander the Great 7. Nearchus 8. Persian Gulf 9. Arrian Indica 10. Nile 11. Crocodiles

லிபியா[1] : இச்சொல் ஆப்பிரிக்காவை[2]க் குறிப்பிடும். முன்னர்-பழங்காலத்தில் — ஆப்பிரிக்காவின் வடபகுதியாகிய லிபியா மட்டுமே மக்களுக்குத் தெரிந்திருந்த காரணத்தினால், அதுவே ஆப்பிரிக்கா எனக் கருதி விட்டனர். லிபியாவே ஆப்பிரிக்கா, ஆப்பிரிக்காவே லிபியா என்று எண்ணி விட்டனர். இப்பொழுதுள்ள ஆப்பிரிக்கா எனும் பெயர் ஹிராடடஸ் காலத்தில் வழங்கப்படவில்லை. ஆப்பிரிக்காவின் அன்றைய பெயர் லிபியா.

பினீசியர்கள்[3] : தென் தமிழ் நாட்டிலிருந்து[4] பனை யேறியர் என்ற மக்கள் கடல் கடந்து, சிரியா நாடடைந்து,[5] பினீசியர் என்ற பெயர் தாங்கி, அங்குத் தங்கள் குடியேற்றத்தை நிறுவினர். பின்னர் வடஆப்பிரிக்காவில், கார்த்தேஜ்[6] முதலிய குடியேற்றங்களை அயல்நாடுகளிலும் நிறுவிக் கப்பல் ஓட்டுவதில் திறம் மிகுந்திருந்தனர். மற்றும், புத்தகம் 1, அதிகாரம் 1. பக்கம் 35, குறிப்பு-2 பார்க்கவும்.

டாரியஸ்[7] இந்தியர்களை வெல்லுதல்: சிந்துநதிக்கு மேற்கேயுள்ள பகுதி டாரியஸ் அரசருக்குக் கப்பம் கட்டும் நாடாகக் கருதப்பட்டது. காந்தாரா[8] என்னும் பெயர் டாரியஸ்அரசரின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. டாரியஸ் அரசாட்சி செய்த காலம் கி.மு .521-485 அதாவது 36 ஆண்டுகள் ஆண்டார். அவர் ஸ்கைலாக்ஸ்[9] என்பார் தலைமையில் கப்பற்படை ஒன்றை அமைத்து, சிந்துச் சமவெளியை -ராஜபுதனம் பாலைவனம் வரை—வெற்றிகண்டார். அதுவே டாரியஸின் 20 ஆவது சத்ராபியாக[10] விளங்கிற்று. அந்த இந்தியச் சத்ராபி—20ஆவது சத்ராபி டாரியஸுக்கு 360 யூபியன் டேலன்டுகள்[11] பெறுமானமுள்ள பொன் துகளைக் கப்பமாகச் செலுத்தியது -அதாவது வரியாகக் கொடுத்தது.

—(An Advanced History of India
By Dr. R. C. Majumdar, Page 64)

மற்றும் பக்கம் 266, குறிப்பு—1 பார்க்கவும்.

"இந்தியர் தரும் பொன்துகள் அளவு 4680 டேலன்டுகள். இந்தியர் யாவரையும் விட அதிக வரி செலுத்துகின்றனர்."

---

1. Libya 2. Africa 3. Phoenicians 4, Tamilnad 5. Syria 6. Carthage 7. Darius 8. Ghandara 9. Skylax 10. Satrapy 11. Talents

1 டேலன்டம்[1] என்பது 235 பவுன் மதிப்பாகும். ஆக இங்கு இந்தியர் கட்டிய வரியாகிய 4680 டேலண்டுகளின் மதிப்பு: 1099800 பவுன்கள் (ஏறக்குறைய 11 இலட்சம் பவுன்).

லிபியா[2] : இஃது அன்றைய ஆப்பிரிக்கா முழுவதையும் குறிப்பிட்ட ஒரு சொல்லாகும். இது லிபியா எனும் ஒரு பெண்ணின் பெயரால் நிர்மாணிக்கப்பட்டது. மற்றும் பக்கம் 310 குறிப்பு—1 பார்க்கவும்.

பிரொமீத்தியஸ்[3] : இவர் முன் யோசனையுள்ள தெய்வமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். ஆனால் தேவர்களுக்கும் நல்ல காலம் உண்டு; தீய காலமும் உண்டு. இவர் இயாபிடஸ்[4] என்பாரின் மகன்; எபிமீத்தியஸ்[5] என்பாரின் சகோதரன். டியூகேலியன்[6] எனும் மகனின் தந்தை. இவர் களிமண்ணிலிருந்து மனிதனை உற்பத்தி செய்தார். தாம் சிருட்டி செய்ய வல்லர் என்பதை நிருபிக்கத் தீயை வானத்திலிருந்து திருடி எடுத்து வந்து, மனிதனுக்குப் பயனளிக்கட்டும் என்று மனிதனுக்கு அளித்து விட்டார். அதன் காரணமாக அவர் காக்கஸஸ் மலையில்[7] உள்ள ஒருபாறையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு விட்டார். அங்கு ஒரு வல்லூறு அவரது கல்லீரலைக் கொத்தித் தின்று விட்டது. அவ்வல்லூறைக் கொன்று, ஹெர்க்குலீஸ்[8] எனும் மிகுந்த வலிமை பெற்ற தெய்வத்தால் அவர் தளைகள் உடைத்தெறியப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

—(Greek Mythology by Edith Hamilton Pages 77-78)

ஆசியா[9] : ஆசியா என்பது ஒரு பெண் தெய்வத்தின் பெயர். ஓசேனஸ்[10], டெதிஸ்[11] ஆகிய பெற்றோர்க்குப் பிறந்த மகளே ஆசியா ஆவாள். ஆசியாவின் கணவர் இயாபிடஸ்[12]; அவர்களுக்கு மூன்று மகன்கள் உண்டு; 1 அட்லஸ்[12] 2. பிரொமீத்தியஸ் 3. எபிமீத்தியஸ். —(மெகஸ்தனிஸ் : அதி. 3, பக்கம் 28)

ஆனால் ஹிராடடஸ் வேறு விதமாகக் கூறுகிறார். கோடிஸ்[13] என்பாரின் மகன் ஆசிஸ்[14] என்றும், அவர் மனே[15] என்பாரின் பெயரன் என்றும், ஆசிஸ் என்ற மகனின்

1. Talentum 2. Libya 3 Prometheus 4. Iapetus 5. Epimetheus 6. Deocolian 7. Caucassus 8. Hercules 9. Asia 10. Oceanus 11. Tethys 12. Atlas 13. Cotys 14. Asis 15. Manes

பெயராலேயே ஆசியா[1] என்னும் பெயர் வழங்கப்படுகிறது என்றும் கூறுகிறார்.

ஐரோப்பா[2] : இதுவும் ஒரு பெண் தெய்வத்தின் பெயரால் வழங்கப்படும் நாடே ஆகும்

யூரோப்பா[3] என்பவள் பினீசியா[4] நாட்டு அரசரான எகினார்[5] என்பாரின் மகள். மற்றும் ஸெர்பிடான்[6], மைனோ[7] இருதேவதைகளுக்கும் தாய். இவ்விருவரும் ஜூபிடர்[8] கடவுளுக்கும் யூரோப்பாவுக்கும் பிறந்தவர் ஆவர். ஜூபிடர் கடவுள் யூரோப்பாவை ஓர் எருதின் வடிவம் எடுத்துக் கொண்டு, கிரீட் தீவுக்குக்[9] கடத்திச் சென்று விட்டார்.

— (Mythology By Edith Hamilton, Page 256)

சிந்துநதி[10] : சிந்துநதியும் ஒரு பெண்பாலாகவே கருதப்படுகிறது. இந்தியாவில் உள்ள ஆறுகள் பெரும்பாலும் பெண்களாகவே உருவகப்படுத்தப்பட்டுள்ளன. எ-டு: கங்கை, சரஸ்வதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை. இந்தியா[11] எனும் பெயருக்குக் காரணமாக இருந்த சிந்து நதியும் ஒரு பெண்ணின் பெயராலேயே வழங்கப்பட்டு வருவதைக் காணலாம்.

ஆனால் மேலைநாட்டு நதிகள் யாவும் ஆண்களாகவே உருவகப்படுத்தப்பட்டுள்ளன:

"Oh, Tiber, Father Tiber, To whom
The Romans pray,
A Roman's Life, A Roman's Arms Take Thou
In charge This Day."

—(Lays of Ancient Rome : Horatius : Lord Macaulay)

1 Asia 2. Europe 3. Europa 4. Phoenicia 5. Aegnor 6. Serpedon 7. Minos 8. Jupiter 9. Crete Island 10. River Indus 11. India

3. சித்தியாவின் அரசர்கள்

"(i) **சித்தியாவின் சோதிடர்கள்**[1] சித்தியா நாட்டில்[2] குறி சொல்லும் மக்கள் பலர் உள்ளனர். அவர்கள் (பந்து மட்டை செய்யப்படும்) வில்லோ மரத்தின் கோலைக்[3] கையில் கொண்டு, வந்தவர்களுக்குக் குறி சொல்வர். அவர்கள் அம்மரத்தின் கட்டைகளைக் குவியலாகக் கொணர்ந்து, கீழே போட்டு, அக்கட்டை அவிழ்த்து அவற்றைத் தனித் தனியாக்குவர். பிறகு ஒவ்வொரு கழியையும் கையில் பிடித்துக் கொண்டு குறி சொல்வர். அவர்கள் குறி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அக்கட்டைகளை மீண்டும் முன் போலவே ஒன்றாக இணைத்து விடுவர். ஆனால் பெண் போல் இருக்கும் எனாரீஸ்[4] எனும் அலிகள், வேறொரு முறையை மேற்கொள்கின்றனர். அம்முறை தங்களுக்கு அப்ரோடைட்டி[5] எனும் தெய்வத்தால் அறிவுறுத்தப் பட்டது என்று கூறுகிறார்கள். இவர்கள் எலுமிச்சைச் செடியின்[6] அடிப்பாகத்தை எடுத்து, அதை மேல் தோல் நீக்கி, உள்ளிருக்கும், கொடி போன்ற பொருளைத் தங்கள் கைகளில் சுற்றிக் கொண்டும், விரல்களில் சுற்றிக் கொண்டும் வந்தவர்களுக்குக் குறி சொல்கின்றனர்.

(ii) **அரசரின் உடல்நிலை:** சித்தியாவின் அரசர் நோயுற்றால், அரசர் மேற்கூறப்பட்ட மூன்று குறி சொல்பவர்களை வரவழைக்கிறார். அவர்கள் மேலே கூறப்பட்ட முறையில் கட்டைகளைப் பூமியில் போட்டு, பிறகு ஒன்று சேர்த்துக் குறிகள் சொல்வர். அவர்கள் இன்னார் இன்னார்

---

1. Scythian soothsayers 2. Scythia 3. Willow tree 4. Enarees 5. Aphrodite 6. Lime twigs

எனப்படும் ஒருவர்— அக் குறியில் அவர் பெயரைக் குறிப்பிட்டு — அரசரின் அடுக்களைமீது அவர் ஆணையிட்டுப் பொய் கூறியுள்ளார் என்று குற்றம் சாட்டுவர். குற்றம் சாட்டப்பட்டவரோ, ''எதுவும் இல்லை'', ''நான் நிரபராதி'' என்றே கூக் குரலிட்டுச் சொல்வார். மற்றும் மூன்று குறி சொல்பவர்கள் அழைக்கப்படுவர். அவர்கள் முதல் கூறியவர்களுக்கு மாறாகக் குறி சொன்னால், மேலும் மூவர் வரவழைக்கப் படுவர். இவர்களுள் பெரும் பான்மையினர், அவன் குற்றவாளி என்று சொன்னால், அவன் தூக்கிலிடப் படுவான். அவ்வாறின்றி மற்றவர் யாவரும் அவன் குற்றமற்றவன் என்று கூறி விட்டால், குற்றவாளி என முதலில் கூறிய மூன்று குறி சொல்பவரும் தண்டனைக்கு ஆளாக்கப் படுவர்.

(iii) **தண்டனை நிறைவேற்றப்படும் முறை:** ஒரு வண்டி நிறையக் கட்டைகள் அடுக்கப்பட்டிருக்கும். அதன் முன் ஓர் எருமை மாட்டினையிணைத்து, அவ்வண்டியைப இழுத்துப் போகுமாறு செய்வர். குற்றவாளிகள் எனக் கருதப்பட்டவர்கள்— அம் மூன்று குறி சொல்பவர்களும்— கைகள் கால்கள் கட்டப்பட்டு, அவ்வண்டியில் உள்ள கட்டைகளுக்கு நடுவே திணிக்கப்படுவர். உடன் அக் கட்டைகள் தீ மூட்டப்படும். பூட்டப்பட்ட அவ் எருமை மாட்டைப் பயன் படுத்தி அசுர வேகப் பாய்ச்சலில் ஓடுமாறு செய்வர். சிறிது நேரத்தில் காற்றின் வேகத்தால் கட்டைகள் எரிந்து, கீழே விழுந்து நாலா பக்கங்களிலும் சிதறும். அத் தீயில் வேகாதவர்கள் சில சிறு தீப்புண்களுடன் வெளியேறி விடுவர். அதில் இறப்பவரும் உண்டு. அவர் பிழைத்துக் கொண்டால், மீண்டும் தன் தொழிலில் ஈடுபடுவர். குற்றஞ் சாட்டப்பட்டவன் ஒருவன் தூக்கிலிடப்பட்டால், அவன் இறந்தவுடன், அவனுடைய மகன்கள் யாவரும் தூக்கிலிடப் படுவர். ஆனால் பெண்களை எதுவும் செய்ய மாட்டார்கள். அவர்கள் குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்படவே மாட்டார்கள்.

(iv) அரசர்களின் சமாதியறைகள்:[1] அரசர்கள் புதைக்கப் படும் இடம் கெர்ரி[2] எனும் பெயர் கொண்டதாகும். அது கப்பல் போக்குவரத்துக்கு வசதியாக உள்ள போரிஸ்தனிஸ் நதிக்[3] கழிமுகத்தருகில் இருந்தது. ஓர் அரசர் இறந்து விட்டால், ஒரு பெரிய குழியைத் தோண்டுகின்றனர். அச்குழி சதுரமானது, அதில் வைக்க அரசர் சடலம் எடுத்துச் செல்லப் படுகிறது. அதற்கு முன்னர் அச்சடலம் பின் வருமாறு வகைபடுத்தப் படுகிறது. அச்சடலத்தின் வயிறு இரண்டாகக் கிழிக்கப் பட்டு. உள்ளிருக்கும் குடல் முதலியவை வெளியே எடுக்கப்பட்டு அவ்விடத்தில் நறுமண வாசனைப் பண்டங்கள்,[4] பொடியாக்கப்பட்ட நறுமண மருந்துக் கிழங்குகள்[5], தனியா விதைகள்[6], சோம்பு[7] ஆகிய வற்றைப் பெருமளவில் வைத்து மீண்டும் அதைத் தைத்து விடுவர். பின்னர் அவ்வுடல்மீது மெழுகைப் பூசித்[8] தயார் செய்வர். அதன் பிறகு அச்சடலம் ஊர் ஊராக எடுத்துச் செல்லப்படும். அச்சடலத்தை வரவேற்பவர் சில சடங்குகளைச் செய்து கொள்ள வேண்டும். தங்கள் காதுகளில் ஒரு பகுதி யையும், தலைமயிரை மழித்தும்,வலக்கைத் தோளில் காய்ந்த இரும்பால் வட்ட வடிவமான சூட்டை[9] ஓர் இலச்சினையாகப் போட்டுக் கொள்ள வேண்டும். மற்றும் தங்கள் முகத்தில் அறைந்து கொண்டும், மூக்கில் குத்திக் கொண்டும், தங்கள் இடக் கைகளால் அம்புகளைப் பாய்ச்சிக் கொண்டும் அச் சடலத்தைப் பின் தொடர்ந்து செல்கின்றனர். சித்தியா[10] நாட்டுப் பகுதிகள் யாவற்றிலும் சென்ற பிறகு, கெர்ரி எனும் புதைக்கப்படும் இடத்தை அடைகின்றனர். அங்கே ஒரு பாய் விரிக்கப்பட்டு, அதன் மீது அரசர் சடலம் வைக்கப் படுகிறது. அதற்கருகில் ஓர் ஈட்டி பூமியில் நட்டு வைக்கப் படுகிறது. அச்சடலம் புதைக்கப்படும் இடத்தினருகில் தான் அவ் அரசரின் மூதாதையர்களின் சடலங்களும்— பின்வரப் போகும் சந்ததியாரின் சடலங்களும் கூட புதைக் கப்படும். மற்றும், அவ் அரசரின் ஆசைக் கிழத்தி ஒருத்தியும்[11], அவருடைய சமையல்காரரும்[12], அவருக்கு

---

1. Burial places 2. Gerri 3. Boristhenes 4 Aromatic substances 5. Crushed galingale 6. Parsley seed 7. Anise 8. Coated with wax 9. Branded 10. Scythia 11. Concubine 12. Cook

உணவு பரிமாறினவர் ஒருவரும்[1], அவருடைய மணைவி[2] அவர் கருவூலக் காப்பாளர்[3] ஆகியவர்களும் கழுத்துகள் திருகப்பட்டு, அரசர் சமாதிக்கருகில் அந்தச் சதுரக் குழிக்குள், புதைக்கப்பட்டுவிடுவர். குதிரைகள், பொற் கிண்ணங்கள் (சித்தியர்கள் வெள்ளி, வெண்கலம் பயன் படுத்துவது கிடையாது) ஆகியவையும் புதைக்கப்பட்டு விடுகின்றன. இந்தப் புதைத்தல் சடங்குகள் முடிவடைந் ததும் ஒவ்வொருவரும் மண்ணைக் கோபுரமாக்கிப் பின்னர் கலைத்துச் சென்று விடுவர்.

ஓர் ஆண்டு முடிந்தவுடன்; அடுத்த ஆண்டில் மிகுதியா யிருக்கும் பணியாளர்களுள் 50 சிறந்தவர்களைப் பொறுக்கி எடுக்கின்றனர். அவர்களின் கழுத்துகளும் திருகப்பட்டு, அவ் அரசர் சடலத்தின் அருகில் புதைக்கப்படுவர். புதைக்கப் படுவதற்கு முன், அச்சடலத்தின் வயிறு இரண்டாகக் கிழிக்கப்பட்டு, அதில் வைக்கோல்[4] திணிக்கப்பட்டு முன் போலவே தைத்து, புதைக்கப்படும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(v) எளிய மக்களின் ஏழ்மைச் சடங்கு: எளிய மகனார் ஒருவர் இறந்து விட்டால், அவர் உடலைக் கட்டை வண்டி யில் வைத்து உறவினர் வீடுகளுக்கு எடுத்துச் சென்று, அப் பொழுது ஒவ்வொரு வீட்டாரும் அச்சடலத்துக்கு உணவி டுவர்— உணவை ஒரு பாத்திரத்தில் இடுவர். இவ்வாறான சுற்றுலா 40 நாள்கள் கூட நடைபெறும். அதற்காக, அச் சடலம் மெழுகினால் பூசப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு விடும். அதன் பின்னர் அச் சடலம் புதைக்கப்பட்டு விடும். புதைத்த பிறகு சித்திய மக்கள்[5] யாவரும் தங்கள் உடலைத் தூய்மை செய்து கொள்ளக் குளிக்கச் சென்று விடுகின்றனர். ஒருவித நறுமண விரையைச் சூடான அனல் மீது இட்டு, அதனின்று வெளிவரும் புகையில் குளிப்பர். இக் குளியல் புகைக் குளியல்[6] என்று வழங்கப்படும்.

---

1. Butler 2. Groom 3. Steward 4. Dried grass - hay
5. Scythians 6. Vapour bath

பெண்கள் தேவாரு[1], சாம்பிராணி[2], இழவுத் துயர்க்கான குவிந்த காய்கள்[3] ஆகியவற்றைப் பிசின் போல அரைத்துத் தங்கள் முகங்களின்மீது பூசிக் கொள்கின்றனர். அடுத்த நாள் அப்பசையை எடுத்து விட்டால், முகம் பளபளவென மெருகிட்டது போன்று காணப்படும். மற்றும் அவர் மேல் தோல் நறுமணம் பொருந்தியதாகவும் இருக்கும்.''

விளக்கவுரை:

குறிசொல்பவர்[4]: குறிசொல்பவர், சோதிடம் கூறுபவர்கள் எந்நாட்டிலும் எக்காலத்திலும் இருந்தனர். அவர்களுள் கிரகங்களைக் கட்டங்களிட்டு, அவற்றில் அடைத்துச்[5] சாதகபலன்கள் கூறுவது கிரேக்க மக்களிடம் முன்னர் காணப்பட்டது. மற்றவை சோழி சோசியம், வெற்றிலை சோசியம், எண்சோதிடம் ஆகியவை பழக்கத்தில் இருந்தன—இன்றும் இருந்து வருகின்றன. இங்குக் கூறப்படுவது: கட்டைகளை[6] அவிழ்த்துப் போட்டு, ஒவ்வொரு கட்டையும் எந்தத்திசை நோக்கி விழுகின்றது, தனித் தனியாய் விழுகின்றனவா, சேர்ந்து விழுகின்றனவா, அதில் புள்ளிகள் உள்ள கட்டைகள் எவ்வாறு விழுகின்றன என்றெல்லாம் பார்த்துச் சித்தியர்கள், அஸ்ஸீரியர்கள்[7], பாபிலோனியர்கள்[8] குறி கூறி வந்தனர். அக்காலத்தில் அவ்வாறு குறி கேட்பது ஒரு நாகரிகமாகவும், அதில் நம்பிக்கை கொண்டு கேட்டால் நற்பலன் ஏற்படுவதாகவும், கருதப்பட்டு வந்தது.

மார்க்கோபோலோ (கி.பி.1284 - 1324) கூறுகிறார்: ''கான் பலுவில் சுமார் 5000 சோதிடர்கள் உள்ளனர். இவர்களுக்கு இலவச உண்டியும் உடையும் அரசர் அளித்து வருகின்றார். இவர்கள் அரசர்க்கு வருங்கால நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவர்.''

—(மார்க்கோபோலோ: பக்கம் 125)

எநாரீஸ்[9]: முன்னர் இவர்கள் பெண் நோயால்[10] அவதிப் பட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டனர் (பக்கம் 94,குறிப்பு—5). இப்பொழுது அவர்கள் பெண்தன்மை கொண்டவர்கள் அதாவது அலிகள்[11] என்பவரைக்குறிப்பிடும் சொல்லாகப் பயன்படுகிறது. ஆகையால் இவ்வாறு குறிக்கப்படுபவர் பெண் தன்மை கொண்ட

---

1. Cedar 2. Frankincense 3. Cypress 4. Soothsayers 5. Planetary chart 6. Willow sticks 7. Assyrians 8. Babylonians 9. Enarees 10 Female Disease 11. Eunuchs

வர்கள்[1] என்று உறுதியாகத் தெரிகிறது. நாரீ என்ற சொல் பெண் எனும் பொருளைத் தரும். ஆகையால், முன்னர் தமிழ் நாட்டிலிருந்து சென்ற பனையேறியராகிய பினீசியர்களும்[2], அஸ்ஸீரியர்களும்[3] தமிழ்ச் சொற்களை வேர்ச்சொல்லாகக் கொண்டே தங்கள் மொழிகளை வளர்த்தார்கள். இச்சொற்களுள் நாரீ எனும் சொல்லும் ஒன்றாகும். போர்ஸா என்பது தமிழ்ச்சொல் பரிசு அல்லது பரிசில் என்பதன் திரிபே. போர்ஸா என்றால் படகு என்று பொருள் படும். இவ்வாறு பல தமிழ்ச் சொற்கள் பினீசியர்களின் மொழியில் காணப்படுகின்றன. மற்றும் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் (கி மு. 3000) கடல் கடந்து தமிழ் முழங்கிய நாடுகள் பினீசியா[4], அஸ்ஸீரியா[5], சித்தியா[6] முதலான நாடுகள் ஆகும்.

அப்ரோடைடி[7]: இக்கடவுள் அழகு, காதல் ஆகியவற்றின் தெய்வம். ரோமானியர்[8] இத்தெய்வத்தை வீனஸ் என்று வழங்குவர். அத்தெய்வம் கடல் நுரையிலிருந்து[9] தோன்றியதால், அது அப்ரோடைடி என்று வழங்கப்பட்டதாகக் கிரேக்கப் புராண வரலாறு கூறுகிறது. அத் தெய்வம் ஹெபீஸ்டஸின்[10] மனைவியாவாள். ஆனால் அவள் தன் கணவனைத் துரோகம் செய்து—ஹெபீஸ்டஸ் ஒரு கால் ஊனமுடையவர்— போர்க் கடவுளைக்[11] காதலித்தாள். எல்லாத் தேவதைகளிலும் இவளே அழகான தெய்வம். தமிழ் நாட்டில் இவருக்கு நிகரானவள் ரதிதேவி[12] எனப்படுவாள். தமிழில் "இவள் என்ன ரதியா? ரம்பையா?" என்று கேட்கப்படுவதைக் காணலாம்.

தண்டனை நிறைவேற்றப்படுதல்: சித்தியா[13] நாட்டு மக்கள் இரண்டு வகைகளாகத் தண்டனையை நிறைவேற்றினர் ஒன்று தூக்கிலிடுதல்[14]; இரண்டாவது எரித்து விடுதல் அதாவது நெருப்பிலிட்டுக் கொளுத்தி விடுதல்[15]. இவ்விரு வகைத் தண்டனைகளும் ஹிராடடஸால் குறிப்பிடப்படுகின்றன.

மார்க்கோபோலோ (கி.பி. 1254 - 1324) கூறுகிறார். "சிறை பிடிக்கப்பட்ட நாயன் பேரரசர் குப்ளாய்கான் முன்னர் நிறுத்தப் பட்டார். அரசர் அவனைத் தூக்கிலிடுமாறு கட்டளையிட்டார்.

1. Feminine nature 2. Phoenicians 3. Assyrians 4. Phoenicia 5. Assyria 6. Scythia 7. Aphrodite 8. Romans 9. Sea foam 10. Hephaestus 11. War-God 12. Rati Devi 13. Scythia 14. Hanging 15. Burning

அவ்வாறே போர்ச் சேவகர்கள் நாயனை இரண்டு சமுக்காளத்துக்கு நடுவில் வைத்துப் புரட்டிப் புரட்டித் தரைமீது மோதியடித்தார்கள். நாயன் மரணமடைந்தான்

இவ்வாறு சமுக்காளத்தில் சுற்றப்பட்டு மோதியடித்ததன் காரணம் யாதெனில், அரச வமிசத்தினரைச் சார்ந்தவர்களின் மரணத்தைச் சூரிய சந்திரர்கள் நேராகப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்ற கொள்கையேயாகும்.''

—(மார்க்கோபோலோ: பக்கம் 113)

சடலப் பாதுகாப்பு[1]: இதற்காக வாசனைப் பண்டங்கள்[2], நொறுக்கப்பட்ட மருந்துக் கிழங்குகள்[3], தனியா வகைகள்[4], சோம்பு[5] ஆகியவை ஒன்றாக அரைக்கப்பட்டு, வயிற்றிலுள்ள குடல் எடுக்கப்பட்டவுடன், அவ்விடத்தில் அம் மருந்துக் கலவையை வைத்து, முன்போலவே வயிற்றைத் தைத்து விடுவர். பின்னர் உடல் மெழுகால்[6] பூசப்பட்டு விடும். மற்றும் பக்கம் 187—190, அவற்றின் விளக்கங்களையும் காணவும்.

அரசருடன் உறவினர் பணியாளர் இறத்தல்: அரசர் இறந்ததும், அவர் மனைவி, பணியாளர்களுள் சிலர் கொல்லப்பட்டு அதே குழியில் புதைப்பது வழக்கமாயிருந்தது. ஆவி போன பிறகும், இரண்டு ஆவிகளும்[7] பேசிக்கொள்ளும் என்ற நம்பிக்கையே அவ்வாறான வழக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்துவிட்டது.

மார்க்கோபோலோ (கி.பி. 1254-1324) எழுதுகிறார்: ''அரசன் தன்னைச் சுற்றிலும் பற்பல வீரர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறான். அரசன் இறந்ததும், அவன் சடலத்தைக் கொளுத்தும் சடங்கு நடைபெறும். அப்பொழுது மேற்கூறிய உண்மை மெய்க்காப்பாளர்கள், அரசனின் உடல் வேகும் தீயில் திடமனத்துடன் குதித்து, அவ்வரச உடலுடனே, தாமும் சாம்பலாகி விடுவார்கள். இதனால் அப்பணியாளர்கள் அவ்வரசனுடனே வேறு உலகத்துக்குச் சென்று, மீண்டும் அவ் அரசன் இவ் உலகில் பிறந்திடும்போது அப் பணியாளர்களும் அரசனுக்காகவே ஊழியம் செய்ய மீண்டும் பிறந்திடுவர் என்ற திடமான நம்பிக்கை அவர்களுக்கு உண்டு.''

—(மார்க்கோபோலோ: பக்கங்கள் 18-19)

---

1. Embalming 2. Aromatics 3. Crushed galingale 4. Parsley seeds 5. Anise 6. Wax 7. Spirits

சடங்குகளுக்குப் பிறகு குளியல்: இவ்வழக்கம் தமிழ் நாட்டிலிருந்து அஸ்ஸீரியர்களுக்கும்[1] சித்தியர்களுக்கும்[2] சென்றுள்ளது. தமிழ் நாட்டிலிருந்து[3] சென்ற பனையேறிகள் எனும் பினீசியர்கள்[4] மூலமாக அப்பழக்கம் மேலை நாடுகளுக்குப் பரவிற்று என்று கூறலாம் தமிழ் நாட்டில் ஒருவர் இறந்து விட்டால், சடல எரிப்புக்குப் பின்னரும், புதைத்தலுக்கும் பின்னரும் உறவினர்கள் தலைக்கு நீர் ஊற்றிக் கொண்டு குளித்தல் மரபு. இது தமிழ்நாட்டின் நீண்டகாலமாக வந்த—தொன்று தொட்டு வந்த—வழக்கமாகும்.

புகைக் குளியல்[5]: குளியலுக்குப் பிறகு சாம்பிராணிப் புகை[6] போடும் தமிழரது வழக்கம் பினீசிய நாட்டிற்கும்[7], அஸ்ஸீரிய நாட்டிற்கும்[8], சித்தியா நாட்டிற்கும்[9] பரவி வேரூன்றி நின்றது என்றே கூறலாம். தமிழ்நாட்டில் பெண்கள் தங்கள் தலைக்கு ஸ்நானம் செய்ததும் அத்தகைய நறுமணப்புகையைப் போட்டுக் கொள்வதை இன்றும் ஒவ்வொரு வீட்டிலும் காணலாம்.

---

1. Assyrians 2. Scythians 3. Tamilnadu 4. Phoenicians 5. Vapour bath 6. Frankincense 7. Phoenicia 8. Assyria 9. Scythia

4. சித்தியர்கள் டாரியஸைப் போரில் சந்தித்தல்

"டாரியஸ்[1] சித்தியர்[2] களைப் போரில் வெல்ல, அவர்கள் நாடாகிய சித்திய நாட்டின்[3] மீது படையெடுக்கத் திட்டமிட்டு, அச் செய்தி சித்தியர்களுக்கும் எட்டிற்று. சித்திய நாட்டினர் இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். டாரியஸின் படையெடுப்பை முறியடிக்க இருவரும் ஒருமித்த கருத்தைக் கூறவில்லை. சித்தியருக்கு உதவி செய்வதாக வாக்களித்தவர்கள் கெலோனி[4], புடினி[5], சௌரமதே[6] ஆகியோர் ஆவர். ஆனால் மற்றவர்கள் அகதிர்ஸி[7], நியூரி[8], ஆண்டிரோபகி[9] மெலங்கலேனி[10], டௌரி[11] ஆகியவர்கள உதவி செய்வதற்கு இணங்கவில்லை.

சித்தியர்கள் இப்போக்கையறிந்து டாரியஸிடம் நேரிடையாகப் போர் செய்வதை அவர்கள் தவிர்த்தனர். படையெடுத்து வருபவர் முன்னே வருவதற்குள்ளாக, தங்கள் நாட்டிலிருந்து வெளியேறிவிட எண்ணினர். போகும் பொழுதே, கிணறுகள், ஏரிகள், பச்சைப் பயிர்கள் ஆகியவற்றைப் பயன்படாமல் செய்து விட்டுச் செல்ல முடிவும் செய்தனர்.

அதன்படி தங்கள் பெண்கள், குழந்தைகள், உணவுப் பெட்டிகள் யாவற்றையும் மூடிய பெட்டிகளில் வைத்து, வடதிசை நோக்கிப் பயணம் செய்யுமாறு அக் குடும்பங்களுக்குப் பணித்தனர். சித்தியர்களின் குதிரைகளைப் பார்த்த டாரியஸ்

---

1. Darius 2. Scythians 3. Scythia 4. Geloni 5. Budini 6. Sauromatae 7. Agathirsi 8. Neuri 9. Androphagi 10. Melanchaleni 11. Tauri

அரசரின் போர் வீரர்கள் அவர்களைத் தொடரத் தொடங்கினர். பாரசீகப் போர் வீரர்களும்[1] சித்தியர்கள் சென்ற சௌரதரதே, புடினி, கெலோனஸ் ஆகியவற்றின் வழியே சென்று, தாங்கள் சென்ற இடங்கள் யாவற்றிலும் தீயிட்டுக் கொளுத்திச் சென்றனர். மற்றும் சித்தியர்கள் வடக்குத் திசை நோக்கிப் பயணமாயினர் அல்லவா? பாரசீக வீரர்களும் அத்திசையிலே சென்று அவர்களைத் துரத்தலாயினா. வடபகுதியில் போகப் போக மக்கள் நடமாட்டமே இல்லாத நாடாக விளங்கிற்று. டாரியஸும் அவர் போர் வீரர்களும் அவ்வறண்ட நாட்டையடைந்து, அங்கே எட்டுக் கோட்டைகளைக்[2] கட்டத் தொடங்கினர். ஒரு கோட்டைக்கும் மற்றதற்கும் இடையே 8 மைல்கள் இடைவெளி காணப்பட்டது.

சித்தியர்கள்[3] நேரிடையாக, முன் தங்களுக்கு உதவி மறுத்த ஊர்களான மெலங்கலேனி[4]மீது பாய்ந்தனர். அவர்கள் அதை நாசப்படுத்தியவுடன், அவர்களுக்கு அடுத்தாற்போல் அவர்களைத் துரத்தி வந்த பாரசீகப் போர் வீரர்கள் அந்நாட்டில் புகுந்து, இருப்பதையும் தீக்கிரையாக்கினர். அங்கிருந்த மக்கள் நடுக்கம் கண்டு ஓடிவிட முயன்றனர். இரண்டு பேர்களும்—சித்தியர்களும்[5] டாரியஸ் போர் வீரர்களும்—ஒருவர் பின் ஒருவராக அவர்களைப் பின் தொடர்ந்து சென்று, அவர்கள் பொருள்களையும், வயல்களையும் சேதம் செய்தவாறு[6] சென்றனர். அவ்வாறு செய்தது, அவர்கள் தங்களுடன் ஒன்று சேர மறுத்ததற்கான தண்டனை என்றே சித்தியர்கள் கருதினர். அடுத்து வந்த ஊர் ஆண்டிரோபகி[7]. அதற்கும் அடுத்தது நியூரி[8]. இவ்வாறு ஒவ்வொரு நாடாக ஓடி ஓடி டாரியஸின் வீரர்கள் தங்களைப் பின்தொடருமாறு செய்துவந்தனர். அதற்கு மேலும் டாரியஸ் பொறுத்துச் செல்ல முடியவில்லை. இறுதியில் சித்தியர் அரசரான இடந்திர்ஸஸ்[9] அவர்களிடம் ஒரு தூதுவரை அனுப்பி "ஏன் ஓடிக் கொண்டே இருக்கிறீர்கள்? நின்று நிலைத்துச் சண்டையிடுங்கள்," என்று டாரியஸ் கூறினார். அவர்கள் அதற்கு, "ஐயா, நீங்கள் சண்டையிடுவதற்குக் கார

---

1. Persian soldiers 2. Forts 3. Darius 4. Melanchaleni 5. Scythians 6. Destroyed 7. Androphagi 8. Neuri 9. Idanthyrsus

ணம்தான் என்ன? எங்களுக்கு நிலைத்த பூமி ஏதேனும் உள்ளதா? நாங்கள் நாடோடிகளாயிற்றே! அல்லது பசுமை யான தானியங்களும் பொருள்களும் உள்ளனவா? அவையும் எம்மிடம் இலவே! எங்களுக்கு என்று ஏதாகிலும் நகரம் உள்ளதா? கோட்டை, கொத்தளங்கள் உள்ளனவா? இலவே. அவ்வாறிருக்க எங்களைத் துரத்தி அழிப்பதில் உங்களுக்கு என்ன கிடைத்து விடும்?'' என்று கூறினார் இடந்திர்ஸஸ் எனும் சித்திய அரசர். இருப்பினும் அவர்கள் நிற்காமல், சித்தியர்களைத் தொடர்ந்து சென்றனர். இறுதியில் சித்திய மன்னர், ஒரு பறவை, ஒரு மூஞ்சூறு, ஒரு தவளை, 5 அம்புகள் ஆகியவற்றை டாரியஸிடம் அன்பளிப்பாக அளித்தனர். இவை யாவும் எவற்றை உணர்த்தின என்று வினாவியதற்கு, அவருக்குத் தரப்பட்ட விடை: ''மண்ணும் நீரும் கொடுத்ததால், போரில் சரணடையும் நிலைமை ஏற் பட்டு விட்டது; மூஞ்சூறு நிலத்தில் இருந்து கொண்டே மக்கள் தின்னும் தானியங்களைத் தாமும் உட்கொள் கின்றன. தவளைகள் நீரில் வசிக்கும், நிலத்திலும் இருக்கும். அவ்வாறான நீரும் நிலமும் டாரியஸ் அரசருக்குச் சொந்த மாக்கப் பட்டன. பறவைகள் குதிரைகள் யாவும் வானிலும், நிலத்திலும் வசிப்பவை. ஆக, வானமும், நிலமும் டாரி யஸைச் சார்ந்து விட்டன. அம்புகள் வளையாது நேராகச் சென்று குறிகளைத் தாக்கும். ஆகையால் அவ் அம்புகள் அவர்கள் சொல் தவறாதவர்கள், நேர்மையானவர்கள் என் பதைக் காட்டும்'' என்று விளக்கம் தந்தனர்.

டாரியஸ்[1] இரவு வந்தவுடன் தம் தாயகத்திற்குத் திரும்ப ஏற்பாடுகள் செய்தனர். அதற்கு மேலும் செல்ல விரும்பவில்லை. அவர்கள் அங்கேயே சில பொருள்களை விட்டு விட்டுச் சென்றனர்—அவை நோயுற்ற மனிதர்கள், சில வேண்டாத வீரர்கள், சில கழுதைகள்.

டாரியஸ் திரேஸ் நாட்டின்[2] வழியாக ஸெஸ்டாஸுக் குப்[3] பயணமானார். அங்கிருந்து ஆசியா[4]வுக்குக் கப்பல் ஏறினார். ஐரோப்பாவைப்[5] போரில் வெல்ல, அதற்காகத்

1. Darius 2. Thrace 3. Sestos 4. Asia 5. Europe

தலைமை தாங்கி நடத்திச் செல்ல மெகபஸஸ்[1] எனும் பாரசீகரை அங்கேயே விட்டுவிட்டுச் சென்றார். மெகபஸஸின் போராற்றலையும், பேராற்றலையும் வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்."

விளக்கவுரை:

சித்தியர்களுள்[2] இருபிரிவினர்: இவர்களுள் ஒரு பிரிவினர் சித்தியர்களின் கொள்கை பிடிக்காமல், அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்காதவர்; மற்றவர் அவர்களுக்குப் பல்லாற்றாலும் உதவிசெய்பவர்.

உதவி செய்வதாக வாக்களித்தவர்கள்: கெலோனி[3], புடினி[4] சௌரமதே[5] ஆகியோர் ஆவர்.

உதவி செய்ய மறுத்தவர்கள்: அகதிர்ஸி[6], நியூரி[7], ஆண்டிரோபகி[8] மெலங்கலேனி[9], டௌரி[10] ஆகியோர்.

"டாரியஸ் அரசர் சித்தியர்மீது படையெடுத்து வந்ததன் முக்கியக் காரணம், அவர்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மிடிய நாட்டின்[11] மீது படையெடுத்தனர் என்றும் அதற்குப் பழி வாங்கவே இப்பொழுதைய படையெடுப்பு என்றும் காரணம் கூறப்படுகிறது."

—(History of Greece By J. B. Bury, Page 240)

மெகபஸஸ்: இவர் சிறந்த வீரர். பாரசீக நாட்டை[12] விரிவுபடுத்தினார். கிரேக்க நாட்டை[13]ப் பாரசீக நாட்டிற்குக் கப்பம் கட்டுமாறு செய்தார்.

சித்திய நாட்டினர்: சித்தியர்கள் ருஷ்யாவின்[14] தென்பகுதியில் உள்ள புல்வெளிகளில்-இஸ்டர் நதிக்கு[15] வடக்கே-வாழ்ந்த மக்கள். டாரியஸ் அரசர் உண்மையில் திரேஸ் நாட்டினர்மீது தான்[16] படையெடுத்துச் சென்றார். ஆனால், ஹிராடடஸ், டாரியஸ் படையெடுத்துச் சென்றது சித்தியரின்மீது என்று கதைப்பாணியில் கூறிவிட்டார். சித்தியர்கள் நாடோடி இனத்தவர்; அவர்களை ஒழித்துக் கட்டுவதில் அத்துணை

---

1. Megabasus 2. Scythians 3. Geloni 4. Budini 5. Sauramatae 6 Agathirsi 7. Neuri 8. Androphagi 9. Melanchaleni 10. Tauri 11. Media 12. Persia 13. Greece 14. Russia 15. River Istus 16. Thracians

அக்கறை எடுத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. சித்தியர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் டாரியஸும் சென்றிருக்க வேண்டிய அவசியமுமில்லை.

இங்குச் சில பகுதிகள் நாளடைவில் மாறியிருக்கலாம்; அல்லது சில பகுதிகள் கிடைக்காமல் விடுபட்டு, மற்றவை ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கக்கூடும்.

உண்மையான வரலாறு இதுதான் என்று கிரேக்க வரலாறு[1] எடுத்தியம்புகிறது:

"டாரியஸின்[2] ஐரோப்பியப் படையெடுப்பு[3] மிகுந்த வெற்றியைத் தந்துள்ளது—அதற்கு ஈடாகக் கேம்பைஸிஸின்[4] எகிப்தியப்[5] படையெடுப்பைக் கூறலாம். ஆனால் அது கதைப் பாணியிலே கற்பனைக் கண்ணோட்டம் போல நம்வரை வந்துள்ளது. கதைப்பாணியில் கூறப்பட்ட செய்தி, அப்போர் திரேசியர்மீது முக்கியமாகத் தொடுக்கப்பட்ட போர்ராகத் தோன்றவில்லை; ஆனால், பாரசீக நாட்டில்[6] ருஷ்யாவின் தெற்குப்பகுதியில் உள்ள புல்வெளிகளில்[7] சித்தியர்களின் ஆதிக்கத்தினை ஒழித்துக் கட்டுவதாகவே என்று ஹிராடடஸ் கூறுகிறார். திரேஸ் நாடு, சித்திய நாட்டுக்குப் போகும் பாதையில் குறுக்கிடும் நாடு என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. சித்திய நாட்டை வர்ணிப்பதால், திரேஸ் நாட்டின் மீதான எடுக்கப் பட்ட படையெடுப்பு மங்கி, ஒன்றுமில்லாமல் காரசாரமில்லாமல் போய்விட்டது. டாரியஸின் முக்கியக் கருத்து, திரேஸ் நாட்டினரைப் பழி வாங்க வேண்டும்—காரணம் அவர்கள் மிடிய நாட்டு மக்களுக்[8] கெதிராக ஒரு நூறாண்டுகளுக்கு முன்னர் படையெடுத்தனர் என்பதே. ஆகையால் டாரியஸ் நம் படையை இஸ்டர் நதிக்கரைக்கு அனுப்பி வைத்தார். அங்கே அந்நதிக்குக் குறுக்காக ஒரு படகுப் பாலத்தை நிர்மாணிக்கக் கட்டளை யிட்டார். அவருடைய முதல் கருத்து தாம் அந்நதியைக் கடந்த வுடன், அதை அழித்துவிட்டுத் தம் படைகளைத் திருப்பி அனுப்பிவிடுவது என்பதே.

ஆனால் கிரேக்கர்[9] ஒருவர் கூறிய அருமையான யோசனை யின் பேரில் அவர் தம் திட்டத்தை மாற்றியமைத்து விட்டார்.

---

1. Greek History 2. Darius 3. European Invasion 4. Cambyses 5. Egypt 6. Persia 7. Steppes south of Russia 8. Medians 9. Greek

அவர் ஒரு நீண்டகயிற்றை எடுத்துக் கொண்டு, அதில் அறுபது முடிச்சுகளையிட்டார். அக்கிரேக்க தளபதியிடம் டாரியஸ்[1], ''ஒவ்வொருநாளும் ஒரு முடிச்சை அவிழ்த்துவிடு; இம்முடிச்சுகள் யாவும் அவிழ்க்கப்படும் வரை இதைப் பாதுகாத்து வா. அந்தக் கால முடிவிற்குள் நான் திரும்பி வரவில்லை எனில், நீ உன் ஊருக்குத் திரும்பிச் செல்லலாம்'' என்று கூறினார். ஹிராடடஸ், டாரியஸை எந்த ஆறுகளின் பெயர்களையும் குறிப்பிடாமல், அவர்கள் உணவுக்கு என்ன செய்வார்கள் என்பதையும் நினைக்காமல், அந்த அகண்ட புல்வெளியின் வழியாக டான் நதிக்கும்[2] அப்பால் அழைத்துச் சென்று, ஓரோஸ் நதியைக்[3] கடந்து அப்பகுதியில் தம் கோட்டைகளை—டான்யூப் நதி[4] முதல் மயோடிக் கடல் வரை[5] கட்டியதாகக் கூறியுள்ளார். டான்யூப் நதிக்குத் திரும்புகையில்," அப் பாரசீகர்கள்[6] நாடோடி இனத்தவர்களால் துன்புறுத்தப்பட்டுத் துரத்தப் பட்டனர். அதற்கிடையில் 60 நாள்கள் சென்று விட்டன. (டாரியஸ் கொடுத்த கயிற்றில் இடப்பட்ட முடிச்சுகள் 60 முழுவதும் அவிழ்க்கப்பட 60 நாள் ஆகும்—நாளொன்றுக்கு ஒன்றாக.) அயோனியர்கள்[7] அந்தப் படகுப் பாலத்தைக் காத்து நின்று, சொன்ன கெடுவு நாளுக்கு அப்பாலும் இருந்தனர். அப்பொழுது சித்தியர்கள்[8] கூட்டமொன்று வந்து அந்தப் பாலத்தைத் தகர்க்க எண்ணினர் அவ்வாறு செய்தால், டாரியஸை அழித்துத் தாங்கள் விடுதலை பெறமுடியும் என்று கருதினார்கள். மில்டியாடிஸ்[9], கெர்ஸனீஸின்[10] கொடுங்கோல் மன்னன். சித்தியர்களின் கருத்தை மிகவும் ஆதரித்தான். ஆனால் ஹிஸ்டியஸ்[11] என்பார் வெகு தீவிரமாக எதிர்த்து வாதாடினார். அவர்களும் இறுதியில் விட்டுக்கொடுத்து, அந்தப் பாலத்தின்[12] வடபகுதியை அழித்து விட்டனர். அழித்து மேலே நடந்து சென்றனர்—டாரியஸின் வழி இத்துடன் துண்டிக்கப்பட்டது என்ற கருத்துப் பெருமிதத்துடனே.

சிறிதுநேரங்கழித்து டாரியஸ் அந்தக் காரிருளில் அங்கு வந்தார். அங்கே பாலம் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். ஓர் எகிப்தியன்[13] உரத்த குரலில் ''ஹிஸ்டியஸ்'' என்று பெயரிட்டழைத்தான். ஹிஸ்டியஸே அங்குக் காவல் காந்திருந்தாராகை

---

1. Darius 2. River Don 3. River Oaros 4. River Danube 5. Maeotic Sea 6. Persians 7. Ionians 8. Scythians 9. Miltiades 10. Chersonese 11. Histiaeus 12. Bridge 13. Egyptian

யால், அவர் உடன் ஓடிவந்து அப்படகு வழியைச் சரி செய்து, சீராக்கி, அதன்மீது நடந்து போகுமாறு செய்துவிட்டார். ஆக, ஹிஸ்டியஸ் என்பாரின் நல்ல தன்மையால் டாரியஸ் காப்பாற்றப் பட்டார். மில்டியாடிஸின்[1] கருத்தைக் கொண்டிருந்தால், அடுத்து நடைபெற வேண்டிய பாரசீகர்களின்[2] கிரேக்கப் படையெடுப்பு[3] என்றைக்குமே ஏற்பட்டிருக்காது என்பது நன்கு தெரிந்ததே.

கதை அவ்வளவு அழகாக ஹிராடடஸால் கூறப்பட்டுள்ளது. திரேசியர்க்குப்[4] பதிலாகச் சித்தியர்[5] என்றே கதைப் போக்கில் கூறி விட்டார். ஒரு கதையே வரலாற்றைத் திரித்துக் கொடுத்து விட்டது.

—(History of Greece By J.B. Bury, Page 241)

டாரியஸ்[6]: இவர் பாரசீக மன்னர். இவர் அரசாண்ட காலம் கி.மு.521-485 அதாவது 36 ஆண்டுகள் ஆண்டார். தம் காலத்தில் கிரேக்கப் படையெடுப்பை முடித்து விடவேண்டுமென்று எண்ணியவர், அதை முடிக்கவில்லை. தம் மகன் ஸெர்க்ஸிஸிடம்[7] அதை ஒப்படைத்து விட்டுக் காலமானார். ஸெர்க்ஸிஸ் ஆண்ட காலம் கி.மு. 485 465 அதாவது 20 ஆண்டுகள் ஆண்டார்.

மற்றும் பக்கம் 256, குறிப்பு-1 பார்க்கவும்.

---

1. Miltiades 2. Persians 3. Greek Invasion 4. Thracians 5. Scythians 6. Darius 7. Xerxes

5. லிபிய மக்களின் பழக்க வழக்கங்கள்

"இனி லிபிய குலமரபு[1] இனத்தவரைப் பற்றி வரிசையாகக் காண்போம்.

அதிர்மகிடே: எகிப்திலிருந்து[2] புறப்பட்டுச் சொல்வோம். முதலில் அதிர்மகிடே[3] எனும் இனத்தவர் காணப்படுவர். அவர்கள் ஏறக்குறைய எகிப்தியர்களைப்[4] போலவே பழக்க வழக்கங்களையுடையவர்; குணநலன்களும் அவ்வாறே கொண்டவர். மற்ற லிபியர்[5] போலவே உடை உடுத்துகின்றனர். அவர்கள் பெண்கள் ஒவ்வொரு காலிலும் ஒரு வெண்கலக் காப்பை[6] அணிகின்றனர். அவர்கள் தங்கள் உடலில் எங்காவது ஒரு மூட்டைப் பூச்சி[7] கடித்துத் துன்புறுத்துவதை அறிந்தால், அப்பூச்சியைக் கையில் பிடித்து, அது கடித்துத் தனக்குத் துன்பம் கொடுத்த காரணத்தாலே, தானும் அதற்குத் துன்பமிழைக்க வேண்டும் என்று கருதி, அதைப் பற்களில் கடித்துத் துப்பிவிடுவர். இச்செயல் அவர்கள் பழிக்குப் பழி வாங்குவதாக நினைக்கும் கருத்து. மற்றொரு பழக்கமும் அவர்களிடம் உண்டு. திருமணம் ஆகப் போகும் பெண்ணை அரசரிடம் அழைத்துச் சென்று ஆசி பெறுவது வழக்கம். அரசர் எந்தப் பெண்ணையாவது "இவள் அழகுள்ளவள்; இவள் நமக்கும் சொந்தம் உண்டு" என்று எண்ணினால், அப் பெண் கன்னிப் பெண்ணாகத் திரும்ப முடியாது. அரசரின் படுக்கையில் பங்கேற்ற பிறகே அவள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவாள். இந்தக் குல மரபினர்களுக்கு மட்டுமே இந்தப் பழக்கம் உண்டு. அவர்கள்

---

1. Libyan tribes 2. Egypt 3. Adyrmachidae 4. Egyptians 5. Libyans 6. Bronze anklets 7. Bug

வாழும் நாடு எகிப்திய எல்லையிலிருந்து[1] பிளைனஸ்[2] துறை முகம் வரை படர்ந்து செல்கிறது.

கிலிகமே[3]: அடுத்துக் காணப்படும் குலமரபினர் கிலிகமே ஆவர். அவர் நாடு மேற்குத்திசை நோக்கி நீண்டு செல்கிறது. அது அப்ரோடைசியஸ்[4] எனும் தீவு வரை செல்கிறது. இதற்கு இடையில் பிளேடியா[5] எனும் தீவு ஒன்று உள்ளது. அங்கேதான் முதன் முதல் சைரீனியர்[6] குடியேறினர். தலை நிலப்பரப்பில்[7] மெனிலாஸ்[8] என்று வழங்கப்படும் துறை முகம் ஒன்று உள்ளது. கிலிகமே மக்கள் மற்ற குலமரபு இனத்தவரைப் போன்ற பழக்க வழக்கங்களையே கொண்டுள்ளனர்.

அஸ்பிஸ்டே[9]: மேற்குப் பகுதியை அடுத்தாற்போல அஸ்பிஸ்டே எனும் குலமரபினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் நாடு சைரீன்[10] இருக்கும் இடத்திற்கும் உள் தள்ளி காணப்படுகிறது. அது கடற்கரை வரை செல்லவில்லை; அக் கடற்கரைப் பகுதியில் சைரீனியர்கள்[11] வசிக்கின்றனர். அஸ்பிஸ்டே மக்களுக்குக் கைவந்த கலை, நான்கு குதிரை பூட்டிய இரதங்களை[12] ஓட்டுதலே.

ஔஷிஸே[13], பகேலர்[14] அதற்கும் மேற்கே, ஔஷிஸே குல மரபினர் வாழ்கின்றனர். அவர்கள் பர்காவிற்குத்[15] தெற்கே வசிக்கின்றனர். அவர்கள் நாடு யூஸ்பெரைடிஸ்[16] கடற்கரை வரை செல்கிறது. இந்நாட்டுக்குள்ளேயே மற்றொரு குல மரபினர்— பகேலர்கள்— சிறு கூட்டமாக வாழ்கின்றனர்.

ஔகிலா[17] குலமரபினர்: மற்றும் மேற்கே, தொடர்ந்து சென்றால், நேசமோனியர்[18] நாட்டை அடுத்து மற்றொரு குலமரபினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் கோடைக் காலத்தில் ஔகிலா கடற்கரைப் பகுதிக்கு வந்து தங்கள் கால்நடைப் பிராணிகளை விட்டுவிட்டு, உள்நாட்டிற்கு

---

1. Egyptian border 2. Plynus 3. Giligamae 4. Island of Aphrodysias 5. Platea 6. Cyreneans 7. Mainland 8. Menilaus 9. Asbistae 10. Cyrene 11. Cyreneans 12. Four horse chariots 13. Auschisae 14. Bacales 15. Barca 16. Eusperides 17. Augila 18. Nasamoneans

அறுவடை காரணமாகச் சென்று விடுவர். அவர்கள் வெட்டுக் கிளியைப் பிடித்து[1], வெயிலில் உலர்த்தி, அதை மாவாக்கி அதைப் பாலின்மீது தூவிக் குடிக்கின்றனர். ஒவ்வொரு வருக்கும் பல மனைவியர் உண்டு. அம்மனைவியர் யாவரும் பொது உடைமையாகக் கருதப்படுவர். ஒருவர் ஒரு குறிப் பிட்ட மங்கையிடம் கலவி செய்ய வேண்டும் எனக் கருதினால், அவள் இருக்கும் இடத்திற்கு வெளியே ஒரு கழியை[2] நட்டு விட்டு, உள்ளே சென்று இன்பம் அனுப விப்பார். அவ்வாறு கழி நாட்டப்படின், ஒருவர் ஏற்கெனவே உள்ளே கலவி செய்து கொண்டுள்ளார் என்பதும், மற்றவர் உள்ளே நுழைவது கூடாது என்பதுமே அதன் பொருள் ஆகும்.

மற்றும் அவர்களுள் ஒரு பழக்கமும் உண்டு. ஒருவன் மணக்கும் முதல் திருமணத்தில் விருந்து கொடுப்பதுண்டு. அந்த விருந்தில் அழைக்கப்பட்ட விருந்தினர் ஒவ்வொருவரும் அம்மணப் பெண்ணுடன் உடல் உறவு கொள்வர். ஒவ்வொரு வரும், தாம் அனுபவித்த பிறகு அப்பெண்ணுக்குச் சிறந்த பரிசு ஒன்றை அன்பளிப்பாக அளித்துச் சொல்வர். அவர்கள் ஒன்றன்மீது சத்தியம் இடுவர்[3] என்றால், அவர்கள் தங்கள் மூதாதையர் சமாதிக்குச் சென்று, அச் சமாதியின்மீது கைகளை வைத்துச் "சத்தியமாச் சொல்கிறேன்" என்று கூறின பிறகு கைகளை எடுப்பர். அவர்கள் தெய்வ வரம் தேவை என்று நினைத்தால், தங்கள் மூதாதையரின் சமாதி யறைக்குச் சென்று, அதன் முன் படுத்துறங்குவர். அவர்க்கு அப்பொழுது வரும் கனவே தெய்வக் கட்டளையாகக் கொள்வர். அவர்களுள் எவராகிலும் இருவர் ஓர் ஒப்பந்தத்தில்[4] கையெழுத்திட வேண்டுமெனில், முதலில் ஒரு கோப்பையில் மதுபானத்தை ஊற்றி ஒருவர் கையில் வைத்துக் கொள்ள, அக் கோப்பையை மற்றவர் அவர் கையிலிருந்து பெற்று அம்மதுவை அருந்துவர். மற்றவரும் அவ்வாறே செய்வர். மது இல்லாவிடில், பூமியிலிருந்து சிறிது மண்ணை எடுத்துத் தூவி, இருவர் கைகளில் மாற்றிக் கொண்டு நாக்கால் நக்கி விடுவர்.

---

1. Locusts 2. Pole 3. Swearing 4. Contract

ஸைலலி[1]: நேசமோனியர்களின்[2] அண்டை நாடுகளில் இருப்பவர் ஸைல்லி எனப்படுவர். அவர்கள் இப்பொழுது காணப்படுவதில்லை. அச்சந்ததியினர் மறைந்து விட்டனர் போலும். அதற்கு லிபியர்[3] கதை ஒன்றைக் கூறுகின்றனர். அவர்களின் ஏரியில் நீர் இருந்ததாகவும், தென் திசைக் காற்றடித்து அந் நீரைப் பருகிச் சென்று விட்டதாகவும், அதன் காரணமாக அத்தென்றற் காற்றின்மீது போர் தொடுக்க அக்குலமரபினர் யாவரும்-ஒருவர் கூட மீதியின்றி- அந்தப் பாலைவனத்துக்குச் சென்றதாகவும், அங்கு அக்காற்று ஒரு சூறாவளியாக உருவெடுத்து, போர் மேல் வந்த யாவரையும் மணற் குன்றில் மூடிவிட்டது என்றும் கூறப்படுகிறது. பின்னர் அந்நாட்டை நேசமோனியர் தங்கள் நாட்டுடன் சேர்த்துக் கொண்டு விட்டனர்.

கரமாண்டியர்:[4] லிபியாவின்[5] தெற்குப் பகுதியில் காட்டு விலங்குகள் காணப்படுகின்றன. அவ்விடத்தில் உள்ள பெண்கள் வெளி நாட்டு ஆண்களை மணப்பதில்லை; கலவி செய்வது கிடையாது. அவர்கள் கரமாண்டியர் எனப் படுவர்.

கரமாண்டியர் டிரோக்லோடிடேக்களை[6] வேட்டையாடுவர். அதற்கு நான்கு குதிரைகள் பூட்டிய தேரைப்[7]பயன் படுத்துவர். அவர்கள் பாம்பு, பல்லி, ஊர்வன ஆகியவற்றை உண்பர். அவர்கள் பேசும் மொழி புரியாத மொழியாகும்— வௌவால்கள் கிரீச்சிடும் ஒலி போன்று[8] அம்மொழியின் ஒலி காணப்படும்.

மகே[9]: நேசமோனியர் நாட்டிற்கு மேற்கில் மகே எனும் குல மரபினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தங்கள் தலைமயிரைக் கொண்டை போன்று தலை உச்சியில் முடிந்து கொள்கின்றனர். அவர்கள் தலை இருபுறமும் மழித்துக் கொண்டு, நடுவே ஒரு நீண்ட மயிர் கற்றையை வளர்க்கின்றனர். அவர்கள் கேடயத்துக்குப் பதிலாகத்

---

1. Psylli 2. Nesamoneans 3. Libyans 4. Garamantes
5. Libya 6. Troglodytes 7. Chariots drawn by four horses
8. Shrieking voice of bats 9. Machae

தீக்கோழியின்[1] தோலைப் பயன் படுத்துகின்றனர்.

கிண்டேனர்கள்[2]: அவர்களுக்கு அடுத்துக் காணப்படுபவர் கிண்டேனர்கள். இக்குலமரபினரின் பெண்கள் தோலால் செய்யப்பட்ட பட்டைகளைத் தங்கள் கால்களில் அணிகின் றனர். ஒருவர் எவ்வளவு பட்டைகள்[3] அணிகிறார்களோ, அவர்களுக்கு அத்துணைக் காதலர்கள் உள்ளனர் என்பது பொருள். ஒவ்வொரு பெண்ணும் ஓர் ஆடவனுடன் படுக்கை கொள்ளும் போது, ஒரு தோல் பட்டையை அணிகிறாள். ஆகையால் ஒருத்தி நிறையத் தோல் பட்டைகளை அணிந் திருந்தால், அவள் பல ஆடவர்களை வசியம் செய்ய வல்லவள் என்றும், காதல் என்பதன் இலக்கணத்தை அவளிடம்தான் கற்கவேண்டும் என்பதுமே அதற்கு விளக்கம் கூறப்படுகிறது.

லோடோபகி[4]: அவர்களுள் லோடோபகி எனப்படும் குல மரபினர் உள்ளனர். அவர்கள் தாமரைக் கிழங்கு[5], கனி, இலை, பூ, தேன், தண்டு இவற்றை உண்டே வாழ்ந்து வருபவர் ஆவர். தாமரைக் கனி, சீதாப்பழம் அவ்வளவு பெரியதாக இருக்கும்; அதிலிருந்து அவர்கள் மதுபானம் தயாரிக்கின்றனர்.

மெஷிலியர்கள்[6]: கடற்கரை வழியே செல்லும் மற்றொரு நாடு மெஷிலஸ் ஆகும். அந்நாட்டு மக்களும் தாமரையையும் அதன் பொருள்களையும் பயன் படுத்துகின்றனர். ஆனால் லோடோபகியர் பயன்படுத்தும் அளவில் அல்ல. அவர்கள் நாடு டிரிடான் நதி[7] வரை செல்கிறது. டிரிடான் நதியின் நடுவில் ஒரு மணல் திட்டுடன் கூடிய சுழல்[8] உள்ளது. அதில் அகப்பட்டுக் கொண்டவர் பலர். ஜேஸன்[9] என்பவர் அவ்வாறு அகப்பட்டுக் கொண்ட பொழுது, டிரிடான் தேவதை[10] அவர் முன் தோன்றி, ஒரு முக்காலியைத்[11] தன் கோயிலுக்குத் தந்தால், அச்சுழலிலிருந்து தப்பி விடலாம் என்று கூற, அதற்கு ஜேசன் ஒப்புக் கொள்ள, அத்தேவதை

---

1. Ostrich 2. Gindanes 3. Leather bands 4. Lotophagi 5. Lotus tuber 6. Machyleans 7. River Triton 8. Lagoon 9. Jason 10. Goddess Triton 11. Tripod

ஒரு முக்காலியை[1] ஜேஸனிடம் கொடுத்து அதன்மீது ஏறி அச் சுழலினின்று தப்பித்துச் செல்லுமாறு பணித்தது. ஜேசனும் தப்பி வெளிவந்து அந்த டிரிடான் தேவதைக்கு ஒரு முக்காலியை அன்பளிப்பாக அளித்தான்.

அம்முக்காலியைப்பற்றி ஓர் அறிவிப்பு கூறுகிறது. ஆர்கோ[2] என்பவர் தம் சகாக்களுடன் வந்து எப்பொழுது அந்த முக்காலியை எடுக்கிறாரோ, அப்பொழுதே டிரிடானின் ஏரிக்கரைமீது நூறு கிரேக்க நகரங்கள்[3] நிர்மாணிக்கப்படும் என்பதே அவ் அறிவிப்பு. இதைப் பார்த்த லிபியர்கள்[4] அந்த முக்காலியை எவரும் காணாதபடி ஒளித்து வைத்து விட்டனர்.

ஒளஷிசே[5]: மெஷிலர்க்கு[6] அடுத்தபடியாக ஒளஷிசே என்பவர் வசிக்கும் நாடு காணப்படுகிறது. இவ்விரு குலமரபினரும் மணல் தீவாகிய காயலில் வசிக்கின்றனர். மெஷிலர்கள் தங்கள் தலை முடியைப் பின் பக்கம் வளர்த்து விடுகின்றனர்; ஒளஷிசேக்கள் அம்முடியை முன்பக்கமாக விழுமாறு வளர்க்கின்றனர். அவர்களிடையே வாழும் கன்னியர்கள் அத்தினே[7] தேவதையின் திருவிழாவில் இருபகுதிகளாகப் பிரிந்து, ஒருவருடன் மற்றவர் கைகளில் கற்களும், கழிகளும் கொண்டு போராடுவது போல நடனமாடுவர். அந் நடனத்தில் யாருக்காகிலும் அடிபட்டால், அவள் கன்னியாகக் கருதப்படமாட்டாள். அவர்கள் தெய்வம் அத்தினே; அவள் போஸிடானுக்கும்[8], ஏரித்தேவதைக்கும்[9] பிறந்த மகள் என்றும், அவளுக்கும் தன் தந்தைக்கும் ஏற்பட்ட சண்டையின் காரணமாகத் தன்னை ஜியுஸ்[10] கடவுளுக்கு ஒப்படைத்து விட்டாள் என்றும் அக்கடவுள் அவளைத் தம் மகளாகவே ஏற்றுக்கொண்டு விட்டார் என்றும் கூறப்படுகிறது. அந்தக் குலமரபினர் மாதர் யாவரும்பொதுச் சொத்தாகக் கருதப்படுவர். திருமணம் என்ற சடங்கு இல்லையாதலால், திருமணமான தம்பதிகள் என்று அவர்களுள் கிடையாது. யாரை யார் வேண்டுமானாலும் இன்பம் அனுபவிக்கலாம். ஆனால் சம்மதம் மட்டும் தேவை. அவர்களுக்குள்

---

1. Tripod 2. Argo 3. Greek cities 4. Libyans 6 Auschisae 5. Machyles 7. Athene 8. Poseidon 9, Goddess of the lake 10. Zeus

உள்ள விதி-கட்டுப்பாடு- அஃதொன்றேயாகும். ஒரு பெண்ணுக்குக் குழந்தை பிறந்தால், எல்லோரும் கூடி அஃது எவர் முகத்தை ஒத்திருக்கிறது என்பதை நிர்ணயித்து, அதன்படி அக்குழந்தை அன்னார்க்குச் சேர்ந்தது என்று அங்குக்கூடிய பஞ்சாயத்துக் கூறும். அவ்வாறு தந்தையாகக் குறிப்பிடப் பட்டவரே, அதைத் தம் குழந்தையாக எடுத்து வளர்ப்பார்.

அட்லஸ் மலைவாசிகள்: அட்லஸ் மலைவாசிகள்[1] உயிர் வதை செய்வதில்லை. உயிருள்ள எந்த சீவனையும் உண்பதில்லை. அவர்கள் கனவே[2] காண்பது கிடையாது. "கனவு என்பது என்ன?" என்பதே அவர்களுக்குத் தெரியாது.

லிபிய நாடோடி மக்கள்: எகிப்துக்கும்[3] டிரிடானிஸ் ஏரிக்கும்[4] இடையேயுள்ள கடற் கரைப் பகுதியே லிபியாவின் கடற்கரைப்[5] பகுதியாகும். இப்பகுதிகள் யாவற்றிலும் நாடோடி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் பன்றியை வளர்ப்பதில்லை- எகிப்தியர்களை[6]ப் போலவே, பசுவின் ஊன் உண்பதில்லை: சைரீனில்[7] கூட பெண்கள் பசுவின் ஊன் உண்பதில்லை. அவ்வாறு உண்பது தவறு எனும் கொள்கையைக் கொண்டுள்ளனர். அதற்குக் காரணம், அவர்கள் எகிப்திய தெய்வமாகிய ஈஸிஸ்[8] என்பதற்கு மரியாதை செலுத்தும் நோக்கத்துடனேயாகும். அக்கடவுளின் பேரில்தான் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பர்காவில்[9] பெண்கள் பன்றியின் இறைச்சியை உண்பதில்லை— பசுவின் ஊனையும் உண்பது கிடையாது. டிரிடானிஸ் ஏரிக்கு மேற்கில் குலமரபினர் எவரும் காணப்படுவதில்லை.

லிபியர்கள்: குலமரபினர் யாவரும் தங்கள் குழந்தைகள் நான்கு வயதாகும் பொழுது, முகத்தின் முன்பக்கமுள்ள இரத்தக் குழாயை, எண்ணெயில் தோய்த்த ஆட்டு ரோமத்தால் சிறிது சுட்டு விடுகின்றனர். அதன் காரணமாக அக்குழந்தைகளுக்கு மூக்கடைப்பு அல்லது தடுமல்[10] வருவதில்லை என்று கூறப்படுகிறது. மற்றும் அக் குழந்தைகள்

---

1. Atlas Mountain tribes 2. Dream 3. Egypt 4. Tritonis lake 5. Libyan sea coast 6. Egyptians 7. Cyrene 8. Isis 9. Barca 10. Catarrh

மிக ஆரோக்கியமாக வாழ்ந்தும் வருகின்றனர். ஒரு கால் இரத்தக் குழாயைச் சுடும் பொழுது, குழந்தைக்கு வலிப்பு ஏதாகிலும் ஏற்பட்டால், உடன் வெள்ளாட்டின் சிறு நீரை எடுத்துக் குழந்தைமீது தெளிப்பர். உடன் அவ்வலிப்பு நின்று விடும்.

லிபியர்கள்[1] தெய்வத்துக்குப் பிரார்த்தனை செய்ய வேண்டுமாயின்- செலுத்த வேண்டுமாயின்- தங்கள் காதின் ஒரு சிறிய பகுதியை அறுத்துத் தெய்வத்துக்கு அளிப்பர். அடுத்தது, எடுத்துச் சென்ற விலங்கின் கழுத்தை முறித்துக் கொன்று விடுவர்.

லிபியன் பெண்கள்[2] சடங்குகளின் போது அழுவது, ஓர் இனிய இசை கேட்பது[3] போன்றிருக்கும்.

லிபியர்களிடமிருந்து கிரேக்கர்கள்[4] கற்றுக் கொண்டது நான்கு குதிரைகள் பூட்டிய தேரை[5] ஓட்டிச் செல்வது.

லிபியர்கள் யாவரும்— நேசமோனியர்கள்[6] தவிர— சடலத்தை நம்மைப் போன்றே படுக்கவைத்தே புதைக்கின்றனர். ஆனால் நேசமோனியர்கள், சடலத்தை உட்கார்ந்த நிலையில்[7] வைத்தே புதைக்கின்றனர்.

லிபியர்களின் வீடுகள் பெரும்பாலும் எடுத்துச் செல்லப் படும் தன்மை வாய்ந்தவை.

டிரிடானுக்கு[8] மேற்கே —ஔஷிசேவுக்கும்[9] அப்பால்— லிபியாவில்[10] சாதாரண மக்கள் வீடுகள் கட்டிக் கொண்டு வாழ்கின்றனர். வேளாண்மை செய்து நிலத்தைப் பண் படுத்தி, உழுது பயிரிட்டு வாழ்ந்து வருகின்றனர். அவர் களுள் முதற்பகுதியில் காணப்படுபவர் மாக்ஸியஸ்[11] எனப்படுபவர் ஆவர். அவர்கள் தங்கள் தலைகளில் வலப் பக்கம் முடிவளர்த்துக் கொண்டு, இடப்பக்கத்தை மழித்து விடுகின்றனர். தங்கள் உடம்பில் சிவப்பு வண்ணக் கல்லை யைப் பூசிக் கொள்கின்றனர். தாங்கள் டிராய் மக்களின்[12] சந்ததியினர் என்று சொல்லிக்கொள்கின்றனர்.

---

1 Libyans 2. Libyan ladies 3. Sweet music 4. Greeks 5. Chariot drawn by four horses 6. Nesamoneans 7. Sitting Pasture 8. Triton 9. Auschisae 10. Libya 11, Maxyes 12 Trojans

டிரைடான் நதி வரை[1]- லிபியாவின் கிழக்குப் பகுதியில் மணற்பாங்கான நாடு; உழவுத் தொழில் செய்யத் தகுந்த இடமுள்ள மேற்குப்பகுதி மலைப் பகுதியாகும். காடுகள் மிகுதி, விலங்குகள் மிகுதி; இங்குத்தான் பெரும் அளவில் பேருருவம் கொண்ட பாம்பினங்கள் காணப்படுகின்றன. மற்றும் சிங்கங்கள், யானைகள், கரடிகள், விரியன் பாம்புகள்[2], கொம்புள்ள கழுதைகள் முதலியனவும் உள்ளன.

மற்றும் நாய்த் தலையுள்ள மனிதர்கள்[3], தலையற்ற மனிதர்கள்[4]- கண்களைத் தங்கள் மார்பில் கொண்ட மனிதர்கள்[5]- (நான் இவர்களைப் பார்க்கவில்லை, மக்கள் கூறுவதைக் கேட்டே எழுதுகின்றேன்) – காட்டுமனிதர்கள், காட்டுப் பெண்கள், 4½ அடி நீளமுள்ள பல்லிகள் முதலியவை காணப்படுகின்றன. மற்றும் மறி மான்கள்[6], மான்கள், கழுதைகள் ஆகியவும் உள்ளன. இவை நீர் அருந்து வதில்லை. ஆனால் லிபியாவில் கலை மான்களும்[7] காட்டுப்' பன்றியும்[8] காணப்படுவதில்லை.

லிபியாவில்[9] மூன்று வகையான சுண்டெலிகள்[10] உள்ளன. அவையாவன: டைபோடுகள்[11], ஜெகிரிகள்[12] எக்கைன்கள்.[13]

ஜொஸியர்கள்[14]: மாக்ஸியஸ்[15] மக்களிடமிருந்து விலகி, மேற்கே வந்தால், ஜொஸியர்கள் எனப்படும் மக்கள் காணப் படுகின்றனர். இம்மக்களுள் யுத்தத் தேர்களைச்[16] செலுத் துபவர் பெண்களே. அதாவது தேரோட்டிகள் யாவரும் பெண்களே.

கைஸான்டியர்கள்[17]: ஜொஸியர்களுக்கு அடுத்து வாழ் பவர் கைஸான்டியர்கள். இவர்கள் நாட்டில் தேன் மிகுதியும் உண்டு. இயற்கையான தேன், ஈக்களால் சேகரிக்கப்பட்ட தேன்; செயற்கையான தேன் மக்கள் தயார் செய்யும் தேன்.

---

1. Rever Triton 2. Asps 3. Dog-Headed men 4. Headless people 5. People with their eyes in their breasts 6. Antelopes 7. Stags 8. Wild boar 9. Libya 10. Mice 11. Dipodes 12. Zegeries 13. Echines 14. Zaueces 15. Maxyes 16. War chariots 17. Gyzantes

ஆக இருவகைத் தேன்களும் இங்கு உண்டு. இங்கு ஒவ்வொருவரும் சிவப்பு வண்ணத்தைப் பூசிக் கொள்கின்றனர். அவர்கள் உணவு குரங்கின் மாமிசம் ஆகும்.

ஜசிந்தஸ்[1] எனுமிடத்தில் நிறையக் குளங்கள் உள்ளன. அதில் பெரிய குளம் 70 அடி சுற்றளவும், ஆழம் 2 பாதமும்[2] உள்ளன. இதில் பெண்கள் நீண்ட கயிற்றின் நுனியில் பசுமைமாறா நறுமலர்ச் செடி[3] ஒன்றைக் கட்டி, அதை அக்குளத்தில் பூமியைத் தொடுமாறு நீரில் விடுவர். பின் அக்கயிற்றை மேலே இழுத்து அம்மலர்ச் செடியில் ஒட்டிக் கொண்டிருக்கும் மண்ணை ஒரு சாடியில் சேகரிப்பர். பின்னர் சேகரித்த அம்மண்ணிலிருந்து, பொன் துகளைப்[4] பிரித்தெடுப்பர்.

கார்த்தேஜினியர்கள்[5] கூறுகின்றனர்: ஹெர்க்குலீஸின் தூண்கள்[6] எனும் இடத்திற்கு அப்பால் உள்ள லிபிய நாட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் நடத்தும் வணிக முறை குறிப்பிடப்படுகிறது. அந்த நாட்டை அடைந்ததும், அவர்கள் கப்பலை விட்டுப் பண்டங்களைக் கரைக்குக் கொணர்ந்து ப்ரப்பி வைக்கின்றனர் பின்னர் அவர்கள் ஒரு புகை எழுப்புகின்றனர். அந்த நாட்டின் உள்ளூர் மக்கள்— சுதேசி மக்கள் — கடற்கரைக்குச் சென்று ஒரு குறிப்பிட்ட பொன்னை அப்பண்டங்கள் அருகில் வைப்பர். வைத்து விட்டுத் தொலைவில் சென்று விடுவர். கார்த்தே ஜினியர்கள் அருகில் வந்து அவர்கள் வைத்த பொன்னின் அளவைக் காண்பர். அளவு சரியாக இருந்தால், பொன்னை எடுத்துக் கொள்வர், அளவு சரியில்லை என்றால், பொன்னை எடுக்காமல் மீண்டும் தொலைவில் சென்று நிற்பர். இவ்வாறு அப்பொன் அளவு திருப்தியாக இருக்கும் வரையில் இம்முறை நடந்து கொண்டேயிருக்கும். சரியாகத் தெரிந்தவிடத்து, பொன்னை எடுத்துக் கொண்டு வீடுவார்கள். சுதேசிகளாகிய உள்ளூர்வாசிகளும் பயணிகள் கொணர்ந்த பண்டங்களை எடுத்துக் கொண்டு செல்வர்.

---

1. Zacynthus 2. Fathom 3. Myrtles 4. Gold dust 5. Carthagenians 6. Pillars of Hercules

ஆனால் தாங்கள் தரும் பொன்னை அவர்கள் எடுக்கும் வரை — திருப்தியாகி அவர்கள் எடுக்கும் வரை — சுதேசிகள் அப்பண்டங்களை எவ்வாற்றாலும் தொடவும் செய்யார்.''

விளக்கவுரை :

லிபியா[1]: இச்சொல் முன்னர் ஆப்பிரிக்கா[2] முழுவதையும் குறிக்கப் பயன்பட்ட சொல்லாகும் லிபியாவே ஆப்பிரிக்கா என்று கருதப்பட்ட காலம் அது. மற்றும் பக்கம் 310, குறிப்பு—1 பார்க்கவும் இது ஒரு பெண்ணின் பெயரால் நிர்மாணிக்கப் பட்டதாக வரலாறு கூறுகிறது (பக்கம் 311, குறிப்பு-2)

இவ்வதிகாரத்தில் லிபியாவின் குலமரபினர்களின்[3] வியக்கத் தக்க பழக்கவழக்கங்கள் கூறப்படுகின்றன.

மாதர்கள் காப்பு அணிதல்[4] : இது தமிழ்நாட்டிலிருந்து சென்ற பழக்கமாகும். பனை ஏறியர்களாகிய பினீசியர்கள்.[5] கடல்கடந்து சென்றபோது, இத் தமிழ்ப் பண்பாட்டையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

காலில் அணியும் காப்பு சிலம்பு[6] என்றும், கையில் அணிவது வளையல்[7] என்றும் வழங்கப்பட்டது.

திருக்குறள்: பெண்கள் கைகளில் வளையணிவதைக் குறிப்பிடுகிறது:

''துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
யிறையிறவா நின்ற வளை.'' – (திருக்குறள்-1157)

''தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.'' —(திருக்குறள்-1277)

சிலப்பதிகாரம்: பெண்கள் காலில் சிலம்பணிவதைக் குறிப் பிடுகிறது.

''என்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி.''
—(சிலப்பதிகாரம் : வழக்குரை: 61-62)

பெண்கள் கால்களில் காப்பு அணிவது இன்றைக்கும் காணப் படும் தமிழர்களின் பண்பாடாகும். பெண்கள் வெற்றுக்கால்

---

1. Libya 2. Africa 3. Libyan Tribes 4. Women wearing anklets 5. Phoenicians 6. Anklet 7. Bracelet

களுடன் காட்சியளிக்க மாட்டார்கள். திருமணமான பெண்கள் கால்களில் கொலுசும், விரல்களில் மெட்டியும் அணிவர்.

திருமணம் ஆகும் முன்பு அரசரின் ஆசிபெறுதல்: நாட்டின் நலன் காக்கும் நல்வேந்தரின் ஆசியை ஒவ்வொரு பெண்ணும் தன் திருமணம் ஆகும் முன்பு பெறுவது, தன் திருமணவாழ்க்கை நன்றாகத் துன்ப மில்லாமல் அமையும் என்ற கருத்தினாலே தான். ஆனால்அரசர் நினைப்பதோ, நாட்டுமக்கள் அரசர்க்குச் சொந்தம்; அதனால் அவர்களை ஆசீர்வதிக்கவும் செய்யலாம்; ஆசைநாயகியாகவும் கொள்ளலாம் என்ற கருத்து முனைப்பே ஆகும். அழகான பெண்கள் வந்து ஆசிபெறும் போது, அவர்கள் அரசரின் கண்களினின்று தப்பமுடியாது என்று ஹிராடடஸ் கூறுகிறார்.

நான்கு குதிரைகள் பூட்டிய இரதங்கள்[1]: இத்தகைய இரதங்கள் இந்திய நாட்டில்[2] செய்யப்பட்டவையாகும். இராமாயணம்[3] முதலிய காவியங்களில் அரசர் முதலானோர் நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஏறிச் சென்றதாக வர்ணனைகள் தரப்பட்டுள்ளன.

ஸ்ரீமத் பகவத் கீதை[4] இயற்றிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், குருக்ஷேத்திரப்[5] போர்க்களத்துக்கு அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்ய நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் வந்திறங்கியதாக வரலாறு கூறுகிறது.

ஒலிம்பியாவில்[6] நான்கு குதிரை பூட்டிய தேர்களின் போட்டி நடைபெற்றது என்று வரலாறு கூறுகிறது அதற்கான நாணயத்தைப் புத்தகம் 6, அத்தியாயம் 2-ல் பார்க்கவும்.

அகநானூறு நான்கு குதிரை பூட்டிய தேரைப் பற்றிக் கூறுகிறது:

"வேந்துவினை முடித்த காலைத் தேம்பாய்ந்து
இனவண்டார்க்கும் தண்ணறும் புறவின்
வென்வே லிளையரின்புற வலவன்
வள்புவலித் தூரினல்லது முள்ளூறின்
முந்நீர் மண்டில மாதி யாற்றா
நன்னால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்
வாங்குசினை பொலிய வேறிப்புதல"

—(அகநானூறு 104-1-7)

---

1. Chariot drawn by four horses 2. India 3. Ramayana
4. Baghavat Gita 5. Kurukshetra 6. Olympia

நேசமோனியர்[1]: இவ்வகுப்பினர் திருமணம் செய்து கொண்டு, அம்மனைவியைப் பொதுச் சொத்தாக்கி விடுவர். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் நூற்றுக்கணக்கான மனைவியர் உள்ளனர். ஆனால் யார்வேண்டுமானாலும் எவரிடத்திலும் இன்பம் அனுபவிக்கலாம். ஒரு கட்டுப்பாடுதான் உண்டு. உள்ளே ஒருவர் தான் ஒரு பெண்ணுடன் அனுபவிக்கலாம். அதற்காக ஒருவர் ஒரு பெண்ணுடன் கலவி செய்ய உள்ளே நுழையும் பொழுது ஒரு கழியை[2] வெளியே நாட்டிச் செல்வர். அக்கழி வெளியே இருக்கும் பொழுது மற்ற எவரும் உள்ளே நுழையக் கூடாது. இது அன்றையப் பழக்கமாக இருந்தது.

மஸஜெடே[3] மக்களிடமும் இப்பழக்கம் இருந்தது என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம் (பக்கம் 141, குறிப்பு-5 பார்க்கவும்)

இன்று மக்கள் நாகரிகமடைந்து விட்டதால், இப்பழக்கங்கள் யாவும் மாறிப் புதுவகையாக உருவெடுத்துள்ளன.

நேசமோனியர்கள் முதலியவர் லிபியாவில்[4] காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்தனர். பின்னர் சைரினைகாவில்[5] குடியேறிய கிரேக்கர்களாலும்[6], பின்னர் வந்த ரோமானியர்களாலும்[7] அவர்கள் தெற்கே துரத்தப்பட்டனர்.

இவர்கள் இருவர் உறுதுணையாக, பங்குதாரர்களாக[8] இருக்க மதுபானக் கோப்பையை[9] மாற்றிக் குடிப்பர். ஆனால் அதே பழக்கம் இன்றும் நட்பின் இலக்கணமாகக் கருதப்படுகிறது. ஒருவர் மதுக்கோப்பையுடன் மற்றவரது கோப்பையைச் சிறிது தட்டிப் பிறகு மது குடிப்பர். மது குடிக்கும் பழக்கம் அன்றும் இருந்தது; இன்றும் உள்ளது. ஆனால் மாற்றம் கோப்பை பரிமாற்றத்திலேதான் ஏற்பட்டுள்ளது.

டிரோக்லோடிடேக்கள்[10] : இவர்கள் குகைவாழ் மனிதர்கள் ஆவர் — மனிதக் குரங்குகள் — ஏப்ஸ்[11] எனப்படும் குரங்கினங்கள் — இப்பெயரால் வழங்கப்படுவர். கிரேக்க மொழியில் டிரோக்லே என்றால் குகை என்றும், டெயின் என்றால் நுழைபவர் அல்லது வாழ்பவர் என்றும் பொருள்படும். ஆக, டிரோக்லோ டிடேக்கள் குகைவாழ் மக்கள் ஆவர்[12] அதாவது குகைவாசிகள் ஆவர்.

---

1. Nasamoneans 2. Pole 3. Massagetae 4. Libya 5. Cyrenaica 6. Greeks 7. Romans 8. Partners 9. Wine cup 10. Troglodytes 11. Apes 12. Cave dwellers

மகே[1] : இவர்கள் தலைமயிரைக் கொண்டை போன்று உச்சிமீது முடிந்து கொண்டனர். கேரள நாட்டில்[2] நம்பூதிரி[3] இனத்தவரும், சோழியர்களும்[4], சிதம்பரத்தில் தீக்ஷிதர்களும்[5] முன்குடுமி வைத்திருப்பது வழக்கம். இவ்வழக்கம் கேரள நாட்டிலிருந்து அல்லது தமிழ் நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்குப் பரவிச் சென்றிருக்கக் கூடும்.

லோடோபகி[6]: தாமரைக்கனியை உண்டு வாழ்பவர். இது லோடஸ்[7] — தாமரை — எனும் வேர்ச்சொல் மூலமாகப் பிறந்த சொல் ஆகும். இது கிரேக்கச் சொல். இக்கனியைத் தின்பவர், தம் பழைய நிலையை மறந்து விடுவர் என்று கூறப்படுகிறது. கிரேக்கப் புராண வரலாற்றில்[8] யுலைஸஸ்[9] என்பவர் இந்த லோடோபகியர்களுடன் சில காலம் தங்கியதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

ஔஷிசே[10]: இவர்கள் முடியை இருவிதமாக வளர்க்கின்றனர்; ஒருவர் பின்புறமாகவும், மற்றவர் முன்புறமாகவும் வளர்க்கின்றனர். இவர்களும் சோழியர்கள் போலவே முன்குடுமி வளர்த்தவர்கள்.

அத்தினே[11] : இது கிரேக்க நகர ஆதன்ஸ்[12] கோவிலைப் போன்றது. இதில் உள்ளது பெண்தெய்வம். இவள் போசிடானுக்கும்[13], ஏரித்தெய்வத்துக்கும்[14] பிறந்த மகள். தந்தையுடன் சண்டையிட்டதால், ஜியுஸ் கடவுள் இவளைத் தம் பெண்ணாக[15] வளர்த்தார் என்று கூறப்படுகிறது.

ஜியுஸ்[16]: இது கிரேக்க தீக்கடவுள்[17]. இந்திய நாட்டின் அக்கினி, இந்திரன் ஆகியவர்க்கு ஒப்பாவார். மற்றும் பக்கம் 158, குறிப்பு-1 பார்க்கவும்

அட்லஸ் மலைவாசிகள்[18]: இம்மக்கள் தமிழ்நாட்டில் உள்ள சைனர்[19] போன்றவர். உயிர்க்கொலை புரிவதில்லை. புலால் உண்பது கிடையாது. அவர்களுக்குத் தேவைகள் மிகக் குறைவு. அதன் காரணமாக அவர்கள் கனவு காண்பதில்லை என்று கூறப்படுகிறது.

---

1. Macae 2. Kerala 3. Nambudri 4. Choliars 5. Dikshitars 6. Lotophagi 7. Lotus 8. Greek Mythology 9. Ulyses 10. Auschisae 11. Athene 12. Athens 13. Poseidon 14. Lake Goddess 15. Daughter 16. Zeus 17. Fire God 18. Atlas Mountain Dwellers 19. Jains

பெண்கள் சடங்குகளின்போது அழுதல்:[1] இது தமிழ் நாட்டுப் பழக்கம் ஆகும்: ஒருவர் இறந்து விட்டால், அவருடைய ஆன்மா சாந்தியடைய அச்சடலத்தினருகில் உட்கார்ந்து ஒப்பாரி பாடுவர். அவ் ஒப்பாரி இசையாகவும், வசையாகவும் அமைவதுண்டு. லிபியப் பெண்கள்[2] அழுவது கூட ஓர் இசை இயங்குவது போன்றிருக்கும் என்று ஹிராடடஸ் கூறுகிறார்.

சடலத்தை உட்கார வைத்துப் புதைத்தல்: தென்னிந்தியாவில் முதுமக்கள் இறந்தவுடன்,அவர்களைத் தாழியிலிட்டுப்புதைக்கும் வழக்கம் இருந்து வந்தது. அவ்வாறு சடலத்தைத் தாழியில் வைக்கும்போது உட்கார வைத்தே அதனுள் இட்டனர். இத் தாழிகள் முதுமக்கள் தாழிகள்[3] எனப்பட்டன. அவ்வழக்கம் நேசமோனியர்களாலும்—சடலத்தை உட்கார வைத்துப் புதைத்தல்—பின்பற்றப்பட்டது. இது தமிழ்நாட்டிலிருந்த வழக்கமாகும்.

நாய்த் தலை மனிதர்[4], தலையற்ற மனிதர்[5]: இத்தகைய விசித்திரப் பிறவிகள் புராண காலத்தில் காவியங்களில் குறிப்பிடப் பட்டுள்ளனர். இக்காலத்தில் அத்தகைய பிறவிகளைக் காண முடியாது.

மெகஸ்தனிஸ் (கி.மு. 302-296) கூறுகிறார்:

“மக்களுள் 5 சாண் உயரமுள்ளவர்கள் காணப்படுகின்றனர். அவர்களுக்கு மூக்குக் கிடையாது. அங்கு இரு துளைகள் மட்டுமே காணப்படும். மக்களின் பாதங்கள் திரும்பிக் காணப்படுகின்றன. சிலருக்கு வாய் கிடையாது.[6] நறுமணத்தை நுகர்ந்தே வாழ்கின்றனர். குதிரையைவிட வேகமாக ஓடக் கூடியவர். அவர்கள் காதுகள் தரைவரைத் தொங்கும்.[7] அக்காதுகளையே சிலர் படுக்கையாய்ப் ப்யன்படுத்துவர். சிலருக்கு நாய்களின் காதுகளும்[8], முகத்தின் நடுவில் ஒற்றைக் கண்ணும்[9] கொண்டுள்ளனர். மேல் உதடு கீழ் உதடை மூடிவிடும்[10]. சிலர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்கின்றனர்; ஆறுகள் பொன் துகளை நீரில் அடித்துக் கொண்டு வருகின்றன”.

—(மெகஸ்தனிஸ்: அதி: 21, பக்கங்கள் 137 - 138)

---

1. Mourning during Ceremony 2. Libyan women 3 Burial Pots or urns 4. Dog's Headed Persons 5. Headless Persons 6. Mouthless 7. Long Ears reaching the ground 8. Dog's ears 9. One eyed 10. Upper lip closing the lower lip

பிளினி (கி.பி. 23 –79) கூறுகிறார்:

"சிலருக்கு நாயின் தலை போன்று தலைகள் இருந்தன;[1] பாதங்கள் பின்புறமாகக் காணப்பட்டன[2]; ஒவ்வொரு காலிலும் 8 விரல்கள் உள்ளன.[3] மோனோகாலி[4] என்பவருக்கு ஒரு கால் தான் உண்டு."

—(பிளினி: புத்தகம் VII, அதிகாரம் 2)

கம்பராமாயணம் கூறுகிறது:

"வயிற்றிடை வாயினர் வளைந்த நெற்றியில்
குயிற்றிய விழியினர் கொடிய நோக்கின்
எயிற்றுக் கிடையிடை யானையாளிபேய்
துயிற்கொள் வெம் பிலமெனத் தொட்ட வாயினர்.

ஒருபது கையினர், ஒற்றைச் சென்னியர்
இருபது தலையினர் இரண்டு கையினர்
வெருவரு தோற்றத்தர் விகட வேடத்தர்
பருவரை யெனமுலை பலவு நாற்றினர்.

கரிபரி வேங்கை மாக்கரடி யாளிபேய்
அரி கரி நாயென அணி முகத்தினர்
வெரி நுறு முகத்தினர் விழிகண் மூன்றினர்
புரிதரு கொடுமையர் புகையும் வாயினர்."

—(கம்பராமாயணம், சுந்தர காண்டம், காட்சிப்படலம் 56, 57, 59)

இதில் விவரிக்கப்பட்ட விசித்திரமான மக்களைப் போல, ஹிராடடஸூம் சில விசித்திர மக்களை வர்ணிக்கிறார். இவை யாவும் கற்பனைக் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டனவே யன்றி, உண்மை ஒரு சிறிதும் இவற்றில் கிடையாது ஒருவர் கூறியதையே அடுத்து வந்தவர்களும் கூறினர்; அவர் கூறின வற்றையே, அதற்கடுத்து வந்தவரும் சிறிது சேர்த்துக் கூறினர். ஹிராடடஸ்[5], மெகஸ்தனிஸ்[6], டையோகிஸார்ட்டு[7], ஸ்டிரா போ[8] ஆகிய வரலாற்றாசிரியர்கள் பலர் ஒருவர் கூறியதையே பிறரும் கூறலாயினர். உண்மையில் அத்தகைய விகடவேடத்தர்- விசித்திரப் பிறவிகள்- இருந்ததில்லை.

பெண்கள் தேரோட்டுதல்: முன் காலத்தில் பெண்கள் தேரோட்டிச் சென்றனர்—இக்காலப் பெண்கள் கார் ஓட்டுவது

---

1. Dog-Headed 2. Reverse Foot 3. Eight Fingers 4. Monocali 5. Herodotus 6. Megasthanes 7. Diochysort 8. Strabo

போல. சம்பரனைக் கொல்லத் தசரதருக்குக் கைகேயி தேரோட்டியதாகவும், அதன் அச்சுக் கழன்று விட்டபொழுது, தேர் சேதமுறாவண்ணம் தன் விரலையே அச்சாகப் பயன்படுத்தியதாகவும், அதன் காரணமாக அவள் இரண்டு வரன்கள் கேட்டதாகவும், இராமாயண காவியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

"நாடி ஒன்றுனக் குரை செய்பவன் நளிர்மணி நகையாய்
தோடிவந்ததார்ச் சம்பரன் தொலையுற்ற வேலை
ஆடல் வென்றியான் அருளிய வரம் அவை இரண்டும்
கோடி என்றனள் உள்ளமும் கோடிய கொடியாள்."

—(கம்பராமாயணம்: அயோத். கா. மந்தரை சூழ்ச்சி: 81)

"சான்றிமையோர் குலமாக மன்ன நீ அன்று
ஏன்ற வரங்கள் இரண்டும் ஈதி என்றாள்."

—(கம்பராமாயணம்: அயோத். கா: கைகேசி சூழ்: 8)

கைகேயி போன்று, ஜொஸியர்கள்[1] யுத்தத் தேர்களை அவர்கள் பெண்களே ஓட்டிச் சென்றனர் என்று கூறப்படுகிறது. பெண்கள் எத்தகைய வீராங்கனைகளாக வாழ்ந்தனர் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இதனால் இராமாயண காவிய காலத்தை ஒருவாறு நிர்ணயிக்க இக்குறிப்பு உதவக்கூடும் என்றே தோன்றுகிறது.

கார்த்தேஜினியர்கள்:[2] இவர்கள் பினீசியர்கள்;[3] லிபியாவில்[4] குடியேறிய பினீசிய மக்கள் இனம். கார்த்தேஜ்[5] என்பது ஆப்பிரிக்காவின் வடபகுதியில்[6] மத்திய தரைக்கடலை[7] அடுத்து நிர்ணயிக்கப்பட்ட குடியேற்றம். அங்குள்ள சுதேசி மக்கள்—உள்ளூர் மக்கள்—பினீசியர்களுடன் வாணிகம் செய்த முறை இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. சுதேசி மக்களின் நேர்மைப்பண்பு இதனால் தெரிய வருகிறது. பினீசிய வணிகர்களின் நேர்மைப் பண்பும் தெற்றெென விளங்குகிறது. நாடோடிகளிடத்தும்[8] நற்பண்புகள் காணப்பட்டன என்பதை இதனால் அறிகிறோம்.

---

1. Zaueces 2. Carthagenians 3, Phoenicians 4. Libya 5. Carthage 6. North Africa 7. Mediterranean sea 8. Nomadic Tribes

6. பெரெதிமாவின் பழிக்குப் பழி

"எகிப்திலிருந்து[1] அரியாண்டிஸ்[2] என்பவரால் பெரெதிமா[3]வுக்கு உதவி செய்யப் போர் வீரர்கள் அனுப்பப் பட்டனர். அவர்கள் பர்கா[4] எனும் நகரில் வந்து சேர்ந்ததும், பர்காவின் முற்றுகை[5] தொடங்கப்பட்டது. அவர்கள் அந் நகரவாசிகளை—அர்செசிலெளஸ்[6] என்பவரைக் கொல்லக் காரணமாயிருந்தவர்களை — உடன் சரணடையும்படிக் கோரினர். அந்நகரத்திலுள்ள பர்கயினர்[7]கள் ஒவ்வொரு வருமே காரணமாயிருந்தபடியால் அவர்களுள் எவரைக் குறிப்பிட்டுக் கூற முடியும் என்று கூற மறுத்து விட்டனர். பாரசீகர்[8] பூமியினுள் சுரங்கம் தோண்டி ஊரினுள் நுழைய முயன்றனர். அதற்குள் அப் பர்கயினர்கள், தாங்களும் எதிர்ப்பக்கமாகச் சுரங்கம் தோண்டி, பாரசீகர் தோண்டிய சுரங்கத்தை யடைந்து, பாரசீகர்களைத் தாக்கிக் கொன்றனர். இவ்வாறு முற்றுகை ஒன்பது மாதங்கள் நடந்தன. இறுதியில் பாரசீகர்கள் தந்திரத்தால் வெல்லக் கருதி, அவர்களைச் சமாதானப் பேச்சுக்கு அழைத்தனர். அவர்களும் வந்து ஒன்று கூடினர். பர்கயினர் பாரசீகருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்துவிட வேண்டும் என்றும், பாரசீகர்கள் இனி எத்தகைய தீங்கும் பர்கயினர்க்கு இழைக்கக்கூடாது என்றும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் இவ்வுடன்பாட்டை, பூமியில் ஒரு குழிவெட்டி, அதைப் பலகையால் மூடி, அதன்மீது நின்று ஏற்றனர். அப்பொழுது அவர்கள் கூறிய வாசகம் "இந்தப் பூமியின்

1. Egypt 2. Aryandes 3. Pheretima 4. Barca 5. Siege 6. Arcesilaus 7. Barcaeans 8. Persians

அடியில் உள்ள மண் கெட்டியாக உள்ளவரை இது நம்மைக் கட்டுப்படுத்தும்" என்பதே. அவ்வுடன்படிக்கை ஏற்று முடிந்தவுடன், பாரசீகர்கள் அந்தக் குழியைத் தூர்த்து விட்டனர். அக் குழியில் மண் இல்லை; அதுவும் கெட்டியாக இல்லை. ஆதலால் அவர்கள் அவ் உடன் படிக்கையை மறுக்க இடம் கொடுத்து விட்டது. உடன் பர்கயினர் தங்கள் நகரத்தைப் பாரசீகர்களுக்குத் திறந்து விட்டனர்.

அர்செசிலெளஸைக் கொல்வதற்குக் காரணமாயிருந்த பர்கயினரைப் பாரசீகர்கள் பிடித்துப் பெரெதிமாவின் கைகளில் கொடுத்து விட்டனர். அப்பெரெதிமா என்பவள் நகரத்தின் சுவர்களில் அவர்கள் உடலைச் சூலத்தில் மாட்டிக் கொன்றாள். மற்றும் அவர்கள் மனைவியர்களின் கொங்கைகளை அறுத்து, அம் மதிற்சுவரின் பல பகுதிகளில் ஆணிகள் கொண்டு அடித்து வைத்தாள். மற்ற பர்கயினர்[1] களைப் பாரசீகர்களிடம்[2] கொடுத்தார். பாட்டஸ்[3] குடும்பத்தினர்க்கு அந்நகரப் பாதுகாப்பை அளித்தாள். ஒவ்வொரு பர்கயினரும் அடிமையாக்கப்பட்டு, பாரசீகர்கள் தங்கள் நாட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

லிபியாவில்[4] பாரசீகர்கள் சென்றடைந்த மிகத் தொலைவான இடம் யூஸ்பெரைடிஸ்[5] என்பதே. அடிமையாக ஆக்கப்பட்ட பர்கயினர் பாரசீக மன்னர் டாரியஸிடம்[6] அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு அவ்அரசர் தனியாக ஒரு குடியேற்றம் அமைத்து, பாக்டிரியாவில்[7] வாழுமாறு பணித்தார். அவர்கள் குடியேறிய கிராமத்தின் பெயர் பர்க[8]. அது அவர்கள் பெயராலேயே நிர்மாணிக்கப் பட்டது. அக்கிராமம் இன்றும் காணப்படுகிறது.

ஆயினும் பெரெதிமாவின்[9] இறப்பு அவ்வளவு நன்றாக அமையவில்லை. பர்க்கயினரின்மீது பழிக்குப் பழிவாங்கி விட்டு, எகிப்துக்குத் திரும்பியவுடன், அவளுக்கு ஒரு நோய் கண்டு, அதில் அவள் உயிருடன் இருக்கும் பொழுதே உடல் முழுவதும் புழுக்கள் தின்ன ஆரம்பித்தன. அந்த வலி பொறுக்க மாட்டாமல், அவள் இறந்தாள். அவள்

---

1. Barcaeans 2. Persians 3. Battus 4. Libya 5. Euesperides 6. Darius 7. Bactria 8. Barca 9. Pheretima

பர்கயினரின் மனைவியர்களுக்குச் செய்த அட்டூழியங்களைத் தானே அனுபவிக்க நேர்ந்தது. பர்க்கயினருக்குக் கொடுத்த தண்டனைக்கும் அதிகமான துன்பத்தைத் தனக்கு வந்த நோயால் அனுபவித்து விட்டாள். இரக்கமற்று நடந்து கொண்டவர்கள்மீது கடவுள் எத்தகைய தண்டனையை வழங்குகின்றார் என்பது இந்நிகழ்ச்சியால் எத்துணை உண்மையாக விளங்கலாயிற்று!''

விளக்கவுரை :

பெரெதிமா : இவள் பாட்டஸ் என்பவரின் மகள்.

அர்செசிலெளஸ்[1] : இவர் பாட்டஸ் என்பவரின் மகன். பெரெதிமாவின் சகோதரன். அர்செசிலெளஸைப் பர்கயினர் கொலைசெய்துவிட்டனர். அவ்வாறு தன் உடன் பிறந்தவனைக் கொலை செய்தவர்களைப் பழிக்குப்பழி வாங்கத் துடித்தாள். பழியும் வாங்கிவிட்டாள் பெரெதிமா.

பாட்டஸ்[2] : தேரா[3] எனும் ஊருக்குக் கப்பலேறிச் சென்ற ஒரு பெண்ணை பாலிம்னெஸ்டஸ்[4] என்பார் மணந்து, ஒரு குழந்தைக்குத் தந்தை ஆனார். அதுதான் பின்னர் பாட்டஸ் என்று வழங்கப்பட்டது. அப்பாட்டஸுக்குப் பேச்சு வரவில்லை. ஆகையால் அக் குழந்தையை டெல்பி கோயிலுக்கு[5] அழைத்துச் சென்று குறி[6] கேட்டனர். அத்தெய்வம் பாட்டஸை லிபியா[7]வுக்குச் சென்று ஓர் அரசாங்கம் அமைக்குமாறு கூறிற்று. பாட்டஸ் வந்த காரியம் வேறு. மீண்டும் அசரீரி அதே சொற்களைக் கூறிற்று. இதில் ஏதோ உண்மை பொதிந்துள்ளது என்று கருதி, அக்குழந்தையுடன் சிலர் கப்பலில் சென்று லிபியாவை அடைந்தனர். லிபியாவில் அவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டது. நாளடைவில் பாட்டஸ் லிபியாவின் அரசரானார். அப்பாட்டஸுக்கு அர்செசிலெளஸ் என்ற மகன் ஒருவன் இருந்தான். அவன் அதிகாரமெய்தியதும், கூடப்பிறந்த சகோதரர்களுடன் சண்டையிட்டு, அவர்களைத் துரத்திவிட்டான். அவர்கள் நெடுந்தொலைவில் உள்ள பர்கா[8] எனும் இடத்தில் குடியேறினர். பின்னர் பர்கயினர்[9] அர்செசி

---

1. Arcesilaus 2. Battus 3. Thera 4. Polymnestus 5. Delphi Temple 6. Oracle 7. Libya 8. Barca 9. Barcaenans

லௌஸைக் கொன்று விட்டனர். அவன் சகோதரியான பெரெதிமாவை அரசியாக இருக்கச் செய்தனர். அர்செசிலௌஸைக் கொன்றவர்களைப் பழி வாங்கத் துடித்தாள் பெரெதிமா. அதில் வெற்றியும் கண்டாள். தன் உடன் பிறந்தவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றாள். அதன் காரணமாகத்தான் இறுதியில் அவள் புற்று நோயால் பீடிக்கப்பட்டு, உடல் முழுவதும் புழுக்கள் நெளிய, மிக்க வேதனையும் அடைந்து இறந்தாள்.

> ''பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்.'
>
> —(திருக்குறள் : 319)

எனும் திருவள்ளுவர் வாக்கு எத்துணை உண்மை வாய்ந்ததாக அப் பெரெதிமா விஷயத்தில் காணப்பட்டது!

யூஸ்பெரைடிஸ்[1] : பாரசீகர்கள்[2] லிபியா[3]வில் சென்றடைந்த இறுதிப் பகுதியே யூஸ்பெரைடிஸ் என்பது ஆகும்.

பாக்டிரியா[4] : இது பாரசீக நாட்டில்[5] ஒரு பகுதி. 12 ஆவது சத்ராபியாகும்[6]. பக்கம் 262, குறிப்பு—5 பார்க்கவும். இதன் மறு பெயர் பொகாரா[7]. டாரியஸ்[8] இதன் அரசராவார். இந்தப் பாக்டிரியாவில் அடிமைகளாக வந்த பர்கயினர்களுக்கு[9] ஒரு குடியேற்றம் அமைத்து, அதற்குப் பர்க[10] எனப் பெயரிட்டு வழங்கினார். பர்கயினரை அடிமை கொண்ட ஆண்டு கி.மு. 510 ஆகும். ஆப்பிரிக்காவில் சைரனீஷியாவில்[11] விளங்கியது முதல் பர்க; அங்கிருந்த மக்கள் அடிமைக்ளாக்கப் பட்ட பின்னர், பாரசீக நாட்டில் பாக்டிரியப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பர்கா இரண்டாவது பர்கா ஆகும். இரண்டாவது பர்கா, பர்கயினர் பெயராலேயே நிர்மாணிக்கப் பட்டது.

அரக்கக் குணம் கொண்டு, இரக்கம் காட்டாத பெரெதிமா[12] இறுதியில் தான் செய்த வினைக்காக வருந்தி துடிதுடித்துச் செத்தாள்.

---

1. Euesperides 2. Persians 3. Libya 4. Bactria 5. Persia 6. Satrapy 7. Bokhara 8. Darius 9. Barcaenans 10. Barca 11. Cyrenetia 12. Pheretima

புத்தகம்-5

1. திரேசியர்களும் அவர்களின் பழக்க வழக்கங்களும்

"ஐரோப்பாவை[1] மெகபஸஸின்[2] தலைமையில் விட்டு விட்டு, அதை வெற்றி கொள்ளுமாறு அவரிடத்தில் பணியாற்றிய பாரசீகர்களுக்குக்[3] கட்டளையிட்டு, டாரியஸ்[4] தம் நாடு திரும்பினார். அப் பாரசீகர்கள் கிரேக்கர்களிடம்[5] போரிட விரும்பி, கிரேக்கர்களுக்கெதிராக ஹெல்லஸ் பான்டில்[6] போர்க்கொடி நாட்டி., பெரிந்தியர்களை[7] அடிபணிய வைக்கத் தொடங்கினர். ஆனால், அப் பெரிந்தியர்கள் பாரசீகர்களைத் தலைவர்களாகக் கருத மறுத்துவிட்டனர். இதற்கு முன்னர் அவர்கள் பயோனியர்களால்[8] வன்முறையுடன் கையாளப்பட்டனர். இருப்பினும் ஓர் அசரீரிவாக்கு வெளிவந்ததன் காரணமாக. பெரிந்தியர்கள், பயோனியர்கள் மீது பாய்ந்து, அவர்களைப் பூண்டோடு அழித்துவிட்டனர். இவ்வளவு தீரம் வாய்ந்தவர்களாய்ப் பெரிந்தியர்கள் காணப்படினும், பெரிந்தியர் வரலாற்றில் இது பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவவையாயிருந்த போதிலும், மெகபஸஸ் கொண்ட படைவீரர்களின் எண்ணிக்கை மிகுந்திருந்ததால், பெரிந்தியர்கள் தோல்வியைத் தழுவினர். மெகபஸஸும் பாரசீகர்களும் பெரிந்தியர்களைக் கப்பம் கட்டுமாறு செய்து விட்டு, திரேஸ் நாட்டின்[9] மீது படையெடுத்துச் சென்றனர். இது முன்னேற்பாட்டின்படி

---

1. Europe 2. Megabazus 3. Persians 4. Darius 5. Greeks
6. Hellespont 7. Perinthians 8. Paeonians 9. Thrace

நடந்தேறியது; டாரியஸ் திரேஸ் நாட்டை வெல்லவேண்டு மென்று மெகபஸஸுக்குத் தக்க அறிவிப்புத் தந்திருந்தார்.

திரேஸ் நாட்டு மக்கள்தொகை மற்ற எல்லா நாட்டு மக்கள் தொகையைவிட அதிகமே - இந்தியாவைத்[1] தவிர. திரேசியர்கள் யாவரும் ஒரே அரசரின்கீழ் ஒரே கூரையில் இணைக்கப்பட்டு விட்டால், அவர்களது நாடே உலகில் தலையாய வலிமை பெற்ற நாடாக விளங்கும். அவர் களுடன் வேறு எவரையும் இணையாகக் காட்ட முடியாது— இது என்னுடைய தனிப்பட்ட கருத்து. அவ்வாறான நிலைமை அனுபவத்தில் நடக்க முடியாத காரணத்தால், திரேசியர்கள்[2] வலிமையற்றுக் காணப்படுகின்றனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் அவர்கள் பல வேறு பெயர் களால் வழங்கப்படுகின்றனர். ஆனால் யாவரும் ஒரே மாதிரியான வாழ்க்கையையே நடத்தி வருகின்றனர்– கீடே[3] டிரௌஸி[4]—கிரெஸ்டனுக்கு[5] வடக்கில் உள்ள மக்கள் ஆகிய வர்கள் தவிர. கீடேயின் மக்கள் தங்களைச் சிரஞ்சீவிகளாக[6] எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அவர்களைப்பற்றி ஏற் கெனவே கூறியுள்ளேன். டிரௌஸி மக்கள் திரேசியரின் பழக்க வழக்கங்களையே பெரும்பாலும் பின்பற்றுகின்றனர்- ஒன்றே ஒன்றைத் தவிர. அதாவது ஒருவரின் பிறப்பின் போதும்[7], இறப்பின்போதும்[8] கொண்டாடும் முறை. ஒரு குழந்தை பிறந்த விடத்து, அக்குடும்பம் கும்பலாக வட்ட. வடிவமாக உட்கார்ந்து கொண்டு, அக்குழந்தை இனி என்னென்ன கட்டங்களை யனுபவிக்க வேண்டுமோ, அவற்றைக் கூறிக் கோவெனக் கூக்குரலிட்டு அழுவர்; அதே பொழுது ஒருவர் இறந்துவிடில், அவரைக் கும்மாள மடித்துச் சிரிப்பொலியுடன் புதைத்து விடுவர்—அதற்குக் காரணம் அவர் இந்த உலகக் கட்டங்களிலிருந்து எவ்வளவு விரைவில் விடுதலை பெற்றுச் சென்று விட்டார் என்பதே.

கிரெஸ்டன் நகருக்கு அப்பால் வசிக்கும் மக்கள் ஒவ் வொருவருக்கும் பல மனைவியர்கள் உண்டு. அவர்களின் கணவர் இறந்துவிட்டால், அவர்களுக்குள் ஒரு தேர்தல்[9] நடைபெறும். அதில் அக்கணவருடன் மிக்க அன்புடன்

---

1. India 2. Thracians 3. Getae 4. Trausi 5. Creston 6. Immortals 7. Birth 8. Death 9. Election

வாழ்ந்தவர் யார்? பற்றோ அன்போ இல்லாதிருந்தவர் யார்? என்ற கணக்கெடுப்பு நடைபெறும். மிக்க அன்பாக இருந் தவரைத் தேர்ந்தெடுத்துத் தக்க சடங்குகளுடன் அவர் அவர்களின் உறவினரால் வெட்டப்பட்டு, அவ் உடல், அக் கணவரின் புதை குழிக்குப் பக்கத்தில் புதைக்கப்படும். மற்றவர்கள் வெட்டப்பட்டு வெளியிலே தூக்கியெறியப் படுவர். அவர்களுக்கு எந்த வித மரியாதையும் கொடுக்கப் படுவதில்லை. திரேசியர்கள் சிலர் தங்கள் மகன்களையும் மகள்களையும் அயல்நாட்டினர்க்கு விற்பனை செய்து விடு கின்றனர். மகள் விஷயத்தில் கட்டுப்பாடு கிடையாது. எந்தப் பெண்ணும் எவருடனும் கலவி செய்யலாம். குழந்தை கள் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் தங்கள் மனைவியரை மட்டும் விழிப்பாகப் பாதுகாத்து வருகின்றனர்.

திரேசியர்களுள்[1] பச்சை குத்திக்[2] கொள்பவர் உயர்ந்த பிறப்பினைச் சார்ந்தவராகவும், அவ்வாறு குத்திக் கொள்ளா தவர்கள் இழிபிறப்பினைச் சார்ந்தவராகவும் கருதப்படு கின்றனர். அவர்கள் கருத்தில், மிக உயர்ந்த மனிதன் சும்மா இருக்கும் சோம்பேறியே[3]. கீழான மனிதன் விவசாயி[4]. வருமானத்தில் மிக உன்னதமான பொருளாகக் கருதப் படுவது போரில் கொள்ளையடித்த பொருள்களே.[5] அவர்கள் வணங்கும் தெய்வங்கள்: ஏரஸ்[6], டையோனிஸஸ்[7], அர்டமிஸ்[8]- இவர்கள் பொதுமக்கள் தெய்வங்கள், ஆனால், அரசரின் தெய்வம் ஹெர்மிஸ்[9]. அம்மக்கள் அரசர்முன் ஆணை யிடுவது ஹெர்மிஸ் தெய்வத்தின்மீது மட்டுமேயன்றி, வேறெந்தத் தெய்வத்தின்மீதும் அன்று.

செல்வந்தரான திரேசியன் ஒருவர் இறந்து விட்டால், அவரது சடலம் மூன்று நாள்களுக்குப் பார்வைக்காக வைக்கப்படும். அதனிடையில் துக்கம் கொண்டாடிய பிறகு, விருந்து ஒன்று நடைபெறும்—அதில் பல வகை விலங்குகள் கொல்லப்படும்—அவை தெய்வங்களுக்குப் பலி யிடப்படும். அதன் பிறகு அவ் உடல் புதைக்கப்பட்டு

1. Thracians 2. Tatooing 3. Lazy person 4. Tiller
5. Looted articles in war 6. Ares 7. Dionysus 8. Artemis
9. Hermis

அதன்மீது மண்மேடு ஒன்று கூம்பாக எழுப்பப்படும், அதைத் தொடர்ந்து காலால் நடத்தப்பெறும் விளையாட்டு கள் பல நடைபெறும். ஆனால் மல்யுத்தம்[1] அல்லது வாட் போரில்[2] வெற்றி பெறுபவருக்கே மிகச் சிறந்த பரிசு அளிக்கப்படும்—அதுவும் தனிநபருக்கு - தனியாக வெற்றி கண்டவருக்குப் பரிசு அளிக்கப்படும்.

திரேஸ் நாட்டிற்கு[3] வடக்கே இருப்பவர்களைப் பற்றிச் சரியான செய்திகள் கிடைக்கவில்லை. டான்யூப் நதிக்கு[4] அப்பால் மக்கள் நடமாட்டமில்லாத பாழடைந்த வறண்ட நிலம்தான் உள்ளது. ஆனால் டான்யூப் நதிக்கு அக் கரை நாட்டில், சிகின்னே[5] எனும் மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் மிடிய[6] நாட்டிலிருந்து வந்தவராகத் தம்மைக் கருதிக் கொள்கின்றனர். சிகின்னே எனும் சொல்லுக்குச் சைப்ரஸ் தீவில்[7] "ஈட்டி"[8] என்று பொருள்படும். டான்யூப் நதிக்கு அப்பால் தேனீக்கள்[9] பெருவாரியாக உள்ளன என்று திரேசியர்கள் கூறுகின்றனர். அக்கூற்று ஒப்புக் கொள்ள முடியாதது—காரணம், கடுங்குளிரில் தேனீக்கள் வாழ முடியாது. ஆகையால், அவ்விடங்கள் நடமாட்ட மில்லாததற்குக் காரணம் கடுங்குளிர் ஒன்றுதான் என்று நான் உறுதியாகக் கூறுவேன்.

இந்த நாட்டின் கடற்கரைப் பகுதியைத்தான் பாரசீக அரசரின்[10] ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரும் பணியில் மெகபஸஸ் இப்பொழுது ஈடுபட்டுள்ளார்."

விளக்கவுரை :

மெகபஸஸ்[11] : இவர் சிறந்த போர்வீரர்[12]. டாரியஸ்[13] அரசரால் கிரேக்க நாட்டை[14] வெல்லத் தளபதியாய் ஏற் படுத்தப் பட்டவர். கிரேக்க நாட்டைப் பாரசீக நாட்டுக்[15]குக் கப்பம் கட்டுமாறு செய்தார்.

ஹெல்லஸ்பான்ட்[16] : இது டார்டனெல்ஸ் ஜலசந்தி[17] என்று

---

1. Wrestling 2. Sword fight 3. Thrace 4. River Danube 5. Sigynae 6. Media 7. Cyprus 8. Spear 9. Bees 10. Persian King 11. Megabazus 12. Warrior 13. Darius 14. Greece 15. Persia 16. Hellespont 17. Dardanell's Strait

வழங்கப்படும். இது ஈஜியன் கடலையும்[1], புரொபான்டிஸையும்[2] இணைக்கும் குறுகிய நீரிணைப்பு. இதன் நீளம் 50 மைல்; அகலம் 1 முதல் 6 மைல் வரை. இப்பகுதியில்தான் ஸெர்க்ஸிஸ் படகுப் பாலத்தைக் கட்டி[3] இணைத்தார். ஹெல்லே[4] என்பவர் இவ்விடத்தில் மூழ்கியதால், இப்பகுதி ஹெல்லெஸ் பான்ட் என்று வழங்கப்பட்டது. மற்றும் இப்பகுதி ஆசியாவுக்கும்[5] ஐரோப்பாவுக்கும்[6] இடையேயுள்ள ஓர் எல்லைக் கோடாகும்.

பெரிந்தியர்கள்[7] : இம் மக்கள் பெரிந்தஸ்[8] எனும் நகர வாசிகள். திரேசியா நாட்டில்[9] இது முக்கியமான நகரமாக இருந்தது. இந்நகரம் சாமியர்களால்[10]—அதாவது சாமோஸ் தீவின் வாசிகளால் — கி.மு. 559 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப் பட்டது. இது செலிம்பிரியாவுக்கு 22 மைல் மேற்கே இருந்தது. பிற்காலத்தில் இந்நகரம் ஹிராக்ளியா என்றும் வழங்கப்பட்டது.

திரேசியா நாடு: இந்நாடு ஐரோப்பாவில் டான்யூப் நதியின்[11] தென்பகுதியிலும், கருங்கடலின் மேற்குப் பகுதியிலும்[12] விளங்கிற்று. மக்கள் நாடோடிகள்; வீரம் பொருந்தியவர்கள். மற்றும் பக்கம் 204 குறிப்பு—5 பார்க்கவும்.

பிறக்கும் பொழுது அழுதல் : இவ்வாறு பிறக்கும் பொழுது அழுதலும், இறக்கும் பொழுது மகிழ்தலும் சில இனத்தவரிடையே இன்றைக்கும் காணப்படும் பழக்கமாகும். அராபியர்[13], முஸ்லிம்கள்[14] ஆகியவர்களிடையே இப் பழக்கம் வேரூன்றியிருப்பதைக் காணலாம். பிறந்த ஆன்மா இவ்வுலகில் துன்பப்பட வேண்டுமே என அழுகையும், அத்தகைய துன்பத்தை இனியும் ஏற்காமல் போய் விட்டாரே என்று மகிழ்ச்சியும் அடைவதாக அதற்குக் காரணம் கூறப்படுகின்றது.

கணவருடன் மனைவியர் இறத்தல் : இவ்வழக்கம் ஹிந்துக்களிடம் சதி[15] என்று வழங்கப்பட்டது. இது இந்தியாவின் தென் பகுதியாகிய தமிழ்நாட்டிலிருந்து பினீசியாவுக்குச்[16] சென்று அங்கிருந்து திரேசியாவுக்குச் சென்றுள்ளது.

---

1. Aegean Sea 2. Propontis 3. Bridge of Boats 4. Hellae 5. Asia 6. Europe 7. Perinthians 8. Perinthus 9. Thracia 10. Samians 11. River Danube 12. West of Black Sea 13. Arabs 14 Muslims 15. Sati 16. Phoenicia

மார்க்கோபோலோ (கி.பி. 1254—1324) கூறுகிறார் :

"இறந்தவருடைய ஆருயிர் மனைவி, தன் கணவன்மீது கொண்ட அன்பின் மேலீட்டால், எரியும் தீயில் துண்ணென விழுந்து தானும் தன் கணவன் சடலத்துடன் சாம்பலாகி விடுவாள். இத்தகைய திண்மைவாய்ந்த கற்பினுக்கு எடுத்துக் காட்டாக நிற்கும் பெண்கள் திலகங்களைச் சமூகம் சீரிய முறையில் பாராட்டுகின்றது. ஆனால் அதற்கு மாறாக, அத்தகைய மரணத்தை ஏற்க மனமில்லாது வாழும் பெண் களைச் சமூகம் அவமானத்துக்குள்ளாக்கி, அழியாப் பழிக்கு ஆளாக்கி விடுகிறது."

—(மார்க்கோபோலோ : அதி. 2; பக்கம் 21)

பச்சை குத்திக் கொள்ளுதல்[1] : இவ்வழக்கம் சில நாடுகளில் இன்றும் காணப்படுகிறது. சிலர் விலங்குகள், பறவை, காதலர், காதலிகள் பெயர்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள பச்சை குத்திக் கொள்கின்றனர். அதைக் குத்தத் தனி ஆட்கள் உள்ளனர்.

இது தமிழ் நாட்டில் குறவர்[2], குறத்திகளால் குத்தப் படுகிறது. இப்பழக்கம் பனையேறிகள்மூலமாக பினீசியர் களுக்குச்[3] சென்று,அங்கிருந்து திரேசியா நாட்டிற்குப் பரவிற்று. பச்சை குத்தச் சிறு ஊசியும், சில பச்சிலை மூலிகைகளும்[4] பயன் படுத்தப்படுகின்றன.

ஏரஸ்[5] : இத் தெய்வம் ரோமானியர்களால்[6] மார்ஸ்[7] அதாவது செவ்வாய் என்று வழங்கப்படும். இது போர்க்களத் தெய்வம் ஆகும். ஜியுஸ்[8] கடவுளுக்கும், ஹீரா[9] தேவதைக்கும் பிறந்த மகனாகக் கருதப்படுகிறார். இவர் டையோமிடிஸ்[10] என்பவரால் தாக்கப்பட்டுப் புண்படுத்தப்பட்டார். அவர் விழும் பொழுது பத்தாயிரம் வீரர்கள் கர்ஜனை செய்வது போன்று கூக்குரலிட்டு விழுந்தார். அரக்கன் அலாய்டே[11] இவரைக் கைது செய்து 13 மாதங்கள் சிறைப்படுத்தி வைத்திருந்தான். பின்னர் ஹெர்மிஸ்[12] என்னும் தெய்வத்தால் விடுதலை யடைந்தார். இத் தெய்வம் திரேசியா நாட்டில்[13] மிகவும் கொண்டாடப் படுகிறது.

---

1. Tattooing 2. Kuravars 3. Phoenicians 4. Medicinal Herbs 5. Ares 6. Romans 7. Mars 8. Zeus 9. Hera 10. Diomedes 11. Alaidae 12. Hermis 13. Thracia

டையோனிஸஸ்[1] : இவர் மதுபானக் கடவுளாகக் கருதப் படுகிறார். கிரேக்கர்களாலும் ரோமானியர்களாலும் பாக்கஸ்[2] என்ற பெயரால் வழங்கப்படுகிறார். இவர் ஜியுஸ் கடவுளுக்கும், ஸெமிலி[3] என்ற தேவதைக்கும் பிறந்தவர். ஜியுஸுக்கு ஹீரா என்ற மற்றொரு மனைவி உண்டு. ஹீராவுக்கு எப்படி காட்சி கொடுப்பாரோ, அதேமாதிரி தனக்கும் காட்சி தருமாறு ஸெமிலி வேண்டினாள் ஜியுஸ், தட்டமாட்டாமல், தம் தீப்பிழம்பு உருவத்தைக் காட்டவே, அதில் அவள் கருகிச் செத்தாள். ஆனால் அவள் வயிற்றிலிருந்த குழந்தையை எடுத்துத் தம் தொடையைக் கிழித்து, அதில் வைத்துத் தைத்து வளர்த்தார். தக்க சமயம் வந்ததும் அக்குழந்தை அவர் தொடையிலிருந்து வெளிவந்தது. அக் குழந்தையின் பெயரே டையோனிஸஸ். வயது வந்ததும், அவர் எகிப்து, இந்தியா, சிரியா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். இறுதியில் தம் தாயை நரகத்திலிருந்து மீட்டு ஒலிவமலைமீது வாசம் செய்யப் போய் விட்டார்.

மற்றும், இவர் மெகஸ்தனிஸால் (கி.மு. 302—226) குறிப் பிடப்படுகிறார்.

—(மெகஸ்தனிஸ் அதி. 4. பக்கம் 37)

அர்டமிஸ்[4] : ரோமானியர்களால் டையானா[5] என்று வழங்கப்பட்டவர். இவள் ஜியுஸ் கடவுளுக்கும் லிடோ[6] தேவதைக்கும் பிறந்த மகள் ஆவாள். இவள் அப்பொலோவின்[7] தங்கையாகவும் கருதப்படுகிறாள். (புத்தகம் VI, அதிகாரம் 3-படம் பார்க்கவும்)

சிகின்னே[8] : இவர்கள் மிடிய நாட்டிலிருந்து[9] வந்த வர்கள். சிகின்னே என்றால் ஈட்டி[10] என்று பொருள்படும். அவர்கள் ஈட்டியைப் பயன்படுத்தினர் போலும்.

டாரியஸ் அரசர்[11] : இவர் பாரசீக மன்னர்[12]. இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 521—485 அதாவது 36 ஆண்டுகள் ஆண்டார். ஆசியா[13], ஐரோப்பாவை[14] வென்றார். மற்றும் பக்கம் 256, குறிப்பு-1 பார்க்கவும்.

---

1. Dionysus 2. Bacchus 3. Semili 4. Artemis 5. Diana 6. Leto 7. Apollo 8. Sigynnae 9. Media 10. Spear 11. Darius 12. Persian King 13. Asia 14. Europe

2. பயோனியாவின் ஏரிக்கரை வாசிகள்

"டாரியஸ்[1] ஹெல்லஸ்பான்டைக்[2], கடந்து, சார்டிஸ்[3] நகரத்தை அடைந்ததும், அவருக்கு இரு நண்பர்கள் — தமக்குத் தக்க சமயத்தில் உதவி செய்தவர்கள்—கவனத் துக்கு வந்தனர். அவர்களுள் ஒருவர் மைலீடஸ்[4] நாட்டைச் சார்ந்த ஹிஸ்டியஸ்;[5] மற்றவர் மைடிலீன்[6] நாட்டைச் சார்ந்த கோயஸ்[7]. அவர்களை டாரியஸ் தம்மிடம் அழைத்துவரச் செய்து, அவர்கள் செய்த உதவிக்கு ஈடாகத் தாம் என்ன செய்தால் அவர்களுக்குத் திருப்தியளிக்கும் எனக் கேட்டார். ஹிஸ்டியஸ் என்பவருக்கு, மைலீடஸ் நகரத்தின்மீது அதிகாரம் செலுத்த ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டு விட்டது. இருப்பினும் அரசர் கேட்டதற்காக இடோனி நாட்டில்[8] மிர்சினஸ்[9] எனும் இடம் அளித்தால் அங்கே ஒரு நகரத்தை நிர்மாணிக்கலாம் என்று கூறினார். ஆனால் கோயஸ் பாட்டாளி மகன். அதன் காரணமாக மைடிலீன் நகரின்மீது அதிகாரம் செலுத்த உயர்ந்த பதவி வகிக்கும் அதிகாரியாக நியமிக்க வேண்டுமெனக் கேட்டார். டாரியஸ் அரசர் அவர் இருவர்களின் வேண்டு கோள்களையும் ஏற்றுக்கொண்டு, நடைமுறையில் அவற்றை அமல் செய்யக் கட்டளை பிறப்பித்தார்.

அதற்கிடையில் டாரியஸின் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அதுதான் மெகபஸஸிடம்[10], பயோனியருடைய[11] நாடு முழுவதையும் ஐரோப்பாவிலிருந்து[12] ஆசியாவுக்கு[13]

---

1. Darius 2. Hellespont 3. Sardis 4. Miletus 5. Histiaeus 6. Mytilene 7. Goes 8. Edoni 9. Myrcinus 10. Megabazus 11. Paeonian Nation 12. Europe 13. Asia

மாற்றக் கட்டளையிடுவதாகும். இரு பயோனிய மக்கள்—பிக்ரஸ்[1], மாஸ்டிஸ்[2] எனும் இருவர் — தங்கள் நாட்டின் அதிகாரபீடத்தில் அமர அவாவினர். ஆகையால், டாரியஸ் ஆசியாவுக்குக் கடந்து சென்றபொழுது, அவர்கள் இருவரும் தங்கள் தங்கையுடன் சார்டிஸ் நகருக்குச் சென்றனர். அப் பெண் நல்ல உயரமும், சிறந்த அழகும் வாய்ந்தவள். லிடியன் தலைநகரில்[3] அரசாங்கபீடத்தில் ஏறி அமருமுன், தங்கள் சகோதரியிடம் ஒரு சாடியைக் கொடுத்து, ஒரு குதிரையையும் தந்து, அக்குதிரைக்கு நீர் காட்டி, சாடியில் நீர் கொணருமாறும் பணித்தனர். அத்துடன் சணல் கயிற்றைத் திரிக்குமாறும் கூறினர். அப்பெண் வெகு நன்றாகக் கண்களைக் கவருமாறு ஆடை அணிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாள். அவள் ஆற்றுக்கு நீர் எடுக்கப் போகும்போது டாரியஸ் அவளைப் பார்த்தார். டாரியஸ் கண்களில் படும்படியாகவே அவள் மிக ஒய்யாரமாக நடந்து சென்றாள்.

டாரியஸ்[4] அப்பெண்ணைப் பார்த்ததும், அவள் ஏன் அவ்வாறு செய்கிறாள் என்றும், அவளைக் கொணருமாறும் பணித்தார். அவ்வாறே அவளும் அவள் சகோதரர்களும் டாரியஸ் அரசர்முன் கொண்டு வரப்பட்டனர். "இவ்வாறு நூல் நூற்று, நீர் ஏந்தி, குதிரைக்கு நீர் காட்டி வருவதன் காரணம் தான் என்ன? உங்கள் நாட்டில் பெண்கள் யாவருமே இவ்வாறுதான் கடுமையாக உழைக்கிறார்களா?!' என்று கேட்டார். அதற்கு அச்சகோதரர்கள், "ஆம், நாங்கள் பயோனியர்கள்"[5] என்று பதில் அளித்தனர். "இந்தப் பெண்களைப் போலப் பலர் நாட்டில் வருந்துவானேன். அவர்களை இங்கு வரவழைத்து, அவர்களைத் தக்கபடி ஆதரிப்போம்" என்று கருதி, தம் ஆள்களைத் திரேசியாவில்[6] தளபதியாக நியமித்த மெகபஸஸஸுக்கு[7] அனுப்பி, பயோனியர்களை — ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிகர் யாவரையும் — அந்நாட்டிலிருந்து துரத்தித் தம்மிடம் வந்து சேருமாறு கட்டளை பிறப்பித்தார். மெகபஸஸுக்கு அரசர் கட்டளை கிடைத்தவுடன், ஒரு

---

1. Pigres 2. Mastyes 3. Lydian Capital 4. Darius 5. Paeonians 6. Thracia 7. Megabazus

வழிகாட்டியை ஏற்படுத்திக் கொண்டு, பயோனியர் நாட்டின் மீது படையெடுத்து, பயோனிய மக்கள் யாவரையும் சிறைப் படுத்தினார். சிலர் தாமாகவே சரணடைந்தனர்; பலர் நாட்டை விடு ஓடினர். பயோனியக் குலமரபினர்[1] பலர் ஆசியா வுக்கு[2] மாற்றப்பட்டனர். இந்த ஏரி வாசிகளின்[3] இல்லங்கள் — சிரியோ பயோனியர்[4]—பியோப்ளே,[5] பிராசியஸ்[6] ஏரிவரை காணப்பட்டன. அவர்கள் யாவரும் ஆசியாவுக்கு மாற்றப் பட்டனர். இந்த ஏரி வாசிகளின் இல்லங்கள் ஏரியின் நடுவில் கழிகளால் வேயப்பட்டிருந்தன. அப்பரண்மீதிருந்த படியே வலையை ஏரியில் வீசினால், ஒரே வீச்சில் வலை நிறைய மீன் அகப்பட்டுவிடும்.

சிறைபிடிக்கப்பட்ட பயோனியர்கள் ஆசியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மெகபஸஸ் தாம் ஏற்ற பணியில் வெற்றி கண்டதும், மாசிடோனியாவின்[7] அரசரான அமிந்தாஸிடம்[8] சிறிது மண்ணும் நீரும் தருமாறு கேட்டார்— அவர் டாரியஸிடம் சரணடைந்ததற்கும், தோற்ற அரசர் டாரியஸைப் பேரர சராக ஏற்றுக் கொள்வதற்கும் அடையாளமாக. பாரசீக இராணுவத்தில் இருந்த புகழ் வாய்ந்த முக்கியப் பொறுப்பேற்ற ஏழு தளபதிகள் அந்தச் செய்தியை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர். பிராஸியஸ் ஏரியிலிருந்து[9] மாசிடோனியா அண்மையில்தான் உள்ளது. வெகு தொலைவில் அன்று. அந்த ஏரிக்கருகில் சுரங்கம்[10] ஒன்று உண்டு. அச்சுரங்கம் பின்னர் அலெக்சாந்தர் அரசருக்கு[11] நாளும் ஒரு டேலன்ட்[12] அளிக்க வேண்டும் என்றால், அந்த அளவுக்கு அங்கே வருமானம் உண்டு. அந்த ஏரியைக் கடந்தால் டைசோரம்[13] எனும் குன்று ஒன்று வரும். அதன் மறுபக்கத்தில்தான் மாசிடோனியா உள்ளது. அந்த ஏழு பாரசீக அலுவலர்களும்[14] மாசிடோனியா வந்து சேர்ந்து, அமிந்தாஸிடம் பேட்டிகாண அனுமதிக்கப்

1. Paeonian tribes 2. Asia 3. Lake dwellers 4. Sirio Paeonians 5. Paeoplae 6. Prasias 7. Macedonia 8. Amyntas 9. Prasias lake 10. Mine 11. King Alexander 12. Talent 13. Dysorum 14. Seven Persian officers

பட்டனர். அமிந்தாஸ் அப்பாரசீகர்களை அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு அளிக்க ஒரு விருந்தையும் பேரளவில் ஏற்பாடு செய்திருந்தார். அவ்விருந்தில் பாரசீ கர்கள்[1], "என் மாசிடோனிய நண்பரே, இம்மாதிரியான வெகு முக்கியமான விருந்தில், எங்கள் நாட்டில் எங்கள் மனைவி மக்களையும் அழைத்து வருவோம்," என்று கூறவே, உடன் அமிந்தாஸும். "இந்நாட்டில் எங்கள் பழக்கமல்ல; இருப்பினும் தாங்கள் கூறுவதால், இதோ அழைத்து வருகிறேன்," என்று கூறித் தத்தம் மனைவியர் களை அவ்விருந்துக்கு வந்து பங்கேற்குமாறு வேண்ட, அம்மங்கையர்களும் அப்பாரசீகர்களுக்கு எதிரே வந்து உட்கார்ந்தனர். அப் பெண்களின் பேரழகில் சிக்கித் தவித்த அப்பாரசீகர்கள், "ஐயா! அங்கே உட்காருவதும் ஒன்றுதான், வீட்டிலேயே இருப்பதும் ஒன்றுதான், எங்கள் பக்கத்தில் அமர வேண்டும்," என வேண்டினர். அமிந்தாஸும் ஆகட்டும் என்று கூறி, அம்மங்கையர்களைப் பாரசீகர் களின் அருகில் அமருமாறு செய்தார்— பாரசீகர்களிடம் ஏற்பட்ட பயம் காரணமாக. அப்பாரசீகர்கள் நன்றாகக் குடித்திருந்தனர். தாம் என்ன செய்கிறோம் என்று தெரியாமல், அப்பெண்களின் மார்பகத்தில் கைகளையிட்டு, முத்தம் கொடுக்க முயன்றனர். இதை அமிந்தாஸ் பார்த்துக் கொண்டு, பற்களைக் கடித்தாரே தவிர, அவரால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. அவருடைய மகன் அலெக்சாந்தர்[2] அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வாலிபன். அப்பாரசீகர்கள் செய்வது அநாகரிக மாகத் தோன்றியதால், உடன் தன் தந்தையிடம், "அப்பா தாங்கள் மிகவும் சோர்வடைந்துள்ளீர், உடன் சென்று விடும், இவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான். அதற்கு அத் தந்தை, "இவர்களை ஒன்றும் செய்துவிடாதே; அதனால் நம் உயிருக்குத்தான் ஆபத்து," என்று கூறி விட்டு உள்ளே சென்று விட்டார். அவர் மகன் அலெக்சாந்தர், அப்பாரசீகர்களை நோக்கி, "ஐயன்மீர்! மாலை வேளை முடிந்து விட்டது; இனிவருவது இரவுதான். இந்த மங்கையரை உங்கள் படுக்கையறைக்கு இன்றிரவு

1. Persians 2. Alexander, son of Amyntas

அனுப்புகிறேன். சிறிது இளைப்பாறிவிட்டு, மகிழ்ச்சியுடன் வாருங்கள்!" என்று கூறிவிட்டு, அவர்கள் சென்றவுடன் கிரேக்க மாதர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்று விட்டான்.

சிறிது நேரத்தில் நல்ல கட்டுடல் வாய்ந்த கிரேக்க வீரர்களை, கிரேக்க மாதர் போல அலங்கரித்து, முகத்தை முக்காடிட்டு, ஒவ்வொருவர் கையிலும் ஆயுதத்தை ஏந்திய வண்ணம் வந்து நின்றனர். பாரசீகர்கள் தங்கள் பக்கத்தில் பெண் வேடம் தாங்கிய அக் கிரேக்க மக்களை[1] தம் மடிமீது உட்கார வைத்து அவர்களைக் கட்டியணைக்க முயன்றனர். உடன் ஒவ்வொரு கிரேக்க வீரரும் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அப்பாரசீகர்களைக் கண்ட துண்டமாக வெட்டி வீழ்த்தினர். அப்பாரசீகர்கள் யாவரும் செத்து மடிந்தனர். பாரசீகர்கூட, அவர்களின் பணியாட்களும் கொல்லப்பட்டனர். அவர்கள் கொணர்ந்த மூட்டைகள், பொருள்கள் யாவும் களவாடப்பட்டு மறைந்தொழிந்தன.

மாசிடோனியாவுக்கு[2] வந்த பாரசீகத் தூதுவர்கள் வெட்டுண்ட அமளி இத்துடன் முடிவடைந்து விட்டது. பாரசீக மன்னர் டாரியஸ்[3], மாசிடோனியாவுக்கு அனுப்பப்பட்ட பாரசீகர்கள் என்ன ஆனார்கள் என்பதையறிய, பூபாரெஸ்[4] எனும் அதிகாரியை அனுப்பினார். ஆனால் அவர் வந்ததும், அவர்க்குப் பெரும் பொருள் கொடுத்து, அமிந்தாஸின் மகள் கைகியா[5]வையும் மணக்க ஏற்பாடு செய்து, பாரசீகர்கள் வெட்டுண்டு இறந்த செய்தியை அப்படியே வெளித்தெரியாமல் அமுக்கி விட்டனர். இந்த விதமாகப் பாரசீகர்களின் மரணச் செய்தி பரவாமல் தடுக்கப்பட்டும், அதைப்பற்றிய எப்பிரச்சினையும் மேலே கிளம்பாமல் அமுக்கப்பட்டும் விட்டது.

வந்த அதிகாரியும் ஏதோ ஒரு பொய்க் காரணத்தைக் கூறி, டாரியஸ் ஐயம் கொள்ளாதவாறு செய்து விட்டார்."

---

1. Greeks 2. Macedonia 3. Darius 4. Bubares
5. Gygaea

விளக்கவுரை:

ஹெல்லஸ்பான்ட் :[1] இது டார்டனெல்ஸ் ஜலசந்தி[2] எனப் படும். ஹெல்லே[3] என்பவர் இப்பகுதியில் மூழ்கியதால், இது ஹெல்லஸ்பான்ட் என்று வழங்கப்பட்டது. மற்றும் பக்கம் 353, குறிப்பு-4 பார்க்கவும். இப்பகுதி ஆசியாவுக்கும்[4] ஐரோப் பாவுக்கும்[5] இடையேயுள்ள எல்லைக் கோடாகும்.

சார்டிஸ்:[6] இது ஆசியா மைனரில்[7] முக்கியமான நகர மாகும். லிடியன் அரசின்[8] தலைநகரம்; மிக்க புகழ் பெற்ற நகரமுமாகும். அதைச்சுற்றி மூன்று மதில் சுவர்கள் இருந்தன. அதில் அவ்வரசரின் அரண்மனையும், கருவூலமும் இருந்தன. சைரஸ்[9] படையெடுப்பை எதிர்த்து நின்றது. இருப்பினும் அது வீழ்ந்து விட்டது. பாரசீக அரசர்[10] ஆட்சியில் அது லிடியா வின் சத்ராபியாக[11] விளங்கிற்று. அந்நகரத்தின் முக்கியக் கடவுள் சிபிலே[12]

ஹிஸ்டியஸ்:[13] இவர் மைலீடஸ்[14] நகரத்தைச் சார்ந்தவர்; டாரியஸுக்குக்[15] கிரேக்கநாட்டின் படையெடுப்பில் உதவியவர். படகுப் பாலத்தைக் கட்டியவர். இவர் டெர்மெராவைச்[16] சார்ந்த டிம்னஸ்[17] என்பாரின் மகன் ஆவார்.

கோயஸ்[18]: இவர் மைடிலீன்[19] நாட்டைச் சார்ந்தவர். இவர் எர்க்ஸாண்டரின்[20] மகனார் ஆவார். இவரும் டாரியஸ் அரசருக்கு உதவி புரிந்துள்ளார். அதன் காரணமாக டாரியஸ், இவர் கேட்டதற்கு உடன் அனுமதி தந்துவிட்டார்.

மெகபஸஸ்[21]: கிரேக்க நாட்டை[22] வெல்ல டாரியஸ் அரசரால் தளபதியாய் அமர்த்தப்பட்டவர். மிகச் சிறந்த வீரர்.

பயோனியர்:[23] இவர்கள் திரேசிய[24] நாட்டு மக்கள். மிகுந்த வலிமை பெற்றவர். மாசிடோனியாவின்[25] வடக்குப் பகுதியில் வாழ்ந்தவர். இவர்கள் இல்லீரியாவின் எல்லை[26] முதல் ஸ்டிரைமான்[27] நதி வரை பரவி இருந்தனர். இவர்கள் நாடு பயோனியா[28] என்று வழங்கப்பட்டது.

---

1. Hellespont 2. Dardanell's Strait 3. Hellae 4. Asia 5. Europe 6. Sardis 7. Asia Minor 8. Lydian Government 9. Cyrus 10. Persian king 11. Satrapy 12. Cybele 13. Histiaeus 14. Miletus 15. Darius 16. Termera 17. Tymnes 18. Coes 19. Mytilene 20. Erxander 21. Megabazus 22. Greece 23. Paeonians 24. Thracia 25. Macedonia 26. Illerian Frontier 27. Strymon 28. Paeonia

டாரியஸ்:[1] இவர் பாரசீக மன்னர்[2]. இவர் அரசாட்சி செய்த காலம் கி. மு. 521 485 அதாவது 36 ஆண்டுகள் ஆண்டார். பல நாடுகளை வென்றார். மற்றும் பக்கம் 256, குறிப்பு-1 பார்க்கவும்

சிரியோ பயோனியர்:[3] இவர்கள் பயோனிய மக்களுள்[4] ஒரு வகையினர். ஏரியின் நடுவிலே கட்டைகளால் வீடுகள் கட்டிக் கொண்டு மீன் பிடித்து வாழ்பவர்.

அமிந்தாஸ்:[5] மாசிடோனியாவின் அரசராக[6] இருந்தார். இவர் ஆண்ட காலம் கி மு. 540 -505 ஆக 35 ஆண்டுகள் ஆண்டார். இவருடைய மகன் பெயர் அலெக்சாந்தர். இவர் வேறு. இவருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வந்த மகா அலெக்சாந்தர்[7] (கி.மு. 356 323) வேறு. இரு பெயர்களையும் போட்டுக் குழம்பக் கூடாது.

அலெக்சாந்தர்[8]: இவர் அமிந்தாஸின் மகன். பிலிப்பின்[9] மகன் மகா அலெக்சாந்தர் வேறு. இருப்பினும் யாவரும் மாசிடோனியப் பரம்பரையிலேயே வந்தவர். இவர் அரசாண்ட காலம் கி.மு. 505—455 ஆக 50 ஆண்டுகள் ஆண்டார்.

மாசிடோனியா[10]: கிரேக்க நாட்டின்[11] வடபகுதியில் இருந்த நாடு இதன் ஆதிப் பெயர் எமாதியா[12]. பின்னர் பிலிப் பேரரசரால் இதன் எல்லைகள் விரிவடைந்தன. அமிந்தாஸ் அரசராயிருந்த பொழுது அது ஒரு சிறிய குறுகிய எல்லையுடைய நாடாகவே விளங்கிற்று. மகா அலெக்சாந்தர் காலத்திலே (கி.மு. 356—323) அது மிகவும் பரந்த எல்லையைக் கொண்டதாயிற்று. ஆசியா[13] முழுவதும் அதற்கு அடிபணிந்து நின்றது.

டேலன்ட்[14]. இது ஒரு கிரேக்க நாணய அளவு. ஒரு டேலன்டம்[15] என்பது ஏறக்குறைய 285 பவுன் மதிப்புள்ளதாகும். மற்றும் பக்கம் 266 குறிப்பு-4 பார்க்கவும்.

டைசோரம்:[16] இது மாசிடோனியாவுக்குப் போகும் வழியில் உள்ளது.

---

1. Darius 2. Persian king 3. Sirio Paeonians 4. Paeonians 5. Amyntas 6. King of Macedonia 7. Alexander, son of Amyntas 8. Alexander, the Great 9. Philip 10. Macedonia 11. Greece 12. Emathia 13. Asia 14 Talent 15. Talentum 16. Dysorum

பெண்வேடம் தரித்த ஆண் வீரர்கள்:[1] இதுபோன்ற வரலாற்று விளக்கங்கள் இந்திய வரலாற்றில்[2] ஆங்காங்குக் காணப்படும் இராஜபுத்திர வீரர்களின்[3] வரலாறுகளில், மேவார் நாட்டு இராணி[4] பத்மினியைப் பல்லக்கில் பல ஆயுதம் தாங்கிய வீரர்கள் பெண் வேடம் போட்டுச் சென்றனர் என்றும், அவர்கள் தக்க தருணத்தில் அல்லாவுதீன்[5] சேனையைக் கலக்கமடையச் செய்தனர் என்றும், அது கி.பி. 1303 ஆம் ஆண்டு நடந்தது என்றும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.

—(An Advanced History of India By Dr. R. C. Majumdar Pages 302—303)

புபாரெஸ்[6]: உண்மை நிலையறிய மாசிடோனியா[7]வுக்கு டாரியஸ்[8] அனுப்பிய தூதுவர். இவரை மது கொண்டு மயக்கி, அலெக்சாந்தர்[9] தம் தங்கை கைகியாவைத்[10] திருமணம் செய்து கொடுத்து, பாரசீகர்கள் கொல்லப்பட்ட செய்தியை ஒன்றும் நடவாததே போன்று அமுக்கி விட்டார். டாரியஸ் அரசர் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கிரேக்க நாட்டில்[11] மாசிடோனியாவில் முற்காலத்தில் பெண்கள் மிகுந்த அடக்கத்துடன் வாழ்ந்து வந்தனர். எந்த அரசினர் விருந்துக்கும் சென்றது கிடையாது. இந்தியப் பெண்கள் போலவே கிரேக்கப் பெண்களும் பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தனர். அதனால்தான் அம்மாதர்களைப் பாரசீகர்கள்[12] தங்கள் பக்கத்தில் உட்கார வைத்த பொழுது, “அது எங்கள் நாட்டு வழக்கமில்லை. இருப்பினும் ஒரு பெரிய அரசர் சார்பில் நீங்கள் வந்துள்ளதால், அதன்படி செய்ய ஒப்புக் கொள்கிறோம்” என்று கூறி, அதன் பிறகே உட்கார்ந்தனர்—பாரசீகரின் பண்பாடு போற்றத் தக்கதாக இல்லை. அவர்கள் அப்பெண்கள்மேல் கை போட்டனர். இதைப் பார்த்து வெகுண்டு எழுந்த அலெக்சாந்தர் — அமிந்தாஸின் மகன்— அன்றிரவே பெண் வேடம் தரித்து வந்த கிரேக்க வீரர்களை மோதவிட்டு, கற்பழிக்க முயன்ற பாரசீகர்களை வெட்டிப் போடச்செய்தான்

இதனால் பாரசீகர்கள் கிரேக்க வீரர்களிடமிருந்து கற்றுக் கொண்ட பாடம் மறக்க முடியாத ஒரு பாடமாக அமைந்து விட்டது.

---

1. Warriors in Female dress 2. Indian History 3. Rajputs 4. Mewar 5. Allauddin 6. Bubares 7. Macedonia 8. Darius 9. Alexander, son of Amyntas 10. Gygaea 11. Greece 12. Persians

3. பினீசியர்களின் எழுத்தோவியங்கள்

"பினீசியர்கள்[1] காட்மஸ்[2] என்பாருடன் வந்த மக்களின் வழிவழி வந்தவர்கள். அவர்கள் இன்று பியோஷியா[3] என்று வழங்கப்படும் இடத்துக்கு வந்தனர். அவர்கள் அவ்விடத்தில் தனக்ரா[4] எனும் ஓர் இடத்தைக் குடியிருப்பு இடமாக ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆர்கோ நாட்டு[5] மக்களால் காட்மியர்கள்[6] வெளிக் கடத்தப் பட்டவுடனே, ஜிப்ராய் குடும்பத்தினரும் பியோஷிய மக்களால் நாடு கடத்தப்பட்டனர். அதன் காரணமாக அவர்கள் ஆதன்ஸ் நகரில்[7] புகலிடம் ஏற்படுத்திக் கொண்டனர். அங்கே அவர்கள் ஆதன்ஸ் மக்களுடன் கலந்து உறவாட அனுமதி பெற்றனர்—ஏதோ சில விதி விலக்குகளைத் தவிர. காட்மஸுடன் வந்த பினீசியர்கள் அவர்களுள் ஒரு குடும்பத்தினரே ஜிப்ராய் மக்கள். அவர்கள் தாங்கள் வந்து தங்கிய பிறகு கிரேக்க நாட்டில் பல வசதி களுடன் வாழும் வகைகளைப் புகுத்தினர். அவற்றுள் மிக முக்கியமானது எழுதுவதற்கான எழுத்து வகைகள்[8]. அது வரை கிரேக்க மக்களுக்கு[9] எழுத்துகள் கிடையா. அவர் களுக்கு எழுதத தெரியாது முதலில் கிரேக்கர்கள் மற்ற பினீசியர்கள் பயன்படுத்திய எழுத்துகளையே கற்றுப் பயன் படுத்தினர். ஆனால் காலம் செல்லச் செல்ல, நாளடைவில் அவர்கள் தங்கள் மொழியை மாற்றிக் கொண்டனர். மற்றும் அதன் எழுத்தின் உருவங்களையும் மாற்றிக் கொண்டனர்.

---

1. Phoenicians 2. Cadmus 3. Boeotia 4. Tanagra 5. Argives 6. Cadmians 7. Athens 8. Writing letters 9. Greeks

அக் காலப் பொழுதில், அண்டையில் வாழ்ந்த கிரேக்கர்கள்[1] யாவரும் அயோனியர்களே[2]. அவர்களுக்குப் பினீசியர்களே[3] இந்த எழுத்துகளைக் கற்றுக் கொடுத்தனர்.

அவர்கள் அவ் எழுத்து உருவங்களையே பயன் படுத்தலாயினர்- அதைப் பினீசியர்களின் எழுது முறை[4] அல்லது எழுத்துகள் என்றே அவர்கள் கூறி வந்தனர். அவர்கள் கூறியது முற்றிலும் உண்மையே. காரணம், பினீசியர்கள் தாமே அவர்களுக்கு எழுத்துகளின் பயன்களைக் கற்றுக் கொடுத்தது. அயோனியர்கள் காகிதத்தைத்[5] "தோல்"[6] எனும் பொருள்படும் சொல்லாலேயே குறித்து வருகின்றனர்; அது மிகப் பழங்காலத்திலிருந்து வழி வழி வந்த[7] சொல்லாகும்-காகிதம் இல்லாத பொழுது, அவர்கள் வெள்ளாடு, செம்மறியாடு ஆகியவற்றின் தோல்களைக் காகிதங்களாக எழுதப் பயன் படுத்தினர் அல்லவா? இன்றும் அயல் நாட்டவர் பலரும் இத் தோலையே எழுத உதவும் பொருளாகப் பயன் படுத்தி வருகின்றனர்.

பியோஷியாவில்[8] உள்ள தீபே நகரில்[9] இருக்கின்ற இஸ்மீனியன் அப்பொலோ[10] தெய்வத்தின் கோயிலில் உள்ள கொப்பரைகளில்[11]—கடாரங்களில் — காட்மிய எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்ததை நானே பார்த்தேன். அவ் எழுத்துகள் அயோனியர்களின் எழுத்துகளுக்கு வேறுபட்டுக் காணப்படவில்லை. அங்கே மூன்று கொப்பரைகள் இருந்தன. ஒன்றன்மீது பொறிக்கப்பட்டிருந்த வாசகம்:

"டெலபோவின்[12] அழிபாட்டுப் பொருள்களைக் கொண்டு உருவாக்கியது. அம்பிட்ரியான்[13] எனக்குக் காணிக்கையாகக் கொடுத்தது." அது லேயஸ்[14] என்பாரின் காலத்திலிருந்து வருகிறது; அவர் லப்டகஸ்[15] என்பாரின் மகனார்; பாலிடோரஸ்[16] என்பாரின் மகன்; அரசர் காட்மஸ்[17] என்பாரின் கொள்ளுப் பெயரன்.

---

1. Greeks 2. Ionians 3. Phoenicians 4. Phoenicians writing method 5. Paper 6. Leather-skin 7. Tradition 8. Boeotia 9. Thebes 10. Apollo 11. Cauldrons 12. Teleboae 13. Amphitryon 14. Laius 15. Labdacus 16. Polydorus 17. Cadmus

இரண்டாவது கொப்பரையில் பின்வரும் வாசகம் காணப்படுகிறது:

''லாவோடமஸ்[1] அவர் அரசராயிருந்த பொழுது இக் கொப்பரையை அர்ப்பணித்தார்.

நல்ல வில்லாளியான அப்பொலேவுக்கு—மிக அழகான அன்பளிப்பு.''

இந்த லாவோடமஸ் காலத்தில்தான். இவர் ஈடியாக்ளிஸ்[2] என்பாரின் மகன்— காட்மியர்கள்[3] ஆர்கிவர்களால்[4] நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் என்ஷிலஸ்[5] என்பாரிடம் புகலடைந்தனர். ஆனால் ஜிபிராய் மக்கள்[6], அந்த நாட்டிலேயே தங்கிவிட்டனர். இருப்பினும் அவர்கள் பியோஷியர்களால்[7] நாடு கடத்தப்பட்டு, ஆதன்ஸ் நகரில் புகலடைந்தனர். அங்கே ஜிபிராய் மக்களுக்குத் தனிப்பட்ட முறையில் தொழுகை செய்யச் சில சிறப்பான, தனியான கோவில்கள் உள்ளன. அக் கோயிலில், ஜிபிராய் மக்கள் தவிர, மற்ற ஆதன்ஸ் மக்கள் உள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டனர். அவ்வாறான ஒரு கோயில் டெமிடர் அகையா[8] ஆகும். அதில் இரகசிய முறையில்[9] சில சடங்குகள் நிறைவேற்றப் படுகின்றன.''

விளக்கவுரை:

பினீசியர்கள்[10] : தமிழ் நாட்டிலிருந்த பனையேறிகள் கடல் கடந்து சிரியா நாட்டுக்குச் சென்று குடியேற்றம் அமைத்து, தங்களைப் பினீசியர் (பனையேறிகள் என்பதன் மரூஉ) என்று வழங்கிக் கொண்டனர். முதல் முதல் கண்ணாடி[11] செய்வதைக் கண்டுபிடித்தவர்கள். தமிழ்ச்சொற்களையும் தமிழ்ப்பண்பாடுகளையும் ஏற்று கடல் கடந்து வாழ்ந்தவர்கள். அஸ்ஸீரியக் கல்வெட்டுகளில்[12] பல தமிழ் வேர்ச்சொற்கள் காணப்படும். மற்றும் பக்கம் 35, குறிப்பு-2 பார்க்கவும்.

காட்மியர்கள்[13] : காட்மஸ்[14] என்பாரின் வழிவழி வந்த அவரின் சந்ததிகள்.

---

1. Laodamus 2. Etiocles 3. Cadmians 4. Argives 5. Encheles 6. Gephyraei 7. Boeotia 8. Demeter Achaeia 9. Secret methods 10. Phoenicians 11. Glass 12. Assyrian Inscriptions 13. Cadmians 14. Cadmus

காட்மஸ்: இவர் எகினார்[1] என்ற தந்தைக்கும், டெலிபாஸா[2] என்ற தாய்க்கும் பிறந்தவர்; பினீசியாவின்[3] அரசர். காட்மஸ் திரேசியா நாட்டில்[4] குடியேற்றம் கண்டார். பியோஷியாவில்[5] கோவில் ஒன்று கட்டினார். தனக்ராவில்[6] குடியேற்றம் கண்டார். காட்மஸ், பினீசியாவிலிருந்து கிரேக்க நாட்டில்[7] 16 எழுத்துகளைப் புகுத்தியதாக வரலாறு கூறுகிறது.

கிரேக்கர்களுக்கு எழுதக் கற்றுக் கொடுத்தல்: கிரேக்கர் களுக்கு 16 எழுத்துகளை எழுதக் கற்றுக் கொடுத்தவர் காட்மஸ். அவருடைய சந்ததியார்களே பினீசியர்கள்[8] என்று கிரேக்க வரலாறு கூறுகிறது. கிரேக்க மொழியில் ஆல்பா (α) என்பது அ-தமிழின் முதல் எழுத்து; பதினாறாவது எழுத்து நு (υ). தமிழின் இறுதி எழுத்து (ன). ஆக, பினீசியர்கள் தமிழ் வழக்கத் தைக் கிரேக்கத்தில் புகுத்தினர்.

தோல்[9] : முற்காலத்தில் தோல் பொருளில் எழுத்து களைப் பொறித்தனர். சில பொழுது தோல் நாணயங்களே[10] புழக்கத்திலிருந்தன. காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன்னர் இத் தோலே — வெள்ளாடு, செம்மறி ஆடு ஆகியவற்றின் தோல்களே — எழுதப் பயன்படுத்தப்பட்டது.

மற்றொன்றையும் இங்குக் கூறலாம். இந்தியாவில் காகிதம் வருமுன் பனை ஓலைகளிலும் தென்னை ஓலைகளிலுமே எழுதி வந்தனர். அவை ஓலைச்சுவடிகள் எனப்படும், அப்பனை மரம் முன்னர் தளா மரம் என்று வழங்கப்பட்டது. தாளிக பஸ்மம் என்று மருந்துக்கொரு பெயருண்டு. ஆக, எழுதும் பனை யோலையே முன்னர் தளா என்று வழங்கப்பட, காகிதம் கண்டு பிடித்துப் பழக்கத்திற்கு வந்த பிறகும், அதே சொல்லை — தளா என்பதைச் சிறிது மாற்றி தாள் என்று இன்றும் பலரால் வழங்கப் பட்டுவருவது கண்கூடு. இத் தாள் எனும் சொல் திருநெல்வேலி, இராமநாதபுரம் பகுதிகளில் இன்றும் காகிதத்துக்குப் பதிலாக வழங்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

பியோஷியா : கிரேக்க நாட்டில் ஒரு மாவட்டம். பியோஷிய நாட்டினர் மந்தபுத்தியுள்ளவர் என்ற பழமொழி—பழிமொழி— உண்டு. டிரோஜன் யுத்தம்[11] நடந்த 60 ஆண்டுகளுக்குப் பிறகு

---

1. Agenor 2. Telephasa 3. Phoenicia 4. Thracia 5. Boeotia 6. Tanagra 7. Greece 8. Phoenicians 9. Leather 10. Leather coins 11. Trojan War

அவர்கள் திசாலியர்களால்[1] விரட்டியடிக்கப் பட்டனர். அதன் பிறகு பியோஷியா என வழங்கப்படும் நாட்டில் குடியேறினர். அதன் தலை நகரம் தீபே.[2]. பியோஷியா 14 பகுதிகளைக் கொண்டிருந்தது.

அப்பொலோ தெய்வம்:[3] பியோஷியா[4]வின் தலைநகரமான[5] தீபேயில் உள்ள கோயிலில் உள்ள தெய்வம் அப்பொலோ எனப்படும் அக்கோயிலில் உள்ள தெய்வத்துக்காக அரசர்களால் கடாரங்கள் தரப்பட்டன. அக்கடாரங்களில் காட்மஸ்[6] புகுத்திய புதிய எழுத்துகளே[7] பொறிக்கப்பட்டிருந்தன.

கடாரங்கள்[8]: அரசர்களால் அப்பொலோ தெய்வத்துக்குப் பூசைக்காக அளிக்கப்பட்ட வாயகன்ற பாத்திரங்கள். இவற்றில் காட்மஸ் புகுத்திய புது எழுத்துகளே காணப்பட்டன.

லாவோடமஸ்[9]: இவர் ஈடியாக்ளிஸ்[10] என்பாரின் மகன். இவர் காலத்தில்தான் காட்மியர்கள் நாடு கடத்தப்பட்டனர். காட்மியர் வேறொரு நாட்டில் புகலடைந்தனர்.

என்ஷிலஸ்:[11] காட்மியர்கள் என்ஷிலஸ் எனப்படும் நாட்டில் புகலடைந்தனர்.

ஜிபிராய் குடும்பத்தினரும்[12] நாடு கடத்தப்பட்டனர்—காட்மியர்கள் போலவே. அங்கிருந்து அவர்கள் ஆதன்ஸ் நகரம்[13] சென்று புகலடைந்தனர். அங்குதான் கிரேக்கர்களுக்குப் பினீசிய எழுத்துகளை[14] அவர்கள் கற்றுக் கொடுத்தனர். அது வரை கிரேக்கர்களுக்கு எழுத்துகள் இல்லை. அதன் பிறகுதான் பினீசிய எழுத்துகள் கிரேக்கர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் பட்டன.

டெமிடர் அகையா:[15] இது ஜிப்ராய் மக்கள் கட்டிய கோயில். இங்கே இரகசிய முறையில் வழிபாடுகள்[16] நடத்தப்பட்டன. அதில் ஜிப்ராய் மக்கள் தவிர, வேறு எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. டெமிடர் தேவதை வேளாண்மையையும் விளைச்சலையும் பாதுகாக்கும் தெய்வம் ஆகும். இவளை ரோமானியர்கள்[17] ஸெரிஸ்[18] என்று வழங்கினர். இவள் ஜியுஸ்[19] கடவுளின் சகோதரியாகக் கருதப்படுகிறாள்.

---

1. Thessalians 2. Thebae 3. Apollo 4. Boeotia 5. Capital 6. Cadmus 7. New Alphabets 8. Cauldrons 9. Laodamus 10. Etiocles 11. Encheles 12. Gephyraei Family 13. Athens 14. Phoenician Alphabets 15. Demeter Achaeia 16. Secret Methods of worship 17. Romans 18. Ceres 19. Zeus

4. சார்டிஸ் நகரம் தீக்கிரையாதல்

''ஆதன்ஸ் நகர இராணுவ வீரர்களுக்கு[1] முன்னரே அரிஸ்டகோரஸ்[2] கப்பலேறிச் சென்று விட்டார். அவர் கடைப்பிடித்த திட்டத்தால் அயோனியர்களுக்கு[3] எப்பயனும் விளைய வில்லை. அவருடைய ஒரே நோக்கம் டாரியஸ் அரசரின்[4] மனத்தைக் கலங்கச் செய்ய வேண்டும் என்பதே. மெகபஸஸ்[5] என்பவரால் ஸ்டிரிமானில்[6] உள்ள பயோனி யர்கள்[7] சிறைபிடிக்கப்பட்டனர். அப் பயோனியர்களுக்கு அரிஸ்டகோரஸ் ஒரு சுற்றறிக்கை விடுத்தார். அவர்களை உடன் வெளியேறுமாறு செய்தி ஒன்றை ஓர் ஆள்மூலம் அனுப்பினார். "பயோனிய மக்களே! மைலீடஸ்[8] அதிபரான அரிஸ்டகோரஸ் இச் செய்தியை அனுப்பியுள்ளார். நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ள வேண்டின் உடன் இந்த இடத்தை விட்டு நீங்குக. எல்லா அயோனிய மக்களும்[9] நகரங்களும் பாரசீக அரசர்க்கு[10] எதிராகக் கலகஞ் செய்வதில் ஈடுபட்டுள்ளன. உங்கள் நாடாகிய பயோனியாவுக்குப்[11] போக இதுதான் சிறந்த வாய்ப்பு. கடற்கரை வரை சென்று விடுங்கள். பிறகு உங்களைக் காப்பாற்றுவது எங்கள் பொறுப்பு,'' என்று அவ்வாசகம் உரக்கப் படிக்கப்பட்டது. பயோனியர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, உடன் தப்பி யோடும் அடிமைகள் போல ஓட்டமெடுத்தனர்—ஆம், கடற் கரையை நோக்கி. கடற் கரையைக் கடந்து சியாஸ்[12] நகரத்துக்குச் சென்றனர். அவர்கள் அங்கே இருந்த பொழுது,

1. Athenian soldiers 2. Aristagoras 3. Ionians 4. Darius 5. Megabazus 6. Stryman 7. Paeonians 8. Miletus 9. Ionian people and cities 10. Persian King 11. Paeonia 12. Chios

பாரசீகக் குதிரைப் படை[1]- அவர்களை நோக்கிப் புறப்பட்ட அப்படை- கடற்கரையை அடைந்தது. இருப்பினும், அதற்குள் அந்தப் பயோனியர்கள் அவர்களின் பிடிக்கு அகப்படாமல் தப்பிச் சென்று விட்டனர். அவர்களை உடன் திரும்புமாறு பாரசீகப் படை ஒரு தூதுவரை அனுப்பிற்று. ஆனால், பயோனியர்கள் திரும்ப மறுத்து விட்டனர். அங்கிருந்து சியாஸ் மக்களால் லெஸ்பேவுக்கு[2] அழைத்துச் செல்லப்பட்டு, இறுதியில் தங்கள் நாட்டை அடையலாயினர்.

ஆதன்ஸ் நகரத்தின்[3] இருபது பட்டாளங்கள் மைலீடஸ் நாட்டில்[4] வந்து கலந்து கொண்டன. அவர்களுடன் எரிட்ரியா நாட்டின்[5] ஐந்து யுத்தக் கப்பல்களும் சேர்ந்து கொண்டன. அவர்கள் ஆதன்ஸ் நகரப் படைகளுக்கு உதவியாக வரவில்லை. ஆனால், மைலீடஸ் நாட்டிற்கு மரியாதை செய்யும் நோக்கத்துடன்—அவர்கள் முன்னர் செய்த உதவிக்கு நன்றி செலுத்த — அணிசெய்து வந்தனர். அரிஸ்டகோரஸின்[6] மற்ற படைகளும் வந்ததும், யாவரும் சார்டிஸ் நகரைத்[7] தாக்க முன்னேறினர்.

அவர்கள் எபீசஸ்[8] துறைமுகத்தை அடைந்தனர். அவர்கள் எபிசியர் நாட்டில் கோரிஸஸ்[9] எனும் இடத்தில் விடப்பட்டனர். காலாட் படை நாட்டினுள் சென்றது—எபீசிய நாட்டு வழிகாட்டிகளுடன்.

அவர்கள் டுமோலஸ்[10] குன்றைக் கடநது சார்டிஸ் நகரத்தை அடைந்தனர். அது அர்டபெர்னிஸ்[11] என்பவரால் பாதுகாக்கப் பட்டாலும், சார்டிஸ் விரைவிலேயே பிடிபட்டு விட்டது. சார்டிஸ் நகரில் வீடுகள் யாவும் நாணற் கொடியால் குடிசைகள் போலக் கட்டப்பட்டிருந்தன. கோடியில் ஒரு வீட்டுக்கு நெருப்பு வைத்தவுடனே,அத் தீ வேகமாகப் பரவி எல்லாக் குடிசைகளையும் அழித்து விட்டன. செங்கல் கட்டடங்களும் கூட குடிசைகளுடன் அழிந்து போயின. அங்கு வாழ்ந்திருந்த லிடிய மக்களும்[12] பாரசீகர்களும்[13]

---

1. Persian cavalry 2. Lesbo 3. Athens 4. Miletus 5. Eritrea 6. Aristagoras 7. Sardis 8. Ephesus 9. Coressus 10. Tmolus 11, Artabernis 12. Lydians 13. Persians

சந்தை கூடுமிடத்தில் கூடி நின்றனர். அச் சந்தை பாக்டோலஸ் நதியின்[1] இருகரை மருங்கிலும் கூடிற்று. சார்டிஸ் நகரத்தில் ஏற்பட்ட குழப்பத்தால், பாரசீகரின் கோயில் சைபிபி[2] நாசமாக்கப்பட்டு விட்டது. இதைப் பாரசீகர் ஒரு காரணமாகக் கொண்டு, பின்னர் கிரேக்கக் கோயில்களைத்[3] தாக்கி அழித்தனர்.

பாரசீகர்கள் யாவரும் எபீசஸ் எனும் இடத்துக்குச் சென்றனர். அங்கே அயோனியர்களுக்கும்[4] பாரசீகர்களுக்கும் ஏற்பட்ட போரில், அயோனியர்கள் சிதறடிக்கப் பட்டனர். ஆங்காங்கு அவர்கள் புகலிடம் அடைந்தனர். இப்போரில் இறந்த முக்கிய மனிதர் யூல்சிதஸ்[5]. இவர் எரிட்ரியா[6] சேனையின் தளபதி. இவர் ஒரு விளையாட்டு வீரர்[7]. இவர் பல பாடல்களில்— சிம்மோனைடுகளின் பாடல்களில்[8]—விதந்தோதப்பட்டுள்ளார்."

விளக்கவுரை:

அரிஸ்டகோரஸ்[9]; இவர் மைலீடஸ்[10] நாட்டைச் சார்ந்தவர். ஹிஸ்டியஸின்[11] மைத்துனர். சார்டிஸ் நகரைத்[12] தீக்கிரையாக் கியவர்.

மெகபஸஸ்[13]: இவர் சிறந்த வீரர். கிரேக்க நாட்டை[14] வெல்ல தளபதியாக பதவி உயர்த்தப்பட்டார். கிரேக்க நாட்டை வென்று, பாரசீக அரசருக்[15]குக் கப்பம் கட்டுமாறு செய்தார்.

சியாஸ்[16]: சியான் மக்கள் இருந்த நாடு. இவர்கள் பயோனியருக்குப்[17] பரிவு காட்டினர். அவர்களை நன்றாகப் பாதுகாத்து அவர்கள் சொந்த நாடுவரை கொண்டு விட்டனர். லெஸ்போவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து தம் நாடடைந்தனர்:

மைலீடஸ் நாடு: அரிஸ்டகோரஸ் இருந்த நாடு.

---

1. River Pactolus 2. Cybebe 3. Greek Temples 4. Ionians 5. Eualcides 6. Eritrean army 7. Sportsman 8 Simmonides 9 Aristagoras 10. Miletus 11. Histiaeus 12. Sardis 13. Megabazus 14. Greece 15. Persian King 16. Chios 17. Paeonians

5. அரிஸ்டகோரஸ் இறத்தல்

"அரிஸ்டகோரஸ்[1] ஊக்கம் குன்றிய மனிதர். அயோனியர்களைப் பாரசீகர்களுக்கெதிராகக் கலகம் செய்ததற்குத் தாமே தான் காரணம் என்பதை நன்கு உணர்ந்தார். டாரியஸ்[2] அரசரிடமிருந்து தப்ப எந்த வழியுமில்லை என்று அறிந்த அரிஸ்டகோரஸ், வெளியே தப்பிச் செல்ல வழி தேடினார். மைலீடஸிலிருந்து[3] வெளியேற்றப்பட்டதால், வேறு இடம் குறிப்பிடப்பட்டது. அது தான் மிர்சினஸ்[4]. இதை ஹிஸ்டியஸ், டாரியஸ்அரசரால் அவருக்குக்கொடுக்கப் பட்ட பொழுது, தக்க போர் வீரர்களின் துணையுடன் அக் கோட்டையில் தங்கினார். ஆனால் ஹெகடியஸ்[5] வரலாற் றாசிரியர் வேறொன்றை எடுத்துரைக்கின்றார். லிரோஸ்[6] தீவில் ஒரு கோட்டை கட்டிக்கொண்டு, அரிஸ்டகோரஸ் அங்கேயே தங்கினால், அது தம் சொந்த கோட்டையாக இருப்பதால், எப்பொழுது தேவையோ, அப்பொழுது மைலீடஸ் நகரைக் காப்பாற்ற வெளிவரலாம் என்பதே அக் கருத்து. ஆனால், அரிஸ்டகோரஸ் அக்கருத்தை ஏற்க வில்லை. தாம் முன்னர் யோசித்திருந்தபடியே, மிர்சி னஸுக்குச் செல்வதே சிறந்தது என முடிவு செய்தார். மைலீடஸ் பொறுப்பைப் பைதகோரஸ்[7] என்பாரிடம் ஒப் படைத்துவிட்டு, திரேசியா நாட்டுக்குப் பயணமானார். அங்கே மிர்சினஸைக் கைப்பற்றினார். ஆனால் திரேசிய மக்கள் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்துவோம் எனப்

---

1. Aristagoras 2. Darius 3. Miletus 4. Myrcinus 5. Hecateus 6. Leros 7. Pythagoras

பிரசாங்கு செய்து, அரிஸ்டகோரஸையும், அவருடன் சென்ற ஆள்களையும் கொன்று போட்டனர். அத்துடன் அரிஸ்டகோரஸின் வாழ்க்கையும் முடிவடைந்து விட்டது."

விளக்கவுரை:

அயோனியர்[1]: அயோனியா எனும் பகுதியைச் சார்ந்தவர். இவர்களே தமிழில் யவனர் என்று குறிப்பிடப்பட்டனர். பின்னர் அயல் நாட்டார் யாவரும் யவனர் என்றே குறிப்பிட லாயினர். மற்றும் பக்கம் 206, குறிப்பு-1 பார்க்கவும்.

அரிஸ்டகோரஸ்[2]: இவர் மைலீடஸ்[3] நாட்டினர். ஹிஸ்டி யஸின்[4] மைத்துனர்; சார்டிஸ்[5] நகரத்தைக் கி.மு. 499-ல் தீக் கிரையாக்கினார். அவர் ஈடோனியர்களால்[6], கி.மு. 497-ல் கொலை செய்யப்பட்டார்.

மிர்சினஸ்[7]: அரிஸ்டகோரஸ் தங்கியிருக்கக் குறிப்பிடப் பட்ட தாழ்வான நிலப்பரப்பு. இது ஹிஸ்டியஸுக்கு டாரியஸ் பேரரசரால் அளிக்கப்பட்டது.

ஹிஸ்டியஸ்: இவர் அரிஸ்டகோரஸின் மைத்துனர். கிரேக்கநாடு பிடிபட, டாரியஸுக்குப் படகு பாலத்தைக் காத்து உதவியர்.

ஹெகடியஸ்[8]: இவர் வரலாற்றாசிரியர்[9]. மைலீடஸ் இடத்தைச் சார்ந்தவர். வாழ்ந்த காலம் கி. மு. 530-450 மற்றும், பக்கம் 227-குறிப்பு-2 பார்க்கவும்.

லீரோஸ் தீவு[10]: இதுவும் மிர்சினஸ் அருகில் இருந்த இடம். இதில் அரிஸ்டகோரஸ் தங்கலாம் என்று ஹெகடியஸ் எடுத்துக் கூறியும், அவர் அதை ஏற்காது மிர்சினஸ் இடத்தையே தேர்ந் தெடுத்தார்.

பைதகோரஸ்[11]: இவர் சிறந்த தத்துவ ஞானியார். சாமோஸ் தீவைச்[12] சார்ந்தவர். கி.மு. 540-510 வரை வாழ்ந்தவர். அதாவது

---

1. Ionians 2. Aristagoras 3. Myletus 4. Histaeus 5 Sardis 6. Edonians 7. Myrcinus 8. Hecateus 9. Historian 10. Leros Island 11. Pythagoras 12. Samos Island

30 ஆண்டுகளே வாழ்ந்தார். கணக்கியலில் வல்லுநர். இவருடைய பொறுப்பில் மைலீடஸ் குறுகிய காலம் தானிருந்தது. அவரது சுதந்தர மனப்பான்மைக்கு அரசியல் ஒத்து வரவில்லை.

தமிழ் நாட்டுக் கணிதமேதை திரு. இராமானுஜம்[1] கூட தமது 33 ஆம் வயதில் காலமானார். இருவருமே ஒப்பற்ற கணித மேதைகள்.

திரேசிய மக்கள்[2]: திரேசியா நாட்டைச்[3] சார்ந்தவர். திரேசிய மக்களுள் ஒரு பிரிவினரான ஈடோனியரால்[4] தான் அரிஸ்டகோரஸ் கொலை செய்யப்பட்டார்.

திரேசியா என்ற நாடு கருங்கடலின்[5] மேற்குப் பகுதியில் இருந்தது. அம்மக்கள் கொடூரத் தன்மையும் அதே பொழுது வீரமும் வாய்ந்தவர் ஆவர். மற்றும் பக்கம் 204, குறிப்பு-5 பார்க்கவும்.

---

1. Ramanujam 2. Thracians 3. Thracia 4. Edonians 5. Black sea

புத்தகம் - 6

1. ஹிஸ்டியஸின் வாழ்வும் மரணமும்

"அரிஸ்டகோரஸ்[1] அயோனியரின்[2] கலகத்துக்குக் காரணமானவர். அவர் இறந்த பிறகு மைலீடஸின்[3] அரசரான ஹிஸ்டியஸ்[4] சார்டிஸ்[5] நகரத்துக்குச் சென்றார். சூஸா நகரத்தை[6] விட்டு வெளியேறி டாரியஸ் அரசரிடமிருந்து[7] அனுமதி பெற்று விட்டார். அவர் சார்டிஸ் நகரத்தை அடைந்ததும், அர்டபெர்னிஸ்[8]- சார்டிஸ் நகரத்தின் ஆளுநர்- ஹிஸ்டியஸை நோக்கி, "அயோனியர்களின் கலகத்துக்குக் காரணம் என்ன?" என்று வினவினார். ஹிஸ்டியஸ் தாம் ஏதும் அறியாதவர் போன்று பதிலளித்தார். இருப்பினும் அர்டபெர்னிஸுக்குத் தெரியும் - ஹிஸ்டியஸ் பொய் பகர்கிறார் என்று. "அது எவ்வாறு ஏற்பட்டது என்பதை இதோ நான் கூறுகிறேன், கேட்பீராக!" என்று கூறிவிட்டுத் தொடர்ந்து விவரித்தார்: 'நீங்கள் செருப்பைத் தைத்துத் தயாரித்தீர்; அரிஸ்டகோரஸ் அதை காலில் அணிந்து கொண்டார்." இப் பதில் அர்டபெர்னிசுக்கு உண்மை தெரிந்து விட்டது என்பதை எடுத்துக்காட்டியதால், ஹிஸ்டியஸ் அந்த இரவே தப்பித்துக் கொள்ளக் கடற்கரைக்குச் சென்றார். இதனால், "சார்டினியாவை[9]- உலகத்திலேயே மிகப் பெரிய தீவினை- அடக்கி டாரியஸ் அரசருக்குக் கப்பம் கட்டுமாறு செய்வேன்," என்று ஹிஸ்டியஸ் டாரியஸ் அரசருக்குச் செய்து கொடுத்த சபதம் காற்றோடு போயாயிற்று- நிறைவேற்றப்படாமலே. அவருடைய உண்மையான

---

1. Aristagoras 2. Ionians 3. Miletus 4. Histiaeus 5. Sardis 6. Susa 7. King Darius 8. Artaphernes 9. Sardinia

நோக்கம் அயோனியர்கள் அந்தப் பாரசீக அரசருக்கு[1] எதிராகப் புரியும் போரில் தாம் தலைமை தாங்க வேண்டும் என்பதே.

சியோஸைக்[2] கடந்ததும், ஹிஸ்டியஸ் அந்தத் தீவின் மக்களால் சிறைப்படுத்தப் பட்டார்—காரணம், அவர் டாரியஸின் ஆளாக எண்ணப்பட்டு, தங்களை அடிமைப் படுத்துவதற்காக வந்துள்ளார் என்று கருதினர். அது அல்ல காரணம் என்று திட்டவட்டமாகத் தெரிந்தவுடன், அவர்கள் அவரை விட்டுவிட்டனர். இருப்பினும் ஒரு கேள்வி கேட்டனர்: "அரிஸ்டகோரஸைக் கலகம் செய்ய ஏன் தூண்டிவிட்டீர்? அதன் காரணமாக அயோனியர்களுக்குச் சொல்லொணாத் துயர் ஏற்பட்டு விட்டது." அதற்கு அவர் உண்மையை மறைத்து, "டாரியஸ் அரசர் பினீசியர்களை[3] அயோனியா விலும்[4], அயோனியர்களைப்[5] பினீசியாவிலும்[6] மாற்றிக் குடியேற்றம் செய்யப் போகிறார்," என்று சமயோசிதமாகப் பொய் ஒன்று சொன்னார். அச்செய்தியே அயோனியர் களுக்குப் போதுமான அளவில் மனப் பீதி கொள்ளச் செய்து விட்டது.

சார்டிஸ் நகரில்[7] முன்னரே ஹிஸ்டியஸுடன்[8] கலகத்தைப் பற்றிக் கலந்தாலோசித்த பாரசீகர்கள்[9] இருந் தனர். இந்தப் பெருமக்களுக்கு ஹிஸ்டியஸ் சில கடிதங் களை, அடார்னியஸைச்[10] சார்ந்த ஹெர்மிப்பஸ்[11] என்பாரிடம் கொடுத்தனுப்பினார். ஆனால், அக் கடிதங்களை எடுத்துச் சென்ற ஆள், அதில் குறிப்பிடப்பட்ட நபர்களுக்குத் தாராது அர்டபெர்னிஸிடம்[12] கொடுத்து விட்டான். அர்டபெர்னிஸ் அக்கடிதத்தில் உள்ளதைப் படித்து விட்டு, என்ன நடக்கப் போகிறது என்பதை உணர்ந்து கொண்டு, "இக் கடிதங்கள் எனக்குரியனவல்ல; அவற்றிற்குரியவர்களிடம் சேர்த்து விடு. இருப்பினும், அவர்கள் என்ன பதில் கூறுகிறார்கள் என்பதை வந்து என்னிடம் கூறிவிட்டுச் செல்," என்று அந்த ஆளுக்குக் கட்டளை பிறப்பித்தார். இந்த முறையில்

1. Persian King 2. Chios 3. Phoenicians 4. Ionia 5. Ionians 6. Phoenicia 7. Sardis 8. Histiaeus 9. Persians 10. Atarneus 11. Hermippus 12. Artaphernes

துரோகிகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டனர்: பாரசீகர்கள் பலர் தூக்கிலிடப் பட்டனர்; இதன் காரணமாகச் சார்டிஸ் நகரம் கொந்தளிப்பில் ஆழ்ந்தது.

இந்த ஏமாற்றத்துக்குப் பிறகு, ஹிஸ்டியஸ் லெஸ்போ[1] மாவட்டத்திலுள்ள மைடிலீன்[2] நகரத்துக்குச் சென்று விட்டார். அங்கு அவர் தம் திட்டத்தில் வெற்றி பெற்றார். லெஸ்பிய மக்கள்[3] அவருக்கு முழு ஆதரவு அளித்தனர். அவருடன் எட்டுப் பெரிய கப்பல்களுடன் பைசாண்டியத் துக்கு[4] பயணமாயினர். அவ்விடத்திலிருந்து கொண்டு, கருங்கடலிலிருந்து[5] வெளியே போகும் கப்பல்களைப் பிடித்து நிறுத்தினர்.

ஹிஸ்டியஸ் பின்னர் அயோனியர்[6], இயோலியர்[7] படை களுடன் தாஸோஸ் நாட்டின்மீது[8] பாய்ந்தார். பாரசீக தளபதி ஹர்பகஸ்[9] அண்டை நாட்டிலிருந்து அங்குத் திடீரென வந்து, ஹிஸ்டியஸின் சேனைகளைத் தாக்கினார். ஹிஸ்டியஸ் அகப்பட்டுக் கொண்டார். அவரை ஒரு பாரசீகர் ஓடும் போது பிடித்துக் கொண்டார். அவருடைய ஈட்டி அவர் உடலில் பாயும் தருணம், அவர், "நான் தான் ஹிஸ்டியஸ், மைலீடஸ் நாட்டவன்," என்று கூக்குரலிட்டார். அவர் டாரியஸ் அரசர் முன்னர் அழைத்துச் செல்லப்பட்டி ருக்க வேண்டும்—உயிருடனேயே. ஆனால் ஹிஸ்டியஸ் சார்டிஸ் நகரத்தை[10] அடைந்ததும், அவருடைய தலை வெட்டப்பட்டது. தலை ஊறுகாயிடப்பட்டு, டாரியஸ் அரசருக்கு[11] அனுப்பப்பட்டது. அர்டபெரினிஸும்[12], ஹர்பகஸும் சேர்ந்து செய்த கொலைச்செயலை அறிந்தார். இருப்பினும் அவருடைய் தலையை நன்றாகக் கழுவி அவர் உடலுடன் எல்லா மரியாதைகளுடன் புதைக்கப்பட்டது—பாரசீக நாட்டிற்கும் அரசர்க்கும் மிக நல்லனவற்றைச் செய்து வாழ்ந்த ஒருவருக்கு எத்தகைய உயர்ந்த மரியாதை கொடுக்கப் பட வேண்டுமோ, அத்துணை உயர்ந்த மரியா தையுடன்- அவ் வெட்டப்பட்ட ஹிஸ்டியஸின்[13] தலையும்

---

1. Lesbo 2. Mytilene 3. Lesbians 4. Byzantium 5. Black sea 6. Ionians 7. Aeolians 8. Thasos 9. Harpagus 10. Sardis 11. Darius 12. Artaphernes 13. Histiaeus

உடலும் புதைக்கப்பட்டன. இத்துடன் ஹிஸ்டியஸின் வரலாறு முடிவடைகிறது."

விளக்கவுரை :

அரிஸ்டகோரஸ்[1] : இவர் மைலீடஸ்[2] நாட்டினர். ஹிஸ்டியஸின் மைத்துனர்[3]. திரேசியா நாட்டில்[4] ஈடோனியர்களால்[5] கி. மு. 497-ல் கொல்லப்பட்டார்.

ஹிஸ்டியஸ் : இவர் மைலீடஸ் நாட்டினர். பாரசீகருக்கு உதவியாயிருந்து பாலத்தைக்காத்துக் கிரேக்க நாட்டை வெற்றி கொள்வதற்குக் காரணமாயிருந்தவர். இறுதியில் இவர் கொல்லப்பட்டு, இவருடைய தலை ஊறுகாயிடப்பட்டது. அதை டாரியஸ் அரசர் அறிந்து, தலையைக் கழுவி, உயர்ந்த மரியாதைகளுடன் அவர் உடலைப் புதைத்தார்.

சூஸா நகரம்[6] : இது ஆசியா மைனரின்[7] முக்கியமான நகரம். பாரசீக அரசர் டாரியஸின் குளிர்கால உறைவிடம். இதன் இன்றைய பெயர் சுஸ்டான்[8].

சார்டிஸ்[9] : இது ஆசியாமைனரில் முக்கியமானதும், புகழ் வாய்ந்த நகரமும் ஆகும். லிடியன் அரசின்[10] தலைநகரம். இது லிடியாவின் சத்ராபியாக[11] விளங்கிற்று. அர்டபெர்னிஸ் இதன் ஆளுநராக[12] இருந்தார்.

சார்டீனியா[13] : இது மத்திய தரைக்கடலில் விளங்கிய ஒரு பெரிய தீவு. இதில் பினீசியர்கள்,[14] கார்த்தேஜினியர்கள்[15], திரேனியர்[16]கள் வாழ்ந்து வந்தனர். இத்தீவு கி.மு. 500-ல் கிரேக்கர்களுக்குத் தெரிந்திருந்த காரணத்தால்தான், ஹிஸ்டியஸ் அத்தீவை டாரியஸ் அரசருக்குக் கப்பம் கட்டுமாறு செய்வதாக வாக்களித்தார். இத்தீவு கி.மு. 238-ல் ரோமானியப் பேரரசில்[17] சேர்க்கப்பட்டு விட்டது.

சியாஸ்[18]: இது ஈஜியன் கடலிலே[19] உள்ள பெருந்தீவுகளுள் ஒன்றாகும். அயோனியக் கடற்கரையில் இருந்தது. கி. மு. 494-ல்

---

1. Aristagoras 2. Miletus 3. Brother-in-law of Histiaeus 4. Thrace 5. Edonians 6. Susa 7. Asia Minor 8. Sustan 9. Sardis 10. Lydian Monarchy 11. Satrapy 12. Governor 13. Sardinia 14. Phoenicians 15. Carthagenians 16. Tyrrhenians 17. Roman Empire 18. Chios 19. Aegian Sea

பாரசீகர்களால் அயோனியா கிரேக்கர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டது. இங்கு ஹோமர் மகாகவி[1] (கி.மு. 850 இருந்ததாகக் கூறப்படுகிறது.

அயோனியா[2]: ஆசியாவின்[3] மேற்குப் பகுதி. தமிழில் யவனர் என்று வழங்கப்பட்டனர். மற்றும் பக்கம் 206, குறிப்பு-1 பார்க்கவும்.

மைடிலீன்[4]: இது லெஸ்போ[5] மாவட்டத்தின் தலைநகரம். இங்கு ஹிஸ்டியஸ்[6] சென்று தமக்கு ஆதரவைத் தேடிக் கொண்டார்.

பினீசியர்கள்[7] : இவர்கள் தமிழ் நாட்டிலிருந்து குடியேறிய பனையேறிகள்—சிரியாவில்[8] குடியேற்றம் அமைத்துக் கொண் டனர். மற்றும் பக்கம் 35 குறிப்பு-2 பார்க்கவும்.

சிசிலித் தீவு[9] : இது மத்திய தரைக்கடலில்[10] உள்ள மிகப் பெருந்தீவுகளுள் ஒன்றாகும். இங்கு விளைந்த கோதுமையே ரோம் நகர மக்கள் முழுமைக்கும் போதுமானதாயிருந்தது. அத்தீவின் தெய்வம் டெமீடர்.[11] அங்கே கிரேக்கர்கள் கி.மு. 579-ல் பல நகரங்களை நிர்மாணித்தனர். இறுதியில் கி.பி. 828-ல் சாரசன் மக்களால் வெல்லப்பட்டு, அதன் புகழ் அத்துடன் மறைந்துவிட்டது.

ஹர்பகஸ்[12] : இவர் பாரசீகத் தளபதிகளுள் ஒருவர். ஹிஸ்டியஸைத் தாக்கிச் சிறைபிடித்தார். அவர் தலையை ஊறுகாயிட்டு டாரியடஸிம் கொடுத்தார். மற்றும், பக்கம் 95 பார்க்கவும்.

---

1. Homer 2. Ionia 3. Asia 4. Mytilene 5. Lesbo 6. Histiaeus 7. Phonecians 8. Syria 9. Sicily 10. Mediterranean Sea 11. Demeter 12. Harpagus

2. மில்டியாடிஸ்

"(i) சைப்சிலஸின் மகன் மில்டியாடிஸ் [1]:

கெர்ஸனீசியர்களின்[2] நகரங்கள் யாவும் — கார்டியா[3] தவிர — பினீசியர்களால்[4] கைப்பற்றப்பட்டன.

ஆதன்ஸ்[5] நகரின் முழு அதிகாரமும் இப்பொழுது பிஸிஸ்டிராடஸ்[6] கையில் இருந்தது. ஆயினும் முக்கியத்துவம் வாய்ந்த பதவி ஒன்று சைப்சிலஸின் மகனான மில்டியாடிஸினால் அனுபவிக்கப்பட்டு வந்தது. அவர் விளையாட்டிற்குச் செல்ல நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில்தான்[7] போவார். மில்டியாடிஸ் ஒருநாள் தம் மாளிகையின் மேல்மாடத்தில் உட்கார்ந்திருந்தார். கீழே டோலோன்ஸி மக்கள்[8] போய்க் கொண்டிருந்ததைக் கண்ணுற்று, அவர்களைத் தம்மிடம் வந்து போகுமாறு பணித்தார். அவர்கள் அயல் நாட்டினர் போன்று உடையணிந்தும், கைகளில் ஈட்டியைத் தாங்கியும் காட்சியளித்தனர். அவர்களும் மில்டியாடிஸின் வரவேற்பை ஏற்று அவரிருந்த இடத்திற்கு வந்தனர். அவர்கள் அவர் வீட்டிலிருந்தபொழுது, அவருக்கு அசரீரி வாக்கின்[9] பொருளை எடுத்துரைத்தனர். அது கடவுளால் அருளப்பட்ட அசரீரி வாக்காகும். அவரும் அவர்கள் கூறியவாறே செய்ய ஒப்புக்கொண்டார் — காரணம் அவர் பிஸிஸ்டிராடஸின் ஆட்சியைப் பிடிக்காது வெறுத்தார். உடன் மில்டியாடிஸ் டெல்பி கோயிலுக்குச்[10] செல்வதில் காலத்தை

---

1. Miltiades, son of Cypselus 2. Chersonese 3. Cardia 4. Phonecians 5. Athens 6. Pisistratus 7. Chariot drawn by four horses 8. Dolonci 9. Oracle 10. Delphi

வீணாக்கவில்லை. அக்கோயில் உள்ள தெய்வத்தினிடம் தமக்கு டோலோன்ஸி மக்கள் கூறியது சரிதானா, அதைப் பின்பற்றலாமா என்று கேட்டார். அங்கிருந்த குருமார்கள் "பின்பற்றலாம்" என்றே பதிலிறுத்தனர். உடன் யாவும் முடிவு செய்யப்பட்டன. சைப்சிலஸின் மகனான மில்டியாடிஸ் — முன்னர் ஒலிம்பியாவில்[1] நான்கு குதிரைகள் பூட்டிய தேர் ஓட்டத்தில் வென்றவர்[2] — ஆதன்ஸ் நகரில் உள்ள யாவரையும் — அந்நிகழ்ச்சியில் பங்கு கொள்ள எண்ணம் கொண்ட யாவரையும் — ஒன்று கூட்டினார்.



நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்—நாணயம்.
ஒலிம்பியப் போட்டியில் மில்டியாடிஸ்
வெற்றி பெறுதல்.

அவ் அசரீரிவாக்கைக் கேட்டு, அத்தெய்வம் அனுமதி யளித்தவுடன், மில்டியாடிஸ்[3] டோலோன்ஸி[4] மக்களுடன் கப்பலேறி, டோலோன்ஸி நாட்டையடைந்து, அதைத் தமதாக்கிக் கொண்டார். மற்றும் அவரைக் கொணர்ந்த அந்நாட்டின் தலைவர்கள் நாட்டின் உன்னத பொறுப்பையும் அதிகாரத்தையும் அவர் ஏற்க உதவியளித்தனர்.

மில்டியாடிஸின் முதல் பணி, அத் தீபகற்பத்தின் கழுத்துப் பகுதியில் — கார்டியா முதல் பாக்டியா[5] வரை — ஒரு சுவர் எழுப்ப முடிவு செய்தார். அச்சுவரின் அகலம் 4½ மைல்; நீளம் 52½ மைல். உடன் லாம்ப்ஸகஸ்மீது போர் தொடுத்தார். துரதிர்ஷ்ட வசமாக, அவர் தோல்வியடைந்து, சிறைக்கைதியாக்கப்பட்டார்.

லிடியன் அரசர்[6] குரோஸஸ்[7] மில்டியாடிஸைப் பற்றி மிக உயர்வான எண்ணங்களைக் கொண்டிருந்தார். அவர் மில்டியாடிஸைப் பற்றிக் கேள்விப்பட்டது, லாம்ப்ஸகஸ்[8]

1. Olympia 2. Victory in the Chariot race drawn by four horses 3. Miltiades 4. Dolonci 5. From Cardia to Pactya 6. Lydian king 7. Croesus 8. Lampsacus

மக்களுக்கு ஓர் ஆணை பிறப்பித்தார் — மில்டியாடிஸை உடன் விடுதலை செய்யுமாறு. இல்லாவிடில் அவர்கள் யாவரையும் "ஊசியிலை மரம்[1] போல அடியோடு வெட்டிப் போடுவேன்" என்று கூறச் சொன்னார். ஊசியிலை மரம் என்ன என்பது அம்மக்களுக்குத் தெரியவில்லை. அந்நாட்டில் உள்ள வயதான பெரியவர் ஒருவர் அதற்கு விளக்கம் கொடுத்தார்: "அதாவது ஊசியிலை மரத்தை அடியோடு வெட்டிவிட்டால், அது மீண்டும் வளராது. அது சந்ததி அற்றுப் போய்விடும்," என்று விளக்கம் கூறினார். லாம்ப்ஸகஸ் மக்கள் பெரிதும் அச்சம் கொண்டு, மில்டியாடிஸை விடுதலை செய்துவிட்டனர்.

இந்த முறை மில்டியாடிஸ் தப்பியதற்கு முழுக் காரணமும் குரோஸஸ் அரசரே ஆவார். ஆனால் அவருக்குக் குழந்தைகள் கிடையா. அவர் சந்ததியற்று இறந்து விட்டார். தம் ஆட்சியையும் அதிகாரத்தையும் ஸ்டெஸகோரஸ்[2] என்பாரிடம் ஒப்படைத்து இறந்து விட்டார். ஸ்டெஸகோரஸ் என்பவர், மில்டியாடிஸின் தம்பி சீமோனின்[3] மகன் ஆவார். கெர்ஸனீஸஸின் மக்கள் ஒரு நாட்டின் ஸ்தாபகருக்குச் செய்ய வேண்டிய சடங்குகள் யாவற்றையும் செய்து, தெய்வங்களுக்கு நிவேதனங்கள் அளித்து வரலாயினர். அவ்விழாவில் தேர் போட்டியும், மல்யுத்தமும் நடக்கும். ஆனால், லாம்ப்ஸகஸ் மக்கள் எவரும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை.

லாம்ப்ஸகஸ்[4] மக்களுடன் ஏற்பட்ட போரில் ஸ்டெஸகோரஸ் கூட சந்ததியின்றிக் கொல்லப்பட்டார்."

விளக்கவுரை :

கெர்சனீஸியர்கள்[5] : கெர்ஸநீஸஸ் ஒரு தீபகற்பம். கெர்ஸாஸ்[6] என்ற கிரேக்கச் சொல்லுக்குப் பூமி என்ற பொருளும், நீஸாஸ்[7] எனும் சொல்லுக்குத் "தீவு" என்ற பொருளும் உண்டு. இது டார்டனெல்ஸ் தீபகற்பம் என்றும், கிரிமியா என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

---

1. Pine tree 2. Stesagoras 3. Cimon 4. Lampsacus 5. Chersonese 6. Chersos 7. Nesos

மில்டியாடிஸ்[1] : இவர் ஆதன்ஸ் நகரத்தின்[2] தளபதி. தம் படையினர் ஓடி ஒளிந்து கொண்டதும், அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து. பாரசீகர்களை[3] ஓட ஓட விரட்டி அனுப்பக் காரணமாக இருந்தார்.

மில்டியாடிஸ் I[4] : இவர் சைப்சிலஸ்[5] என்பாரின் மகன் ஆவார். சைப்சிலஸ் ஆதன்ஸ் நகரவாசி[6] அவர் பிசிஸ்டிராடஸ் என்பவர் காலத்தில் வாழ்ந்து வந்தார். பிசிஸ்டிராடஸ், ஹிப்பக்ரடீஸ்[7] என்பவரின் மகன். திரேசியா[8] நாட்டைச் சார்ந்த கெர்ஸனீஸஸ் எனும் இடத்தில் குடியிருப்பை ஏற்படுத்தி, குடியேற்றம் அமைத்தார். இவர் ஒரு கொடுங்கோல் மன்னர். குழந்தையின்றி சந்ததியின்றி இறந்தார். இவரது அரசு, இவரின் ஒன்று விட்ட தம்பி சீமோனின்[9] மகனான ஸ்டெஸகோரஸ்[10] என்பாருக்குப் போயிற்று. ஸ்டெஸகோரஸ் கூட சந்ததியின்றிக் கொல்லப்பட்டார்.

பிஸிஸ்டிராடஸ்[11] : இவர் ஆதன்ஸ் நகரத்தைச் சார்ந்தவர். ஹிப்பக்ரடீஸ் என்பாரின் மகன் ஆவார். இவர் கி.மு. 560-ல் ஆதன்ஸ் நகர அதிகாரத்தைக் கைப்பற்றி, கொடுங்கோல் அரசனாகத் திகழ்ந்தார். பிஸிஸ்டிராடஸ் கி.மு. 527-ல் இறந்தார். ஆக அவர் அரசாட்சி செய்த காலம் கி.மு. 560-527 அதாவது 33 ஆண்டுகள் ஆகும். அவருக்கு இருவர் புதல்வர் இருந்தனர் — ஹிப்பியஸ்[12], ஹிப்பார்கஸ். ஹிப்பார்கஸ் ஆட்சியில் கவிஞர் பலர் இருந்தனர் — சிம்மனைடீஸ்,[13] சியாஸைச்[14] சார்ந்தவர்; அனக்ரியான்,[15] டியோஸைச்[16] சார்ந்தவர். ஹிப்பார்கஸ் கி.மு. 514-ல் கொல்லப்பட்டார். ஆகையால் அவர் சகோதரர் ஹிப்பியஸ் அரசரானார். ஆனால் அவரை அட்டிகாவிலிருந்து[17] பதவி இறக்கம் செய்து விட்டனர். பின்னர் அவர் டாரியஸ் அரசரிடம்[18] சென்று அவர் அவையில் இருந்தார். அவர் மாரதான் போரில் [19] கி.மு. 490-ல்இறந்தார்.

டெல்பி கோயில்[20]: இது ஆதன்ஸ் நகரின்[21] வடக்கே பார் னஸஸ் மலையின்[22] சரிவில் இருந்தது. இங்கு மன்னர்களும்,

---

1. Miltiades 2. Athens 3. Persians 4. MiltiadesI 5. Cypselus 6. Athenian 7. Hippocrates 8. Thracia 9. Cimon 10. Stesagoras 11. Pisistratus 12. Hippias 13. Cimmonides 14. Cheos 15. Anacreon 16. Teos 17. Attica 18. Darius King 19. Battle of Marathon 20. Delphi Temple 21. Athens 22. Parnassus Mt.

மற்றவர்களும் வந்து அசரீரி வாக்குக் கேட்டுச் செல்வர்; அங்குக் குருமார்கள் கூறும் விடையே அசரீரி வாக்காகும்[1]. அதன் முதல் பெயர் பைதோ[2]. ஹோமர் கவியால்[3] (கி. மு. 850) அவ்வாறு வழங்கப்பட்டது. மற்றும், பக்கம் 36, குறிப்பு-8 பார்க்கவும்.

நான்கு குதிரைகள் பூட்டிய தேர்[4] : இவ்வகைத் தேர்ப் போட்டி ஒலிம்பியா[5] எனுமிடத்தில் நடந்த விளையாட்டுப் போட்டியில் நான்காண்டுக் கொருமுறை இடம் பெற்றது. மில்டியாடிஸ் அத்தகைய போட்டியில் மும்முறை வென்றார்.

நான்கு குதிரைகள் பூட்டிய தேர் பண்டைக்காலத்தில் இந்தியாவில் புழக்கத்திலிருந்தது. இங்கிருந்து அயல் நாடுகளுக்குப் பரவிற்று. மகாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் இருந்து கொண்டு அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்ததாக வரலாறு கூறுகிறது.

மற்றும் அகநானூறு நான்கு குதிரைகள் பூட்டிய தேரைக் குறிப்பிடுகிறது. (அகநானூறு : 104—1—7).

டோலோன்ஸி[6] : இது திரேசியா நாட்டில்[7] ஒருபகுதி. இங்கிருந்து வந்த மக்கள் ஆதன்ஸ் நகரத்தில் நுழைந்து, தங்கள் திரேசியா நாட்டில் ஒரு குடியேற்றத்தை அமைக்க வேண்டினர். உடன் மில்டியாடிஸ் சென்று, அங்கு ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தினார். பின்னர் அந்நகரைத் தலைநகராகக் கொண்டு, திரேசியா நாடு முழுவதையும் ஆண்டார்.

"He ruled as a Thracian Prince over Dolonci. He ruled as a tyrant over his Athenian Fellow settlers. He Protected his Peninsula against invasion from the north by a wall which he built across the neck Cardia to Pactya. We hear of his war with Lampsacus and his friendship with the King of Lydia."

—(History of Greece by J. B. Bury, Page 197)

சுவர் எழுப்புதல் : கார்டியா[8] முதல் பாக்டியா[9] வரை ஒரு சுவர் மில்டியாடிஸால் எழுப்பப்பட்டது. அதன் நீளம்

---

1. Oracle 2. Pytho 3. Homer 4. Chariot drawn by four horses 5. Olympia 6. Dolonci 7. Thracia 8. Cardia 9. Pactya

52½ மைல்; அகலம் 4½ மைல். ஆனால் மில்டியாடிஸ்[1] லாம்பஸ்கஸ் என்பவரால் சிறைப்படுத்தப்பட்டார். விடுதலை செய்யவும் பட்டார்—லிடியன் அரசர் குரோஸஸ் குறுக்கிட்டினால்.

குரோஸஸ்[2] (கி. மு. 560—546) : இவர் லிடியா நாட்டின்[3] இறுதி அரசர்[4]. இவர் லாம்ப்ஸகஸ் மக்களுக்கு விடுத்த கடிதத்தில், மில்டியாடிஸை உடன் விடுவிக்குமாறு ஆணை பிறப்பித்தார். இவர் ஆட்சி செய்த காலம் கி மு. 560—546 அதாவது 14 ஆண்டுகள் ஆண்டார். இவர் நண்பர் ஸொலான்[5]. சைரஸ் மன்னர்[6] உயிருடன் இருக்கும் வரை குரோஸஸைத் தம் நண்பராகவே வைத்துக் கொண்டிருந்தார். மற்றும் பக்கம், 71 குறிப்பு—7 பார்க்கவும்.

லாம்ப்ஸகஸ்[7] : இது திரேசியா நாட்டில்[8] ஆசியா மைனர் பகுதியில்[9] இருந்த ஒரு நகரம். இங்கு மதுபானம் மிகுதியாகத் தயாரிக்கப்படுகிறது. மது உற்பத்திக்குப் புகழ் பெற்றதாகும். இங்குப் பிரியாபஸ்[10] எனும் தேவதை குடி கொண்டுள்ளார். அக் கடவுளுக்கு ஆண்டுதோறும் விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

ஸ்டெஸகோரஸ்[11] : இவர் மில்டியாடிஸின் ஒன்றுவிட்ட தம்பியாகிய சீமோனின்[12] மகன் ஆவார். லாம்ப்ஸகஸுடன் ஏற்பட்ட போரில் இவர் கொல்லப் பட்டார்.

---

1. Miltiades 2. Croseus 3. Lydia 4. Last King 5. Solon 6. King Cyrus 7. Lampsacus 8. Thracian Country 9. Asia Minor 10. Priapus 11. Stesagoras 12. Cimon

(ii) சீமோனின் மகன் மில்டியாடிஸ்

"ஸ்டெஸகோரஸின்[1] தம்பியும், சீமோனின்[2] மகனும் ஆன மில்டியாடிஸ்[3]—முன் கூறப்பட்ட மில்டியாடிஸ் வேறு, இவர் வேறு— பிசிஸ்டிராடஸ்[4] மக்களால் யுத்தக் கப்பலில் கெர்சனீஸஸுக்கு[5] அனுப்பப்பட்டார். இம் மில்டியாடிஸ், ஆதன்ஸ் நகரில்[6] இருந்தபொழுது, பிசிஸ்டிராடஸ் மக்களால் மிகவும் கௌரவமாக நடத்தப்பட்டார்.

கெர்ஸனீஸஸுக்கு மில்டியாடிஸ் வருகை தந்ததும்— இம் மில்டியாடிஸ்— சீமோனின் மகன்—இவர் தம் காலஞ் சென்ற சகோதரனுக்காக்த் துக்கம் கொண்டாட வீட்டி னுள்ளேயே இருந்தார். இதையறிந்த அந்நாட்டுப் பிரபுக்கள் பலர் மரியாதை செலுத்தும் நோக்கத்துடன், இவரது இல்லத்திற்கு ஒன்றாகக் கூடி வருகை தந்தபோது, மில்டியாடிஸ், அப்பிரபுக்கள் யாவரையும் சிறைப்படுத்தி னார். அதன் பின்னர் கர்ஸனீஸஸுக்குத் தலைமை தாங்கி, 500 போர் வீரர்களைத் தம் பாதுகாப்பில் வைத்துக் கொண்டும், திரேசியா நாட்டு[7] அரசர் ஓலோரஸின்[8] மகள் ஹெகஸிபைலி[9]யைத் திருமணம் செய்து கொண்டும் வாழ்ந்தார்.

டாரியஸ் அரசரின்[10] மகள் அர்டோகோஸ்ட்ரா[11] என்ப வளை மணந்து கொண்ட மர்டோனியஸ்[12], கப்பல் படை, இராணுவப்படை செலுத்துவதில் வல்லுநராக இருந்தார்.

---

1. Stesagoras 2. Cimon 3. Miltiades 4. Pisistratus 5. Chersonesus 6. Athens 7. Thracia 8. Olorus 9. Hegesipyle 10. Darius the King 11. Artogostra 12. Mardonius

அவர் தம் பயணத்தில் அயோனியர்களைச் சந்தித்தார். அவருடைய குறிக்கோள், ஆதன்ஸ் நகரத்தைப் பிடித்ததும் எரிட்ரியாவைப்[1] பிடித்து அடிமையாக்குதலாகும். மற்றும் டாரியஸ் அடிமைப்பட்டியலில், மாசிடோனிய[2] மக்களும் இணைக்கப்பட்டு விட்டனர்.

இருமுறை உயிர் தப்பிய மில்டியாடிஸ் ஆதன்ஸ் நகரப் படைகளுக்குத் தலைமை தாங்கினார்.

அவர் ஆதன்ஸ் நகரை விட்டகன்றதும், ஆதன்ஸ் நகர தளபதிகள் ஸ்பார்டாவுக்கு[3] ஒரு செய்தி ஓர் ஆள் மூலமாகச் சொல்லி அனுப்பினர். "ஏ! ஸ்பார்டா நாட்டு மக்களே! கிரேக்க நாடு[4] ஏற்கெனவே எரிட்ரியா எனும் இடத்தை யிழந்து ஏழ்மை நாடாக ஆகிவிட்டது. மற்றும் பகைவர்கள் ஆதன்ஸ் நகரைப்[5] பிடிக்க மும்முரமாக முயன்றனர். ஆகையால் நீங்கள் உங்கள் ஊர்வழியாக வரும் ஆதன்ஸ் நகர வீரர்களுக்கு உதவி புரிந்து, கிரீஸ் நாட்டின் பெருமையை நிலை நிறுத்தங்கள். அன்னியன் ஆட்சிக்குக் கிரீஸை ஆளாக்கி விடாதீர்கள்," என்று அவ்வாசகம் சென்றது. அவர்கள் "பௌர்ணமி[6] வரவில்லை; வரட்டும், ஒன்று சேரலாம்" என்று கூறி விட்டனர். இதற்குள் பிஸிஸ்டிராடஸின்[7] மகன் ஹிப்பியஸ்[8] பாரசீகப் படைகளை[9] மாரதான்[10] இடத்துக்கு அழைத்து வந்தான்.

வலத்தில் உள்ள வீரர்களுக்கு அதிபதியாய் காலிமாக்கஸ்[11] என்பார் அமர்த்தப்பட்டார். இது நீண்ட நாள்களாக வந்த பழக்கம் ஆகும். இடப்பக்கத்தில் உள்ள வீரர்களுடன் பிளேடிய[12] நாட்டு வீரர்களும் வந்து சேர்ந்தனர்—அதற்கு மில்டியாடிஸ்[13] தலைமை வகித்து, அதை நடத்திச் சென்றார்.

இரண்டு பெயர்களும்— ஆதன்ஸ், ஸ்பார்டா மக்கள் ஒருபுறமும், பாரசீகர்கள் மறுபுறமும்—தத்தம் இடங்களில்

---

1. Eritrea 2. Macedonians 3. Sparta 4. Greece 5. Athens 6. Full moon 7. Pisistratus 8. Hippius 9. Persian Army 10. Marathon 11. Callimachus 12. Platea 13. Miltiades

இருந்தனர். மாரதான் போர்[1] நடை பெற்றது. நடுவில் பாரசீகர்கள் நல்ல இடத்தைப் பிடித்துக் கொண்டு ஆதன்ஸ் நகர மக்களைக் கடற்கரையினுள்ளே தள்ளிச் சென்றனர். முதலில் ஆதன்ஸ் நகர மக்களுக்கு வெற்றி கிடைப்பதாகத் தோன்றினும், ஏற்பட்ட கடற்போரில் காலிமாக்கஸ்[2] அடிபட்டு இறந்து விட்டார். பலர் கொல்லப்பட்டனர்; மாரதான் போரில் அடிபட்டு இறந்த பாரசீகர்களின் எண்ணிக்கை 6400. ஆதன்ஸ் நகர வீரர்கள் இழப்பு 192. பாரசீகர் தோல்வியைத் தழுவினர். ஆதன்ஸ்நகர வீரர்கள் வெற்றி கொண்டாடினர்.

எரிட்ரியாவில்[3] சிறைபிடிக்கப்பட்ட சிறைக்கைதிகள் சூஸா[4] நகரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். டாரியஸ் அரசர்[5] முதலில் அவர்கள்மீது வெறுப்புக் கொண்டிருந்தாலும், அவர்களைக் கண்டவுடன் பரிவு கொண்டு, சிஸ்ஸாவில்[6] உள்ள ஆர்டெரிக்கா[7] எனும் இடத்தில் எல்லா வசதிகளுடன் அவர்களை ஒரு குடியேற்றமாக அமர்த்தி விட்டார். அவ்விடத்திலிருந்து 5 மைல் அருகில் நிலக்கீல்[8], உப்பு, எண்ணெய் மூன்றும் கிடைத்தன. ஆர்டெரிக்காவில் குடியேற்றம்[9] செய்த எரிட்ரிய மக்கள்[10]—இன்றும்—என் காலத்தில்கூட இருப்பதை நான் கண்டேன். மற்றும் அவர்கள் தங்கள் சொந்த மொழியையே பேசுகின்றனர்.

ஸ்பார்டா நாட்டு வீரர்கள்[11] பௌர்ணமியன்று தாங்கள் திட்டமிட்டவாறு ஆதன்ஸ் நகருக்குப்[12] புறப்பட்டனர். மாரதானில்[13] நடந்த போரின் விளைவைக் கண்டனர்; இறந்த உடலங்கள் ஆங்காங்கே சிதறியிருப்பதைக் கண்டனர். இருப்பினும் மாரதான் போரில் தனியே நின்று போராடி வெற்றிபெற்ற ஆதன்ஸ் நகர மக்களைப்[14], பாராட்டிவிட்டுத் திரும்பினர்."

விளக்கவுரை:

மில்டியாடிஸ்II:[15] இவர் சீமோனின்[16] மகன் ஆவார் கெர்சனீஸஸின்[17] கொடுங்கோல் மன்னர். ஆதன்ஸில் இருந்த பிஸிஸ்டி

1. Battle of Marathon 2. Callimacus 3. Eritrea 4. Susa 5. Darius, king 6. Cissa 7. Ardericca 8. Bitumen 9. Settlement 10. Eritreans 11. Spartan Heroes 12. Athens 13. Marathon 14. Athenians 15. Miltiades II 16, Cimon 17. Chersonese

ராடஸ்[1] கெர்சனீஸஸின் அரசர் சந்ததியற்று இருந்ததால், மில்டியாடிஸை அனுப்பி அவ்வரசை ஏற்குமாறு செய்தார். ஹைஸ்டாஸ்பஸின்[2] மகன் டாரியஸ்[3], பாரசீக அரசர், சித்தியர்கள்மீது[4] எடுத்த படையெடுப்பில் சேர்ந்து கொண்டார். அவர் டான்யூப் நதியின்[5] பாலத்தைக் காக்க மற்ற கிரேக்கர்களுடன் அவ்விடம் விடப்பட்டார். டாரியஸ் ஒரு குறிப்பிட்ட காலத்தில்—நேரத்தில்—திரும்பி வருவதாகக் கூறிச் சென்றார். ஆனால் அக்குறித்த நேரம் வரவில்லை. அதன் காரணமாக, மில்டியாடிஸ் அப்பாலத்தைத் தகர்த்து விடுமாறு கட்டளையிட்டார். டாரியஸ் "விதி எப்படியாவது இருக்கட்டும். அதற்கு நாம் என்ன செய்வது?" என்று கூறிச்சென்று விட்டார். அயோனியர்களின்[6] கலகத்தை அடக்கியதும், பினீசியர்களின்[7] போர்ப்படை தம்மைத் தாக்க வந்தபொழுது, அவர் ஆதன்ஸ் நகருக்கு ஓடிவிட்டார். அவர் குற்றவாளியாகக் கருதப்படினும், குற்றவாளிப் பட்டியலினின்று அவர் பெயர் நீக்கப்பட்டு, மன்னிக்கப்பட்டார். அட்டிக நாடு[8] பாரசீகர்களின் படையெடுப்பிற்கு ஆளானபோது, மில்டியாடிஸ்-II பத்து தளபதிகளுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் நேரம் பார்த்துத் தம் சேனா வீரர்களைப் பயன்படுத்தி மாரதான் போரில்[9] பாரசீகர்கள் கி.மு. 490-ல் தோற்றுப்போகுமாறு செய்தார். மாரதான் போரில் வெற்றிபெற்ற மில்டியாடிஸ்-II தமக்கு 70 கப்பல்களைத் தருமாறு ஆதன்ஸ் நகர மக்களைக் கேட்டார். அக்கப்பல்கள் தரப்பட்டதும், பாரோ[10] தீவைத் தாக்கினார்— தம் பழைய நிகழ்ச்சிக்குப் பழிவாங்கும் கருத்துடன். ஆனால் அவர் தொடையில் ஓர் ஈட்டி பாய்ந்து காயப்படுத்திவிட்டது. அவர் பின்னடைந்ததால், அப்போர் வெற்றிகரமாக நடைபெறமுடியவில்லை. உடன் ஆதன்ஸ் நகருக்குத்[11] திரும்பி விட்டார். அங்கு ஸாந்திப்பஸ்[12] என்பவரால் குற்றச்சாட்டுக்கு ஆளானார். அவருடைய தொடையில் ஏற்பட்ட காயம் சீழ்ப் பிடித்து நடக்க முடியாமல், ஒரு தூக்குக் கட்டிலில் வைத்து நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் தரப்பில் அவர் சகோதரர் திசாகோரஸ்[13] வாதாடினார். இருப்பினும் மில்டியாடிஸ் II[14]-க்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும் அவர் நாட்டுக்குச்செய்த சேவையையும் தியாகத்தையும் முன்னிட்டு,அவருக்கு

---

1. Pisistratus 2. Hystaspes 3. Darius 4. Scythians 5. Danube River 6. Ionians 7. Phoenicians 8. Attica 9. Battle of Marathon 10. Paros 11. Athens 12. Xanthippus 13. Tisagoras 14. Miltiades-II

50 டேலன்டுகள்[1] அபராதம் மட்டும் விதிக்கப்பட்டது. அவ் அபராதத்தையும் அவரால் கட்ட முடியாத காரணத்தால், அவர் சிறையில் தள்ளப்பட்டார். சிறையிலிருந்த ஓரிரு மாதங்களில் கி. மு. 489-ல் இறந்து விட்டார். அவர் கட்ட வேண்டிய தண்டப் பணத்தை அவர் மகன் சீமோன்[2] செலுத்தினார். சீமோனின் மகன் மில்டியாடிஸ்; மில்யாடிஸின் மகன் சீமோன். ஆக பாட்டனாரின் பெயரையே பெயரன் தாங்குவது அன்றைய மரபாகவும் இருந்தது. மில்டியாஸின் மகன், சீமோன் II என்று வழங்கப்பட்டார்.

ஒரு டேலன்டம்[3] என்பது 235 பவுன் மதிப்புள்ளதாகும். ஆக, மில்டியாடிஸ் II கட்டவேண்டிய அபராதத் தொகை 11750 பவுன் ஆகும். இத்தொகையை அவர் மகன் சீமோன் II செலுத்திக் குடும்பத்திற்கு ஏற்பட்ட பழியைத் தீர்த்துக்கொண்டார்.

—(A Smaller Classical Dictionary, Page-342)

கெர்ஸனீஸஸ்[4]: இது டார்டனல்ஸ் தீபகற்பம்[5] என்றும் கிரிமியா[6] என்றும் இன்று வழங்கப்படுகிறது. மற்றும் பக்கம் 382, குறிப்பு-6 பார்க்கவும்.

அர்டோஜோஸ்ட்ரா[7]: இவள் டாரியஸ்[8] அரசரின் மகள். இவள் கணவன் பெயர் மர்டோனியஸ்[9].

ஆதன்ஸ் நகரம்: கிரேக்க நாட்டின்[10] தலைநகரம். முதல் முதல் கிரேக்க நாகரிகம்[11] தோன்றிய நகரம் இதுவே என்று கிரேக்க வரலாறு[12] குறிப்பிடுகிறது.

சீமோன் : இவர் மில்டியாடிஸின்[13] தந்தை. இவர் பிஸிஸ்டிராடஸின்[14] மகன்களால் இரகசியமாகக் கொலை செய்யப்பட்டு விட்டார்.

சீமோன்-II[15]: இவர் மில்டியாடிஸின் மகன். இவர் ஆதன்ஸ் நகரக் கப்பல் தளபதியாக[16] இருந்தார். இவர் பாரசீகக் கப்பற் படையைக்[17] கி.மு. 466-ல் நாசமாக்கிப் பெரும் வெற்றி பெற்றார். கி.மு. 461-ல் இவர் அன்றைய ஆதன்ஸ் குழுவினரால் கண்டனத்திற்கு ஆளானார். இருப்பினும் கி.மு. 449-ல்

---

1. Talents 2. Cimon 3. Talentum 4. Chersonesus 5. Dardanels 6. Crimea 7. Artozostra 8. Darius 9. Mardonius 10. Greece 11. Greek Civilisation 12. Greek History 13. Miltiades 14. Pisistratus 15. Cimon II 16. Athen's Fleet 17. Persian's Fleet

மீண்டும் பாரசீகரிடம் போர் தொடுக்கப்பட்டது. அவர் சைப்ரஸ் தீவுக்குத்[1] தளபதியாகச் சென்றார். அங்கே சிடியம்[2] எனும் ஊரை முற்றுகையிடும்பொழுது அவர் கொல்லப்பட்டார்.

பாரசீகருடன் நடத்திய போரில் ஏராளமான கொள்ளை யடிக்கப்பட்ட பொருள்கள் கிடைத்தன. அன்றாடம் இவர் நண்பர்கள் பெரும் விருந்து உண்பர். அவருடைய பெரிய பழத் தோட்டம் அவர்கள் நண்பர்கள் உலாவும் இடமாக அமைந்தது. அதில் உள்ள பழங்களை அவர் நண்பர்கள் தம் இட்டம் போல் பறித்து உண்ணலாம்.

சீமோன் II கி.மு.449-ல் கொல்லப்பட்டு இறந்தார். அவருடன் விருந்தோம்பலும் செத்து மடிந்து விட்டது.

—(A Smaller Classical Dictionary, Page 151)

மாரதான் போர்[3]: இப்போர் ஆதன்ஸ் நகர வீரர்களுக்கும் பாரசீக வீரர்களுக்கும் கி.மு. 490-ல் நடந்த போராகும். மில்டியாடிஸ் ஆதன்ஸ் நாட்டின் தளபதி. அவர் கடுமையாகப் போரிட்டார். அப்போரில் பாரசீக வீரர்கள் 6400 பேர்கள் கொல்லப்பட்டனர்; ஆனால் ஆதன்ஸ் நகர மக்களின் இழப்பு 192. மில்டியாடிஸுக்கு மாபெரும் வெற்றி கிடைத்தது. பாரசீகர் தோற்று ஓடிவிட்டனர்.

டாரியஸ் அரசர்[4]: இவர் பாரசீக மன்னர். ஆட்சி செய்த காலம் கி.மு. 521-485 அதாவது 36 ஆண்டுகள் ஆட்சி செய்தார். ஏழு பாரசீகத் தலைவர்களுள் ஒருவர். கிரேக்க நாட்டை[5] வெல்ல வேண்டுமென்பதை அவர் தம் வாழ்க்கையின் குறிக் கோளாக் கொண்டார். ஆயினும் அவர் இறப்பு (கி.மு. 485) அதை முடிவு பெறாமல் செய்து விட்டது. அப்போரைத் தொடர்ந்து நடத்த தம் மகன் ஸெர்க்ஸிஸிடம்[6] கூறிக் கால மானார்.

ஸ்பார்டா[7]: ஸ்பார்டா என்பது லேசிடேமன்[8] என்றும் வழங்கப்பட்டது. லேசிடேமன், ஸ்பார்டா எனும் பெண்ணை மணந்தார். அவள் பெயரால் நிர்மாணிக்கப்பட்டதே ஸ்பார்டா நகரம். ஸ்பார்டா நகரம் லைஸர்கஸ்[9] ஆட்சியில் உச்சக்கட்டப் புகழை அடைந்தது. லைஸர்கஸ் ஒரு புராண கால வீரர்.

---

1. Cyprus 2. Citium 3. Battle of Marathon 4. Darius 5. Greece 6. Xerxes 7. Sparta 8. Lacedamon 9. Lysergus

3. லெம்னோ நாட்டினரின் துணிவான செயல்


லெம்னோவை[1] மில்டியாடிஸ்[2] கைப்பற்றிய முறை பின் வருமாறு விவரிக்கப்படுகிறது:

ஆதன்ஸ் நகர மக்கள்[3], சில பிளாஸ்ஜியர்களை[4] அட்டிக[5] நாட்டை விட்டு நீங்குமாறு வற்புறுத்தினர். இவ்வாறு அவர்கள் வற்புறுத்தியது நியாயமா, நியாயமற்றதா என்பதைப் பற்றித் தெளிவாக எதுவும் தெரியவில்லை. ஆயினும் இந் நிகழ்ச்சியைப் பற்றி இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன. அவற்றுள் ஒன்று, ஆதன்ஸ் நகர மக்களின் செவிவழி மரபுக் கூற்று, மற்றொன்று, ஹெகஸாண்டரின்[6] மகனாரான வரலாற்றாசிரியர் ஹெகடியஸ்[7] என்பாரின் கூற்று.

ஹெகடியஸ் தம் வரலாற்றில், ஆதன்ஸ் நகர மக்களே தவறிழைத்துள்ளனர் என்று உறுதி செய்கிறார். அவ்வர லாற்று ஆசிரியரின்படி அக்ரோபொலிஸைச்[8] சுற்றிச் சீரிய சுவரெழுப்ப ஒரு தொகையை நிர்ணயித்து, அதைப் பிளாஸ்ஜியரிடமிருந்து பெற்றனர். அந்த இடம் வறண்ட நிலம். அதைப் பண்படுத்திப் பயனளிக்குமாறு செய்தனர். அவ்வாறு செய்து விட்ட நிலத்தை உடன் விட்டு நீங்குமாறு பணித்தது நியாயமற்றது என்பது அவரது வாதம்.

ஆதன்ஸ் நகர மக்கள் கூறுகின்றனர் நியாயம் தங்கள் பக்கமே உள்ளது என்று. ஆதன்ஸ் நாட்டுப் பெண்கள் நீர் மொண்டு எடுத்துச் செல்ல ஒன்பதருவி[9] எனும் இடத்துக்கு

1. Lemnos 2. Miltiades 3. Athenians 4. Pelasgians 5. Attica 6. Hegesander 7. Hecataeus 8. Acropolis 9. Nine springs



ஆதன்ஸ் அக்ரோபொலிஸ் குன்றைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்ட நகரம்

393

வருவர். அக்காலத்தில் எவர் வீட்டிலும் பெண் அடிமை கிடையாது. அப்பொழுது பிளாஸ்ஜிய வாலிபர்கள் அங்கு வந்து, அப் பெண்களைக் கற்பழித்து விட்டுச்[1] சென்று விடுவர். சிலர் அப்பெண்களைப் பலவந்தமாகத் தங்களுடன் அழைத்துச் சென்றோ, தூக்கிச் சென்றோ அவர்களை மனைவிகளாக்கிக் கொண்டு விடுகின்றனர். அதற்கும் மேலாக, அவர்கள் ஆதன்ஸ் நகரைத்[2] தாக்கவும் திட்ட மிட்டிருந்தனர். இதைக் கண்டுபிடித்தவுடன், ஆதன்ஸ் நகர மக்கள் அவர்களைக் கொன்று போட்டிருக்கக் கூடும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. அவர்களை அட்டிக நாட்டை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தினர். அதன் காரணமாகப் பிளாஸ்ஜியர்கள் அட்டிகா நாட்டை[3] விட்ட கன்று மற்ற இடங்களுடன் லெம்னோ[4] எனும் இடத்திலும் குடியேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

அவ்விரு திறத்தினரும் கூறும் வரலாற்று நிகழ்ச்சிகள் மேற்கூறப்பட்டவாறுதான் காணப்பட்டன.

இவ்வாறு பிளாஸ்ஜியர்கள்[5] லெம்னோவில் சில காலம் தங்கினர். அப்பொழுது அவர்கள் ஆதன்ஸ் நகர மக்களைப்[6] பழிக்குப் பழி வாங்கினர். அவர்களுக்கு ஆதன்ஸ் நகர விழாக்கள் நடைபெறும் காலம் நன்கு தெரியும். ஆக, சில படகுத் துடுப்புகளுடன் சில பிரிவினர் பிரௌரான்[7] எனும் நகரத்துக்குக் கப்பலோட்டிச் சென்றனர். அங்கு அர்டமிஸ்[8] எனும் தேவதையின் திருவிழா பெண் மக்களால் கோலாகலமாக நிகழ்த்தப்பட்டு வந்தது. அங்குச் சென்ற பிளாஸ்ஜியர்கள் திருவிழாவில் பங்கேற்ற பெண்கள் பலரைத் தூக்கிக் கொண்டு வந்து, அவர்களைத் திருமணம் செய்து கொண்டு, குழந்தையைப் பெற்றனர். இவ்வாறு அட்டிகப் பெண்களுக்குப் பிறந்த சிறுவர்கள், பிளாஸ்ஜியரின் பெண்களுக்குப் பிறந்த சிறுவர்களுடன் ஒத்துப் போகவில்லை; சண்டையிட்டனர். அதே பொழுது கிரேக்கத் தாய்மார்கள்[9] தாங்களே அதிகாரிகள் என்ற கருத்துக் கொண்டு கர்வம் பிடித்தலைந்தனர். இந் நிலைமை

---

1. Raped 2. Athens 3. Attica 4. Lemnos 5. Pelasgians 6. Athenians 7. Brauron 8. Artemis 9. Greek Mothers

பிளாஸ்ஜியரைச் சிந்திக்க வைத்தது. "இந்த மாதிரி பிறந்த தாசியின் மகன்கள் ஒன்று சேர்ந்து, மற்றவர்களை இப்பொழுதே துன்புறுத்தினர் என்றால், அவர்கள் வளர்ந்தால், நிலைமை எவ்வாறு பரிணமிக்கும்?" என்று தங்களுக்குத் தாங்களே கேட்டுக் கொண்டு, அதற்கான முடிவு ஒன்றையும் எடுத்தனர். அதன்படி அட்டிக நாட்டுப் பெண்களுக்குப் பிறந்த குழந்தைகள் யாவரையும் கொன்று போட்டனர்; பிறகு அப்பெண்களையும் கொன்றொழித்தனர். முதலில் லெம்னோவின் பெண்கள் தங்கள் கணவர்களைக் கொன்று விட்டனர். இந்த இரண்டு விதக் குற்றங்கள் சேர்ந்தே, கிரேக்க நாட்டில்[1] எந்தக் கடுமையான குற்றம் நேரிடினும், அக்குற்றத்தை "லெம்னோ நாட்டினரின் துணிகரச் செயல்"[2] என்றே மக்கள் வழங்கி வருவாராயினர்.

விளக்கவுரை :

லெம்னோ[3] : ஈஜியன் கடலில்[4] உள்ள பெருந்தீவுகளுள் ஒன்றாகும். இது ஹெபீஸ்டஸ்[5] தெய்வத்துக்குப் புனிதமான இடமாகும். அவர் ஒலிம்பஸ் மலையிலிருந்து[6] உருட்டிவிடப் பட்டபொழுது, இங்குத்தான் விழுந்ததாகக் கிரேக்கப் புராண வரலாறு[7] கூறுகிறது. அதன் முதல் ஆதிவாசிகள், ஹோமர் கவியின்படி[8] (கி.மு. 850) திரேசியர்கள்[9] ஆவர். லெம்னோ, டாரியஸ்[10] அரசரின் தளபதி ஒருவரால் வெல்லப்பட்டது. ஆனால் மில்டியாடிஸ்[11] அதைப் பாரசீகர்களிடமிருந்து[12] விடுவித்து ஆதன்ஸ் நகரத்துக்கு[13] அடிபணியுமாறு செய்தார்.

—(A Smaller Classical Dictionary : Page 302)

பிளாஸ்ஜியர்கள்[14] : கிரேக்க நாட்டின் ஆதிகால வாசிகள். அவர்கள் பெயர் அற்ற தெய்வங்களை வணங்கிவந்தனர். அதன் பின்னரே கிரேக்க நாட்டினர்[15] குறிப்பிட்ட பெயர் கொண்ட தெய்வங்களைத் தொழத் தொடங்கினர்.

அட்டிக[16] : இது கிரேக்க நாட்டில் ஒரு பிரிவு ஆகும். முக்கோண வடிவமுள்ள நாடு. முன்னர் இது அக்டி[17] அல்லது

1. Greece 2. Leminian deed 3. Lemnos 4. Aegean Sea 5. Hephaestus 6. Mt. Olympus 7. Greek Mythology 8. Homer 9. Thracians 10 Darius 11. Miltiades 12. Persians 13. Athens 14. Pelasgians 15. Greeks 16. Attica 17. Acty

அக்டிஸ்[1] என்று வழங்கப்பட்டது. அதன் பொருள் கடற்கரைப் பகுதி என்பதே. அச்சொற்களே அட்டிக என மருவிற்று. அதன் பரப்பளவு 800 சதுரமைல்; மக்கள் தொகை 5 இலட்சம். எகிப்திலிருந்து[2] வந்த செக்ராப்ஸ்[3] என்பவரால், அந்நாடு 12 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

ஹெகடியஸ்[4] (கி. மு. 530 - 450): இவர் வரலாற்றாசிரியர். இவர் ஹெகஸாண்டரின்[5] மகன் ஆவார். மைலீடஸ்[6] இடத்தைச் சார்ந்தவர். கிரேக்க வரலாற்றாசிரியர்களுள் தலை சிறந்தவர். ஹிராடடஸின் சம காலத்தவர். இங்குப் பிளாஸ் ஜியர்களை விரட்டி விட்டது தவறு, அவர்கள் ஆதன்ஸ் நாட்டு மக்களே என்று ஹெகடியஸ் கூறுகிறார். மற்றும் பக்கம் 227, குறிப்பு- 2 பார்க்கவும்.

பிரௌரான்[7]: இது அட்டிக நாட்டின் ஒரு பகுதி. இராசினஸ்[8] நதியின் கிழக்குப் பகுதியில் இருந்தது. இங்கு அர்டமிஸ்[9] தேவதையின் புகழ் மிக்க கோவில் இருந்தது. அக்கடவுள் உள்ளூர் பெயரை முன்னிட்டுப் பிரௌரானியா[10] என்று வழங்கப்பட்டார்.

அர்டமிஸ் திருவிழா:[11] இக்கடவுள் டயானா[12] என்று ரோமானிய மக்களால்[13] வழங்கப்பட்டது. இவள் ஜியுஸ்[14] கடவுளுக்கும் லீடோ[15] தேவதைக்கும் பிறந்த மகள் ஆவாள். அப்பொலோ[16] தெய்வத்தின் சகோதரியும் ஆவாள். அர்டமிஸ் திருவிழாவுக்குப் பெண்கள் அதிகம் கலந்து கொண்டனர். இது தமிழ் நாட்டில் வழங்கும் திருப்பாவை, திருவெம்பாவை, வரலக்ஷ்மி விரதம் போன்ற பாவை நோன்பாகும். பெண்களால் போற்றப்படுவது; நடத்தப் படுவது



அர்டமிஸ் தேவதை

1. Actis 2. Egypt 3. Cecrops 4. Hecataeus 5. Hegesander 6. Miletus 7. Brauron 8. Erasinus 9. Artemis 10. Brauronia 11. Artemis Festival 12. Diana 13. Romans 14. Zeus 15. Leto 16. Apollo

புத்தகம் — 7

1. ஸெர்க்ஸிஸ் அரியணை ஏறுதலும், அவரது கனவும்

மாரதான் போர்[1]ச் செய்தி பாரசீக அரசரும்[2] ஹைஸ்டாஸ்பஸின்[3] மகனாருமான டாரியஸை[4] எட்டியதும், ஏற்கெனவே ஆதன்ஸ் நகரம்[5] சார்டிஸ் நகர்மீது[6] போர் தொடுத்ததை உத்தேசித்து ஆதன்ஸ் நகர மக்கள்மீது கடுங்கோபம் கொண்டிருந்ததுடன், இப்பொழுது அக்கோபம் மேலும் மேலும் வெடித்தது. அதன் காரணமாக, அவர் கிரேக்க நாட்டின் மீது போர் தொடுக்க உறுதி கொண்டு விட்டார். சிறிது காலமும் வீண் போக்காமல் உடன் அதற்கான ஏற்பாடுகளில் முனைந்து விட்டார். தம் அரசிலடங்கிய எல்லா சத்ராபிகளுக்கும்[7] உடன் ஆள்களையும், கப்பல்களையும், உணவுத் தானியங்களையும், பொருளும் அனுப்புமாறு கட்டளை பிறப்பித்தார். கிரேக்கநாடே[8] போர்க்கான இலக்காகக் கருதப்பட்டதால், மிகவும் பலம் வாய்ந்த மக்கள் சேனா வீரர்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டனர். மூன்று ஆண்டுகள் ஆசியா கண்டம்[9] முழுவதும் இப் பேச்சால் கொந்தளித்தது. மூன்றாண்டுகள் கழித்து, நான்காம் ஆண்டில், எகிப்தில்[10] ஏற்பட்ட கலவரம் ஒன்று கேம்பைஸிஸினால்[11] அடக்கப்பட்டது. இந் நிகழ்ச்சி காரணமாகக் கிரேக்க நாட்டின் மீது மட்டுமன்று, எகிப்தின்மீதே போர் தொடுக்க டாரியஸ் முடிவெடுத்தார்.

---

1. Battle of Marathon 2. Persian King 3. Hystaspe 4. Darius 5. Athens 6. Sardis 7. Satrapy 8. Greec 9. Asia 10. Egypt 11. Cambyses

இரு நாடுகளின் பேரிலும் போர் தொடுக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுப் போர் வீரர்களும் தயாராக இருந்தனர். ஆனால் டாரியஸுக்குப் பிறகு யார் அரசராக வர வேண்டும் என்பதில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. டாரியஸுக்கு முதல் மனைவி மூலம் மூன்று மகன்கள் இருந்தனர். அதாவது கோப்ரியாஸின்[1] மகளுக்குப் பிறந்தவர்கள். மற்றும் அரசாட்சி ஏற்ற பிறகு சைரஸ்[2] அரசரின் மகளான அட்டோஸாவை[3] மணந்து அவருக்குப் பிறந்தவர்கள் நான்கு பெயர்களும் இருந்தனர். முதல் மூன்று மகள்களுள் மூத்தவர் அர்டோபஜானே[4]. இறுதியில் குறிப்பிட்ட நால்வருள் மூத்தவர் ஸெர்க்ஸிஸ்[5] என்பவர் ஆவார். இரண்டு தாய்மார்களுக்கும் பிறந்த மகன்களுக்குள் ஏற்பட்ட அரச பதவிப் போராட்டமே எங்கும் பேசப்படுவதாயிற்று. அர்டோபஜானே, தாமே டாரியஸின்[6] மகன்களுள் மூத்தவர்[7] என்பதால், தாமே அவ் அரசபதவிக்குரியவர் என்பது அவரது வாதம் ஆனால், சைரஸ் அரசர் பாரசீகர்களுக்குச்[8] சுதந்தரம்[9] பெற்றுத் தந்ததன் காரணமாக அவருடைய மகன்—அட்டோஸாவின் மகன்—ஸெர்க்ஸிஸ் ஒருவரே அரச பதவிக்கு[10] ஏற்றவர் என்பது ஸெர்க்ஸிஸின் வாதம்.



டாரிக் நாணயம் — டாரியஸ்—I பெயரால் வெளியிடப்பட்ட நாணயம். முகப்பில் டாரியஸ் அரசர்; பின்பக்கம் அவருடைய வெற்றிகள் செதுக்கப் பட்ட பாறைச்சுவர்.

டாரியஸ் அரசர் இன்னும் தம் மனத்தை ஒரு நிலையில் நிறுத்தவில்லை, அதற்குள் டிமராடஸ்[11]— அரிஸ்டோனின்[12] மகன்—சூஸா நகரை[13] வந்தடைந்தார். டிமராடஸ் ஸ்பார்டா நாட்டின் அரசர்.[14] அவர் அரச பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பின்னர், நாடு கடத்தப்பட்டு இங்கும் அங்கும் வாழ்ந்தவர். அவர் டாரியஸ் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதவிப்

---

1. Gobryas 2. Cyrus 3. Atossa 4. Artobazanes 5. Xerxes 6. Darius 7. Eldest 8. Persians 9. Freedom 10. Kingship 11. Demaratus 12. Ariston 13. Susa 14. Spartan King

போராட்டத்தைக் கேள்வியுற்று, ஸெர்க்ஸிஸிடம் வந்தார். வந்து அவர் ஸெர்க்ஸிஸிடம் கூறினார்; "டாரியஸ் அரச பதவி ஏற்றபிறகு நீ பிறந்தவன். அர்டோபஜானே எனும் இன்னொரு மகனோ, டாரியஸ் அரச பதவி ஏற்குமுன் பிறந்தவன். ஆகையால் அரசபதவி ஏற்ற பிறகு எவன் பிறக்கிறானோ அவனுக்கே அரச பதவி கொடுக்கப்படும். இது ஸ்பார்டா நாட்டின் வழக்கமும் ஆகும். இதை உன் தந்தையிடத்தில் வலியுறுத்திச் சொல்வாய்," என்று புத்திமதி கூறினார். ஸெர்க்ஸிஸும் அவ்வாறே தன் தந்தையிடம் கூற, டாரியஸும் அவ்வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதே யென்று, தம் பதவியை அட்டோஸா மகனான ஸெர்க்ஸி ஸுக்கே அளித்தார். இஃதில்லாவிடினும், அட்டோஸாவின் சிறந்த செல்வாக்கினால் அப்பதவி தம் மகனையே வந்து அடைந்திருக்கும் என்பதை மறுக்க முடியாது.

அடுத்த அரச் பதவியேற்பவர் ஸெர்க்ஸிஸ் என்பவரே என்று பொது மக்களிடையே அறிவிக்கப்பட்டதும், டாரியஸ் அரசருக்குத் தம் கருத்தைப் போரில் செலுத்த உதவியாயிருந்தது. ஆனால், அவர் அதற்கான ஏற்பாடுகள் செய்து முடிப்பதற்குள், இறப்பு எனும் தெய்வம் அவரை ஆட்கொண்டு விட்டது. எகிப்தில்[1] புரட்சி ஏற்படுவதற்கும், அவர் மகன்களிடையே பதவிப்போராட்டம் ஏற்பட்டதற்கும் ஓர் ஆண்டு அளவில், 36 ஆண்டுகள் அரசாட்சி செய்து இறந்து விட்டார். அவர் கருதிய எகிப்துப் புரட்சிக்காரர் களை ஒடுக்குவதும், ஆதன்ஸ் நகரமக்களை[2] வெல்வதும் ஆன நிகழ்ச்சிகள் முடிவு பெறாமலேயே நின்று விட்டன. டாரியஸ் அரசரின்[3] இறப்புக்குப் பிறகு அவர் மகனார் ஸெர்க்ஸிஸுக்கு[4] அவ் அரசப்பதவி கிடைத்தது.

ஸெர்க்ஸிஸ் அரசப்பதவி ஏற்றதும், எகிப்தின்மீது போர் செய்ய ஏற்பாடுகளைச் செய்தார். கிரேக்க நாட்டின்[5] மீது படையெடுப்பது ஸெர்க்ஸிஸின் கருத்தேயன்று; ஆனால் கோப்ரியாஸுக்கும்[6] டாரியஸின் சகோதரிக்கும் பிறந்த மர்டோனியஸ்[7] அதாவது ஸெர்க்ஸிஸின் அத்தை

1. Egypt 2. Athenians 3. King Darius 4. Xerxes 5. Greece 6. Gobryas 7. Mardonius

மகன், ஸெர்க்ஸிஸின்மீது கொண்ட செல்வாக்கின் காரண மாகவும், வற்புறுத்தல் காரணமாகவும் ஸெர்க்ஸிஸ் கிரேக்க நாட்டின்மீது போர் தொடுக்க உறுதி கொண்டார். மற்றும் பிஸிஸ்டிராடிடே[1] கூறிய அசரீரி வாக்கினாலும்[2] அவரது கருத்து நன்கு உறுதிப்படுவதாயிற்று.

தம் ஆட்சியின் முதல் ஆண்டில் ஸெர்க்ஸிஸ் எகிப்தின் மீது போர் தொடுத்து அந் நாட்டை நசுக்கினார். பின்னர் தம் தம்பியாகிய அக்கமெனேவின்மீது[3] கருத்தைத் திருப்பி னார். ஆனால் அக்கமெனே ஆளுநராக இருந்த பொழுதே, லிபிய நாட்டினரான[4] சம்மேடிகஸ்[5] என்பாரின் மகன் இனாரஸ்[6] என்பவரால் கொல்லப்பட்டு விட்டார்.

மர்டோனியஸ் மீண்டும் தம் சொல்வன்மையால், ஸெர்க்ஸிஸைக் கிரேக்க நாட்டுப்போரில் ஈடுபடச் செய்தார்.

அர்டபானஸ்[7] — டாரியஸின் சகோதரர் — ஸெர்க்ஸிஸ் கிரேக்க நாட்டின்மீது படையெடுப்பதை விரும்பவில்லை. அதிக கோபமாகப்பேசிப் படையெடுப்பைத் தடுக்க முயன்றார். ஆனால், அப்பேச்சுக்கு ஸெர்க்ஸிஸ் செவி சாய்க்கவில்லை; இடமும் கொடுக்கவில்லை. ஸெர்க்ஸிஸ் கூறினார்: "அர்டபானஸ் அவர்களே! நீர் என் தந்தையின் சகோதரர் என்ற காரணத்தால் வாளா விட்டு விட்டேன். நான் எடுக்கப் போகும் கிரேக்கப் படையெடுப்பில் உமது உதவியோ, தயவோ சிறிதும் தேவையில்லை. நான் கூறிய படி ஏதும் நிகழவில்லை என்றால், ஆதன்ஸ் நகரமக்களைத்[8] தண்டனைக் குள்ளாக்காவிட்டால், நான் டாரியஸ்[9] மகன் அல்லன், டாரியஸ் ஹைஸ்டாஸ்பஸ்[10] மகனார் அல்லர், ஹைஸ்டாஸ்பஸ் அர்ஸமிஸின்[11] மகனார் அல்லர்; அர்ஸமிஸ், அரியராம்னே[12] மகனார் அல்லர்; அரியராம்னே தீஸ்பேயின்[13] மகனார் அல்லர்; தீஸ்பே, சைரஸின்[14] மகனார் அல்லர்; சைரஸ், கேம்பைஸிஸின்[15] மகனார் அல்லர்; கேம்பைஸிஸ் தீஸ்பேயின் மகனார் அல்லர்; தீஸ்பே அக்கமெனேவின்

1. Pisistratidae 2. Oracle 3. Achaemenes 4. Libyan 5. Psammatichus 6. Inarus 7. Artabanus 8. Athenians 9. Darius 10. Hystaspes 11. Arsamis 12. Ariaramnes 13. Teispes 14. Cyrus 15. Cambyses

மகனார் அல்லர். ஒன்று தீர்மானமாக நடக்க வேண்டும். நம் பொருள் முழுவதும் அவர்களிடம் போக வேண்டும், அல்லது அவர்கள் பொருள் முழுவதும் நம்மிடம் வந்து விட வேண்டும். இதில் இடைவழி என்பதே கிடையாது. இதை நன்கு அறிவீராக!'' என்று கூறினார்.

(ii) ஸெர்க்ஸிஸின்[1] கனவு : இவ்வாறு வாக்குவாதங்கள் அக்கூட்டத்தில் நடந்தேறின. அர்டபானஸ்[2] கூறியது ஸெர்க்ஸிஸ் மனத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது. அதனால் மிகுந்த கவலையுற்று, இறுதியில் கிரேக்கப் படையெடுப்பினால்[3] பயன் ஏதும் இரா என்ற முடிவுக்கு வந்து, உடன் களைப்பு மேலீட்டால், தூங்கி விட்டார்.

அத்தூக்கத்தில் ஸெர்க்ஸிஸுக்குக் கனவு ஒன்று வந்தது. அதில் மிக உயர்ந்த கனவான் போன்ற உருவம் தோன்றி, ஸெர்ஸிஸிடம் "பாரசீக வேந்தே! ஏன் உம் கருத்தை மாற்றிக் கொண்டு விட்டீர்? நேற்று நீவிர் தேர்ந்தெடுத்த பாதையிலேயே செல்லுங்கள்,'' என்று கூறி மறைந்து விட்டது. ஸெர்க்ஸிஸ் அக்கனவை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

அடுத்த நாள் சபை கூட்டப்பட்டது. "நான் முன் கூறியதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். இனி கிரேக்க நாட்டின்மீது போர் தொடுக்கப் போவதில்லை. அமைதி நிலவட்டும்.'' என்றவுடன் பாரசீகர்[4] மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

அடுத்த இரவு மீண்டும் அக்கனவு வந்தது. அதே கனவான் தோன்றி, "வேந்தே, நான் கூறியதைக் காற்றில் பறக்க விட்டீர்; நான் கூறியதாகவே கருதவில்லை; இப்போரை உடனடியாக மேற்கொள்ளாவிடில, உமது புகழ் எந்த வேகத்தில் உயர்ந்ததோ, அதே வேகத்தில் படுமட்டமாகி விடும்,'' என்று கூறி, அவ்வுருவம் மறைந்து விட்டது.

அர்டபானஸ் அங்கு வரவழைக்கப்பட்டார். அக்கனவு அவரிடம் உரைக்கப்பட்டது. "இன்று தாங்கள் என் உடை

---

1. Xerxes 2. Artabanus 3. Greek Invasion 4. Persians

அணிந்து இன்று என் பள்ளிக் கட்டிலில் தூங்குங்கள். அதே கனவு[1] உங்களுக்கும் வருகிறதா என்று பார்ப்போம்!" என்று ஸெர்க்ஸிஸ் கூறினார். இவ்வாறு செய்வது அடர்பானஸுக்கு விருப்பமில்லை யாயினும், அவர் செய்ய ஒருவாறு இசைந்தார்.

உடன் அர்டபானஸின்[2] தூக்கத்தில் கனவு ஒன்று வந்தது. அதில் அதே உயரமான கனவான் தோன்றி, "நீ தானே கிரேக்க நாட்டின் படையெடுப்பைத் தடுத்து[3] நிறுத்துகிறாய்! இதோ உன் கண்களைப் போக்கி விடுகிறேன்," என்று கூறி, இரண்டு பழுக்கக் காய்ந்த இரும்பை அவர் கண்கள் முன் கொணர, அவர் "ஐயோ" என அலறிப் புடைத்துத் துடித்து, விழித்துக் கொண்டார்.

இக்கனவு ஸெர்க்ஸிஸுக்குத் தெரிவிக்கப் பட்டது. இப்பொழுது அர்டபானஸும், ஸெர்க்ஸிஸும் இருவருமே சேர்ந்து கிரேக்க நாட்டின்[4] மீது போர் தொடுப்பதே நல்லது என்று கூறினர்.

ஸெர்க்ஸிஸ் மூன்றாம் முறையாக ஒரு கனவு கண்டார். அதில் ஒலிவமர இலைகளால்[5] தம் தலைமுடி அலங்கரிக்கப் பட்டிருந்ததையும், அது பல மைல் தொலைவு நீண்டு சென்றதாயும், அது தலையிலிருந்து திடீரென மறைந்து விட்டதாயும் கனவு கண்டார். அதற்கு மேஜிகள்,[6] ஸெர்க்ஸிஸ் உலக முழுவதையும் ஆள்வார் எனப் பலன் கூறினர்.

எகிப்தின்[7] வெற்றி ஏற்பட்ட நான்கு ஆண்டுகள் வரை போர் வீரர்கள் போருக்குத் தயார் செய்யப்பட்டனர். ஐந்தாம் ஆண்டு முடிவில், ஸெர்க்ஸிஸ், தமது மாபெருஞ் சேனையுடன் கிரேக்க நாட்டின்மீது போர் தொடுத்து மேற் செல்லலானார்.

விளக்கவுரை:

ஸெர்க்ஸிஸ்:[8] இவர் பாரசீக அரசர்;[9] அரசாட்சி செய்தகாலம் கி.மு. 485-465 அதாவது 20 ஆண்டுகள் ஆண்டு வந்தார். இவர்

1. Dream 2. Artabanus 3. Greek Invasion 4. Greece 5. Olive tree leaves 6. Magis 7. Egypt 8. Xerxes 9. Persian king

டாரியஸ்[1] மன்னருக்கும், அட்டோஸாவிற்கும்[2]—இவள் சைரஸ்[3] அரசரின் மகள்—பிறந்த மகன் ஆவார். எகிப்தியரின்[4] போராட்டங்களை முறியடித்தவுடன், கி.மு. 480-ல் கிரேக்க நாட்டை[5] வெல்வதற்காகச் சார்டிஸ்[6] நகருக்குப் பயணமானார். இவர் ஹெல்லஸ்பான்டை[7] ஒரு பாலமிட்டுக்[8] கடந்தார். பிறகு மாசிடோனியா[9], திசாலி[10] ஆகியவற்றின் வழியாகச் சென்று, தம் முழுவலிமையுடன் தெர்மாபிலே[11]எனும் இடத்தை அடைந்தார். அங்கிருக்கும் மலையைக் கடக்கும்பொழுது, ஸ்பார்டா அரசர்[12] லியோனிடஸ்[13] இவரைத் திரும்புமாறு திணறவடித்தார். பின்னர் எபியால்டிஸ்[14] என்பவரின் உதவியினால் அம்மலையில் ஒரு வழியைக்[15] கண்டு, கிரேக்க நாட்டில் புகுந்து, போசிஸ்[16] பியோஷியா[17] ஆகிய நாடுகளை வென்று, ஆதன்ஸ் நகரில்[18] புகுந்தார். பின்னர் சலமிஸ்[19] போரில் இவர் தம் உயிருக்குத் தப்ப வேண்டியிருந்தது. தம் சேனையை மர்டோனியஸிடம்[20] விட்டுவிட்டு, சார்டிஸ் நகரில் கி.மு. 480-ல் நுழைந்தார். கி.மு. 479-ல் மீண்டும் போர் தொடங்கியது. மர்டோனியஸ் தோல்வியுற்றாரெனினும், அதே நாளில் பாரசீகர்[21] அயோனியாவில்[22] மைகேல்[23] எனுமிடத்தில் வெற்றி பெற்றனர். இறுதியில் இவர் போர்த்தளபதி அர்டபானஸ்[24] என்பவரால் கி.மு. 465-ல், 20 ஆண்டு ஆட்சிக்குப்பிறகு கொலை செய்யப்பட்டார்.

—(A Smaller Classical Dictionary: Page 578)

மாரதான் போர்:[25] இப்போர் கி.மு. 490-ல் நடைபெற்றது. மில்டியாடிஸுக்கு[26] இதில் மாபெரும் வெற்றி கிடைத்தது. பாரசீகர்கள் தோற்றுப் பின்னடைந்து ஓடிவிட்டனர்.

டாரியஸ்: இவர் பாரசீக வேந்தர். ஹைஸ்டாஸ்பஸின்[27] மகன். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 521-485 அதாவது 36 ஆண்டுகள் ஆண்டார். இவருக்குப் பின்னர் இவர் மகன் ஸெர்க்ஸிஸ் அரியணை ஏறினார் (கி.மு. 485). மற்றும் பக்கம் 256, குறிப்பு-1 பார்க்கவும்.

---

1. Darius 2. Atossa 3. Cyrus 4. Egyptian 5. Greece 6. Sardis 7. Hellespont 8. Bridge 9. Macedonia 10. Thessaly 11. Thermopylae 12 Spartan king 13. Leonidas 14. Ephialtis 15. A Passage 16. Phocis 17. Boeotia 18. Athens 19. Salamis 20. Mardonius 21. Persians 22. Ionia 23. Micale 24. Artabanus 25. Battle of Marathon 26. Miltiades 27. Hystaspes

ஆதன்ஸ் நகரம்[1]: கிரேக்க நாட்டின்[2] தலைநகரம். இங்குத் தான் கிரேக்க நாகரிகம்[3] பிறந்ததாக வரலாறு. கூறுகின்றன. உலகில் பலவகை நாகரிகங்கள் விளங்கின: அவையாவன:

1. கிரேக்க நாகரிகம் 2. எகிப்திய நாகரிகம் 3. எபிரேய நாகரிகம் 4. பாபிலோனிய (அஸ்ஸீரிய) நாகரிகம் 5. மெஸபொடேமியா நாகரிகம் 6. சிந்துச் சமவெளி நாகரிகம் 7. ஹரப்பா நாகரிகம் 8. தமிழர் நாகரிகம் 9. ஆரியர் நாகரிகம் 10. சீனர் நாகரிகம் 11. மாயன் நாகரிகம் 12. சிவப்பு இந்தியர் நாகரிகம்.

சார்டிஸ் நகரம்:[4] இது ஆசியா மைனரில்[5] முக்கியமான நகரம். லிடியன் அரசுத்[6] தலைநகரம். இது லிடியாவின்[7] சத்ராபியாக[8] விளங்கிற்று. மற்றும் பக்கம் 361 குறிப்பு-6 பார்க்கவும்.

கேம்பைஸிஸ்:[9] இவர் சைரஸ்[10] அரசரின் மகன் ஆவார். இவர் கி.மு. 529-522 அதாவது 7 ஆண்டுகள் ஆட்சி செய்தார். கி.மு. 525-ல் எகிப்தை[11] வென்றார். சிரியாவில்[12] இருந்த எக்படன[13] நகரில் நோய் கண்டு, கி மு. 522-ல் இறந்துவிட்டார். மற்றும் பக்கம் 141 குறிப்பு-1 பார்க்கவும்.

கோப்ரியாஸ்:[14] இவர் மகளை டாரியஸ்[15] அரசர் மணந்து மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். அவர்களுள் மூத்தவர் அர்டோபஜானே[16]

அட்டோஸா[17]: இவள் சைரஸ் அரசரின் மகள்; டாரியஸ் அரசரின் இரண்டாம் மனைவி; தாம் பாரசீக அரச பதவி ஏற்ற பிறகு மணந்து கொண்டார். இவளுக்குப் பிறந்த மகன்கள் நால்வர். அவர்களுள் மூத்தவர் ஸெர்க்ஸிஸ்[18]. இவ் ஸெர்க்ஸிஸுக்கும் அர்டோபஜானேவுக்கும் அரசப் பதவிப் போட்டி ஏற்பட்டு, அதில் ஸெர்க்ஸிஸே அரச பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார் (கி.மு. 485).

டிமராடஸ்:[19] இவர் ஸ்பார்டா[20] நாட்டின் அரசராக விளங்கினார் (கி.மு. 510—491). ஆக 19 ஆண்டுகள் ஆண்டார்.

---

1. Athens 2. Greece 3. Greek Civilisation 4. Sardis 5. Asia Minor 6. Lydian Kingdom 7. Lydia 8. Satarapy 9. Cambyses 10 Cyrus 11. Egypt 12. Syria 13. Ecbatana 14. Gobryas 15. Darius 16. Artabazanes 17. Atossa 18. Xerxes 19. Demaratus 20. Spartan King

கி.மு. 491-ல் அரச பதவி இழந்தார். அதை இழக்கச் செய்தவர் கிளியோமினே[1] ஆவார். அதன்பின் பாரசீகக் கடற்கரைக்கு[2] வந்ததும், டாரியஸ் அரசரால் அன்புடன் வரவேற்று, உபசரிக்கப் பட்டார். ஸெர்க்ஸிஸுக்கு உதவியாக கிரேக்க நாட்டுப் படையெடுப்பில்[3] கலந்துகொண்டார். மற்றும் ஸெர்க்ஸிஸுக்கு அவ்வப்பொழுது நல்லுபதேசம் செய்து வந்தார்.

எகிப்தின்[4]மீது போர்: ஸெர்க்ஸிஸ்[5] எகிப்தின்மீது கி.மு. 485-ல் போர் தொடுத்து அந்நாட்டைக் கி.மு.484-ல் வென்றார். அதன் பின்னரே கிரேக்க நாட்டின்மீது படையெடுக்கத் திட்ட மிட்டார்.

மர்டோனியஸ்:[6] கோப்ரியாஸிற்கும்[7] டாரியஸின்[8] சகோதரிக் கும் பிறந்த மகன்; ஸெர்க்ஸிஸின் அத்தை மகன்.[9] இவர் ஸெர்க் ஸிஸ் தொடுத்த கிரேக்க நாட்டுப் போரில் கலந்து கொண்டார். ஆனால் தோல்வியுற்றார் (கி.மு 479). இவர் அரிம்னெஸ்டஸ்[10] என்பவரால் கொல்லப்பட்டார். அரிம்நெஸ்டஸ் புகழ்பெற்ற ஸ்பார்டா நாட்டின் மகனார்.[11]

பிஸிஸ்டிராடிடே[12]: இவர் சூஸா நகரத்தில்[13] இருந்த குறி சொல்வோர்[14] ஆவார். அரசர் குறி கேட்கும் பொழுது, அவர்க்குச் சாதகமான வரிகளை மட்டும் படித்து விட்டு நற் பெயர் எடுத்து விடுவார். ஹெல்லஸ்பான்ட்[15] எனும் இடத் தில் பாரசீகர்கள்[16] எவ்வாறு பாலம் கட்டிக் கடக்கவேண்டும் காக்கப்பட வேண்டும் என்பதும், ஸெர்க்ஸிஸ் கிரேக்க நாட்டை வெல்ல ஆசியாவிலிருந்து[17] எவ்வாறு புறப்பட்டு எவ்வழியாகச் செல்லவேண்டும் என்பதும் அவரால் குறிசொல்லப்பட்டன. இவர் கூறிய உறுதிமொழியின் பேரில் ஸெர்க்ஸிஸ் கிரேக்க நாட்டுப் படையெடுப்பில் முனைந்தார்.

அக்கமனே:[18] இவர் டாரியஸ் அரசரின் மகன் ஆவார். ஸெர்க்ஸிஸின் சகோதரர் எகிப்தின் ஆளுநராக இருந்தார்[19] கி.மு. 480-ல் ஸெர்க்ஸிஸுக்கு உதவியாக கிரேக்க நாட்டின்மீது தொடுத்த போரில் தளபதியாக விளங்கினார். ஆனால் இவர்

---

1. Cleominae 2. Persian Seashore 3. Invasion of Greece 4. Egypt 5. Xerxes 6. Mardonius 7. Gobryas 8. Darius 9. Aunt's son 10. Arimnestus 11. Spartan 12. Pisistratidae 13. Susa 14. Soothsayer 15. Hellespont 16. Persians 17. Asia 18. Achaemenes 19. Governor of Egypt

கி.மு. 460-ல் ஒரு போரில் கொல்லப்பட்டார். இவரை, சம்மேடி கஸ்[1] மகனான இனாரஸ் கொன்றுவிட்டார்.

இனாரஸ்:[2] எகிப்தின் ஆளுநர்; அக்கமனேவைக் கொன்ற வர்; சம்மேடிகஸின் மகன் ஆவார்.

அர்டபானஸ்[3]: இவர் டாரியஸின் சகோதரர். ஸெர்க்ஸி ஸின் கிரேக்க நாட்டுப் படையெடுப்பைத் தடுக்க முயன்றார். ஆனால் அவர் கருத்துக்கு ஸெர்க்ஸிஸ் இடங்கொடுக்கவில்லை.

டாரியஸின் முன்னோர்: ஸெர்க்ஸிஸின் தந்தை டாரியஸ், டாரியஸ் தந்தை ஹைஸ்டாஸ்பஸ்[4]: ஹைஸ்டாஸ்பஸ் தந்தை அர்ஸமிஸ்[5]; அவர் தந்தை அரியராம்னே[6]; அவர் தந்தை தீஸ்பே;[7] அவர் தந்தை சைரஸ்[8] சைரஸ் தந்தை கேம்பைஸிஸ்[9]; அவர் தந்தை தீஸ்பே; தீஸ்பேஸின் தந்தை அக்கமெனே[10]. இவ்வளவு பெயர்களையும் — பரம்பரை அரசர்களையும்-சாட்சியாக வைத்துக் கொண்டு தாம் கிரேக்க நாட்டை வெல்ல வில்லை என்றால், தம்மை அப்பரம்பரையைச் சார்ந்தவன் அல்லனாகக் கருதுங்கள் என்று வீரவாசகம் பேசினார்.

கனவு:[11] இங்கு மூன்று கனவுகள் குறிப்பிடப்படுகின்றன. அவை ஸெர்க்ஸிஸ்[12] அரசரின் மனச் சாட்சியின் போராட்டமே ஆகும். சிலர் கிரேக்க நாட்டின்மீது போர் தொடுக்க வேண்டாம் என்றனர். இவ்விரு கருத்துகளுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டமே கனவில் வந்து அறிவுறுத்தலும், பயமுறுத்தலும் ஆகும். அக்கனவு உரைத்தபடியே, இறுதியில் தம் மனத்தை ஒருமுகப்படுத்திக் கொண்டு கிரேக்க நாட்டின் மீது[13] படையெடுத்துச் சென்றார்.

இது போன்ற கனவுகள் இந்திய இதிகாசங்களிலும், கதை களிலும் விரவிக் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக இராமாயணத்தில்[14] திரிசடையின் கனவைக் கூறலாம். அக்கனவு எவ்வாறு நற்பலனை அளித்தது என்பதையும், அது காட்டிய தீய நிமித்தங்கள் இராவணன் இறப்பை எவ்வாறு முன்னரே தெரிவித்தன என்பதும் உய்த்துணரப்படும்.

---

1. Psammetichus 2. Inarus 3. Artabanus 4. Hystaspes 5. Arsamis 6. Ariaramnae 7. Teispes 8. Cyrus 9. Cambyses 10. Achamenes 11. Dreams 12. Xerxes 13. Greece 14. Ramayana

"துயிலில தாதலிற் கனவு தோன்றல
வயில் விழி யொருகன வமைந்து நோக்கினேன்
பயில்வன பழுதில பழுதி நா டென
வெயிலினு மெய்யென வுரைத்தன் மேயினாள்.

எண்ணெய் பொன்முடி தொறு மிழுகி யீறிலாத்
திண்ணெடுங் கழுதை பேய் பூண்டதேரின் மேல்
அண்ணலவ் விராவண னரத்த ஆடையன்
நண்ணினன் தென்புல னவையில் கற்பினாய்.

என்றன னியம்பிவே றிசைப்பக் கேட்டியா
லின்றிவ ணிப் பொழு தியைந்த தோர்கனா
வன்றுணைக் கோளரீ யிரண்டு மாறிலாக்
குன்றிடை யுழுவையும் குழுக் கொண் டீண்டியே."

—(கம்பராமாயணம், சுந்தர காண்டம்,
39, 40, 50 காட்சிப் படலம்)

ஆண்டாள் கனவு[1] மிகவும் புகழ் பெற்ற திருமணக் கனவு:

"வாரண மாயிரம் சூழ வலஞ் செய்து
நாரண நம்பி நடக்கின்றானென்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்."

—(நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்: நாச்சியார் திருமொழி, 6-1)

பைபிளில் கனவு[2] குறிப்பிடப்படுகின்றது.

And when they were departed
Behold the angel of the Lord appeareth
To Joseph in a DREAM, saying, Arise, and take
The young child and his mother and flee into Egypt:
And be thou there until I bring the word."

—(St. Matthew: 2-13)

ஒலிவ இலைகள்[3]: இவ் ஒலிவ மர இலைகள் வெற்றிச் சின்னத்துக்கு[4] அடையாளமாகச் சூட்டப்படுகின்றன. நம் தமிழ் நாட்டு மாவிலைத் தோரணம் போல. கிரேக்க தேவதைகள் சில, ஒலிவ

---

1 Dream of Andal 2. Bible 3. Olive tree leaves 4. Victory symbol

மரக் கொடியை உடலில் சுற்றிக் கொண்டிருப்பதாகச் சித்திரிக் கப்பட்டுள்ளனர்.

மேஜிகள்[1]: இவர்கள் குறிசொல்லும் இனத்தவர்[2]. பாரசீகக் குருமார்கள்[3]. சமய போதகர்கள். இவர்கள் பாரசீகர்களிடையேயும்[4], மிடே மக்கள்[5] இனத்தினரிடையேயும் வாழ்ந்து வந்தனர்.

மார்க்கோ போலோ (கி. பி. 1254- 1324) கூறுகிறார்:

"பாரசீகத்தில் ஊள்ள சபா என்ற நகரத்திலிருந்துதான் இயேசுநாதரைத் தரிசிக்கப் பெத்லகேமுக்கு மேஜி எனப்படும் மூன்று ஞானியர்கள் வந்தனர்."

—(மார்கோபோலோ: பக்கம் 88)

பைபிளில்[6] இந்த ஞானியர்கள்[7] குறிப்பிட்டப்படுகின்றனர்:

"Now when Jesus was born in Bethlehem of Judea in the days of Herod the king, behold, there came wise men from the East to Jerusalem."

—(St. MATTHEW. 2-1).

---

1. Magis 2. Soothsayers 3. Persian priests 4. Persians 5. Medes 6. Bible 7. Wise men

2. ஸெர்க்ஸிஸின் காலாட்படைகள்

''டோரிஸ்கஸ்[1] எனுமிடத்தில் ஸெர்க்ஸிஸ்[2] தம் படை வீரர்களின் எண்ணிக்கையைப் பின்வருமாறு சேகரித்தார்: முதலில் 10,000 போர் வீரர்களை ஒரு பெரிய வட்டம் கிழித்து அதனுள் நெருக்கி நிற்குமாறு பணித்தார். அந்தப் பத்தாயிரம் பேர்கள் நிற்கும் இடத்தை மீண்டும் குறித்தார். அதே வட்டத்தில் மற்றொரு 10,000 பேர்களை நிறுத்தினார். இவ்வாறு ஒவ்வொரு வட்டத்திலும் 10,000 பேர்களை நிறுத்தி அவருக்கு வந்த தொகை 17,00,000 (பதினேழு இலட்சமாகும்). இதற்குச் சுமார் 170 முறை வட்டங்கள் வரைந்து எண்ணினார். இவ்வாறு எண்ணிக்கை கண்ட பிறகு, அந்த அந்த நாட்டின் வாரியாகக் காலாட்படை வீரர்கள் சிறுசிறு படைகளாகப் பிரிக்கப்பட்டனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட பல்வேறு நாட்டினரின் படைகள் பின்வருமாறு காணப்பட்டன:

முதலாவதாகப் பாரசீகர்களின்[3] காலாட்படை. இப்போர் வீரர்களின் உடைகள் டையாரா[4] அதாவது மெதுவான ஒட்டுக் கம்பளத்தாலான தொப்பிகள்; பூவேலை செய்யப் பட்ட கைவைத்த சட்டைகள்; மீன்களின் செதில் போன்று ஒரு மேலங்கி, கால்சட்டைகள். படைக்கலங்கள் வகையில் இலேசான கேடயங்களை ஏந்தினர். அதற்குக் கீழே குறு ஈட்டிகள், மிகச் சக்திவாய்ந்த வில்கள்— மூங்கில் அம்பு களுடன் கூடியவை; தங்கள் இடுப்புத் தோள் பட்டை களில் தொங்கும் வாள்கள். இப்படைகள் யாவும் ஓடேனஸ்[5]

---

1. Doriscus 2. Xerxes 3. Persian 4. Diara 5. Otanes

என்பவரால் தலைமை தாங்கப் பட்டது. இவர் ஸெர்க்ஸிஸின் மாமனார்- தம் மனைவியான அமெஸ்டிரிஸ்[1] என்பாளின் தந்தையாவார். பண்டைக்காலத்தில் பாரசீகர்களின்[2] பெயர் செபினே[3] எனப்படும். ஆனால் அன்று அவர்கள் தங்களை ஆர்டாய்[4] மக்கள் என்றே வழங்கிக் கொண்டனர். ஆனால் பாரசீகம்[5] என்ற பெயர்—பெர்ஷியா''[6] என்ற பெயர்—எப்பொழுது யாரால் ஏற்படுத்தப் பட்டது?

ஜியுஸ்,[7] டேனி[8]- இவர்களுக்குப் பிறந்த மகன் பெர்சியஸ்.[9] இப் பெர்சியஸ் பேலுஸ்[10] என்பாரின் மகனான செபீயஸ்[11] என்பவரைக் காணச் சென்ற பொழுது, அவர் மகள் ஆண்டிரோமேடாவை[12] மணந்து கொண்டார். இவ்விருவருக்கும் பிறந்த மகனுக்குப் பெர்ஸஸ்[13] எனப் பெயரிட்டனர். இப் பெயரிலிருந்துதான் பாரசீகர் தங்கள் பெயரான பெர்ஷியன்ஸ்[14] அதாவது பாரசீகர் என்பதைப் பெற்றுக் கொண்டனர் ஆவர்.

மிடிய நாட்டுச்[15] சேனை டைக்ரேன்ஸ்[16] எனப்படும் அக்கமனேயரால்[17] தலைமை தாங்கி நடத்தப்பட்டது- இவர் பாரசீகர் போலவே எல்லா ஆயுதங்களையும்[18] தாங்கினார்- உடை தவிர. அது அவர்கள் தேசிய உடை போன்றிருந்தது. மிடிய நாட்டு மக்கள் அரியன்[19] என்ற பெயரால் வழங்கப்பட்டனர்.

சிஸ்ஸியன்[20] போர் வீரர்கள் பாரசீகர் போலவே உடை உடுத்தனர். தொப்பிக்குப் பதிலாகத் தலைப்பாகை[21] அணிந்திருந்தனர். இப்படை ஓடேனஸின்[22] மகனாரான அனாபஸ்[23] என்பவரால் தலைமை தாங்கி நடத்தப்பட்டது.

ஹிர்கானியர்கள்[24] பாரசீகர் போலவே காணப்பட்டனர். அவர்கள் தளபதி மெகபானஸ்[25] ஆவார். இவர் பின்னர் பாபிலோனின் ஆளுநர்[26] ஆனார்.

---

1. Amestrys 2. Persians 3. Cephene 4. Artaei 5. Persia 6. Persia 7. Zeus 8. Danae 9. Perseus 10. Belus 11. Cepheus 12. Andromeda 13. Persus 14. Persians 15. Media 16. Tigranes 17. Achaemenid 18. Weapons 19. Arian 20. Cissian 21. Turbans 22. Otanes 23. Anaphes 24. Hyrcanians 25. Megapanus 26. Governor of Babylon

அஸ்ஸீரியர்கள்[1] வெண்கல தலைக்கவசத்தை[2] அணிந் திருந்தனர். அவர்களது கேடயம், ஈட்டிகள், வாள்கள் யாவும் எகிப்தியப் பாணியில்[3] அமைந்திருந்தன. இவர்கள் கிரேக்க மக்களால்[4] சிரியன்[5] என்ற பெயரால் வழங்கப் பட்டனர். ஆனால் பிறநாட்டவர்களால் அவர்கள் அஸ்ஸீரியர்கள் என்று வழங்கப்பட்டனர். அவர்களின் தளபதி அர்டகாயீஸின்[6] மகனாரான ஓடாஸ்பிஸ்[7] என்பவ ராவார்.

பாக்டிரியர்கள்[8] மிடிய மக்கள் அணிந்திருந்த தொப்பி போலவே அணிந்திருந்தனர். அவர்கள் கைகளில் தாங்களே தயாரித்த வில்லும், மூங்கில் அம்புகளும் இருந்தன- மற்றும் போர்க் கோடாலி[9] ஒன்றும் கொண்டிருந்தனர். பாரசீகர் சித்திய மக்களைச்[10] சாசே[11] என்று வழங்கினர். இவர் களும் பாக்டிரியர்களும் டாரியஸின்[12] மன்னருக்கும் சைரஸ் மன்னரின்[13] மகள் அட்டோஸா[14]வுக்கும் பிறந்த மகனான ஹைஸ்டாஸ்பஸ்[15] என்பவரால் தலைமை தாங்கி நடத்தப் பட்டது.

இந்தியர்கள்[16], பருத்தி உடைகள்[17] அணிந்திருந்தனர். அவர்கள் தங்கள் கைகளில் மூங்கில் வில்லையும், இரும்பு முனையைக் கொண்ட அம்புகளையும் கொண்டிருந்தனர். இவர்கள் பர்ணஸாத்ரிஸ்[18] என்பவரால்— இவர் அர்டா பேடஸின்[19] மகன்—தலைமை தாங்கி நடத்தப்பட்டார்.

அரியன்[20] நாட்டினர், ஹைடார்னஸின்[21] மகனான ஸிஸாம்னேயின்[22] தலைமையில் நடத்திச் செல்லப்பட்டனர். அவர்கள் மிடிய நாட்டு[23] விற்களை ஏந்திச் சென்றனர். மற்றவை பாக்டிரியர்கள் போன்றே காணப்பட்டனர்.

---

1. Assyrians 2. Helmets 3. Egyptian 4. Greeks 5. Syrian 6. Artachaees 7. Otaspes 8. Bactrians 9. Battle - Axe 10. Scythians 11. Sacae 12. Darius 13. Cyrus 14. Atossa 15. Hystaspes 16. Indians 17. Cotton dress 18. Pharnazathres 19. Artabates 20. Arian 21. Hydarnes 22. Sisamnes 23. Media

பாக்டிரியர்களின் படைகளில் பார்த்தியர்களும்[1], கோரோஸ்மியர்களும்[2] இருந்தனர். இவர்கள் யாவரும் பார்னசெஸின்[3] மகனான அர்டாபஜஸ்[4] தலைமையில் இயங்கினர்.

சோக்டியர்கள்[5] அரடியூஸின்[6] மகனான அஜானே யின்[7] தலைமையில் சென்றனர்.

காந்தாரியர்கள்[8], டடிகேயர்கள்[9] அர்டபானஸின்[10] மகனான அர்டிபியஸின்[11] தலைமையில் இயங்கினர்.

காஸ்பியர்கள்[12] அர்டிபியஸின் சகோதரரான அரியோ மார்டஸ்[13] கீழ் இயங்கினர். அவர்கள் தோலினால் செய்த மேல் சட்டைகளை அணிந்து, அசினாஸிஸ்[14] எனும் ஆயுதம் தாங்கி, தங்கள் நாட்டில் செய்யப்பட்ட மூங்கில் விற்களை ஏந்திச் சென்றனர்.

சாரங்கியர்கள்[15], மெகபஸஸின்[16] மகனான பிரன்டே டிஸ்[17] தலைமையில் இயங்கினர். அவர்கள் விற்களையும் மிடியநாட்டு[18] ஈட்டிகளையும் ஏந்தியிருந்தனர். மற்றும் பகட்டு வண்ணங்கொண்ட உடைகளை அணிந்திருந்தனர். அவர்களுடைய காலணியில், தோற்சாதனம் முழங்கால் வரை நீண்டிருந்தது.

யூபியர்கள்[19] மைசியர்கள்[20], இருவரும் டாரியஸின்[21] மகனான அர்ஸாமெனேயின்[22] தலைமையில் இயங்கிச் சென்றனர்.

பரிகேனியர்கள்[23] இயோபஜஸின்[24] மகனான சிரோமித் ரேயின்[25] தலைமையில் இயங்கினர். இவர்கள் பாக்டியர்கள்[26] போலவே தோலினாலான மேல் சட்டைகளை அணிந்திருந் தனர். விற்களும் சூலங்களும் ஏந்திச்சென்றனர்.

---

1. Parthiars 2. Chorasmians 3. Pharnaces 4. Artabazus 5. Sogdians 6. Artaeus 7. Azanes 8. Gandharians 9. Dadicae 10. Artabanus 11. Artiphius 12 Caspiar 13. Ariomardus 14. Acinaces 15. Sarangians 16. Megabazus 17. Phrandates 18. Media 19. Euobians 20. Mycians 21. Darius 22 Arsamenes 23. Paricanians 24. Oeobazus 25. Siromitres 26. Pactyans

பாக்டிரியர்களின்[1] தலைவர் இதேமித்ரேயின்[2] மகனான அர்டயிங்தே[3] ஆவார்.

அரேபியர்கள்[4] ஜிரா[5] எனும் நீள் அங்கியை அணிந் திருந்தனர். அவர்கள் விற்களை வலப்பக்கத்தில் வைத் திருந்தனர்.

எதியோபியர்கள்[6] சிங்கத்தோல்களையும், சிறுத்தைத் தோல்களையும் அணிந்து ஆறடி நீளமுள்ள பனைமரத் துண்டால் செய்யப்பட்ட விற்களை ஏந்திச் சென்றனர். அவர்கள் அம்புகளின் முனையில் இரும்பிற்குப் பதிலாகக் கூரான கற்களைப் பொருத்திச் சென்றனர். கைகளில் கடினமான குறுந்தடிகளை ஏந்திச்சென்றனர். அவர்கள் போருக்குப் போகும்பொழுது, உடலின் பாதிப்பகுதியை வெண்மையான சுண்ணத்தால் அலங்கரித்துச் செல்வர்; மற்றப் பாதிப்பகுதியில் செந்நிறம் வாய்ந்த இரசகந்தகை யைப்[7] பூசிக் கொண்டு செல்வர். எகிப்தின்[8] மேற்குப்பகுதி யாகிய எதியோபியாவிலிருந்து[9] வந்த எதியோபியர்களும், அரேபியர்களும்[10] டாரியஸின்[11] மகனான அர்ஸாமிஸ்[12] என்பவரால் தலைமை தாங்கி நடத்திச் செல்லப்பட்டனர். அர்ஸமிஸின் தாயார்[13], சைரஸ்[14] அரசரின் மகள் ஆவாள். அம்மகள் டாரியஸின் ஆசை மனைவியாவாள். அவளைப் போல பொன்னாலான சிலையொன்றை டாரியஸ் செய்து வைத்துள்ளார்.

கீழைப்பகுதி எதியோபியர்கள்— படையில் இருவகை எதியோபியர்கள் இருந்தனர்—இந்தியர்களுடன்[15] பணியாற் றினர். அவர்கள் தென்பகுதி எதியோபியர்களைப்போலவே தானிருந்தனர்—பேசும் மொழி, தலைமயிர் வளர்ச்சி தவிர. இவர்களின் தலைமயிர் செங்குத்தாய் இருந்தன. லிபியா வின்[16] எதியோபியர்களின் தலைமயிர் சுருள் தன்மை கொண்ட சுருட்டைமயிர்[17]. உலகத்தில் வேறெந்தப்பகுதி யிலும் இத்தகைய சுருட்டை மயிரைக் காணமுடியாது.

---

1. Bactrians 2. Ithaemitras 3. Artayntes 4. Arabians 5. Zeira 6. Ethiopians 7. Vermillion 8. Egypt 9. Ethiopia 10. Arabs 11. Darius 12. Arsamis 13. Mother of Arsamis 14, Cyrus 15. Indians 16. Libya 17. Curly hair

ஆசியாவிலிருந்து[1] வந்த எதியோபியர்களின் படைக் கலங்கள் இந்தியர்களது படைக்கலங்கள் போலவே காணப் பட்டன—ஒன்றுதவிர—அவர்கள் குதிரையின் தலைப்பகுதி யைப் பிடரி மயிருடன் அணிந்திருந்தனர். குதிரையின் தலைப்பகுதி தலைப்பாதுகாப்பாக இருந்தது; கேடயங் களுக்கு அவர்கள் நாரைகளின்[2] தோல்களைப் பயன் படுத்தினர்.

லிபியர்கள்[3] விலங்குகளின் தோல்களை ஆடையாக உடுத்தினர். சூலங்களை ஏந்திச் சென்றனர். அவை நெருப்பில் வைத்துக் காய்ச்சிக் கெட்டிப் படுத்தப்பட்டவை யாகும். அவர்களின் தளபதி ஓயாரிஸஸ்[4] அவர்களின் மகனான மஸேஜெஸ்[5] ஆவார்.

பாப்லகோனியப்[6] போர் வீரர்கள் பிரம்பினாலான தலைக் கவசத்தை அணிந்திருந்தனர். கைகளில் ஈட்டி, சூலம், குறுந்தடி ஆகியவற்றை ஏந்திச் சென்றனர். காலணியின் தோல் முழங்கால்வரை எட்டிற்று. இவர் களுக்கும் மாடினியர்களுக்கும்[7] தளபதியாயமைந்தவர் மெகசிட்ரஸின்[8] மகனான டோட்ஸ்[9] ஆவார்.

மரியாண்டினியர்[10], லிக்யர்கள்[11], சிரியர்கள்[12] ஆகிய இவர்களின் தளபதி, டாரியஸுக்கும்[13], ஆர்டிஸ் டோனுக்கும்[14] பிறந்த மகன் கோப்ரியாஸ்[15].

ஆர்மீனியர்கள்[16], பிரிஜியர்கள்[17] பாப்லகோனியர் போலவே உடை அணிந்திருந்தனர். இவர்கள் தளதி டாரியஸின் மகள்[18] ஒருத்தியின் கணவரான அர்டாக்மே[19] ஆவார்.

லிடியர்கள்[20] படைக் கலங்கள் கிரேக்கர்களின்[21] படைக் கலங்களை ஒத்திருக்கின்றன. முன்னர் இவர் மாசிடோனியர்[22]

---

1. Asia 2. Cranes 3. Libyans 4. Oarizus 5. Massages 6. Paplagonians 7. Maitieni 8. Megasidrus 9. Dotus 10. Mariy-andynians 11. Ligyans 12. Syrians 13. Darius 14. Artystone 15. Gobryas 16. Armenians 17. Phrygians 18. Daughter of Darius 19. Artachme 20. Lydians 21. Greeks 22. Macedonians

என்றே வழங்கப்பட்டனர். இவர்களும் மைசியர்களும்[1] அர்டாபெர்னிஸின்[2] மகனான அர்டாபெர்னஸ்[3] என்பவரால் தலைமை தாங்கி அழைத்துச் செல்லப் பட்டனர்.

திரேசியர்கள்[4] நரிகளின் தோல்களையணிந்திருந்தனர். ஜிரா[5] எனும் ஆடை வகையினை அணிந்திருந்தனர். இவர்கள் அர்டபானஸின்[6] மகனான பஸாஸே[7] என்பவரால் தலைமை தாங்கி நடத்திச் செல்லப்பட்டனர்.

பிஸிடீயர்கள்[8], காபேலியர்கள்[9], ஹிஸ்டானெஸின்[10] மகனான பாத்ரேயின்[11] தலைமையில் அணிவகுத்துச் சென்றனர்.

மோஷியன்கள்[12] மரத்தாலான தலைக் கவசம் அணிந்திருந்தனர். டிபரேனியர்களும்[13] அதே போல் இருந்தனர். டாரியஸுக்கும் பார்மிஸுக்கும்[14] பிறந்த மகனான அரியோமார்டஸ்[15] இவர்கள் தளபதியாயிருந்தார்.

மக்ரோனர்கள்[16] மோசினோசியர்கள்[17] ஆகியவர்களின் தளபதி கெராஸ்மிஸின்[18] மகனான அர்டாக்டிஸ்[19] ஆவார். கெராஸ்மிஸ் ஹெல்லஸ்பான்டிலுள்ள[20] ஸெஸ்டாஸின்[21] ஆளுநர் ஆவார்.

மரியர்கள்[22], கோல்சியர்கள்[23] இருவரும் டீஸ்பியின்[24] மகனான பிரன்டேடிஸ்[25] தலைமையில் இயங்கினர்.

அலரோடியர்கள்[26] ஸாஸ்யியர்கள்[27] இருவர்களின் தளபதி சிரோமித்ரேயின்[28] மகனாரான மெஸிஸ்டியஸ்[29] ஆவார்.

பாரசீக வளைகுடாவில்[30] உள்ள தீவுகளில் இருந்து

---

1. Mysians 2. Artaphernes 3. Artaphernus 4. Thracian 5. Zeira 6. Artabanus 7. Bassaces 8. Pisidians 9. Cabalians 10. Hystanes 11. Badres 12. Mochians 13. Tibareni 14 Parmys 15. Ariomardus 16. Macrones 17. Mossynoeci 18. Cherasmis 19. Artayctes 20. Hellespont 21. Sestos 22. Marians 23. Colchians 24. Teaspis 25. Phrandates 26. Alarodians 27. Saspiers 28. Siromitrae 29. Masistius 30. Persian Gulf

வந்த படைகளின் தளபதி பாகேயுவின்[1] மகனான மர்டான்டே[2] ஆவார்.

மேலே கூறப்பட்டவை பல வேறு நாடுகளின் காலாட் படைகளும், அவற்றின் தளபதிகளின் விவரங்களும் ஆகும்."

விளக்கவுரை:

காலாட்படை[3] : இவ்வதிகாரத்தில் ஸெர்க்ஸிஸ்[4] அரசரின் காலாட்படைகளின் விவரங்களும் வகைகளும் கூறப்படுகின்றன. காலாட்படை வீரர்களின் மொத்த எண்ணிக்கை 17,00 000 (பதினேழு இலட்சம் ஆகும்).

டாரிஸ்கஸ்[5] : இது திரேஸ் நாட்டில்[6] உள்ள ஒரு நகரம். இது ஹிப்ரஸ்[7] எனும் நதியின் கழிமுகத்தில் இருந்தது. இது ஒரு சமவெளியாக இருந்தது. இங்குத்தான் ஸெர்க்ஸிஸ் தமது காலாட்படையின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அறிந்து கொண்டார்.

ஸெர்க்ஸிஸ் : இவர் டாரியஸ்[8] அரசரின் மகன்; தாய் அட்டோஸா[9]. இவர் அரசாட்சி செய்தகாலம் கி. மு. 485—465 ஆக 20 ஆண்டுகள் ஆண்டார். கி. மு. 465-ல் அர்டபானஸ்[10] என்பவரால் கொலை செய்யப்பட்டார். மற்றவிவரங்களுக்குப் பக்கம் 402, குறிப்பு-8 பார்க்கவும்.

டையாரா[11]: ஒட்டுக் கம்பளத்தாலான தொப்பி வகைகள்.

பாரசீகர்கள்[12] : செபியஸ்[13] என்பவரைப் பெர்சியஸ்[14] காணச் சென்ற பொழுது, அவர் மகள் ஆண்டிரோமேடாவை[15] மணந்தார். அவர்களுக்குப் பிறந்த மகனே பெர்ஸஸ்[16]. அவர் பெயராலேயே அவர் சந்ததியினர் பெர்ஷியன்ஸ்[17]-பாரசீகர்கள்-என வழங்கப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த நாடு பெர்சியா[18] என்று வழங்கப்பட்டது.

மற்றும் மிடிய நாட்டுச்[19] சேனை, சிஸ்ஸியன்[20] போர் வீரர்கள், ஹிர்கானியர்கள்[21], அஸ்ஸீரியர்கள்[22], பாக்டிரியர்கள்[23],

---

1. Bagaeus 2. Mardontes 3. Infantry 4. Xerxes 5. Doriscus 6. Thrace 7. Hebrus 8. Darius 9. Atossa 10. Artabanus 11. Tiara 12. Persians 13. Cepheus 14. Perseus 15. Andromeda 16. Persus 17. Persians 18. Persia 19. Media 20. Cissia 21. Hircanians 22. Assyrians 23. Bactrians

இந்தியர்கள்[1], அரியன்[2] நாட்டினர், பார்த்தியர்[3], சோக்டியர்கள்[4], காந்தாரியர்கள்[5], காஸ்பியர்கள்[6]. சாரங்கியர்கள்[7], யூபியர்கள்[8], பரிகேனியர்கள்[9], அரேபியர்கள்[10], எதியோபியர்கள்[11], கீழைப்பகுதி, தென்பகுதி எதியோபியர்கள்[12], பாப்லகோனியர்கள்[13], மரியாண்டினியர்[14], லிக்யர்கள்[15], சிரியர்கள்[16], ஆர்மீனியர்கள்[17], லிடியர்கள்[18], திரேசியர்கள்[19] பிஸிடியர்கள்[20], கபாலியர்கள்[21], மோஷியர்கள்[22], மக்ரோனர்கள்[23], மோசினோசியர்கள்[24]. மரியர்கள்[25]. கோல்சியர்கள்[26], அலரோடியர்கள்[27], ஸாஸ்பியர்கள்[28], பாரசீக வளைகுடாவின்[29] தீவினர்கள் ஆகியவர்களின் காலாட்படைகள் இங்குக் கூறப் பட்டுள்ளன. மற்றும் அவர் அவர் எந்த எந்த தளபதியின்கீழ் பணியாற்றினர் என்பதும், மற்றும் அத்தளபதிகள் யாருடைய மகனார் என்பதும் மிக விரிவாகவே தரப்பட்டுள்ளன.

இங்குக் குறிப்பிடப்பட்ட நாடுகள் யாவும் டாரியஸ்[30] அரசரின் சத்ராபிகளும்[31], அவற்றிற்கு அடங்கி கப்பம் கட்டின நாடுகளும் ஆகும்.

மற்றும் ஒவ்வொரு நாட்டுப் போர்வீரர்களும் எந்த உடை அணிந்திருந்தனர் என்பதும், எவ்வகை ஆயுதங்கள் ஏந்திச் சென்றனர் என்பதும் விரிவாகவே தரப்பட்டுள்ளன.

ஜீரா[32] : இது சிவப்பு நிறமுள்ள தோலினாலான ஆடை. இதைத் திரேசியர்[33] அணிந்திருந்தனர்.

இந்தியர்கள் : இந்தியர்கள் போர்ப்படைகளில் பயன் படுத்தப் பட்டனர் என இரு முறைகள் வருகின்றன. இவர்கள் பலுசிஸ்தானம்[34], நேபாளம்[35], காந்தாரம்[36], காஷ்மீரம்[37], ஆகிய பகுதிகளில் உள்ள மக்களே. இப்பகுதிகள் யாவும் டாரியஸுக்குக் கப்பம் கட்டி வந்தன. இது 20 ஆவது

---

1. Indians 2. Arian 3. Parthiar 4. Sogdians 5. Gandharians 6. Caspiars 7. Sarangiars 8. Euobeans 9. Paricanians 10. Arabians 11. Ethiopians 12. Eastern and Southern Ethiopians 13. Paplagonians 14. Mariyandirians 15. Ligyans 16. Syrians 17. Armenians 18. Lydians 19. Thracians 20. Pisidians 21. Cabaliars 22. Mochians 23. Macroneers 24. Mossy Noesi 25. Marians 26. Colchians 27. Alarodians 28. Saspiers 29. Persian Gulf 30. Darius 31. Satrapy 32. Zeira 33. Thracia 34. Baluchistan 35. Nepal 36. Gandhara 37. Kashmere

சத்ராபியாக விளங்கிற்று (பக்கம் 262-குறிப்பு-20). இந்தியாவிலிருந்து மட்டும் பொன்துகள் 4680 டேலன்டுகள். எல்லோரையும் விட அதிகமாகக் கட்டியவர்கள் இந்தியரே. அன்றைக்கே இந்தியாவிலிருந்த பொன் யாவும் அன்னியர்களால் எடுத்தேகப்பட்டன. பின்னர் படையெடுத்து வந்த அரசுகள் யாவும் பொன், வெள்ளி, முத்து ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றன. நாளடைவில் இந்தியா வறுமை நாடாயிற்று. இந்தியா என்றுமே தத்துவ நாடாகத் திகழ்ந்ததே தவிர, போர் வலிமை பெற்ற நாடாகத் திகழ்ந்த தில்லை. தார்மீக நாடாக விளங்கிற்று.

அன்று இந்தியாவின்[1] வடமேற்கு எல்லையில் வசித்த இந்தியர்கள் பிரம்பினாலும், மூங்கிலினாலும் ஆன வில்லைப் பயன்படுத்தினர். அம்புகள் இரும்பு முனையைக் கொண்டிருந்தன. அவர்கள் தலையணி தலைப்பாகை ஆகும்.

சிந்து நதி[2] பாயும் நாடு என்பதால், இந்நாடு சிந்தியா எனப்பட்டு, அதுவே இந்தியா என மருவிற்று என வரலாற்றாசிரியர்கள் கூறுவர். சிலர் ஹிந்துக்கள்[3] வாழ்ந்த இடம் ஹிந்தியா என்றும், அதுவே இந்தியா என்று மருவிவந்ததாகவும் கூறுவர்.

மெகஸ்தனிஸ் (கி. மு. 302—296), **ஸ்டிராபோ** (கி. மு. 64—கி. பி. 24), **தாலமி** (கி. பி. 119—161), **பிளினி** (கி. பி. 23—79) முதலானவர்கள் இந்நாடு இந்தியா எனப்படுவதற்குச் சிந்து நதியே ஆதாரமானது என்று கூறியுள்ளனர்.

வேதங்கள்[4] : இவை இந்தியாவைப் பரதகண்டம், பாரத நாடு என்றே கூறியுள்ளன. ஆக இந்தியா என்ற சொல் மேலை நாட்டு வரலாற்றாசிரியர்களால் வழங்கப்பட்ட சொல்லாகும். நம் இதிகாசங்களிலும், இலக்கியங்களிலும், பாரதியார் பாடல்களிலும்கூட நம் நாடு பாரதநாடு—பரதக் கண்டம்— என்றே போற்றப் பட்டுள்ளது.

> "பரதத் தோங்கிய கோடாச் செங்கோற் சோழர்தங்
> குலக்கொடி" —(மணிமேகலை : பதி : 22)

பர்ணஸாத்ரிஸ்[5] : இந்தியர்கள் இவர் கீழ்ப்பணியாற்றினர். இவர் அர்டாபேடஸின் மகன் ஆவார். ஸெர்க்ஸிஸ் படையில் கி.மு. 479-ல் பணியாற்றினார்.

1, India 2. Indus 3. Hindus 4. Vedas 5. Parnazathres

3. ஸெர்க்ஸிஸின் குதிரைப் படைகளும் கப்பற்படைகளும்

''ஸெர்க்ஸிஸின்[1] குதிரைப்படை

மற்றும் அவர்களுடன் காலாட்படைக்குத் தலைமை தாங்கிய தளபதிகள் பலர். அவர்களுள் கோப்ரியாஸின்[2] மகனான மர்டோனியஸ்[3]; அர்டபானஸின்[4] மகனான திரிதன்டெக்மி[5]; ஒடேனஸின்[6] மகனான ஸ்மர்டாமினஸ்[7], டாரியஸுக்கும்[8], அட்டோஸாவுக்கும்[9] பிறந்த மகனான மெஸிஸ்டஸ்[10], அரியாஜஸின்[11] மகன் கெர்கிஸ்[12]; ஜோபைரஸின்[13] மகன் மெகபைஸஸ்[14]; இவ் அறுவர்களும் எல்லாக் காலாட் படைகளையும் தலைமை தாங்கி நடத்திச் சென்றனர்— பத்தாயிரம் பேர் உள்ள படையைத் தவிர—மிக வீரமுள்ள பாரசீகர்கள் — ஹைடார்னஸின்[15] மகனான ஹைடார்னஸின் தலைமையில் இவை இயங்கின. இவர்கள் சிரஞ்சீவிகள்[16] என்று வழங்கப் பட்டனர். காரணம் இப் படையில் எவர் ஒருவர் கொல்லப் பட்டாலும், நோய் வாய்ப் பட்டாலும் அவர்க்குப் பதிலாக வேறொருவர் அதில் அமர்த் தப்பட்டு, அவர்களின் மொத்த எண்ணிக்கை- எப்பொழுது எண்ணப்பட்டாலும்— சரியாகப் பத்தாயிரம் இருக்க வேண்டும்- அதற்கு மேல் ஒருவர் கூட கிடையாது- அல்லது ஒருவர் கூடக் குறையவும் கூடாது.

---

1. Xerxes 2. Gobryas 3. Mardonius 4. Artabanus 5. Tritantaechmes 6. Otanes 7. Smerdomenes 8. Darius 9. Atossa 10. Mesistes 11. Ariazus 12. Gergis 13. Zopyrus 14. Megabysus 15. Hydarnes 16. Immortals

இப்படைகளுள் பாரசீகர்களே[1] மிகுந்த வலிமை வாய்ந்தவர்கள். படைக் கலங்கள் பல ஏந்திச் செல்வர்; ஒவ்வொருவரும் பொன் அணிகளை அணிந்து சென்றனர்; அவர்களுள் அவர்கள் மனைவிமார்களும், பணியாளர்களும் தனியான வண்டிகளில் அமர்த்தப்பட்டுச் செல்லலாயினர். அவர்களின் உணவு உயர்ந்த உணவாகும்; அது ஒட்டகத்தின்மீதும்[2], கோவேறு கழுதைமீதும்[3] ஏற்றி வைக்கப்பட்டன.

மேற் கூறியவர்கள் குதிரைப் படைகளையும்[4] காலாட் படைகளையும்[5] பயன்படுத்தினர்.

மற்றும் பின்கூறப்படுபவர் முக்கியமாகக் குதிரைப் படைகளைப் பயன்படுத்தலாயினர்:

முதலாவதாகப் பாரசீகர்கள்; தலையில் வெண்கல[6] அல்லது இரும்புத் தலை கவசங்களை அணிந்திருந்தனர். இரண்டாவதாக, சகர்ஷியர்கள்[7]. இவர்கள் பாரசீக மொழி[8] பேசுபவர். இவர்கள் லாஸோ[9] எனும் கொக்கி போன்ற ஆயுதத்தைப் பயன் படுத்துவர். அதை வீசினர் என்றால் அக்கொக்கிகளில் பகைவர் சிக்கி உடன் இழுக்கப்பட்டு விடுவர். மூன்றாவதாக மிடியர்களும்[10], ஸிஸியர்களும்[11] இணைந்த படையினர் ஆவர். நான்காவதாக இந்தியர்கள்[12] இந்தியக் காலாட்படை போலவே ஆயுதம் தாங்கிச் செல்வர். சிலர் குதிரைமீது இவர்ந்தும், சிலர் நான்கு குதிரைகளால் இழுக்கப்பட்ட தேர்களில்[13] அமர்ந்தும் செல்வர். ஐந்தாவது பாக்டிரியர்களும்[14] காஸ்பியர்களும்[15] இணைந்த படை, ஆறாவது லிபியர்கள்[16]- யாவரும் தேர்களில் ஊர்ந்து செல்வர். ஏழாவது பரிகானியர்கள்[17]; எட்டாவதும் இறுதியானதுமானவர்கள் அராபியர்கள்[18]. இவர்கள் ஒட்டகத்தின் மீது ஏறிச் சென்றனர்- ஒட்டகத்தின் ஓட்டம் குதிரையின் ஓட்டத்துக்குக் குறைந்து காணப்படவில்லை.

---

1. Persians 2. Camels 3. Mules 4. Horse - Cavalry 5. Infantry 6. Bronze Helmets 7. Sagartians 8. Persian Language 9. Lasso 10. Medes 11. Cissians 12. Indians 13. Chariots Drawn by Four Horses 14. Bactrians 15. Caspians 16. Libyans 17. Paricanians 18. Arabians

ஒட்டகத்தையும் தேர்களையும்[1] சேர்க்காமல் அவர்களுடைய எண்ணிக்கை 80,000 ஆக இருந்தது.

குதிரைப் படைக்குத் தலைமை தாங்கியவர் டேடிஸின்[2] இரு மகன்களான ஹர்மமித்ராஸ்[3], திதயுஸ்[4] என்பவர் ஆவர். மூன்றாமவர் பர்னூஸஸ்[5]. குதிரையிலிருந்து தூக்கியெறியப் பட்டுக் காயமடைந்த காரணத்தால், அவர் ஏறிய குதிரையின் கால்கள் துண்டிக்கப்பட்டு விட்டன. அதனால் பர்னூஸஸின் தலைமைப் பதவி பறிபோயிற்று.

ஸெர்க்ஸிஸின் கப்பற்படை: [6]

பண்டங்கள் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படும் கப்பல்கள் தவிர, மூன்று துடுப்புடன் கூடிய படகுகள் 1207 இருந்தன.

இவை பெறப்பட்ட வகை பின்வருமாறு விவரிக்கப் படுகிறது:

1.	பினீசியர்கள்[7], சிரியர்கள்[8] கொடுத்தவை	300
2.	எகிப்தியர்கள்[9] கொடுத்தவை	200
3.	சைப்ரியர்கள்[10] கொடுத்தவை	150
4.	சைலிஷியர்கள்[11] கொடுத்தவை	100
5.	பாம்பிலியர்கள்[12] கொடுத்தவை	30
6.	லைசியர்கள்[13] கொடுத்தவை	50
7.	ஆசிய டோரியர்கள்[14] கொடுத்தவை	30
8.	காரியர்கள்[15] கொடுத்தவை	70
9.	அயோனியர்[16] கொடுத்தவை	100
		1030

இவர்கள் கிரேக்க பாணியில்[17] தந்தனர்.

அயோனியர்களின்[18] முதற் பெயர் அக்கியா[19].

1. Chariots 2. Datis 3 Harma Mithras 4. Tithaeus 5. Pharnuces 6 Xerxes' Naval Fleet 7. Phoenicians 8. Syrians 9. Egyptians 10. Cypriar 11. Ciliciars 12. Pomphylians 13.Lycian 14. Asian Dorian 15. Carians 16. Ionians 17. Greek way 18. Ionians 19. Achaea

டானஸ்[1], ஜூதஸ்[2] வருமுன் பிலாஸ்ஜியர்[3] என்று வழங்கப்பட்டனர். ஜூதஸின்[4] மகன் அயோன்[5] ஆவார். அவர் பெயரால், அயோனியர் என்று பின்னர் வழங்கப்பட்டனர்.

		1030
10.	தீவின் மக்கள் கொடுத்தவை	17
11.	இயோலியர்கள்[6] கொடுத்தவை	60
12.	ஹெல்லஸ்பான்ட்[7], பாஸ்போரஸ்[8] கொடுத்தவை	100
	மொத்தக் கப்பல்கள்	1207

எல்லாக் கப்பல்களிலும் கப்பல் மாலுமிகளைத் தவிர, போர் வீரர்களும் இருந்தனர்.

கப்பலைச் செலுத்துவதில் தலைமை தாங்கியவர்கள்:

டாரியஸின்[9] மகன் அரியாபிக்னஸ்[10]
அஸ்பாதினேவின்[11] மகன் பிரிக்ஸாஸ்பெஸ்[12]
மெகபேட்ஸின்[13] மகன் மெகபஸஸ்[14]
டாரியஸின் மகன் அக்கமெனே[15]

டாரியஸின் மகன் கோப்ரியாஸ்[16] மூலமாக அரியாபிக்னெஸ். இவர் அயோனியர்[17], காரியன் படைகளின் தளபதி. அக்கமெனே[18] ஸெர்க்ஸிஸின்[19] சகோதரர்.

30, மற்றும் 50 துடுப்புகள் கொண்ட படகுகள் ஆக யாவும் சேர்ந்து 3000 எண்ணிக்கையாயின.

மற்றும் கீழ்க்காணும் மக்களும் நாவாய்களைக் கண்காணித்தனர். இவர்கள் கப்பல் தளபதிக்கு அடுத்த நிலையிலிருந்து கொண்டு பணியாற்றினர்.

அனைஸஸின்[20] மகன் டெட்ராம்னெஸ்டஸ்[21], சீதோனி[22]லிருந்து வந்தவர். சிரோமஸின்[23] மகன் மேட்டன்[24], தீரேயிலிருந்து[25] வந்தவர்.

---

1. Danaus 2. Xuthus 3. Pelasgians 4. Zuthus 5. Ion 6 Aeolians 7. Hellpesont 8. Bhosphorus 9. Darius 10. Ariabignes 11 Aspathines 12. Prexaspes 13. Megabates 14. Megabazus 15. Achaemenes 16. Gobryas 17. Ionians 18. Achaemenes 19. Xerxes 20. Anisus 21. Tetramnestus 22. Sidon 23. Siromus 24. Matten 25. Tyre

அக்பாலஸின்[1] மகன் மார்பலஸ்[2] —அராடஸிலிருந்து[3] வந்தவர். ஒரோமெடானின்[4] மகன் சையெனெஸிஸ்[5]— சைலீஷியாவி[6]லிருந்து வந்தவர். சைகாஸின்[7] மகன் சைபர்னிஸ்கஸ்[8] — லைசியாவிலிருந்து[9] வந்தவர். செர்ஸிஸ்[10] மகன் கார்கஸ்[11], திமகோரஸின்[12] மகன் திமோனாக்ஸ்[13] இவ்விருவரும் சைப்ரஸிலிருந்து[14] வந்தவர்கள். திம்மேனியின்[15] மகன் ஹிஸ்டியஸ்[16], ஹிஸல்டோமஸின்[17]மகன் பிக்ரஸ்[18], கான்டௌல்ஸின்[19] மகன் டமாசிதிமஸ்[20] — இவர்கள் காரியாவிலிருந்து[21] வந்தவர்கள்.

படைகள் எண்ணிக்கை முடிந்ததும் ஸெர்க்ஸிஸ்[22] தம் தேர்மீது ஏறி, காலாட்படை, குதிரைப்படை ஆகியவற்றைக் கடந்தார். பின்னர் தேரிலிருந்து இறங்கி சீதோன்[23] கப்பலில் சென்று கப்பற்படையைக் கண்காணித்தார்.

எல்லாப்படைகளையும் பார்த்துவிட்டு, அரிஸ்டானின்[24] மகனான டிமராடஸைத்[25] தம்மைக் கண்டுபோகுமாறு பணித்தார். டிமராடஸ், ஸெர்க்ஸிஸின் போர்ப்படையைப் பின் தொடர்ந்து சென்றார்.”

விளக்கவுரை:

குதிரைப்படை[26], கப்பற்படை[27]: இவ்வதிகாரத்தில் குதிரைப் படையைச் செலுத்தியவர்களின் பெயர்களும், கப்பற்படைத் தளபதிகளும் அத்தளபதிக்குக் கீழ்ப்பணியாற்றிய நாவாய் அதிகாரிகளும் குறிப்பிடப்படுகின்றனர். கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 1207 என்பது எவ்வளவு சரியாகக் கணக்கிட்டுக் கொடுத்துள்ளார். இது கி.மு. 5ஆம் நூற்றாண்டில் நடந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய வரலாற்றில்[28], தமிழ்நாட்டுப்போர்[29]களில் இத்தகைய நுணுக்கமான செய்திகளை நாம் காண்பதில்லை. காலவரையறை யென்பது தமிழ் நாட்டு வரலாற்றில் காணக்கூடாத ஒன்றாகும்.

இவை யாவற்றையும் நோக்கும் பொழுது, ஹிராடடஸ் வரலாற்றின் தந்தை[30] என்று விதந்தோதப்படுவது மிகப் பொருத்தமேயன்றோ!

---

1. Agbalus 2. Marbalus 3. Aradus 4. Oromedon 5. Syennesis 6. Cilicia 7. Sicass 8. Cyberniscus 9. Lycia 10. Chercis 11. Gorgus 12. Trimagoras 13. Timonax 14. Cyprus 15. Timnes 16. Histiaeus 17. Hysseldomus 18. Pigres 19. Candaules 20. Damasithymas 21. Caria 22. Xerxes 23. Sidon 24. Ariston 25. Demaratus 26. Horse Fleet 27. Naval 28. Indian History 29. Tamilnadu Wars 30. The Father of History

4. பாரசீகர் படைகளும் தெர்மொபிலே போரும்

"பாரசீக மன்னர் ஸெர்க்ஸிஸிடம்[1] போர் செய்யக்கூடிய மனிதர்களின் எண்ணிக்கை 2, 641, 610 ஆகும். மற்றும், ஸெபியாஸ்[2] துறைமுகத்தையும், தெர்மொபிலேயையும்[3] அடைந்த பொழுது, போர் வீரர்களின் மொத்த எண்ணிக்கை 52,83, 320 (52 இலட்சம்) ஆகும்.

பாரசீகக் கப்பற்படை[4] ஸெபியஸ் துறைமுகத்தை யடைந்தன. கிரேக்கர்களின் கப்பற் படைகளும்[5] அங்கு வந்து கொண்டிருந்தன. இருப்பினும் வந்து சேரவில்லை. இதற்கிடையில் கிரேக்கர்கள்[6] போரியஸ்[7] எனும் தெய்வத் துக்குப் பிரார்த்தனை செய்து கொண்டனர். போரியஸ், அட்டிக நாட்டைச்[8] சார்ந்த பெண்ணை மணந்ததால், அத்தெய்வம் கிரேக்கர்களுக்கு மருமகன் ஆகவேண்டும். அவருக்கு ஒரு கோயில் கட்டப் பிரார்த்தனை செய்து, போரில் வெற்றி பெற வணங்கி எழுந்தனர். சிறிது நேரத்தில் ஒரு பெரும் சூறாவளி கிளம்பி, ஸெபியாஸ் துறைமுகத்தி லிருந்த பாரசீகர் கப்பல்களைச் சின்னபின்னப் படுத்தி விட்டது. 400 கப்பல்கள் இவ்வாறு அழிந்து போயிருக் கலாம் என்று கணக்கிடப்படுகிறது. கிரெடினஸின்[9] மகனான அமினாக்கிளிஸ்[10]— இவர் மெக்னீசிய நாட்டைச்[11] சார்ந்தவர்—ஸெபியாஸ் துறைமுகத்துக்கருகில் வாழ்ந்து வந்தார். அச்சூறாவளிக்குப் பிறகு, அவர் அங்கேயே பல

---

1. Xerxes, the Persian King 2. Sepias 3. Thermopylae 4. Persian Naval Fleet 5. Greek Naval Fleet 6. Greeks 7. Boreas 8. Attica 9. Cretines 10. Ameinocles 11. Magnesia

பொன், வெள்ளிக் கோப்பைகளையும், ஆபரணப் பெட்டிகளையும், மற்றும் உயர்ந்த பல பொருள்களையும் கண்டெடுத்ததாகக் கூறினார். அப்பொருள்களினால் அவர் பெருஞ் செல்வந்தர் ஆனார்.

அச் சூறாவளி மூன்று நாள்கள் தொடர்ந்து வீசிற்று. தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்து கொண்ட பிறகு, நான்காவது நாள் அமைதி நிலவியது. பாரசீகரின்[1] இழப்பு சொல்லத் தரமன்று.

இருக்கின்ற கப்பல்களுடன் அபீடே[2] துறைமுகத்துக்கு வந்தனர்— சன்டோசஸ்[3] தலைமையில் சென்ற 15 கப்பல்கள் கிரேக்கர்களால் பிடிபட்டது போக, மற்றவை வந்து சேர்ந்தன.

கிரேக்கர்கள் இதற்கிடையில் பிலேயில்[4] வந்து கூடினர். பிலே என்பது தெர்மொபிலேயின் முந்தைய பெயர். அது பொதுப் பெயராகவே அப்பகுதிக்கு வழங்கப்பட்டு வந்தது.

கிரேக்கர்களின் படை[5] பின்வருமாறு:

ஸ்பார்டா[6] விலிருந்து போர்க்கவசம் தாங்கி வந்தவர்கள் ...	300
டெகியாவிலிருந்து[7] வந்தவர்கள் ...	500
மான்டினியாவிலிருந்து[8] வந்தவர்கள் ...	500
ஆர்கோமெனஸிலிருந்து[9] வந்தவர்கள் ..	120
கோரிந்திலிருந்து[10] வந்தவர்கள் ...	400
ஆர்கேடியா[11] நகரத்திலிருந்து வந்தவர்கள் ...	1000
பிலியஸிலிருந்து[12] வந்தவர்கள் ...	200
மைசினியேவிலிருந்து[13] வந்தவர்கள் ...	80
பியோஷியாவிலிருந்து[14] வந்தவர்கள் ...	700
தீபேயிலிருந்து[15] வந்தவர்கள் ...	400
பினீசியாவிலிருந்து[16] வந்தவர்கள் ...	1000

1. Persians 2. Aphetae 3. Sandoces 4. Pylae 5. Greek Army 6. Sparta 7. Tegea 8. Mantinea 9. Archomenus 10. Corinth 11. Arcadia 12. Phlius 13. Mycenae 14. Boeotia 15. Thebae 16. Phoenicia

தெர்மொபிலே பாஸின்[1] இருபக்கமும் படைகள் நின்றிருந்தன. ஒரு பக்கம் கிரேக்க— ஸ்பார்டா படை[2]; மற்றொருபுறம் பாரசீகர்[3] படை. மூன்று நாள்கள் கழிந்தன. கிரேக்கர்கள்[4] சமாதானத்துக்கோ, அடிபணியவோ வருவார்கள் என்று ஸெர்க்ஸிஸ்[5] மன்னர் எதிர் பார்த்தார். ஆனால் கிரேக்கர்களும், பாரசீகர்களும் ஒருவருடன் ஒருவர் மோத ஆரம்பித்தனர். இருபக்கங்களிலும் சேதம் சொல்ல முடியாதது. அந்தத் தெர்மோபிலே பாஸைப் பாரசீகர்களால் பிடிக்க முடியவில்லை. ஸ்பார்டா மக்கள்[6] வீரத்துடன் போராடினர். செர்க்ஸிஸ் ஓர் உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்து போர் நிகழ்ச்சிகளைக் கவனித்து வந்தார். மூன்று முறைகள் போரின் பயங்கரத்தினால், அவர் துள்ளிக் குதித்தார். பாரசீகர் பின்வாங்கி விட்டனர்.


அடுத்த நாளும் போர் நடந்தது. அதிலேயும் பாரசீகர்கள் பின்வாங்கினர்.

ஸெர்க்ஸிஸ் கலங்கிக் கொண்டிருந்த பொழுது, மாலிஸ்[7] நாட்டினனான எபியால்டிஸ்[8], ஓர் அன்பளிப்பை முன்னிட்டுத் தெர்மொபிலேவுக்குப் போகும் குறுக்கு வழியை எடுத்துரைத்தான். அன்பளிப்பைப் பெற்றுக் கொண்டவுடன், ஸ்பார்டா மக்களுக்குப் பயந்து திசாலி நாட்டிற்கு[9] ஓடினான். ஆனால் அங்கு வேறொரு காரணத்துக்காக டிராகிஸ்[10] நாட்டினனான அதநாடிஸ்[11] எபியால்டிஸைக் கொன்று விட்டான்.

ஸெர்க்ஸிஸ் குறுக்கு வழியில் தம் படைகளைக் கடத்திச் சென்றார். ஓரிடத்தில் லியோனிடஸ்[12], தம் 300 ஸ்பார்டா வீரர்களுடன் போரிட்டார். அது மிகக் கடும் போர். ஆனால், அவ் வீரர்கள் யாவரும் பல பாரசீக வீரர்களைக் கொன்ற பிறகு வீழ்ந்து விட்டனர்: போர்க் களத்திலேயே மடிந்து விட்டனர். அவர்களுள் லியோனிடஸ் என்பவரும் ஒருவர் ஆவார்.

---

1. Thermopylae 2. Greeko-Spartan Armies 3. Persian 4. Greeks 5. Xerxes 6. Spartans 7. Malis 8. Ephialtis 9. Thessaly 10. Trachis 11. Athenades 12. Leonidas



20
22
24
42
40
38
36
மா கி டோ னி யா
செரெஸ்
அட்டிகா
மலியா
மத்தியதரைக் கடல்
கிரீட்
கிரீஸ்

மற்றும், லியோன்டியாடிஸ்[1] தலைமையில் நின்ற தீபே மக்கள்[2] பாரசீகர்களுக்கு அடிபணிந்தவாறு, ஸெர்க்ஸிஸிற்கு மண்ணும் நீரும் கொடுத்தனர். அவர்கள் யாவரும் தலைவர் உட்பட, சூட்டுக் கோலால் சூடிடப்பட்டனர்[3]. கிரேக்கர்கள்[4] பின்வாங்கினர்.

இதுதான் தெர்மொபிலேயில் கிரேக்கர்கள் அடைந்த அரும்பாடுகள் — கொடுந்துன்பங்கள் — சொல்லொணா வேதனைகள்.''

விளக்கவுரை:

தெர்மொபிலே[5] இதன் முதல் பெயர் பிலே[6]. பின்னர் தெர்மொபிலே என்று வழங்கப்பட்டது. திசாலியுக்கும்[7], லோக்ரிஸுக்கும்[8] இடையே நின்ற மலைப் பாதையே ''பாஸ்''[9] என்று வழங்கப்பட்டது. லியோனிடஸ் மற்றும் அவரின் 300 ஸ்பார்டா வீரர்களும் போர் புரிந்து மடிந்து புகழ் பெற்ற இடம். இப்போர் கிரேக்க வரலாற்றில்[10] புகழ் பெற்ற போராகும். இப்போர் நடந்த ஆண்டு. கி. மு. 481 ஆகும்.

பாரசீகர்கள் போட்ட அம்பு மழை சூரியனை மறைத்தது. இதற்கு டைனீகஸ்[11] கூறினாராம். ''அது நல்லதே. நாம் நிழலில் போராடுவோமாக;''[12] என்று ஆபத்தில் இருக்கும் போது கூட நகைச்சுவையுடன் பதில் அளித்தாராம் அந்த ஸ்பார்டன் வீரர்.

— (History of Greece by J.B. Bury, Page 77)

மண்ணும் நீரும் கொடுத்தல்[13]: ''நாங்கள் தோற்று அடிபணிந்து விட்டோம். எங்களுக்குச் சேர்ந்த இந்த நாட்டையும் நீர் நிலைகளையும் பூமி சாட்சியாகவும், டையோனிஸஸ் (நீர்க் கடவுள்) சாட்சியாகவும் உங்களிடம் ஒப்படைக்கிறோம்,'' என்பதே அதன் பொருள்.

---

1. Leontiades 2. Thebans 3. Branded 4. Greeks 5. Thermopylae 6. Pylae 7. Thessaly 8. Locris 9. Pass 10. Greek History 11. Dınekes 12. Fight in the shadow 13. To give earth and water.

5. ஸெர்க்ஸிஸும் டிமராடஸும்

"ஸெர்க்ஸிஸ்[1] டிமராடஸை[2] நோக்கி, "ஐயா, டிமாரடஸ் அவர்களே! நீங்கள் முன்னர் இப்பகுதிக்கு அரசராக இருந் திருக்கிறீர்; அதனால் உங்களுக்குத் தெரிந்திருக்கும் இவர் களை வெல்வதற்கான குறுக்குவழி," என்று கூறினார். அதற்கு டிமராடஸ் "அரசே, 300 கப்பல்களைக் கொண்டு, சைதிரா[3] எனும் இடத்தை அடித்தளமாக வைத்துப் போர் செய்யுங்கள். லேஸிடேமன்[4] மக்கள் தங்களைக் காத்துக் கொள்ளவே போரிடுவர்; மற்றும், இவர்களுக்கு மற்றவர் எவரும் உதவி செய்யவும் மாட்டார்," என்றார்.

அதற்குள் அக்கமெனே[5]— ஸெர்க்ஸிஸின் சகோதரர்— குறுக்கிட்டு, "அரசே, இவன் கிரேக்கன்[6]; இவனை நம்ப வேண்டாம். ஏதாகிலும் கூறிவிட்டு நம்மை இக்கட்டில் மாட்டி விடுவான். இவன் கிறுக்கன்; சூழ்ச்சிக்காரன்," என்று உடன் மொழிந்து எச்சரிக்கை செய்தார்.

அதற்கு ஸெர்க்ஸிஸ் "என் சகோதர அக்கமெனே அவர் களே, உம்முடைய தீர்ப்பைப்போன்று அவ்வளவு சரியான தாக டிமராடிஸின் தீர்ப்பு இல்லாமல் இருக்கலாம். இருப் பினும் அவர் அரசை வெறுத்துவிட்டு, துரத்தப்பட்டு வந்தவர்' அவர் நம்மிடம் அடைக்கலமாக வந்தவர். அவருக்கு இன்னல் ஏதும் இழைக்கக்கூடாது," என்று கூறி , நாம் நேரிடையாகவே போரிடுவோம்" என்று போரில் ஈடு பட்டு ஸ்பார்டா நாட்டு மக்களைக்[7] கொன்றொழித்தார்.

---

1. Xerxes 2. Demaratus 3. Cythera 4. Lacedaemon 5. Achaemenes 6. Greek 7. Spartan

ஸெர்க்ஸீஸ் போர்க்களத்தில் சென்று இறந்து கிடந்த உடலங்களைக் கண்டார்—அவற்றுள் லியோனிடஸ்[1] அவர்களின் சடலமும் காணப்பட்டது. லியோனிடஸ், ஸ்பார்டா[2] நாட்டின் அரசர்—ஸ்பார்டா சேனையின் தளபதியும் கூட[3], உடன் ஸெர்க்ஸிஸ் லியோனிடஸின் தலையைத் துண்டித்து. அதை ஒரு சூலத்தில் செருகி, உயரமான இடத்தில் பார்வைக்காக வைத்தார். இதற்குக் காரணம், ஸெர்க்ஸிஸுக்கு லியோனிடஸ் உயிருடன் இருக்கும்பொழுது, அவர்மீது ஆற்றொணாத கோபம் கொண்டிருந்தார் — மற்ற எல்லா மக்களிடம் கொண்டதை விட அதிக கோபம் கொண்டிருந்தார். அவ்வாறு இல்லாவிடில், இறந்து போன உடலின்மீது தன் வஞ்சத்தைக் காட்டியிருக்க மாட்டார். காரணம், பாரசீகர்கள்[4] சாதாரணமாக ஒருவர் போரில் தன் திறமையைக் காட்டிப் போரிட்டவிடத்து, அவரைப் போற்றிக் கௌரவிப்பதே வழக்கம். எனினும் ஸெர்க்ஸிஸின்[5] கட்டளை நிறைவேற்றப்பட்டது.

முன்னர் ஒன்று சொல்லவிட்டு விட்டேன். அதை இப்பொழுது கூறிக் கதையை முடிக்கிறேன்.

ஸெர்க்ஸிஸ், கிரேக்கர்[6] மீது படையெடுக்கத் திட்டமிட்டுள்ளார் என்ற செயதியை முதல் முதல் அறிந்தவர் ஸ்பார்டன் நாட்டு மக்களே. உடன் அவர்கள் ஆள்களை டெல்பி கோயிலுக்கு[7] அனுப்பி, அத்தெய்வம் கூறிய அசரீரி வாக்கை ஏற்கெனவே கூறியுள்ளேன்.

போரில் பாரசீகர் இறங்கப்போகின்றனர் என்ற இந்தச் செய்தியை ஸ்பார்டா மக்கள்[8] தெரிந்து கொண்டது மிக விசித்திரமான முறையாகும். அரிஸ்டானின்[9] மகனான டிமராடஸ்[10] பாரசீகத்தில்[11] நாடு கடத்தப்பட்டு வாழ்ந்தார். அவருக்கு ஸ்பார்டா நாட்டு மக்களிடம் அவ்வளவாக நம்பிக்கை இல்லை. ஆனால், ஏதோ கெடு நோக்குக் கொண்ட இன்பத்தால்[12] ஊக்குவிக்கப்பட்டு, சூஸா நகரில்[13]

---

1. Leonidas 2. Sparta 3. Commander 4. Persians 5. Xerxes 6. Greeks 7. Delphi 8. Spartans 9. Ariston 10. Demaratus 11. Persia 12. Malicious Pleasure 13. Susa

டிமராடஸ் இருந்தபொழுது, ஸெர்க்ஸிஸ் கிரேக்க நாட்டின் மீது படையெடுக்கப்போகும் செய்தியை அறிந்தார். அறிந்தவுடன் அதை ஸ்பார்டா மக்களுக்கு உடன் தெரிவித்து விடவேண்டுமென்று துடித்தார். ஆனால் செய்தியை எப்படி அனுப்புவது? இடையில் தெரிந்து விட்டால், முழுவதும் பாழாகிவிடும். தன் தலையும் போய்விடுமல்லவா? அதற்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது.

மடிக்கும் மரப்பலகைச்சட்டங்களில்[1] உள்ள மெழுகை[2] எடுத்துவிட்டு, அவ்விடத்தில் தாம் எழுதித் தெரிவிக்க வேண்டியவற்றை எழுதி மீண்டும் அவ்வெழுத்துக்களை மெழுகு கொண்டு மூடி விட்டார் டிமராடஸ். எடுத்துச் சென்றவர்களுக்கு உண்மை தெரியாது. அவற்றைச் சாதாரண மரப் பலகை என்றே எண்ணி எடுத்துச் சென்று விட்டனர். அங்கு இந்தச் சூழ்ச்சி எவருக்கும் தெரிந்தலது. ஆனால் லியோனிடஸின்[3] மனைவி கோர்கோவின்[4] மகள் கிளியோமினே[5]மட்டும் இதை ஏதோ ஊகித்து அறிந்தாள். மெழுகின் வண்ணம்[6] சிறிது மாறுபட்டதிலிருந்து அவள் மற்ற ஸ்பார்டா மக்களிடம், "இந்த மெழுகை அகற்றி விட்டால், அதனடியில் சில எழுத்துகள் தெரியவரும்" என்று இரகசியமாகச் சொன்னாள். உடன் அம்மெழுகு அகற்றப் பட்டது; செய்தி வாசிக்கப்பட்டது. உடன் இந்தச் செய்தி மற்ற முக்கிய கிரேக்கர்களுக்குப்[7] பரவச் செய்யப்பட்டது. மற்றது எப்படியாயினும், நடந்த கதை இதுதான்."

விளக்கவுரை:

ஸெர்க்ஸிஸ்[8]: டாரியஸ்[9] அரசரின் மகன். பாரசீக மன்னர் இவர் ஆட்சி செய்த காலம் கி. மு. 485-465 ஆக 20 ஆண்டுகள் ஆண்டார் கி.மு. 465-ல் தளபதி அர்டபானஸ்[10] என்பவரால் கொல்லப்பட்டார். மற்ற விவரங்களுக்குப் பக்கம் 402, குறிப்பு-8 பார்க்கவும்.

---

1. Wooden Frames 2. Wax 3. Leonidas 4. Gorgo 5. Cleominae 6. Colour 7. Greeks 8. Xerxes 9. Darius 10. Artabanus

டிமராடஸ்[1]: இவர் ஸ்பார்டா நாட்டின்[2] அரசர். அரிஸ்டானின்[3] மகன். இவர் ஆட்சி செய்த காலம் கி. மு. 510-491 அதாவது 19 ஆண்டுகள் ஆண்டார் பின்னர் அரச பதவி பறிக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டார். கி.மு. 491-ல் பாரசீகக் கடற்கரைக்கு வந்த பொழுது டாரியஸால் வரவேற்கப்பட்டு, தம்முடன் இருக்குமாறு செய்தார். டாரியஸ் இறந்ததும் (கி.மு. 485) அவர் மகன் ஸெர்க்ஸிஸுக்கு உறுதுணையாயிருந்தார்.

லேஸிடேமன்[4]: இது ஸ்பார்டா நகரத்தின் மற்றொரு பெயர். லெகோனியா[5] நாட்டின் தலைநகரம். பெலபொனீசியர்களின்[6] தலைநகரம். இத்தலைநகரம் 6 சதுர மைல் பரப்பு கொண்டது. இந்நகரம் லைகர்கஸ்[7] காலத்தில் சிறந்த புகழ் பெற்றிருந்தது.

அக்கமெனே:[8] ஸெர்க்ஸிஸின் சகோதரர். டாரியஸ்[9] அரசரின் மகன்; எகிப்தின் ஆளுநராக[10] இருந்தார். கி.மு. 480-ல் கிரேக்க நாட்டுடன்[11] தொடுத்த போரில், பாரசீகப் படையின் தளபதியாக[12] விளங்கினார். ஆனால், கி.மு. 460-ல் சம்மேடிகஸ்[13] மகன் இனாரஸ்[14] என்பவரால் கொல்லப்பட்டார்.

லியோனிடஸ்[15]: இவர் ஸ்பார்டா நாட்டின் அரசர். பாரசீகர்களுக்கு எதிராக ஸ்பார்டா சேனையைச் செலுத்திய தளபதியும் ஆவார். இவர் ஸ்பார்டாவை ஆட்சிசெய்த காலம் கி.மு.491-480 ஆக 11 ஆண்டுகள் ஆண்டார். இவர் தந்தை அலெக்சான்டிரைட்ஸ்[16] ஆவார். இவர் தெர்மொபிலே போரில்[17] ஒரு மலைப் பாதையைக் காக்க[18] 300 ஸ்பார்டா வீரர்களுடன்[19] அனுப்பப்பட்டார். ஆனால் கி. மு. 480-ல் நடந்த அப்போரில் லியோனிடஸ் கொல்லப்பட்டார். அவருடன் இருந்த 300 ஸ்பார்டா வீரர்களும் இறந்து விட்டனர். ஸ்பார்டா நாட்டு மக்கள் வீரத்துக்குப் பெயர் பெற்றவர்கள். ஸெர்க்ஸிஸுக்கும்[20] லியோனிடஸுக்கும் உள் பகைமை இருந்தது. அதன் காரணமாகத்தான் ஸெர்க்ஸிஸ் லியோனிடஸின் தலையைத் துண்டித்து, சூலத்தில் மாட்டி உயரத் தொங்கவிட்டிருக்கவேண்டும்.

---

1. Demaratus 2. Sparta 3. Ariston 4. Lacedaemon 5. Leconia 6. Peloponnesus 7. Lycurgus 8. Achaemenes 9. Darius 10. Governor of Egypt 11. Greece 12. Persian Commander 13. Psammetichus 14. Inarus 15. Leonidas 16. Alexandrides 17. Battle of Thermopylae 18. Pass 19. Spartans 20. Xerxes

டெல்பி கோயில்[1]: இது கிரேக்க நாட்டில்[2] புகழ் பெற்ற கோயில், அரசர்களும் மக்களும் உண்மை அறிய இங்கு வந்து குறி கேட்டுச் செல்வர். இங்குப் பெண் பூசாரிணிதான்[3] குறி சொல்வது வழக்கம். மற்ற விவரங்களுக்குப் பக்கம் 59, குறிப்பு-11 பார்க்கவும்.

டிமராடஸின் சூழ்ச்சி:[4] அக்கமெனே[5], இவரைச் சூழ்ச்சிக் காரர், கிரேக்கன், கிறுக்கன் என்று கூறியது எவ்வளவு உண்மையாயிற்று. மடிக்கும் மரப்பலகைச் சட்டங்களில்[6] மெழுகை[7] எடுத்துவிட்டு, எழுத வேண்டியதை எழுதி, மீண்டும் மெழுகைப் பூசி, ஒன்றும் தெரியாதவர் போன்று, கிரேக்க நாட்டின்மீது ஸெர்க்ஸிஸ் போர்த் தொடுக்கப் போகும் செய்தியை ஸ்பார்டா மக்களுக்கு[8] எட்ட வைத்து, அங்கிருந்து கிரேக்க நாட்டவர்களுக்குப் பரப்பி, அதற்குள் அவர்கள் வரப்போகும் போருக்குத் தயாராகி விட்டனர். இது துரோகச் செயல்தான். இருப்பினும் அவர் உள்ளத்தில் தாய் நாட்டுப் பற்று நிறைந்திருந்ததை யார் அறிவர்? தாய் நாட்டுக்கு எப்பங்கமும் வரக்கூடாதே என்று அவ்வாறு செய்ததைத் தவறாகக் கூறமுடியுமா?

கிளியோமினே:[9] இவள் லியோனிடஸின் மகள்; தாய் கோர்கோ[10]: இவள் கூர்த்த மதி படைத்திருந்தாள். அதன் காரணமாக, அப்பலகையில் மெழுகு மாறியிருந்ததைக் கொண்டு, அதனடியில் எழுதப்பட்டிருக்கும் எழுத்தை அறிந்தாள். அதன் காரணமாகப் பாரசீகரின்[11] போர் முயற்சி, முன்னரேயே கிரேக்கருக்கு[12] எட்டிவிட்டது.

---

1. Delphi 2. Greece 3. Priestess 4. Cunningness of Demaratus 5 Achaemenes 6. Wooden Frames 7. Wax 8. Spartans 9. Cleomenes 10. Gorgo 11. Persians 12. Greeks

புத்தகம்—8

1. கிரேக்க-பாரசீகக் கப்பற்படைப் போர்

"கிரேக்கக் கப்பற்படையில்[1] 127 கப்பல்கள் இருந்தன. அவை யாவும் ஆதன்ஸ் நகரிலிருந்து[2] வந்தவை. அவற்றுள் ஒருபகுதி பிளேடிய மக்களால்[3] செலுத்தப்பட்டது. அவர்களுக்குக் கடலைப் பற்றி ஒன்றும் தெரிந்திலது. இருப்பினும் இத்தகைய பொறுப்பான பணியை ஏற்று நடத்துவதற்கான காரணம், அவர்களது நாட்டுப்பற்றும்,[4] அளவிடமுடியாத தைரியமுமே.

கிரேக்கக் கடற்படை—ஆதன்ஸிலிருந்து வந்தவை	...	127
கொரிந்திலிருந்து[5] வந்தவை	...	40
மெகராவிலிருந்து[6] வந்தவை	...	20
ஆதன்ஸிலிருந்து மேலும் வந்தவை, சால்சிஸ்[7] என்பவரால் தலைமை தாங்கிச் செலுத்தப்பட்டவை	...	20
ஈஜினாவிலிருந்து[8] வந்தவை	...	18
சிசீயானிலிருந்து[9] வந்தவை	...	12
ஸ்பார்டாவிலிருந்து[10] வந்தவை	...	10
எபிடௌரஸிலிருந்து[11] வந்தவை	...	8
எரிட்ரியாவிலிருந்து[12] வந்தவை	...	7
டிரோஸனிலிருந்து[13] வந்தவை	...	5
ஸ்டிராவிலிருந்து[14] வந்தவை	...	2
சியோசிலிருந்து[15] வந்தவை—50 துடுப்புகள் கொண்ட படகுகளுடன்	...	2
		271

1. Greek naval fleet 2. Athens 3. Platea 4. Patriotism 5. Corinth 6. Megara 7. Chalcis 8. Aegina 9. Sicyon 10. Sparta 11. Epidaurus 12. Eritrea 13. Troezen 14. Styra 15. Ceos

ஆக, மேற்கூறப்பட்ட நாடுகளே அர்டிமிஸியம்[1] எனும் இடத்துக்கு அனுப்பிய கப்பல்களின் எண்ணிக்கையாகும். அவற்றின் மொத்த எண்ணிக்கை 271—துடுப்புகள் கொண்ட படகுகள் நீங்கலாக. அக் கப்பற்படைத் தளபதி யூரிபியாடிஸ்[2]; இவர் யூரிக்ளீடஸ்[3] என்பாரின் மகனார் ஆவார். ஸ்பார்டா நாட்டால் அனுப்பப்பட்டவர். மற்றவர்கள் லேஸிடெமோனியத்[4] தலைவரையே நாடினர். ஆதன்ஸ் நகரவாசிகள்[5] தளபதியாக இருக்க விரும்பினர். ஆயினும், இந்த இக்கட்டான நிலைமையில் தாங்கள் தலைமைத் தளபதிப் பதவிக்காகப் போட்டியிட்டால், அப் போட்டிப் பூசலினால், கிரேக்க நாடே[6] அழிந்து ஒன்றுமில்லாமல் போய்விடுமென்று[7], வாளாவிருந்தனர்.

அர்டிமிஸியம் எனும் இடத்தில் கிரேக்கர்கள்[8] வந்து கூடிய பொழுது, அங்கே ஏற்கெனவே மிகப்பெரிய பாரசீகக் கப்பற்படை[9] வீற்றிருந்ததைக் கண்டு அச்சங்கொண்டனர். தாங்கள் நினைத்ததற்கு மாறாகவே நடந்துவிட்டது என நினைத்தனர். மனத்தில் பேரச்சம் கொண்டு, அர்டிமிஸியத்தை விட்டகலவும், கிரீஸின் உட்பகுதியில்[10] புகுந்தோடவும் திட்டமிட்டனர். இத்திட்டம் யூபிய மக்களை[11]க் குலுக்கி விட்டது. தங்கள் குடும்பம் என்ன ஆகுமோ என்ற பயத்தால், கப்பல் தலைவர் யூரிபியாடிஸைச் சிறிது நேரமோ—சில நாள்களோ— அங்கேயே தங்குமாறும், அதற்குள் அவர் குடும்பங்களை வேறு இடங்களுக்கு மாற்றிக் கொள்ளலாம் என்றும் கேட்டுக்கொண்டனர். ஆனால் யூரிபியாடிஸ் அதற்கு இணங்காமல் மறுத்து விட்டார். உடன் அம் மக்கள் தெமிஸ்டாகிளிஸ்[12] என்பவரை அணுகினர். தெமிஸ்டாகிளிஸ் ஆதன்ஸ் நாட்டு[13]க் கப்பல் தளபதி. அவரிடம் 7000 பவுன் மதிப்புள்ள நாணயங்களை வெகுமதியாக—இலஞ்சமாகக்—கொடுத்து, கிரேக்கக்கப்பல்களைக் கடற்கரையோரத்திலேயே நிறுத்தி வைத்து, சிறிது காலத்தைக் கடக்க ஏற்பாடு செய்தனர். அதில் ஆறில் ஒரு பகுதியை

1. Artimisium 2. Euripiades 3. Euricleides 4. Lacedaemonian 5. Athenians 6. Greece 7. Vanquished 8. Greeks 9. Persian fleet 10. Interior 11. Eoboeans 12. Themistocles 13. Athens

யூரிபியாடிஸிடம் கொடுத்து ஆவனசெய்யுமாறு கூறினர். யூரிபியாடிஸும் அப்பணம் தெமிஸ்டாகிளிஸிடமிருந்து வெகுமதியாக வந்ததாக எண்ணி, கிரேக்கக் கப்பல்களைக் கடற்கரையோரம் நிறுத்தி வைக்கக் கட்டளையிட்டார். ஆகவே, யூபியமக்களின் எண்ணம் நிறைவேறிற்று. அவர்கள் தங்கள் குடும்பங்களை நாட்டின் உள்பகுதிக்கு அனுப்பிவிட்டனர்.

இனி போரைப்பற்றிக் கவனிப்போம்.

பாரசீகர்கள் அபீடே[1] எனும் இடத்தைப் பிற்பகல் அடைந்தனர். அங்குச் சென்றதும், தங்களுக்கு முன்னமேயே ஒரு சிறிய கிரேக்கக் கப்பற்படை அர்டிமிஸியத்தில் குழுமியிருந்ததைக் கண்டனர். உடன் அச்சிறு படைகளைப் பிடித்துவிட வேண்டுமென்று பாரசீகர் துடித்தனர். உடன் பாரசீகர்கள் தங்கள் 200 கப்பல்களைக் காபேரியஸ்[2], ஜெரிஸ்டஸ்[3] மூலமாகச் செலுத்தி, கிரேக்கக் கப்பல்களை வளைத்துக் கொள்ள நினைத்தனர். ஸில்லியஸ்[4] என்பவர்—சியோன்[5] நாட்டினர்—மிகச் சிறந்த கடல் மூழ்கி—அதற்குள் அவர் 10 மைல் கடலுள் மூழ்கி நீந்தி நேரே கிரேக்கப் படையிருந்த அர்டிமிஸியத்தில்[6] வெளிவந்து பாரசீகர்[7] யூபியாவை[8] வளைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் என்றும், பாரசீகக் கப்பல்களுக்குச் சூறாவளியினால் பெருஞ் சேதம் ஏற்படுள்ளது என்றும் கூறினார்.

பாரசீகர்கள் தங்களுக்குள் பெரும் படையையும், கிரேக்கர்களின்[9] சிறிய படையையும் பார்த்து, வெற்றி தம்முடையதே என்றும், இவ்வளவு சிறிய அளவில் கிரேக்கர்கள் தடுப்பது பைத்தியக்காரத்தனம் என்றும் கேலிப் பேச்சுப் பேசிக் கொண்டிருந்தனர்.

போருக்குக் கொடியும் காட்டியாகி விட்டது. இரண்டு கப்பற் படைகளும் ஒன்றையொன்று நெருங்கி வருகின்றன. உடன் இரவு வந்துவிட்டது. அவரவர் தத்தம் இருப்பிடம் சென்றனர். அன்றிரவு ஒரு பெரும் சூறாவளி அத் துறை

1. Apetae 2. Caphareus 3. Geraestus 4. Scyllius 5. Scione 6. Artemisium 7. Persians 8. Euboea 9. Greeks

முகத்தில் வீசிற்று. மின்னல் இடியுடன் கூடிய மழை பொழியத் தொடங்கிற்று. பாரசீகக் கப்பல்களுக்கு அன்றிரவு பெரும் பாடாயிருந்தது. மற்றும் யூபியாவைச் சுற்றி வளைக்கச் சென்ற கப்பல்கள் பட்டபாடு சொல்லத் தரமன்று. தெய்வச் சோதனை போல, பாரசீகர்களின் கப்பல்கள், கிரேக்கக் கப்பல்களின் அளவின் எண்ணிக்கைக்கே வந்துவிடும் போன்று தோன்றியது.

அடுத்த நாள் பொழுது விடிந்தது. கிரேக்கர்களுக்கு ஆதன்ஸிலிருந்து[1] 53 கப்பல்கள் வந்தன. யூபியாவைச் சுற்றி வளைக்கச் சென்ற பாரசீகக் கப்பல்கள் சூறாவளியால் நாசமாக்கப்பட்டன. இச் செய்தி கிரேக்கப் பெருமக்களுக்கு ஸில்லியஸ்[2] மூலமாக எட்டிற்று.

போர் பகலில் தொடங்கிற்று. கிரேக்கர்கள் சில பாரசீகக் கப்பல்களைப் பிடித்தனர்; பாரசிர்கள் கிரேக்கக் கப்பல்களைப் பிடித்தனர்.

கிரேக்கர்கள் தங்கள் கப்பல்களைப் பின்செலுத்தினர். தெமிஸ்டாகிளிஸ்[3] மிகவும் வேகமாகப் போகக் கூடிய கப்பலில் சென்று கொண்டே, அயோனியர்களை[4] உதவி செய்யுமாறு அறை கூவிச் சென்றார். கிரேக்கர்கள் அர்டிமிஸியத்திலிருந்து பின்வாங்கி விட்டனர்.

போசிய[5] நாட்டினர் மட்டும் கிரேக்கர்களுடன் நன்றி விசுவாசத்துடன் இருந்தனர். அவருக்குத் திசாலி[6] நாட்டு மக்களைப் பிடிக்கவில்லை — திசாலி நாட்டு மக்கள் பாரசீகப் படையுடன் உதவி செய்யும் நோக்கத்துடன் சேர்ந்து விட்டனர் என்பதற்காக. ஆபேயில்[7] அப்பொலோ[8] தெய்வத்தின் கோயில் சூறையாடப்பட்டது. சில போசிய மக்கள்[9] துரத்திக் கொல்லப் பட்டனர். சில போசிய நாட்டுப் பெண்கள்[10] பெருவாரியான பாரசீகர்களால் கற்பழிக்கப் பட்டு[11] உயிர் துறந்தனர்.

---

1. Athens 2. Scyllius 3. Themistocles 4. Ionians 5. Pocian 6. Thessaly 7. Abae 8. Apollo 9. Phocians 10. Phocian women 11. Raped

பின்னர், கிரேக்கக் கப்பற் படைகள்[1] சலமிஸ் என்னுமிடத்தில் குவிக்கப்பட்டன.

இதற்குள் ஆதன்ஸ் நகரைச்[2] சூழ்ந்து முற்றுகையிட்டன பாரசீகப் படைகள். ஆதன்ஸ் நகர மக்கள் சில மணி நேரம் சமாளித்தாலும், பகைவர்கள் சுவர்களைத் தாண்டி உள்புகுந்து விட்டனர். நேரே கோவிலுக்குச் சென்று யாவரையும் கொன்று போட்டு, இருந்த செல்வத்தை மூட்டையாகக் கட்டிக் கொண்டனர். ஆதன்ஸ் நகரம் ஸெர்க்ஸிஸ் வசமாகி விட்டது. இச்செய்தியை அர்டபானஸுக்குத்[3] தெரிவிக்க உடனடியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உடன் பாரசீகப் படை சலமிஸுக்குப்[4] புறப்பட்டன சலமிஸில் பகைவர் இல்லாத இடத்தில் பாரசீகர்கள்[5] தங்கள் இருப்பிடங்களைக் கொண்டனர். இரவு வந்து இருள் சூழ்ந்ததால், போர் அடுத்த நாள் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது.

அடுத்த நாள் கிரேக்கக் கப்பல்களின்[6] எண்ணிக்கை 380 ஆயிற்று. போர் மிக மும்முரமாக நடந்தது. பல பாரசீகர்களின் கப்பல்கள் சேதப் படுத்தப்பட்டன. கிரேக்கர்கள் வெற்றிக் கருகில் வந்துவிட்டனர். ஈஜினா[7], ஆதன்ஸ் இரு நகரப் படைகளும் சிறந்த பாராட்டுகளைப் பெற்றன. ஈஜினாவின் பாலிக்ரிடஸ்[8] சிறப்பாகப் போற்றப் பட்டார்.

அர்டிமிஸியா[9] எனும் பெண்மாலுமி எதிரியின் கப்பலிலிருந்து, சில சேதங்களை உண்டு பண்ணி விட்டுத் திரும்பிச் சென்று விட்டாள். அவளை உயிருடன் பிடிப்பவருக்கு 400 பவுன் வெகுமதி தருவதாக ஆதன்ஸ் நகர மக்கள் முரசறைந்தனர். ஆனால், அவள் தந்திரமாகத் தப்பிச் சென்று விட்டாள்.

பாரசீகர்களுக்குக் கடுஞ்சேதம் விளைவித்துக் கிரேக்கர்கள் தம் இடம் திரும்பினர். சலமிஸ் போரில்[10] பாரசீகர்கள் படுதோல்வியடைந்தனர். இத்தோல்விச் செய்தி பாரசீகத்துக்கு[11] ஸெர்க்ஸிஸால்[12] உடன் தெரிவிக்கப்பட்டது.''

---

1. Greek fleet 2. Athens 3. Artabanus 4. Salamis 5. Persians 6. Greek ships 7. Aegina 8. Polycritus 9. Artemisia 10. Battle of Salamis 11. Persia 12. Xerxes

விளக்கவுரை :

கிரேக்கப் படை[1] : கிரேக்கர்களுக்கு[3] உதவிய நாடுகளும், கப்பல்கள் எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. அதில் 271 கப்பல்கள் என்று கப்பல்களின் மொத்த எண்ணிக்கை காணப் படுகிறது ஆனால், பாரசீகக் கப்பல்களின்[3] எண்ணிக்கை 1207 என்று ஏற்கெனவே குறிப்பு காணப்படுகிறது.மற்றும், அக்கப்பல் களை ஓட்டுவதில் தலைமை தாங்கியவர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. கிரேக்கர்கள் ஸ்பார்டா வீரர்களுடன்[4] சேர்ந்து சிறந்த வெற்றியைச் சலமிஸ் போரில்[5] பெற்றனர்.

யூரிபியாடிஸ்[6] : இவர் யூரிக்ளீடஸ்[7] என்பாரின் மகனார்; ஸ்பார்டாவில்[8] மிகச் சிறந்த வீரர் எனக் கருதப்பட்டவர். இவர் கிரேக்கக் கப்பல் தளபதியாகப் பாரசீகருக்[9]கெதிராகப் பணி யாற்றினார். பாரசீகப் போர்ச் செய்தி யூபிய மக்களை[10] உலுக்கி விட்டது. உடன் தங்கள் குடும்பங்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்ற, யூரிபியாடிஸைக் கடற் கரையிலேயே கப்பலுடன் இருக்குமாறு வேண்டினர். ஆனால் அதற்கு அவர் மறுத்து விட்டார். கொஞ்சம் பவுன் அன்பளிப்பாகக் கொடுத்தவுடன் அவ்வாறு இருக்க ஒப்புக் கொண்டார். இலஞ்சம் அக்காலத்தில் தொடக்க நிலையில் இருந்தது. ஆனால் இக்காலத்தில் அது விஸ்வரூபதரிசனம் எடுத்துத் தாண்டவமாடுகிறது.

அர்டிமிஸியம்[11] : இது யூபியா நாட்டில்[12] வட கடற்கரைப் பகுதியில் விளங்கிய ஒரு துறைமுகம். இங்குத்தான் கிரேக்கப் படைகள்— கப்பற்படைகள்— குவிக்கப்பட்டு. கி.மு 480-ல். பாரசீக அரசர் ஸெர்க்ஸிஸின்[13] க்ப்பற்படையைத் தோல்வி யுறச் செய்தன. இங்குத்தான் பாரசீகக் கப்பல்கள் சூறாவளியால் நாசமாக்கப்பட்டுச் சேதமடைந்தன.

அபிடே[14] : அர்டிமிஸியத்தை அடைவதற்கு முன் பாரசீகர் கள் தங்கள் கப்பல்களைச் செலுத்திய ஒரு துறைமுகம். இங்கிருந்து கிரேக்கப் படைகளை வளைத்துக் கொள்ளும் எண்ணத்துடன் பாரசீகப் படைகள் காபேரியஸ்,[15] ஜெரிஸ்டஸ்[16] மூலமாகச் செலுத்திச் சூழ்ந்து கொள்ளத் திட்டமிட்டுச் செயலாற்றினர். ஆனால் மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வம்

---

1. Greek Fleet 2. Greeks 3. Persian Ships 4. Spartan Heroes 5. Battle of Salamis 6. Euripiades 7. Euricleides 8. Sparta 9. Persians 10. Euboeans 11. Artemisium 12. Euboea 13. Xerxes 14. Apetae 15. Caphareus 16. Geraestus

வேறொரு விதமாகச் செயலாற்றி விடுகிறது. எவரும் எதிர் பாராத ஒரு பெரும் சூறாவளி அன்றிரவு அடித்துப் பாரசீகர் களின் கப்பல்களை[1] நாசமாக்கி விட்டது. கிரேக்கர் கப்பல் களை[2] வளைத்துக் கொள்ளவேண்டுமென்று முயன்ற பாரசீகரின் கப்பல்கள், எதிர்பாராத விதமாக ஒரு பெருஞ்சூறா வளியால் நாசமாக்கப் பட்டு விட்டது, கிரேக்கர்களின் நல்ஊழே என்று கூறவேண்டும்

ஸில்லியஸ்[3] : இவர் கடலுள் மூழ்கி எழுவதில் வல்லுநர். இவர் சியோன்[4] நாட்டைச் சார்ந்தவர். உடன் இவர் கடலுள் மூழ்கி அங்கிருந்து 10 மைல் தொலைவில் உள்ள அர்டிமிஸியத் துக்குச்[5] சென்று, கரையேறி, யூபியமக்களைப்[6] பாரசீகர்கள்[7] வளைத்துக் கொள்ளும் முயற்சியையும், அவர்களுக்குச் சூறா வளியால் நேர்ந்த துன்பத்தையும் எடுத்துரைத்தார். இது நடந்தது கி.மு. 480 ஆகும்.

சலமிஸ் போர்[8] : இப்போரில் (கி.மு. 480) பாரசீகக் கப்பல் கள் சேதமடைந்து, பாரசீகர்கள் படுதோல்வியுற்றனர். இச் செய்தி ஸெர்க்ஸிஸால்[9] சூஸா நகரத்தில்[10] இருந்த அர்ட பானஸ்[11] என்பவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

கிரேக்கப் படைகளுக்குப் பாராட்டு : ஈஜினா[12], ஆதன்ஸ் நகரக்[13] கப்பற்படைகள் தீரத்துடன் போராடின. அவர்களின் வீரமும் தீரமும் யாவராலும் போற்றப்பட்டன. அக்குணங்களே கிரேக்கப் படை வெற்றிக்கும், பாரசீகப் படைத் தோல்விக்கும் காரணமாயின.

யூபியா[14] : இது இன்றைக்கு நீக்ரோ பான்ட்[15] என்று வழங்கப்படுகிறது. இது ஈஜியன் கடலில் உள்ள மிகப்பெரிய தீவு ஆகும். இது அட்டிக[16], பியோஷியா[17] ஆகிய நாடுகளின் கடற் கரைகளை அடுத்தே காணப்படுகிறது. இது மலைகள் நிறைந்த தீவு. நடுவில் சமவெளி உள்ளது. ஹோமர் கவிஞரால்[18] (கி.மு. 850) இப்பகுதி அபன்டே[19] என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அபன்டே என்பது ஆர்கோஸ்[20] நாட்டின் அரசரான ஆபிஸ்[21] என்பவர் வாழ்ந்த இடம் என்று பொருள்

---

1. Persian Fleet 2. Greek Fleet 3. Scyllias 4. Scione 5. Artemisium 6. Euboeans 7. Persians 8. Battle of Salamis 9. Xerxes 10. Susa 11. Artabanus 12. Aegina 13. Athens 14. Euboea 15. Negropont 16. Attica 17. Boeotia 18. Homer 19. Abantes 20. Argos 21. Abys

படும். இவருடைய சந்ததிகள் அபன்டியாடிஸ்[1] என்று வழங்கப் பட்டனர். பாரசீகப் போர்களுக்குப்[2] பிறகு யூபியா, ஆதன்ஸ் நகரத்தின் ஆட்சியின் கீழ் வந்து விட்டது.

—(Latin-English Dictionary : Pages 1 & 198)

பாலிக்ரிடஸ்[3] : இவர் கிரையஸ்[4] எஸ்பாரின் மகன் ஆவார். ஈஜினா[5] நாட்டின் கப்பற்படைத் தளபதி. மிக்க துணிச்சலுடன் போரிட்டுப் பகைவர்களைத் துரத்தியடித்தார். ஆதன்ஸ் நகரப்[6] பெருமக்களால் இவர் பெரிதும் பாராட்டப் பெற்றார். தனியாக நின்று போர் செய்து வெற்றியடைந்தவர் இவர் என்று பெரும் பாராட்டுக்கு உரியவரானார்.

அர்டிமிஸியா[7] : இவள் ஒரு பெண் மாலுமி. எதிரியின் கப்பலிலிருந்து, கிரேக்கக் கப்பலுடன் மோதி, அதில் தந்திரமாக ஏறிச் சிலரைக் கொன்று, அக்கப்பலைக் கடத்திச் சென்று விட்டாள். கிரேக்கர்கள்[8], இவளைத் தங்கள் கூட்டாளிகளுடன் சேர்ந்தவள் என்று தவறாக எண்ணி அவளைக் கொல்லாமல் விட்டு விட்டனர். பின்னர் அவளது சதி தெரிந்ததும், அவள் தலையைக் கொணர்பவருக்கு 400 பவுன் வெகுமதி அளிக்கப் படும் என்று அறிவிப்பு விடுத்தனர் அதற்குள் அப் பெண் மாலுமி[9] கிரேக்கக் கப்பலுடன் தப்பிச் சென்று தன் ஆள்களுடன் சேர்ந்து விட்டாள். ஸெர்க்ஸிஸ் மன்னர் அவளது தீரத்தைப் பாராட்டினார்.

இறுதியில் அவளுக்கு ஸெர்க்ஸிஸ் பரிசுகள் அளித்ததாக வரலாறு கூறுகிறது. அப்பொழுது அவர் கூறினார்: "எம் ஆண்கள் பெண்கள் ஆகிவிட்டனர்; ஆனால், எம் பெண்களோ ஆண்களாகி அதிசயம் நடத்திக் காட்டினர்". மற்றும் ஸெர்க்ஸிஸ் தம் மகன்களுடன் அவளை எபீசஸ்[10] நகருக்கு அனுப்பிவைத்தார்.

---

1. Abantiades 2. Persian Wars 3. Polycritus 4. Crius 5. Aegina 6. Athens 7. Artemisia 8. Greeks 9. Woman-Sailor 10. Ephesus

2. தெமிஸ்டாகிளிஸ்

''ஹெர்மோடிமஸ்[1] ஓர் அலி[2]. அவர் பிடாஸம்[3] எனும் ஊரிலிருந்து முதன் முதல் வந்தவர். அவர் அழகான சிறுவர்களை விதையடித்து[4], அடுத்த நாடுகளில் — கீழை நாடுகளில்—விற்று விடுவார். அது போலவே, தாம் முதலில் பணியாற்றிய பனோனியஸ்[5] என்பாரின் நான்கு புதல்வர்களை வரவழைத்து, அவர்கள் விதைகளையடித்து விட்டார். மற்றும் அந் நான்கு புதல்வர்களை ஏவி, தங்கள் தந்தை பனோனியஸுக்கு விதையடிக்குமாறு செய்து விட்டார். இதனால் ஹெர்மோடிமஸ், பனோனியஸை, தம்மைக் கொடுமைப் படுத்தியதற்காகப் பழிக்குப் பழி வாங்கி விட்டார்.

அர்டிமிஸியாவைத்[6] தம் மகன்களுடன் எபீஸஸுக்கு[7] அனுப்பியவுடன், அங்கங்கே சிதறிக்கிடந்த மூன்று இலட்சம் பாரசீக வீரர்களைக்[8] கூப்பிட்டு, மர்டோனியஸ்[9] கட்டளைப்படி நடந்து கொள்ளுமாறு ஸெர்க்ஸிஸ் அவர்களுக்குக் கட்டளையிட்டனுப்பினார்.

இதற்கிடையில், தெமிஸ்டாக்கிளிஸ் என்பவர் தம் யோசனையைத் தெரிவித்தார். ''கிரேக்கர்களே[11] உடன் உங்கள் வீடுகளுக்குச் சென்று விடுங்கள்! விவசாயத்தைப் பெருக்கவும், நாம் அயோனியாவிற்கும்[12] ஹெல்லஸ்

---

1. Hermotimus 2. Eunuch 3. Pedasum 4. Castrated 5. Panonians 6. Artemisia 7. Ephesus 8. Persian soldiers 9. Mardonius 10. Themistocles 11. Greeks 12. Ionia

பான்டிற்கும்[1] அடுத்து வரும் வசந்த காலத்தில் கப்பலோட்டிச் செல்வோமாக!'' என்று கூறினார்.

உடன் ஸெர்க்ஸிஸ்[2] அரசருக்குத் தூது அனுப்பி, ''ஆதன்ஸ் நகரில்[3] கிரேக்கர் எவருமிலர்; இங்கு வந்து பொருள் சேதம், ஆள்சேதத்தைத் தவிர்க்கக் கிரேக்கர்கள் இருக்கும் இடத்தில் போய்ப் போர் செய்யலாம்,'' என்று தெரிவிக்கச் செய்தார். அதன் காரணமாக, ஸெர்க்ஸிஸின் படைவீரர்கள் ஆதன்ஸுக்குப் போகாமல், சலமிஸ்[4] துறை முகத்துக்குச் சென்று விட்டனர். ஆனால் அங்கு ஏற்பட்ட சூறாவளி ஸெர்க்ஸிஸ் கப்பல்களை— பாரசீகக் கப்பற்படை வீரர்களை— நாசமாக்கி விட்டது. கிரேக்கர்கள் வெகு எளிதில் பாரசீகர்களை விரட்டியடித்து வெற்றி கண்டனர். பாரசீகருக்குப் பேரிழப்பு நேரிட்டு விட்டது.

தெமிஸ்டாகிளிஸ் சிறந்த வீரர் என்று கருதப்பட்டு, அவருக்கு ஒலிவ இலை மாலையை[5] அணிவித்தனர். மற்றும் அவருக்கு ஒரு தேர் தரப்பட்டது[6]-- அதுதான் ஸ்பார்டாவில் சிறந்த வண்டியாகும். மற்றும் தெமிஸ்டாகிளிஸுக்குப் புகழாரங்கள் சூட்டப்பட்டன. அவர் டெகியா[7] வரை, 300 ஸ்பார்டா வீரர்களால் அணி வகுத்து அழைத்துச் செல்லப்பட்டார்.[8]''

விளக்கவுரை:

ஹெர்மோடிமஸ்:[9] இவர் ஓர் அலியாகக்[10] கருதப்பட்டார். அழகான சிறுவர்களைக் கவர்ந்து, அவர்களை விதையடித்து,[11] கீழை நாடுகளுக்கு விற்று வந்தார். அவ்வரசர்கள் தங்கள் அந்தப்புரத்தில் அவர்களை வைத்திருந்தனர்.

முதன் முதல் பனோனியஸ் என்பவர் கீழ் அடிமை[12] யாகப் பணியாற்றினர். பனோனியஸ் ஹெர்மோடிமஸுக்கு விதையடித்து, அடிமையாக வைத்துக்கொண்டார். பின்னர் ஸெர்க்ஸிஸ் அவையில் சேர்ந்து பணியாற்றினர். இறுதியில் பனோ

1. Hellespont 2. Xerxes 3. Athens 4. Salamis 5. Garland of olive leaves 6. Chariot 7. Tegea 8 Guard of honour 9. Hermotimus 10. Eunuch 11. Castrate 12. Served as slave

னியஸைப் பதிக்குப் பழிவாங்கி விட்டார். அவருடைய மகன் களைக் கொண்டே, தந்தைக்கு விதையடித்து வைத்து விட்டார்.

பனோனியஸ்[1]: இவர் எபீசஸில்[2] ஓர் உயர் குடும்பத்தைச் சார்ந்து பல அடிமைகளை வைத்திருந்தார். அவ் அடிமைகளுள் ஒருவர் ஹெர்மோடிமஸ்[3]. இவ்வடிமை தன் எஜமானனிடம் பழிக் குப்பழி வாங்கி விட்டான். பனோனியர் அவர்களுக்கு நான்கு மகன்கள் உண்டு. அவர்களை விதையடித்து[4], அவர்களைக் கொண்டே தந்தைக்கும் விதையடித்து விட்டார். அவர்களை அலியாக்கி[5], ஸெர்க்ஸிஸ்[6] பேரவையில் இருந்தார்.

தெமிஸ்டாகிளிஸ்[7]: இவர் ஆதன்ஸ் நகரவாசிகளுள்[8] மிகவும் புகழ் பெற்றவர். இவர் அரசாண்ட ஆண்டுகள் (கி.மு 514-449) அதாவது 65 ஆண்டுகள் அரசாட்சி செய்தார். இவர் மிகுந்த புத்திசாலியாயிருந்தார். இவர் தந்தை நியோ கிளிஸ்[9]; தாய் அப்ரடோனான்[10]; திரேசிய நாட்டு மங்கை[11] நள்ளாள். எவர் ஒருவர் புகழுடன் விளங்குகிறாரோ, அவர்க்கு எதிராகப் பணியாற்றுவதில் வல்லுநர். முக்கியமாகக் கி.மு. 483-ல் அரிஸ்டைட்ஸ்[12] என்பாரைப் பொதுமக்கள் வாக்கெடுப் பின்மூலம் சமூகத்தினின்று வெளியேற்றப்பட்டார். அதாவது ஒரு களிமண் பலகையில் பொதுமக்கள் இவரைப்பற்றி தேவை யுள்ளவரா அல்லது தேவையற்றவரா என்று கோடிட்டுக் காட்டு வார். தெமிஸ்டாகிளிஸின் செல்வாக்கினால், அவரை நாட்டி னின்றே வெளித்துரத்தி ஒழித்துக் கட்டினார். அப்பொழு திலிருந்து இவர் ஆதன்ஸின்[13] அரசியல் தலைவராக விளங்கி னார். ஸெர்க்ஸிஸ் ஆதன்ஸ் நகரைக் கப்பல்கொண்டு தாக்கின பொழுது, இவர் ஆதன்ஸ் நகரக் கப்பற் படைத்தளபதியாக[14] நியமிக்கப்பட்டார். இவருடைய மதி நுட்பத்தால் கிரேக்க மக்கள்[15] சேதங்களினின்று காப்பாற்றப்பட்டனர். ஸெர்க் ஸிஸ் படையெடுத்து வருவது தெரிந்ததும் ஆதன்ஸ் நகரத்தி லுள்ள கிரேக்க மக்களை உடன் காலி செய்து உள்நாட்டிற்குப் போய் விடுமாறு கட்டளையிட்டார். கிரேக்கர்கள் சலமிஸ்[16], ஈஜினா[17], டிரோஜன்[18] ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டனர்.

---

1. Panonians 2. Ephesus 3. Hermotimus 4. Castrated 5. Eunuch 6. Xerxes 7. Themistocles 8. Athenians 9. Neocles 10. Abratonan 11. Thracians 12. Aristides 13. Athens 14. Naval Commander 15. Greeks 16. Salamis 17. Aegina 18. Trojan

ஒரு நம்பகமான தூதுவர் மூலமாக ஸெர்க்ஸிஸ் அரசருக்குத் தூது அனுப்பி, கிரேக்கர்கள் யாவரும் பயந்து ஆதன்ஸ் நகரை விட்டு ஓடி விட்டனர் என்றும், அங்குப் படையெடுத்து வருவதைவிட வேறு இடங்களுக்குச் சென்று போரிடுவது நல்லதென்றும் கூறச் சொன்னார். அத்தூதுவன் கூறிய சொற்களை அப்படியே நம்பி, ஆதன்ஸ் நகரின்மீது படையெடுக்காமல், சலமிஸ்மீது போர் தொடுக்க அங்குக் கப்பற்படைகளைப்[1] பெருவாரியாகக் குவித்தார். அங்கு ஏற்பட்ட பெருஞ் சூறாவளி பாரசீகப் படைகளை[2] நாகமாக்கிவிட்டது. எஞ்சியிருக்கும் கப்பல்களைக் கிரேக்கர்கள்[3] வளைத்துக் கொண்டனர். பாரசீகர்கள் சலமிஸ் போரில்[4] தோல்வியடைந்தனர். தெமிஸ்டாகிளிஸின்[5] புகழ் உச்சக் கட்டத்திற்குப் போயிற்று.

தெமிஸ்டாகிளிஸின் கைகள் தூய்மையற்றன. எப்பொழுதும் தினவு எடுத்துக் கொண்டேயிருக்கும். இலஞ்சம் வாங்குவதில் ஒரு வரையறை கிடையாது. அவர் அந்நாட்டவர்களால் நாடு கடத்தப்பட்டார் (கி.மு. 472). அவர், தம்மைக் கொல்ல ஏதோ சதி நடக்கிறதென்று ஊகித்து கி.மு. 466-ல் சோர்ஸிராவுக்கு ஓடினார். மலோஸி நாட்டு[6] அரசர் அட்மிடஸிடம்[7] சரண் புகுந்தார். இவர் போவதற்குச் சற்று முன்னர்தான் ஸெர்க்ஸிஸ்[8] அரசர் காலமாகிவிட்டது (கி.மு. 465) தெரிந்தது. அப்பொழுது அர்டா ஸெர்க்ஸிஸ்[9] அரியணை ஏறினார். அவரிடம் சென்று ஓராண்டு அவகாசம் கொடுத்தால் அதிசயம் நிகழ்த்துவதாகக் கூறினார். ஓர் ஆண்டில் பாரசீக மொழியை[10] நன்கு கற்றுக்கொண்டு, அர்டா ஸெர்க்ஸிஸின் பேரபிமானத்தைப் பெற்றார். இருப்பினும் ஏதோ மனக்கோளாறு காரணமாக, தம் நாட்டினரைப் பழி வாங்கவில்லையே எனும் ஏக்கத்தால், தாமே விஷம் குடித்து கி.மு. 449-ல் இறந்து விட்டார். அவருக்கு அப்பொழுது வயது 65.

ஆயினும் தம் வாழ்க்கையை அவதூறிலும் சோகத்திலுமே முடித்துக் கொண்டார்.

—(A Smaller Classical Dictionary: Page 529)

&

(History of Greece by J. B. Bury, Pages 334-336)

---

1. Naval Fleet 2. Persian Armies 3. Greeks 4. Battle of Salamis 5 Themistocles 6. Maloosi 7. Admetus 8. Xerxes 9. Arta Xerxes 10. Persian Language

3. மர்டோனியஸ் அனுப்பிய அலெக்சாந்தர்

"பாரசீக நாட்டுக்கும் ஆதன்ஸ் நகரத்திற்கும்[1] ஓர் இணைப்பை உண்டுபண்ணும் முயற்சிக்காக அலெக்சாந்தர் தூது வந்துள்ளார் எனும் செய்தி ஸ்பார்டா நாட்டுக்குக் காட்டுத் தீப்போன்று பரவிற்று.

ஸ்பார்டாவின் தூதர்கள்[2] அங்கு வந்து சேர்ந்தனர்; அவர்கள் கூறினர்: "ஸ்பார்டா மக்கள்[3] எங்களை இங்கு அனுப்பியுள்ளனர். உங்கள் திட்டத்தால் கிரேக்க நாட்டை அல்லலுக்கு ஆளாக்காதீர்கள். முதலில் ஆதன்ஸ் நகரம் தான் இப்போரைத் தொடங்கிற்று— நாங்கள் அல்லர். இப்பொழுது கிரீஸ் முழுவதும் போருக்குள் சிக்கித் தவிக்கின்றது. இவ்வளவு காலம் கிரீஸ் சுதந்தரத்துக்காகப் பாடுபட்டது என்ற கருத்துமாறி, அந்நாடே இனி அடிமை நாடாகப்போகிறது என்பதைக் கேட்டுக்கொண்டு நீங்கள் யாவரும் வாளாவிருக்கப் போகிறீர்களா? ஒன்று உங்களுக்கு உறுதியளிக்கிறோம். நீங்கள் பாரசிகர்களை[4] எதிர்த்து நடத்தும் போரில்—போர் முடியும் மட்டும்—உங்கள் குடும்பத்தையும், மனைவி மக்களையும் காப்பாற்றித் தருகிறோம் என்று உறுதியளிக்கின்றோம். மர்டோனியஸ் கூறுவதாக அலெக்சாந்தர் கூறும் கூற்றில் மயங்கிவிடாதீர்கள். அயல் நாட்டவர்கள் உண்மை பேச மாட்டார்கள்; அவர்களிடம் பண்பு இருக்காது; அவர்களது ஒரே நோக்கம் நாடு பிடிப்பது—அஃதொன்றே;" என்று கூறி முடித்தனர் அந்த ஸ்பார்டாவின் தூதர்கள்.

---

1. Athens 2. Spartan Messengers 3. Spartans 4. Persians

ஆதன்ஸ் நகரமக்கள்[1] அலெக்சாந்தருக்குப்[2] பின்வருமாறு பதிலளித்தனர்: "பாரசீகர்களின்[3] சக்தி எம்மைவிடப் பல மடங்கு பெரியது என்பது யாம் அறிந்ததே. அஃது ஒன்றே உங்களது சமாதானம். ஆனால் சுதந்தரத்தை விரும்பும் எம் உள்ளுணர்வு எல்லாவற்றையும் விட மிகப்பெரியது. பாரசீகர்களுடன் சமாதானப் பேச்சுக்கு வருவது என்பது முடியாத காரியம். நாங்கள் எப்பொழுதும் அதற்குச் சம்மதியோம். நீங்கள் மர்டோனியஸிடம்[4] கூறுங்கள்: சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைவது மாறினாலும் கூட, நாங்கள் ஸெர்க்ஸிஸ்[5] அரசுடன் சமாதானப் பேச்சுப் பேசமாட்டோம் அவர் தீக்கிரையாக்கிய எங்கள் புனிதக் கோயில்களின் சார்பாக அவரை எதிர்த்தே தீருவோம். மீண்டும் இது போன்ற சமாதானப் பேச்சை முன்னிட்டு நீவிர் இங்கு வரவேண்டாம். அஃது இருவருக்கும் உகந்ததன்று," என்று ஆதன்ஸ் நகரவாசிகள் வீராவேசமாகக் கூறி முடித்தனர்.

மற்றும் ஸ்பார்டாவின் தூதர்களுக்கு ஆதன்ஸ் மக்கள் பின்வருமாறு கூறினர்: "மாசிடோனியர்கள்[6] பாரசீகர்களை வெறுப்பது நியாயமே. எங்கள் வீரம் கெட்டு விடவில்லை. உலகில் உள்ள பொன், பொருள் யாவற்றையும் கொடுத்தால் கூட, அந்நிய நாட்டு அடிமை என்ற நிலையை என்றைக்குமே நாங்கள் ஆதரிக்கமாட்டோம். மற்றும், வேறொன்றும் உள்ளது. நாம் யாவரும் கிரேக்க நாட்டுத்[7] தாயின் பிள்ளைகள்! நமக்குப் பொதுவான கிரேக்க மொழி உண்டு; பொதுவான இரத்தம் இரு சாரார் உடம்பிலும் ஓடுகிறது; நம் கிரேக்க நாட்டின் புனிதக் கோயில்கள்[8] யாவற்றையும் தீக்கிரையாக்கினர். இதை உண்டாக்கியவர்களுடன் கைகோத்து நிற்பதா? அவமானம்! நேரில் போரில் சந்தித்து உரிய பாடத்தைக் கற்பிப்போமாக! உங்கள் அன்பு — போர்க் காலத்தில் எங்கள் குடும்பங்களைக் காப்பாற்றுவதாகக் கூறியது — மிக மிகப் போற்றத் தக்கதே. இருப்பினும், நாங்களே சரிசெய்து கொள்ளப் பார்க்கிறோம். நாம் சிறிது ஏமாந்தாலும் — காலம் தாழ்த்

---

1. Athenians 2 Alexander 3. Persians 4. Mardonius 5. Xerxes 6. Macedonians 7. Greece 8. Greek Temples

தினாலும் — பகைவர் அட்டிக நாட்டில்[1] நுழைந்து விடுவர். ஆகையால், பகைவர்களை நேரில் சந்திக்கப் பியோஷியா[2]வுக்குப்படை அனுப்பி வையுங்கள் — அவர்கள் அட்டிகாவில் நுழையுமுன்பே.

ஆதன்ஸ் நகர மக்கள்[3] தம் பதிலைத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர். ஸ்பார்டாவின் தூதர்களும்[4] தங்கள் நாட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டனர்."

விளக்கவுரை:

மர்டோனியஸ் :[5] கோப்ரியாஸிற்கும்[6], டாரியஸ்[7] சகோதரிக்கும் பிறந்த மகன். ஸெர்க்ஸிஸ்[8] அரசரின் அத்தை மகன். இவர் ஸெர்க்ஸிஸுடன் கிரேக்க நாட்டுப் போரில் (கி மு. 479) கலந்து கொண்டார். மற்றும் பக்கம் 405 – குறிப்பு-6 பார்க்கவும்.

அலெக்சாந்தர் : இவர் அமிந்தாஸின்[10] மகன் ஆவார். அமிந்தாஸ் மாசிடோனிய அரசராக இருந்தார். அவரது இறப்பிற்குப் பிறகு அவர் மகன் அலெக்சாந்தர் அரசர் ஆனார். (கி.மு. 505). அவர் பாரசீகருக்கு[11] அடி பணியும் நிலை ஏற்பட்டு, ஸெர்க்ஸிஸ் அரசருக்கு உதவியாகக் கி.மு. 480-ல் கிரேக்க நாட்டுப் படையெடுப்பில்[12] கலந்து கொண்டார். அவர் தம் உள் மனத்தில் கிரேக்கர்களுக்கு[13] உதவிசெய்யவேண்டும் என்பதே. அவர் கி மு. 455-ல் இறந்தார். அவருக்குப் பிறகு அவர் மகன் பெர்டிகஸ்[14] அரியணை ஏறினார்.

இங்குக் கூறப்பட்ட அலெக்சாந்தரின் சந்ததியாரே, மாசிடோனியப் பேரரசராக விளங்கிய பிலிப்[15] மகன் அலெக்சாந்தர். இவ் அலெக்சாந்தர் இந்தியா[16] வரையிலும் வந்து ஆசியா[17] முழுவதையும் வென்றார். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 356-323. ஆக, அமிந்தாஸ் மகன் அலெக்சாந்தர் வேறு; பின்னர் விளங்கிய பிலிப் மகன் பேரரசர் அலெக்சாந்தர் வேறு.

ஸெர்க்ஸிஸ் : பாரசீகப் பேரரசர் டாரியஸின் மகன். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 485-465.

---

1. Attica 2. Boeotia 3 Athenians 4. Spartan Messengers 5. Mardonius 6. Gobryos 7. Darius 8. Xerxes 9. Alexander 10. Amyntas 11. Persian 12. Invasion 13. Greeks 14. Perdiccas 15. Philip 16. India 17. Asia

புத்தகம் - 9

1. அட்டிக நாட்டில் மர்டோனியஸ் பின்வாங்குதல்

"ஆதன்ஸ் நகரமக்கள்[1] தந்த பதிலுடன் அலெக்சாந்தர்[2]— அமிந்தாஸின்[3] மகன் - நாடு திரும்பியதும், மர்டோனியஸ்[4] திசாலியை[5] விட்டு ஆதன்ஸ் நகருக்கு[6] எத்துணை வேக மாகச் செல்ல முடியுமோ அத்துணை வேகமாகத் தம் படை களுடன் செல்லலானார். போகும் வழியில் ஆங்காங்கே வந்து சேர்ந்து கொண்டன பலவேறு நாட்டுப் படைகள். பாரசீகர்களை[7] மேலும் வீரதீரத்துடன் போரிடுமாறு ஊக்கிக் கொண்டே சென்றார். மற்றும், ஸெர்க்ஸிஸ்[8] அரசர் பின் வாங்கியபோது, அவருடன் சேர்ந்து கொண்ட லாரிஸாவின் தோராக்ஸ்[9], மர்டோனியஸை ஊக்கிக் கொண்டே சென்றார்.

பியோஷியாவில்[10] அவரைச் சற்றுத் தங்குமாறு செய்ய விரும்பினர்; அவரை ஊக்கப்படுத்தவும் செய்தனர்.

மர்டோனியஸ் கருத்தின்படி, அவர்களும், அவர்கள் கருத்துப்படி மர்டோனியஸும் செயல்படவில்லை. ஆதன்ஸ் நகரை எப்படியாயினும் வெல்லவேண்டும்; அடிமை நாடாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று துடித்தார். அவர் அட்டிக நாடு[11] சேர்ந்தவுடன், அங்குள்ள கிரேக்க மக்கள்[12] அந்நகரத்தைக் காலி செய்து விட்டு சலமிஸ்[13] இடத்துக்குச் சென்று விட்டதை அறிந்தார். ஆகையால் மர்டோனியஸ், பாழடைந்த மக்கள் இல்லாத ஒரு நகரைப் பிடித்தார். இந் நகரம் ஸெர்க்ஸிஸால் ஏற்கெனவே கைப்பற்றப்பட்டது;

---

1. Athenians 2. Alexander 3. Amyntas 4. Mardonius 5. Thessaly 6. Athens 7. Persians 8. Xerxes 9. Thorax of Larissa 10. Boeotia 11. Attica 12. Greeks 13. Salamis

10 மாதங்கள் கழித்து அதே நகரை மர்டோனியஸ் கைப் பற்றினார்.

ஆதன்ஸ் நகர மக்களின் பொதுக் கூட்டம் சலமிஸில் நடைபெற்றது. அங்கு மூரிசைட்ஸ்[1] என்பவரை, ஆதன்ஸ் நகரிலிருந்து சலமிஸுக்கு அனுப்பி, முன்னர் அலெக்சாந்த ருக்கு எடுத்தியம்பிய அதே சொற்களைக் கூறி, "அவற்றை எடுத்தியம்புவாயாக" என்று மொழிந்தார். உடன் மூரிசைட்ஸ் சலமிஸுக்குப் புறப்பட்டுச் சென்று ஆதன்ஸ் நகர மக்க ளுக்குத் தாம் கொணர்ந்த செய்தியைத் தெரிவித்தார். ஆலோசகர்களுள் ஒருவரான லிஸிடாஸ்[2], அவர் தந்த யோச னையை ஏற்றுக் கொள்வது நல்லது என்று தெரிவித்தார். இக்கருத்து அவரது சொந்தக் கருத்தாகவும் இருக்கலாம். அல்லது அவ்வாறு கூறுமாறு மர்டோனியஸால்[3] கட்டளை யிடப்பட்டும் இருக்கலாம். அல்லது இலஞ்சம் கொடுத்து, அவ்வாறு கூறுமாறு செய்யவும் பட்டிருக்கலாம். ஆனால், சபை உள்ளும் வெளியிலும் இருந்த ஆதன்ஸ் நகர மக்கள்[4] அவற்றைக் கேட்டு வெகுண்டெழுந்தனர். அவர்கள் எழுந்த வேகத்தில் லிஸிடாஸைக் கல்லாலெறிந்து துடிக்கத் துடிக்கச் சாகடித்து விட்டனர். மூரிசைட்ஸ் எவ்வித இன்னலும் இன்றித் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதற்குள் ஆதன்ஸ் நகர மக்கள் வெகுண்டு எழுந்து லிஸிடாஸைக் கொன்ற செய்தியை அறிந்த கிரேக்கப் பெண்கள்[5] ஒன்று கூடி, உடன் லிஸிடாஸ் வீட்டுக்கு ஓடி, அவர் மனைவியையும் குழந்தைகளைக் கூடக் கல்லால் எறிந்து கொன்று விட்டனர்.

பதினைந்து நாள்கள் சென்றன. இதற்கிடையில் பெலெபொநீஸஸில்[6] உள்ள எல்லா ஆண்மகன்களும் ஒரே உறுதியுடன் அங்கிருந்த நீர் இணைப்பில் குறுக்குச் சுவர் ஒன்று எழுப்புவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தனர். அப்பணி முடியுந்தறுவாயில் இருந்தது.

அலெக்சாந்தர்[7]- அமிந்தாஸ்[8] மகன்- ஆதன்ஸ் நகருக்கு

1. Murichides 2. Lycidas 3. Mardonius 4. Athenians 5. Greek Women 6. Peloponnesus 7. Alexander 8. Amyntas

வந்து, அவர்களைப் பாரசீகர்களுடன்[1] சமாதானத்துக்கு வருமாறு[2] அழைத்த பொழுது, ஸ்பார்டாவின் மக்கள்[3] அவர்களைத் தடுத்து, "கிரேக்க மானமே போய்விடும் என்று கூறினீர்களே, இப்பொழுது ஏன் வாளாயிருக்கி றீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு ஒரே பதில்தான் உண்டு. அப்பொழுது அவர்கள் திட்டமிட்ட குறுக்குச் சுவர்[4] கட்டப்படவில்லை. அதன் காரணமாகப் பாரசீகர்களிடம் அ ர்களுக்கு ஓர் அச்சம் இருந்தது. ஆனால் இப்பொழுது அச் சுவர் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. பாரசீகர்களிடம் பயம் ஏதும் இல்லை. ஆகையால் ஆதன்ஸ் நகர மக்கள் உதவி செய்யாமலிருப்பினும், ஒன்றும் கெட்டுப் போகாது என்று ஸ்பார்டா மக்கள் தைரியத்துடன் இருந்தனர்.

இறுதியில் ஸ்பார்டா மக்கள் தங்கள் படைகளை இயக்கி விட்டனர்.

அப்பொழுது ஸ்பார்டாவின்[5] முழு அதிகாரமும் லியோனிடஸின்[6] மகனான பிளெயிஸ்டார்கஸ்[7] கையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் அச்சிறுவன் மைனர்; வயது முதிராதவன். அதன் காரணமாக, பௌசானியஸ்[8] என்பவரே அவருக்கு ஆதரவாளராக— பாதுகாவலராக[9]— விளங்கினார். மற்றும் பௌசானியஸ் அம் மைனர் சிறுவ னுக்கு ஒன்று விட்ட சகோதரன் ஆகவேண்டும். பௌசானி யஸும், தம் குடும்பத்தைச் சார்ந்த யூர்யானக்ஸ்[10] என்பவரும் போருக்குத் தலைமை தாங்கி நடத்தலாயினர்.

அடுத்த நாள் ஸ்பார்டா மக்கள் போருக்கு ஏற்கெனவே சென்று விட்டனர் என்பதை அறிந்த ஆதன்ஸ் நகர வீரர்கள்[11], தங்களுடன் 5000 பொறுக்கிய லேஸி டெமோனியர்களை[12] அழைத்துக் கொண்டு ஸ்பார்டா படைகளுக்கும் முன்னே செல்ல விரைந்தனர்.

ஆர்கோஸின்[13] மக்கள், முன்னர் ஸ்பார்டா மக்களைப் படையெடுக்காதவாறு தடுத்து நிறுத்தி விடுவதாக

1. Persians 2. Peaceful terms 3. Spartans 4. Cross wall 5. Sparta 6 Leonidas 7. Pleistarchus 8. Pausanias 9 Regency 10. Euryanaks 11, Athenians 12, Lacedaemonians 13, Argos

மர்டோனியஸிடம்[1] உறுதி கூறியிருந்தனர். ஆனால், இப்பொழுதோ, ஸ்பார்டன் மக்கள் போருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டனர். இதை அறிந்த ஆர்கோஸின் மக்கள், சிறந்த ஓட்டக்காரன்[2] ஒருவனை அனுப்பி, "லேஸிடெமோ னியர்கள் ஏற்கெனவே போருக்குக் கிளம்பி விட்டனர். ஆர்கோஸ் மக்கள் இப்பொழுது ஒன்றும் செய்ய முடியாது. ஆவன செய்து கொள்ளவும்," என்று செய்தியைச் சொல்லி அனுப்பினர். அச் செய்தியை மர்டோனியஸ் கேட்டதும் என்ன செய்வதென்று தெரியாமல் துடித்தார். பௌசானி யஸின் படைகள் அந்த நீரிணைப்பை[3] அடையுமுன், ஆதன்ஸ் நகரைத் தீக்கிரையாக்கினர். அதில் உள்ள சுவர்கள் கோயில்கள், மரங்கள் யாவற்றையும் கொளுத்தினர். குதிரை போவதற்கு ஒழுங்கான இடம் அட்டிக நாட்டில்[4] இல்லை. அதனால் அதை விட்டு வெளியேறி விட்டனர்.

மேலும் மேலும் கிரேக்க சேனைகள்[5], படை வீரர்கள் அந் நீரிணைப்பிற்கு வருகை தந்த வண்ணமிருந்தனர். இதை யறிந்த மர்டோனியஸ் வேறுபக்கம் கருத்தைத் திருப்பி, மெகராவுக்கு[6] ஓட்டம் எடுத்தார். இவ்விடமே, ஐரோப்பாவின்[7] மேற்குப் பகுதியில் உள்ள மிக்க தொலை நகரம் ஆகும்.

இவ்வாறு மர்டோனியஸ் அட்டிக நாட்டிலிருந்து[8] பின் வாங்கவே நாலாபக்கங்களிலும் பாரசீகர்கள் சிதறி ஓடலா யினர்."

விளக்கவுரை

அலெக்சாந்தர்[9] : இவர் அமிந்தாஸ்[10] மகன் ஆவார். அமிந் தாஸ் மாஸிடோனிய அரசர். அவர் ஆட்சிசெய்த காலம் கி.மு. 505-485 அதாவது 20 ஆண்டுகள் ஆண்டார். இவர் வேறு, பிலிப் மகன்[11] அலெக்சாந்தர் பேரரசர் வேறு. மற்றும் பக்கம் 448, பார்க்கவும்.

மர்டோனியஸ் : ஸெர்க்ஸிஸ்[12] அரசரின் அத்தை மகன். ஸெர்க்ஸிஸுடன் கிரேக்கநாட்டுப் போரில் கலந்து கொண்டார்.

---

1. Mardonius 2. Fast runner 3. Isthmus 4. Attica. 5. Greek Armies 6. Megara 7. Europe 8. Attica 9. Alexander 10. Amintas 11. Philip 12. Xerxes

அட்டிக[1] நாட்டின் போரில் கி.மு. 499-ல் பின்னடைந்து விட்டார். மற்றும் பக்கம் 405, குறிப்பு-6 பார்க்கவும்.

திசாலி[2] : கிரேக்க நாட்டிலேயே மிகப்பெரிய தொகுதி. மலைகள் நடுவில் உள்ளது.

தோராக்ஸ்[3] : இவர் லாரிஸா[4] நாட்டைச் சார்ந்தவர் கிரேக்க நாட்டைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று துடித்த வர்.

பியோஷியா[5] : கிரேக்கநாட்டில் ஒரு மாவட்டம். இதன் தலைநகரம் தீபே[6]. இம்மாவட்டம் 14 பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. மற்றும் பக்கம் 367, பார்க்கவும்.

ஸெர்க்ஸிஸ் : இவர் பாரசீக வேந்தர். டாரியஸ்[7] அரசரின் புதல்வர். கிரேக்க நாட்டை வெல்ல உறுதி பூண்டவர். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 485-465 அதாவது 20 ஆண்டுகள் ஆண்டார். இறுதியில் இவர் தளபதி அர்டபானஸ்[8] என்பவரால் கி.மு. 465-ல் கொலைசெய்யப்பட்டார்.

சலமிஸ்[9] : இங்கு நடந்த போர் (கி.மு. 480) மிகப் புகழ் பெற்றதாகும். சலமிஸ் அட்டிக நாட்டின் மேற்குப்பகுதியில் இருந்தது. இது கி.மு.318 வரை ஆதன்ஸ் நகரைச்[10] சார்ந்த தாக இருந்தது. பிறகு மாசிடோனியர்[11] வசமாயிற்று.

மூரிசைட்ஸ்[12]: ஆதன்ஸ் நகரிலிருந்து சலமிஸுக்கு அனுப் பப்பட்ட தூதுவர். பாரசீகருடன்[13] சமாதானத்துடன் போவதே மேல் என்பதே அவர் கூறிய வாசகம்.

லிஸிடாஸ்[14] : இவர் கிரேக்க நாட்டு ஆலோசகருள் ஒருவர். இவர் இலஞ்சம் பெற்றுப் பாரசீகர் பக்கம் பேசியிருக்கக் கூடும். அதனால்தான் இவர் கல்லால் எறிந்து கொல்லப்பட்டார். இவர் மனைவி, மக்களும் அவ்வாறே கொல்லப்பட்டனர்.

பெலபொனீஸஸ்[15]: கிரேக்கநாட்டின்[16] தென்பகுதி

---

1. Attica 2 Thessaly 3. Thorax 4. Larissa 5. Boeotia 6. Thebae 7. Darius 8. Artabauns 9. Salamis 10. Athens 11. Macdeonians 12. Myrichides 13. Persians 14. Lycidas 15. Peloponnesus 16. Greece

பெலாப்ஸ்[1] எனும் கிரேக்க தெய்வத்தின் பெயரால் ஏற்படுத்தப் பட்டது.

லியோனிடஸ்[2]: இவர் ஸ்பார்டா நாட்டின்[3] அரசர். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு.491-480 அதாவது 11 ஆண்டுகள் ஆட்சிசெய்தார். இவர் அலெக்சாண்டிரைட்ஸ் என்பாரின் மகன். கிளியோமெனேவின்[4] சகோதரன். கிரேக்கநாடு கி.மு. 480-ல் ஸெர்க்ஸிஸின்[5] அரசரால் படையெடுக்கப்பட்ட பொழுது, பகை வர்க்கு எதிராகத் தெர்மொபிலேயில்[6] பாதுகாப்பாளராக[7] நியமிக்கப்பட்டார். பாரசீகர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். லியோனிடஸும் அவருடைய 5000 வீரர்களும் நீரிணைப்பைப்[8] பாதுகாத்தனர். இவர் போரில் இறந்துவிட்டார். இவரது தலையைத் துண்டித்து, சூலத்தில் மாட்டி உயரத் தொங்க விட்டார் ஸெர்க்ஸிஸ்-இதற்குக்காரணம் இருவருக்கும் ஏற்பட்ட உட்பகையே. இவரை அடுத்து இவர் மகன் பிளெயிஸ்டார்கஸ் அரியணை ஏறினார்.

பிளெயிஸ்டார்கஸ்[9] : இவர் லியோனிடஸ் மகன் ஆவார். தந்தை கொல்லப்பட்டதும், இவர் அரியணை ஏறினார். ஆனால் மைனர் என்ற காரணத்தால், பௌசானியஸ்[10] காப் பாளராக இருந்தார்.

யூர்யானக்ஸ்[11] : இவரும் பௌசானியஸும் பாரசீகரை முறியடிக்கத் தளபதியாக இருந்தனர்.

ஆர்கோஸ்[12] : இது திசாலியில்[13] உள்ள நகரமாகும் பின்னர் தலைநகரமாக விளங்கிற்று. இந்நாட்டுமக்கள் ஆர்கிவ்[14] மக்கள் என்று வழங்கப்பட்டனர்.

மெகரா[15]: இது மெகாரிஸ்[16] நாட்டின் தலைநகரம். கிரேக்க நாட்டின்[17] ஒரு சிறியபகுதி. அட்டிக நாட்டின் நான்கு பிரிவு களுள் ஒன்றாகும்.பாரசீகப் போருக்குப்[18] பிறகு, இது சுதந்திர நாடாக ஆயிற்று. கோரிந்துடன்[19] போரிட்டது. ஆதன்ஸ் நகர சேனை கி.மு. 461-ல் இந்நகரில் வைக்கப்பட்டது.

அட்டிக நாடு[20] : இது கிரேக்க நாட்டின் ஒரு பகுதி. இது முக்கோணவடிவமாய் அமைந்த நாடு. பியோஷியாவிலிருந்து[21]

---

1. Pelops 2. Leonidas 3. Sparta 4. Cleomenes 5. Xerxes 6. Thermopylae 7. Regent 8. Isthmus 9. Pleistarchus 10. Pausanias 11. Euryanax 12. Argos 13. Thessaly 14. Argives 15. Megara 16. Megaris 17. Greece 18. Persian War 19. Corinth 20. Attica 21. Boeotia

வடபகுதியில் மலைகளால் பிரிக்கப்பட்டுள்ளது. அந்நாடு அக்டெ[1] எனும் சொல்லின் அடிப்படைமீது உண்டானது. அக்டே என்றால் கடற்கரைப்பகுதி என்று பொருள்படும் சலமிஸ்[2] இந்த அட்டிக நாட்டைச் சார்ந்ததாகும். அதன் மொத்தப்பரப்பளவு ஏறக்குறைய 800 சதுர மைல்களாகும். கி.மு. 510-ல் கிளிஸ்தெனிஸ்[3], பழைய மரபு இனத்தவர்களை ஒழித்துவிட்டு, புதிய மரபு இனங்களை உண்டாக்கினார். மற்றும் அவர் நாட்டில் 174 நகரங்களை ஏற்படுத்தினார்.

(A Smaller Classical Dictionary : Page 91)

மர்டோனியஸ்[4] பின்வாங்குதல் : மர்டோனியஸ் கிரேக்க நாட்டை வென்று, ஸெர்க்ஸிஸ்[5] அரசரிடம் ஒப்படைப்பதாக உறுதியளித்தார். ஆனால் அவ் உறுதியைக் காப்பாற்ற முடிய வில்லை. மர்டோனியஸ் அட்டிக நாட்டுப் போரில் பின்வாங்கி ஓட்ட மெடுத்தார்.

நீரிணைப்பு[6] : இது கோரிந்து நீரிணைப்பு[7] ஆகும். ஹெலஸ்பான்டில்[8] இருந்தது. இதைக் கிரேக்கர்கள் பலமாகக் காத்தனர். அங்கே குறுக்குச் சுவர் ஒன்று கட்டப்பட்டது. அச்சுவர் முடிவதற்கும், பாரசீகர்கள்[9] தோல்வியடைந்து பின்வாங்கியதற்கும் பொருத்தமாயிருந்தது.

1. Acte 2. Salamis 3. Clisthenes 4. Mardonius
5. Xerxes 6. Isthmus 7. Corinth Isthmus 8. Hellespont
9. Persians

2. கிரேக்கப் படைகளின் புள்ளி விவரங்கள்

"பிளேடியாவிலும்[1] அதன் சுற்றுப் புறத்திலும் ஏற்கெனவே இருந்த படை வீரர்களுடன் மேலும், பல பகுதி யிலிருந்து வீரர்கள் சேர்ந்து கொண்டனர். அவ்வாறு சேர்ந்து கொண்ட படைகளின் புள்ளி விவரங்கள் பின் வருமாறு காணப்பட்டன:

வலப்பக்கத்தில் இருந்த லேஸிடெமோனிய[2] வீரர்கள் எண்ணிக்கை	10, 000
இவர்களுள் ஸ்பார்டாவிலிருந்து[3] வந்தவர்கள் 5000 பேர்கள் 35,000 எளிய ஆயுதம் தாங்கிய மக்களுடன் ஒன்று சேர்ந்தனர்.	
இவர்களுக்கு அடுத்த படியாகத் தம் நிலை கொண்டவர், சிறப்பு ஆயுதம் தாங்கியவர்கள்	1500
கொரிந்தியர்களிடமிருந்து[4] பெற்ற வீரர்கள்	5000
ஆர்கேடியாவின்[5] ஆர்கோமெனஸிடமிருந்து[6] பெற்றவை	600
ஸியோனிலிருந்து[7] பெறப்பட்டவர்கள்	3000
பிலியஸ்ஸிடமிருந்து[8] பெறப்பட்டவர்கள்	3000
எபிடௌரஸிலிருந்து[9] வந்தவர்கள்	800
டிரோஜனிலிருந்து[10] வந்தவர்கள்	1000
லெப்பிரியமிருந்து[11] வந்தவர்கள்	200
மைசினேயிலிருந்தும்,[12] டிரின்ஸிலிருந்தும்[13] வந்தவர்கள்	400

1. Platea 2. Lacedaemonians 3. Sparta 4. Corinthian 5. Arcadia 6. Orchomenus 7. Sicyon 8. Philius 9. Epidaurus 10 Troezen 11. Lepreom 12. Mycenae 13. Tiryns

பிலியஸிலிருந்து[1] வந்தவர்கள்	1000
ஹெர்மியோனிலிருந்து[2] வந்தவர்கள்	300
எரிட்ரியா,[3] ஸ்டிராவிலிருந்து[4] வந்தவர்கள்	600
சால்ஸிஸிருந்து[5] வந்தவர்கள்	400
அம்பிரேசியாவிலிருந்து[6] வந்தவர்கள்	500
லியுகாஸ்[7] அனெக்டோரியமிலிருந்து[8] வந்தவர்கள்	800
பாலியர்,[9] சிபாலெனாவிலிருந்து[10] வந்தவர்கள்	200
ஈஜினாவிலிருந்து[11] வந்தவர்கள்	500
மெகராவிலிருந்து[12] வந்தவர்கள்	3000
பிளேடியாவிலிருந்து[13] வந்தவர்கள்	600
ஆதன்ஸிலிருந்து[14] வந்தவர்கள்	8000

மற்றும் ஸ்பார்டா[15] லேஸிடெமோனிலிருந்து வந்தவர்கள்,[16] கன ஆயுதம் தாங்கியவர்கள் எண்ணிக்கையும் சேர்ந்து பிளேடியாவில் இருந்த கிரேக்க வீரர்களின்[17] மொத்த எண்ணிக்கை 1,10,000 (ஒரு இலட்சத்துப் பத்தாயிரம்) ஆகும்

பாரசீகர்களுக்கு[18] வலப்பக்கத்தில் மிடிய நாட்டினர், இவர்கள் கோரிந்த்[19], போடிடியா[20], ஆர்கோமெனஸ்[21], ஸியோன்[22] ஆகியவர்களின் படைகளை வளைத்தனர். பாக்டிரியர்கள்[23] எபிடௌரஸ்,[24] டிரோஜன்,[25] லெப்ரியம்[26] டிர்ன்,[27] மைசினே,[28] பிலியஸ்,[29] இங்கிருந்து வந்த கிரேக்கர்களை வளைத்துக் கொண்டனர்; பிறகு இந்தியர்கள்[30] ஹெர்மியானி,[31] எரிட்ரியா,[32] ஸ்டிரா,[33] சால்சிஸ்[34] இங்கிருந்துவந்த படைகளை வளைத்துக் கொண்டனர். இவ்வாறு மர்டோனியஸும்[35] வலப்பக்கமே நிறுத்தப்பட்டிருந்

---

1. Philius 2. Hermione 3. Eritrea 4. Styra 5. Chalcis 6. Ambracia 7. Leucas 8. Anectoreum 9. Paleans 10. Cephallena 11. Aegina 12. Megara 13. Platea 14. Athens 15. Sparta 16. Lacedaemonian 17. Greek Warriors 18. Persians 19. Corinth 20 Potidae 21. Orchomenus 22. Sieyon 23. Bactrians 24. Epidaurus 25. Troezen 26. Lepreum 27. Tyrns 28. Mycenae 29. Philius 30. Indians 31. Hermioni 32. Eretria 33. Styra 34. Chalcis 35. Mardonius

தார்.அவர்கள் ஆதன்ஸ் நகரிலிருந்து[1] வந்த படைகளையும், மாசிடோனியாவிலிருந்து[2] வந்த படைகளையும் எதிர்த்த வாறு நின்றிருந்தனர். மற்றும் திசாலியிலிருந்து[3] வந்த படைகளுக்கு எதிராகவும் நின்றிருந்தனர்.

அடுத்த நாள் இரு படைத் தலைவர்களும்—பாரசீகம்,[4] கிரேக்கம்[5] — தத்தம் கடவுளர்களுக்குப் பூசைகள் போட்டுப் பலிகள் கொடுத்தனர்.

கிரேக்கர்களுக்காக இவ்வாறு தலைமை தாங்கிப் பூசை போட்டவர் திசாமினஸ்[6] ஆவார்; இவர் அன்டியாகஸின்[7] மகன் ஆவார். இவர் டெல்பி கோயிலின்[8] அசரீரி வாக்கால்[9] அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்."

விளக்கவுரை:

கிரேக்க நாட்டுப் படை வீரர்கள்[10]: பலவேறு நாடுகளிலிருந்து வந்த கிரேக்கப் படைவீரர்களின் மொத்த எண்ணிக்கை 110,000 (ஓர் இலட்சத்துப் பத்தாயிரம்).

எதிர்நின்ற படைகள்:[11] எந்த எந்தப் படைகள், எந்த எந்தப் படைகளுக்கு எதிராக நிற்க வைக்கப்பட்டுள்ளன என்பதைக் கூறுகிறார்.

பூசை போடுதல்: யுத்தம் தொடங்குவதற்கு முன் போர்த் தேவதைகளுக்குப் பூசை போடுவது வழக்கம். பலியிடுதல், நிவேதனம் அரித்தல், மற்றும் பல சடங்குகள் அந்தந்த நாட்டின் பழக்கத்தை யொட்டி நடத்தப்பட்டன. தமிழ்நாட்டுப் போர்களிலும் அவ்வாறு செய்யப்பட்டன.

மர்டோனியஸ்[12]: கோப்ரியாஸிற்கும்[13] டாரியஸ்[14] அரசரின் சகோதரிக்கும் பிறந்த மகன்; ஸெர்க்ஸிஸின்[15] கிரேக்க நாட்டுப் போரில்[16] கலந்து கொண்டவர்; இறுதியில் தோல்வியடைந்தார் (கி.மு. 479). அரிம்னெஸ்டஸ்[17] என்பவரால் கொல்லப்பட்டார். மற்றும், பக்கம் 405, குறிப்பு-6 பார்க்கவும்.

---

1. Athens 2. Macedonia 3. Thessaly 4. Persia 5. Greece 6. Tisamenus 7. Antiochus 8. Delphi Temple 9. Oracle 10. Greek Armies 11. Opposing armies 12. Mardonius 13. Gobryas 14. Darius 15. Xerxes 16. Greek wars 17. Arimnestus

இந்தியர்கள்[1]: இவர்கள் நேபாளம்[2], பஞ்சாப்[3], சிந்து[4] பலுச்சிஸ்தானம்[5] முதலான இடங்களிலிருந்து சென்றவர்கள். இவர்கள் வளைத்துக்கொண்ட வீரர்கள்: ஹெர்மியான்[6], எரிட்ரியா[7], ஸ்டிரா[8], சால்சிஸ்[9] ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்கள். இந்தியாவின் வடமேற்குப் பகுதி டாரியஸ் அரசுக்குக் கப்பம் கட்டிற்று. அது ஒரு சத்ராபியாக[10]—20 ஆவது சத்ராபியாக—விளங்கிற்று. மற்றும், பக்கம் 262, குறிப்பு-20 பார்க்கவும்.

திஸாமினஸ்[11]: இவர் அன்டியாகஸின்[12] மகன் ஆவார். எலிஸ்[13] நாட்டிலிருந்து வந்தவர்: இயாமிடே[14] குடும்பத்தைச் சார்ந்தவர். லேஸிடெமோனியர்கள்[15] இவரைத் தங்கள் நாட்டினராகவே கருதினர். தம் உதவி ஸ்பார்டா நாட்டினர்[16]க்குத் தேவை என்பதை உணர்ந்து, ஏலப்பொருளை உயர்த்திவிட்டார். அவர் ஐந்து போட்டிகளில் வெற்றியடைவார் என்று அசரீரி வாக்குக்[17] கூறிற்று. ஆயினும் அப்போட்டிகள் மல்யுத்தங்கள் அல்ல; அவை போரையே — பெரும் போர்களையே — குறிப்பிட்டன.

ஸ்பார்டா மக்கள் திஸாமினஸைப் போர் செய்ய அழைத்து வந்து விட்டனர்.

இறுதியாக இவர் ஹிராக்ளிடியர்களிடம்[12] போரிட்டுத் தோற்று இறந்து விட்டார் என்று தெரிய வருகிறது.

---

1. Indians 2. Nepal 3. Punjab 4. Sind 5. Baluchistan 6. Hermian 7. Eritrea 8. Styra 9. Chalcis 10. Satrapy 11. Tisamenus 12. Antiochus 13. Elis 14. Iamidae Family 15. Lacedaemonians 16. Spartans 17. Oracle 18. Heracledean

3. பிளேடியாவில் கிரேக்கர்களின் வெற்றி

"இரு படைகளும்—கிரேக்கர்,[1] பாரசீகர்[2]—நேருக்கு நேர் போர் செய்யத் தொடங்கின. மும்முரமாகக் கைகள் கலந்தன — டெமீடர் கோயிலின்[3] அருகில் இப்போர் உச்சக் கட்டத்தை யடைந்தது. மீண்டும் மீண்டும் ஸ்பார்டா வீரர் களின்[4] ஈட்டிகளைப் பிடுங்கி வளைத்து உடைத்தெறிந் தனர் பாரசீக வீரர்கள். இருப்பினும், பாரசீகர்கள் ஆயுதம் குறைவாகவே ஏந்தினர்; சரியான பயிற்சி பெறாத வர்கள்; போகும்போதே அந்தந்த நாட்டு மக்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி கூட்டமாகக்கலந்து கொண்டனர். ஸ்பார்டா வீரர்களை விட பலத்தில் குறைந்தவர்கள். சில பொழுது ஒருவராக, சில பொழுது 10 பேர் அடங்கிய கூட்ட மாக வந்து தாக்கினர் — எவ்வித ஒழுங்கு முறையுமின்றி. ஸ்பார்டா வீரர்கள், மர்டோனியஸ்[5] எந்த இடத்தில் நின்று போர் செய்தாரோ, அந்த இடத்தைச் சூழ்ந்து உதவி செய்ய நெருக்கினர். அவருடைய வெள்ளைக் குதிரையைக் குறி பார்த்து ஈட்டியெறிந்து வீழ்த்தினர் - தம்மைச் சுற்றிலும் ஆயிரம் போர் வீரர்கள் போரிட்டும் கூட. மர்டோனியஸ் உயிருடன் இருக்கும் வரை, தங்களைப் பாதுகாத்துக் கொண்டும், எதிர்த்தும் போரிட்டனர். அதேபொழுது லேஸிடெமோனியர்களின்[6] படைகளில் பெருஞ்சேதத்தை விளைவித்தனர். மர்டோனியஸ் இறந்து விட்டதும், அவருடைய மெய்க்காப்பாளர்கள் கொல்லப்பட்டனர். மீதியிருந்த பாரசீகர்கள் லேஸிடெமோனியர்களிடம் சரண் குந்தனர். சிலர் ஓட்டமெடுத்தனர்; அவர்கள் தோல்விக்கு

---

1. Greeks 2. Persians 3. Demeter Temple 4. Spartan heroes 5. Mardonius 6. Lacedaemonians

முக்கியக் காரணங்கள், சரியான ஆயுதங்கள் தாங்கி வாராமை; ஆயுதம் தாங்கிய காலாட்படையை எதிர்த்து நின்றமை ஆகியவையே.

அதனால் கோயிலில் அசரீரிவாக்குச் சொன்னது உடன் பலித்து விட்டது. மர்டோனியஸ் லியோனிடஸைக்[1] கொன்றதில் ஸ்பார்டா மக்களுக்குத்[2] திருப்தியை அளித்தது.



ஆதன்ஸ் நகரத்தின் கிரேக்க நாணயம்
(ஆந்தை முகப்புக் கொண்டது)

மற்றும் கிளியம்ப்ரோடஸின்[3] மகனும், அனக்ஸான் டிரடிஸின்[4] பெயரனுமான பௌசானியஸ்,[5] கிரேக்க வரலாற்றில்[6] மாபெரும் வெற்றியை அடைந்தார். அத்தகைய வெற்றி வேறு எந்த வரலாற்றிலும் காணாத வெற்றியாகும்.

மற்றும் அரிம்னெஸ்டஸ்[7] என்பவரால் — இவர் புகழ் பெற்ற ஸ்பார்டா நாட்டு வீரர்[8] — மர்டோனியஸ்[9] கொலை செய்யப்பட்டார். ஆயினும் அரிம்னெஸ்டஸ், பாரசீகப் போர்[10] முடிவுற்றதும், தம் தலைமையில் விளங்கிய 300 போர் வீரர்களுடன் கொல்லப்பட்டுத் தம் இறப்பைத் தாமே தேடிக் கொண்டார். இவ் இறப்பு, மெஸ்ஸெனியர்களுக்கு[11] எதிராக ஸ்டெனிக்ளிரஸ்[12] எனும் இடத்தில் நடந்த போரில் ஏற்பட்டு விட்டது.

லஸிடெமோனியர்களால்[13] பாரசீகப் படை பிளக்கப் பட்ட பொழுது, அப்பாரசீகர்கள்[14] தீபே நகரத்தின்[15] எல்லை யாகத் தாங்களே கட்டிய தடுப்புச் சுவரின்பின் ஓடி ஒளிய லாயினர். இவ்வாறான தோல்வி ஏற்படக் காரணம்

1. Leonidas 2. Spartans 3. Cleombrotus 4. Anaxandrides 5. Pausanias 6. Greek Annals 7. Arimnestus 8. Spartan Heroes 9. Mardonius 10. Persian War 11. Messenians 12. Stenyclerus 13. Lacedaemonians 14. Persians 15. Thebae

உண்டு — அப்பாரசீகர்கள் எலூசிஸ்[1] இடத்திலுள்ள கோயிலின் கர்ப்பக் கிருகத்தில் உள்ள தெய்வச்சிலையை நெருப்பிட்டுக் கொளுத்தினர். அத்தெய்வம் வெகுண்டு அப்பாரசீகர்களைப் பழிக்குப் பழி வாங்கி விட்டது.

இப்போரில் மிகவும் சேதமடையாத பிரிவு, பியோஷியர்[2]களின் குதிரைப் படை ஒன்றே.

பாரசீகர்கள் 300,000 பேர் இருந்தனர். இவர்களுள் 40,000 பேர்கள் அர்டபானஸுடன் ஓடிவிட்டனர். மிகுந் திருந்தவர்கள் 3000 பேர்களே. இவர்களே பாரசீகர்களுள் பிழைத்திருந்தவர்கள். ஆக பாரசீகர்களுள் இறந்தவர் களின் எண்ணிக்கை 257,000 (இரண்டு இலட்சத்து ஐம்பத் தேழாயிரம் பேர்கள்).

ஸ்பார்டா மக்களின்[3] இழப்பு — கொல்லப் பட்டவர் 91; டிஜியர்கள்[4] 16, ஆதன்ஸ் நகர வீரர்கள்[5] 52; மற்ற வர்கள் 23.

பிளேட்டியாவில் பாரசீகர்கள் படுதோல்வி அடைந்தனர். பௌசானியஸ்,[6] வரலாறு காணாத அளவு வெற்றி யடைந்து வாகைமாலையாக ஒலிவ மாலையைச் சூடினார்.''

விளக்கவுரை:

பிளேடியா[7]: இவ்விடம் பியோஷியாவில் இருந்த ஒரு பழம் பெரு நகரம். இங்குத்தான் பாரசீகர்கள் தோற்றனர் லேஸிடமோனியர்கள் - ஸ்பார்டன் வீரர்கள்—வெற்றி பெற் றனர். ஒரு பொழுது பிளேடியாவின் மக்கள், ஆதன்ஸ் நகர ஆட்சியின் கீழ்த்[8] தம்மை ஒப்படைத்துக் கொண்டனர். பாரசீகர் கள் அட்டிக நாட்டில்[9] படையெடுத்தபொழுது (கி.மு. 490) அவர்கள் ஆதன்ஸ் நகர மக்களின் உதவிக்காக 1000 வீரர்களை மாரதான் போரில்[10] உதவி செய்ய—அனுப்பினர். 10 ஆண்டு கள் கழித்து (கி.மு. 480) அவர்களுடைய நகரம் பாரசீகர் களால்[11] நாசமாக்கப்பட்டது—ஸெர்க்ஸிஸால்[12]—தீபே நாட்டு

1. Elusis 2. Boeotians 3. Spartans 4. Tegians 5. Athenians 6. Pausanias 7. Platea 8. Under Athenian Rule 9. Attica 10. Battle of Marathon 11. Persians 12. Xerxes

மக்களின்[1] வற்புறுத்தலினால். அவ்விடம் பாழடைந்திருந்தும் கூட, அடுத்த ஆண்டு நடந்த போரில் (கி.மு. 479) மர்டோனியஸ்[2] தோல்வியடைந்தார். கிரேக்க நாட்டின்[3] சுதந்தரம் நிலை நாட்டப்பட்டு விட்டது. பிளேடியா[4] மும்முறை தரை மட்டமாக்கப்பட்டு, மும்முறை புகழ் உச்சிக்கு ஏறிற்று. இறுதியில் மாசிடோனிய[5] அரசுக்குக் கீழ்ப்படிந்து வாழலாயிற்று.

டெமீடர் கோயில்[6]: பிளேடியாவின் எலூசிஸில்[7] இருந்த முக்கியக் கோயில். மற்றும் அடுத்த பக்கம் குறிப்பு—11 காண்க.

மர்டோனியஸ்: கோப்ரியாஸிற்கும்[8] டாரியஸ்[9] சகோதரிக்கும் பிறந்த மகன். ஸெர்க்ஸிஸின் அத்தை மகன். கிரேக்க நாட்டுப்போரில்[10] (கி.மு. 479-ல்) கலந்து கொண்டு, பின்னடைந்து, அரிம்னெஸ்டஸ்[11] என்பவரால் கொல்லப்பட்டார். மர்டோனியஸ் சிறந்த வீரர்.

பௌசானியஸ்[12]: கிளியம்புரோடஸின்[13] மகனும் அனெக்ஸான்டிரிடிஸின் பெயரனும் ஆவார். பாரசீகர்களைத் தோல்வியடையச் செய்து, வெற்றி பெற்றவர். மர்டோனியஸ் இறப்புக்குக் காரணமாக இருந்தவர்.

அனெக்ஸான்டிரிடிஸ்[14]: இவர் ஸ்பார்டா நாட்டின்[15] அரசர்; இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 560-520 அதாவது 40 ஆண்டுகள் ஆண்டார். தனக்குக் குழந்தைகள் இல்லை; மனைவியை விவாகரத்து செய்ய முடியாது. அதன் காரணமாக, 5 பேர் அடங்கிய ஸ்பார்டா குழுவின்—ஈபார்ஸ்[16] எனப்பட்டவர்—அவர் மற்றொருத்தியை மணக்க அனுமதி கொடுத்தனர். அவ் இரண்டாம் மனைவிக்குக் கிளியம்புரோடஸ் எனும் மகன் பிறந்தான். இவரே, தந்தை இறந்ததும் அரியணை ஏறினார். (கி.மு. 520).

கிளியம்புரோடஸ்: இவர் ஸ்பார்டா நாட்டின் மன்னர். அனெக்ஸான்டிரிடிஸின் மகன். இவர் ஆட்சி செய்த காலம் கி.மு. 520-491 ஆகும். அதாவது 29 ஆண்டுகள் ஆண்டார். கி.மு 510-ல் ஹிப்பியஸ்[17] என்பவரை ஆதன்ஸ் நகர ஆட்சியிலி

---

1. Thebans 2. Mardonius 3. Greece 4. Platea 5. Macedonia 6. Demeter Temple 7. Elusis 8 Gobryas 9. Darius 10. Greek War 11. Arimnestus 12. Pausanias 13. Cleombrotus 14. Anaxandrides 15. Sparta 16. Ephors 18. Hippius

ருந்து வெளியேற்றி விட்டார். டெல்பி[1] கோயிலில் உள்ள பூசாரிணிக்கு[2] இலஞ்சம் கொடுத்து, டிமராடஸைப்[3] பதவி இழக்குமாறு செய்தார். இறுதியில் இவருக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டு கி.மு. 491-ல் தற்கொலை செய்து கொண்டார்.

அரிம்னெஸ்டஸ்:[4] புகழ்பெற்ற ஸ்பார்டா நாட்டு[5] வீரர். இவர்தாம் மர்டோனியஸை[6] வாளால் வெட்டி[7] வீழ்த்திக் கொன்றவர் முதலில் அவர் குதிரையையும், பின்னர் அவரையும் கொன்றனர் (கி மு. 479). ஆயினும், அரிம்னெஸ்டஸ், மெஸ்ஸெனியர்களுக்கு[8] எதிராகப் போரிடும்பொழுது இறந்துவிட்டார்.

ஸ்டெனிக்ளிரஸ்[9]: இவ்விடத்தில்தான் அரிம்னெஸ்டஸ் மெஸ்ஸெனியர்களுடன் போர் புரியும்போது இறந்துவிட்டார்.

லேஸிடெமோனியர்:[10] ஸ்பார்டா மக்களின் வேறு பெயர்.

எலூசிஸ்:[11] இது அட்டிக நாட்டில்[12] ஒரு நகரம் ஆகும். ஆதன்ஸ் நகருக்கு[13] வடமேற்கில் இருந்தது. அங்கேதான் டெமீடர் கோயில்[14] இருந்தது. அதைப் பாரசீகர்[15] தீக்கிரையாக்கினர். அத் தெய்வம் வெகுண்டு, பாரசீகர்களுக்குத் தோல்வியை இழைத்து விட்டது—பிளேடியா போரில் (கி.மு. 479).

தீபே நகரம்[16]: இந்நகரத்தில் டெல்பி கோயில் இருந்தது. இங்கே மன்னரும், மக்களும் சென்று குறி[17] கேட்டனர். மற்றும், பக்கம் 59, குறிப்பு-11 பார்க்கவும்.

கிரேக்கர்கள்[18]—முக்கியமாகப் பௌஸானியஸ்[19] தலைமையில்—வரலாறு காணாத வெற்றியடைந்ததும், பாரசீகர்கள் படுதோல்வியடைந்ததும் இங்குக் குறிப்பிடப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளாகும். இவை கி.மு. 479-ல் நடைபெற்றன.

---

1. Delphi 2. Priestess 3. Demaratus 4. Arimnestus 5. Spartan Hero 6. Mardonius 7. Cut by sword 8. Messenians 9. Stenyclerus 10. Lacedaemonians 11. Elusis 12. Attica 13. Athens 14. Demeter Temple 15. Persians 16. Thebae 17. Oracle 18. Greeks 19. Pausanias

4. தீபே நகர முற்றுகை

''பிளேடியாவில்[1] யுத்தம் முடிவுற்றதும், பாரசீகர்[2]களிடமிருந்து கொள்ளையடித்த பொன், வெள்ளி மற்றைய பொருள்கள்யாவும் பிளேடியா அரசின் கருவூலத்தில்[3]நிரம்பிக் காணப்பட்டன. மற்றொன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. பாரசீகர்களின் இறந்த உடலங்களிலிருந்து சதை கீழே விழுந்த பிறகு எலும்புகளைக் குவியல்களாக ஆக்கினர். அக்குவியலுள் 7½ அடி உயரமுள்ள ஒரு மனிதனின் எலும்புக் கூடும் கிடைத்தது.

யுத்தத்திற்குப் பிறகு மறுநாள் மர்டோனியஸின்[4] இறந்த உடலம் அந்த யுத்த களத்திலிருந்து மறைந்து விட்டது. அதை யாரோ ஒருவர் தெரிந்தே அப்புறப்படுத்தி விட்டார், அதற்குக் காரணம், மர்டோனியஸின் மகன் அர்டான்டே[5] ஆவார். அவரே அவ்வுடலை எடுத்துக் கொடுப்பவருக்குச் சிறந்த வெகுமதி கொடுப்பதாகக் கூறி யிருந்தார். அச்சடலம் எடுக்கப்பட்டதும், அது தகுந்த சடங்குகளுடன் புதைக்கப்பட்டு விட்டது.

இறந்தோர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டு விட்ட பிறகு, ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதில் பின்வரும் முடிவு எடுக்கப்பட்டது: தீபே நகரத்தைத்[6] தாக்கி, பாரசீகர்கள் எடுத்துச் சென்ற மக்கள் யாவரையும் திருப்பித் தர வேண்டும். அவர்களுள் முக்கியமாக, திமொஜெனிடே,[7] அட்டாகினஸ்[8] என்பவரை உடன் திருப்பித் தரவேண்டும். இல்விருவரும் பாரசீகர்கள் ஆட்சி[9] வரவேண்டுமென்று முன்

---

1. Platea 2. Persians 3. Treasury 4. Mardonius 5. Artante 6. Thebae 7. Timagenides 8. Attaginus 9. Persian Rule

கூட்டியே செயலாற்றி வந்தனர். அத்துரோகிகளைத் தர மறுத்தால், அந்நகரம் முற்றுகையிடப்பட வேண்டும். முற்றுகை நடைபெற வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கை. இதை முன்னிட்டுப் பிளேடியா யுத்தம் நடந்தேறிய பதினொன்றாம் நாள், தீபே நகரத்தின் முற்றுகை தொடங்கப்பட்டது, "துரோகிகளை உடன் ஒப்படையுங்கள்", என்ற கூக்குரல் வானைப்பிளந்தது. அதன்பின் நகரத்தின் மதிற்சுவர்கள், சுற்றுப்புற இடங்கள் யாவும் சூறையாடப்பட்டன. இவ்வாறு இருபது நாள்கள் முற்றுகையும் சூறையாடலும் தொடர்ந்து நடத்தப்பட்டன.

அப்பொழுது திமாஜெனிடே[1] தம் நகர மக்களுக்குக் கூறினார்: "கிரேக்கர்கள்[2] நம் தீபே நகரம்[3] விழுகிறவரை விடப் போவதில்லை. அவர்களுக்கு வேண்டியது பணம் என்றால், அதைப் பாரசீகர்களிடமிருந்து[4] உடன் வாங்கித் தருகிறோம். அல்லது நாங்கள்தான் தேவை எனில் எங்களை ஒப்படைத்து விடுகிறோம். எம் சார்பாக மற்ற எவரும் தொல்லைக்கு ஆளாக வேண்டாம். மடியவும் வேண்டியதில்லை," என்று கூறவே. அக் கூற்று யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இச் செய்தி அறிவிக்கப்பட்டவுடன், அட்டாகினிஸ் அந்நகரத்திலிருந்து தப்பி எங்கோ ஓடி மறைந்துவிட்டார். அவருடைய மகன்கள் பிடிக்கப்பட்டு, பௌசானியஸிடம்[5] ஒப்படைக்கப்பட்டனர். ஆனால், அச் சிறுவர்களைப் பார்த்த பௌசானியஸ், "இவர்கள் சிறுவர்கள், தந்தை செய்த துரோகக் குற்றச்சாட்டிற்கு இவர்களைப் பழிப்பது கூடாது," என்று கூறிவிட்டார். அவர்கள் இவர்களுக்கு இலஞ்சம் கொடுத்துத் தப்பிவிடலாம் என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்த பொழுது, இதை எவ்வாறோ அறிந்த பௌசானியஸ், அவர்கள் யாவரையும் ஒருங்கு கூட்டி, கோரிந்து[6] நகரத்துக்கு இட்டுச் சென்று, சிரச்சேதம் செய்து விட்டார். இத்துடன் தீபே நாட்டின் முற்றுகை முடிவடைந்து விட்டது.

---

1. Timagenides 2. Greeks 3. Thebae 4. Persians 5. Pausanias 6. Corinth

விளக்கவுரை:

மர்டோனியஸ்[1] : கோப்ரியாஸிற்கும்[2], டாரியஸ்[3] அரசரின் சகோதரிக்கும் பிறந்தவர். ஸெர்க்ஸிஸின்[4] அத்தை மகன். கி.மு. 479-ல் கொலையுண்டார். அவரைக் கொலைசெய்தவர் அரிம்னெஸ்டஸ்[5] என்பவர் ஆவார். அவர் சடலம் கண்டெடுக்கப் பட்டுப் புதைக்கப்பட்டுவிட்டது. இதைச் செய்ய அவர் மகன் அர்டான்டே ஏற்பாடுகள் செய்தார்.

அர்டான்டே[6] : இவர் மர்டோனியஸ் மகன். தந்தை போர்க்களத்தில் இறங்கியதும் அவர் கொல்லப்பட்டார். அவர் சடலம் எங்கிருக்கிறதென முதலில் தெரியவில்லை. அதைக் கண்டெடுப்பவருக்கு வெகுமதிகள் வழங்கப்படும் என்று கூறி யதும் சடலம் கண்டெடுக்கப்பட்டு, தகுந்த மரியாதைகளுடன் புதைக்கப்பட்டது.

தீபே நகரம்[7] : இது கிரேக்க நாட்டில்[7] பியோஷியாவில் இருந்த தீபே நகரம். எகிப்தில்[8] இருந்த தீபே நகரம்[9] வேறு. இரண்டையும் ஒன்றாக இணைத்துக் குழம்பக் கூடாது.

தீபே, பியோஷியாவின்[10] தலைநகரம்.[11] அதன் சுற்றுப்புறம் காட்மியா[12] எனப்படும். அது காட்மஸ்[13] எனும் அரசர் பெயரைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டது. இங்கேதான் டெல்பி கோயில்[14] இருந்தது. இதில் அப்பொலோ இஸ்மெனிஸ்[15] குடிகொண்ட தெய்வமாகும்.

துரோகிகள்[16] : தீபே மக்கள் முதன்முதல் கிரேக்கர்களை ஆதரித்தனர். பின்னர் தீபேநாட்டு மன்னன், டாரியஸ்[17] மகளைத் திருமணம் செய்துகொள்ளும் நோக்கத்துடன், கிரேக்கர்களைத் துறந்து, பாரசீகர்களுக்கு உதவி செய்யவும், அவர்களை ஆதரிக்க வும் செய்தான். அதன்காரணமாக அத்தலைவர்கள் துரோகிகள் என்று வழங்கப்பட்டனர். திமாஜெனிடே, அட்டாகினஸ் இரு வரும் துரோகிகளாகக் கருதப்பட்டனர்.

திமாஜெனிடே[18]; இவர் பாரசீகரை[19] ஆதரித்து அவர்களிடம் போர்த்தளபதியாய் அமர்ந்தவர். அதனால்தான் துரோகம்

1. Mardonius 2. Gobryas 3. Darius 4. Xerxes 5. Arimnestas 6. Artante 7. Thebae 8. Egypt 9. Thebes 10. Boeotia 11. Capital 12. Cadmia 13. Cadmus 14. Delphi 15. Appolo Ismenis 16. Traitors 17. Timagenides

செய்த இவரைத் தூக்கிலிடவேண்டுமென்று துடித்தனர். இவர் தம்மைத்தாமே கிரேக்கர்களிடம் ஒப்படைத்துக் கொண்டார். இவர் கோரிந்து நகரில் சிரச்சேதம் செய்யப்படடார்.

அட்டாகினஸ்[1] : இவரும் கிரேக்கநாட்டிற்குத்[2] துரோகம் செய்து பாரசீகரின் ஆதரவைத் தேடிச் சென்றதால், துரோகி என்று வழங்கப்பட்டார். ஆனால் தங்களை ஒப்படைப்போம் என்று கூறி எங்கோ ஓடி மறைந்துவிட்டார். இவருடைய மகன் கள் சிறைப்படுத்தப்பட்டுப் பௌசானியஸ்முன் கொண்டு நிறுத்தப்பட்டனர். ஆனால் அவர், "தந்தை செய்த குற்றத் துக்கு இச்சிறுவர்களை எவ்வாறு பொறுப்பாக்க முடியும்? நியாய மில்லை," என்று அவர்களை விடுதலை செய்து, தங்கள் நாட்டிற் குப் போகுமாறு அனுப்பிவிட்டார்

பௌசானியஸ்[3] : இவர் கிளியம்புரோட்ஸின்[4] மகன். அனெக்ஸான்டிரிடிஸின்[5] பெயரர். பாரசீகரைத் தோல்வி யடையச் செய்து பெரும் புகழ் பெற்றார். இவருக்குப் பல புகழாரங்கள் குவிந்தன.

கோரிந்து[6] : இது இதே பெயருள்ள சலசந்தியில் ஒரு நகரம். பழங்கால வாணிகத்தில் பெரும்புகழ் பெற்றிருந்தது. அங்கு அப்ரோடைடி[7] எனும் தெய்வம் தொழப்பட்டு வந்தது. மக்கள் எக்கட்டுப்பாடுமின்றி, வாழ்ந்து வந்தனர். இங்குத்தான் தீபே நாட்டினர்[3] சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

---

1. Attaginus 2. Greece 3. Pausanias 4. Cleomprotos 5, Anaxandrides 6. Corinth 7. Aphrodite 8. Thebans

5 ஸெர்க்ஸிஸின் முரண்பட்ட காதல்

(I) தோல்வியுற்ற பாரசீகப் படை வீரர்கள் சார்டிஸ் நகரடைதல்

மிஞ்சியிருந்த பாரசீகப் படை வீரர்களின்[1] ஒரு சிறிய தொகுதி—அழிக்கப்படுவதினின்று தப்பிப் பிழைத்த ஒரு பகுதி—மைக்கேல் குன்றுகளில்[2] மறைந்து சென்று, அங்கிருந்து சார்டிஸ் நகரத்திற்கு[3] வந்து கொண்டிருந்தது. அவ்வாறு வருகையில் டாரியஸின்[4] மகனான மெஸிஸ்டே[5]. பாரசீகப் படை பெருந்தோல்வியடையுந் தருணம், அப்படையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவருக்கும் போர்த் தளபதியான அர்டான்டேயுக்கும்[6] சிறிது வாக்கு வாதமும் காரசாரமான சொற்களும் பரிமாறப்பட்டன. மெஸிஸ்டே, கண்டவாறு திட்டிவிட்டு, எல்லாவற்றிற்கும் மேலாக'' "அவர் ஒரு பெண்ணை விட மோசமானவர்'' என்று ஏளனமாகப் பேசினார். இவ்வாறு பேசுவது ஒருவரை மிக மிகக் கேவலமாகப் பேசுவதற்கு ஒப்பாகும்—அதுவும் பாரசீகர்[7] விஷயத்தில் இவ் உவமை வெறுப்பையும் எரிச்சலையும் ஊட்டுவதாகும். ஆக, அர்டான்டே சிறிது நேரம் அவ் வசைமொழிகளைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, கோவத்துடன் மெஸிஸ்டேவைக் கொல்லத் தம் வாளை உருவினார். ஆனால் அதற்கிடையில் ஒருவர் அதைத் தடுத்து அவரை அப்புறப் படுத்திவிட்டார். அவ்வாறு அவரை விலக்கியவர் ஜெனகோரஸ்[8] ஆவார். அவர் ஹலிகார்னஸஸ்[9] எனும் ஊரினைச் சார்ந்தவர். மற்றும்

---

1. Persian army 2. Mycale Hills 3. Sardis 4. Darius 5. Masistes 6. Artayntes 7. Persians 8. Xenagoras 9. Halicarnassus

அவர் பிராக்ஸிலௌஸ்[1] என்பாரின் மகனும் ஆவார். அவர் அர்டான்டேயின் அருகில் நின்று கொண்டிருந்தார். அர்டான்டே வாளை உருவி முன் பாயும் பொழுது, ஜெனகோரஸ் மெஸிஸ்டேவை இடுப்பில் கையிட்டு, கீழே தள்ளவே, அவருடைய ஆள்கள் அவரை அப்புறப்படுத்தி விட்டனர். ஜெனகோரஸ் செய்த இந்த உதவி மெஸிஸ் டேவைக் காப்பாற்றினது மட்டுமின்றி, அவர் ஸெர்க்ஸிஸின்[2] சகோதரர் ஆனதால், அரசரின் சகோ தரரைக் காப்பாற்றி விட்டவராகவும் கருதப்பட்டார். அச் செயலுக்காக ஜெனகோரஸ், சைலீஷியா[3] முழுமைக்கும் ஆளுநராக[4] நியமிக்கப்பட்டார். இதற்குப் பிறகு போர்ப் படை சார்டிஸ் நகரை வந்தடைந்து விட்டது.

(ii) அரசர் ஸெர்க்ஸிஸின் காதல் விவகாரம்:

சார்டிஸ் நகரில்[5] ஸெர்க்ஸிஸ் இருந்த பொழுது, அவர் மெஸிஸ்டேயின்[6] மனைவியின் பேரில் பெருங் காதல் கொண்டு விட்டார். அவளும் அந்நகரிலேயே வசித்து வந்தாள். அவளுக்குப் பல கடிதங்கள், செய்திகள், வெகு மதிகள் அனுப்பியும், அவள் சிறிதேனும் அரசரின் இச்சைக்கு இசையவில்லை. ஆயினும் ஸெர்க்ஸிஸ் அவளை வற்புறுத்தவில்லை— காரணம் தம் சகோதரர் மெஸிஸ்டே விடம் கொண்ட மரியாதை காரணமாக. அம்மங்கைக்கு இது நன்றாகத் தெரியும்— அவர் வற்புறுத்தித் தன்னை அடைய மாட்டார் என்று. ஆகையால் ஸெர்க்ஸிஸ் வேறு உபாயங் களை நிறுத்தி வைத்து, மெஸிடேவுக்கும் அவர் மனைவிக் கும் பிறந்த மகளுக்கும், தன் மகன் டாரியஸுக்கும்[7] திருமணம் செய்து வைக்க இச்சை கொண்டு, அதன்மூலமாக அவளை அடையலாம் என்று திட்டமிட்டு, அதற்காக ஏற்பாடுகளைச் செய்யலானார். ஸெர்க்ஸிஸ் சூஸா[8] நகரத் துக்குப் புறப்பட்டார். சூஸா நகரில் தம் மருமகளை— அர்டான்டே[9] எனும் பெயர் கொண்டவளை—மிக்க குதூ கலமாக வரவேற்று, அவள்மீது அன்பைப் பொழிந்தார். அவளிடம் அடிக்கடி சென்று—தம் மருமகளிடம் — தம்

1. Praxilaus 2. Xerxes 3. Cilicia 4. Governor 5. Sardis 6. Masistes 7. Darius II 8. Susa 9. Artaynte

காதல் தாகத்தைத் தணித்துக் கொள்வார். இக் காதல் விவகாரம் வெளியே சிறிது சிறிதாகத் தெரிய வரலாயிற்று.

அவ்விஷயம் வெளியே தெரிய வந்த விதம் பின்வருமாறு: ஸெர்க்ஸிஸின் மனைவி அமெஸ்டிரிஸ் தம் கணவனுக்கு நீண்ட ஓர் அங்கியை அணியுமாறு கொடுத்தாள். அதை அவர் அன்றே தம் காதலியான மருமகளுக்குக் கொடுத்து விட்டார். ஆனால் திரும்பி வரும் பொழுது அவர் மனைவி அந்த அங்கி எங்கே என்று கேட்க, அதைத் தம் மருமகளுக்குக் கொடுத்து விட்டதாகப் பதிலிறுத்தார்.

ஸெர்க்ஸிஸ், தம் மனைவி தந்த ஆடையைத் தம் மருமகளுக்குத் தந்து விட்டது தம் மனைவி அறிந்தாள். அவள் தன் மருமகள்மீது எக்கோபமும் கொள்ளவில்லை. இதற்கெல்லாம் காரணம் அவள் தாய் — மெஸிஸ்டேயின் மனைவியே—என்று தன் மனத்தில் கற்பனை செய்து கொண்டாள். அன்று முதல் அத் தாயை—மெஸிஸ்டேயின் மனைவியை—ஒழித்துக்கட்ட ஸெர்க்ஸிஸ் மனைவி திட்டமிட்டாள்.

ஆண்டுக்கொருமுறை அரசுவிருந்து ஒன்று நடப்பதுண்டு. அதை டிக்டா[1] என்று வழங்குவர். அவ்வரசு விருந்து முடிந்ததும், அரசர் கேட்டவர்க்கு இல்லை எனாது வரங்களை—வெகுமதிகளை— வழங்குவார். அப்பொழுது அவர் மனைவி— அமெஸ்டிரிஸ்[2]— அரசர் ஸெர்க்ஸிஸிடம் வந்து "எனக்கு மெஸிஸ்டே[4]வின் மனைவி தேவை" என்று கேட்டாள். இதில் ஏதோ சூழ்ச்சி உள்ளது என்று ஊகித்து, தம் சகோதரரின் மனைவியை அவளிடம் எவ்வாறு ஒப்படைப்பது, அவள் நிரபராதியாயிற்றே என்று எண்ணமிட்டார். உடன் மெஸிஸ்டேவைக் கூப்பிட்டு "என் அருமைச் சகோதரனே! இன்று முதல் நீ உன் மனைவியுடன் வாழ வேண்டாம்; உனக்கு மனைவியாக என் மகளைத் தருகிறேன். மணந்து கொள்," என்றார் அரசர் ஸெர்க்ஸிஸ்.

"ஐயா, என் பிரபுவே, இது மிக விநோதமான திட்டம் தான். கோரிக்கையும் மிக விசித்திரமாகவே உள்ளது. பல

---

1. Tycta 2. Amastris 3. Xerxes 4. Masistes

குழந்தைகளுக்கு— ஆண் பெண் பலருக்கு— தாயாக விளங்கும் ஒருவளை ஒதுக்கி விட்டு, புதிய பெண்ணுடன் குடித்தனம் நடத்துவதா? உங்கள் மகளை எனக்கு மனைவியாக ஆக்க நினைத்திருப்பது மகிழ்ச்சியே; நன்றி. ஆயினும், எனக்கு நெடுநாள் மனைவியாக இருந்தவளை ஒதுக்கி வைத்து வாழமாட்டேன்; அவள் ஒரு பாவமும் அறியாள்; ஒரு பழியும் அறியாள்," என்று உறுதியாக மெஸிஸ்டே ஸெர்க்ஸிஸிடம் கூறிவிட்டார்.

ஸெர்க்ஸிஸுக்குக் கோபம் தீவிரமாக வந்துவிட்டது. "அட, பதரே, என் மகளை உனக்கு மனைவியாக உறுதியாகத் தரமாட்டேன்; அத்துடன் உன் மனைவியுடன் உன்னை இன்று முதல் வாழவிடவும் போவதில்லை," என்று பதிலளித்தார் ஸெர்க்ஸிஸ்.

"என் பிரபுவே, என் உயிர் என்னிடத்தில் இருக்கும்: இது உறுதி. அதை நீங்கள் என்னிடத்திலிருந்து இன்னும் வாங்கி விடவில்லையே!" என்று கூறிச் சற்றும் தாமதியாமல் அவ்விடத்தை விட்டு வெளியேறி உடன் மாயமாய் மறைந்து விட்டார்.

ஸொக்ஸிஸும் அவர் சகோதரர் மெஸிஸ்டேவும் மேற்கண்டவாறு உரையாடிக் கொண்டிருந்த பொழுது, ஸெர்க்ஸிஸின் மனைவி அமெஸ்டிரிஸ், அரசப் போர் வீரர்களை — சொந்தப் பாதுகாவலர்களைக்[1] - கூப்பிட்டு, மெஸிஸ்டேயின் மனைவியின் உடலைக் கண்டபடி வெட்டி அசிங்கமாகக் காட்சியளிக்குமாறு செய்து விட்டாள்— அவளது கொங்கைகள், காது, மூக்கு, நாசி, உதடுகள் யாவும் துண்டாக்கப்பட்டு, அவள் அதே நிலையில் அவள் வீட்டிற்கு அனுப்பப்பட்டாள். மெஸிஸ்டேயும், ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதென்று ஓடோடியும் அப்பொழுது தான் தம் வீட்டையடைந்தார். அடைந்ததும் தம் மனைவியின் கோரத்தைக் கண்டார், கதறினார். உடன் தம் மகன்களின் கருத்துப்படி தம் நண்பர்களுடன் பாக்டிரியாவுக்குப்[2] பயணம் ஆனார். அங்கு ஒரு கலவரம் ஏற்படுத்தி, அரசரை

---

1. Personal Bodyguard 2. Bactria

ஒழித்துக்கட்ட திட்டமிட்டார். மற்றும் அவர் பாக்டிரியாவின் ஆளுநரும்[1] கூட. இதை எவ்வாறோ அறிந்த ஸெர்க்ஸிஸ்[2] தம் வீரர்களை அனுப்பி, நடுச்சாலையில் அவரைப் பிடித்து இழுத்துக் கத்தியால் வெட்டிக் கொல்லுமாறு செய்தார். அவருடன் அவர் மகன்களும், அவர் தலைமையில் சென்ற யாவரும் கொல்லப்பட்டு இறந்து விட்டார்கள்.

இத்துடன் ஸெர்க்ஸிஸின் முரண்பட்ட காதலும், மெஸிஸ்டேயின் இறப்புப் பற்றிய வரலாறும் முடிவடைகின்றன.

விளக்கவுரை:

சார்டிஸ்[3] : இது ஆசியா மைனரில்[4] முக்கியமான நகரமாகும்: லிடியாவின்[5] சத்ராபியாக்[6] விளங்கிற்று. மற்றும், பக்கம் 361, குறிப்பு-6 பார்க்கவும்.

மைக்கேல் குன்றுகள்[7] : தெற்கு அயோனியாவில்[8] உள்ள ஒரு மலை. இங்குத்தான் பாரசீகப்படைகள்[9] பிளேடியா போரில்[10] தோற்றதும் ஓடி ஒளிந்து, பின்னர் சார்டிஸ் நகரம் சென்றடைந்தன.

மெஸிஸ்டே[11] : இவர் டாரியஸ்[12] அரசரின் மகன் ஆவார். ஸெர்க்ஸிஸ் அரசரின் சகோதரர். இவர் மனைவியின் மீது தான் ஸெர்க்ஸிஸ் காதல் கொண்டார். ஆனால் அவள் சம்மதம் தெரிவிக்கவில்லை. தம் மகனுக்கு அவள் மகளைத் திருமணம் செய்வித்து, மருமகளையே காதலிக்கலானார். இதையறிந்த ஸெர்க்ஸிஸின் மனைவி, இதற்குக்காரணம் அவள் தாயே என நினைத்து அவளை ஒழித்துக்கட்டினாள். மெஸிஸ்டே வீட்டிற்குச்சென்று தம்மனைவியின் அலங்கோலத்தைக்கண்டு கதறி உடன் தம் ஊரான பாக்டிரியாவுக்குப்[13] பயணமானார். அவர் பாக்டிரியாவின் ஆளுநர்[14]. இருப்பினும் ஸெர்க்ஸிஸ் தம் ஆள்களை அனுப்பி அவரைக் கொன்றுவிடச் செய்தார். அவரும் அவருடைய மகன்களும் கொல்லப்பட்டனர். அவர் மனைவியும் அங்கங்கள் சேதமாக்கப்பட்டதால் இறந்துவிட்டாள்(கி.மு. 479).

---

1. Governor 2. Xerxes 3. Sardis 4. Asia Minor 5. Lydia 6. Satrapy 7. Mycale Hills 8. South Ionia 9. Persian Armies 10. Platea War 11. Masistes 12. Darius 13. Bactria 14. Governor

ஸெர்க்ஸிஸ்[1] : இவர் டாரியஸ்[2] அரசரின் மகன். இவர் அரசாட்சி செய்த காலம் கி.மு. 485-465 அதாவது 20 ஆண்டுகள் ஆண்டார். இவருக்கு மனைவியர் பலர். ஸெர்க்ஸிஸ் இறுதியில் தளபதி அர்டபானஸ்[3] என்பவரால் கி.மு. 465-ல் கொல்லப் பட்டார். மற்றும் பக்கம் 402, குறிப்பு-8 பார்க்கவும்.

பாக்டிரியா[4] : இது டாரியஸ் அரசரால் ஒரு சத்ராபியாக[5] ஆக்கப்பட்டது. அதற்கு அவர் மகனே-மெஸிஸ்டே எனும் பெய ருடையவரே-ஆளுநராக[6] நியமிக்கப்பட்டார். இது பொகாரா[7] என்று வழங்கப்பட்டது. இந்நகரம் செலூசிடே ஆட்சிவரையில் (கி. மு. 2ஶ5) இருந்தது.

அமெஸ்டிரிஸ்[8] : இவள் ஸெர்க்ஸிஸின் மனைவி. தம் கணவருக்கும் அவர் சகோதரர் மனைவிக்கும் தொடர்பு உண்டு என்று கற்பனையாக நினைத்து, அவளை ஒழித்துக் கட்டினாள். தன் மகனுக்கும், அவளுடைய மகளுக்கும் திருமணத்தை நடத்தி. வைத்தாள். இவள் எதையும் தீர ஆராயாது முடிவெடுப்பவள். அர்டாஸெர்க்ஸிஸின்[9] தாய் ஆவாள்.

---

1. Xerxes 2. Darius 3. Artabanus 4. Bactria 5. Satrapy 6. Governor 7. Bokara 8. Amastris 9. Artaxerxes-I

6. சைரஸின் விவேகம்

சிலுவையிலறையப்பட்டு உயிர் துறந்த அர்டக்டே[1] வுக்கு அர்டம்பெரஸ்[2] எனும் பெயர் கொண்ட முன்னோர் ஒருவர் இருந்தார். அவர்தாம் பாரசீகர்களுக்கு[3] ஒரு திட்டம் வகுத்துக் கொடுத்தவர்; அவர்கள் அதை உடன் ஏற்றுக் கொண்டு, சைரஸ் அரசரும்[4] அதை அறிந்து கொள்ளுமாறு செய்தனர். "கடவுளுக்குப் பிறகு தாங்கள் அஸ்டியகெஸை[5] வென்றதன் காரணமாக, பாரசீகத்துக்கே[6] ஒரு பெருமையை தேடித்தந்து, அதை உலகத்தின் முன்னணிக்குக் கொண்டு வந்து விட்டீர். இப்பொழுது நாம் வசிக்கும் நம் வறண்ட பிரதேசத்தைவிட்டு வேறு சிறப்பு மிக்க மேலான நாட்டைக் கைப்பற்றி அங்கே இருப்போமாக! அவ்வாறு தேர்ந்தெடுக் கக்கூடிய நாடுகள் பல உள்ளன. சில அருகிலும் உள்ளன - சில தொலைவிலும் இருக்கின்றன. அவற்றுள் ஏதேனும் ஒன்றை நாம் கைப்பற்றினோமாயின் நாம் என்றென்றைக் கும் கொண்டாடப் படுவோம். புகழாரம் சூட்டப்படுவோம். அரசர் இதைச் செய்வது எளிதான செயலே. பொதுவாக அவர் செய்யக் கூடியதே. நாம் ஆசியாவுக்கும்[7], அதனு டைய பல நாடுகளுக்கும் எசமானர்களாக[8] இருக்கும் இப் பொழுதைவிட வேறு நல்ல வாய்ப்பு நமக்கு எப்பொழுது கிடைக்கக் கூடும்?

சைரஸ் இதைப் பற்றிப் பெரிதாக ஏதும் நினைக்க வில்லை. "நீங்கள் விரும்பினால் அவ்வாறு செய்யலாம்," என்று கூறி ஓர் அபாய அறிவிப்பையும் அறிவித்தார். "நீங்கள் இனி அரசாள எண்ண முடியாது. ஆனால் மற்ற வரால் ஆளப்படுவதற்குத் தயாராக வேண்டும்," என்று மேலும் கூறினார் அவர். அவர் மொழிந்தார்: "சாதாரண எளிய நாடு சாதாரண எளிய மக்களையே உற்பத்தி செய்யும் தன்மை வாய்ந்தது. நல்ல பழக்கங்களையும், ஏன் சிறந்த வீரர்களையும் உற்பத்தி செய்வது ஒரு மண்ணின்

---

1. Artayctes 2. Artembares 3. Persians 4. Cyrus 5. Astyages 6. Persia 7. Asia 8. Masters

தன்மை மட்டுமன்று'' இஃது உண்மை என்று பாரசீகர்கள்[1] ஒப்புக் கொள்ள வேண்டியதே. மற்றும் சைரஸ் அவர்கள் யாவரையும் விட விவேகம்[2] வாய்ந்தவர் என்பதும் ஒப்புக் கொள்ள வேண்டியதே. அதன் காரணமாக, அவர்கள் ''வளம் மிக்க சதுப்பு நிலத்தை உழுது பயிர் செய்து அடிமைகளாக வாழ்வதைவிட, கரடு முரடான நிலத்தில் வாழ்ந்து கொண்டு ஒரு நாட்டை ஆள்வதையே நாங்கள் வரவேற்கிறோம்,'' என்று கூறி அவரிடம் விடை பெற்றுச் சென்றனர்.

விளக்கவுரை :

அர்டக்டே[3] : இவர் செஸ்டாஸ்[4] பகுதியின் ஆளுநர். மிகவும் தந்திரசாலி; இவர் மேடிடஸ்[5] நகரத்தின் மீது இருந்த குன்றின் உச்சியில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். புரோடிஸிலோவின் சொத்தை அபகரித்ததற்காக எலேயுவின் மக்கள்[6] அவரைப் பழிக்குப்பழி வாங்கி விட்டனர்.

அர்டம்பெரஸ்[7] : சைரஸ் சிறுவனாக இருந்த பொழுது, அவனுடன் விளையாடிய ஒரு சிறுவனின் தந்தை. இவர் அஸ்டியகெஸ்[8] அரசரிடம் பணியாற்றிவந்தார். சைரசைத் தம் தந்தையிடம் ஒப்பு வித்தார். மற்றும், பக்கம் 96, குறிப்பு-2 பார்க்கவும்.

சைரஸ்[9] : இவர் கி. மு. 579—529 அதாவது 50 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் அரசாட்சி செய்தகாலம் கி. மு. 558—529 அதாவது 29 ஆண்டுகள் ஆண்டார். இவரே பாரசீக ஸ்தாபகராகக் கருதப் படுகிறார். இவர் தந்தை கேம்பைஸிஸ்[10]; தாய் மந்தனே[11]. தந்தை பாரசீகப் பிரமுகர்; தாய் அஸ்டியாகஸ் அரசரின் மகள். கி. மு. 538-ல் பாபிலோன்[12] நகரத்தைப் பிடித்த பிறகு, மஸஜெடே[13] மக்கள்மீது போர் தொடுத்தார் (கி. மு. 529). அப்போரில் சைரஸ் தோற்றார். மஸஜெடேயின் அரசியாக விளங்கிய டோமிரிஸ்[14], சைரஸின் தலையை வெட்டி, இரத்தம் நிரப்பப்பட்டுள்ள தொட்டியில் வீசி எறிந்து, ''உன் இரத்ததாகத்தைத் தணித்துக் கொள்'' என்று கூறி முழங்கினாள். சைரஸ் கி.மு. 529-ல் கொல்லப் பட்டார்.

---

1. Persians 2. Wisdom 3. Artayctes 4. Sestos 5. Madytus 6. Elaeus people 7. Artembares 8. Astyages 9. Cyrus 10. Cambyses 11. Mandanae 12. Babylon 13. Massagetae 14. Tomyris

சைரஸுக்[1]குப் பிறகு அவர் மைந்தன் கேம்பைஸிஸ்[2] அரசெய்தினார். மற்றும் பக்கம் 84, குறிப்பு-1 பார்க்கவும்.

அஸ்டியகெஸ்[3]: இவர் சையாக்சரஸின்[4] மகன் ஆவார். இவர் மகள்தான் மந்தனே[5]-சைரசின் தாய். அஸ்டியகெஸ் மிடிய நாட்டின் இறுதி அரசர். அஸ்டியகெஸிற்குப் பிறகு தம் பெயரன்-பெண்வயிற்றுப் பெயரன்-இவ்வுலகத்தை ஆள்வான் எனச் சோதிடர் கூறக் கேட்டு, தம் மகளுக்குப் பிறந்த குழந்தையைக் கொன்று விடுமாறு தம் ஆள் ஹர்பகஸிடம் பணித்தார். ஹர்பகஸ்[6] அக்குழந்தையைக் கொல்லாமல், ஓர் ஆட்டிடையனுக்குக் கொடுத்து விட்டு, அவனுடைய இறந்த குழந்தையை எடுத்து வந்து வெட்டி, அதை அரசர் அஸ்டியகெஸுக்குக் காண்பித்தார். இதைப் பின்னர் அஸ்டியகெஸ் அறிந்தார். ஹர்பகஸின் மைந்தனை வெட்டி, கறிசமைத்து, அவன் தந்தையையே உண்ணுமாறு செய்தார். ஹர்பகஸ் இதையறிந்து வன்மம் கொண்டு, சைரஸிடம் தளபதியாக அமர்ந்து, அஸ்டியகெஸைத் தோல்வியடையச் செய்து, அவரை அடிமைப் படுத்தி விட்டார். அவர் சைரஸ் அவையிலேயே இருந்தார். இவர் அரசாண்ட காலம் கி. மு. 594—559 அதாவது 35 ஆண்டுகள் ஆண்டார். மற்றும் பக்கம் 94,குறிப்பு-7 பார்க்கவும்.

சைரஸின் விவேகம்[7]: "வளம் மிக்க சதுப்பு நிலத்தை உழுது, பயிரிட்டு, உணவு உண்டு அடிமைகளாக வாழ்வதைவிட, கரடு முரடான பிரதேசத்தில் இருந்து கொண்டு, கிடைத்ததை உண்டு, மற்றவர்களை ஆட்சி செய்வதே மேல்" என்பதே சைரஸ் கூறிய பொன்மொழிகள் ஆகும். அவரது விவேகம் வாய்ந்த அருள் மொழியைச் செவிகொடுத்துக் கேட்காத மற்ற பாரசீகர்கள் அயல் நாடு சென்று அடிமைகளாக வாழ்ந்து இறந்தனர். ஆனால், சைரஸ் தம் கருத்துப்படியே சுதந்திரத்துடன் அரசராக இருந்து வாழ்ந்து கி. மு. 529-ல் கொல்லப்பட்டார். சைரஸ் 29 ஆண்டுகள் அரசாண்டார் (கி. மு. 558—529). "சுதந்திர வாழ்வே சுகமான வாழ்வு" என்ற எண்ணங் கொண்டவர் சைரஸ்.

---

1. Cyrus 2. Cambyses 3. Astyages 4. Cyaxares 5. Mandanae 6. Harpagus 7. Wisdom of Cyrus

முடிவுரை

இதுகாறும் கிரேக்கநாட்டிற்கும் பாரசீக அரசுக்கும் ஏற்பட்ட போரைப்பற்றிக் கண்டோம். அதில் ஒரு பொழுது கிரேக்க நாட்டிற்கு வெற்றியும், மற்றொரு சமயம் பாரசீக அரசுக்கு வெற்றியும் விளைந்தமையைக் கண்டோம். பாரசீக அரசர்களின் பரம்பரையைப் பற்றிப் படித்தோம்—சைரஸ் முதல் ஸெர்க்ஸிஸின் மகன் கேம்பைஸிஸின் ஆட்சி ஈறாகப்—பல அரசாங்கங்களைச் சந்தித்தோம்; அவர்களுள் நல்ல தீரர்கள், வீரர்கள், நல்லாட்சியாளர்களைக் கண்டோம். அதே பொழுது வீண் பகட்டுக் காரர்களையும், பொய்யர்களையும், நயவஞ்சகர்களையும், சூழ்ச்சிக் காரர்களையும் தெரிந்துகொண்டோம்; இவ்வரலாறுகளுக்கிடையில், எகிப்துநாடும் அங்கு வானளாவி நின்ற பிரமிடுகளின் பெருமைகளைப் பற்றியும் அறிந்தோம். அத்துடன் அரசர்களின் சடலப் பாதுகாப்பையும், அதன் விவரங்களையும் கண்டுணர்ந்தோம். மற்றும், சித்தியர்கள், கிரேக்கர்கள், பாரசீகர்கள், லிபிய மக்கள் ஆகியவர்களின் பழக்க வழக்கங்கள், பினீசியர்களின் பழக்கவழக்கங்கள், மற்றும் அவர்களின் எழுத்தோவியங்கள், கிரேக்கப்படைகளின் புள்ளி விவரங்கள், பாரசீகக் கப்பற்படையின் புள்ளி விவரங்கள், மருத்துவர் டெமோசிடஸ் பற்றிய விவரங்கள், கிரேக்க-பாரசீகப்போர்களின் வெற்றி தோல்விகள், பாபிலோனியர் வரலாறு, இந்தியப் பஞ்சு ஆடைகள் பற்றிய விளக்கங்கள், பாபிலோனின் முற்றுகை, இந்தியப் பொன் அகழும் எறும்புகள், இந்தியப்படைகள், இந்தியா பாரசீகருக்குக் கட்டிய வரிகளின் பெறுமானம்; சிந்துநதி, டான்யூப் நதி, நைல்நதி முதலிய நதிகளின் போக்கும் தன்மைகளும், முதலைகள், யானைகள், காண்டா மிருகங்கள் இருக்கும் ஆறுகள் பற்றிய பலப்பல செய்திகளும் ஹிராடடஸ் உதவியால் கண்டுகளித்தோம்,

ஒரு நாட்டிற்கு வரலாறு எத்துணை அவசியம் என்பதும், இங்குத்தரப்பட்ட வரலாற்றில் எத்துணை நுணுக்கமான செய்திகள் தரப்பட்டுள்ளன என்பதையும் காணும்போது, ஹிராடடஸ், தம் வரலாற்றைத் தொகுக்க எவ்வளவு செய்திகளை எத்துணை அரிதாகச் சேகரித்திருக்க வேண்டும் என்பது மிகத்தெளிவாக விளங்குகிறது. கிரேக்க—பாரசீக வரலாறுகள் ஹிராடடஸ் இன்றேல், ஒன்றுமேயிரா என்பதை உறுதியாக் கூறிவிடமுடியும். ஆகையால்தான் ஹிராடடஸ், ‘‘வரலாற்றின் ஆதித்தந்தை’’ என்றும், ‘‘உரை நடையின் முன்னோடி’’ என்றும் பலவாறு விதந்தோதப்படுவதை நாம் பரக்கக் காணலாம்.

பினீசியர்கள் தமிழ்நாட்டிலிருந்து சென்ற தமிழர் என்று ஹிராடடஸ் ஆராய்ச்சியால் தெரியவரும்போது-பனையேறிகள்-பாமேசியர்—பினீசியர்—என்ற சொல் வடிவமும் ஆக்கமும் காரணமாக—நம் தமிழ் நாட்டின் வரலாறு இன்றைக்கு 4000 ஆண்டுகளுக்குமுன் உலகில் மேலைநாடு வரை பரந்திருந்தது என்பதை நினைக்க நம் உள்ளம்—ஒவ்வொரு தமிழரின் உள்ளமும்—இறும்பூதெய்துகிறது. மற்றும் ஹிராடடஸ் கூறும் அரசர் வரலாறுகளில் பெரிய புராணக் கதைகளும், தமிழ்நாட்டுப்பழக்க வழக்கங்களும், வராகமிகிரர் கதை போன்ற கதைக் கோப்புகளும் காணப்படுவது நமக்கு எத்தகைய வியப்பையூட்டி நம் மனத்தை மகிழ்விக்கிறது? தமிழ்நாட்டின் பழக்கவழக்கங்கள் பினீசியர்களிடம் காணப்படுகின்றன என்ற செய்தி ஹிராடடஸின் ஆய்வினால் தெரியவருகிறது.

தமிழ்நாட்டு மக்களுக்குச் சரியான-உண்மையான- வரலாறு கிடையாது என்பது உண்மையே. வரலாறு இருந்திருக்கிறது; ஆனால் அது உரிய முறையில் பாதுகாக்கப்படவில்லை. ஆயினும் ஹிராடடஸ் போன்றவர்களின் சொல்லோவியங்களிலிருந்தும், மற்றும் பிளினி, பெரிப்ளூஸ், மெகஸ்தனிஸ், தாலமி, ஸ்டிராபோ, அரியன் இண்டிகா, அல்பெருனி, இபின்படூடா போன்ற அயல் நாட்டு—மேலைநாட்டுப்—பயணவரலாறுகளிலிருந்தும், யுவான் சுவாங், பாஹியான், இதிசிங் முதலான கீழை நாட்டுப் பயணிகள் எழுதிய வரலாறுகளிலிருந்தும் ஒளிந்துகொண்டு கண்சிமிட்டும் தமிழ் நாட்டு வரலாறுகளை இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சேகரித்து, இணைத்து, தொடர்புபடுத்தித் தமிழ்நாட்டு வரலாற்றைப் பெறவேண்டிய நிலையில் உள்ளோம். தமிழ்நாட்டு இலக்கியங்களினின்றும்—பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, ஐம், பெருங்காப்பியங்கள், கம்பராமாயணம் போன்ற தமிழ்ப் பெரும்,

நூல்களினின்றும், திருக்குறள் எனும் தமிழர் வாழ்க்கை விளக்கத்தினின்றும் தமிழர் பண்பாடும், தமிழர்களின் வாழ்க்கை அனுபவங்களும் சேகரிக்கப்பட்டுத் தமிழ்நாட்டு வரலாற்றில் இணைக்கப்படவேண்டும்.

பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் தமிழர்களின் வரலாறுகளை—தமிழ்நாட்டு வரலாற்றை—தெள்ளத் தெளியக் கண்டு, ''தமிழர்க்கு—தமிழ்நாட்டுக்கு—வரலாறு இருந்தது. அது மிகப் பெரியவரலாறு. அதை ஆராய்ந்து ஒரு நிலைப்படுத்தி, உண்மையான செய்திகளை இணைத்துத் தமிழ்நாட்டின் ஆதி வரலாறு ஒன்றை உருவாக்க வேண்டும்.'' அத்தகைய தமிழ்நாட்டு வரலாற்றின் முதல் வாக்கியமாக அமைய வேண்டியது:

> ''தமிழர் நாகரிகமே உலக நாகரிகத்தின் தொட்டில். அத்தொன்மை வாய்ந்த நாகரிகம் முதன்முதல் உலகின் பல பகுதிகளுக்கும் தமிழ்நாட்டிலிருந்துதான் பரவிற்று.''

இவ்வாறு எழுதப்படுவதுதான் உண்மையான வரலாறு. இத்தகைய வரலாற்றை நம் தமிழ்நாட்டிற்குப் படைத்தளிக்கும் நன்னாளை நாம் விரைவில் எதிர்பார்ப்போமாக! அத்தகைய வரலாற்றை உருவாக்க ஹிராடடஸின் சொல்லோவியங்கள் ஒல்லும் எல்லாவகையானும் ஊக்கம் அளித்து நிற்கின்றன.

வாழ்க ஹிராடடஸ்! வாழ்க அவரது அரிய அழகிய சொல்லோவியங்கள்! வாழ்க தமிழர் பண்பாடு! வாழ்க இந்திய தேசிய ஒருமைப்பாடு!

> ''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு''
>
> —திருக்குறள்

பிற்சேர்க்கைகள்

பிற்சேர்க்கை I

மேலைநாட்டினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தியர்களின், சிறப்பாக, தமிழர்களின் பழக்க வழக்கங்கள்.

மேலை நாட்டினர்	தமிழர்கள்
புத்தகம் 1 (கிரேக்கர்களின் பழக்க வழக்கங்கள்)	
1. பெண்களைக் கவர்ந்து சென்று திருமணம் செய்து கொள்ளுதல். (அதி. 1. பக். 34)	மகாபாரதம் போன்ற நூல்களில் கிருஷ்ணர், ருக்மிணி போன்ற நிகழ்ச்சிகள், மற்றும் வரலாற்றில் பிருத்விராஜ், ராணிசம்யுக்தை போன்றவை.
2. கைஜீஸ் அரச பதவி ஏற்க டெல்பி கோயிலில் குறி கேட்டுச் சம்மதம் பெறுதல். (அதி. 3. பக்.56)	தமிழ் நாட்டில் அருள் வேட்டல் எனும் தமிழரது பழக்கத்தின் சாயலே; தெய்வ அருளால் யானை மாலை போட்டு அரசரைத் தேர்ந்தெடுத்தல்.
3. குரோஸஸ் தாம் கண்ட கனவின்படி தம் மகன் சிறுவன் பன்றியின் படிமத்தால் உயிரிழத்தல். (அதி. 5. பக் 69)	தமிழர்களின் பழக்கம் கனவுக்குப் பலன் கூறுதல்; நல்ல கனவாயின், அதைப் பெரியவர்களிடம் உரைத்தும், தீயதாயின் முகம் கழுவிக் கடவுளைத் துதித்து விட்டுத் துயிலுதலும் ஆகும்.
4. குரோஸஸ் சிதை மீதிருக்கும் போது, அப்பொலோ தெய்வத்தை வேண்டி, மழை பெய்து, அச்சிதை அணைந்து போதல். (அதி. 6. பக். 79)	'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' எனும் தமிழரின் கொள்கை; பரிபூரண சரணாகதி செய்து, கடவுளின் பூரண அருளைப் பெறுதல்.

5. சித்தியர்கள் அஸ்கலான் கோயிலைக் கொள்ளையிட, அக்கோயிலின் பெண் தெய்வம் வெகுண்டு, ''யாவரும் பெண் நோயால் வருந்துக'' எனச் சாபம் கொடுத்தது.
(அதி. 7. பக். 89)

இது இந்திய நாட்டு ரிஷிகள் சாபம் போன்றது. கௌதம ரிஷி, இந்திரனுக்கு உடல் முழுவதும் கண்ணாகக் கடவது எனச் சாபம் இட்டது போல.

6. பிள்ளைக் கறி அமுதளித்தல். (அதி. 8. பக். 98)

பெரியபுராண நிகழ்ச்சிகளுள் காணப்படும் சிறுத் தொண்டர் வரலாற்றின் சாயலே.

7. சிலை செய்தல், கோயில் எழுப்புதல், பலிபீடம் அமைத்தல், பலிபீடத்தில் சோறிடுதல்
(அதி. 9. பக். 103)

தமிழ் நாட்டுக் கோயில்களில் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சியே. சிலை செய்தல், கோயில் எழுப்புதல் தமிழர்களின் பண்டைய வழக்கமே.

8. தெய்வங்களுக்கு நிவேதனம் அளிக்கும்போது புல்லாங்குழல் ஊதுதல்.
(அதி. 9. பக். 103)

தமிழ் நாட்டுக் கோயில்களில் பஞ்ச வாத்யங்களுள் வேய்ங்குழல் ஊதுதலும் ஒன்றாகக் கருதப்பட்டு வருகிறது.

9. பிரார்த்தனை செய்தல் சொந்த நலனுக்கின்றி, அரசனுக்கும், அரசிக்கும், நாட்டுக்கும் பிரார்த்தனை செய்தல்.
(அதி. 9. பக். 104,

''நாடுவாழ நாம் வாழ்வோம்'' எனும் தமிழரின் கொள்கை; ''சர்வேஜனா சுகினோ பவந்து'' என்பதின் சாயலும் ஆகும்.

10. சடங்குகளின் போது மந்திரங்கள் ஓதுதல்; நிவேதனத்தை இலைமீது பரப்பி வைத்தல்; கடவுள் நேரிலே வந்து அதை ஏற்றுக் கொள்வதாக ஐதிகம்.
(அதி. 9. பக். 104)

இவை யாவும் தமிழர்களின் சடங்குகளில் காணப்படுவனவே. கடவுளே நேரில் வந்து உண்பதானது தமிழர்களின் கருத்தும, மரபும் ஆகும்.

பாரசீகர்களின் பழக்க வழக்கங்கள்

11. பாரசீகர்கள் உண்ணும் போது மேசைமீது எவையேனும் மிகுத்து வைத்தல்.

சில தமிழர்கள், விலங்கினங்களுக்கென்று, ஒரு பிடி சோற்றை ஒதுக்கி வைப்பர்.

கிரேக்கர்கள் மிகுதி வைப்பது கிடையாது.

(அதி. 9. பக். 104)

மற்றுஞ்சில தமிழர்கள், சிறிதேனும் உணவு இறையாமல் முழுவதும் உண்பர். திருவள்ளுவர்-வாசுகி வரலாறு சான்று.

12. பாரசீகர்கள் குடி போதையில் உள்ள போது பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுதல். (அதி. 9. பக். 105)

தமிழர்களின் வழக்கத்திற்கு முரண்பட்டது.

13. பூமியில் விழுந்து நமஸ்கரித்தல். (அதி. 9. பக் 105)

தமிழரின் "சாஷ்டாங்க நமஸ்காரம்" என்பதைக் குறிப்பிடும்.

14. பல மனைவியர்களை வைத்திருத்தல், ஒருவரின் ஆண்மைத் தன்மைக்கு எடுத்துக்காட்டு (அதி. 9. பக். 106)

தமிழர்களிலும் பல மனைவியர் உள்ள குடும்பங்கள் பல இருந்தன. தமிழ்வேந்தர்கள் பட்டத்தரசியைத் தவிர பல மனைவியரைக் பெற்றிருந்தனர். இராவணன், கிருஷ்ணர், தசரதர், மற்றும் பல வேந்தர்கள்.

15. பாரசீகர்களின் மகன்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியவை: குதிரையேற்றம், வில் வித்தை, உண்மையே பேசுதல். (அதி. 9. பக் 106)

தமிழக வேந்தர்களும், பண்டைய குரு குல மாணவர்களும் இவ் வழக்கங்களைக் கொண்டிருந்தனர். வில்போர், வாட்போர், மற்போர் ஆகியவற்றைக் கற்றனர். அரிச்சந்திரன் வரலாறு உண்மையைப் போற்றியது.

16. கடன் கொடுப்பதில்லை-திருப்பித் தர முடியாவிடில், பொய்பேச நேரிடும் என்ற காரணத்தால். (அதி. 9. பக். 106)

கடன் கொடுப்பார்கள் தமிழர்; திருப்பித்தர முடியாவிடில், கடவுள் அதற்குத் தக்க தண்டனை கொடுப்பார் என்பதே அவர்களின் கொள்கை.

17. சடலம், ஒருபறவையாலோ, நாயினாலோ, கிழித்து உண்ணப் பட்டபிறகே புதைப்பர். (அதி. 9 பக். 107)

தம் சடலம்கூட விலங்குகளுக்கு உணவாக வேண்டும்; வீண்போகக் கூடாது என்பது தமிழ் நாட்டு சைனர்களின் கொள்கை

18. பாரசீகர்கள், உயர்ந்த இனத்தவர் என்பதைக்காட்ட, "இஸ்" எனும் விகுதியைச் சேர்த்துக் கொள்ளுதல். (அதி. 9. பக். 107)

தமிழர்கள் "ஆர்" விகுதியைச் சேர்த்துக் கொள்வர்; 'அவர்கள்' எனும் சொற்சேர்க்கையையும் குறிப்பிடலாம் சாத்தனார், நப்பசலையார், பூங்குன்றனார் போல,

19. பாரசீகர்களுக்குப் பலி பீடம் கிடையாது. ஆகையால் விலங்குகளின் கழுத்தைத் திருகிக் கொன்று விடுவர்.

தமிழர்கள் கோழி முதலிய சிறிய விலங்குகளின் கழுத்தைத் திருகியே பலியிடுவர்.

எகிப்தியர்களுக்குப் பலிபீடம் உண்டு. கிரேக்கர்களுக்கும் உண்டு. எகிப்தியர்கள் விலங்குகளைப் பலிபீடத்தில் வைத்துக் கத்தியால் கழுத்தை வெட்டி விடுவர்.

(அதி. 9. பக். 108)

பெரிய விலங்குகளை அதற்கான பாறைகளில் வைத்து, கத்தியால் கழுத்தை வெட்டி விடுவர்—எருமை, பன்றி, ஆடு முதலியவை பலியிடப்படுவன போல.

20. நகரத்தைச் சுற்றிலும் அகழிகள் அமைத்தல்.

(அதி 10. பக். 113)

தமிழர் கோட்டைகளைச் சுற்றி அகழிகள் அமைத்து, அவற்றில் முதலைகளை வளர்த்தனர்.

பாபிலோனியர்களின் பழக்க வழக்கங்கள்

21. தலை மயிரை நீளமாக வளர்த்தல், அன்றாடம் தலைப் பாகை அணிதல்.

(அதி. 12. பக். 126)

தமிழர்கள் தலைமயிரை நீளமாக வளர்த்தனர்; தலைப் பாகை அணிந்தனர்.

22. திருமணத்துக்குரிய பெண்கள் ஏலமிடப்படுதல்.

(அதி. 12. பக். 126)

திருமணப் பெண்களைத் தமிழர்கள் பரிசம் கொடுத்து விலைக்குப் பெற்றனர்.

23. பாபிலோனியாவில் உள்ள நோயாளி ஒவ்வொருவரையும் விசாரித்துச் செல்லுதல்.

(அதி. 12. பக். 127)

பண்டைத்தமிழர்கள், பொது நல மருத்துவ விடுதிகளில் நோயாளிகளைக் கவனித்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்தனர்.

24. பாபிலோனியர் ஆண், பெண் பால் சேர்க்கைக்குப் பிறகு, தூபம் இட்டு, காலையில் குளித்து விடுவர் குளிக்காமல் வீட்டில் எதையும் தொடமாட்டார்கள்.

(அதி. 12. பக். 128)

இது தமிழர்களின் பண்டைய பழக்கமாகும். இன்றும் சில குடும்பங்கள் அவ்வாறே கடைப்பிடித்தும் வருகின்றன.

25. பாபிலோனியப் பெண், வாழ்க்கையில் ஒரு முறை, தன்னை அன்னியன் ஒருவனுக்கு அர்ப்பணித்து விடுதல்.

(அதி. 12. ப. 128)

தமிழர்களின் தங்கள் பெண்கள் கற்பைப் பாதுகாத்து வந்தனர் இடைக் காலத்தில் தெய்வங்களுக்கு எனச் சில பெண்கள் அர்ப்பணிக்கப்பட்டனர்,

26 எள்ளிலிருந்து பிழிந்த எண்ணெயைப் பாபிலோனியர் பயன்படுத்தி வந்தனர்.
(அதி. 12. பக். 125)

தமிழ்நாட்டில் தமிழர் புதன் சனி நீராடினர். எண்ணெய் தேய்த்து முழுகினர். இவை இப்பழக்கத்தின் சாயலே.

27. கால்வரை தொங்கும் ஆடை அணிதல்.
(அதி. 12 பக். 126)

தமிழர்களின் வேட்டியையும், மேலங்கியையும் நினைவு படுத்துகின்றன.

மெஸஜிடே மக்களின் பழக்கவழக்கங்கள்

28. எந்த ஓர் ஆணும் எந்தப் பெண்ணுடனும் கூடலாம். ஆனால் உள் நுழையும்போது, ஒரு கழியை வெளியே நாட்டி விடவேண்டும்.
(அதி. 13. பக். 138)

தமிழர்களின் வழக்கத்துக்குப் புறம்பானது.

29. அவுரிச் சாய மரத்தைப் பயிரிட்டுச் சாயம் பெறுதல்.
அதி. 13. பக். 135)

தமிழ்நாட்டிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் அவுரிச் செடி (Indigo) பயிரிட்டு, நீல வில்லைகள் தயாரித்தனர்.

புத்தகம் 2

30. எலிபெண்டைன்—யானைகள் நீர் அருந்தும் இடம்.
(அதி. 3. பக். 156)

யாளி, யானை இவற்றினடியாகப் பிறந்த சொல் எலிபெண்ட். எலிபெண்டைன் காரணப் பெயராயிற்று. தமிழ்நாட்டில் உள்ள மயிலாப்பூர், மயூரபுரம், குரக்காடுதுறை, திருஆனைக்கா போன்றதே.

எகிப்தியரின் பழக்கவழக்கங்கள்

31. பெண்கள் கடைக்குச் செல்லுதல். ஆண்கள் வீட்டினுள் துணி நெய்தல்.
(அதி. 4. பக். 159)

தமிழர்களின் வழக்கத்துக்கு நேர் மாறானது.

32 நூற் கண்டை மேலிருந்து கீழே செலுத்துதல்.
(அதி. 4. பக். 159)

,,

33. ஆண்கள் தலைமீது பளுவைச் சுமத்தல். பெண்கள் தோள்களில் வைத்துச் சுமத்தல்.
(அதி. 4. பக். 159)

,,

34. ஆண்கள் உட்கார்ந்து சிறுநீர் கழித்தல். பெண்கள் நின்று கொண்டு சிறுநீர் கழித்தல். (அதி. 4. பக். 159)	தமிழர்களின் வழக்கத்திற்கு நேர் மாறானது.
35. தெருவில் உணவு உட்கொள்ளுதல். வீட்டினுள் மலசலம் கழித்தல். (அதி. 4. பக். 159)	,,
36. பூசாரிணி கிடையாது. (அதி. 4. பக். 160)	பூசாரிணி உண்டு.
37. பெண்கள் தம் பெற்றோரைக் காப்பாற்றியே தீர வேண்டும்; ஆண்கள் அவ்வாறு செய்வது அவசியமில்லை (அதி. 4. பக் 160)	பெண்கள் திருமணமான பிறகு, தம் பெற்றோரைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் தமிழர்களுக்கு இல்லை.
38. எகிப்தியக் குருமார்கள் தலைமயிரை மட்டும் மழித்து விடுதல். (அதி. 4. பக். 160)	தமிழ்நாட்டுக் குருமார்கள் தலைமயிரை மழித்தும் விடலாம்; வைத்தும் கொள்ளலாம்.
39. சடங்கின்போது இறந்தவரின் உறவினர் யாவரும் தலைமயிரை மழித்துக் கொள்ளவேண்டும். (அதி. 4. பக். 160)	தமிழ்நாட்டில் இறந்தவரின் கூடப் பிறந்த ஆண் ள்—மற்றும் தாயாதிகள் — தலைமயிரை மழித்து விடுவர்.
40. எகிப்தியர் முகவாய்க் கட்டையில் மயிர் வளர்க்கின்றனர்—தாடி வளர்க்கின்றனர். (அதி. 4. பக். 160)	இது முஸ்லிம் மரபினரால் பின்னர் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
41. தினைமாவைக் காலால் துவைக்கின்றனர்; சாணத்தையும், களிமண்ணையும் கையால் பிசைகின்றனர். (அதி. 4. பக். 160)	தமிழ்நாட்டினர் சாணத்தையும், களிமண்ணையும், தினைமாவையும் கைகளாலேயே பிசைகின்றனர்.
42. ஆண்கள் சுன்னத்துச் செய்து கொள்கின்றனர். (அதி. 4. பக். 161)	இது முஸ்லிம் மரபினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தமிழர்களுக்கு வழக்கமில்லை.
43. எகிப்தியர் வலமிருந்து இடம் எழுதுவர். (அதி 4. பக். 161)	சீனா, ஜப்பான் தவிர (மேலிருந்து கீழாக) மற்ற நாட்டு மக்கள் யாவரும் தமிழ்நாடு உள்பட-இடமிருந்து வலமாக எழுதி வந்தனர்; எழுதியும் வருகின்றனர்.

44. பித்தளைக் கோப்பைகளில் நீர் அருந்துதல்.
(அதி.4. பக். 161)

தமிழர் மண்ணாலும், மரத்தாலும், செம்பினாலும் செய்த பாத்திரங்களில் நீர் அருந்தினர்.

45 லினன் ஆடைகளை உடுப்பர்; அவற்றை அன்றாடம் தோய்த்துக் கட்டுவர்.
(அதி.4. பக் 161)

அன்றாடம் துணிகளைத் துவைத்துக்குளித்தல் தமிழரின் வழக்கமாகும். அன்றும், இன்றும்.

46. ஆண்கள் இரண்டு ஆடைகளை உடுத்தல்; பெண்கள் ஒரே ஆடை அணிதல்.
(அதி.4. பக் 161)

இது தமிழரின் வழக்கமே. வேட்டி, மேலாடையை நினைப்பூட்டும். பெண்கள் ஒரே ஆடையைப் புடவையாக உடுத்தி, அதில் ஒரு பகுதியால் தம் மார்பகத்தை மூடிக் கொண்டு வாழ்ந்தனர். இன்றும் வயலில்உழைக்கும் தமிழ்ப் பெண்கள் அவ்வாறே வாழ்கின்றனர்.

47. குருமார்கள் ஒன்றுவிட்டு ஒரு நாள் சர்வாங்க க்ஷவரம் செய்து கொள்ளுதல்.
(அதி.4 பக். 161)

வேள்வி, யாகம் முதலியவை நடக்கும் பொழுது, தமிழ் நாட்டில் யாகம் செய்வோர் சர்வாங்க க்ஷவரம் செய்து கொள்வது மரபு.

48. குருமார்கள் பகலில் இரு முறை, இரவில் இரு முறை குளித்தல். (அதி 4. பக். 162)

தமிழ் நாட்டில் மடாதிபதி, சந்யாசிகள் முதலானோர் மூன்று வேளை குளிப்பர். இது திரிகால ஸ்நானம் எனப்படும்- காலை-மதியம்-மாலை.

49. தலைமைக் குரு இறந்து விட்டால் அவருடைய மகன் அப்பதவிக்கு அமர்த்தப்படுதல்.
(அதி.4. பக். 162)

தமிழ் நாட்டில் நிலவும் ''பரம்பரை அர்ச்சகர்'' என்பதை நினைவூட்டுகிறது.

50. எருதுகள் பலியிடப்படுகின்றன. கடவுளுக்கென்று விடப்பட்ட எருதுகள் மட்டுமே பலியிடப்படுகின்றன.
(அதி.4. பக். 162)

தமிழ்நாட்டில் 'கோயில் மாடு' என்றும், 'கோயில் கடா'' ''கோயில் ஆட்டுக்கடா'' என்றும் வழங்கப்படும் விலங்குகள் கடவுளுக்கு அர்ப்பணிக்கப் படுகின்றன.

51. தீயில் நிவேதனப் பொருள் வேகும்பொழுது மக்கள் மார்பில் அடித்துக் கொள்ளுதல். (அதி.4. பக். 163)

இவ்வாறு மாரடித்துப் புலம்புதல் தமிழ்நாட்டில் இறந்தோர்க்குச் செய்யப்படும் ஒரு சடங்காகும். இறந்த பத்தாம் நாள் நடைபெறும் சடங்கில் இன்றும் பெண்கள் மாரடித்துக் கொள்வது மரபு.

52. பசுக்கள் பலியிடப்படுவது கிடையாது.
(அதி.4. பக். 163)

தமிழர்கள் பசுக்களைத் தெய்வமாகக் கொண்டாடினர். வாழ்த்துவதிலும் முதலில் ஆவை- பசுவை - வாழ்த்தினர்.

53. கிரேக்கர்களும் பசுவைப் புனித விலங்காகக் கருதினர்.
(அதி.4. பக். 164)

இந்தியா முழுவதும் பசு போற்றப்பட்டு வந்தது "கோ சம்ரக்ஷணம்-பசுவைக்காத்தல்" இன்றைய வரையிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

54. தெய்வங்களுக்கு ஆடுகளைப் பலியிடுதல்.
(அதி.4. பக். 164)

தமிழர்கள் தங்கள் தெய்வங்களுக்கு ஆடுகளைப் பலி கொடுத்தனர். யாகங்களில் ஆட்டின் வபை நிவேதிக்கப்பட்டு, உட்கொள்ளப்பட்டது.

55. கோயிலினுள் ஆண்பெண் கலவி செய்தல் தவிர்க்கப்பட்டது. (அதி.4. பக். 165)

தமிழ்நாட்டுக் கோயில்களில் புனிதம் காக்க, இத் தவிர்ப்பு முறை நீண்ட காலமாக அனுட்டிக்கப்பட்டு வருகிறது

56. முன்னோர்கள் தங்கள் பரம்பரைப் பஞ்சாங்கம் வைத்துக் கொண்டிருந்தனர்.
(அதி 4. பக் 165)

தமிழர்கள் ஏழு தலைமுறை வரையில் தங்கள் குடும்பப் பெயர்களைப் பாதுகாத்து வந்தனர். தென்னிந்தியாவில் உள்ள - கேரளத்தில் உள்ள - சிரியன் கிறித்தவர்கள் 2000 ஆண்டுகளின் பரம்பரைப் பஞ்சாங்கம் கொண்டிருந்தனர்.

57. ஒவ்வொரு மாதமும் மூன்று நாள்கள் பேதி மருந்தை உட்கொண்டனர்.
(அதி.4. பக். 166)

தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பேதி மருந்தைக் கொடுப்பது வழக்கம். முன்னர் பெரியவர்களும் மாதத்திற்கு ஒரு முறை பேதி மருந்து உட்கொண்டனர்.

58. "லைனஸ் கீதம்" பாடுதல். (அதி.4. பக். 166)

தமிழர்களின் அரிச்சந்திர புராணத்தில் உள்ள லோகிதாசனைப் பற்றிய சந்திரமதி புலம்பலை நினைப்பூட்டுகிறது.

59. வயதானவர்களுக்கு மரியாதை கொடுத்தல்.
(அதி.4. பக் 167)

"பெரியாரைத்துணை கொள்" போன்ற வாசகங்களும், "பெரியாரைத் துணைக்கோடல்" எனும் திருக்குறள் 45 ஆம் அதிகாரமும் குறிப்பிடத் தக்கன.

60. ஒவ்வொரு மாதத்திற்கும் கடவுளர்களின் பெயரை இட்டனர். (அதி.4. பக். 167)	தமிழர்கள் கிழமைகளுக்குக் கடவுளர்களின் பெயரையே இட்டனர். ஞாயிறு-சூரியன்; திங்கள்-சந்திரன் முதலியன.
61. ஒருவர் இறந்து விட்டால், முகத்தில் சேற்றைக் குழைத்துப்பூசிக் கொண்டனர். (அதி 4. பக். 167)	தமிழர்கள், இறந்தவரின் 10 ஆம் நாளன்று எண்ணெய் தேய்த்துக் குளிப்பர்.
62. ஒருவர் ஆடையை மற்றவர் ஆடையுடன் முடிந்து, வீதியில் ஊர்வலம் செல்வர்.—சவம் எடுத்தேகும் பொழுது. (அதி.4. பக். 168)	எகிப்தியரின் சிறப்பான வழக்கம்.
63. பூனைஇறந்துவிட்டால், புருவங்களை மழித்துக் கொள்வர். (அதி 5. பக் 180)	எதிப்தியரின் விசித்திரமான வழக்கம்.
64. முதலைக்குக் காதணிகள், காப்புகள் அணிவித்து மகிழ்தல். (அதி. 5. பக். 181)	தமிழர் கிளிகளுக்கும், குரங்குகளுக்கும் அணி செய்து பார்ப்பது வழக்கம்.
65. சடலப் பாதுகாப்பு செய்யப்பட்டது. மூன்று வகைகள் இருந்தன. (அதி 7.பக் 187)	இந்தியர்களிடமும் அப்பழக்கம் இருந்தது. இராமாயணத்தில் தசரதர் சடலம் எண்ணெய்க் கொப்பரையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது.
66. ஓர் அரசன் தன் அண்ணனை ஓர் அறையில் வைத்து, அதைச் சுற்றிலும் தீ எழுப்புதல். (அதி. 9. பக் 202)	மகாபாரதத்தில் நடைபெற்ற அரக்கு மாளிகை நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.
67. அரண்மனையின் கருவூல அறையில் ஒரு கல்லைத் தந்திரமாக வைத்துப் பொருள்களைக் களவாடல். (அதி. 10. பக்.209)	இத்தகைய கதைகள் இந்திய நாட்டில் பல உள்ளன.
68. பிரமிடுகளைக் கட்ட அடிமைகளைப் பயன்படுத்தி உழைப்பை மேற்கொள்ளுதல். (அதி. 11. பக். 216)	முற்கால அரசர்கள் மக்களைப் பயன்படுத்திக் கொண்டனர். பிட்டுக்கு மண் சுமந்த கதையைக் குறிப்பிடலாம்.
69. சாரம் கட்டிப் பாறைகளை ஏற்றல். (அதி. 11. பக். 217)	தஞ்சை பிரஹதீஸ்வரர் கோயிலின் பிரமரந்திர தளம் அமைக்கச் சாரம் கட்டினது.

குகைக்கோயில் அமைத்தல். (அதி. 13. பக். 230)

தமிழர்களின் மாமல்லபுர ரதங்களையும், பராபர் குகைக் கோயில்களையும் (அசோகர் காலத்தியது) குறிப்பிடலாம்.

புத்தகம் 3

70. எகிப்தியரின் சிறு குழந்தைகளுக்குத் தலைமயிரை மழித்துவிடல். இதனால் கபால ஓடு கடினமாக ஆகும் என்று நம்பினர். (அதி. 2. பக். 241)

தமிழ்நாட்டுக் குழந்தைகளும் அந்த அந்தக் குடும்பத்தின் தெய்வத்துக்குப் பிரார்த்தனையாய்த் தலைமயிரை மழித்து விடுதல் அன்று தொட்டு இன்று வரை வரும் மரபு "திருப்பதி மொட்டை" என்ற அடைமொழியே இதற்குச் சான்று.

71. எகிப்தியர் தலையில் வழுக்கை கிடையாது. காரணம் தலைமீது சூரியக்கதிர் பட்டு, எலும்பு கடினமாதல்.

பாரசீகர்களின் தலையில் வழுக்கை உண்டு. காரணம் அவர்கள் தலையை மூடிவைக்கின்றனர். (அதி. 2 பக். 241)

தமிழர்கள் முற்காலத்தில் தலையை மழித்துச் சிறிய குடுமி மட்டும் வைத்திருப்பர். அதனால் சூரியக் கதிர்பட்டு, எலும்பு கடினமாகும். இது இயற்கை வைத்தியம் சூரியக் கதிர்படாத செடி வளர்வதில்லை என்ற தமிழரின் கருத்தே.

72. செய்ந்நன்றி கொல்லுதல் பாரசீகர்களுக்குப் பிடிக்காத விஷயம். அதற்கான தண்டனை. எருதின் இரத்தத்தைக் குடித்துச் சம்மேனிடஸ் உயிரிழத்தல். (அதி.2.பக்.243)

"எந்நன்றிக் கொன்றார்க்கு முய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எனும் திருக்குறளே இதற்குச் சான்று.

73. பாரசீகர்கள், அண்ணன் தன் தங்கையை மணந்து கொள்ளுதல்.(அதி.2.பக். 248)

இன்றும் சில முஸ்லிம்கள் தம் சித்தி பெண்ணை மணந்து கொள்வது வழக்கத்தில் உள்ளது.

பாரசீகர்களுள் இன்றும் அண்ணன், தன் தங்கையைத் திருமணம் செய்து கொள்வது சாதாரண விஷயமே.

74.கேம்பைஸிஸ்தொடையில் வாள் குத்திப் புண்ணாகி இறத்தல்-தெய்வ எருதாகிய ஆபிஸ் அல்லது இபாபஸை எந்த இடத்தில் ஈட்டி பாய்ச்சிக் கொன்றாரோ, அதே இடத்தில் வாள் குத்தி இறத்தல். (அதி. 3. பக். 250)

"மனிதன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" எனும் பழமொழி இங்குக்குறிப்பிடப்படுகிறது.

"முற்பகல் செய்யின், பிற்பகல் தாமே வரும்" என்ற முதுமொழியினையும் குறிப்பிடலாம்.

75. கழுகு, பருந்து ஆகியவற்றின் சகுனம் பார்த்தல் (அதி. 4. பக். 258)

தமிழ்நாட்டில் "சகுன சாஸ்திரம்" தொன்று தொட்டுவந்த கலையாகும்.

76. படேய் மக்களின் வழக்கம்: வியாதியுற்றவன் இறந்தவிடத்து, அவனை அரிந்து, அவன் உடலைப் பங்குபோட்டு உண்ணுதல் (அதி. 6. பக். 268)

தமிழர்களிடையேயும் இப்பழக்கம் பழங்காலத்தில் இருந்திருக்க வேண்டும். காரணம், இன்றும் ஈமச்சடங்குகளில், இறந்தவரின் உருவம் போன்று மாவினால் செய்து, அதை உறவினர் உண்பது காணப்படுகிறது.

புத்தகம் 4

சித்திய நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள்

77. விரியன் பாம்புப் பெண்ணுடன் கூடி ஹிராக்ளிஸ் மக்களைப் பெற்றெடுத்தல். (அதி. 1. பக். 303)

நாகருலகம், நாககன்னிகை எனும் தமிழரின் கொள்கை உருவமே.

78. ஆசியா, ஐரோப்பா. லிபியா-யாவும் பெண்களின் பெயர்களே. ஆனால் நதிகள் யாவும் ஆண்களாகக் கருதப் பட்டன. (அதி. 2. பக். 308)

இந்திய நாட்டில், பூமி பெண்ணாகவும், பரதகண்டம் எனும் நாடு ஆணாகவும், நதிகள் பெண்களாகவும் கொள்ளப் பட்டுவருவது மரபு பரதனுடைய கண்டம்- பரத கண்டம், பொன்னி, கங்கை, வைகை, கோதாவரி, யமுனை, சோனை முதலிய நதிகளைக் குறிப்பிடலாம்.

79. சித்திய நாட்டின் சோதிடர்கள் வில்லோ மரத்தாலான கோலைக் கையிற்கொண்டு குறிசொல்லுதல். (அதி. 3. பக். 313)

தமிழ்நாட்டில் குறி சொல்லும் பெண்கள் தம் கையில் சிறிய கோலை வைத்துக் கொண்டு குறி சொல்வது மரபு. இன்றும் அம்முறை காணப்படுவதே.

80. சித்தியர்கள், உறவினர் சடலம் புதைக்கப்பட்ட பிறகு தங்கள் உடலைத் தூய்மை செய்து கொள்ளக் குளிக்கச் சென்றுவிடுவர். (அதி. 3. பக். 316)

இது அன்று தொட்டு இன்று வரை வரும் தமிழர்களின் பழக்கமே.

81. நறுமண விரையை அன லிலிட்டுப் புகைக் குளியல் செய்வர். (அதி. 3. பக். 316)

தமிழர் குளியலுக்குப் பிறகு சாம்பிராணிப் புகை போட்டுக் கொள்வது தொன்று தொட்டு வரும் பழக்கம். இது தடுமன் ஏற்படுவதைத் தவிர்க்கும்.

82 அரசருடன் அவர் மனைவியும், பணியாட்களும் கொல்லப்பட்டுப் புதைக்கப்படுவர். அதன் நோக்கம் அவர்கள் ஆவியுலகில் பேசி இன்புறுவர் என்பதே. (அதி. 3. பக். 316)

இது தமிழரின் மறு பிறப்புக் கொள்கையின் எதிரொலியே.

லிபிய மக்களின் பழக்கவழக்கங்கள்

83. பெண்கள் தம் கால்க்ளில் உலோகக் காப்பினை அணிதல். (அதி. 5 பக் 328)

இது தமிழ்ப் பெண்டிர்களின் வழக்கமே. சிலப்பதிகாரம் இதற்குச் சான்று.

84. திருமணமாகும் பெண்ணை அரசரிடம் அழைத்துச்சென்று ஆசி பெறுதல். (அதி. 5. பக். 328)

தமிழகக் கன்னியர்கள் பெரியவர்களின் ஆசியையும், தெய்வத்தின் அருளையும் வேண்டி, விரதம் காப்பர்.

85. நான்கு குதிரைகள் பூட்டிய தேரை ஓட்டுதல். (அதி. 5. பக். 329, 331)

தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் இராமாயணத்தில், நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்கள் ஓட்டப்பட்டனவாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. (எ.டு. அகநானூறு, பாடல் 104)

86. வெட்டுக் கிளிகளைப் பிடித்து, உலர்த்தி, மாவாக்கி உட்கொள்வர். (அதி. 5. பக் 330)

தமிழர்கள் மீன்களை உலர்த்தி உணவாக உட்கொள்வதுபோல.

87. திருமண விருந்தில், வந்த விருந்தினர் பெண்ணுக்குப் பரிசு கொடுத்து, ஒவ்வொருவராக அவளை அனுபவித்தல். (அதி. 5 பக். 330)

தமிழர் மணப்பெண்ணுக்குப் பரிசுகள் மட்டுமே வழங்குவர். அவளை அனுபவிக்க மாட்டார்கள். ஆனால், ஆசி கூறுவர்.

88. மூதாதையரின் சமாதிக்குச் சென்று, அச்சமாதியின் மீது கை வைத்துச் சத்தியம் செய்தல். (அதி. 5. பக். 330)

"கடவுள் சாட்சியாக" என்றும், "என் தந்தைமீது ஆணையிட்டு" என்றும் கூறும் வசனங்களைக் குறிப்பிடலாம். இவற்றின் சாயலே சமாதிமீது கை வைத்துச் சத்தியம் செய்தல்.

89. லிபிய நாட்டுப்பெண்கள் வெளிநாட்டு ஆண்களை மணப்பதில்லை.
(அதி 5. பக். 331)

இன்றும் தமிழ்நாட்டிலுள்ள சில பழங்குடி மக்கள்—திருநெல்வேலியில் கோட்டைக் குடி மக்கள்போல வெளியே உறவு வைத்துக் கொள்வதில்லை. இது இன்றும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

90 தலை மயிரைக் கொண்டைபோன்று போட்டு,முன்னே தள்ளி விடுதல்.
(அதி. 5. பக். 331)

கேரள மக்களுள் நம்பூதிரிகளும், சோழியர்களும், சிதம்பரம் தீக்ஷிதர்களும் இன்றும் அவ்வாறே தலைமுடியை வைத்துக் கொள்கின்றனர்.

91. பெண்கள், எத்தனை ஆடவர்களுடன் கூடுகிறார்களோ, அவ்வளவு தோல் பட்டைகளைக் காலில் அணிதல்.
(அதி. 5. பக். 332)

இது லிபியர்களின் சிறப்பான பழக்கம். தமிழர்களிடம் காண முடியாது.

92. தாமரைக் கனி, இலைகளை உண்பர்.
(அதி. 5. பக். 332)

தமிழ்நாட்டு முனிவர்கள், இந்திய நாட்டு ரிக்ஷிகள் காய் கனிகளை உண்டே வாழ்ந்திருந்தனர்.

93. ஔஷிசே மக்களுள் திருமணம் என்பது கிடையாது. மாதர் பொதுச்சொத்து. யார் யாரை வேண்டுமாயினும் அனுபவிக்கலாம். ஆனால், சம்மதம் மட்டும் தேவை.
(அதி. 5. பக். 333)

தமிழர்களிடையே பரத்தையர் ஒழுக்கத்தைக் குறிப்பிடலாம். கணிகையர்களிடம் போவதாயினும், அவர்கள் சம்மதம் பெற்றே போகவேண்டும்.

94. குழந்தைகள் முகத்தின் மேல்பக்கத்திலுள்ள இரத்தக் குழாயைச் சூடிடுதல்.
(அதி. 5. பக். 334)

தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் பெரியவர்களின் ஒற்றைத் தலைவலி நிற்க, முகத்தின் மேலுள்ள இரத்தக் குழாயை ஒரு கண்ணாடிச் சில்லால் துண்டித்து, இரத்தத்தைச் சிறிது சிறிதாக வெளியேற்றல்.

95. லிபியர்களின் ஈமக்கடன் நடைபெறும் பொழுது அப் பெண்கள் அழுவது ஓர் இனிய ஓசை பெற்று விளங்கும்.
(அதி. 5. பக். 335)

தமிழ்ப் பெண்கள் ஒப்பாரி வைத்துப் பாடும் பொழுதும் அவ்வாறே இசை எழுப்பியே பாடுவர்.

96. நான்கு குதிரைகள் கொண்ட தேரை ஓட்டுதல்.
(அதி. 5. பக். 335)

தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரை ஓட்டினர். மேலே குறிப்பு-85 பார்க்கவும்.

97. சடலத்தை உட்கார வைத்தே புதைத்தல் நேசமோனியர்களின் வழக்கம்.
(அதி. 5 பக். 335)

தமிழ்நாட்டில் முது மக்கள் தாழிகளுள் இவ்வாறே காணப் பட்டன.

98. உடலில் சிவப்பு நிறக் கலவையைப் பூசிக்கொள்கின்கின்றனர்.
(அதி. 5. பக். 335)

தமிழ்நாட்டில் சிவனடியார்கள் உடல் முழுவதும் விபூதி பூசிக்கொள்ளும் பழக்கத்தை நிகர்க்கும்.

99. பல வகை விசித்திரப் பிறவிகள் குறிப்பிடப்படுகின்றன.
(அதி. 5. பக். 336)

இராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் பல வகை விசித்திரப் பிறவிகள் குறிப்பிடப்படுகின்றன. உலக மகாகாவியங்கள் யாவற்றிலும் இவ்வாறான அமைப்பு காணப்படுவது இயல்பு.

100. பெண்கள் போர்களில் தேரோட்டுதல்.
(அதி. 5. பக். 336)

தசரதரின் மனைவி கைகேயியைக் குறிப்பிடலாம். இவள் போரில் தேரோட்டித் தசரதரைக் காப்பாற்றினாள்—சம்பராசுர யுத்தத்தில்.

101. மண்ணிலிருந்து, மணலிலிருந்து பொன் எடுத்தல்.
(அதி. 5. பக். 337)

காவிரி மணலிலிருந்து பொன் எடுத்த காரணத்தால், அதற்குப் பொன்னி என்ற பெயர் உண்டாயிற்று.

102. நேர்மையாக வாணிகம் புரிதல்—பொன் ஈடாகும் வரைப் பண்டங்களைத் தொடுவதில்லை.
(அதி. 5. பக். 337)

தமிழ்நாட்டில் நிலவி வந்த கூல வாணிகம் போல.

103. பெரெதிமா நோய் கண்டு புண்களில் புழுக்கள் நெளிய இறத்தல்—செய்த வினைக் கேற்ற தண்டனை பெற்று அனுபவித்தல்.
(அதி. 6. பக். 346)

இது 'தாம் செய்த தீவினைகளுக்கேற்ற தண்டனை பெற்று அனுபவித்தல்' எனும் தமிழரது கொள்கையின் உருவமே திருக்குறளிலும் இவ்வாறு பல நீதிகள் போதிக்கப் படுகின்றன. (குறள்-319)

புத்தகம் 5

திரேசியர்களின் பழக்க வழக்கங்கள்

104. குழந்தை பிறந்தால் அழுதல், இறந்தால் மகிழ்தல். (அதி. 1 பக் 350)

தமிழர்களின் பண்புக்கு மாறானது. முஸ்லிம்களால் இன்றும் பின்பற்றப்படுவது.

105. கணவரிடம் மிகுந்த ஆசை வைத்துள்ள மனைவி, கணவர் இறந்தால், அவர் உடலுடன் புதைக்கப்படுதல். (அதி. 1. பக். 351)

மறுபிறப்பிலும் அவர்கள் கணவன் மனைவியராகவே வாழ்வர் என்ற தமிழரின் கொள்கையின் உருவமே.

106. பச்சைகுத்திக் கொள்ளுதல்-உயர்ந்த பிறப்பு மக்களால் பின்பற்றப் படுதல். (அதி. 1. பக் 351)

தமிழ் நாட்டில் குறவர் குறத்திகளால் பச்சை குத்தப் படுதலை நிகர்க்கும்.

107. சடலம் புதைக்கப்பட்டு, அதன்மீது மண் மேடை கூம்பாக எழுப்பப்படும். (அதி. 1. பக். 352)

தமிழர்கள் புதையிடங்களிலும் அவ்வாறே மண்மேடுகள் சடலத்தன்மீது எழுப்பப் படுகின்றன.

108. ஏரியின் நடுவில் கழிகளை நாட்டிக் கூரைவேய்ந்து வாழ்தல். (அதி. 2. பக். 358)

காஷ்மீரம் போன்ற நாடுகளில் இவ்வாறே ஏரிக் குடில்கள் அமைக்கப்படுகின்றன.

109. கிரேக்கர்களுக்குப் பினீசியர்கள் 16 எழுத்துகளைக்கற்றுக் கொடுத்தல். (அதி. 3. பக். 367)

கிரேக்க முதல் எழுத்து ஆல்பா (α). அதே தமிழில் அ. 16 ஆவது எழுத்து நு (ν). அதுவே தமிழின் இறுதி எழுத்தாகும்.ன, ஆக, தமிழ் எழுத்து முறையே கிரேக்கர்களுக்குப் பினீசியர்களால் கற்றுக் கொடுக்கப்பட்டது. பினீசியர்கள், தமிழ் நாட்டிலிருந்து சென்ற பனையேறிகளே. அப் பினீசியர்கள் தமிழ் முறையையே பயன்படுத்தினர். ஆக பினீசியர்கள் தமிழ் நாட்டினரே.

புத்தகம் 7.

110. ஸெர்க்ஸிஸ் கண்ட கனவு - மும்முறை காணுதல் - பின்னர் கிரேக்க நாட்டின் மீது படையெடுத்துச் செல் லுதல். (அதி. 1. பக். 401)	தமிழர்களின் சோதிடக் கலையையும், கனவின் பலன் களையும் இங்கு ஒப்பிடலாம்.
111. இந்தியர் மூங்கில் விற் களைப் பயன் படுத்துதல். (அதி. 2. பக். 411, 418)	தமிழ் நாட்டினர் முற்காலத் தில் மூங்கிலால் செய்த அம் பையும், விற்களையுமே பயன் படுத்தினர். இராமாயணத்தில் இரும்பு வில்லும் குறிக்கப் படுகிறது.

புத்தகம் 8.

112. ஆண்களை விதை யடித்து. அலியாக்கி, அயல் நாடுகளுக்கு விற்றுவிடல். ஹெர்மோடியஸால் அன்று செயலில் கடைப்பிடிக்கப் பட்டது. (அதி. 2. பக். 442)	தமிழ் நாட்டில் விலங்கு களுக்கு மட்டுமே-முக்கியமாகக் காளைமாடு, நாய் ஆகியவற் றிற்கு மட்டுமே-விதையடிக்கப் பட்டது. அவை நன்றாகப் பணியாற்றும் என்பதே அதற் குக் காரணம்.

புத்தகம் 9.

113. போர் தொடங்கும் முன், உரிய தெய்வங்களுக்குப் பூசை போட்டுப் பலி கொடுத் தல். (அதி. 2. பக். 458)	தமிழ்நாட்டில், போர் தொடங்குமுன் உரிய தேவ தைகளுக்குப் பலி கொடுத்துத் தொடங்கினதாகத்தமிழ் இலக் கியங்கள்-கலிங்கத்துப் பரணி, புறநானூறு முதலிய நூல்கள் —கூறுகின்றன.
114. பௌசானியஸ், வர லாறு காணாத வெற்றி பெற்ற தன் காரணமாக, ஒலிவமாலை யைப் புனைந்தார். (அதி. 3. பக். 462)	தமிழ் நாட்டில் மூவேந்தர் களும் தத்தமக்குரிய மாலை களைப் புனைந்து கொண் டனர். ஆத்தி மாலை, வேப்ப மாலை, பனைமாலை முதலி யன.
115. ஸெர்க்ஸிஸ் தம் மரு மகளிடம் சென்று தம் காத லைத் தணித்துக் கொள்ளுதல் - மனைவி வெகுண்டு, அதற் கான பரிகாரம் தேடுதல். (அதி. 5. பக். 471)	இது பாரசிக நாட்டில் மட்டும் நிகழ்ந்ததன்று; உலகில் எல்லாப் பகுதிகளி லேயும் நிகழும் நிகழ்ச்சியே. ஆனால் செய்திகளை அம்பலத் துக்கு எட்டவிடுவதில்லை.

பிற்சேர்க்கை II

Historians about the Historian

(1) ARNOLD J. TOYNBEE

"Pride goes before a fall." Herodotus underlines the lesson in the lives of Xerxes and Croesus and Polycrates. Indeed the whole subject of his History might be taken to be the pride and fall of the Achaemenian Empire; and Thucydides, writing a generation later and in an apparently more objective and "Scientific" sprit, portrays much more impressively, because he discards the frank trendentiousness of the "Father of History", the pride and fall of Athens.

—(A Study of History, Vol. I. Page 357)

(2) BURY, J.B.M.A.

The story has no historical value but it has artistic significane in the narrative of Herodotus. (Page 254)

No tale is more delightful than this tale as Herodotus tells it when we take it simply as a tale; and none illustrates better the story-shaping genius of the Greeks. The Historical criticism is of another matter; we have to seek to extract what actually happened out of the bewildering succession of daring exaggerations, naive anecdotes, fictitious motives, oracles, not to speak of miracles; in most of which the reflected light of later events is visibly altering the truth, while much is coloured by the prejudices and leanings of Athenians, from whom Herodotus seems to have derived a great part of his record. (Page 265)

Most of the incidents which Herodotus recounts illustrate the historian's general view as to the great struggle of Greek and barbarian. (Page 269)

Unfortunately the events of the years succeeding the Battle of Platea are but very slightly known. Herodotus who about half-a-century later, completed the story, compact of fiction and history, of the Persian War, ends his work at the capture of Sestos. In the meantime the events of that full and momentous half-a-century had not been recorded, except by bits and scraps: the dates became confused, the details were forgotten, and when Thucydides some years after Herodotus, came to investigate the history of this period, the result of his research was a meagre narrative, in a very uncertain chronological setting. The growth of the Athenian Empire is the central fact of the period; but before tracing it, we must pause—it will not be for long—over the misfortunes of Sparta. (Page 324)

—(History of Greece, Pages 244, 265, 269 and 324)

(3) **CHARLES MICHAEL BOLAND**

But a more thoughtful Greek, Herodotus, pointed out that a northerly beamed sun would certainly be in order when one sailed to the south of the equator.

—(They All Discovered America, Page 27)

(4) **EDITH HAMILTON**

Herodotus, the first historian of Europe, who was a contemporary of Euripedes, refers often to myths.

(Mythology, Page 22)

(5) **ERNEST RHYS, - E.A. BLAKENEY, M.A.**

Herodotus a Greek historian and "Father of History" was born at Halicarnassus, a Doric Colony in Caria in B. C. 484. He belonged to a noble family at Halicarnassus. He was the son of Lyxes and Dryo: and epic poet Panyasis was one of his relations. He wrote his work at Thurii while advanced in years of age. The object of his work is to give the struggle

between the Greeks and the Persians. He travelled extensively-Asia Minor, Syria, Babylon, Ecbatana, Susa, Egypt, Elephantine etc. —(A Smaller Classical Dictionay, Page 260)

(6) GLOVER, T. R.

ON CLIMTE:

Here let us end with what Herodotus who wrote the most splendid travel book of Ancient days, said about his own country. the western shore lands of Asia Minor and the Ionians who lived there. "They set their cities in places more favoured by skies and seasons than any country known to us. For neither to the north of them nor to the south, neither to the east nor to the west, does the land do for its people what Ionia does; for in one region it is afflicted by cold and wet, in another by heat and drought." (Page 14)

ABOUT HOMER:

Herodotus put Homer, Hesiod together, very definitely at a date 400 years before himself say about 850 B.C. (Page 40)

ABOUT ALPHABET:

Herodotus tells us how Cadmus and his Phoenicians when they came seeking the lost sister Europa, brought the letters to Europe. And how the Greeks adapted the letters. He had himself seen an inscription at Thebes in "Cadmian Letters" most of them like the Ionic. (Page 70)

ON BABYLON :

Herodotus whom I am quoting probably saw the walls and moat which are somewhat similarly described by Nebuchadnezzar, who made them; he says of the "Great waters" (his moat) that the crossing of them was like crossing of the Great Sea, of the briny flood. (Page 82)

ON INDIA:

Some of them have high praise for the sobriety and truth of what Herodotus records of India. His tale of ants as large

as foxes, from among whose brows the gold is gathered by adventurers on camel back was not his invention; it comes from an old Indian Story. (Page 255)

—(The Ancient World, Pages 14, 40, 70, 82 and 255)

(7) NILAKANTA SASTRI, K.A.M.A.

Herodotus says that India was the 20th Satrapy of Darius and says: "The pupulation of India is by far the greatest of all the people that he knew and they paid a tribute proportionately larger than all the rest (the sum of three hundred and sixty talents of gold-dust equivalent to over a million pounds sterling.) (Page 83)

The exact limits of Darius's Indian Satrapy are not known. It was distinct from Aria (Herat) Archosia (Kandahar) and Gandaria (W. Punjab.). As Herodotus says that its eastern boundry was a sandy desert (perhaps the sandy wastes of Sind and Rajaputana), we may suppose that the satrapy comprised the course of the Indus from the limit of Gandaria (Kalabagh) to the sea including the whole of Sind and perhaps a considerable portion of Punjab to the East of Indus. This territory continued to form part of the Persian Empire under Xerxes (465-456 B.C) (Page 83)

Herodotus also mentions a naval expedition despatched by Darius under Skylax (about 517 B.C) to explore the Indus. This was only possible after Darius has established his hold on the Indus Region. Herodotus says that the Persian conquest was the result of Skylax's expedition, but this seems very unlikely in the light of Alexander's experience in the same region. (Page 83)

According to Herodotus, besides infantry India also supplied Xerxes with cavalry and chariots, riding horses, as also horses and also wild asses, to draw the chariots, together with a very large number of dogs. (Page 84)

—(Advanced History of India, Pages 83 and 84)

(8) **PERRY, W.J.**

As is well known, Herodotus was convinced that the Greeks derived their Gods from Egypt and Lucian, in his work on the Syrian Goddess, is of the same opinion. It is often said that Herodotus was so vastly impressed by the Egyptian Periests that he believed their claim. But he had at tne same time visited Babylonia and had had full opportunities of studying the problem. Since the cults of Gods are in the hands of ruling families the world over, the double claims of the Greeks that they derived both their ruling families and their Gods from Egypt really corroborate each other and make them still more probable.

—(The Growth of Civilisation, Page 176)

(9) **TRIPATHI, R;M.A.Ph.D.**

Ancient Indian Literature, varied and rich in many respects is singularly deficient in History. There is no work in all the literary treasures of the Brahmans, Buddhists and Jains comparable to the Book of Kings or the Annals of Livy or the Histories of Herodotus. (Page 1)

The earliest reference to India is made by Herodotus who deposes to the political connection of North Western India with the Achaemenian Empire in the fifth century B.C.

(Page 4)

Herodotus tells us how Darius I essayed to achieve his object. He first sent an expedition sometime after 517 B.C. under Skylax of Karyandes to explore the possibility of a passage by sea from the mouths of the Indus to Persia. He sailed down the Indus and collected a good deal of information, afterwards utilised by Darius I. Herodotus also testifies that the conquered Indian territories, which perhaps did not include much of Punjab were constituted into the twentieth satrapy of the Persian Empire; and it yielded the enormous tribute of 360 Euboic talents of gold-dust, equal to one million sterling. Obviously, these tracts were then very fertile, populated and prosperous. (Page 116)

— (History of Ancient India, Pages 1, 4 and 116)

(10) TOZER, H.F.

Of the life of Herodotus, few details have come down to us. We know however that he was born at Halicarnassus early in the 5th century B.C. and that in the middle he moved to Athens; he joined the colony which was sent out from Athens to Thurii in South Italy in 433 B. C. He was familiar with the coast line on the three sides of the Asia Minor. He describes Babylon as a professed eye-witness. And finally in Libya he visited Cyrene where he describes a statue from his own inspection. (Page 16)

Herodotus has communicated to us his conception of the general features of the world and by a comparison of this with other passages, we can form a tolerably clear idea of his views on the subject. (Page 80)

The accounts that Herodotus received of India which formed the remotest satrapy of the Persian Empire seem to have made a great impression upon him for he speaks of the Indians as the most numerous of all nations then known aud of the tribute that they paid in Gold-dust as being enormous. The Indians with whom he was acquainted were of different races, speaking different languages and some of them were nomads. Hence it is evident that he included among them the aborigines as well as the Hindus, and this would account for the barbarous customs which he ascribes to some of them. On the otherhand, the abstinence from animal food which he attributes to certain tribes and their unwillingness to put away live animal to death are the tenets of Brahmans. (Page 92)

Among the products of the country, besides Gold, he mentions cotton, which he describes as a kind of wool that grows wild on trees, and is superior in beauty and quality to the wool of sheep, and is used by the natives for making clothes. He had also heard that crocodiles were found in the Indus, which he believed to be the only river in the world besides the Nile that produced them. (Page 92)

The dwarfs who are mentioned are the same race which we have identified with the Pygmies of Homer. (Page 97)

The Nasamonians could not understand a word of their language, nor had they any acquaintance with the language of the Nasamonians. They were led across extensive mains and marshes and finally came to a town, where all men were of the height of their conductors and black-complexioned. A great river flowed by the town, running from west to east and containing crocodiles. (Page 97)

The river was regarded by Herodotus himself as being the Nile in its upper course, which he supposed to flow from Western Africa. (Page 97)

But the direction which was followed by the Nasamones suggests the probability that the stream which they reached was the Niger, which lies to the South West of the Sahara. (Page 97)

—(A History of Ancient Geography, Pages 76, 80, 92 and 97)

(11) Dr. VINCENT A. SMITH, M.A.

The purely Indian traditions are supplemented by the notes of the Greek Authors, Ktesias, Herodotus, the Historians of Alexander, Megasthenes and others. (Page 8)

Herodotus, who wrote late in the fifth century B.C. contributes valuable information concerning the relation between India and the Persian Empire which supplements the less detailed statements of the inscriptions. (Page 10)

Voyage of Skylax (Herodotus Book V - 44): The Periplus attributed to Skylax but really written between 338 and 335 B.C. does not treat of India. (Page 34)

—(An Early History of India, Pages 8, 10 & 34)

மேற்கோள் நூற்பட்டியல்

(BIBLIOGRAPHY)

ஆங்கில நூல்கள்

A History of Ancient Geography	— H.F. Tozer	— 1935
A Smaller Classical Dictionary	— E.H. Blakeney	— 1931
A Study of History	— Arnold J. Toynbee	— 1974
Advanced History of India	— K. A. Nilakanta Sastri M.A.	— 1970
An Advanced History of India	— Dr R.C. Majumdar	— 1950
Foundations of History	— E.D. Hancock	— 1930
Herodotus	— Rawlinson	— 1910
History of Ancient India	— R. Tripathi, M.A. Ph.D	— 1967
History of Greece	— J. B. Bury	— 1911
History of India	— R. Sathianatha Iyer, M.A.L.T.	— 1952
History of Phoenicia	— Rawlinson	— 1889
Latin - English Dictionary	— Cassel & Co	— 1910
Mort D' Arthur	— Lord Tennyson	— 1945
Mythology	— Edith Hamilton	— 1956
Our Heritage	— Dr. S. Radhakrishnan	— 1973
Strabo	— Mccrindle	— 1935
The Ancient World	— T. R. Glover	— 1935
The Bible	— James Version	— 1950
The Book of Knowledge	— The Waverly Book Co. Ltd.	— 1940
The Early History of India	— Dr. Vincent Smith, M.A.	— 1908
The Growth of Civilisation	— W. J. Perry	— 1923
The Histories - Herodotus	— Aubery De Selincourt	— 1954
The Laws of Manu	— J. M. Macfie, M. A.	— 1921
They All Discovered America	— C. M. Boland	— 1963

தமிழ் நூல்கள்

அகநானூறு	— ரா. ராகவையங்கார் பதிப்பு	— 1923
அரிச்சந்திர புராணம்	— ஆசு கவிராஜர்	— 1913
கம்பராமாயணம்	— வை மு. சடகோப ராமானுஜாசாரியர், வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர்	— 1939
do	— சக்தி வெளியீடு	— 1958
கௌடலீயம்	— அண்ணாமலைப் பல்கலைக்கழகம்	— 1979
சிலப்பதிகாரம்	— ந. மு. வே. நாட்டார்பதிப்பு	— 1950
சீவகசிந்தாமணி	— டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்	— 1955
தாலமி	— வி.எஸ்.வி.இராகவன்	— 1978
திருக்குறள்	— ஆறுமுகநாவலர் பதிப்பு	— 1949
தேவாரம்	— காசிமடம் பதிப்பு	— 1950
தொல்காப்பியம்	— மர்ரே வெளியீடு	— 1950
நாமதீப நிகண்டு	— மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு	— 1912
நாலாயிர திவ்வியப் பிரபந்தம்	— சே. கிருஷ்ணமாசாரி & வை மு கோபாலகிருஷ்ணமாசாரி	— 1919
பத்துப்பாட்டு	— டாக்டர் உ.வே.சா. பதிப்பு	— 1953
பரிபாடல்	— டாக்டர் உ வே.சா பதிப்பு	— 1956
பாரதியார் கவிதைகள்	— வானவில் பிரசுரம் சென்னை-35	— 1977
பாஹியான்	— வி.எஸ்.வி இராகவன்	— 1978
பிளினி	— "	— 1977
புறநானூறு	— டாக்டர்உ.வே.சா பதிப்பு	— 1936
பெரிப்ளூஸ்	— வி.எஸ்.வி. இராகவன்	— 1977
பெரியபுராணம்	— காசி மடம் பதிப்பு	— 1950
மணிமேகலை	— டாக்டர் உ.வே.சா. பதிப்பு	— 1949
மார்க்கோபோலோ	— வி.எஸ். வி.இராகவன்	— 1980
மெகஸ்தனிஸ்	,,	— 1978
யுவான் சுவாங்	,,	— 1978

சொற்பொருட் குறிப்பகராதி

அகதிர்ஸி-321
அகதிர்ஸ்-304
அகத்தியம்-18
அகநானூறு- 17, 21, 206, 339 384
அகர்னானியா-149, 151
அகர்னான்-151
அகஸ்டஸ் சீசர் (கி.மு. 63-கி.பி 14)-252
அகஸ்தியர்-169
அகில்-284
அக்கமனே- 400, 405, 406, 410, 422, 429, 432, 433
அக்கமெனிட்-84
அக்டிஸ்-395, 396
அக்டே-455
அக்ரோபொலிஸ்-392, 393
அக்னிக் கடவுள்-158, 304, 341
அசரீரிவாக்கு-55, 56,59, 60, 64, 81, 82, 116, 119, 153, 234, 349, 380, 381, 400, 461
அசோகர் (கி.மு. 273—224)-131, 233
அசோகர் கல்வெட்டு 131
அடார்பெகிஸ்-164, 174
அடார்னியஸ்-376
அடிமைகள்- 216, 217, 219, 221 443
அட்டிகா-27, 383, 392-396, 424 440, 448, 449, 452, 453, 454, 455 ,462
அட்டோஸா- 259, 396, 399, 403, 411, 419
அட்லஸ்மலைவாசிகள்- 334,341
அட்லாண்டிக் பெருங்கடல்-135
அண்டிரோமகே-61
அதர்மகிடே-328
அதிர்ச்சிச் சிகிச்சை-81
அத்தினே- ஆதன்ஸ் நகரம், 232
அத்தினே கோயில்- சாயிஸில் உள்ளது-229, 232, 237, 239, 333, 341
அத்தீனியர்கள்-298
அந்தேயுஸ்-305
அபன்டே-440
அபார்த்தியர்-261
அபிசீனியா-157
அபிதான சிந்தாமணி-109
அபீடே-துறைமுகம், 439
அப்பொலோ-தெய்வம், 59-65, 82, 85, 119, 365, 368, 396, 437, 467
அப்பொலோ அதிகாரங்கள்-61
அப்ரோடைசியஸ் தீவு, 329
அப்ரோடைடி-பெண்தெய்வம், -164, 198, 208, 215, 231, 234 313, 318, 468
அமாஸிஸ் (கி.மு. 570-526)-220 222, 229-239, 243, 254
அமாஸிஸ் சடலம் எரிக்கப் படுதல்-247

அமாஸிஸ் நீதிமன்றம்-66, 72
அமிந்தாஸ்- 358-363, 448, 449 450, 452
அமெரிக்கா-வட, 23
அமெஸ்டிரிஸ்- 111, 410, 471, 472, 474
அமேசான்-நதி, 40, 42
அம்பட்ரியான்-365
அம்மான் கோயில்-94
அம்மோன் ஆலயம்- தீபேயில் உள்ளது, 119, 149, 150, 198
அயோ-ஐநாகஸ் மகள், 33, 34, 46, 47
அயோனிய கிரேக்கர்கள்-235
அயோனிய மொழி-25
அயோனியர் யவனர், 65, 145, 206, 235, 260, 294, 365, 369 371-377, 387, 389, 421, 422, 437
அயோனியா 120, 201, 206,287 293, 294, 373, 376- 379, 403 442, 473
அயோனியா நிர்மாணிக்கப்பட்டது (கி.மு. 1044)-206
அரக்ஸிஸ்-நதி, 134, 138, 139, 142
அராபியர்கள்- 103, 128, 154, 169, 171, 205, 252, 280- 282 353, 413, 417, 420
அரிச்சந்திர புராணம்- 172, 177
அரிம்னெஸ்டஸ்-405, 458, 461, 463, 464
அரியன் இண்டிகா (கி.பி. 90-180)-21, 309
அரியா- 262, 417
அரியாசனம்- மைதாஸ் அளித்தது, 58
அரியாண்டிஸ் 111, 345
அரிஸ்டகோரஸ் 369-378
,, கொலை செய்யப்படுதல் கி.மு. 497)-373
அரிஸ்டிப்பஸ் (கி.மு 370)- தத்துவபோதகர், 245
அரேபியா-185, 192, 216, 221, 237, 259, 261, 279, 282, 284
அரேபியா கடல்- 42, 203, 204 283
அரேபியாவளைகுடா- 148, 199
அர்செசிலெளஸ்- 345-348
அர்டபா-ஒரு நாணயம், 124, 130
அர்டபானஸ்- 400, 403, 406 419, 438, 440, 453, 474
அர்டாபானஸ் ஸெர்க்ஸிஸைக் கொன்ற தளபதி,21, 120, 256 401, 402, 416, 431, 453
அர்டபாஸிஸ்-111, 124, 130
அர்டபெர்னிஸ்- 370, 375- 378
அர்டமிஸ்-தெய்வம், 61, 82, 111, 351, 355, 396
,, ஜியுஸ் மகன்-61, 82
,, திருவிழா-பாவை நோன்பு, 96
அர்டம்பெரஸ்-91, 96, 475, 476
அர்டாக்டிஸ் 111
அர்டான்டே-465, 467 469, 470
அர்டாஸெர்க்ஸிஸ்-25, 474
அர்டிமிஸியம்- 435- 437, 439, 440
அர்டிமிஸியா-அரசி, 24, 25
,, பெண் மாலுமி, 438, 441, 442
அர்டிஸ்டோன்-259
அர்டோகோஸ்ட்ரா- 386, 390
அர்டோபஜானே-398, 399, 404
அர்ப்போக்ஸெயிஸ்- 301, 302
அர்ஜுனன்-384
அர்ஸமிஸ்-111, 400
அலரோடியர்-262, 417
அலாய்டே-அரக்கன், 384
அலாஸ்கா-23, 40, 42
அலிகள்-261, 317, 442, 443,444
அலெக்சாந்தர்- அமிந்தாஸின் மகன், 358-363, 446, 447,448, 449, 450, 452

அலெக்சாந்தர் மகா (கி.மு. 356-323)- பிலிப்பின் மகன், 38, 64, 118, 131, 253, 309, 362, 448
,, சிந்துநதியை அடைந்தது (கி மு 326)-309
அலெக்சாந்திரியா-43
அலெக்சான்டிரைட்ஸ்-432, 454
அல்சேயஸ்-கவிஞர், 139
அல்யாட்டிஸ் (கி மு. 617-560)- 65, 71, 93
அவுரிச்செடி- இண்டிகோ, 142
அனக்ரியான் 383
அனபாஸிஸ்-ஸெனபான் எழுதிய நூல், 85
அனெக்ஸான்டிரிடிஸ்-463
அன்டியாகஸ்-458, 459
அஜாதசத்ரு-270
அஷாம்-153
அஷிலஸ் 48
அஸ்கலான்-89, 94
அஸ்டியகெஸ் (கி.மு. 594-559) -84, 86, 89- 101, 118, 141, 238, 476, 477
அஸ்பதைன்ஸ்-257, 258
,, ஹைடார்னஸ்-257
அஸ்பிஸ்டே-329
அஸ்ஸீரிய நாகரிகம்-22
அஸ்ஸீரியர்கள்-86-88, 92, 103, 108, 317-320, 411, 416
,, கல்வெட்டு-38, 366
,, நாட்டு மங்கை-116
அஸ்ஸீரியா-33, 42, 93, 113, 116- 119, 124, 125, 133, 134, 261, 299, 318
ஆக்ரான்-50
ஆசியா-25, 27, 32, 84, 86, 88-90. 98, 113, 124, 130, 139, 199, 200, 205, 259, 260, 262, 300, 304, 307, 308-312, 323, 353-358, 361. 379, 385, 397, 405, 414, 448
,, கணவர்-இயாமிடஸ், 311
ஆசியா-பெற்றோர், ஓசேனஸ், டெதிஸ், 311
,, மகன்கள்-மூவர், 311
,, மனைவி-பிரொமீத்தியஸ், 308
ஆசியாமைனர்-23, 51, 61, 64, 139, 145, 206, 238, 283, 294, 361, 378, 404, 473
ஆசியாஸ்-குலமரபினர், 308
ஆசீஸ்-308, 311
ஆடிஸே-1
ஆடிஸ்-50
ஆண்டிரோபகி-321-324
ஆண்டிரோமேடா-410
ஆதன்ஸ் நகர மக்கள் 26, 27, 69, 70, 366, 441, 449, 450, 451, 454
ஆதன்ஸ் நகரம்-26-29, 65-70, 148, 151, 232, 239, 294, 341, 366, 369, 370, 380-384, 387-400, 403, 404, 434, 435, 438, 443, 444, 445, 447, 448, 449, 450, 452, 453, 457, 458, 464
ஆத்திசூடி - 278
ஆபிஸ்-புனித எருது, 162, 171, 246, 250, 253
ஆபே-குறிமேடை, 437
ஆப்பிரிக்கா-25, 26, 40, 157, 185, 192, 221, 238, 244, 251, 253, 271, 286, 310, 311, 344, 348
ஆரிய நாகரிகம்-22, 45
ஆரியர்கள்-20
ஆர்கிவர்-ஆர்கோ நாட்டவர், 366, 454
ஆர்கோஸ்-33, 34, 46, 47, 67, 72, 333, 364, 366, 440, 451, 452, 454
ஆர்டாய் மக்கள்-410
ஆர்டிஸ் (கி. மு. 678-629)-59, 64, 65, 70
ஆர்டெரிக்கா-388
ஆர்மீனியர்கள்-262, 414, 417,
ஆர்மீனியா-114, 118, 126
ஆர்யபட்டர் (கி. பி. 499)-73

ஆர்யபட்டீயம்-ஆர்யபட்டர் இயற்றியது, 73
ஆன்டனி, கிளியோபாத்ரா (கி. மு 32)-295
ஆஸிரிஸ்-174, 233
இக்தியோபகி - மீன் மட்டும் உண்பவர், 133, 142, 269
இடந்திர்ஸ்ஸ்-322, 323
இத்தாலி 27
இந்தியக் குதிரைகள்-275
இந்தியக் குலமரபினர்-30, 267, 269
இந்தியச் சத்ராபி-20 ஆவது, 262, 310, 409
இந்திய நாய்கள்-125, 130
,, பாலைவனம்-267
,, புராண வரலாறு-158
,, பெருங்கடல் - 32, 45, 135, 199, 203
இந்தியர்கள்-157, 191, 262, 267, 275, 307, 310, 411, 413, 414, 417, 418, 457, 459
இந்தியா-110, 131, 157, 169-172, 193, 215, 267, 273, 275, 283, 284, 312, 338, 350, 355, 418, 448
,, கட்டியவரித்தொகை-266, 311
,, கட்டிய பொன்துகள் அளவு 262, 266
இந்திரன்-82, 109, 158, 304, 305, 341
இபாபஸ்-புனித எருது ஆபிஸ், 162, 171, 246, 253
,, ஜியுஸ் மகன்-48
இமயமலை-22, 191
இயட்மான்-220
இயபிஜியக் கடற்கரை-292
இயற்பா-83
இய-தெய்வம், 164, 174
இயாபிடஸ்-311
இயோலஸ்-234
இயோலிய கிரேக்கர்கள்-235
இயோலியர்-65, 260, 377, 422,
இயோலிஸ்-206
இராசினஸ்-நதி, 396
இராமர்-82, 228, 264
இராமாயணம்-வால்மீகி, 18, 45, 131, 228, 339, 344, 406
இராமானுசம் - கணிதமேதை, 374
இராவணன்-406
இலகுசாதகா-73
இலங்கை-271
இலவங்கம்-188, 190-192, 285
,, பட்டை-193, 281, 284, 285
,, பத்திரி - 188, 190-193, 281
,, தைலம்-192
இலியட்-17, 47
இல்லீரியா-361
இனாரஸ்-400, 406, 432
இன்டாப்ரெனிஸ்-257, 258
இஸ்-ஒரு நகரம், 107, 111, 114
இஸ்டர்-நதி, 324 325
இஸ்மீனியன் அப்பொலோ-தெய்வம், 365, 467
ஈசாப்-கதை சொன்னவர், 220
ஈடியன்-58, 61
ஈடியாக்கிளிஸ்-366, 368
ஈடோனியர்-356, 373, 374, 378
ஈபார்ஸ் ஐவர் குழு, 463
ஈபேரஸ்-260, 265
ஈனோனி-48
ஈஜியன் கடல்-51, 139, 295, 299, 353, 378, 395, 440
ஈஜினா-290, 294, 434, 438, 444, 457
ஈஸிஸ்-கடவுள், 164, 174, 230, 233, 334
ஈஸ்தெடிக்ஸ்-அழகுக்கலை, 49
உபநிடதங்கள்-1, 109
ஊசியிலை மரம் 382
எகிப்திய அரசர்-168, 197-199, 203, 222, 224, 232, 307
,, குருமார்கள்-107, 112, 160, 161, 194, 195, 198, 199, 201, 207, 212, 226, 246
,, பழக்கவழக்கங்கள்-159-168

எகிப்தியத் தாலமிகள்-224
,, நாகரிகம்-22
,, மருத்துவர்கள்-167
எகிப்திய வரலாறு-37
எகிப்தியர்கள்-37, 112, 116, 128, 143-149, 153-156, 159, 163, 165, 167, 170-172, 176, 179, 181, 183, 190, 191, 196, 200, 201, 205, 214, 226, 232, 238, 240, 242, 247, 291, 328, 403, 421
எகிப்து-21, 27, 30, 33, 37, 42, 47, 66, 70, 81, 85, 112, 119, 125, 143, 145, 147-152, 156, 159, 160, 165, 166, 168, 171, 174, 176, 177, 185, 194, 197-201, 207, 216, 218, 220, 222, 223, 225, 227, 228, 233, 235, 237-241, 244, 246-248, 253, 254, 266, 279, 295, 298, 328, 334, 355, 397, 399, 400, 402, 405
நைல்நதியின் நன்கொடை-150
எகினார்-46 312, 367
எக்கைன்ஸ்-336
எக்படன-27, 85, 87, 92, 93, 117, 238, 249, 250, 255, 261, 299, 404
,, நகர அமைப்பு-87
,, டெயோஸிஸ் அமைத்தது-87, 92
எட்டுத்தொகை-17
எண்ணெய்-கொப்பரை, 188-192, 365, 366
,, பயன்படுத்தல்-130
எதியோப்பியர்-153, 154, 157, 193, 196, 200, 205, 240, 253, 262, 268, 271, 283, 413, 417
எதியோபியா-145, 152, 156, 202, 220, 246: 253, 271, 281, 286, 413
எநாரீஸ்;பெண்நோய்-89, 94, 313, 317
எபிடௌரஸ்-434, 456, 457
எபிமீத்தியஸ்-311
எபியால்டிஸ்-403, 426
எபிரஸ்-27
எபிரேயம்-ஹீப்ரு மொழி-18, 22, 284
'' குருமார்கள்-284
எபீசஸ்-65, 201, 370, 371, 441, 442, 444
எமாதியா-362
எம்பாமிங் சடலப் பாதுகாப்பு-190
எரடாஸ்தெனிஸ்-244
எரிட்ரியா-370, 371, 387, 388, 434, 457, 459
எருதுகள்-பலியிடப்படுதல் -162
,, இலக்கணம்-162
எர்க்ஸாண்டர் 361
எலிபெண்டைன்-148, 151-153, 156, 181, 230
எலிஸ்-291
எலூசிஸ் கோயில்-462-464
எலேயு-476
எழுவர் குழு-257, 263, 265
என்ஷிலஸ் 366, 368
ஏப்ரீஸ்-236, 238
ஏரல்-கடல்-140
ஏரஸ்-ஜியுஸ் மகன்-351, 354
ஏரிஸ்-208
ஏனம்-கடாரம், கொப்பரை-192

ஐங்குறு நூறு-109
ஐநாகஸ்-33, 46, 47
ஐபீரியா-47, 205
ஐரோப்பா-25, 47, 94, 200, 204, 304, 308, 309, 312, 323, 349, 353, 355, 356, 361, 452
ஐஸ்லாந்து-40, 42
ஒடேஸ்-289
ஒட்டகம்-237, 239, 273-275, 420, 421
ஒரன்டே-மலை-93
ஒரேடஸ்-ஆளுநர் - 287, 288, 290, 293
ஒலிம்பஸ்-மலை-197, 198, 395
ஒலிம்பிக் விளையாட்டுகள்-தொடக்கம் (கி. மு. 780,) 26

ஒலிம்பியா-339, 381, 384
,, நான்கு குதிரைகள் பூட்டிய தேர் போட்டி-339
ஒலிவ மரம்-125, 407
,, இலை-வெற்றிச் சின்னம், 407
,, மாலை-83, 443
,, மலை-355, 402
ஒன்பதருவி-392
ஓசேனஸ்-46, 311
ஓடேனஸ்-257, 259, 409, 410, 419
ஓநாய்கள்-180
ஓபிர்-துறைமுகம், 37, 44
ஒரோஸ் நதி-326
ஓர்க்கோலை-283, 286
ஓலோரஸ்-386
ஔகடே 302
ஔகிலா 329
ஔஷிஸே-329, 333, 335, 341
கங்கை நதி-22, 312
கஞ்சாச்செடி-139, 140
கடாரங்கள்-காட்மஸ் புகுத்திய எழுத்துகளுடன்-365
,, எண்ணெய்க் கொப்பரை-192, 365, 368
கண்டியோ-சடலப் பாதுகாப்பு 190
கபாடபுரம்-18
கபாலியர்கள்-417
கம்பராமாயணம்-94, 182, 192, 264, 278, 343, 344, 407
கரமாண்டியர்-331
கரா-முதலை-183
கருங்கடல் யூக்ஸின், யூக்ஸினஸ்- 7, 30, 47, 204, 262, 305, 374, 377
கலித்தொகை-21
கழுகுச் சகுனம்-258, 263, 264,
கற்குகை-232
கற்குடைவு-230
கன்னியாகுமரி-176
காகம் சகுனம் 264, 265
காகஸஸ்- மலைகள்-47, 135, 205, 311
காகிதம்-367
காடியாரி-302
காட்மஸ்-364-368, 467
,, எழுத்துகளைப் புகுத்தல், 364, 365, 368
காட்மியர்கள்-365, 368
காண்டாமிருகம்-185
காந்தாரா-310
காந்தாரியர்-261, 417
காபேரிஸ்-436, 439
காபேலியர்-260
காப்ரா-ஷெப்ரன், 222, 224
காமதேனு 173
காம்பே-284
காரிய-நாடு, 23, 24, 51, 206, 240, 423
காரியண்டி-307
காரியர்- 24, 65, 145, 240, 260, 423
கார்டியம்-தலைநகரம், 63
கார்டியன் முடிச்சு-64
கார்டியஸ்-58, 61-64, 145
கார்டியா-380, 381, 384
கார்டும்-157
கார்த்தேஜினியர்-246, 251, 337, 344, 378
கார்த்தேஜ் - பினீசியரின் குடியேற்றம், 35, 43, 251, 252, 310
கார்த்தேஜ்- நிர்மாணிக்கப்பட்டது (கி.மு. 631)- 251
கார்த்தேஜ் அழிக்கப் பட்டது-(கி.மு. 146)-252
,, முழுவதும் அழிக்கப்பட்டு, மறைந்தது (கி. பி. 698)-252
காலிபோன்-287
காலிமாக்கஸ் (கி.மு. 490)- 244 387, 388
கால்டியர்கள்-116, 119
கால்ட்ரன்-கொப்பரை, 192
காவிரிப்பூம்பட்டினம்- 18, 294
காவிரி, வைகை-312
காளிதாஸர்-73
கானிபால்-271

கான்டௌஎல்ஸ்-50-52, 423
காஸியா-279, 284
காஸ்டர், பாலக்ஸ்-49
காஸ்பியர்-261, 262, 417, 420
காஸ்பியன்கடல்- 135, 139, 140
காஷ்மீரம்-417
கிண்டேனர்கள்-332
கிரகணம்-167
கிரமேடிஸ்-18
கிரிமியா-390
கிரீட்தீவு-34, 47, 309
கிரீஸ்-237, 274, 387, 435, 446
கிருஷ்ணர் 49, 82, 175, 338, 384
கிரெஸ்டன்-350
கிரேக்க நாகரிகம்- 23, 390, 404
கிரேக்க நாடு 21, 22,27, 34,45, 46, 59, 75, 85, 92, 109, 120, 133, 150, 157, 205, 207, 234 279, 283, 287, 291, 292, 294, 304, 324, 352, 361, 363, 364, 367, 371, 373, 379, 387, 390, 391, 395, 397, 400-406, 433, 435, 447, 448, 453- 455, 448, 463, 468, 478
கிரேக்க மக்கள் - 24, 32, 34, 47, 61, 94, 106, 108, 144, 146, 147, 161, 163-167, 174, 220, 230, 232, 233, 240, 274, 305, 308, 325, 349 355, 360, 364-368, 389, 394, 414, 426, 430, 433, 435- 445, 449, 460, 464, 478
கிரேக்க மொழி- 17, 18, 367, 447
,, சமயம் 103
,, சமஸ்கிருதச் சொற்கள் -20
,, தமிழ்ச்சொற்கள்-19
,, கடவுள்கள்-72
,, பண்பாடுகள்-22
,, புராண வரலாறு- 157, 158, 390
கிரேக்க-புராண வரலாறு- 47, 61
63, 158, 198, 208, 214, 215, 234, 341, 395
கிரேக்கர்கள்- படை எண்ணிக்கை 425, 426, 458
,, கப்பற்படை- 434- 436, 438, 439
,, படைகளின் புள்ளி விவரங்கள்-456, 458
கிலிகமே-329
கில்லஸ்-292
கிழக்கிந்தியத்தீவு-42
கிழமைகளின் பெயர் விளக்கம்-178
கிளியம்புரோடஸ்- 461, 463, 468
கிளியோமினே-405, 431, 433, 454
கீடே-350
கீஸே-224
குகைக்கோயில்கள்-232
குங்கிலியம்-188, 279
குதிரைகள்-30, 141, 323
,, சிலை-259
,, பலி-141
குபு- சியாப்ஸ், 221, 224
குப்த சாம்ராச்சியம்-72
குருமார்கள்-145, 147, 150, 161, 162, 169, 174, 190, 227, 228
குரோகோடிலஸ்-முதலை, 183
குரோடோனா-287, 290, 292, 2 4
குரோபி குன்று, 152, 156
குரோனோ-ஜியுஸின் தந்தை, 83
குரோஸஸ் (கி மு. 560-546)-50, 65, 66-72, 75-84, 86, 136,145, 206, 249, 381, 382, 385
குர்னௌ-149
குலோத்துங்க சோழன்-101
குளியல்-133, 162, 316
கெர்ரி-315
கெர்சனீசியர்-380, 382
கெர்ஸனீஸஸ்- 382, 386, 388, 390
கெர்ஸாஸ்-382
கெலோனஸ்-304
கெலோனி-321, 322, 324

கேம்பைஸிஸ் (கி.மு. 529-522)-81, 84, 85, 89, 90, 95, 96, 99, 102, 1!1, 136, !41, 143, 145, 235-239, 241-255, 260, 325, 39`, 400, 404, 476, 477
,, சகோதரியை மணத்தல்-248
,, இறத்தல் (கி மு. 522) 250
,, II சைரஸின் மகன்-2 8
கேரளபுத்ரா-131
கேரளம்-131, 191 193, 283, 341
,, கடற்கரை-36, 45, 283
கேரளர்-45
கைகியா-360, 363
கைகேயி- தேரோட்டுதல், 344
கைஜீஸ் (கி.மு. 716-678)-51-59, 64
,, கருவூலம்-59
,, டெல்பி கோயிலுக்கு அளித்த நன்கொடை- 58, 59
கைஸாண்டியர்கள்-336
கொண்டாபோரஸ் (கி. பி. 40-60)-சித்திய அரசர், 204
கொரிந்தியர் - பண்டகசாலை, 58, 434
கோடிஸ்-ஆசீஸ் தந்தை, 308, 311
கோப்ரியாஸ்-:57, 258, 265, 306, 398, 399, 404, 405, 414, 419, 422, 448, 458, 463, 467
கோயிலுக்குள் கட்டுப்பாடுகள்-175
கோரஸ்மியர்-262
கோரிந்து-நாடு, 61, 425, 434, 454, 466, 468
,, நீரிணைப்பு-455
,, நகரம்-468
கோரிஸஸ்-370
கோர்கோ-431
கோலபன்-நகரம், 59, 64,
கோலாக் ஸெயிஸ்-301, 302
கோல்கே-நாடு, 27
கோல்கி-நாடு, 205
கோல்சியர்கள்-200, 201, 205, 415, 417
கோல்சிஷ்-நாடு. 34, 47
கௌடலீயம்-சாணக்கியர் இயற்றிய நூல், 57
சகார்டியர்-262
சகோதரியை மணத்தல்-வழக்கத் தொடக்கம் (கி. மு. 524) 248,254,262
சக்கரா-225
சடலங்கள் - புதைக்கப்படுதல்-111,112
,, -பாதுகாப்பு முறைகள்-178,187,190,194,319
,, மூவகைப் பாதுகாப்பு முறைகள், 187-189
சடாமாஞ்சி-21,193
சட்டாகைடியர்-261
சட்யாடிஸ் (கி.மு. 629-617)-70
சதி - கணவனுடன் உடன் கட்டை ஏறுதல், 353
சத்ரபதி-130,131,266
,, சிவாஜி (கி.பி.1646-1680) -131
சத்ராபி-ஆளுநர் பதவி, 124, 130 207,260,266,293-295,310, 361, 378, 397, 404, 417, 418, 473, 474
,, எண்ணிக்கை 20-260,266
சந்திரகுப்த விக்ரமாதித்தன்II-72,73
சமாதித் திருடர்கள்-225
சம்மேடிகஸ் (கி.மு. 671-617)-எகிப்திய மன்னர். 143, 145, 152-154,400,406,432
சம்மேனிடஸ் (கி.மு. 525)-அமாஸிஸ் மகன், 237,238, 240,243,245
,, இறப்பு (கி மு.523)-243
சர்மேஷியர்-94,305
சம்ஸ்கிருதம்-20
,, -ல் கிரேக்கச்சொற்கள், 18
சலமிஸ்-69, 403, 438, 440, 443-445,449,450,453,455
,, போர் (கி.மு. 480)-24

சாக்ரடீஸ் (கி.மு. 469-399)-85, 132
சாணக்கியர்-57
சாமோஸ்-ஒருதீவு, 25,72,287, 290,293-295,299,353,373
,, தீவினர்-288,353
சாம்பிராணி-116,188,193, 279, 284,317,320
சாயிஸ் அத்தினே கோயில் இருந்த இடம், 237, 239, 254
சாரங்கியர்-262,412,417
சாரசன் மக்கள்-255,379
சார்டிஸ்-51,65,66,71,78,80, 81, 85,120,293,294,308,356, 361, 370,371,373,375-378,397,403, 404,470,473
சார்டீனியா-ஒருதீவு, 375, 378
சார்பிடான்-ஜியுஸ் மகன், 47
சாலமோன்-அரசர், 37,44
சாலிபியர் 65
சாஸேயர்-262
சாஷ்டாங்க நமஸ்காரம்-110
சிகின்னே-ஈட்டி, 355
சிங்கம்-ஒரே குட்டி ஈனக் காரணம், 280
சிசரோ (கி.மு. 107-43)-17
சிசோஸ்டிரிஸ் (கி. மு. 4000)-111,199-203
,, தோற்றவரைச் சித்திரித்தல்-199-202
,, பொறித்த கல்தூண்,199-202
,, பெண்குறி செதுக்கப்பட்ட கல்தூண்-201,203
சிடார்-தேவதாருமரம், 44
சிடான்-சீதோன், 290
சித்தியர்கள்-88,89,93, 94, 134, 138,139,200,202,204,300,301-305,316,317,320-328,411, 478
,, அரசர்களின் சமாதி அறைகள் 315
,, சடங்கின்பின் குளியல்-316, 320
,, தலைமயிர் மழித்தல்-315
சித்தியர்கள் பழக்க வழக்கங்கள்- 315, 316
,, புகைக் குளியல்-316
சித்தியா-நாடு, 204, 300, 304, 305,313,315,318,324
,, சோதிடர்கள்-313
,, தண்டனை நிறைவேற்றப்படுதல்-314,318
சித்திஸ்-ஹிராக்ளிஸின் மூன்றாம் மகன், 304,305
சிந்துச்சமவெளி நாகரிகம்-45
சிந்துநதி-22,30, 204, 307, 309, 310,418
,, முதலைகள்-30,309
சிபாரிஸ்-அழிபாடுகள், 28
சிபிலே தேவதை,361
சிமோனைடிஸ்-371,383
சியாப்ஸ்-168,216,218,221-225
,, மகளை வியபாரியாக்குதல்-218,279
,, வேறுபெயர், குஃபு, 221
,, கட்டிய பிரமிடுகள், 217 224,225
சியாஸ்-369
,, மக்கள் சியான்-369-371, 383
சியோன்-440
சிரஞ்சீவிகள்-350,419
சிரியர்-சிரியநாட்டு மக்கள், 200,201,261,414,417
சிரியன் கிறித்தவர்-176
சிரியா-27,35,43, 118, 205, 234, 237,238,249,255,310,379, 404
சிரியோ-பயோனியர்-358,362
சிரோமித்ரே-412,415
சிர்தார்யா-நதி,139,142
சிலப்பதிகாரம்-21,206,338
சிலம்பு அணிதல்-338
சிலீஷியர்-261
சிலீஷியா-61, 65
சிவலிங்கம்-கல்வெட்டில்-38
சிறுபாணாற்றுப்படை-21
சின்னமன்-இலவங்கம்,192
சீதோன்-36-40, 42, 422, 423,
,, மக்கள்-44
,, மன்னர்-146

சீமோன்-383, 386, 388, 390, 391
,, கொல்லப்பட்டது (கி.மு 449)-391
சீனம் நாடு-21 - 23, 42, 45, 139, 171
,, நாகரிகம்-23
,, மொழி-18
சுண்டெலிகள்-மூவகை, 336
சுப்பிரமணிய பாரதியார்-123
சுழல் கோபுரம்-115
சுன்னத்துச் செய்துகொள்ளுதல்-161, 169, 200, 201, 205
சூரியன்-82, 108, 109, 138, 141, 147
,, கடவுள்-82, 103, 108, 109 141, 233, 274
,, நகரம்-151
,, வழிபாடு-108, 138, 141
சூஸா-தலை நகரம், நவீன பெயர் சுஸ்டான்-27,117,257, 261, 265, 291, 294, 375, 378, 388, 405, 430, 440
செங்கடல்-37, 38, 40
செபினே-410
செபீயஸ்-410
செப்ரன்-ஆற்றுக்கடவுள், 48
செமிலி-தேவதை, ஜியுஸின் மனைவி, 157, 158, 355
செலிம்பிரியா-353
செலூசிட் 38
செல்யூகஸ் நிகேடார்-118
செவ்வகில்-தேவதாரு, சிடார், 193
,, எண்ணெய்-189, 193
செனாசெரீப்-118
சேக்கிழார்-100
சேதுசமுத்திரம்-18
சேரநாடு-132
சேரபோத்ரா-132
சேரர்-45, 132
சைக்ளாப்ஸ் -ஒற்றைக்கண்ணர்கள்-198
சைதிரா-429
சைப்சிலஸ் (கி.மு, 675-625)-58, 61, 380-383
,, பண்டகசாலை-58
சைப்ரஸ்-தீவு, 70, 129, 133, 166 177, 232, 234, 423
சையீன்-152, 156, 157
,, பர்காபென்காசி, 156
சைரகியூஸ்-287
சைரஸ் (கி.மு 579-529) பாரசீக அரசர்-71, 78-81, 84-86, 92, 96-102, 111, 113, 116-118, 121-123, 134-136, 139-141, 143-145, 235, 238, 242, 254, 257, 260, 385, 398, 400, 403, 404, 475, 476, 477
சைரினீஷியா-348
சைரீனீயர்-329
சைரீன்-27, 241, 244, 245, 329, 334
சைரோபேடியா - ஸெனபான் எழுதிய நூல், 85
சைலீனஸ் - டையோனிஸஸின் ஆசிரியர், 62
சைலீஷியர்-61, 421, 423, 470
சைல்லி 331
சைனர்-271
,, குருமார்கள், 169, 171
சோக்டியர்-262, 412, 417
சோதிடம்-எண், வெற்றிலை, சோழி, 317
சோபக்ளீஸ் (கி.மு. 495-406)-26
சோமாலிலாந்து-192
சோஸி-நகரம், 70
சோழநாடு-45
சோழர்-45. 132
சோழியர்-341
சௌரமதே-321, 322, 324
ஞானியர்கள்-மூவர், 408
டயானா-355, 396
டஸ்கைலஸ்-52
டாடிசேயர்-261
டாப்னே-153, 201, 207
டாரிக்குகள்-பொன் நாணயம், 398

டாரியஸின் இருபது சத்ராபி கள்-260
டாரியஸ் (கி.மு.521-485) ஹைஸ் டாஸ்பீஸின் மகன், 111, 117, 120, 202, 203, 207, 251, 268, 272, 288-304, 307, 309, 310, 321-327, 346-352, 355-362, 369, 372, 375-379; 383, 388-391, 396-400, 403, 406, 411, 413, 416-419, 422, 431, 432, 448, 453, 458, 463, 467, 469. 473, 474
,, பரம்பரை-406
,, மொத்த வருமானம்-263, 266
டாரிஸ்கஸ்-416
டாரெண்டம்-292, 294
டார்கிடௌஸ் - சித்தியரின் ஆதித் தந்தை, 301
,, மூன்று மகன்கள்-301
டார்டனெல்ஸ் ஜலசந்தி-352 361, 390
டார்ஷீஸ் 44
டான்யூப் நதி-27, 134, 204, 304, 326, 352, 353
டிமராடஸ் (கி மு. 510-491) ஸ்பார்டா அரசர், 398, 404, 423, 429, 431-43
டியானிரா-305
டியூகேலியன்-311
டிராய் நகரம்-48, 49
,, பிடிபட்டது (கி.மு. 1184) 48
டிரிடான்-நதி, 332, 335, 336
,, தேவதை, 332, 333
டிரோக்லே-குகை, 340
டிரோக்லேடிடே - குகை வாழ் மக்கள், 331, 340
,, மனிதக் குரங்கு, 340
டிரோஜன்-444
,, யுத்தம்' (கி.மு. 1184)-48, 49, 367
டிரௌஸி-350
டிமோலஸ்-370
டேகியா-443
டெதிஸ்-46, 311
டெமீடர்-தெய்வம், 368, 379, 460, 463, 464
,, அகையா-கோயில், 366, 368, 460, 463, 464
,, ஜியுஸ் சகோதரி-368
டெமோசிடஸ் - மருத்துவர் 287, 289-294, 478
டெயோஸிஸ் (கி.மு. 709-656) -86-88, 92, 93, 111
டெய்போபஸ்-49
டெர்பாண்டர்-கவிஞர், 139
டெலபோ-365
டெலாஸ்தீவு-ஜியுஸ் கடவுளின் பிறப்பிடம், 61
டெலிகோனஸ்-214
டெல்பி கோயில்-51, 55, 56, 58 59, 61, 63, 81, 85, 220, 222, 231, 234, 347, 380, 383, 430, 433, 458, 464, 467
,, கைஜீஸ் கொடுத்த நன் கொடை, 59,
,, மக்கள்-59
டெல்லாஸ்-67
டெஸர்டர்கள்-153
டேலண்டம்-240 பவுன் பெறு மான நாணயம், 222, 266, 311, 362, 390
டேலண்டுகள்- பாபிலோனிய வெள்ளி நாணயம், 26, 217, 222, 231, 234, 260-263, 266, 290, 310, 358, 362, 390, 418
டேவிடு லிவிங்ஸ்டன் (கி.பி. 1813-1872)-154
டேனி-410
டைகிரீஸ் நதி-21
டைசோரம்-358, 362
டைபோடுகள்- சுண்டெலி வகை, 336
டையாரா-416
டையோகிஸார்ட் (கி.பி. 2 ஆம் நூற்றாண்டு) 276, 277, 343
டையோமிடிஸ்-3 4
டையோனிஸஸ்-தெய்வம், 62, 111, 153, 157, 158, 175, 281, 351, 355, 428

டயோஸ்பாலிஸ்- ஒருகுன்று, 119
டோமிரிஸ் மஸஜெடேயின் அரசி, 84, 135, 137, 139, 140 476
டோரியர்-65, 421
டோரிஸ்கஸ்-சமவெளி, 24, 409
டோலோன்ஸி மக்கள்-380,381, 384
டௌரி-321, 324
தகரத்தீவுகள்-283, 285
தகோம்ஸே-ஓர் ஏரி. 153, 157
தக்காணப் பீடபூமி-46
தந்தங்கள் 283
தமிழர்கள்-40, 191, 193
,, கடற்பயணம்-38, 39
,, நாகரிகம்-23, 404
,, பண்பாடு- 22
,, அமெரிக்கப் பிரவேசம், 40, 41
,, கடவுளர்கள்-23
தமிழ்நாடு-21, 22, 37, 38, 40, 42, 45, 76, 110, 130, 131,132, 169-176, 205, 215, 244, 252, 264, 310, 320, 338, 340, 341, 353, 366, 423
,, உலக நாகரிகத்தின் தொட்டில், 21, 23, 36, 45,46, 480
,, நாகரிகம், 22, 45
தமிழ்மொழி-18, 20, 22
,, காணப்படும் கிரேக்கச் சொற்கள், 18
தம்மேனியர்-262
தலைமயிர் மழித்தல்- தமிழ் நாட்டினர் பழக்கம், 171, 241
பாரசீகர் பழக்கம், 171, 244
தனக்ரா-364, 367
தனித்திருத்தாண்டகம்-173
தார்தேயர்-262
தாலமி கி.பி. 119-161)-21, 132, 150, 418
தாள்- தளாவிலிருந்து பிறந்த சொல், 367
தாஸோஸ்-377
திசார்கோரஸ்-389
திசாமினஸ் - அஸ்டியாகஸின் மகன், 459
திசாலி-ஒருநாடு, 234, 368, 403, 428, 449, 453, 458
திசாலியர்-368
திபரேனி-262
திமாஜெனிடே-466, 467
திமோலஸ்-மலை, 62
தியோபாஸ்ட்ரஸ்- தத்துவ ஞானி, 139
திரிதெண்டெக்மி ஆளுநர், 139
திருக்குறள்-57, 111, 133, 169, 173, 271, 245, 254, 338, 348
திருப்பாவை-திருவெம்பாவை 396
திருவள்ளுவர் 57, 169, 173, 245 254, 348
திருவாய்மொழி-83
திருவெண்காடு-18
திரேசியர்கள் - 65, 200, 204, 220, 261, 327, 350, 351, 353, 374, 395, 415, 417, 444
,, பழக்கவழக்கங்கள்-350
திரேசியா-27, 204, 323, 325, 349, 350-354, 357, 361, 367, 372, 374, 383-385, 395, 416
திரேனியர்-378
தீபே (எகிப்து)-37, 116, 119, 147-152, 156, 165, 174, 180, 197, 198, 226, 227 ;
,, பற்றி ஹோமர் கவிஞர் - 119
திபே (கிரேக்க நாடு)-பியோஷியாவில், 61, 150, 157, 365, 368, 425, 453, 461, 462, 464, 465, 466, 467
,, மக்கள் - 168, 468
திரே - துறைமுகம், 27, 34, 36, 38, 40, 42, 44, 46, 309, 422
தீஸ்பே - 400
துரோபதை - 82
துர்க்கை - 72
தூசிடைடிஸ் (கி.மு. 471 - 401)
- வரலாற்றாசிரியர் - 28
- ஹிராடட்டஸ் பற்றி, 28

தூரி - சித்தியர் குடியேற்றம், 27, 28
தெமிஸ்டாகிளீஸ் (கி.மு 514 - 449) - 435 - 437, 422 - 445
தெர்மடான் - 200, 205
தெர்மொபிலே - (போர் கி.மு. 481), 403, 424-428, 432, 454
தென் அமெரிக்கா - 42
தென் கடல் - 307
தென்னிந்தியா - 45, 108, 131, 176, 182, 232
தென்னை - 36, 37, 131, 132
தேடிஸ் - நீர்த்தேவதை, 197
தேவாரம் - 173, 306
தேஜஸ் - ஜியுஸ் கடவுள், 158, 175
தொல்காப்பியம் - 18, 182
தோராக்ஸ் - 449
தோல் - எழுத்துப்பொறித்தல், 365, 367
நபோபோலஸ்ஸார் - 117
நறுமண இலைகள் - மர்டில்ஸ், 104, 109, 337
நற்றிணை - 21, 109
நாகரிகங்கள்-பலவகைகள், 404
நாச்சியார் திருமொழி - 407
நாணல் கயிறு - ஃபிளாக்ஸ், 267, 270
நாமதீப நிகண்டு - 108
நாய் - 180, 182
நாரி - பெண், 94, 318
நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - 57, 123, 183, 278, 407
நாளத்தம் - நார்டஸ், 193
நான்கு குதிரைகள் பூட்டிய தேர் - 329, 331, 335, 339, 380, 381, 384
நிடெடிஸ் - 236, 238
நியார்க்கஸ் (கி.மு. 326 - 325, - கப்பல் தளபதி, 309
நியூரி - 321
நிலக்கீல் - பிடுமென், 114, 388
நினேவ - தலைநகரம், 93, 113, 117-119
நீக்ரோபான்ட் - 441
நீர்யானை - 184, 185
நெடுநல்வாடை - 294
நெபுகட்நேசர் (கி.மு. 604-562) - 117
நேசமோனியர் - 329,-331, 340
நைசியா - நாடு, 277
,, குதிரைகள், 275, 277
நைடோகிரிஸ் - 196, 198
நைலஸ்-நைல்நதி, 150, 151,152 -154, 159, 190, 308
நைல்நதி-27, 37, 47, 119, 147-157, 168, 174, 197, 216, 224, 237, 244, 307, 309, 478
,, -ல் முதலைகள், 180, 183, 309
நைனஸ்-118
நோமார்க்-ஆளுநர், 230
நௌகிராடிஸ்- விபசாரிகள் வாழ்ந்த ஊர், 220, 222
பகவத்கீதை-339
பகேலர்-329
பசு- ஊன்தின்னாதவர், 334-பலியிடப்படுவதில்லை, 163, 164, 173
பச்சை குத்திக்கொள்ளுதல்-குறவர், குறத்தியர், 351, 354
பஞ்சசித்தாந்திகா- வராகிமிகிரர் எழுதிய நூல் (கி பி. 545), 73
படேய்-268, 270
பட்டினப்பாலை-21, 108
பதரா-லைசியநகரம், 119
பதிற்றுப்பத்து-109, 206
பந்திமதியர்-262
பயோனியர்-17, 349, 356, 358, 361, 362, 369-371
பயோனியா-356, 361
பரதஸேனி-88, 93
பரலடே- சித்தியரின் வேறு பெயர், 302
பரிகேனியர்-262, 412, 417, 420
பரிபாடல்-94
பர்கயினர்-345-348

பர்கா-329, 345-348
,, பென்காசி-156
பர்ணசாத்திரிஸ்- அர்டாபேடஸின் மகன், 411, 418
பர்ஸாங்-தொலைவின் அளவு, 148
பலிபீடம்-103, 109, 112, 116, 147, 148
பனையேறிகள்- பாமேசியர், 36, 109, 132, 205, 310, 318, 320, 366, 379, 479
,, பினீசியர், 109, 310, 318, 320, 366, 479
பனோனியஸ்-442 444
பன்றியின் படிம உருவம்-69,72, 75-77, 81
பாக்கஸ்-காதல் தெய்வம், 355
பாக்டிகா-262, 307
பாக்டியா-381, 384
பாக்டிரியர்- 262, 273, 411-416
பாக்டிரியா- 346, 348, 420, 472, 473, 474
பாக்டையீகா-273
பாக்டோலஸ்-நதி, 371
பாடலிபுத்திரம்-படாய், 270
-அஜாதசத்ரு நிர்மாணித்தது (கி.மு. 482), 270
பாட்டஸ்- கார்த்தேஜ் குடியிருப்பை நிர்மாணித்தவர் (கி.மு.631), 244, 346, 347
பாணினீயம்-18
பாண்டஸ்-கருங்கடல், 47, 305
,, கிரேக்கர்கள்- 302, 305
,, யூக்ஸைனஸ்-305
பாண்டி நாடு-45, 131
பாண்டியர்-45, 132
பாபிலோனியர்- 121-124, 128, 130, 132, 296-298, 317
,, அன்னியனுக்குஉடலை அர்ப்பணித்தல்- 128, 133
,, உடைகள்-132
,, குளியல்-128
,, பெண்கள் ஏலம்- 126
,, 132
பாபிலோனியர் நோயாளிகள்- 127, 132
,, விபசாரம்-127, 132
, நாகரிகம். 22, 124
பாபிலோன்-27, 113-126, 130, 149, 196, 19 , 261, 296, 298-300, 410, 476
பாப்லகோனியர்-65, 261, 414
பாம்-பனை, பாமேசியர், 36
பாம்பிலியர்-65, 71, 260, 421
பாரசீகம் - 24, 84, 88, 89, 111, 118, 120, 124, 135, 136, 145, 235 - 238, 241, 257, 2 9, 266, 267, 268, 324, 325, 348, 352, 355, 377, 410, 446, 447
பாரசீகர்கள் - 78, 84, 86, 93, 95, 100, 103-106, 108-110, 124, 156, 195, 207, 227, 237, 239,-246, 254-258, 265, 273, 275, 292, 295 - 299, 322, 324, 327, 345 - 355, 359 - 363, 369 - 79, 383, 387-391, 395, 397, 398, 402 - 405, 408 - 410, 416, 420, 425, 426, 428, 430-433, 436 - 460, 462, 464, 465, 466, 467, 468, 469
,, பழக்கவழக்கங்கள் 103, 107, 111, 112
,, பிறந்தநாளைக் கொண்டாடுதல், 104
,, பிரச்சினையை அணுகுதல், 105, 110
,, வணக்கம் தெரிவிக்கும் முறைகள், 105, 110
பாரசீக வரலாறு - 33, 46
பாரசீக வளைகுடா - 114, 262, 304, 415, 417
பாரிஸ் - அரசர் பிரியமின் மகன், 34, 48, 49
பாரோக்கள் - 168, 191, 224, 225
பாரோ நகரம் - 389
பார்த்தியர் - 93, 262 412, 417
பார்த்தீனியஸ் - நதி, 200, 205

பார்மிஸ்-டாரியஸின் மனைவி, 259
பார்னஸஸ் மலை - 59, 383
பாலஸ்தீனம் - 118, 201, 203
பாலாத் - சூரிய நகரம், 151
பாலிகோனஸ் - 214
பாலிக்ரடஸ் (கி.மு. 532-522) - 287-290, 293, 295, 441
பாலிடோரஸ் - 365
பாலிம்நெஸ்டஸ் - 347
பால் - கடவுள், 117
பால்சமோதேந்திரம் - வெள்ளைப்போளம், 191
பான்யாஸிஸ் - கவிஞர், 25
பாஸிஸ் ஆறு - 34, 47, 200, 205, 308
பாஸ்போரஸ் - 48
பிகோ - ரொட்டி, 144, 146
பிடாஸம் - 442
பிடெல்லியம் - வெள்ளைப் போளம், 191, 284
,, பிதலோனா, 191
பியூனிக் யுத்தங்கள் - 252
பியோப்ளே - 358
பியோஷியா - 157, 364, 365 - 368, 403, 425, 448, 449, 453, 454, 462, 467
,, மக்கள், 366, 367
பிரகதீஸ்வரர் கோயில் - தஞ்சை, 221
பிரமிடுகள் - 145, 148, 149, 168, 191, 197, 198, 216, 217, 218 220, 223 - 225, 229, 253
,, மூவகை, 224
பிரமிஸ் - பிரமிடு, 168
பிரயோர்டிஸ் (கி.மு. 656-634) டையோஸிஸின் மகன், 87, 88, 92, 93
பிராமிஸ் - கணவான், 227
பிரிக்ஸாஸ்பஸ் - 248, 249, 255, 422
பிரியம் - டிராய் அரசர், 34, 48
பிரியாபஸ் - தேவதை 85
பிரிஜியர் - 65, 143 - 146
பிரிஜியா - 51, 58, 61-63, 145, 146, 293
பிருகத் சம்ஹிதை - 72, 73
பிருகத்சாதகம் - 73
பிரொமீத்தியஸ் - இயாபிடஸின் மகன், 308, 311
பிரெளரானியா - கடவுள், 395, 396
பிரெளரான் - 394 - 396
பிர்ரஸ்-அஷிலஸ் மகன், 48
பிர்ரா- ஹெலனிகஸின் தாய், 234
பிலிடிஸ்-ஆட்டிடையன், 218
பிலிப்- மாசிடோனிய அரசர், 362, 448
பிலிஸ்டைன் -94
பிலே-தெர்மொபிலே, 425
பிலோ சைப்ரஸ்-70
பிளாஸ்ஜியர்-332, 394 396
பிளினி-(கி.பி. 23-79)-21, 36, 43, 133, 150, 185, 186, 204, 270, 284, 343, 418
பிளேடியா-329, 387, 434, 456, 457, 460, 462, 464, 465, 466
,, போர் (கி மு. 479)-464
பிளைனஸ்-துறைமுகம், 329
பிள்ளைக்கறியமுது-95, 97, 98, 100, 101
பினீசியர்- தமிழ்நாட்டிலிருந்து சென்ற பனையேறிகள், 23, 32, 33, 35, 37, 40, 42-45, 109, 131-133, 201, 205, 206, 234, 251, 279, 281, 307, 320, 338, 344, 364-380, 421, 478, 479
,, எழுத்துகள்-368
,, கடற்பயணம்-39, 40
,, கல்வெட்டு-38, 42
,, குடியேற்றம்-43
,, செய்த வாணிகம்-35
,, படகு-251
,, நாணயம்-252
,, மொழியில் தமிழ்ச் சொற்கள்-20
,, வரலாறு-46

பினீசியா-சிவந்த, 34, 35, 38 43, 46, 118. 133, 166, 177 237, 309, 312, 318, 353, 425
பிஸிடியர்கள்-417
பிஸிஸ்டிராடஸ் (கி.மு. 560-527)-69, 380, 383, 386, 387, 389, 390
பிஸிஸ்டிராடிடே- குறி சொல்பவர், 400, 405
பீரான்-(கி.மு. 3950)-203, 208
பீனிக்ஸ்-அரசர், 46
,, தெய்வப்பறவை, 184-186
புடினி-321, 324
புபாரெஸ்-363
புரோடியஸ் (கி.மு.4000)-எகிப்திய அரசர், 209, 214
புரோபான்டிஸ்-353
புறநானூறு-17, 21, 170, 173, 206, 264, 278
பூசாரிணி-160
பூடி-88, 93
பூனை-179-182
,, சடங்குகள், (179-182)
பூஸே-88, 93
பெண்கள்- ஏலம் விடப்படுதல், 126, 132
,, கைகளில் காப்பு அணிதல், 328, 338
,, சடங்கின் போது அழுதல், 335, 342
,, தேரோட்டுதல், 335, 336, 343
பெண்டபாலிஸ்- ஐந்து நகரங்கள், 245
பெரெதிமா-345-348
பெரிக்ளீஸ் (கி.மு. 440)-295
பெரிந்தஸ்-353
பெரிந்தியர்கள்-349, 353
பெரிப்ளூஸ் (கி.பி.50-80)-21, 35, 36, 42, 43, 142, 150, 176, 177 185, 193, 204, 269, 284, 285
பெரிய திருமொழி - 57, 183
பெரியபுராணம்-101, 102
பெரியாண்டர்-61
பெருங்கதை-206, 207
பெரும்பாணாற்றுப்படை-206,278
பெர்டிகஸ்-448
பெர்சியஸ்-410
பெர்ஸிஸ்-118
பெலபொனீஸஸ்-27, 46, 450, 453
பெலாப்ஸ்-46, 454
பெலூஷியம்-153, 201, 207
பெல்-கடவுள்கோயில், 115, 116 119
பேரிங் கடற்கால்-40, 42
பேன்ஸ்-240, 244
பைசாண்டியம்-377
பைசாநகரம்-148, 151
பைதியா- டெல்பி கோயில் பூசாரிணி - 60
பைதகோரஸ் (கி.மு. 540, 510)-372, 373
பைதோ- டெல்பி கோயிலின் முதற்பெயர், 59, 384
பைபிள்-44, 57, 133, 170, 191, 299, 407, 408
பொருளியல்- ஸெனபான் எழுதிய நூல், 85
பொன்-21, 275-278, 281, 310 337, 338, 418, 425
,, கலன்கள்-58
,, கிண்ணங்கள்-58
பொன் அகழும் எறும்புகள்- 30, 273, 276
பொன்வண்ணத்தந்தாதி-306
போசியன் மக்கள்-437
போசியா-201, 437
போசிஸ்-59, 403
போரியஸ்-கோயில், 424

போரிஸ்தனிஸ்- 301, 305, 315
போர்ஸா-படகு, 251, 318
போளம்-188, 190, 191, 279, 284
போளம்-மூவகை-191, 284
போஸிடான்-214, 333, 341
போஸிடியம்-261
போஸ்ரா-நகரம், 251
பௌசானியஸ் (கி. மு. 479)- 111, 451, 452, 454, 461 - 464, 466, 468
பௌசிகேயர்-262
மகாபாரதம்-18, 49, 82, 158, 207 264
மகே-முன்குடுமியர், 331, 341
மக்ரோனர்கள்-417
மடீனி-135
மணிமேகலை-21, 206
மதுரைக்காஞ்சி-21
மத்தியதரைக்கடல்-33, 35, 42 234, 2.8, 251, 344
மந்தனே-84, 89, 90, 94-96, 99, 476
மம்மிகள்-191, 194, 224, 225
மயோனியர்கள்-50, 51
மரத்தில் வளரும் ஆட்டு ரோமம்- பருத்திமரம், 276, 278
மரியாண்டினியர்-65, 414, 417
மர்டோனியஸ் (கி.மு.492-479)
டாரியஸின் மருமகன், 405, 419, 442, 446-452, 455-458, 460-463, 465, 467
மலபோத்ரம்- இலவங்க பத்திரி, 192
மலேயா தீபகற்பம் - 286
மலைபடுகடாம்-21
மனுநூல்-57
மனே - ஆசிஸ் பாட்டனார், 308, 311
மஸஜெடே- 84, 134-141, 340, 476
மாக்ஸியஸ்-335, 336
மாசிடோனியர்-447, 453
மாசிடோனியா- 358-363, 403, 448, 453
மாதங்களின் பெயர் விளக்கம்- 177
மாமல்லபுரம்-கற்குகைகள், 233
மாரதான் போர் (கி.மு.490)- 383, 387-389, 391, 397, 403
மார்க்கோபோலோ (கி.பி. 1254-1324)- 111, 112, 140, 169, 172, 264, 265, 271, 285, 317, 319, 354, 408
மார்பினில் அடித்துக் கொள்ளுதல்-163, 172
மானரோ-166, 177
மாஸ்டிஸ்-357
மிகிராகுலன் - வராகமிகிரரின் பெயர், 73-75
மிடிய நாடு - 84, 87, 88, 92, 93, 95, 102, 109, 117, 118, 136, 261, 352, 412, 416, 457
,, குதிரைகள் - 275, 278
,, மக்கள் - 86,,87, 89, 92, 93, 95, 100, 250, 420
மிடே மக்கள் - 408
மித்ரடேடிஸ் - ஆட்டிடையன், 90 - 92, 111
,, யூபடார் 47
மித்ரா - கடவுள், 108
மிர்சிலஸ் - 51
மிர்சினஸ் - 356, 372, 373
மிர்ஸஸ் - 50, 51
மிலிட்டா தெய்வம் - 128
மில்டியாடிஸ் (கி.மு. 489)-111, 327, 380 - 392, 403
மிளகு - 21
மினாஸ் - ஜியுஸ் மகன், 47

மினே - 4 பவுன் பெறுமான நாணயம், 241, 290

மின் - எகிப்தின் முதல் மன்னர், 147, 149, 195 - 198

மீடிய - அரசரின் மகள், 34, 47

முதலை - 180, 181, 183, 309

,, அணிகள் அணிவித்தல், 181

,, கண்களில் களிமண் அப்புதல், 181

" பிடிக்கப்படும் முறை, 181

முதுமக்கள் தாழி - 342

முத்து - 21, 418

முல்லைப்பாட்டு 206

முஸ்லிம்கள் - 139, 169, 171, 205, 255, 353

மூரிசைட்ஸ் - 450, 453

மெகபஸஸ் - 324, 352, 356-358 369, 371, 412, 419, 422

மெகபானஸ் - 410

மெகபைஸஸ் - ஜோபைரஸின் தந்தை, 296, 298, 299, 349, 419

மெகரா - நகரம், 69, 452, 454, 457

மெகஸ்தனிஸ் (கி.மு. 302.296)- 21, 157, 175, 276, 305, 342, 343, 355, 418

மெகாரிஸ் - 454

மெக்னீசியர்கள் - 260, 424

மெக்னீஷியா - 287, 288

மெசபொடேமியா - 21, 119

மெமரோபிலியா - ஸெனபான் எழுதிய நூல், 85

மெம்பிஸ் - 148, 149, 168, 171, 172, 195, 198, 230, 233, 237 241, 253

மெர்ம்னடே பரம்பரை - 51, 56, 58, 59

மெலங்கலேனி - 321 - 324

மெனிலஸ் - ஹெலன் கணவர், 49

மெனிலாஸ் - துறைமுகம், 329

மென்டெஸியர் - 164, 174

மென்டெஸ் - துறைமுகம், 164, 174

மெஷிலஸ் - 332

மெஷிலியர்கள் - 332, 333

மெஸிஸ்டியஸ் - 111, 419

மெஸிஸ்டே - 469 - 474

மேகஸ் - 104, 109, 259

மேக்ரோனி மக்கள் - 200, 205

மேரோ - 153, 157

மேஜி - 88 - 93, 93, 100, 102, 107, 109, 112, 250, 251, 255, 257, 258, 265, 402, 408

மைகேல் - குன்று, 403, 469, 473

மைசியர் - 24, 65, 260, 262, 412

மைசியா - 51

மைசெரீனஸ் - சியாப்ஸ் மகன், 219 - 224

,, மென்கௌரா - 224

மைடிலீன் - 356, 361, 377, 379

மைதாஸ் பிரிஜியாவின் அரசர், 58, 61 - 63, 145

மைலீடஸ் - நகரம், 59, 64, 227, 356, 361, 369 - 378, 396

மைலோ - மல்யுத்த வீரர், 292 294

மோபி - குன்று, 152, 156

மோயரிஸ் - ஏரி, 180, 261

மோரிஸ்-அரசர், 196, 198

மோஸினோஸியர் - 262, 417

மோஷியர்கள் - 417

யவனர் - அயோனியர், 206, 294, 373, 379

,, மேற்கோள்கள் - 206, 207, 294

யானைகள் - 30, 156, 183, 283
யுவான் சுவாங் - (கி.பி, 629-645) - 112
யூக்ஸின் - கருங்கடல், 205, 305
யூபிய மக்கள் - 412, 417, 436, 439
,, டேலன்டுகள், 263,266, 310
யூபியா - நீக்ரோபான்ட் 266, 435 - 437, 441
யூப்ரடீஸ் நதி - 21, 114, 117, 121, 122, 125, 130, 149
யூரிபியாடிஸ் - 435, 436, 439
யூரினோம் - 197
யூரிஸ்தியூஸ் - அரசர், 305
யூரோபா - எகினார் மகன், 34, 46,47
" ஐரோப்பா - பெயர்க் காரணம், 34
" திரேநகர மங்கை, 451 454
யூஸ்பெரைடிஸ் - நாடு, 329 346, 348
ரதமான்தஸ்-ஜியுஸ் மகன்- 74
ரதி - அழகுத் தெய்வம், 234, 318
ராம்ஸிநிடஸ் (கி.மு. 4000) - எகிப்திய அரசர், 209, 211, 214, 215, 221
,, வெள்ளிப்பாளங்கள் - 209- 215, 221
ரியா -ஜியுஸின் தாய், 83
ரோதாபிஸ் - திரேசிய மங்கை, 220 - 222
ரோமப்பேரரசு - 38, 378
ரோமானியர் - 61, 72, 146, 156, 174, 197. 304, 318, 340, 354 355, 368, 379, 396
ரோம் - 21, 43, 174, 251; 283, 284
ரோமுலஸ் - 251
லப்டகஸ் - மங்கை, 231, 234
லாம்பஸ்கஸ் - 381, 382, 385
லாவோடமஸ் - 366, 368
லாஸோ - 420
லிக்டமஸ் - அரசன், 25
லிக்யர்கள் - 417
லிடோ - ஜியுஸ் மனைவி, 61, 82, 355, 396
லிடியர் -- 24, 50, 65, 71, 270, 308, 370, 385, 414, 417
லிடியா - 24, 50, 51 - 59; 64, 65, 70, 71, 78, 84, 86, 92, 93, 221, 287, 293, 357, 361 378, 381, 404, 473
லிபிய மக்கள்-பழக்க வழக்கங்கள், 328, 338
,, வெண்கலக் காப்பு அணிதல், 328, 338
,, 166, 244, 261, 328, 331,333, 335, 414 420
,, மலை - 216, 221
லிபியா- ஆப்பிரிக்காவின் பழைய பெயர், 26, 27, 148, 307-311, 334, 336 - 340, 344, 346- 348, 400.
லிப்போக்ஸெயில்ஸ் - 301, 302
லியோனிடஸ்(கி.மு. 491-480)- ஸ்பார்டாவின் அரசர், 403, 426, 430, 433, 437, 451, 454, 461
லியோன்டியாடிஸ் - 428
லினன் உடைகள் - 47, 126, 129, 174, 188, 205
லிஸிடாஸ் - 450

லெடனான் - பிசின், லேடனம், 282, 285
லெம்னோ - நாடு, 392 - 359
லெஸ்பிய மக்கள் - 377
லெஸ்போ - தீவு - 134, 139, 370, 371, 377, 379
லேஸிடெமோனியர் - 451, 456, 459, 460, 451, 464
லேஸிடேமன் - ஸ்பார்டா, 391, 429, 457
லைசியர் - 28, 260, 421
லைசியா - 65, 116, 119, 309
லைடஸ்-லிடியநாட்டு ஸ்தாபகர், 92
லைனஸ் கீதம்-166, 177
லைஸர்கஸ்-391
லோடோபகி - தாமரைக்கனி உண்பவர், 332, 341
வராகமிகீரர் (கி. பி. 505-587)-72-75
வல்கானஸ்-197
வாசனைப் பண்டங்கள்-30, 188 263, 279, 283, 315
விசித்திரப்பிறவிகள்-336, 342, 343
விதையடித்தல்-442, 444
விரியன் பாம்பு-பாம்புப்பெண், 279-281, 303, 336
விவிலிய நூல்-பைபிள், 23, 38, 44, 170, 191
வெட்டுக்கிளி உண்பவர்-ஔகிலர், 330
வெள்ளைப் போளம்-191
வேதங்கள்-1, 109, 418
ஐசிந்தஸ்-337
ஜிபிராய்-ஒருகுடும்பம், 364, 366, 368
ஜிரா-ஒருவகை ஆடை, 415, 417
ஜியுஸ்-கடவுள், 47-49, 61, 64, 72, 80, 82, 84, 103, 108, 115, 153, 157, 158, 165, 174, 175, 197, 207, 215, 226, 228, 301, 304, 333, 341, 354, 355, 368, 396, 410
ஜீ-மட்டரக தானியம், 160
ஜூதஸ்-234
ஜூப்பிடர்-83, 312
ஜூலியஸ் சீஸர் (கி.மு, 100-44) -252
ஜூனோ-கடவுள், 72
ஜெகிரிகள்-சுண்டெலிவகை,336
ஜெரிஸ்டஸ் 436, 439
ஜெனகோரஸ்-469, 470
ஜேஸன்-332, 333
ஜொஸியர்கள் - யுத்தத் தேரோட்டும் பெண்கள், 336 344
ஜோபைரஸ் - பாபிலோனிய ஆளுநர், 296-299, 419
ஸ்ரீவைஷ்ணவி கோயில்-176
ஷெப்ரன்-218-224
,, காப்ரா 222, 224
ஷோனஸ் ஷோனி - 60 ஸ்டேடியா அளவு, 147-153, 157, 164
ஸட்யாட்டிஸ் (கி.மு. 629-617)-லிடியாவின் அரசர், 65. 70, 71
ஸாந்திப்பஸ்-389
ஸாபோ-கவிஞர், 139
ஸில்லியஸ்-437, 440

ஸெர்க்ஸிஸ் (கி.மு. 485-465)-24 111, 117, 120, 207, 256, 266, 272, 295, 327, 353, 391, 398-458, 462, 463, 467, 469- 474
,, கண்ட கனவு-397, 401, 402, 406
,, கப்பல் எண்ணிக்கை-421
,, கப்பற்படை தளபதிகள்-421
,, காதல் விவகாரம், 469, 470
,, காலாட்படைகள் - 409-416
,, குதிரைப்படைகள்-419
,, கொலை செய்யப்பட்டு இறத்தல் (கி மு. 465)-120 256, 474
,, வேறுபெயர்கள், ஓகஸ், நோதஸ்-256
ஸெர்பிடான்-312
ஸெனபான் (கி.மு. 444-374)-21, 85, 119
ஸெஸ்டாஸ்-323
ஸையாக்ஸரிஸ் (கி.மு. 634-594) -88, 89, 93, 94, 111, 117-119, 477
ஸொலான் (கி.மு. 639-559)-65-72-75, 78, 82, 385
ஸ்கைலாக்ஸ்-307, 310
ஸ்டிராபோ (கி.மு.64-கி.பி. 24) -21, 193, 285, 343, 418
ஸ்டிரிமான்-361, 369
ஸ்டெனிக்ளிரஸ்-போர், 461, 464
ஸ்டெஸகோரஸ்-382-386
ஸ்டேடியா - ஒருபர்லாங் தொலைவு, 148-151, 156,157
ஸ்ட்ருஷாடே-88, 93
ஸ்பார்காபைஸிஸ் - டோமிரிஸ் அரசி மகன், 137, 140
ஸ்பார்டா-49, 69, 387-399, 403, 404, 425, 429-434, 439, 443, 446-448, 451-454, 457, 459, 461-464
,, அழிக்கப்பட்டது (கி.மு. 221)-391
ஸ்பிங்ஸ்-மனித முகச் சிங்கம், 225, 229, 232, 239
ஸ்மர்டாமினஸ்-419
ஸ்மர்ணா-59, 64
ஸ்மெர்டிஸ்-248, 255-259
,, மேகஸ் (கி. மு. 521)-250-257, 263
ஹட்சிப்ஷட்-அரசி, 37
ஹர்பகஸ்-84, 90-100, 113, 118, 206, 377, 477
,, அயோனியரை வென்றது (கி.மு. 545)-206
ஹர்மமித்ராஸ்-421
ஹலிகார்னஸஸ்-23-25, 469
ஹிப்பாக்ரடீஸ் (கி.மு. 460-357) -285, 383
ஹிப்பார்கஸ் (கி.மு. 527-514) -383
ஹிப்பியஸ் (கி.மு. 490)-383, 387, 463
ஹிப்போ-பினீசியர்கள் குடியேற்றம், 35, 43
ஹிராக்ளிட் மக்கள்-59, 459

ஹிராக்ளிட்ஸ்-அரசர், 50, 51, 56, 58

ஹிராக்ளிஸ்-30, 165, 175, 303-305, 306

,, சின்னங்கள், 306

ஹிராடடஸ் (கி.மு. 484-408)

-பிறப்பு கி.மு. 484, 23

-இறப்பு கி.மு. 408 வயது, 76, 28

-பிறந்த இடம், ஹலிகார்னைஸ், 23

-இறந்த இடம் ஆதன்ஸ் நகரம், 28

-தந்தை - லிக்ஸஸ், தாய்-டிரயோ, 24

-உரைநடை முன்னோடி, 30

-சென்ற நாடுகள், 26, 27

-தூரியில் தங்கியது (கி.மு. 444-414) 30 ஆண்டுகள், 28

-வரலாறுகளைப் படித்தல், 26

-வரலாற்றின் ஆதித்தந்தை, 17, 423

-எழுதியது அயோனிய மொழியில், 25

ஹீலியோ போலிஸ்-148, 151, 184, 185

ஹிஸ்டியஸ்-326, 327, 356, 372, 373, 375-379

ஹீரா-ஜியுஸ் மனைவி, 61, 68, 72, 197, 207, 215

ஹீராம்-37, 44

ஹெகடியஸ் (கி.மு. 530-450)-வரலாற்றாசிரியர், 226, 227, 372, 373, 392, 396

ஹெகனி பைலி-386

ஹெபீஸ்டஸ்-ஜியுஸ் மகன், கால்முடமானவர், 83, 197, 198, 207, 208, 215, 234, 318

,, கோயில்-196-198, 201, 207, 209, 215, 226, 395

ஹெர்க்குலீஸ்-48, 175, 305, 311

,, தூண்-337

ஹெர்மிப்பஸ்-376

ஹெர்மிஸ்-351, 351

ஹெலன்-பேரழகி, ஜியுஸ் மகள், 34, 48, 49

ஹெல்லஸ் பான்ட்-261, 349, 352, 353, 356, 361, 403, 405, 415, 422, 443, 455

ஹெல்லானிகஸ்-வரலாற்றாசிரியர், 139

ஹெல்லெனியம்-230, 233

ஹெல்லே-353, 361

ஹைடார்னஸ்-411, 419

ஹைஸ்டாஸ்பஸ் - டாரியஸின் தந்தை-117, 120, 251, 256, 260, 266, 295, 389, 391, 400, 403, 411

ஹோமர் (கி. மு. 850)-கவிஞர், 17, 59, 64, 72, 83, 119, 149, 197, 379, 384, 395

ஹோரா சாஸ்திரம்-73

க்ஷத்ரௌஜன் (கி.மு.528)-பிம்பிசார மன்னன், 270

ENGLISH

A Smaller Classical Dictionary
E. H. Blakney
36, 49, 60, 63, 70, 72, 85, 118, 145, 156, 174, 208, 234, 395, 403, 445, 455

Advanced History of India
Dr. R. C. Majumdar
102, 310, 363

Early History of India
Dr. Vincent A. Smith M.A.
11, 204

Greek Mythology
Edith Hamilton
311, 312

History of Greece
J. B Bury
47, 324, 327, 384, 428, 445

History of India
R. Sathianatha Iyer, M. A., L.T
73

Latin-English Dictionary
150, 192, 441

Lays of Ancient Rome
Lord Macaulay
312

Laws of Manu
57

MortD' Arthur
Lord Tennyson
83

New Testament
St. Matthew
408

Old Testament
36, 44, 57, 133, 170, 191, 299

Our Heritage
Dr. S. Radhakrishnan
37

Proverbs
Dent Edn.
245

Tamil Lexicon
Madras University
110

The Book of Knowledge
225

They All Discovered America
C. M. Boland
37
